
|| ஶ்ரீரஸ்து ||

சிற்பரத்தினம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் - 90

|| 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑌮𑍍 ||

ஸ்ரீ:

ஸ்ரீகுமாரரால் இயற்றப்பட்ட

சிற்பரத்தினம்

எனும் இந்நூல்

தஞ்சை ஸரஸ்வதி மகால் நூல்நிலைய ஸம்ஸ்க்ருத வித்வான்

நாவல்பாக்கம் **ஸ்ரீ தேவநாதாச்சாரியரால்**

பல நூல்களின் உதவியுடன் சீர்திருத்தப்பட்டு
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, அனுபந்தங்கள் முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

தஞ்சாவூர் மஹாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2007

விலை ரூ. 250/

Bibliographical Data

Title of the Book	:	**SIRPARATHINAM**
Editor	:	Navalpakkam **Thiru. Devanathachariyar**
Publisher	:	Director Sarasvati Mahal Library.
Publication No.	:	90
Language	:	Sanskrit & Tamil
Edition	:	IV Edition
Date of Publication	:	2007
Paper Used	:	18.6 Kg. Seshasayee
Size of Book	:	21 x 14 cm.
Printing and Type Used	:	16 pt. & 11 pt.
Number of Pages	:	660
No. of Copies	:	500
Price	:	**Rs.** 250/-
Printer	:	Sarma's Sanatorium Press Pudukkottai.
Binding	:	Stiff Binding
Subject	:	Silpasastra

வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் கருவூலகமாகவும் பன்மொழி நூல்களின் களஞ்சியமாகவும் திகழ்ந்து வருவது நம் சரசுவதி மகால் நூலகமாகும்.

இலக்கியம், மருத்துவம், வரலாறு, சிற்பம், சோதிடம் முதலிய பல்துறைகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது இந்த நூலகம். அவற்றுள் அருமைவாய்ந்தவற்றைத் தக்க நுண்மான் நுழைபுலச் சான்றோர்களைக்கொண்டு பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது.

நம் பாரதத்திற்குப் பெருமை சேர்க்கும் கலைகளுள் ஒன்று சிற்பக்கலை. இதில் பல்வேறு உட்பிரிவுகள் உள்ளன. இந்த அரிய கலைக்கு ஆதாரமாக விளங்கும் பல்வேறு நூல்களுள் ஒன்று **"சிற்பரத்தினம்"** என்னும் இந்த நூல்.

சிற்பக்கலைக்கு இன்றியமையாதது, "படைக்கவேண்டிய பொருளின் வடிவத்துடன் ஒன்றிய சலனமற்ற மனமே" என்று சான்றோர் கூறுவர். நம் நாட்டுப் பெருமக்கள் பல நூல்களைக் கசடறக் கற்று நுட்பமான பல விஷயங்களையும் மறவாமல் பாதுகாத்துவந்தனர். அதன் பயனே இன்று நம் நாட்டில் மலிந்து காணப்படும் கோவில்களும் வானளாவிய கோபுரங்களும் மற்றுமுள்ள அழகிய நகரங்களுமாகும்.

இவ்வாறான சில்ப சாஸ்திரங்களை முறைப்படி கற்றறிந்த பெரியோர்களிடம் கேட்டறிந்த அறிவாளிகள் பலர், பிற்காலத்தில் உள்ளவர்கட்கு எளிதில் பொருண்மை விளங்குமாறு, தாங்களும் பல நூல்களை இயற்றி உதவியிருக்கின்றனர், பழைய நூல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் தெளிவாகப் புலனாவதற்கு இந்நூல்கள் பேருதவியாக அமையும். அவ்வகையில் சேர்ந்ததே இந்நூல்.

ஸ்ரீகுமாரர் என்பது இந்நூலாசிரியருடைய பெயர். ஸ்ரீராமன் என்பவருடைய புதல்வராம் இவர், சில்ப க்ரந்தங்களில் ஆழ்ந்த

அறிவுள்ளவர். கி. பி, 16-ஆவது நூற்றாண்டின் இறுதியில் அம்பலப்புழை என்னும் நகரத்தில் அரசு செலுத்திய தேவநாராயணன் என்னும் அரசனது ஆணைப்படி இந்நூல் இயற்றப்பட்டதாக இந்நூலாசிரியர் தாமே தெரிவிக்கிறார்.

இதனை மாணவர்களும், ஆய்வார்களும் பயன்படுத்தும் வகையில் நூலின் கருத்துக்கள் எளிதில் விளங்க, சாதாரண மக்கள் பேச்சு வழக்கிலுள்ள சொற்களையே கையாண்டு மிக எளிய நடைமுறையில் தஞ்சை சரசுவதி மகால் முன்னாள் சமஸ்கிருதப் பண்டிதர் நாவல்பாக்கம் தேவநாதாச்சாரியார் என்பவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்நூல் தஞ்சை சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தின் முதற்பதிப்பாக 1961ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. 1989ஆம் ஆண்டும் இரண்டாம் பதிப்பும், 1998ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பும், தற்பொழுது இந்நூல் ஆய்வாளர்களின் விழைவையும், தேவையையும் கருதி மீண்டும் நான்காம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும், இந் நூல் நன்முறையில் வெளிவர துணைநின்ற நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) ஆகிய திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், நூல் அச்சுப்பணியைச் செம்மையுற நிறைவு செய்துள்ள புதுக்கோட்டை சர்மாஸ் ஸானடோரியம் அச்சக உரிமையாளர்களுக்கும், நன்முறையில் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் பாராட்டுக்கள்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
13-5-2007

ஸ்ரீ:

முகவுரை.

※ 𑌕𑌿𑌂𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌨𑌂? 𑌕 𑌉 𑌸 𑌵𑍃𑌕𑍍𑌷 𑌆𑌸?
𑌯𑌤𑍋 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨𑌿𑌷𑍍𑌟𑌤𑌕𑍍𑌷𑍁𑌃 ।
𑌮𑌨𑍀𑌷𑌿𑌣𑍋 𑌮𑌨𑌸𑌾 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑍇𑌦𑍁 𑌤𑌤𑍍
𑌯𑌦𑌧𑍍𑌯𑌤𑌿𑌷𑍍𑌠𑌦𑍍𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍 ।

(ருக்வேதம். — 10-81-4.)

சிற்பக்கலை தெய்விகமான கலை. மனத்தாலும் வாயாலும் அணுகமுடியாத பரஞ்சோதியாகிய கடவுளுக்கும்; "சோதி வெள்ளத்துள்ளே எழுவதோருரு" என்றும், "நெஞ்சினால் நினைப்பான் யவனவனுரும் நீள்கடல் வண்ணனே" என்றும், "[illegible]" என்றும் சொல்லியபடி அடியார்கள் தொழுதெழுவதற்குப் பாங்கான திவ்யமங்களவிக்ரகம் சமைக்கும் பெருமை இதற்கேயுள்ளது. இவ்வாறு திறமைசாலியான சிற்பியால் குற்றமற்றதாகவும் கவர்ச்சிகரமாகவும் எழில் மிக்கதாகவும் சமைக்கப்பட்ட பிம்பங்களில், வேதமந்திரங்களாலும், மற்றுமுள்ள பக்திப் பாடல்களாலும் குழாங்களாகக் கூடி வேண்டப்பட்ட பரந்தாமன், நிரந்தரமாக ஸாந்நித்யம் செய்தருளி

※ இந்தப் பூமியையும் இதுபோன்ற எண்ணற்ற கோளங்களையும் ஒரு காட்டிலுள்ள ஒரு மரத்தைச் சீவி உண்டாக்கினரல்லவா? அந்தக் காடு எது? அம் மரந்தான் யாது? அறிவாளிகளே! மனத்தால் சிந்தித்துப் பாருங்கள். இவற்றைத் தாங்கியவாறு இவ்வேலைகளைப் பொறுப்பேற்று நடத்தியவர் யார்?

(இது இம் மந்திரத்தின் கருத்து. இம்முகவுரையின் முடிவில் இக் கேள்விகளுக்கு விடை காணலாம்.)

இம்மண்ணுலகை வாழ்வித்தருளும் வகையே "அர்ச்சை" "அர்ச்சா மூர்த்தி" என்றெல்லாம் வழங்கப்படுவதாம். "எங்கும் நிறைந்து பரந்துள்ள எம்பெருமானது பரரூபம் புல்லறிவாளராகிய மானிடர்க்குப் புலனுகாமையினுல் அஞ்சவேண்டா. அறிவாளிகளும் அறிவிலிகளும் வாசியற ஒன்றுகூடி அனுபவிக்கவும் இகபரசுகங்களைப் பெற்று வாழவும் இந்த அர்ச்சாவிக்ரகம் இருக்க நமக்கென்ன குறை?" என்கிறார் நம்மாழ்வார் :— (திருவாய்மொழி 3—6—9)

" தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாயவை யல்லனாய்
எஞ்சலில் அமரர்குல முதல் மூவர் தம்முள்ளும் ஆதியை
அஞ்சிநீர் உலகத்துள்ளீர்கள் அவன் இவன் என்று கூழேன்மின் !
நெஞ்சினுல் நினைப்பான் யவனவனாகும் நீள்கடல் வண்ணனே "

" எல்லோரும் எளிதில் வழிபடத் தக்க ஸர்வஸுலபமான அர்ச்சை இருக்க, இறைவனது மற்றை வடிவங்களில் இழிந்து ஏங்கி நிற்பதே" என்னும் கருத்தைத் திருமங்கையாழ்வார் எடுத்துவரக் கின்றார் ; (சிறிய திருமடல்) " ஓரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே " என்னும் பாசுரத்தில்.

" உகந்தருளின நிலங்கள், திவ்ய தேசங்கள், திருப்பதிகள் " என்றழைக்கப்படும் புண்ணியஸ்தலங்களிலும், அதுபோன்ற மற்றவிடங்களிலும் தொன்றுதொட்டு இவ்வர்ச்சா விக்கிரகங்களை நிருமித்துத் திருக்கோவில்களையும் தோற்றுவித்து, இம் மண்ணுலகை வாழவைக்கும் தனிப்பெருமை சிற்பக்கலைக்கே அமைந்தது. ஸ்ரீ—ஸ்ஶாயெள (சில-ஸமாதௌ) என்பது தாது. ஒரு பொருளை உண்டுபண்ண விரும்புகின்றவன், அதன் அமைப்பைத் தன் மனத்தில் முந்துற முன்னம் நன்கு பதியவைத்துக் கொள்ளவேண்டியது இன்றியமையாதது. யோகிகள் மனம் போல் சிற்பிகளுடைய மனமும் அசைவற்று உத்தேசித்த வடிவத்தைத் தன்னகத்தே பதிய வைத்துக் கொள்ளவேண்டும். இந்த நிலைக்கே " ஸமாதி " என்று பெயர். "சில்பம்" என்னும் சொல்லும் இதையே யுணர்த்தும். சில்பி— என்னப்படுபவன், அவ்வாறான பக்குவமான மனத்தை [illegible]

எல்லாம் வல்ல இறைவனே முதல் சிற்பியாவான். மகாப் பிரளயத்தில் அழிந்துபோன உலகங்களை யெல்லாம் அவன் தானே தோற்றுவிக்கின்றான். அதற்காக அவன் நீண்டகாலம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து அதற்குப் பிறகே நினைந்தவாறாக உலகங்களை யெல்லாம் படைக்கின்றான் :—

"ஸோஉபித்யாய ஶரீராத் ஸ்வாத்
ஸிஸ்ருக்ஷுர்விவிதா: ப்ரஜா:".

என்பது மநுஸ்மிருதி. அதனால் உலகச் சிற்பியான அவ்விறைவனை வேதம் "விஶ்வகர்மா" (விச்வகர்மா) என்றழைக்கின்றது. சிற்பக் கலைக்கு இன்றியமையாதது, "படைக்க வேண்டிய பொருளின் வடிவத்துடன் ஒன்றிய சலனமற்ற மனமே" என்பது இதனால் விளங்கும். பரந்தாமனுடைய விசித்திரஸ்ருஷ்டியில் தோன்றிய நாமும், அவனது ஸ்ருஷ்டியாகிய கல், மண், மரம், உலோகங்கள் முதலியவற்றால் அவனது திருவுருவங்களையும், மற்றைப் பிராணிகளையும், கோவில்களையும், கோபுரங்கள்-மண்டபங்கள்-நாடு நகரங்கள் ஆகியவற்றையும் தோற்றுவித்து அவனுக்கே அர்ப்பணம் செய்தல் அவனுடைய இன்னருளைப் பெறுவதற்குச் சிறந்த உபாயமாகின்றது. இதைக் கருதியே அவ்விறைவனாலும் அவனுக்கொப்பான முனிவர்கள் பலராலும், பிரமன், விச்வகர்மா, மயன் போன்றவர்களாலும் சிற்பத்தில் பலவகையான க்ரந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன. நம் நாட்டுப் பெருமக்களும் அந்நூல்களைக் கசடறக் கற்று நுட்பமான பல விஷயங்களையும் மறவாமல் பாதுகாத்து வந்தனர். அதன் பயனே இன்று நம் நாட்டில் மலிந்து காணப்படும் கோவில்களும் வானளாவிய கோபுரங்களும் மற்றுமுள்ள அழகிய நகரங்களும்.

இவ்வாறான சில்ப சாஸ்திரங்களை முறைப்படி கற்றறிந்த பெரியோர்களிடம் கேட்டறிந்த அறிவாளிகள் பலர், பிற்காலத்தில் உள்ளவர்கட்கு எளிதில் விஷயம் விளங்குமாறு தாங்களும் பல நூல்களை இயற்றி உதவியிருக்கின்றனர். பழைய நூல்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் தெளிவாகப் புலனாவதற்கு இக்

நூல்கள் பேருதவியாக அமையும். அவ்வகையில் சேர்ந்ததே இந்நூல்.

சிற்பரத்தினம் என்னும் இந்நூல் "ஸ்ரீகுமாரர்" என்கிற புலவர் பெருமானால் இயற்றப் பெற்றது. இரண்டு பாகங்களாக அமைந்தது. முதல் பாகம் 46-அத்தியாயங்களைக் கொண்டது. வீடுகள், கோவில்கள், கிராமங்கள் முதலியவற்றை நிருமிக்கும் வகையை விளக்குவது. இரண்டாம் பாகம் 35-அத்தியாயங்களுள்ளது. தேவர்களின் பிம்பங்கள், லிங்கங்கள் இவற்றைச் செய்யும் முறையை விளக்கிக் கூறுவது. இந்நூல் முழுதும் தேவநாகர எழுத்தில், திருவனந்தபுரம் அரசாங்கத்தாரால், மஹாமஹோபாத்யாய த. கணபதி சாஸ்திரிகள், K. ஸாம்பசிவ சாஸ்திரிகள் இவர்களைக் கொண்டு இரண்டு பாகமாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதன் இரண்டாம் பாகத்தில், ஒன்று முதல் இருபத்தேழு வரை உள்ள அத்தியாயங்களே தமிழ் மொழி பெயர்ப்புடன் இவ்வெளியீட்டில் அடங்கியுள்ளன.

இந்நூலின் முற்பகுதி சற்றேறக்குறைய 2800 சுலோகங்கள் உள்ளதாம். இவ்வெளியீட்டிலடங்கிய பிற்பகுதி 2600 சுலோகங்களுள்ளது. முற்பகுதியில், தொடக்கத்தில் சிற்பிகளுக்குப் பொதுவான விஷயங்கள் பலவும் விளக்கப்படுகின்றன. அவற்றை நீக்கிவிட்டால் இருபகுதிகளும் சரிசமமாகவே அமையும். ஒவ்வொரு பகுதியிலும் கூறப்படுகின்ற விஷயங்களும் வெவ்வேறானவையே. அதனால்தான்போலும் இரண்டு பாகங்களிலும் தொடக்கத்தில் மங்கள சுலோகம் தனித்தனியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அத்தியாயங்களின் வரிசை என்னும் தனித்தனியாகவே தரப்பட்டுள்ளது. இதில் முற்பகுதி 2800 சுலோகங்கள் ஸம்ஸ்க்ருதத்திலேயே உள்ளன. இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை. அது அவசியம் செய்தேயாக வேண்டிய வேலை. அரசினரின் ஆணைப்படி, பிற்பகுதியே முதன் முதலில் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அதிலும் 2600 சுலோகங்களில் முடிவிலுள்ள எட்டு அத்தியாயங்களிலுள்ள (28 to 35) 000

சுலோகங்கள் தமிழில் மொழி பெயர்க்கப் படவில்லை. ஸ்தபதி களுக்கு அவை அத்யாவச்யகமானவை யில்லை என்று பலர் அபிப்ராயப் பட்டதே அதன் காரணம். ஒன்றிலிருந்து இருபத்தேழாவது வரை உள்ள அத்தியாயங்களில் அடங்கிய 2000 சுலோகங்களே தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு இவ்வெளியீட்டில் இடம் பெற்றுள்ளன.

நூலாசிரியர்

ஸ்ரீகுமாரர் என்பது இந்நூலாசிரியருடைய பெயர். ஸ்ரீராமன் என்பவருடைய புதல்வராம் இவர். பார்கவ கோத்திரத்தினரான அந்தண வகுப்பைச் சார்ந்தவர். மலையாள தேசத்தினர். சில்ப க்ரந்தங்களில் ஆழ்ந்த அறிவுள்ளவர். கி. பி. 16-வது நூற்றாண்டின் இறுதியில் அம்பலப்புழை என்னும் நகரத்தில் அரசு செலுத்திய தேவநாராயணன் என்னும் அரசனது ஆணைப்படி இந்நூல் இயற்றப்பட்டதாக நூலாசிரியர் தாமே தெரிவிக்கின்றார். அவ்வரசனால் ஆதரித்துப் போற்றப்பட்ட இவரும் அக்காலத்தினராகவே இருந்திருத்தல் இன்றியமையாததாகலின், இவரது ஜீவித காலம் கி. பி. 16-வது (சகம். 15-வது) நூற்றாண்டின் இறுதிப் பகுதியேயாகும் என்பர் மகாமகோபாத்யாய கணபதி சாஸ்திரிகள். இவர் வாழ்ந்த ஊர், காலம் இவற்றில் சிறிது மாறுபாடு உண்டு என்பர், கே. ஸாம்பசிவ சாஸ்திரியார். எவ்வகையிலும் இவர் மலையாள தேசத்தைச் சார்ந்தவர் என்பதிலும், 400 ஆண்டுகட்கு முற்பட்டவரென்பதிலும் ஐயமின்றாம்.

நூலின் பெருமை.

சில்பரத்தினம் என்னும் பெயர் இந்நூலுக்கு மிகவும் பொருத்தமானது. பழமையான சிற்பநூல்கள் பலவற்றிலும், சைவ வைஷ்ணவாகமங்களிலும், இதற்கின்றியமையாததாகிய கணித சாஸ்திரத்திலும் சாமுத்திரிகத்திலும் நூலாசிரியருக்கிருக்கும் ஆழ்ந்த அறிவை நன்கு பிரதிபலிக்கின்றது இந்நூல். சிறந்த விலை மதிப்புள்ள இரத்தினம் போல் யாவரும் இதயத்தில் தரித்

துக் கொள்ளவேண்டிய தோன்றும். ஏனைய நூல்களில் காணப்படாத அபூர்வமான பல விஷயங்கள், உத்தமதசதாளம் முதலியவற்றில் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. சிற்பக் கலையின் தத்துவத்தைத் தெள்ளென விளக்கும் ஆர்வத்தில் தோய்ந்த இந்நூலாசிரியர், இலக்கிய இலக்கணங்களை ஊன்றிக் கவனிக்காமல் பலவிடங்களிலும் மனம்போனபடி சுலோகங்களை எழுதியுள்ளார் என்பது உண்மையே. ஆயினும் ரியான சுலோகங்கள் பலவற்றையும் கவனித்தால் இவருக்குக் கவிதையிலுள்ள திறமை நன்கு புலனாகும். நூலில் பலவிடங்களிலும் மலிந்து காணப்படும் இலக்கணப் பிழைகளுக்கு நூலாசிரியர் பொறுப்பாளியல்ல. ஸம்ஸ்க்ருத அறிவு நிரம்பப் பெறாதவர்கள் கையில் இந்நூல் பலகாலம் தங்கியிருந்து அதன்மேல் அச்சிடப்பட்டமையே அதன் காரணமாம். ஆதலின் இனியாவது சிற்பத்தொழிலில் ஈடுபாடுள்ளவர் அனைவரும் ஸம்ஸ்க்ருத இலக்கிய இலக்கணங்களை இளமையிலேயே கசடறக் கற்கவேண்டும். அதன்மேல் சிற்பநூல்களைப் பயிலவேண்டும். இவ்வாறு செய்வதனால் இனி வருங்காலத்தில், ஒப்புயர்வற்ற ஷடி நூல்களைப் பழுதின்றிக் காக்கமுடியும்.

முற்பதிப்பு

திருவனந்தபுரம் அரசாங்கத்தின் வெளியீடாக இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அதைப் பதிப்பித்த ஸ்ரீமான் மகாமகோபாத்தியாய. த. கணபதிசாஸ்திரிகளும், கே. ஸாம்பசிவ சாஸ்திரிகளும் பல நூல்களைப் பதிப்பித்து, புத்தகப் பதிப்பில் நிறைந்த அனுபவமுள்ளவர்கள். பெரு முயற்சியுடன் தமக்கு இயல்பாக உள்ள ஆர்வத்தினால் மிகத்திறமையாக அவர்கள் இந்நூலைப் பதிப்பித்துள்ளனர். பதிப்பிற்கு ஆதாரமாகப் பலவிடங்களிலும் தேடிப் பழைய சுவடிகளைக் கண்டுபிடித்து அவற்றின் துணையுடன் உயர்ந்த பதிப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளனர். அதற்காக அவர்களுக்கும் திருவனந்தபுரம் அரசாங்கத்தாருக்கும் நம் நாட்டினர் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளனர். முதன் முதல் பதிப்பாதலின் சிற்சிலவிடங்களில் தவறுகள் இடம் பெற்றுள்ளன

மற்றை நூல்களின் துணையைக் கொண்டு நாம் அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

மொழிபெயர்ப்பு.

முக்கியமாக ஸ்தபதிகளுக்காகவே இம்மொழி பெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டமையின் அவர்களுக்குப் பழக்கமான கிரந்த எழுத்திலேயே (ஸம்ஸ்க்ருத) மூலம் அச்சிடப் பெற்றுள்ளது. நூலின் கருத்து எளிதில் விளங்குவதையே முக்கியமாக உத்தேசித்து, தமிழ்நடையில் கவனம் செலுத்தப்படவில்லை. சாதாரணமாக மக்கள் பேசுகின்ற வழக்குச் சொற்களே மொழி பெயர்ப்பில் உபயோகிக்கப் பட்டுள்ளன. ஸம்ஸ்க்ருத சுலோகங்கள் மேலேயும், அவற்றின் கருத்து கீழேயும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் சுலோகங்களும் அவற்றின் கருத்துக்களும் திட்டமாக வரும்படி கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சிற்சில இடங்களில்தான் ஏதாவதொன்று மீறிச் சென்றிருக்கும்.

மூலத்தில் பாடபேதங்கள் அதிகம். அவற்றை உள்ளபடியே அச்சிட்டுள்ளோம். பல இடங்களில் அவசியமற்றதாகத் தோன்றிய பாடபேதங்கள் தான் கைவிடப்பட்டன. லிங்கம் (பால்) பல சொற்களிலும் தவறுதலாக உள்ளது மூலத்தில். 𑌆𑌯𑌾𑌮𑌃 (ஆயாம:) என்னும் சொல்— ஆண்பாலில் தான் வரும். ஆனால் 𑌆𑌯𑌾𑌮𑌂 (ஆயாமம்) என்று ஒன்றன்பாலாக இந்நூலில் பலகாலும் வந்துளது. இது போன்றவை மிகமிக வுள. அவற்றைக் கூடியவரை திருத்திப் பதிப்பித்துள்ளோம். பலவற்றை உள்ளவாறே விட்டுப் போந்தனம். கருத்து மாறுபாட்டுக்குக் காரணமாகாத வகையில் சிற்சில இடங்களிலேயே அவ்வாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

திருவனந்தபுரத்து வெளியீடு ஒன்றையே ஆதாரமாக வைத்துக் கொண்டு மொழிபெயர்ப்பு செய்யவேண்டி யிருந்தது. வேறு பதிப்புகளோ, அல்லது சுவடிகளோ, இந்நூலுக்குக் கிடைக்கவில்லை. சிற்பக்ரந்தங்களின் உட்கருத்தை யுணர்ந்தெழுதுவது

மிகமிகக் கடினமான செயலென்பது வெள்ளிடைமலை. இப்பொழுதுதான் இந்நூல் முதன்முதலாக மொழிபெயர்க்கப் படுகின்றது. அதனால் இவ்வேலை மிகவும் கடுமையானதாகவே இருந்தது. ஆங்காங்கு தோன்றும் ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வழியே புலனாவதில்லை. இந்நூலாசிரியர், ஏனைய நூல்கள் யாவற்றையும் நன்றாகக் கற்று, அவற்றுக்கெல்லாம் பிற்பட்டதாகவே இந்நூலை எழுதியுள்ளாராதலின், இதில் வரும் சந்தேகங்களுக்கு மற்றை நூல்களினின்று விளக்கம் கிடைப்பதில்லை. காச்யப சில்பம் ஒன்று தான் இத்துறையில் சிறிது துணையாக இருந்தது. அதை ஒப்பு நோக்குவதன் மூலம் இந்நூலின் சந்தேகங்கள் பலவற்றைத் தெளிந்துகொள்ள முடிந்தது.

மொழிபெயர்ப்பு பயனுள்ளதாக அமைய வேண்டுமென்னும் அவாவினால் அரும்பாடுபட்டுப் பல நூல்களையும் ஆராய்ந்து இப்பணியைச் செய்திருக்கின்றனம். சிற்பக்கலை மேலும் மேலும் ஓங்கி வளர்ந்து, நம் நாட்டில் பண்டை நாட்களில் அஃதிருந்த நன்னிலையெய்த வேண்டுமென்னும் அரசாங்கத்தினரின் கொள்கைக்கேற்றதாக இவ்வெளியீடு அமையவேண்டுமென்பதில் மிகுந்த கவனம் செலுத்தப் பட்டுள்ளது. இம்முயற்சி எவ்வளவு தூரம் பயனளித்துள்ளது என்பதை அறிவிற் சிறந்த நம் நாட்டுச் சிற்பிகள் தான் நிர்ணயிக்க வேண்டும். முதன் முதலாக மொழிபெயர்க்கப் படுவது. அதனால் ஏதாவது பிழைகள் நேர்ந்து விடுவது வழக்கம். அவ்வாறு ஏதாவது நிகழ்ந்திருப்பின் அதையும் கூர்ந்து கவனித்துச் சிற்பிகள் சரிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

சிற்பநூல்களில் சங்கேதச் சொற்களைக் கொண்டே பலவிடங்களிலும் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. இந்நூலாசிரியர் அம்முறையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். அச்சொற்கள் வாசகர்களுக்கு நன்கு விளங்குமாறு இரண்டு அனுபந்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஒன்று அளவுகளின் பெயர்களையும் மற்றொன்று எண்ணிக்கைகளின் பெயர்களையும் விளக்கும். மற்றும் "ஸிம்ஹகர்ணம்" முதலிய கைமுத்திரைகளுக்கும் தனியாக ஒரு அனுபந்தம் சேர்ப்பதாக நினைத்ததுண்டு. ஆனால் அவை இந்நூலி

லேயே பதினைரும் அத்தியாயத்தில் விளக்கப்பட்டமையின் அது கைவிடப் பட்டது. பொருளடக்கம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளது. எவ்வளவு விழிப்பாக இருந்தும் சில பிழைகள் இடம் பெற்று விட்டன. அதனல் பிழை திருத்தமும் சேர்க்க வேண்டியதாயிற்று. தியானப் பிரகரணத்தில் ஒவ்வொரு தியானத்திலும் அவ்வோ மூர்த்திகளின் படத்தையும் இணைத்து வெளியிட்டால் மிகப் பொருத்தமாயிருக்கும். முதலில் அவ்வாறே செய்ய நினைத்ததுண்டு. ஆனல் தகுந்த ஓவிய நிபுணர் கிடைப்பதில் சில சிரமங்கள் தோன்றினமையின் அவ்வெண்ணம் கைவிடப் பட்டது.

இந்நூல் இரண்டு அச்சகங்களில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஒன்றுமுதல் இருபத்தோராம் அத்தியாயம் வரை ஸ்ரீரங்கம் ஸ்ரீவிலாஸம் அச்சகத்திலும், இருபத்திரண்டு முதல் இருபத்தேழாம் அத்தியாயங்கள் வரையில் கும்பகோணம் ஸ்ரீவித்யா அச்சகத்திலும் ஏககாலத்தில் பதிப்பிக்கப் பெற்றது. தாமதமின்றி விரைவில் வெளியிட வேண்டுமென்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. அதனல் முதல் 344 பக்கங்கள் ஒரு பாகம் போலும், பிறகு ஒன்றில் துடங்கி 250 பக்கங்கள் வரை செல்லும் பகுதி மற்ருெரு பாகம் போலும் தோன்றினலும் தொடர்ச்சி மாறுபடவில்லை. அத்தியாயங்களின் எண்ணிக்கையைக் கொண்டு இதை வாசகர்கள் உணரவேண்டும்.

ஏற்கெனவே சில சிற்பநூல்கள் ஸரஸ்வதிமகால் நூல் நிலயத்தாரால் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடப் பெற்றுள்ளன. மற்றும் சில வெளிவரத் தயாராகிக் கொண்டிருக்கின்றன. மேலும் பல மொழிபெயர்ப்புடன் வெளிவரக் காத்திருக்கின்றன. இப்புனிதமான பணியைத் திறம்பட நிறைவேற்றுவதற்குப் பல துறைகளிலும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் அதற்கேற்ற நூல்களும் இன்றியமையாதன வென்று சொல்லவேண்டியதில்லை. இது போன்ற வசதிகள் தஞ்சை சரஸ்வதிமகாலிலேயே மிகுதியா யிருப்பதை யுணர்ந்து ஷை நூல் நிலயத்தின் மூலம் இப்பணியைச் செய்வித்துக்

கொள்ள வகை செய்த சென்னை அரசினருக்குத் தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. ஏனைய வெளியீடுகள் போல் இதுவும், நம் நாட்டில் புத்துயிர் பெற்றுவரும் சிற்பக்கலையின் வளர்ச்சிக்கு ஊன்று கோலாகுமாறு அருளவேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்திடும் சிறந்த திருப் பணியை எனக்களித்த ஸரஸ்வதிமகால் கௌரவ காரியதரிசி, ஸ்ரீமான் S. கோபாலன் அவர்களுக்கு எனது நன்றி. பலவிடங் களிலும் எனது ஐயங்களைத் தீர்த்துக் கொடுத்த வைத்தியநாத ஸ்தபதி (மாமல்லபுரம் சிற்பப் பள்ளியின் அதிபர்)களை என்றும் மற வேன். சரஸ்வதிமகால் தமிழ்ப்பண்டிதர். செந்தமிழ்ச் செல்வர். திருவாளர். வித்துவான். இராம. கோவிந்தசாமி பிள்ளையவர்கள், தமிழ்ப்பதங்களில் தோன்றும் ஐயங்களைக் களைந்து தந்து பல வாறாக உதவினர். அன்னாருக்கும், மிகுந்த சிரத்தையுடன் இதைத் திருத்தமாக அச்சிட்டுத் தந்த ஷை இரண்டு அச்சகத்தா ருக்கும் எனது நன்றியுரித்தாகுக.

ஸரஸ்வதிமகால்,
தஞ்சாவூர்,
1—5—61

நாவல்பாக்கம், ஸ்ரீ. தேவநாதாச்சாரியர்.

ബ്രഹ്മവനം ബ്രഹ്മ സ വൃക്ഷ ആസീത്
യതോ ദ്യാവാപൃഥിവീ നിഷ്ടതക്ഷുഃ ।
മനീഷിണോ മനസാ വിബ്രവീമി വഃ
ബ്രഹ്മാധ്യതിഷ്ഠദ്ഭുവനാനി ധാരയൻ ॥

(யஜுர் தைத். ப்ரா. 2—8—9.)

இதன் பொருள் :— "பிரம்மமே அந்தக் காடு. அம்மரமும் பிரம்மமேதான். அதிலிருந்துதான் இவ்வுலகங்களெல்லாம் சீவி எடுத்துத் தோற்றுவிக்கப்பட்டன. அறிஞர்களே! மனத்தால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்துக் கூறுகின்றேன், பிரம்மமே தான் இவற்றையெல்லாம் தரித்துக் கொண்டு இப்பணியைச் செய்து முடித்தது".

ശ്രീഃ

ശില്പരത്നം—ഉത്തരഭാഗഃ

വിഷയാനുക്രമണികാ।

(അയം ഗ്രന്ഥഃ, ശീഘ്രതരം പ്രകാശനമിച്ഛദ്ഭിഃ അസ്മാഭിഃ ദ്വയോഃ മുദ്രണാലയയോഃ ഭാഗദ്വയാത്മനാ വിഭജ്യ മുദ്രാപിതഃ. അതഃ ആദിതഃ ഏകവിംശാധ്യായം യാവത് പദ്യാനാമുഷ്ഠാഃ— 344 ഭവന്തി. ദ്വാവിംശാധ്യായമാരഭ്യ ഷഡ്വിംശാധ്യായാന്തസ്യ ഭാഗസ്യ, (മുദ്രണാലയാന്തരേ മുദ്രിതസ്യ) പുനഃ ഏകാദ്യാദിക്രമേണൈവ പദ്യസംഖ്യാനമവലംബിതമത്ര. തത്ര ച പദ്യാനാം സംഖ്യാ 250. ഏവം 594 - പദ്യാത്മകമിദം പുസ്തകം ചേയം സംവൃത്തം പദ്യേഷു. അധ്യായാനാം ക്രമോ വിവരിവൃത്തിം വിനാ യഥാതഥമേവ വിന്യസ്തഃ. അത്ര വിഷയാനുക്രമണ്യാം നിർദ്ദിഷ്ടാനാം പദ്യസംഖ്യാനാം തത്തന്നിർദ്ദേശോപയോഗിതയാ തത്തദധ്യായസംഖ്യാപി പാഠകമഹാശയൈരനുസരണീയേതി പ്രാർത്ഥ്യതേ)

പ്രകാശകഃ

விஷயா:

ப்ரதமாத்யாய: | பங்க்தி

த்விதீயாத்யாய:

த்ரவ்யலக்ஷணம்

விஷயா: பத்ராங்கா:

த்ருதீயாத்யாய:

லக்ஷணோத்தர:

𑌵𑌿𑌷𑌯𑌾𑌃	[illegible]

𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

[illegible]

𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

[illegible]

𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍁𑌕𑍍𑌰𑌮𑌣𑌿𑌕𑌾 ।

𑌷𑌷𑍍𑌠𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌤𑌾𑌲𑌃

पञ्चमाध्यायः

[illegible] प्रकरणम्

षष्ठाध्यायः

[illegible] प्रकरणम्

ஏகாதஶோத்யாய:

அஷ்டகாஹோம:

த்வாதஶோத்யாய:

உத்ஸர்ஜனம்

த்ரயோதஶோத்யாய:

சதுர்தஶோத்யாய:

பஞ்சாங்கம்

பஞ்சதஶோத்யாய:

சதுர்வேதாதி ப்ரயோக:

ഷോഡശോഽധ്യായഃ

കിടാരിരോഗങ്ങൾ

സപ്തദശോഽധ്യായഃ

ശസ്ത്രലക്ഷണം

വിഷയാഃ	പുടാദി

വിംശോഽധ്യായഃ

ഏകവിംശോഽധ്യായഃ

വാഹനലക്ഷണം

ദ്വാവിംശോഽധ്യായഃ

(ധ്യാനം) ശൈവപ്രകരണം

த்ரிபஞ்சாஶோऽத்யாய:

(த்யானம்) வைஷ்ணவப்ரகரணம்

ചത്വാരിംശോഽധ്യായഃ

(ധ്യാനം) രാഗലക്ഷണം

பஞ்சவிம்ஶோऽத்யாய:

(த்யானே) - இந்த்ராதிதேவதாப்ரகரணம்

വിഷയാഃ	പുടാഃ
(ശൈവേ) — ശിവമൂര്‍ത്തയഃ	

ഷട്ത്രിംശോഽധ്യായഃ

ബിംബപ്രതിഷേധഃ

ஸ்ரீ:

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம்

பொருளடக்கம்.

(இந்நூல், விரைவாக அச்சிட்டு வெளியிட விரும்பி இரண்டு அச்சகங்களில் இரு பகுதிகளாகப் பிரித்து அச்சிடப் பெற்றது. அதனுல் முதல் 21 அத்தியாயங்கள் வரை பக்கங்கள் 344. 22-வது அத்தியாயம் தொடங்கி 27-வது அத்தியாயம் வரை வேறு அச்சகத்தில் அச்சிடப்பட்டமையின், தனியாக 1, 2 என்று தொடங்கி 250 பக்கங்கள் வரை அச்சிடப்பட்டுள்ளன. அதனுல் இந்நூலில் 594 பக்கங்கள் உள்ளன. அத்தியாயங்களின் வரிசை மாறுபடாமலே அமைந்துள்ளது. ஆதலின் விஷய அட்டவணையில் தரப்படும் பக்கங்களை உள்ளபடி யுணர்வதற்கு வாசகர்கள் அத்தியாயங்களின் எண்ணிக்கையையும் துணையாகக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.)

பதிப்பாசிரியர்.

முதல் அத்தியாயம்.

இரண்டாம் அத்தியாயம்.

லிங்கத்தின் இலக்கணம்.

மூன்றும் அத்தியாயம்.

லக்ஷணோத்தாரம்.

நான்காம் அத்தியாயம்.

ஸகல பிம்பங்களின் உயரம்.

ஐந்தாம் அத்தியாயம்.

உத்தமதசதாளம்.

ஆரும் அத்தியாயம்.

மத்யமதசதாளம்.

ஏழாம் அத்தியாயம்.

அதம தசதாளம்.

எட்டாம் அத்தியாயம்.

உத்தமநவதாளம்.

ஒன்பதாம் அத்தியாயம்.

மத்யமநவதாளம்.

பத்தாம் அத்தியாயம்.

அதம நவதாளம்.

பதினோராம் அத்தியாயம்.

எட்டுதாளம் (உத்தமம்).

பன்னிரண்டாம் அத்தியாயம்.

உத்தமஸப்ததாளம்.

பதின்மூன்றாம் அத்தியாயம்.

பதினான்காம் அத்தியாயம்.

ஐந்துதாளம்.

பதினைந்தாம் அத்தியாயம்.

நான்குதாளம் முதலியவற்றின் விளக்கம்.

பதினொருவது அத்தியாயம்.

கிரீடம் முதலியவற்றின் இலக்கணம்

பதினேழாம் அத்தியாயம்.

சூலத்தின் இலக்கணம்.

பதினெட்டாம் அத்தியாயம்.

கயிறு கட்டுதல்.

பத்தொன்பதாம் அத்தியாயம்.

மண்பூசுதல்.

இருபதாம் அத்தியாயம்.

இருபத்தோராம் அத்தியாயம்.

வாகனங்களின் இலக்கணம்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

(தியானம்) சைவப்பிரகரணம்.

இருபத்துமூன்றும் அத்தியாயம்.

(நியானம்) வைஷ்ணவப்பிரகரணம்.

இருபத்துநான்காம் அத்தியாயம்.

தியானத்தில் சக்திமார்க்கம்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

(த்யானத்தில் இந்திரன் முதலிய தேவதைகளைச் சொல்லுவது.)

மிச்ர மூர்த்தித்தியானம்

இருபத்தாறும் அத்தியாயம்.

பிம்பங்களின் தோஷங்கள்.

இருபத்தேழாம் அத்தியாயம்.

பீடலக்ஷணம்.

ஶ்ரீ:

ஶ்ரீகுமாரப்ரணீதம்

ஶில்பரத்நம்

உத்தரபாக:

ப்ரதமோऽத்யாய: — பிம்பாதிலக்ஷணவிதி:।

அஸங்க்யகோடிப்ரஹ்மாண்டேஷு விஷ்டோ ஹி ததத: க்ரமாச்ச ।
நிஶ்ஶேஷவிஶ்வகர்தா ய: ஸ ஜீயாந்மதுஸூதந: ॥ ௧ ॥

அத பிம்பாதி பீடாதி குண்டமண்டபகாதிகம் ।
மாநுஷாணாம் சதுஶ்ஶாலாத்யபி வக்ஷ்யாமஹே ॥ ௨ ॥

ஸ்ரீகுமாரரால் இயற்றப்பட்ட "சிற்பரத்தினம்"

(பிற்பகுதி)

முதல் அத்தியாயம்-பிம்பம் முதலியவைகளின் செய்முறை.

அளவிட வொண்ணாத கோடிக்கணக்கான பிரமாண்டங்கள் யாவற்றிலும் முறைப்படி வியாபித்திருப்பவரும், உலகங்கள் யாவற்றையும் தோற்றுவிப்பவருமாகிய மதுசூதனன் (மது — என்னும் அசுரனைக் கொன்ற திருமால்) வாழி. (1)

இனி (இவ்விரண்டாம் பாகத்தில்) பிம்பம் முதலியவற்றையும், பீடம் முதலியவற்றையும், குண்டம்—மண்டலம் முதலியவற்றையும், மானிடர்களுக்கான சதுச்சாலா முதலிய யாவற்றையும் சொல்வதற்குத் தொடங்குகின்றேன். (2)

𑌅𑌤𑍍𑌰 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌶𑌿𑌲𑌾𑌦𑌿𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ।

𑌏𑌵𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵𑌾𑌗𑌾𑌰𑌂 𑌉𑌦𑍍𑌯𑌤𑌾𑌯𑍁𑌧𑍈𑌃
𑌸𑌾𑌯𑍁𑌧𑌂 𑌦𑌕𑍍𑌷𑍈𑌶𑍍𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌹𑍈𑌵 𑌚 ।
𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑍇 𑌶𑍁𑌭𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌕𑍇
𑌕𑌾𑌲𑍇 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍 𑌭𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥ ௩ ॥

𑌸𑌮𑍍𑌪𑍂𑌜𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌃 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚 𑌦𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑍁
𑌆𑌰𑌾𑌧𑍍𑌯 𑌦𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌤𑍍𑌯 𑌸𑌾𑌧𑌕𑌃 ।
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌾𑌗𑌂 𑌪𑌰𑌿𑌪𑍂𑌜𑍍𑌯 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾-
𑌣𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌯 𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 ॥ ௪ ॥

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌶𑍁𑌭𑌂 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂
𑌗𑌚𑍍𑌛𑍇𑌨𑍍𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌽𑌥 𑌶𑍁𑌭𑍇 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌚𑌾𑌶𑍁𑌭𑌂 𑌶𑌕𑍁𑌨𑌂 𑌤𑌦𑌾 𑌚𑍇𑌤𑍍
𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑍍𑌪𑌿 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 ॥ ௫ ॥

அவற்றுள் முதலில் "கல்" முதலிய பிம்பங்களைச் செய்தல்

இவ்வாறு சிவபெருமானுடைய கோவிலைச் செய்துவிட்டு, திறமைசாலிகளும் கைகளில் ஆயுதந்தாங்கினவர்களுமான சிற்பிகளுடன், சுக்கில பக்ஷத்தில் (வளர்பிறையில்) சுத்தமான முகூர்த்தத்தில், தக்கவாறு அந்தணர்களை உண்பித்துவிட்டு, திறமை சாலிகளான ஸ்தபதிகளையும் புதிய ஆடைகளைக் கொடுத்து மரியாதைகள் செய்துவிட்டு, இறைவனைப் பூசித்துவிட்டு, மீண்டும் முறைப்படி வணங்கிவிட்டு, ஆயுதங்களையும் முறைப்படி பூசித்துவிட்டு அஸ்திர மந்திரத்தைச் சொல்லி (ரக்ஷை செய்து) லிங்கங்களைச் செய்வதற்காகக் கொடுக்கவேண்டும். (3, 4)

புறப்படுவதற்கு முன்பு நிமித்தங் (சகுனம் முதலியவை)களை நன்கு பரீக்ஷித்துப் பார்த்தல் அவசியம். சுபமான சகுனம் ஆகுமாயின் கிழக்கு முகமாகப் புறப்பட்டுச் செல்லவேண்டும். அசுபமான

[illegible]

[illegible] ‖ எ ‖

[illegible] ‖ அ ‖

[illegible] ‖ கூ ‖

சகுனமானால், உடனே புறப்படக் கூடாது. ஒரு மாதம் கழித்து, மீண்டும் சுபமான காரியங்களைச் செய்த பிறகு செல்லவேண்டும். (5)

சுடர் மிக்கு விளங்கும் தீபம், எருதுகள், விலைமாதர்கள், கன்னிப்பெண்கள், மலர், சோறு, நிறைகுடம், நெய், சங்கு, பால், தயிர், நெல், சாலி, மாமிசம், தேன், குடை, சாமரம், சுமங்கலிகளான பெண்கள், அரசன், கொடி, நாணேற்றிய வில், பால்கறக்கும் பசு, குதிரைகள் — இவைகள் எதிரில் காணப்படுமானால், செல்கின்றவனுக்கு விரும்பின பொருள்கள் கைகூடும். அவை பிரதக்ஷிணமாகச் செல்லுமாயின் மிகுந்த நன்மையைத் தரும். பிரயாண காலத்தில், இடது புறம் பல்லி — காகம் — இவற்றின் ஒலி கேட்கப்படின் நன்றாகும். கிருகப்பிரவேசத்தில் (புது மனையில் குடிபுகும் சடங்கில்) இவையே வலதுபுறமிருந்தால் நல்லது. முதன்முதலில் 'தும்மல்' அமங்களமானது. (6-9)

𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌚 ।
𑌶𑌸𑍍𑌤𑌂, 𑌨𑍃𑌣𑌾𑌂𑌚 𑌕𑍂𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀*𑌤𑍍𑌰𑌾𑌂𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌾𑌦𑍀𑌨𑌾𑌂
𑌵𑌾𑌮𑍇 𑌶𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 ‖ ௧௦ ‖

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌶𑌾𑌙𑍍𑌗𑍀𑌤𑌕𑌂
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ।
𑌸𑍃𑌗𑌾𑌲𑌵𑌾𑌯𑌸𑍌 𑌵𑍃𑌷𑌭𑍍𑌰
𑌶𑍍𑌚𑌕𑍋𑌰𑌶𑍍𑌚 𑌕𑌪𑍋𑌤𑌿𑌕𑌾 ‖ ௧௧ ‖

𑌵𑌾𑌮𑌾𑌦𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌗𑌾𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑌾𑌃
𑌫𑌣𑍀 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌃 ।
𑌶𑌶𑌕𑍌𑌶𑌿𑌕𑌗𑍃𑌧𑍍𑌰𑌾𑌶𑍍𑌚
𑌶𑍍𑌯𑍇𑌨𑌾𑌶𑍍𑌚 𑌮𑍃𑌗𑌡𑍁𑌣𑍍𑌡𑍁𑌭𑌾𑌃 ‖ ௧௨ ‖

மற்ற சமயங்களில், பின்புறத்திலும் இடதுபுறத்திலும் கேட்பது நலம். மனிதர்களின் குரல், (விளங்காதது) குயவன் — இவர்களின் குரல் இடதுபுறம் நல்லது. தென்புறத்தில் :— (10)

சாந்தமான திசையில் பாட்டு கேட்பதும், கிளிப்பிள்ளைகளும், ஆந்தைகளும் நன்று. குள்ளநரி, காகம், சகோரபக்ஷி, புறா இவைகள் :— (11)

இடதுபுறத்திலிருந்து வலது புறம் சென்றால் நலம். பாம்பு எதிலும் இகழ்வானது. முயல், கோட்டான், கழுகு, பருந்து, மான், தண்ணீர்ப் பாம்பு— (12)

---

* 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌤𑍍𑌰𑌾𑌵𑌿— என்றும் பாடம்.

தக்ஷிணா வாமகா ஶஸ்தா:
ஶப்தா வாச ஶுபப்ரதா: |
கரகவ்யோர்த்வநிர் வாமே
கதிர் தக்ஷிணத: ஶுபா || ௧௩ ||

அஶநிர் துர்திநம் *வர்ஷம்
ப்ரதிகூலா குரோர் கிர: |
ப்ரதிகூலம் ச வா வாக்யம்
க்ஷுதஶப்தோ(அ)தி நிந்திதா: || ௧௪ ||

தாடநம் ஶிரஸோ(அ)ங்காநாம்
தக்ஷிணாங்க்ரே விஶேஷத: |
வர்ணவாஹநவேஷாணாம்
கந்தாயுததிஶாமபி || ௧௫ ||

இவைகள் வலமிருந்து இடமாவது நலம். சுபமான வார்த்தைகள் சுபத்தையே கொடுக்கும். கழுதை, பசு இவற்றின் ஒலி இடதுபுறம் நல்லது. அவை வலதுபுறம் போவது நல்லது. (13)

இடிவிழுதல், இடைவெளியில்லாது நாள் முழுவதும் மேகம் மூடியிருக்கும் தினம், பெரு மழை, விரோதமான வார்த்தைகள். ஆசாரியனுடைய பிரதிகூலமான வார்த்தை, சச்சரவுகள்—இவைகள் கூடாதவை. (14)

தலையில் அடித்துக் கொள்ளுதல், மற்றை உறுப்புக்களிலும், சிறப்பாக வலது காலிலும் அடிபடுதல், வர்ணம் (பலவகையான நிறங்களில் உள்ள சாந்துகள்) வாஹனங்கள் (குதிரை — யானை முதலியன) வேஷங்கள் (ஆடைகள்) மணம், ஆயுதங்கள், திசைகள் இவற்றினுடையவும் :— (15)

---

* வஜ்ரம்—என்றும் பாடம்.

𑌅𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍋𑌽𑌯 𑌦𑌿𑌗𑍍𑌦𑌾𑌹-
𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑌾 𑌶𑌿𑌵𑌾𑌰𑌾𑌵𑌶𑍍𑌚 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑍋𑌲𑍍𑌕𑌾𑌪𑌾𑌤𑍋 𑌕𑍍𑌷𑍍𑌮𑌾-
𑌕𑌮𑍍𑌪𑌶𑍍𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ‖ ௧௬ ‖

𑌵𑍃𑌕𑍍𑌷𑌧𑍍𑌵𑌜𑌾𑌯𑍁𑌧𑌚𑍍𑌛𑌤𑍍𑌰-
𑌯𑌾𑌨𑌭𑌙𑍍𑌗𑌾 𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌾𑌃 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌕𑍍𑌷𑌪𑌣𑌨𑌗𑍍𑌨𑌾𑌶𑍍𑌚
𑌮𑍁𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌙𑍍𑌗𑌨𑌾𑌃 ‖ ௧௭ ‖

𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍋 𑌵𑍍𑌰𑌾𑌤𑍍𑌯𑌾𑌃
𑌯𑌤𑌯𑍋 𑌵𑌾𑌮𑌨𑌾𑌦𑌯𑌃 ।
𑌵𑌿𑌕𑌲𑌾 𑌜𑌾𑌲𑌿𑌕𑌾 𑌵𑌿𑌧𑌵𑌾𑌃
𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑌾 𑌦𑌣𑍍𑌡𑌪𑌾𑌣𑌯𑌃 ‖ ௧௮ ‖

தெளிவில்லாமை: மேலும் திக்குக்களில் தீபிடித்தது போன்ற நிலை, சூரிய சந்திரர்களைச் சுற்றிலும் மண்டலம் காணப்படுதல், குள்ளநரி ஊளையிடுதல், சந்திரன் சூரியன் இவற்றின் கிரஹணம், கொள்ளிக்கட்டை விழுதல், பூமி நடுக்கம், ஆகாயத்தில் வானவில் தோன்றல்; (16)

மரம், கொடி (த்வஜம், தாவர வகை அல்ல.) ஆயுதம், குடை, பல்லக்கு முதலிய வாகனம் இவை முறிந்து விடுதல் இதெல்லாம் கெடுதல். கிராமாதிகாரி, ஜைன சந்நியாசி, நிர்வாணமாயிருப்பவன், மொட்டைத் தலையன், அமங்களமான பெண்டிர்; (17)

பிராம்மணர், தவசிகள், வ்ராத்யர்கள் (உபநயனம் செய்வதற்கான காலவரம்பு கடந்தும் உபநயனம் இல்லாமலிருப்பவர்கள்), சந்நியாசிகள், குள்ளர்கள், கை—கால் முதலியவற்றில் ஊனமான வர்கள், விதவைகள், மாமிச வ்யாபாரிகள், பாஷண்டிகள், தடியைக் கையில் வைத்திருப்பவர்கள்; (18)

𑌕𑌾𑌪𑌾𑌲𑌿𑌕𑌾𑌃 𑌕𑌾𑌷𑌾𑌯𑌾𑌃 𑌮𑍁𑌕𑍍𑌤𑌕𑍇𑌶𑌾𑌶𑍍𑌚 𑌦𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾𑌃 |
𑌆𑌰𑍍𑌦𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌨𑌿𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍂𑌲𑌮𑌤𑌾𑌃 ||

𑌅𑌦𑍍𑌭𑍁𑌤𑍇𑌷𑍁 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌮𑌾𑌸𑌂 𑌤𑍀𑌰𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌭𑍇 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 |
𑌶𑌿𑌲𑌾𑌮𑌯𑌂 𑌰𑌤𑍍𑌨𑌮𑌯𑌂 𑌲𑍌𑌹𑌂 𑌦𑌾𑌰𑍁𑌮𑌯𑌂 𑌤𑌥𑌾 || ௨௦ ||
𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑌂 𑌮𑌿𑌶𑍍𑌰𑌕𑌂 𑌲𑍇𑌖𑍍𑌯𑌂 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌧𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 |

𑌤𑍇𑌷𑌾𑌮𑌭𑌿𑌮𑌤𑌂 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌬𑌹𑍁𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑍈𑌃 || ௨௧ ||

　　𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌰𑌕𑍍𑌤𑌾𑌪𑍀𑌤𑌕𑍃𑌷𑍍𑌣𑌾-
　　　𑌕𑍍𑌰𑌮𑌾𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 |

　　𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌵𑌿𑌟𑍍𑌶𑍂𑌦𑍍𑌰-
　　　𑌶𑌿𑌲𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 || ௨௨ ||

𑌪𑍀𑌤𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌶𑍍𑌚

மண்டை ஓடு ஏந்தியவர்கள், விறகு தலையர், தலைமயிர் அவிழ்ந்தவர்கள், துக்கப்பட்டவர்கள், ஈரத்துணியுடன் இருப்பவர்கள் இவர்கள் எதிரில் வருவது நல்லதன்று. (19)

அத்சயமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் ஒரு மாதம் கழித்து நல்ல நாளில் போகவேண்டும். (19½)

(1) கல்லால் பண்ணவேண்டியது, (2) இரத்தினங்களாலானது, (3) உலோகங்களாலானது, (4) மரத்தினாலானது, (5) மண்ணாலானது, (6) கலப்புற்றது, (7) எழுதவேண்டியது (வர்ணப்படம்) என பிம்பங்கள் ஏழு வகைப்படும். அவரவர்களுக்கு இஷ்டமான பொருள்களைத் தக்கப்படி பரீக்ஷித்துத் தேடிச் சென்று எடுத்து வரவேண்டும். (21½)

வெண்மையானது அந்தணர்க்கும், செம்மையானது க்ஷத்திரியர்க்கும், மஞ்சள் நிறமானது வைசியர்க்கும், கருமையானது சூத்திரர்க்கும் ஏற்ற சிலையாகும். (22)

𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌤𑌾𑌭𑌿𑌰𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌥𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌿𑌲𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑌿𑌤𑌿 𑌕𑍇𑌚𑌨 ॥ ௨௩ ॥

𑌮𑍋𑌕𑍍𑌷𑌂 𑌜𑌯𑌂 𑌧𑌨𑌂 𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 𑌦𑌦𑍍𑌯𑍁𑌃 𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌾𑌃 𑌶𑌿𑌲𑌾𑌃 ।
𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌂 𑌵𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 𑌶𑌿𑌲𑌾 ॥ ௨௪ ॥

𑌤𑌾𑌮𑍇𑌵 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌕𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌲𑌾𑌮𑍍 ।
𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌯 𑌪𑍁𑌂𑌶𑌿𑌲𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌪𑍀𑌠𑌾𑌯 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾 𑌤𑌥𑌾

𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌶𑌿𑌲𑌾 𑌪𑌾𑌦𑌶𑌿𑌲𑌾𑌯𑍈𑌵 𑌤𑌥𑌾 ।
𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌾𑌂 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌬𑌲𑌿𑌂 𑌦𑌤𑍍𑌵𑌾 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥ ௨௬ ॥

𑌹𑍇𑌮𑌸𑍂𑌚𑍍𑌯𑌷𑍍𑌟𑌲𑍋𑌹𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌤𑌤𑌃 ।
𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌚𑌿𑌹𑍍𑌨𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௭ ॥

அவைகளைக் கொண்டு தக்கவாறு லிங்கங்களை செய்ய வேண்டும். ஷடி சிலைகள் யாவும் யாவர்க்கும் ஏற்றவை என்பது சிலர் கருத்து. (23)

மேற்கூறிய நால்வகையான சிலைகள் முறையே மோக்ஷத்தையும், வெற்றியையும், செல்வத்தையும், தானியத்தையும் கொடுக்கும், எடுத்து வைக்கப்பட்ட சிலை எந்த திசையை நோக்குகின்றதோ; (24)

அந்த திசையை நோக்கிய வண்ணமே ஆலயத்திலும் அதை ஸ்தாபிக்கவேண்டும். பிம்பத்திற்கு "ஆண்" சிலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பீடத்திற்குப் "பெண்" சிலை; பாத பீடத்திற்கு "நபும்ஸக" சிலை. எல்லா பிம்பங்களுக்கும் பொதுவானது இவ்விஷயம். தகுந்த சிலையைக் கண்டெடுத்து முறைப்படி அதற்கு பலி கொடுத்து, பொன் ஊசி அஷ்டலம்—இவைகளால் வெட்டி எடுத்து, அதற்குப் பிறகு மீண்டும் உள்ளும் புறமும் அடியிலும் நுனியிலும் அடையாளம் செய்து, கொண்டு வர வேண்டும். (25-27)

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

பெண்சிலையில் லிங்கம் செய்யப்பட்டால் நாடும் அரசனும் அழிவார்கள். ஆண் சிலையில் பீடம் செய்யப்பட்டாலும், லிங்கமும் பீடமும் நபும்ஸக சிலையில் செய்யப்பட்டாலும், ஆண்—பெண்—சிலைகளால் பூபீடம் செய்யப்பட்டாலும் ராஜ்யம் அழிந்து விடும். இவ்வாறு அவசியமான விஷயங்களை நன்கு கவனித்துத் தகுந்த சிலையைத் துணியினால் மறைத்துக்கொண்டு வரவேண்டும். (28-29)

இவ்வாறு செய்து இரதத்தில் (வண்டியில்) ஏற்றி, சிவன் கோயிலுக்கு எடுத்துச் சென்று, வடக்கு திசையில் இறக்கிவைத்து முறைப்படி நன்றாக லிங்கத்தைப் பண்ணவேண்டும். (30)

இனி இரத்தினங்கள்

ஸ்படிகம், பத்மராகம், வஜ்ரம், நீலம், பொன், வைடூர்யம், பவழம், புஷ்யராகம் என்று இரத்தின பிம்பங்கள் எட்டு வகை. அவற்றில் முதலாவது, *ஸ்படிகம்-ஸூர்யகாந்தம்-சந்திரகாந்தம்

---

* மூவகைத்தான ஸ்படிகங்களுக்கும் பொதுப் பெயரான "ஸ்படிகம்" என்பது சிறப்பாக அதன் முதல் வகைக்கும் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

[illegible]

[illegible]

[illegible] ௩௩

[illegible] ௩௪

என மூவகையானது. இவை மூன்றும் ஸ்படிகத்தின் உட்பிரிவுகளே யாகும். இவைகள் முறையே :— காமம் (சிற்றின்பம்), மோக்ஷம் (பேரின்பம்), அர்த்தம் (செல்வம்) ஆகியவற்றைத் தரவல்லன வாகும். (31—32)

பத்மராகத்தால் பிம்பம் செய்து பூஜித்தால் செல்வத்தையும், வஜ்ரத்தால் காமத்தை (சிற்றின்பத்தையும்)யும், (இந்திர) நீலத்தால் ஆரோக்கியத்தையும், பொன்னால் வளத்தை (ஸம்ருத்தியை)யும், வைடூரியத்தால் மக்கட்பேறையும், பவழத்தால் வெற்றியையும், புஷ்ய ராகத்தால் ஸுகத்தையும் பெறலாகும். (33)

நண்ப! நவக்கிரகங்களுக்குரிய இரத்தினங்களைக் கேள். சூரிய னுக்கு மாணிக்கம், சந்திரனுக்கு முத்து, செவ்வாய்க்குப் பவழம், புதனுக்கு மரகதம், குருவு (வியாழனு)க்குப் புஷ்யராகம், சுக்கிரனுக்கு வஜ்ரம், சனிக்கு நீலம், இராகுவுக்கு கோமேதகம், கேதுவுக்கு வைடூரியம். அந்தந்த கிரஹங்களை பூஜிப்பதில் அவ்வோ இரத் தினங்கள் ஏற்றவை. (34)

ரத்நாநாமிஹ ஸர்வேஷாம் தோஷா: ஸாமாந்யதோ நவ ।
ரேகா பிந்து: கலங்கஶ்ச காகபாத்க்ஷதாஹ்வயா: ॥ ௩௫ ॥

துஷாரத்ராஸரந்த்ராணி யத்ர ரத்நேஷு ஸஞ்சயே ।
ரேகா பிந்து: கலங்கஶ்ச த்ராஸ: காகபதங் க்ஷதம் ॥ ௩௬ ॥

ஸகத்யோதோ மக்ஷிகா நாநாபேதா பிந்தவ(ஸி) ஸந்தய: ।
நிம்நமூர்த்தா சேதி தோஷா ரத்நஸ்வா ஸ்ம்ருதா: ॥ ௩௭ ॥

ஸ்த்ரீபும்நபும்ஸகவிதா ந ஸ்யா ரத்நேஷு ஸர்வத: ।

இரத்தினங்களின் தோஷங்கள் பொதுவாக ஒன்பது வகை:- (1) ரேகை (கீறல்-கோடு), (2) பிந்து (புள்ளி), (3) களங்கம் (அழுக்கு-கருமையான சிறுபகுதி), (4) காகபாதம் (காகத்தின் கால் போன்ற குறி), (5) க்ஷதம் அடிபட்ட இடம் (எல்லாப் புறங்களிலும் சரியான அளவு இல்லாமல் ஒரிடத்தில் உடைந்து மூளியாயிருத்தல்), (6) தூளி (தூசி)படிந்திருத்தல், (7) துஷாரம் (பனிபடர்ந்தாற் போன்ற நிலை), (8) த்ராஸம் (நடுக்கம்), (9) ரந்த்ரம் (துவாரம்-துளை) என்பது அவற்றின் பெயர்கள். (35)

முன் சுலோகத்தில் கூறப்பட்டவைகளுடன், (1) கத்யோதம் (மின்மினிப் பூச்சிக்குறி), (2) மக்ஷிகா (ஈக்குறி), (3) பலவகையான புள்ளிகள், (4) ஸந்தி (முறிந்து போன இரு பகுதிகள் ஒன்றாகச் சேர்த்துவைக்கப்பட்டது போன்ற தோற்றம்), (5) தலையில் பள்ளம் (அதாவது இரத்தினங்களின் சிகரம் (உச்சி-கூர்மையான உயர்ந்த பாகம்) தாழ்ந்திருத்தல், தலை நிமிர்ந்து நில்லாமல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்பது போன்ற நிலை), என்னுமிவையும் தோஷங்களாகும். (36)

எக்காரணங் கொண்டும் இரத்தினங்களில், ஆண்-பெண்-அலி என்னும் பாகுபாடு இடம் பெறாது. (37)

அத லோஹாநி

ஸௌவர்ணம் ராஜதம் தாம்ரம் பைத்தலம் காம்ஸ்யமாயஸம் ।
ஸைஸகம் த்ராபுஷம் சேதி லோஹம் பிம்பஸ்ய யோக்யதா ।

ஸௌவர்ணே புக்திமுக்தீ ஸ்த: ராஜதம் புஷ்டிவர்தநம் ।

தாம்ரஜம் புத்ரதம் வித்யாத் ததைவ ஸ்யாத் பைத்தலம் ததா ।
ஆயுராரோக்யதம் காம்ஸ்யம் ஆயஸம் மரணம் த்ருவம் ॥ ௪௦ ॥

ஸைஸகம் த்ராபுஷம் வாபி வித்வேஷோச்சாடநாதிஷு ।
ஶ்ரேஷ்டாநி சத்வாரி ஹைமாதீநி ஶுபாநி ஹி ॥ ௪௧ ॥

பிஶாசதேவதாநாம் து காம்ஸ்யாதீநி கேசந ।

இனி உலோகம்.

பொன், வெள்ளி, செம்பு, பித்தலம், வெண்கலம், இரும்பு, ஈயம், துராக்கட்டை, என்று பிம்பங்களுக்கு ஏற்ற உலோகங்கள் எட்டு. (38½)

பொன்னால் லிங்கம் செய்து பூஜித்தால் இம்மை மறுமை ஸௌக்ய முண்டாம். வெள்ளி, புஷ்டியைத் தரும். செம்பு மக்கட்பேறு தரும். பித்தளையும் அப்படியே. வெண்கலம் ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் தரும். இரும்பு மரணத்தைக் கொடுக்கும். (40)

ஸீஸம் (ஈயம்), த்ரபு (துராக்கட்டை) இவை: வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் காரியங்களுக்கும், ஏவல் முதலியவற்றை அகற்றும் வேலைக்கும் தரும். (முன்பு கூறியவற்றுள்) முதன்மையான பொன் முதலிய நான்கு உலோகங்கள் சுபமானவை. வெண்கலம் முதலான மற்ற உலோகங்கள் பிசாசங்களுக்கே தரும்-என்பர் சிலர். (41½)

𑌅𑌥 𑌦𑌾𑌰𑌵𑌃

𑌚𑌨𑍍𑌦𑌨𑌂 𑌦𑍇𑌵𑌦𑌾𑌰𑍁𑌶𑍍𑌚 𑌶𑌮𑍀𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌶𑌿𑌂𑌶𑌪𑌾𑌃 ॥ ௪௨ ॥

𑌖𑌦𑌿𑌰𑌶𑍍𑌚𑌾𑌸𑌨𑍋 𑌮𑌾𑌲𑍂𑌰𑍋 𑌮𑌧𑍂𑌕𑍋 𑌬𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌪𑌦𑍍𑌮𑌕𑌂 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌰𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௪௩ ॥

𑌶𑍁𑌭𑌾 𑌦𑌾𑌰𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।

𑌅𑌥 𑌮𑍃𑌦𑌃

𑌤𑍀𑌰𑍍𑌥𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌨𑌗𑌾𑌰𑌾𑌮𑌪𑍁𑌣𑍍𑌯𑌦𑍇𑌶𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌂 𑌮𑍃𑌦𑌮𑍍 ॥ ௪௪ ॥
𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌂 𑌰𑌕𑍍𑌤𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌪𑍀𑌤𑌾𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂 𑌚𑌾𑌦𑌾𑌯 𑌚𑍂𑌰𑍍𑌣𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌵𑌗𑍋𑌧𑍂𑌮𑌮𑌾𑌷𑌾𑌣𑌾𑌂 𑌚𑍂𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌗𑍍𑌗𑍁𑌲𑍋𑌰𑌪𑌿 ॥

இனி மரம்

சந்தன மரம், தேவதாரு (செம்புளிச்செம்மரம்), வன்னி மரம், அரசமரம், இருள்வீடு மரம் அல்லது அகில்மரம், கருங்காலி, அஸநம் (வேங்கை), மாலூரம் (பில்வமரம்), இலுப்பை, மகிழமரம், பத்மகம், கோங்கு மரம் ஆகிய இவற்றுள் அந்தணர் முதலான நான்கு வருணத்தாருக்கும் முறையே மும்மூன்று மரங்கள் ஏற்றவை. (42-43)

இவைகள் லிங்கம் பண்ணுவதற்கேற்ற சுபமான மரங்கள் என அறியப்பட வேண்டும். (43½)

இனி மண்

புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், மலைகள், நந்தவனங்கள் மற்ற புண்ணியமான தலங்கள் இவற்றினின்றும், வெண்மையானதும், சிவப்பானதும், மஞ்சள் நிறமுள்ளதும், கருப்பு நிறமுள்ளதுமான மண்ணைக் கொண்டுவந்து பொடியாக்க வேண்டும்.

அத்துடன்; யவம், கோதுமை, உளுந்து, குங்கிலியம், (குக்கில்) அரக்கு, திருவட்டம் பிசின் (மரத்துவெள்ளை), (ஸ்ரீவேஷ்டகம்),

ஶாகோட ஶ்ரீவ்ருக்ஷஸ்யாத்ர ஸர்ஜநிர்யாஸ ஸமாம்ஶகை: |
குந்துருஷ்கஸ்ய சூர்ணம் ச ஸ்வல்பம் ஸம்யோஜயேத் ||௪ரு||

கபிலாபஞ்சகவ்யேந ஸதைலேந து மர்தயேத் |
தாம் ம்ருதம் ஸிக்தாம் பக்ஷம் பர்யுஷிதாம் மாஸத: ||

க்ருத்வா ஸபீடலிங்கம் து ஸம்யக் லக்ஷணஸம்மிதம் |
மாஸம் ச ஶோஷயேத் ஸூர்யே பிம்பமாமம் து பாகிதம் || ௪அ

அதவா கேவலாம் ம்ருத்ஸ்நாம் க்ருத்வா யோக்யாம் விசூர்ணிதாம் |
ஸிக்தாம் பஞ்சகவ்யாத்பி: ஜலஸம்யுதாம் தயோஷிதாம் || ௪கூ ||

க்ருத்வா ஸபீடலிங்கம் ஸம்யக் ஶுஷ்கம் ப்ரயத்நத: |
விபசேச்ச ததோ ஸம்யக் பக்வலிங்கம் து கல்பயேத் ||ரு0||

ஞாழல் (சிவதைவேர்), ஆச்சாமரத்துப் பிசின், (வெள்ளை குங்கிலியம்) இவைகளின்பொடியையும்சமபாகமாகச் சேர்க்கவேணும். குந்துரிஷ்கத்தின் (குந்துருக்கம் பிசின்) பொடியையும் சிறிதளவு சேர்க்க வேணும். பிறகு அந்தப் பொடிமண் எல்லாவற்றுக்கும் ஏற்றதாகும். (45-46)

பிறகு அந்த மண்ணை, கபிலா (ஒருவகையான பசு)வின் பஞ்சகவ்யத்திலும் (பால் — தயிர் — நெய் — மூத்திரம் — சாணம் ஆகிய ஐந்தினுடைய சேர்க்கை), எண்ணெயாலும் பிசைந்துத் துகைக்க வேண்டும். அவ்வாறு 15-நாட்கள் வரை துகைக்கப்பட்ட மண்ணைப் பிறகு 1-மாதம் வரை புளிக்குமாறு வைத்திருக்க வேண்டும். (47)

அவ்வாறு பண்படுத்தப்பட்ட மண்ணை எடுத்து, பீடத்துடன் கூடிய லிங்கத்தை லக்ஷணப்படி பண்ணி, சுடாமலே ஒரு மாதம் வெயிலில் உலர்த்த வேண்டும். இது ஆமலிங்கமாகும். ஆமம்— சுடப்படாதது. (48)

அல்லது, சுத்தமான மண்ணைமட்டும் கொணர்ந்து, வேலைக்கு ஏற்றதாகும்படி பொடி செய்து, பஞ்சகவ்யத்தினாலும் ஜலத்தினாலும் பிசைந்து, ஒரு மாதம் வைத்திருந்து, பிறகு அந்த மண்ணால் பீடத்

𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑍍𑌷𑌾𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌦𑌗𑍍𑌧𑍍𑌵𑌾 𑌵𑌹𑍍𑌨𑌾𑌵𑌿𑌦𑌂 𑌪𑌕𑍍𑌵𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑍍𑌞𑌕𑍈𑌃 ॥ ௫௧ ॥

𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌾𑌵𑍁𑌚𑌿𑌤𑍈𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑌂 𑌦𑌾𑌰𑍁𑌜𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌦𑌂 𑌸𑌦𑌾 ॥ ௫௨ ॥

𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑍇 𑌹𑍇𑌮𑌰𑌤𑍍𑌨𑌾𑌦𑌿 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑍈𑌕𑌤𑌂 𑌗𑍋𑌮𑌯𑌂 𑌪𑍈𑌷𑍍𑌟𑌂 𑌗𑍌𑌡𑌂 𑌫𑌾𑌲𑌂 𑌨𑌵𑌨𑍀𑌤𑌕𑌮𑍍 ॥

𑌤𑌾𑌤𑍍𑌕𑌾𑌲𑌿𑌕𑌾𑌨𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌨𑌿 𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌾𑌨𑌿 𑌪𑍂𑌜𑌾𑌵𑌸𑌾𑌨𑌤𑌃 ।
𑌨𑍈𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑍀𑌠𑌿𑌕𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌕𑍍𑌷𑌣𑌿𑌕𑌂 𑌤𑌤𑍍 𑌤𑌥𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

துடன் இஷ்டமான அளவு லிங்கத்தைப் பண்ணி, தேர்ந்தவர்களைக் கொண்டு நெருப்பிலிட்டுச் சுட வேண்டும். இது பக்வலிங்கமாகும். (பக்வம்-சுடப்பட்டது.) (49—50)

மரத்தினால் சூலம் பண்ணி இரும்புப் பட்டங்களால் அலங்கரித்து முறைப்படி மண்ணை அதன் மேல் பூசி உலர்த்த வேண்டும். இது மிச்ரலிங்கம். (மிச்ரம்-கலப்புற்றது.) (51)

சுவர் போன்ற இடங்களில் தகுந்த வர்ணங்களால் முறைப்படி பிம்பத்தை (சித்திரத்தை) வரைய வேண்டும். இது லேக்ய பிம்பம் எனப்படும். (லேக்யம்-எழுதப்பட்டது.) மண்ணாலானதும், மரத்தினாலானதுமாகிய லிங்கம் எக்காலமும் எல்லாவிதமான சித்தியையும் கொடுக்கவல்லது. (52)

மண்ணாலான லிங்கத்தில், நடுவில் பொன்னையும், இரத்தினங்களையும் வைத்துப் பண்ணவேண்டும். மணலினால் செய்யப்பட்டதும், பசுவின் சாணத்தினால் செய்யப்பட்டதும், மாவு — சோறு வெல்லம் இவற்றால் செய்யப்பட்டதும், பழங்கள், வெண்ணெ இவற்றால் செய்யப்பட்டதுமான லிங்கம் தினந்தோறும் பண்ணப் பட்டுப் பூஜை முடிந்தவுடன் கைவிடப்பட வேண்டியதாகும். இவற்றுக்குப் பீடம் செய்ய வேண்டியதில்லை. அதற்கான

தேஷாம் த்ரிவர்ணமானம் வா ந ஶிரோவர்த்தநாதிகம் ।
தேஷாம் காலம் ச லக்நம் ச நாதிவாஸாதிகா: க்ரியா: ॥

தத்காலே ஸம்ப்ரதிஷ்டே ச ஶிவமாவாஹ்ய பூஜயேத் ।
விஸ்ருஜ்ய நிரபேக்ஷம் தல்லிங்கம் ஸலிலே விநிக்ஷிபேத் ॥ ௫௬ ॥

அத பீடம் ।

ஶைலாதிபி: பீடமேவம் ஸாஜாத்யேநைவ ஶோபநா ।
அஶக்தே ஶைலஸ்யேஷ்டகீபிஸ்ஸ்யாத் ரத்நஜாநாம் ஹிரண்மயீ ॥ ௫௭ ॥

ஆஸன மொன்றில் லிங்கத்தைப் பண்ணிவைத்துப் பூஜிக்க வேண்டும். (53—54)

இந்த லிங்கங்களுக்கு, த்ரிகண்டமானம், சிரோவர்த்தனம் முதலிய சடங்குகள் ஒன்றும் வேண்டியதில்லை. நல்ல நாள்—முகூர்த்தம் இவையும் இந்த லிங்கங்களுக்கு அவசியமில்லை. தான்யம்—ஜலம்—பஞ்சகவ்யம்—இதுபோன்றவைகளினுள்ளே அதிவாஸம் செய்யவும் வேண்டா. (55)

இந்த லிங்கங்களை அவ்வப்பொழுது பண்ணி அவற்றில் சிவனை ஆவாஹநம் செய்து பூஜிக்கவேண்டும். பூஜை முடிந்தவுடன், மீண்டும் சிவனை விடுவித்து (தன்னிடத்துக்கே திரும்பவும் எழுந்தருளுமாறு பிரார்த்தித்து) அந்த லிங்கத்தைப்பற்றிக் கவலைப் படாமல் அதை ஜலத்தில் வைத்துவிடவேண்டும். (56)

பீடம்

கல்—முதலியவற்றால் செய்யப்பட்ட லிங்கங்களுக்கு அதேவகையில் பீடம் செய்வது பொருத்தமுடைத்து. அவ்வாறு செய்ய முடியாவிடில், கல்லாலான லிங்கத்துக்குச் செங்கல்லால் பீடம் அமைக்க வேண்டும். இரத்தினங்களாலான லிங்கங்களுக்குப் பொன்னால் பீடம் அமைக்கவேண்டும். (57)

𑌰𑌾𑌜𑌤𑌂 𑌤𑌾𑌮𑍍𑌰𑌜𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌮𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
[illegible] 𑌇𑌷𑍍𑌟𑌕𑌾𑌭𑌿𑌸𑍍𑌤𑍁 𑌦𑌾𑌰𑌵𑍇 ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇
𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌦𑌿𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

அல்லது வெள்ளியிலும் தாம்ரத்திலும் இரத்தின லிங்கங்களுக்குப் பீடம் அமைக்கலாம். பொன் - வெள்ளி - தாம்ரம் - இவைகளால் செய்யப்படும் பீடங்கள் முறையே, உத்தமம் - மத்யமம் - அதமம் - எனப்படும். லோஹங்களில் உயர்ந்ததுக்குத் தாழ்ந்த லோஹத்தாலும், மரத்தினல் செய்யப்பட்ட லிங்கத்துக்குச் செங்கல்லினும் பீடம் அமைத்தல் வேண்டும். (58)

சில்பரத்நம் இரண்டாம் பாகத்தில்
பிம்பம் முதலியவற்றைச் செய்யும் வகையைக் கூறும்
முதல் அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌅𑌥 𑌲𑌿𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌸𑍍𑌯𑍋𑌮𑌾𑌸𑌹𑌿𑌤𑌂 𑌤𑌤𑌃 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑍂𑌡𑌂 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌮𑍍 ॥ ௧ ॥

𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑌙𑍍𑌗𑌾𑌧𑌰𑌸𑍍𑌤𑌤𑌃𑌪𑌰𑌮𑍍 ।
𑌸𑌪𑍍𑌤𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌰𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌤𑌃 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌮𑍍 ॥ ௨ ॥

𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌦𑌶𑌮𑌂 𑌗𑌜𑌹𑌾 𑌤𑌥𑌾 ।
𑌏𑌕𑌾𑌦𑌶𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌕𑌙𑍍𑌕𑌾𑌲𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௩ ॥

𑌅𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌵𑌿𑌘𑍍𑌨𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌂 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌮𑍍 ।

இரண்டாம் அத்தியாயம்.

லிங்கலக்ஷணம்.

சைவத்தில் ஊன்றிய முன்னோர்களால் பதினெட்டு வகை லிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது—ஸுகாஸநம் (சுகமாக விற்றிருக்குமாறு). இரண்டாவது—முருகன் பார்வதி இவர்களுடன் கூடியது. மூன்றாவது பிறைசூடிய முடியுடையவாறு. நான்காவது—விருஷப வாஹனம். ஐந்தாவது—நடநமாடியவாறு. ஆறாவது—கங்கையைத் தாங்கியவாறு. ஏழாவது—மூன்று புரமெரித்தவாறு. எட்டாவது—கலியாணசுந்தரம். ஒன்பதாவது—அர்த்தநாரீச்வரம். பத்தாவது—கஜஹா (யானையைக் கொன்றவர்). பதினொன்றாவது—பாசுபதம். பன்னிரண்டாவது—கங்காளம். பதின்

चण्डेशप्रसादश्च दक्षिणामूर्तिरेव च ॥ ४ ॥

अतः कालारिमूर्तिश्च
लिङ्गोद्भवं स्मृतः ।
एवं षोडशभेदं च मूर्तयः
प्रोक्ताः शैवपारायणैः ॥ ५ ॥

अथ बिम्बं तु त्रिविधं निष्कलं सकलं तथा ।
मिश्रमिति च,
तद्बिम्बमचलं च चलं तथा ॥ ६ ॥

चलाचलमिति त्रया,
तत्र भेदाः प्रकीर्तिते ।
निष्कलं केवलं लिङ्गं, सकलं त्ववयवान्वितम् ॥ ७ ॥

तदेव चित्रमर्धचित्रं च चित्राभासकम् ।

மூன்றாவது — அர்த்த நாராயணம். பதினான்காவது — பிக்ஷாடனர். பதினைந்தாவது—சண்டேச்வர ப்ரஸாதனம். பதினாறாவது—தக்ஷிணா மூர்த்தி. பதினேழாவது—காலாரி மூர்த்தி (நமனை வென்ற வடிவம்). பதினெட்டாவது—லிங்கோத்பவம், என்றவாறு. (1—5)

இனி பிம்பத்தைக் கூறுவோம். நிஷ்களம்—ஸகலம்—மிச்ரம்—என்று பொதுவாக பிம்பம் மூவகையானது. மேலும்-அசலம் (அசை வற்றது), சலம்(அசைவது), சலாசலம் (இரண்டு விதமாகவும் இருப் பது), என்று மூவகைப்படும்.

இனி அதை விரித்துரைக்கிறோம். "நிஷ்களம்" என்பது கேவ லம் லிங்கம் மாத்திரமாகும். மற்றது அவயவங்களுடன் கூடியது. இதுவே ஸகலமாகும். அதுவே (ஸகலமே) "சித்திரம்" (1) "அர்த்த

• 'நாஸாயாம் ஸ்பர்ஶசித்ரகம் (சுற்றளவில் பாதியே காணப்படுவது அர்த்தசித்ரம்.) ஶ்ரீ ஶில்ப சித்ரகல்பஸாஸ்த்ரம்—ஸரஸ்வதிமஹால் வெளியீடு.

சித்ராபாஸம் ததா ப்ரோக்தம் ஸர்வாங்காதி க்ரமேண து ॥ ௭ ॥

ஸகலம் த்ரிவிதம் ஜ்ஞேயம்,

சித்ரலக்ஷண லக்ஷிதம் ।

சித்ரார்த்தம் ஸாவயவம் ததா ஸ்ம்ருதம்,

அவயவாதிகஸாத்ருஶ்யே து ॥ ௯ ॥

நிதிகும்பப்ரதிஷ்டாதி ஸர்வம் ஶாஸ்த்ராநுஸாரத: ।
க்ருத்வா ப்ரதிஷ்டிதம் பிம்பம் அசலம் பரிகீர்த்திதம் ॥ ௰ ॥

பீடிகோபரி ஸம்ஸ்தாப்ய பூஜிதம் சலமேவ ஹி ।
லௌஹஜம் பார்த்திவம் ஶைலம் ஸங்கரம் சலம் ஶுபம் ॥

சித்திரம்" (2) "சித்திராபாஸம்" (3) என மூவகைப்படும். எல்லா அவயவங்களுடனும் கூடியது முதல் வகை. பாதி உடலே காணப்படுவது இரண்டாவது வகை. அதுவுமன்றிக்கே எழுதப்படுவது மூன்றாவது வகை. இவை முறையே உத்தமம்·மத்யமம்·அதமம் எனப்படும். (7, 8)

இரண்டு வகைகளும் கலந்தது மிச்ர லிங்கமாகும். இதுவே முகலிங்கமெனப்படும். அதாவது—முதல் வகையான நிஷ்கலலிங்கத்திலேயே சித்திரம் வரைவதுபோல் ரேகைகளால் உருவத்தைக் காட்டுவது என்றபடி.

இனி, அசலம்·சலம்·சலாசலம்·இவை விளக்கப்படுகின்றன: (9)

நிதி கும்பம் இவற்றைப் பிரதிஷ்டை செய்வது முதலாக முறைப்படி சடங்குகள் யாவற்றையும் செவ்வனே செய்து, ப்ரதிஷ்டை பண்ணப்படும் பிம்பம் "அசலம்" (அசைவற்றது) எனப்படும்.

பீடத்தின் மேல் வைத்துப் பூஜிக்கப் படுவது "சலம்" (அசைவது). கன்னும்பு, மண், கல், இவைகளால் தனித்தனியாகவோ, அல்லது ஒன்றோடொன்று கலந்தோ அசல பிம்பம் செய்யப்படும். இது சுபமானது. (11)

ரத்நஜம் தாருஜம் லௌஹம் சலபிம்பம் ஶுபம் ஸ்ம்ருதம்।
தாதுவர்ணபடாதிஷ்வாலேக்யம் சலாசலம் மதம் ॥௧௨॥

லிங்கம், கர்பக்ருஹத்வாரஸ்தம்பாதிஷ்டாநகிஷ்குபி:।
தாலமாநாங்குலேநாபி ததா மாத்ராங்குலேநாபி ॥௧௩॥

யஜமாநோத்ஸேதகேநைவம் நவவிதம் ஸ்ம்ருதம்।

[illegible]

இரத்தினங்கள் - மரம் - உலோகங்கள் - இவற்றால் செய்யப்படும் "சலபிம்பம்" சுபமானது. தாதுப் பொருள்கள், பலவகை வர்ணங்கள்—இவற்றால், துணி முதலியவற்றில் எழுதப்படுவது 'சலாசலம்' (அசைந்தும் அசையாமலும் இருப்பது) எனப்படும். (12)

லிங்கமானது :- கர்பக்ருஹம், துவாரம் (வாயில்), கம்பம், அதிஷ்டானம், கிஷ்கு, தாலம் மானங்குலங்கள், மாத்ராங்குலங்கள், யஜமானுடைய உயரம். இவ்வாற்றால் ஒன்பது விதமாகும். அதாவது, ஒரு லிங்கம் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் பொழுது அதன் உயரம் "இவ்வளவு இருக்கவேண்டும்" என்று தீர்மானம் செய்வதற்கான ஆதாரங்கள் மேற்கூறப்பட்டவை. இவற்றில் ஏதேனுமொன்றைப்பற்றி லிங்கம் நிர்மாணிக்கப்பட வேண்டும். அடுத்து வரும் விவரணங்களால் இதை அறியலாகும். (13)

முறைப்படி, கர்ப்பக்ருஹத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தின் அளவை நிர்ணயம் செய்யும் வகை முதலில் விளக்கப்படுகின்றது. கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை, ஐந்து-ஒன்பது—இரண்டு—ஆகிய எண்களால் வகுக்கவேண்டும். அவற்றில் முறையே, மூன்று—ஐந்து—ஒரு—பாகங்கொண்டனவாக லிங்கங்கள் அமைக்கப்படவேண்டும். அதாவது கர்பக்ருஹத்தின் அகலத்தை ஐந்தால் வகுத்தால் ஈவின் மூன்று பாகங்கள் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். அதை ஒன்பதால் வகுத்தால், ஈவின் ஐந்து

லிங்காநி த்ரீணி தேஷாம் த்ரிஷ்வம்ஶாம்ஶ விபஜேத்-
ஶேஷைகபாகேந லிங்கமேவ: ।
ஏவமேதாநி ஸர்வாணி நவ, ப்ரமாணாநி
க்ருஹம் ப்ரதமம்

பாகங்கள் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். அதை இரண்டால் வகுத்தால் ஈவின் ஒரு பாகம் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். இவ்வாறு மூன்று அளவுகள் முதன்மையாக எடுக்கக் கூடியவை. அவை ஒவ்வொன்றையும் மூன்று பாகமாக்கவேண்டும். அதில் ஒரு பாகம் ஒரு அளவு. இரண்டு பாகம் சேர்ந்தது மற்றொரு அளவு. இவ்வாருக அவை ஒவ்வொன்றும் மும்மூன்று வகையாகின்றன, அதனுல் ஒன்பதாக உயர்ந்தன. உதாகரணமாக:— ஒரு கர்ப்ப க்ருஹத்தின் அகலம் ஒன்பது அடி என்று வைத்துக்கொள்வோம். இதை ஐந்தாலும்—ஒன்பதாலும்—இரண்டாலும் வகுக்கவேண்டும். ஐந்தால் வகுத்தால் 1-அடி 9¼-அங்குலம் (21¼-அங்குலம்) ஒரு பாகத்தில் வருகின்றது. இதை மூன்று மடங்காக்கினுல் (64¾-அங்குலம்) ஐந்து அடி நாலரை அங்குலம் ஆகின்றது. இது ஒரு அளவு. இந்த 64¾-அங்குலத்தை மூன்றுல் வகுத்தால் 21¼-அங்குலம் ஒரு பாக மாகின்றது. இது மற்றொரு அளவு. இந்த 21¼-அங்குலம் கொண்ட பாகம் இரண்டு சேர்ந்தால் 43 அங்குலம் ஆகின்றது. இது மற்றொரு அளவு. ஆக கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை ஐந்தால் வகுக்கும் முறையில்—லிங்கத்தின் உயரத்திற்கு மூன்று அளவுகள் கூறப்பட்டன. (21¼—43—64¾ அங்குலங்களுள்ளவை).*

இனி ஒன்பதடி அகலமுள்ள கர்ப்பக்ருஹத்தை ஒன்பதால் வகுத்தால் ஒரு அடி ஒருபாகமாகின்றது. இதில் ஐந்து பாகம் (ஐந்து அடி) லிங்கத்தின் உயரமாகும். இந்த அந்த அடியை மூன்றுல் வகுத்தால் 20-அங்குலம் ஒரு பாகமாகின்றது, இது மற்றொரு அளவாகும். இந்த இருபது அங்குலம் உள்ள இரண்டு பாகங்கள் சேர்ந்தால் நாற்பது அங்குலமாகும். இதுவும் மற்றொரு அளவா

---

* இங்கு ¾ அங்குலம் மிகுதியாக உள்ளது. அதையும் கூறு செய்துகொள்க.

ஆதாரம் கர்ப்பகேஹஸ்ய கல்ப்யா லிங்கோச்சமானாதிவிதே
தத்ருவணோதாநாநி ॥ ௧௪ ॥

கும். இவ்வாருக கர்பக்ருஹத்தின் அகலத்தை ஒன்பதால் வகுத்தால் அதனுல் லிங்கத்தின் உயரத்திற்கு மூன்று அளவுகள் கூறப்பட்டன (20—40—60-அங்குலங்களுள்ளவை).

இனி ஒன்பதடி அகலமுள்ள அதே கர்ப்பக்ருஹத்தை இரண்டால் வகுத்தால் 4½-அடி (54-அங்குலம்) ஒரு பாகமாகிறது. இது ஒரு அளவாகும். இந்த 54-அங்குலத்தை மூன்ருல் வகுத்தால் 18 அங்குலம் ஒரு பாகமாகிறது. இது மற்றொரு அளவாகும். இந்த 18-அங்குலம் கொண்ட இரண்டு பாகம் 36-அங்குலமாகிறது. இது மற்ருெரு அளவாகும் இவ்வாருக கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை இரண்டால் வகுப்பதனுல் மூன்று அளவுகள் லிங்கத்தின் உயரத்திற்கேற்றதாகக் கூறப்பட்டன. (18—36—54-அங்குலங்களுள்ளவை.)

இத்தால் ஒன்பதடி அகலமுள்ள ஒரு கர்ப்பக்ருஹத்தில் லிங்கம் அமைக்க வேண்டுமானுல், கர்ப்பக்ருஹத்தின் அகலத்தையே லிங்கத்தின் உயரத்தை நிர்ணயிப்பதற்கு ஆதாரமாகக் கொள்வதானுல் ஒனபது அளவுகளில் அதை அமைக்கலாம். அங்குலங்களால் 18–20 21⅗; 36-40-43; 54-60-64⅘; என்று அவை கணக்கிடப்படும்— என்று தேறிற்று. இது போலவே வெவ்வேறு அளவுள்ள கர்ப்பக்ருஹங்களின் அகலத்தையும் ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை ஒன்பது வகைகளில் நிர்ணயிக்கும் விதத்தை ஊஹித்தறிந்து கொள்ளவேணும்.

இனி கர்ப்பக்ருஹத்தின் வாயிற்படி (த்வாரம்) யின் அகலத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகை விளக்கப்படுகின்றது. இதில் ஐந்து வகை உண்டு. வாயிற்படியின் அகலத்துக்குச் சமமாகவே லிங்கத்தின் உயரத்தை அமைப்பது. அதில் கால் பங்கு அதிகம் சேர்த்தும் குறைத்தும் மற்றும் இரண்டு அளவுகள் உண்டு. ஆக மூன்று விதமாயிற்று. மேலும் இரண்டு அளவுகள் உண்டு. அவைகளாவன:- கர்ப்பக்ருஹத்தின்

*ப்ராஸாதஸ்ய சதுர்பாகம் பஞ்சபாகம் ஷடம்சகம் ।

வாயிற்படியின் அகலத்தை மூன்று பாகங்களாக்கி ஒரு பாகம் ஒரு அளவாகவும், இரண்டு பாகங்கள் மற்றொரு அளவாகவும் கொள்ள வேண்டும். அதாவது :—

ஒரு கர்ப்பக்ருஹத்தின் வாயிற்படி மூன்றடி அகலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் ஐந்து :—

(1) மூன்றடி உயரமே லிங்கத்தை அமைப்பது.

(2) மூன்றேமுக்கால் அடி (3¾அடி) உயரமாக அமைப்பது.

(3) இரண்டேகால் (2¼ அடி) அடி உயரம் அமைப்பது.

(4) அகலத்தை மூன்றால் வகுத்து இரண்டு பாகத்தின் உயரம் அதாவது இரண்டு அடி உயரம் அமைப்பது.

(5) அகலத்தை மூன்றால் வகுத்து ஒரு பாகம் உயரம்–ஒரு அடி உயரம் லிங்கத்தை அமைப்பது.

இதுபோல்— பலவிதமான அகலமுள்ள வாயிற்படிகளின் அகலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தை ஐந்து வகைகளில் நிர்ணயம் செய்யும் வகைகளை ஊஹித்தறிக. (14)

அவ்வாறே ப்ராஸாதத்தின் அளவைக் கொண்டும் லிங்கத்தின் உயரத்தைத் தீர்மானிக்கலாம். ப்ராஸாதம் என்பது விமானம் :—

அதில்— நாலிலொரு பாகம், ஐந்திலொரு பாகம், *ஆறிலொரு பாகம்-லிங்கத்தின் உயரம் இருக்கலாம். உதாரணமாக :— ஒரு விமானத்தின் அகலம் 20-அடி என்று வைத்துக்கொள்வோம். அதில் நாலிலொரு பாகம் 5-அடி இது ஒரு அளவாகும். ஐந்திலொரு பாகம் 4-அடி. இது மற்றொரு அளவாகும். ஆறிலொரு பாகம்—

---

* ப்ராஸாத தாரவர்ஜ்ஜாயிஷ்டாம் த்ரிஸ்தாவீ மதேஸ்ச:- என்று ப்ராஸாதீய விஸ்வகர்ம சில்பசாஸ்த்ரத்தில் விமானத்தின் அகலமே ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌮𑍋𑌽𑌥𑌵𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃, 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑍋𑌽𑌧𑌸𑍍𑌯 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑍇 ॥

𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌰𑍍𑌧𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

3-அடி 4-அங்குலம். இதுவும் ஒரு அளவாகும். ஆக, 20-அடி அகலமுள்ள விமானத்தின் அகலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தைத் தீர்மானிப்பதானல் (1) 3-அடி-4 அங்குலம், (2) 4-அடி, (3) 5-அடி என மூன்று வகைகள் உண்டு. இது போல் பலவிதமுள்ள விமானங்களின் அகலங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு லிங்கங்களின் உயரத்தை நிர்ணயிக்கும் வகைகளை ஊஹித்துக்கொள்ள வேண்டும். மற்றும் சில விதங்கள் கூறப்படுகின்றன. (15)

கர்ப்பக்ருஹத்தின் அகலத்தில் பாதியளவு லிங்கத்தின் உயரம் இருக்கலாம்.

த்வாரம் (வாயிற்படி), அதிஷ்டாநம் (மூலபேரம் ஸ்தாபிப்பதற்காக உபபீடத்தின் மேல் அமைக்கப்படும் மேடை போன்ற உயரமான பகுதி), பாதம் (கர்ப்பக்ருஹத்தின் சுவர்களில் வெளிப்புறம் கம்பம் போல் காண்பிக்கப்பட்ட பகுதி)' இவற்றிற்குச் சமமாகவும், கால் பாகம் அதிகமாகவும் அல்லது குறைவாகவும் லிங்கத்தின் உயரம் இருக்கலாம். அதாவது:— கர்ப்பக்ருஹத்து வாயிற்படி வாசலின் உயரம் 8-அடி என்று வைத்துக் கொள்வோம். அந்: கர்பக்ருஹத்தில் ஸ்தாபிக்கப்படும் லிங்கத்தின் உயரமும் 8-அடியே இருக்கலாம். இது ஒரு அளவு. அல்லது அதில் ¼ பாகம் குறைவாக அமைக்கலாம். 8-அடியில் கால் பாகமாகிய 2-அடி போக ஆறு அடி லிங்கத்தின் உயரம் இருக்கலாம். இது மற்றொரு அளவு. அல்லது 8-அடியில் கால் பாகமான 2-அடியைக் கூட்டி 10-அ லிங்கத்தின் உயரமாக இருக்கலாம். இது மூன்றாவது அளவு. இவ்வாறே அதிஷ்டானத்தின் உயரத்தையும் ஆதாரமாக வைத்து

ஆரோபயேஷ்ட நவாம்ஶாநாம் ஸமம், வாம்ஶாதிகம்து வா ॥ ௧௬ ॥

பாதவிஸ்தரம்,

ஸமேயமேகஷாம் தத்த்யேஷ்வம்ஶவிஸாஜிதே ।

கொண்டு அதற்குச் சமமாகவும், கால் பாகம் குறைவாகவும், கால் பாகம் கூடவும், இப்படியாக மூன்றளவுகள் எடுத்து லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படியே பாதத்தின் (பாதம் எனப்படுவது கம்பம் அல்லது ஸ்தம்பம் என்பது. கர்ப்பக் ருஹத்து விமானத்தின் அடிப்புறத்தில் வெளிப்பக்கம்—கம்பங்கள் போல் காணப்படும் பாகம். இவ்விடத்தில் மற்ற இடங்களில் உள்ள தூண்களை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது) உயரத்திலும் மூன்று வகைகள் கண்டுகொள்வது. (16)

மேலும், இவற்றின் மத்திய பாகத்தை நான்கால் வகுத்தால் அதனால் கிடைக்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவாகும். ஆக ஒவ்வொன்றும் ஒன்பது விதமாகும். அதாவது :— த்வாரத்தின் உயரம் 8-அடி என்று முன் சுலோகத்தின் உரையில் கூறியபடியே வைத்துக்கொள்வோம். அத்துடன் கால் பங்கு கூட்டி 10-அடியாக ஒரு அளவும், கால் பங்கு குறைத்து 6-அடியாக ஒரு அளவும் முன் போலவே வைத்துக்கொள்வோம். இப்பொழுது கிடைத்த மூன்று அளவுகளில் 6-அடி குறைந்தபக்ஷமாகவும், 8-அடி மத்யமமாகவும் 10-அடி உயர்ந்தபக்ஷ அளவாகவும் உள்ளது. இவற்றில் ஒவ்வொன்றின் இடைப்பாகத்தை நான்கால் வகுக்கவேண்டும். 6-க்கும் 8-க்கும் இடையில் 2-அடி இருக்கிறது. இதை நாலால் வகுத்தால் ஒவ்வொரு பாகமும் அரை அடி கொண்டதாகும். அவ்வாறே 8 அடிக்கும் 10 அடிக்கும் இடையிலுள்ள 2 அடியையும் நான்கால் வகுத்தால் இவ்வாறே அரை அடி கொண்ட நான்கு பாகங்கள் கிடைக்கும். அதனால் மொத்தம் ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன. அவை :— 6, 6½, 7, 7½, 8, 8½, 9, 9½, 10—என்னும் அடிக் கணக்கில் வரும்.

ப்ரயுக்த்யா தத்ஸம்ஶேஷ: ஸ்யாத்³தா³நம் நவதா⁴ ஸ்ம்ருதம் ॥

ஶூத்³ராதி³ வர்ணயோக்³யாநி பஞ்சாதி³ஹஸ்தாதி³-

ஹஸ்தாந்தாநி வர்ணாநாம் லிங்கோச்சாநி து ।

---

8 அடி உயரமுள்ள கர்ப்பக்ருஹ த்வாரத்தின் உயரத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகையில் மேற்கூறியபடி ஒன்பது அளவுகள் உள்ளன. அதுபோலவே அதிஷ்டானத்தினுடையவும், பாதத்தினுடையவும் உயரத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதிலும் ஒன்பது அளவுகள் கிடைக்கும் வகையை அறிந்துகொள்ள வேண்டும் (17)

இந்த சுலோகத்தில், அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் ஏற்றதாக. தனித்தனியே லிங்கத்தின் உயரம், ஹஸ்தத்தை (முழம்) ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் வகை விளக்கப்படுகின்றது. கீழ் 13-வது சுலோகத்தில் சொல்லிய வரிசைக் கிரமத்தில் கர்ப்பக்ருஹம்—த்வாரம்—ஸ்தம்பம்—அதிஷ்டானம் என்னும் நான்கு முடிந்தது இதுவரை. இனி "கிஷ்கு" என்று கூறப்பட்ட ஐந்தாவது வகை விளக்கப்படுகிறது. கிஷ்கு என்பதே ஹஸ்தம். (முழம்). அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றதாகத் தனித் தனியே இதில் லிங்கத்தின் உயரம் நிர்ணயிக்கப்படுகின்றது. ஐந்து முழம் உயரமுள்ளது ஒரு அளவு. ஒன்றேமுக்கால் (1¾) முழம் மற்றொரு அளவு. இவ்விரண்டுக்கு மிடையில் வரிசையாகக் கால் கால் பாகம் குறைத்து ஒவ்வொரு அளவாக எடுத்துக் கொண்டோ போனால் பதினென்கு அளவுகள் கிடைக்கின்றன. அவற்றில் முதல் வருணத்தவருக்கு ஐந்தும், மற்ற மூன்று வருணத்தவருக்கும் முறையே மும்மூன்றளவுகளும் தகுந்தவை. அதெவ்வாறெனில் :- —

[illegible]

[illegible] ‖ ௧௫ ‖

வரிசை எண்.	லிங்கத்தின் உயரம் ¼ பாகமாகக் குறைத்தல்.		
(1)	5 முழம்	உயரம்	முதல் ஐந்து அளவுகள்.
(2)	4¾ ,,	,,	
(3)	4½ ,,	,,	
(4)	4¼ ,,	,,	
(5)	4 ,,	,,	
(6)	3¾ ,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(7)	3½ ,,	,,	
(8)	3¼ ,,	,,	
(9)	3 ,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(10)	2¾ ,,	,,	
(11)	2½ ,,	,,	
(12)	2¼ ,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(13)	2 ,,	,,	
(14)	1¾ ,,	,,	

இதில் முதல் ஐந்து அளவுகள் அந்தணர்களுக் கேற்றவை. இந்த ஐந்து அளவுகளில் ஏதேனுமொன்றை லிங்கத்தின் உயரமாகக் கொண்டு அந்தணர்கள் வழிபாடு செய்யலாம்

ஸம்வ்ருத்யம்ஶகைஸ்த்ரிகைஸ்துல்யமுத்ஸேத ஹஸ்தயோ

ஏவமேகைக வ்ருத்த்யா விஶேஷோऽனுலோமத்வயோ: ஸதாம் |

என்றவாறு. அடுத்த மும்மூன்றளவுகளும் முறையே மற்ற மூன்று வருணத்தவருக்கும் ஏற்றவை. அதாவது தத்தமக்கென வகுக்கப் பட்ட மும்மூன்றளவுகளுள் ஏதேனுமொன்றை லிங்கத்தின் உயர மாக அமைத்துக்கொண்டு அவரவர்கள் வழிபாடு நடத்துதல் தகுதி யுடைத்தென்றவாறு. இதுபோன்ற இடங்களில் சுலோகங்களின் எழுத்துக்களுடைய எண்ணிக்கை கெடாமல் சரியாக வருவதற்காக நூலாசிரியர் சங்கேதச் சொற்களாலேயே எண்களைக் குறிப்பிடுகின் றார். மொழி பெயர்ப்பில் அந்தந்த சங்கேதச் சொற்களினின்றும் கிடைத்த எண்களே ஆங்காங்கு தரப்படுகின்றன. சங்கேதச் சொற் களின் விவரங்கள் அதற்கேற்ற பொருளுடன் இந்நூலிலேயே மற்றோரிடத்தில் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன. (18)

முன் சுலோகத்தில் கடைசியாகக் கூறப்பட்ட அளவு 1¾ அடி உயரமாகும். இதனிலும் கால்பங்கு குறைத்து முன்போலவே மற் றொரு அளவும், அவ்வாறே மற்றும் கால் கால் பங்கு குறைத்து மேலும் இரண்டு அளவுகளும் எடுக்கவேண்டும். இவ்வாறாக மூன்றளவுகள் கிடைக்கின்றன. அவற்றுள் முதலிரண்டளவுகள் *அனுலோமர்களுக்கும், மூன்றாவது †பிரதிலோமர்களுக்கும் ஏற்ற தாகும். அதாவது— 1¾ அடியில் கால் பங்கு குறைத்தால் 1½ அடி யும், அதிலும் கால் பங்கு குறைத்தால் 1¼ அடியும் ஆக இரண்டு அளவுகள் கிடைக்கின்றன. அதிலும் கால் பங்கு குறைத்தால் 1 அடியுள்ளதாக மற்றோரளவு கிடைக்கின்றது. இவற்றில் 1½, 1¼ அடியுள்ள இரண்டளவுகள் அநுலோமர்களுடைய பூஜைக்கான லிங்கங்களின் உயரத்திற்கேற்றவை. இவ் விரண்டில் ஏதேனுமொரு அளவை லிங்கத்திற்கு ஏற்று அநுலோமர்கள் பூஜை செய்யலா

---

*அநுலோமர்—உயர்ந்த ஜாதி ஆணுக்கும் தாழ்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்.

†பிரதிலோமர்—தாழ்ந்த ஜாதி ஆணுக்கும் உயர்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்.

தாந்யேதத்ப்ரதிலோமாநாம் ஹ்யநுலோமேஷு வா நர-
மேகாத்யாந் ப்ரக்ஷிபேத்தேஷு வர்ணகாநாதிகாநபி ॥ ௧௯ ॥

ஆரப்ய ஹஸ்தம் நவஹஸ்தகாந்தம்
லிங்கம் விதேயம் நரதைத்யதேவை: ।
ஹஸ்தாதிகம் பஞ்சகராந்த மாத்யம்
லிங்கம் உதாஹ்ருத்யஸ்ய விதீர்ணவர்ணை: ॥ ௨௰ ॥

தைத்யஸ்ய ஷட்ஸப்தகராந்த லிங்கம்
கீர்வாணலிங்கம் ச நவாஷ்டஹஸ்தம் ।

மென்றவாறு. மூன்ருவது அளவு 1 அடியுள்ளது. இவ் வளவில் லிங்கத்தின் உயரத்தை அமைத்து பிரதிலோமர்கள் பூஜிக்கலா மென்றவாறு. ஒரு முழம் தொடங்கி ஐந்து முழம் வரையிலுள்ள அளவுகளை அனுலோமர்—பிரதிலோமர்கள், நான்கு வருணத்தவர் கள் இவர்களுக்கேற்றதாக ஒவ்வொரு முழம் ஏற்றிக்கொண்டே சென்று அமைத்தலும் தகும். அதாவது :- அனுலோமர் — பிரதிலோ மர்—1 முழ உயரம் லிங்கத்தின் உயரம் அமைத்துப் பூஜிக்கலாம். அடுத்த அளவு 2 அடி உயரம். அதற்கடுத்தது 3 அடி. பிறகு 4 அடி. முடிவில் 5 அடி. இந்த நான்கு அளவுகள் முறையே அந்தணர் ஈருக உள்ள நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவை. (19)

ஒரு முழம் தொடங்கி ஒன்பது முழம் வரை லிங்கத்தின் உயரம் அமையும். மானிடர்கள், அசுரர்கள், தேவர்கள், இவ் வினங்கள் முறைப்படி ௯ அளவுகளுள் தத்தமக்கேற்றவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும். அவற்றுள் முதலாவதாக மனிதவர்க்கத்தின் அளவு, ஒரு முழம் உயரத்திலிருந்து ஐந்து முழம் உயரம் வரை, முன் சுலோகத்தில் கூறியபடி உயரமுள்ள லிங்கம் அனுலோமர்— பிரதிலோமர்களுக்கும், மற்ற நான்கு அளவுகள் (2—3—4—5 முழம் உள்ளவை) முறையே அந்தணர் ஈருகவுள்ள நான்கு வருணத்த வருக்கும் ஏற்றதாம். (20)

அசுரர்க்கு ஆறு முழம், அல்லது ஏழு முழம் உயரமுள்ள லிங்கம் பூஜை செய்வதற்கேற்றதாகும். தேவர்களுக்கு, 8 முழம், அல்லது

தேவாதியோனிஷ்வஷ்டகமேதானி
　　லிங்கானி ஸம்ப்ரதிபாதிதானி ॥ 21 ॥

ஹஸ்தாதிஹஸ்தத்ரயாந்தம் பாதவ்ருத்த்யா க்ரமேண து ।
த்ரிஹஸ்தாந்தம் கனிஷ்டானி லிங்கானி ஸ்யு: நவைவ ஹி ॥

சதுர்ஹஸ்தாத்ததா லிங்கானி ஷடந்தானி பாதவிவர்த்தநாத் ।

ஒன்பது முழம் உயரமுள்ள லிங்கம் பூசிக்கத் தக்கதாகும். தேவாதி யோனிகளில் எட்டு வகையுண்டு. அவரவர்க்கேற்றதாக லிங்கத்தின் உயரத்தில் மாறுபாடும் உண்டு. ஆனால் அவற்றை இங்கு நாம் விரித்துரைக்கவில்லை. (21)

இது முதல் மூன்று சுலோகங்களால் முழக்கணக்கில் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகையில் பொதுவாக அதமம்—மத்யமம்—உத்தமம்—என மூன்று வகைகளைக் கூறுகிறார். அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒன்பது விதமாகும். அதமலிங்கத்தின் ஒன்பது வகைகள் இந்த சுலோகத்தில் கூறப்படுகின்றன. ஒரு முழத்தில் தொடங்கி மூன்று முழம் வரை ஒன்பது அளவுகள் உண்டு. ஒரு முழத்திலிருந்து வரிசையாக, கால் கால் பாகம் உயர்த்திக் கொண்டே போனால் மூன்று முழத்துடன் ஒன்பதாவது அளவு வந்து விடும். இவை ஒன்பதும் கனிஷ்ட லிங்கங்களாகும். அவையாவன:—

(1) ஒரு முழம் உயரம். (லிங்கம் அமைத்தல்)
(2) 1¼ முழம் உயரம் ,,
(3) 1½ முழம் உயரம் ,,
(4) 1¾ முழம் உயரம் ,,
(5) 2 முழம் உயரம் ,,
(6) 2¼ முழம் உயரம் ,,
(7) 2½ முழம் உயரம் ,,
(8) 2¾ முழம் உயரம் ,,
(9) 3 முழம் உயரம் ,, என்பனவாம். (22)

இதில் மத்யம லிங்கங்கள் ஒன்பது கூறப்படுகின்றன. நான்கு முழத்தில் தொடங்கி ஆறு முழத்தில் முடிவடையும் இவற்றினளவு.

ஷட்ஸப்தாஷ்டாங்கமுபேதானி லிங்கானி நவ கல்பயேத் ॥ ௨௩ ॥

ஸப்தஹஸ்தாத் ஸமாரப்ய பாதவ்ருத்த்யா து நவாவதே: ।
ஶ்ரேஷ்டானி நவ, லிங்கானாம் த்ரயஸ்த்ரிம்ஶத்ப்ரமாணகம் ॥ ௨௪ ॥

தாலாதி நவதாலாந்தம் தாலமானேன கீர்த்திதம் ।

4, 4¼, 4½, 4¾, 5, 5¼, 5½, 5¾, 6—என வரிசையாக ஒன்பது விதமான முழ அளவில் இவை அமையும். (23)

இதில் உத்தமமான லிங்கங்கள் ஒன்பது விளக்கப்படுகின்றன. 7 முழத்தில் தொடங்கிக் கால் கால் முழம் ஏற்றிக் கொண்டே போனால் ஒன்பது முழத்தில் முடிவடையும் இவை. இவ்வாறாக முப்பத்து மூன்று வகை லிங்கங்கள் (முழத்தின் அளவில்) கூறப்பட்டன. (24)

குறிப்பு:— கனிஷ்டம் ஒன்பது வகை, மத்யமம் ஒன்பது வகை உத்தமம் ஒன்பது வகை. ஆக இருபத்தேழு வகைகளே இங்கு காட்டப் பெற்றுள்ளன. அவ்வாறிருக்க, முடிவில் முப்பத்து மூன்று வகைகள் கூறியதாக நூலாசிரியர் சொல்லுகிறார். 27-க்கு மேல் ஆறு வகை கூடினாலன்றோ முப்பத்து மூன்று வரும்? இதை ஒருவாறு சரிக்கட்டலாம். கனிஷ்ட லிங்கம் ஒன்பது வகையும் 3 முழத்துடன் முடிந்து விடுகின்றது. பிறகு மத்யம லிங்கத்தின் அளவு நான்கு முழத்தில் தான் தொடங்குகிறது. 3¼, 3½, 3¾, என்னும் மூன்று அளவுகள் விட்டுப்போயின. அவ்வாறே மத்யம லிங்கத்தின் அளவு 6 முழத்துடன் முடிவடைகின்றது. பிறகு உத்தம லிங்கத்தின் அளவு 7 முழத்தில் தான் தொடங்குகிறது. 6¼, 6½, 6¾, என்னும் மூன்றளவுகள் விட்டுப் போயின. இவற்றை 27-உடன் சேர்த்தால் 33-ஆகும். அல்லது கீழ் 18-வது சுலோகத்திலிருந்து 21-வது சுலோகம் வரையில் கூறப்பட்ட 6-வகைகளையும் சேர்த்துக் கணக்கிடலாம்.

கீழ் 13-வது சுலோகத்தில் கூறிய வரிசையில், கர்ப்பக்ருஹம்—த்வாரம்—ஸ்தம்பம்—அதிஷ்டானம்—கிஷ்கு (முழம்) இவகைளை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் விளக்கப்பெற்றன. இனி இந்த சுலோகத்தில் "தாலமானம்"

𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌽𑌸𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥

கூறப்படுகின்றது. அதாவது "தாலம்" என்னும் அளவை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யுமாறு. ஒரு தாலம் முதல் ஒன்பது தாலம் ஈருக லிங்கத்தின் உயரம் அமைக்கலாம். அதாவது- ஒரு தாலம் உயரம்- இரண்டு தாலம் உயரம்- இவ்வாறே முடிவில் ஒன்பது தாலம் உயரம். இவ்வாருக தாலமானத்தின் உதவியால் ஒன்பது வகையாக லிங்கங்களை அமைக்கலாம்.

தாலமானமாவது: சில்பரத்னம்-முதல் பாகம் இரண்டாம் அத்தியாயம் 16-வது சுலோகத்தில் சொல்லப்பட்ட தாளத்தின் அளவு. "பிரிந்த கையில், கட்டைவிரலின் நுனியிலிருந்து, ஆள்காட்டிவிரல்- நடு விரல்—மோதிர விரல்—சிறு விரல்—இவற்றின் நுனிவரையில் உள்ள நீளம்; முறையே-ப்ராதேசம், தாளம், கோகர்ணம், விதஸ்தி- என வழங்கப்படும்" என்பது அந்த சுலோகத்தின் கருத்து.

இங்கு மற்ருெரு விதமாகவும் "தாலமானம்" கூறப்படுகிறது. சிவலிங்கத்தின் "பூஜாம்சம்" (பூஜிப்பதற்கான பகுதி, ஆவுடையாருக்கு மேல் தெரிகிற பாகம் என்றவாறு) இருக்கும் உயரத்தை 124 பாகமாகச் செய்தால் அந்த ஒவ்வொரு [illegible] ஒவ்வொரு அங்குலமாகும். இவ் வங்குலங்கள் 12 சேர்ந்தால் ஒரு "தாளம்" என்னும் அளவு ஏற்படும். இதுவே "தாளமானம்" எனப்படும். ஆனல், இந்த "தாளமானம்" ஏற்கெனவே இருக்கிற சிவலிங்கத்தின் அளவை ஆதாரமாகக் கொண்டு மற்ற விக்ரஹங்கள் பண்ணவேண்டியிருக்கும்போது தான் பயன் படும். புதிதாக சிவலிங்கம் பண்ண வேண்டியிருந்தால், அப்போது இவ்வழியில் அளவு எடுக்க இயலாது. முன்பு கூறிய (கட்டைவிரல் நுனியிலிருந்து நடுவிரல் நுனிவரை) தாலத்தையே அளவாகக் கொள்ளல் வேண்டும். அல்லது, சில சமயங்களில், ஏற்கெனவே உள்ள லிங்கம் சிறிதளவு பின்னமாகி, பூஜைக்குத் தகாததாகிவிட்டால், அதை அப்புறப்படுத்தி விட்டு வேறு லிங்கம் புதிதாகப் பண்ணி அவ்விடத்தில் ஸ்தாபிக்க

ஏவம் ஶிவலிங்கோச்ச்ராயம் க்ருத்வா தாலமாநம் ப்ரகல்பயேத் |
மாநாங்குலாதி யவ யவாஷ்டகாதி மாநாங்குலாஶ ‖ ௨௬ ‖

வேண்டியிருக்கும். அதுபோன்ற சமயங்களில் (பழைய) லிங்கத்தின் பூஜாம்சத்திலின்றும் தாளமானம் நிர்ணயம் செய்யும் முறை உபயோகமாகலாம். சிவாலயங்களிலேயே புதிதாக ஏதாவதொரு விக்ரஹம் பண்ணவேண்டியிருந்தால் மூல லிங்கத்தின் தாளமானத்தை அடிப்படையாகக் கொண்டு அதைச் செய்யலாம். சிவாலயங்களில் போல் விஷ்ணு ஆலயங்களிலும் மற்றக் கோவில்களிலும் மூல விக்ரஹத்தின் உயரத்தை 121 பாகமாக்கி அதில் ஒரு பாகத்தை ஒரு அங்குலமாக வைத்துக் கொண்டு அவ் வங்குலங்கள் 12 ஒரு தாளம் என நிர்ணயம் செய்யலாம். மற்றை விக்ரஹங்களுக்கு இருக்கவேண்டிய உயரத்தை நிர்ணயம் செய்வதற்கு இது உபயோகமாகும். இதுவே "தேஹலப்தாங்குலம்" "பேராங்குலம்" என்றெல்லாம் வழங்கப்படுவது. எந்த விக்ரஹத்திலும் கையில் மணிக்கட்டிலிருந்து பெருவிரல் நுனிவரையிலுள்ள நீளம், அதனுடைய முகவாய்க்கட்டையினின்றும் கேசாந்த ஸூத்திரம் வரையிலுள்ள பாகத்திலும் இருக்கவேண்டுமாதலால் மேற்கூறிய இரண்டு அளவுகளையும் தனித்தனியே "தாளம்" என வழங்குவதுமுண்டு. இதுவும் "தாளமான"மெனப்படும். இடத்திற்குத் தகுந்தாற்போல் "தாளமானம்" என்னும் சொல்லுக்குப் பொருள்கொள்ள வேண்டும். இவ் விடத்தில், லிங்கத்தின் உயரத்தைத் தாளமானத்தின் ஆதாரத்தில் நிர்ணயிக்கும் வகை, ஒரு தாளத்திலிருந்து ஒன்பது தாளம் வரை (வரிசையாக) ஒன்பது—என்று கூறப்பட்டது. (25)

இனி முறைப்படி மானாங்குலத்தினளவால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும்வகை கூறப்படுகின்றது;- மானாங்குலமாவது- சில்பரத்னம்-முதல் பாகம், இரண்டாவது அத்தியாயத்தில், 3, 4, 5, 6, 7, சுலோகங்களில் விளக்கப்பட்டுள்ளது. யவம் — எனப்படும் தானியத்தைப் பற்றி மானாங்குலம் கணக்கிடப்பட்டுள்ளது. ஆறு யவங்களின் நடுப்பகுதியிலுள்ள அகலத்தைச் சேர்த்தால் அது ஒரு

𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌂 𑌨𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿, 𑌤𑌥𑌾 𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌶𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾𑌃 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑌿 𑌨𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌤𑌥𑍈𑌵𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑌾𑌙𑍍𑌕𑌕𑌾𑌃 ‖ ௨௭ ।

மானுங்குலம். அதேபோல் ஏழு யவங்களினுடைய அகலத்தைச் சேர வைத்தாலும் ஒரு மானுங்குலமாகும். அப்படியே எட்டு யவங்களின் அகலத்தைச் சேரவைத்தாலும் அதுவும் ஒரு மானுங்குலமாகும். இவ்வாறு மூன்று வகைகள் கூறப்பட்டுள்ளன. இவை முறையே-கடை இடை-முதல் மானுங்குலங்களாகும். இந்த யவங்களின் அகலம் தவிர நீளத்தை ஆதாரமாகக் கொண்டும் மானுங்குலத்தைத் தீர்மானிக்கும் வகை ஆங்கே சொல்லப்பட்டுள்ளது. மூன்று சாலி (நெல்)களின் நீளத்தைச் சேர்த்து வைத்தால், அது ஒரு மானுங்குலமாகும். இது அதமம் (கடையானது). மூன்றரை நெல் நீளம், நான்கு நெல் நீளம்- இவையும் ஒவ்வொரு மானுங்குலத்தின் அளவே. இவ்விரண்டும் முறையே இடை (மத்யமம்), முதல் (உத்தமம்) மானுங்குலங்களாகும். இங்கு மானுங்குலத்தின் அளவைக் கொண்டு லிங்கத்தின் உயரத்தைத் தீர்மானிக்கும் விஷயத்தில், யவங்களில் (8) எட்டின் அகலத்தைச் சேரவைத்துக் கணக்கிடப்படும் உத்தம மானுங்குலமே ஏற்கப்பட்டுளது. மானுங்குலம் ஒன்றில் தொடங்கி ஒன்பது வரை லிங்கத்தின் உயரம் இருக்கலாம். இதிலும் முழத்திற்குக் கூறப்பட்டதுபோலவே, அதமம் (கடையானது), மத்யமம் (இடை), உத்தமம் (முதன்மையானது), என்று மூன்று விதமுண்டு. ஒவ்வொரு வகையிலும் தனித்தனியே ஒன்பது உட்பிரிவுகளுண்டு. ஆக, மானுங்குலத்தினல் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதில் 27 வகை சொல்லியாயிற்று. அவற்றுள், கனிஷ்டமான ஒன்பது லிங்கங்கள் ஒரு அங்குலத்தில் தொடங்கி மூன்றங்குலத்தில் முடியும். ஒரு அங்குலம் — என்பது எட்டு யவம் அகலமென்று சொன்னேம். மூன்று அங்குலம் என்பது இருபத்துநான்கு யவங்களின் அகல அளவாகும். எட்டிலிருந்து படிப்படியாக, இவ்விரண்டு யவங்களைக் கூட்டிக்கொண்டே போனல், 24 யவங்கள் வரை ஒன்பது அளவுகள் வரும் :—

(1) ஒரு அங்குலம் (எட்டு யவம்)
(2) ஒரு அங்குலமும் இரண்டு யவமும் (பத்து யவம்)

ஸப்தாம்ஶாம்ஶாதி தீர்கவ்யவஸ்தேந நவாம்ஶாம்ஶகா: |
ஶ்ரேஷ்டாதி நவஸிம்ஹாதி மத்யஜாதி விஶேஷத: || ௨௮ ||

---

(3)	ஒரு அங்குலமும்	நான்கு யவமும்		(பன்னிரண்டு யவம்)
(4)	,, ,,	ஆறு	,,	(பதினான்கு ,,)
(5)	இரண்டு அங்குலம்			(பதினாறு ,,)
(6)	,, அங்குலம்	இரண்டு யவம்		(பதினெட்டு ,,)
(7)	,, ,,	நான்கு	,,	(இருபது ,,)
(8)	,, ,,	ஆறு	,,	(இருபத்திரண்டு ,,)
(9)	மூன்றங்குலம்			(இருபத்திநான்கு ,,)

இவை ஒன்பதும் கனிஷ்ட மெனப்படும்.

இப்படியே மத்யமமாக ஒன்பது அளவுகள் நாலு அங்குலத்திலிருந்து ஆறு அங்குலம் வரை :—

(1)	நான்கு அங்குலம்			(32 யவம்)
(2)	,,	,,	2 யவம்	(34 ,,)
(3)	,,	,,	4 ,,	(36 ,,)
(4)	,,	,,	6 ,,	(38 ,,)
(5)	ஐந்து	,,		(40 ,,)
(6)	,,	,,	2 ,,	(42 ,,)
(7)	,,	,,	4 ,,	(44 ,,)
(8)	,,	,,	6 ,,	(46 ,,)
(9)	ஆறு அங்குலம்			(48 ,,)

இவை ஒன்பதும் மத்யமமெனப்படும்.

இப்படியே உத்தமமான ஒன்பது அளவுகள் உள்ளன.

ஏழு அங்குலம் முதல் ஒன்பது அங்குலம் வரை முன்போலவே.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

---

(1)	ஏழு அங்குலம்			(56 யவம்)
(2)	,,	,,	2 யவம்	(58 ,,)
(3)	,,	,,	4 ,,	(60 ,,)
(4)	,,	,,	6 ,,	(62 ,,)
(5)	எட்டு	,,		(64 ,,)
(6)	,,	,,	2 ,,	(66 ,,)
(7)	,,	,,	4 ,,	(68 ,,)
(8)	,,	,,	6 ,,	(70 ,,)
(9)	ஒன்பது ,,			(72 ,,)

இவை ஒன்பதும் உத்தமமான அளவாகும்.

இந்த உத்தமமான ஒன்பது வகை லிங்கங்களும் இரத்தினங்களாலேயே சிறப்பாக அமைக்கப்படும். மத்யமமான ஒன்பது வகை, இவ்வாறே கனிஷ்டமான (கடையான) ஒன்பது வகை இவை எங்கும் இரத்தினங்களாலேயே அமைக்கப்படவேண்டும். (28)

சலம்—(அசையுந்தன்மையது) எனும் வகையைச் சார்ந்த லிங்கங்கள் விடுகளிலேயே பூஜிக்கப்பட வேண்டும். ஸ்திரமான (அசைவற்ற) லிங்கங்களே உயர்ந்தவை. அந்த ஸ்திர லிங்கங்களைக் கோவிலில் ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கவேண்டும். (29)

இனி உலோகத்தினால் செய்யப்பட வேண்டிய லிங்கங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. உலோகத்தால் செய்யப்படும் லிங்கம்—மூன்றங்குலத்திலிருந்து பதினாறு அங்குலம் வரை உயரமுள்ளது சலம் (அசைவுள்ளது) ஆகும். இதற்கு மேல் உயரமுள்ளதாயின்

சதுர்விம்ஶம் ஸ்ம்ருதம், [illegible] ।
[illegible] ॥ ௩௧ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௩ ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௪

ஸ்திரம் (அசைவற்றது) எனப்படும். செம்பு—பித்தளை முதலிய லோஹங்களை உருக்கி வார்த்து லிங்கங்களைச் செய்யவேண்டியிருப்பதால் அந்த வகை இங்கு விளக்கப்படுவது இன்றியமையாதது. (30)

தேன் மெழுகினால் ஸகலம்-அல்லது-நிஷ்கலம் (தமது விருப்பத்திற்கேற்றபடி) என்னும் லிங்கத்தை (அல்லது விரும்பின விக்ரஹங்களை) முதலில் பண்ணவேண்டும். பிறகு அதன்மேல் உறுதியாக மண்ணைக் கட்டவேண்டும். அது நன்றாகக் காய்ந்த பிறகு உள்ளேயிருக்கும் தேன் மெழுகை வெளிப்படுத்திவிட வேண்டும். (31)

இப்பொழுது உட்புறம் காலியாக இருக்கும். நன்றாக உருக்கி வைத்துக்கொள்ளப்பட்ட லோஹத்தை அதனுள் ஊற்றி நிரப்ப வேண்டும். இவ்வாறாக லோஹமயமான பிம்பங்களைப் பண்ணுதல் சிறந்த முறையாகும். (32)

இந்தத் தொழிலில் ஈடுபாடுள்ளோரின் நன்மைக்காக இனி அந்த முறையைக் கூறப் போகிறேன். முதலில் ஐந்து வகையான மண்ணைத் தெரிந்துகொள்ளவேண்டும். 1 கடினமானது, 2 சிறிது கடினமானது, 3 மென்மையானது, 4 மிக மென்மையானது, 5 ஜலஸா

[illegible]

[illegible]

[illegible]

(மோசி) பண்ணுவதற்கேற்றது — என்று மண்ணில் ஐந்து வகை உண்டு. (33,34)

முன்பு சொல்லப்பட்ட மண், அல்லது புற்றில் உண்டாகிய மண் இவற்றில் ஒன்றை ஜாக்கிரதையுடன் கொண்டு வந்து, மண்ணாங்கட்டியைப் பொடி செய்து அதில் கலந்து தகுந்தவாறு மர்தனம் பண்ண வேண்டும் (துகைக்கவேண்டும்). சுத்தமான ஜலத்துடன் பாக்குத் தோலின் சாரத்தையும் தகுந்த விதமாகக் கலக்கவேண்டும். பிறகு கல்—உலக்கை — இவற்றால் நன்கு இடிக்கவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் மண் "கடினம்" எனப்படும். (35)

அவ்வாறு செய்யப்பட்ட மண்ணில் மேலும் பசுஞ்சாணியைக் கலந்தால் அதுவே "மந்த கடினம்" என்னும் இரண்டாவது வகையான மண்ணாகும். (36)

மண்பாண்டத்தைப் பொடி செய்து அதில் நாலிலொரு பங்கு மண்ணைக் கலந்து கல்வத்திலிட்டு நன்றாக அரைக்கவேண்டும். அது முன்னோர்களால் "மெதுவானது" (ம்ருத்வீ) என்று கூறப் பட்டது. (37)

அதுவே பசுஞ்சாணத்துடன் கலக்கப்பட்டால் "ம்ருதுதரா" (மிகவும் மென்மையானது) எனப்படும்.

தத்³வ மோசயேத்தா ஶூக்ஷ்மம் ஶூக்ஷ்மாக்³நிநா ஸம்ஹ்ருதா ।
தாஷாத்³யுத்³தா⁴ரணம் குர்யாத் ஸம்யக்தத் விஸ்ருஜ்யதாம் ॥ ௩௮ ॥

காவேரி ஸகலம் வர்ணம் ஸ்வச்ச²ம் ஸமாஹிதம் ।
ஸர்வதா² ஶுஷ்காந்யஸ்தாம் த்³ரவ்யாணி லயோ த்³ருஶ்யதே ॥ ௩௯ ॥

யச்ச லிங்க³ம் தத்³ரூபம் (ததா²) லிங்க³ம் ப்ரமாணத꞉ ।
க்ருத்வா த்³விதீயயா ம்ருதா³ ஶுஷ்கம் வா ஶோஷயேத்ததா² ॥

ஸம்யக் ஶோப⁴நம் க்ருத்வா ம்ருத்³வா லேபயேத் ததா² ।
க்ருத்வா தத³ந்தம் மது⁴ச்சி²ஷ்டேந யாவத்³ ஸ்தா²நேஷு ॥ ௪௧ ॥

இஷ்டப்ரமாணம் தச்ச ஸர்வம் க்ருத்வா தேந ஸலக்ஷணம் ।
ஶோஷணாதீ³நி ஸர்வாணி மது⁴ச்சி²ஷ்டஸ்ய காரயேத் ॥ ௪௨ ॥

உமி முதலானதைக் கரியாக்கிப் பொடி செய்து அத்துடன் கூடிய மண்பாண்டத்தின் மண்ணைப் பஞ்சுத் துணியின் பொடியுடன் கலந்து உரலிலிட்டு உலக்கையால் நன்றாக இடிக்கவேண்டும். இதுவே "மூஷாம்ருத்" (மோசி மண்) எனப்படும். இதனால் உறுதியாக "மோசி" பண்ண வேண்டும். (38, 39)

இனி ஏழு சுலோகங்களால் விக்ரகம் வார்ப்படம் செய்வதற்கான முறை விளக்கப்படுகின்றது. தனக்கு விருப்பமானது எதுவோ (லிங்கம்—அல்லது விக்ரஹம்) அதை வேண்டிய அளவுக்குச் சிறிது குறைவாகவே இரண்டாவது வகையைச் சேர்ந்த மண்ணால் (மந்தகடினம்) பண்ணி உலர்த்த வேண்டும். பிறகு தகுந்தவிதமாக அதைச் செதுக்கி அவசியமான இடங்களில் மேலும் மேலும் பூசவேண்டும். முடிவில் (பசுவின்) சாணிச்சாறு கொண்டு பூசி அதை அழகுறப் பண்ணவேண்டும். பிறகு அதன் மேல், தேன் மெழுகால் பட்டங் கட்டினாற்போல் திட்டமான கனம் (பருமன்) வருமளவு ஒட்டவேண்டும். இந்தத் தேன் மெழுகில் பண்ணப்படும் வடிவம், தான் விரும்பின அளவுக்குச் சரியாகவே இருக்கவேண்டும். (முன்போல் சிறிதாக இருக்கலாகாது.)

𑌸𑍍𑌨𑌾𑌯𑍁𑌨𑌾 𑌤𑌿𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍀𑌫𑌲𑌜𑍇𑌨 𑌵𑍇𑌣𑍁𑌜𑍇𑌨𑌾𑌥𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 ।
[illegible] 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ [illegible]

[illegible] 𑌸𑌂𑌶𑍋𑌷𑌯𑍇𑌤𑍍
[illegible] ॥ [illegible]

𑌕𑌠𑌿𑌨𑍇𑌨 [illegible] 𑌲𑍋𑌹𑌪𑌟𑍍𑌟𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
[illegible] 𑌕𑌠𑌿𑌨𑍇𑌨 𑌵𑌿𑌲𑍇𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ [illegible] ॥

[illegible] ॥

அதில் இருக்கவேண்டிய அங்க அடையாளங்கள் யாவும் பொருத்தமாக அமையுமாறு அதை கவனிக்கவேண்டும். அந்தத் தேன் மெழுகில் ஆபரணங்கள்—வஸ்திரம் முதலிய யாவற்றையும் நூலால் அடையாளமிடவேண்டும். புளியம்பழத்திலுள்ள நரம்புகளால் அல்லது மூங்கிலின் நரம்புகளால் ஆபரணங்களை அந்தத் தேன்மெழுகில் அமைக்கலாம். பிறகு அதற்கெனவே பண்ணப்பட்ட ஆயுதங்களால் மழமழ வென்று அதை அழகாகப் பண்ணவேண்டும். பிறகு "ம்ருதுதரம்" எனப்பட்ட (நான்காவது வகையான) மண்ணுறல் ஜாக்ரதையாக மேல் பூச்சு பூசவேண்டும். அது உலர்ந்ததும் மீண்டும் ம்ருதுவான மண்ணுறல் பூசவேண்டும். உலர்த்த வேண்டும். அது உலர்ந்ததும் மீண்டும் கடினமான (முதல் வகையான) மண்ணுறல் பூசி அதையும் உலர்த்தி. இரும்புத் தகடுகளால் பலங் கொண்டமட்டும் நன்றாகக் கட்டி மீண்டும் கடினமான (முதல் வகை) மண்ணுறல் பூசவேண்டும். மேலும் மேலும் பல பூச்சுக்களும் பூசவேண்டும். திருப்தி ஏற்படும்வரை நன்றாகப் பலதரமும் பூச வேண்டும். உலோகப் பட்டங்களால் (இரும்பு முதலியவற்றால்) கட்டும்பொழுது முக்கியமல்லாத இடங்களில்தான் அவ்வாறு கட்டலாம். முக்கியமான உறுப்புக்கள் உள்ள இடங்களில் அவ்வாறு கட்டக்கூடாது. பிறகு மீண்டும் நன்றாக உலர்த்தி இயந்திரத்தின்

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

மூலம் நன்ருகச் சூடேறுமாறு காய்ச்ச வேண்டும். அவ்வாறு நன்ருகக் காய்ச்சி உள்ளேயிருக்கும் தேன்மெழுகு முழுவதையும் வெளிப்படுத்தவேண்டும். பிறகு கட்டைகளை அடுக்கி அதன் மத்தியில் அதை வைத்துப் புடம் போட்டு நன்கு கொளுத்திச் சுடவேண்டும். அது எரிந்துகொண்டிருக்கும் போதே உள்ளேயிருக்கும் மோசியைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். அதன் உட்புறம் பூசுணிப் பூவின் நிறம் போல் நிறம் பெறும். உலோகங்களால் (இரும்பு முதலியவற்றின் பட்டங்களால்) கட்டப்பட்ட அந்த மோசியை அப்படியே தான் காய்ச்சவேண்டும். மோசியின் நிற மாறுபாட்டை அந்த இரும்புப் பட்டங்களின் இடைவெளியால் கவனிக்கவேண்டும். மேற்கூறிய நிறம் வந்தவுடன் புடத்திலின்றும் இறக்கி விட வேண்டும். பூமியில் பள்ளம் தோண்டி அதனுள் மேல் நோக்கியவாறு வைக்க வேண்டும். இந்த ஸமயத்தில் வார்ப்படம் செய்யவேண்டிய லோஹத்தை மற்ருெரு மோசியில் நன்ருக திரவமாகுமாறு (நீர்போல்) உருக்கித் தயாராக வைத்திருக்கவேண்டும். வெகு சீக்கிரமாக அதை எடுத்து வந்து மிகவும் ஜாக்ரதையாக அதன் முகத்தில் மெதுவாகப் பொருந்தவைத்து உள்ளே ஊற்றி நிரப்பவேண்டும். உடனே

तीक्ष्णायसक्रमेणैव ततः स्थलेषु तत्तत्र वर्धयेत् क्रमात् ।
बहुज्ञः कारयेत्तत्र शिल्पिभिस्तत्त्वशोधकैः

घनं चेत्तु मधूच्छिष्टेन लोहजं कारयेत् सुधीः ।
मध्यं भित्त्वा लोहजं बिम्बं सम्यक् कृत्वा न शेषयेत् ॥ ५२ ॥

कृष्णात्रेयमते चैव सर्वत्र क्रमशः ।

*वास्तवी बिम्बोन्नतमान —

புழுதி மண்ணால் வெளிப்புறத்தில் (நாற்புறமும்) மூடிவிட வேண்டும். காலக்கிரமத்தில் தன்னடையே அது ஆற வேண்டும், (செயற்கை முறைகளால் ஆறவைக்கக்கூடாது.) பிறகு கூர்மையான இரும்பு ஆயுதங்களால் முறைப்படி மண்ணை அகற்றவேண்டும். பிறகு அந்தந்த இடங்களில் தக்க விதமாக ஆயுதங்களை உபயோகித்து அழகுறச் செய்யவேண்டும். இவ்வாறு ஆயுதங்களை உபயோகிப்பவர்கள் இத் துறையில் சிறந்த அனுபோகமுள்ளவர்களாகவும், பரிபக்குவமான அறிவுள்ளவர்களாகவும் இருத்தல் மிக மிக அவசியம். இவ்வாறு, அறிவாளியானவன் தேர்ச்சி பெற்ற சிற்பிகளைக்கொண்டு லோஹஜமான பிம்பத்தைச் செய்யவேண்டும். லோஹபிம்பம் " கன " மாகஇராமல் தகடு போல் அமைக்கும் வழி இது. இதுவே கனமாக இருக்கவேண்டுமானல், அதாவது தகடுபோல் மேல் தோற்றம் மட்டுமில்லாமல், கெட்டியாக இருக்கவேண்டுமாயின் அதைச் செய்யும் வகை வேறு. அதற்கு தேன்மெழுகினுலேயே முதலில் தனக்கு வேண்டிய பிம்பத்தை, வேண்டிய அளவிலேயே பண்ணவேண்டும். அதில் செய்யவேண்டிய அடையாளங்களை யெல்லாம் தவருமல் அமைத்து முன்போலவே மண்பூச்சு செய்து அதைக் கெட்டிப்படுத்தி, பிறகு தேன் மெழுகை வெளிப்படுத்திவிட்டு உருக்கிய உலோகத்தை அதனுள் வார்த்து பிம்பங்களைச் செய்யவேண்டும்.

---

(1) லோஹ லிங்கத்தைக் கூறுமுன் தகுதியைக் கருதி உலோகத்தை உருக்கி வார்ப்படம் செய்யும் வகையும் விளக்கப்பட்டது. அதன்மேல் முன்பு 13-வது சுலோகத்தில் கூறப்பட்ட வரிசையில் அளவுகள் விளக்கப்படுகின்றன.

𑌅𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯
𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௫௩ ॥

𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌨𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௫௪ ॥
𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍍𑌯𑌷𑍍𑌟𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 ।
𑌷𑍋𑌡𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௫௫ ॥

மீண்டும் பிம்பத்தின் உன்மானம் கூறப்படுகின்றது :- உலோகத்தினால் பண்ணப்படும் லிங்கங்கள், எட்டங்குலம் உயரத்தில் தொடங்கி, (72 அங்குலம்) 3-*முழம் உயரம் வரை அமைக்கப்படலாம். எட்டங்குலத்தில் தொடங்கி எட்டெட்டங்குலமாக உயர்த்திக் கொண்டே போகவேண்டும். அவ்வாறு சென்றால் மூன்று முழம் முடியும் வரையில் 9 அளவுகள் வரும். அதெங்ஙனே யென்னில்:—

(1)	முதல் அளவு	லிங்கத்தின் உயரம்		எட்டங்குலம்.
(2)	இரண்டாவது	,,	,,	16 அங்குலம்
(3)	மூன்றாவது	,,	,,	24 ,,
(4)	நான்காவது	,,	,,	32 ,,
(5)	ஐந்தாவது	,,	,,	40 ,,
(6)	ஆறாவது	,,	,,	48 ,,
(7)	ஏழாவது	,,	,,	56 ,,
(8)	எட்டாவது	,,	,,	64 ,,
(9)	ஒன்பதாவது	,,	,,	72 ,,

இவற்றில் மூன்றாமளவு ஒரு முழம், ஆறாவது அளவு இரண்டு முழம், ஒன்பதாவது அளவு மூன்று முழம் உயரமுமுள்ளதாகும்.

இதிலேயே மற்றொருவிதமும் செய்யலாம். எட்டங்குலம் முதல் அளவு. அதற்குமேல் இவ்விரண்டு அங்குலங்கள் உயர்த்தி யிவ்வொரு அளவு எடுத்துக்கொண்டே போனால் மூன்று முழம் வரை

---

* ஒரு முழம் என்பது 24-அங்குலம்.

ஷோட³ஶாங்கு³லமாரப்⁴ய வ்ருத்³த்⁴யா [illegible] ரேவ நவ ।
[illegible] ॥ ருசு ॥

தா³ரவாணி த்ரயஸ்த்ரிம்ஶல்லிங்கா³நி [illegible] ।
[illegible] ॥ ருஎ ॥

லிங்க³ம் [illegible] ।
[illegible] லிங்க³ம் [illegible] ॥ ருஅ ॥

யில் 33-அளவுகள் கிடைக்கின்றன. உலோகமயமான லிங்கங்களை இவ்விதமான உயரத்திலும் ஏதேனுமொரு அளவில் அமைக்கலாம். முதல் அளவு எட்டங்குலம். இரண்டாமளவு பத்து அங்குலம். மூன்றுமளவு 12 அங்குலம்............33-வது அளவு 72-அங்குலம் என்றிவ்வாறு ஊகித்துக்கொள்க.

இனி தாருலிங்கங்களின் (தாரு—மரம்) அளவு கூறப்படுகிறது. பதினாறு அங்குல உயரமுள்ளது முதல் அளவு. ஆறு ஹஸ்தம் (144 அங்குலம்) கடைசி அளவு. ஒவ்வொரு அளவுக்கும் 16-அங்குலம் இடைவெளியிருக்கும் 16-அங்குலத்தில் தொடங்கி 144-அங்குலத்தில், இடையே 16-அங்குலங்கள் விதம் விட்டு விட்டுக் கணக்கு பண்ணிக்கொண்டே போனால் ஒன்பது அளவுகள் கிடைக்கும். மற்றும் ஒரு வழி இங்கு கூறப்படுகின்றது: பதினாறு அங்குலத்திலேயே தொடங்கி (144-அங்குலத்திலேயே) ஆறு ஹஸ்தங்கள் அளவிலேயே முடியும் அளவுதான் இதுவும். ஆனால் இடைவெளியில் வாசியுண்டு. நன்னான்கு அங்குலம் இடைவெளியிருக்கும் இதில். அதெவ்வாறெனில் :—

தாருலிங்கத்தின் உயரத்துக்கு	முதல்	அளவு	16-அங்குலம்.
,,	இரண்டாவது	,,	20 ,,
,,	மூன்றாவது	,,	24 ,,
,,	முப்பத்துமூன்றாவது	,,	144 ,,

என்றிவ்வாறு கண்டுகொள்க. இப்படி நன்னான்கு அங்குலங்கள் இடைவெளியில் 16-அங்குலத்தில் தொடங்கி 144 அங்குலம் வரை செல்வதில் மொத்தம் 33-அளவுகள் கிடைக்கும்.

யஜமாநவஶம், தஸ்ய தேஹாநுஸாரேணாதவாபி |
ஸ்தாநகம் ஸர்வமாநஞ்ச லிங்கோச்ச்ராயாதி கல்பயேத் ||

தஸ்மாத்ஸமஸ்தலிங்கானாம் யதாஸம்பவம் ஆவிஶேத் |

லிங்கம் செய்து வழிபாடு நடத்த விருப்பமுள்ளவர்களாகிய சிவனடியார்களுக்குள் யார் யாருக்கு எந்தெந்த வகையான லிங்கம் மனதுக்குப் பிடித்திருக்கின்றதோ; மேலும் அவரவர்களுடைய செல்வ நிலைமை எந்த வகையான லிங்கத்தைப் பண்ணிப் பூஜிப்பதற்கேற்றதாக இருக்கின்றதோ, அதையெல்லாம் நன்கு கவனித்து அவரவர்களுடைய கோயிலுக்குத் தகுந்த லிங்கங்களைப் பண்ணவேண்டும்.

இவ் வத்தியாயத்திலேயே கீழ் 13-வது சுலோகத்தில் கூறப்பட்ட அளவுகளுள் ஏழு வகைகள் கூறப்பட்டன. இனி எட்டாவது வகை கூறப்படுகின்றது. மாத்ராங்குலங்களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதுதான் எட்டாவது விதம். இங்கு மாத்ராங்குலங்களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் விரிவாகக் கூறப்படவில்லை. "இவ்வாறுகவே" மாத்ராங்குலங்களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் கொள்க, என்று பொதுவாகக் கூறி விட்டார். மற்ற நூல்களினின்றும் கண்டு கொள்க. மாத்ராங்குலமாவது:—

"தத்தஸ்ய மத்யமாங்குல்யா மத்யமஸ்ய பர்வண: |
தைர்க்யம் மாத்ராங்குலம் ஶ்ரேஷ்டம் நீசம் தத்வ்யாஸஸம்மிதம் ||

(சில்பரத்தினம்—முதல் பாகம். அத். 2, சு. 8.)

என்னும் சுலோகத்தில் கூறப்படுகின்றது. கோயில் முதலியவற்றைக் கட்டுவதற்கு முதல்வனாக இருக்கும் யஜமானனுடைய வலது கையின் நடுவிரலின் நடுக்கணுவின் நீளம் ஒரு மாத்ராங்குலமாகும். இது உயர்ந்த பக்ஷம். அதே நடுவிரல் நடுக்கணுவின் அகலத்தினளவும் ஒரு மாத்ராங்குலமாகும். இது அதமபக்ஷம். மானஸாரம் முதலிய நூல்களில் அந் நடுக்கணுவின் சுற்றளவும் ஒரு மாத்ராங்குலமாகக் கூறப்பட்டுள்ளது.

விமாநம் ஸார்த்தயா பஞ்சகுணம் ஷட்குணமேவ வா ‖ 60 ‖

விஸ்தார த்விகுணோத்ஸேதம் நாகரம், த்ரிகுணம் பவேத் ।

முன்பு 13-வது சுலோகத்தில் கொடுக்கப்பட்ட வரிசையில் ஒன்ப தாவது வகை இப்போது விளக்கப் படுகிறது. "யஜமானேச்ச மானம்" என்பதே அது. ஆலயங்களைக் கட்டுவிக்கும் யஜமான னுடைய உயரத்தையே ஆதாரமாகக் கொண்டு அவ்வாலயத்தில் ஸ்தாபிக்கப்படும் லிங்கத்தின் உயரத்தை நிச்சயிக்கலா மென்றவாறு. இதில் ஏழு வகையுண்டு. (1) யஜமானனுடைய முழு உயரம். (2) அவனுடைய கண்கள் வரை உள்ள உயரம். (3) அவனுடைய வாயளவு உள்ள உயரம். (4) தாள்கட்டை வரை உள்ள உயரம். (5) தோள் வரை உள்ள உயரம். (6) ஸ்தனங்கள் (மார்பு) வரை உள்ள உயரம். (7) இதயம் வரை உள்ள உயரம். இவ்வாருக ஏழு அளவுகள் கண்டு கொள்க. (59)

இனி லிங்கத்தின் உயரத்தின் அளவைக் கொண்டு அதன் விமா னம் அமைக்கவேண்டிய விதம் விளக்கப் படுகின்றது. ஒரு முழம் உயரமுள்ள லிங்கத்திற்கு நாலு முழம் அகலமுள்ளதாக விமானம் அமைக்கப்பட வேண்டும். அல்லது ஐந்து முழம், ஆறு முழம் அகல முள்ளதாகவும் அமைக்கப்படலாம். அவ் விமானம், தனது அகலத் தைப் போல் இரு மடங்கு உயரமுள்ளதாக இருக்குமாயின் அது "நாகர"மெனப்படும். அதுவே தனது அகலத்தைப் போல் மும் மடங்கு உயரமுள்ளதாக இருக்குமாயின், "பூமிஜம்" என்னும் பெய ரால் வழங்கப்படும். அப்படியே அந்த "பூமிஜ" மெனப்படும் விமானத்தைப் போல் இரண்டு மடங்கு உயரமுள்ளதாக சிகரம் அமைக்கப்படுமாயின், "நாகரவலபி" என்னும் பெயரால் வழங்கப் படும்.

குறிப்பு: இங்கு திடீரென்று விமானத்தின் உயரம் விளக்கப்படு கின்றது!

இனி லிங்கங்களின் சிறப்பான பெயர்கள் சில கூறப்படுகின்றன. லிங்கங்களுள் அதனதன் உயரத்தையும் அகலத்தையும் சேர்த்துக்

[illegible] ||

[illegible] |

கணக்கிட்டு, ஒவ்வொரு வகைக்கு ஒவ்வொரு பெயர் கொடுக்கப் படுகின்றது. (1) ஜயதம், (2) பௌஷ்டிகம், (3) *ஸார்வகாமிகம், என்று மூன்று சிறப்புப் பெயர்கள் இங்கு கூறப்படுகின்றன.

முதலில் மூன்று வகையான திராவிட லிங்கங்கள் விவரிக்கப்படுகின்றன. லிங்கத்தின் உயரத்தைப் பதினாறு கூறாகச் செய்து, அதில்

---

* காச்யபீயம், 49-வது படலம், 89-வது சுலோகம் முதல், 95-வது சுலோகம் வரை ஏழு சுலோகங்களில் மூன்று வகையான லிங்கங்களின் விஷயம் பேசப்பட்டுள்ளது. அவையாவன :—

நாகரம் த்ராவிடம் லிங்கம் வேஸரம் ச வதாம்யஹம் |

நாகரம், திராவிடம், வேஸரம் என்னும் லிங்கங்களைக் கூறுகின்றேன்.

[illegible] ||

[illegible] |
[illegible] || ௯௦ ||

[illegible] ஸார்வகாமிகம் [illegible] |
வேதாம்ஶம் பௌஷ்டிகம் [illegible] ஜயதம் பவேத்

[illegible] |
[illegible] நாகரே து விதீயதே || ௯௨ ||

லிங்கத்தின் உயரத்தை நாலு பாகமாக்கி அதில் ஒரு பாகம் லிங்கத்தின் அகலம் அமைக்கலாம். இது கடையானது. லிங்கத்தின் உயரத்தை மூன்று கூறாகச் செய்து அதில் ஒரு பாகமும் லிங்கத்தின் அகலமாக அமைக்கலாம். இது உத்தமமானது. இவ்விரண்டு அளவுகளுக்குமுள்ள இடைப்பகுதியை எட்டு கூறாக்கி ஒவ்வொன்றையும் லிங்கத்தினகலத்துக்கு ஒவ்வொரு அளவாகக் கொள்ளலாம். இவ் வழியில் லிங்கத்தினகலத்திற்கு ஒன்பது அளவுகள் கூறப்

ஸிம்ஹாயாமெ ஷிகாஸாஂமெ ஸாஷகவெஷாஷி விஹாஸ் ।
ஜயஷம் வெளஷ்டிகம் ஸாவகாமிகம் ஷாவிமெ ஹவெசு ॥
சுவிக்ருக்ருஂமெக ஶஹெ ஷொஉஸாஂஸஂ கஷஂத்தஷ் ॥ ௫௦ ॥

ஐந்து, நான்கு அல்லது மூன்று பாகங்களின் அளவு அகலமுள்ள தாக லிங்கத்தை அமைக்கவேண்டும். இம் மூன்றளவுகளும் முறையே "சாந்திகம், பௌஷ்டிகம், ஸார்வகாமிகம்" எனப்படும். இம் மூன்றும் திராவிடலிங்கத்திற்கே ஏற்பட்ட அளவுகள்.

இனி வேஸரலிங்கத்திற்கும் இதேபோல் மூன்றளவுகள் உண்டு. இதில் லிங்கத்தின் உயரத்தை இருபத்தைந்து கூறுகச் செய்து கொண்டு அதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யவேண்டும். லிங்கத்தின் உயரம் 25-பாகமானால் அதில் பதினாறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்கலாம், இது உத்தமம். அதில் பதின்மூன்று பாகம் லிங்கத்தின் அகலமாக அமைக்கலாம். இது அதமம் (கடையானது). இவ்விரண்டின் இடைப் பகுதியை எட்டு கூறுகச் செய்து ஒவ்வொன்றையும் லிங்கத்தின் அகலத்திற்குத் தகுந்த அளவாகக் கொள்ளலாம். இவ்வாறு ஒன்பது அளவுகள் ஏற்கெனவே காண்பிக்கப்பட்ட வகையில் ஊகித்தறிந்து கொள்க.

குறிப்பு:— சுவிக்ருக்ருஂமெக ஶஹெ— என்பது, கர்பக்ருஹத்தின் அகலத்தைக் கூறுகின்றது. ஆனால், "சுவிக்ருக்ருஂம. செ ஸிம்மெ" என்றோ, அல்லது "சுவிக்ருக்ருஂமெக

பட்டன. இவற்றின் தன்மையை முன்பு காண்பித்த வகையில் ஊகித்தறிக. மற்றும் நான்களவுகள் :— லிங்கத்தின் உயரத்தைப் பதினாறு கூறுகச் செய்து அதில் ஐந்து பாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது "சாந்திகம்" எனப்படும். அதிலேயே நாலு பாகம்— அல்லது மூன்று பாகமும் லிங்கத்தின்— அகலமாகக் கொள்ளலாம். இவ்விரண்டும் முறையே "பௌஷ்டிகம்" "ஜயதம்" என்று வழங்கப்படும். அல்லது விசாரிக்காமலே (அளவெடுத்து உற்று நோக்காமலே) கண் பார்வையில் பொருத்தமாகத் தோன்றுகிறபடியாகவே லிங்கத்தின் அகலத்தை அமைக்கலாம் இதுவும் ஒரு வழியாகும். முன்பு கூறப்பட்ட ஒன்பது வகைகளுடன் இந்த நான்கு வகைகளையும் சேர்த்துக்கொண்டால்

த்ரயோதஶாம்ஶ உபம் தயோஸ்ஸ்யுர்விஷ்கம்பாஜிதே ।
நவஸ்ரும்ஶாநி ஶிஷ்டாநி வேஸரே நாநி கல்பயேத் ॥ ௬௪ ॥

பஞ்சபஞ்சாம்ஶகே ஹேதுவேதுர் வஸுஷட்பம்ஶகேஷு ।
விஸ்தாரம் வேஸரே லிங்கே பஞ்சத்ரிம்ஶபதாநிகு ॥ ௬௫ ॥

தாம்ஶே" என்றே பாடம் இருத்தல் தகும். ஏனெனில், லிங்கத்தின் உயரத்தை அடிப்படையாகக் கொண்டே இங்கு லிங்கத் தினகலத்திற்கு அளவு கூறப்படுகின்றது. அவ்வாறே எம்மால் பொருள் தரப்பட்டுள்ளது.

வேஸரலிங்கத்தில் முற்கூறிய மூன்று வகைகள் அமைக்கும் வழி மற்றொன்று கூறப்படுகின்றது. இதில் லிங்கத்தின் உயரத்தை இருபத்தைந்து கூறாகச் செய்து கொள்ளவேணும். அந்த அடிப்படையில்

பதின்மூன்று வகைகள் லிங்கத்தின் அகலத்தைத் தீர்மானிப்பதற்கு ஏற்படுகின்றன. இதெல்லாம் "நாகர" லிங்கத்திற்கேற்றவை.

லிங்கோச்சே த்ராவிடே வாம்ஶே தூ ரஸஹாம்ஶ யாம்ஶகே ।
ஶாணாம்ஶ ஶாந்திகாதீநி வஸ்யாத் சதுர்வித ச ததுர்விதயம் ॥

இனி திராவிட லிங்கத்தின் விஷயம் விளக்கப்படுகிறது. இதில் லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு பாகமாக்கிக் கொள்ள வேண்டும். அதில் ஆறு பாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். ஐந்து அம்சம் அல்லது நான்கு அம்சமும், மூன்று பாகமும் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இவை முறையே சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம், (கணக்கிடப்படாதது?) என வழங்கப்படும். இவை திராவிட லிங்கத்திற்கே ஏற்பட்ட நான்கு விதங்களாகும்.

வேஸரே லிங்கதாம்ஶே து விம்ஶத்யம்ஶவிஹாஜிதே ।
அஷ்டவா வஸுஷட் பஞ்சாம்ஶைர்வ்யாஸம் ப்ரகல்பயேத் ॥

ஶாந்திகம் பௌஷ்டிகம் சைவ ஜயதம் வ க்ரமேண து ।
வேஸரம் வ சதுர்ஹேதம், ... ॥ ௬௫ ॥

இனி வேஸரலிங்கத்தின் அகலத்தினளவு கூறப்படுகின்றது. இருபது பாகமாக லிங்கத்தின் உயரத்தைப் பண்ணிக்கொண்டு

[illegible]

[illegible]

லிங்கத்தின் அகலம் நிர்ணயிக்கப்படுகின்றது: லிங்கத்தின் உயரம் இருபத்தைந்து பாகமானால், எட்டு பாகம், ஏழு பாகம், அல்லது ஆறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்கலாம். இதில் முதலாவது ஜயதம் இரண்டாவது பௌஷ்டிகம், மூன்ருவது ஸார்வகாமிகம் என்றறிய, வேணும்: இவ் வகை வேஸரலிங்கத்திற்கே ஏற்பட்டது. (65)

இனி, பொதுவாக லிங்கத்தின் வகைகள் சில கூறப்படுகின்றன: (1) ஸர்வஸமம், (2) வர்த்தமானம், (3) சிவாதிகம், என லிங்கங்கள் மூன்று வகைப்படும். அவை மூன்றும் இந்த சுலோகத்தில் விளக்கப் படுகின்றன. முதலில் "ஸர்வஸம" லிங்கம் கூறப்படுகின்றது. இதன் பெயரே இதன் நிலையை விளக்கும். "எல்லா விதத்திலும் ஸம அளவாக இருக்கும் லிங்கம்" என்பது இந்தப் பெயரின் பொரு

அந்த அடிப்படையில் லிங்கத்தின் அகலத்தை நிர்ணயிக்க வேண்டும் இங்கு. இருபது பாகமாக்கப்பட்ட லிங்கத்தின் உயரத்தில், எட்டு, ஏழு, ஆறு, ஐந்து பாகம் லிங்கத்தின் அகலம் அமைக்கலாம். இவை முறையே, சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம், (பொதுவில் கணக்கு பார்க்காமல் நிர்ணயிக்கும் வகை?) என்னும் நான்கு வகைப்படும். இவை நான்கும் வேஸரலிங்கத்தின் உட்பிரிவுகளேயாகும்.

இங்கு காச்யபீயத்தில்; நாகரம், த்ராவிடம், வேஸரம் என்னும் மூன்று வகை லிங்கங்களிலும், சாந்திகம், பௌஷ்டிகம் ஜயதம்—எனப்படும் மும்மூன்று உட்பிரிவுகளை விளக்கமாக அவ்வற்றின் அளவுடன் கூறியிருக்கிருர். ஆனல் இந்நூலில், திராவிடம்-வேஸரம்-இவ்விரண்டு வகைகளின் மும்மூன்று உட்பிரிவுகளே தெளிவாக விளக்கப்படுகின்றன. நாகரலிங்கத்தின் உட்பிரிவுகள் விளக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நாகர லிங்கத்தின் அளவை ஆதாரமாகக் கொண்டு அதன் விமானத்தை அமைக்கும் வகை. 60, 61, 62 சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது. விமானத்தைப் பற்றி இடையே இங்கு கூறவேண்டிய அவசியம் என்ன? என்பது சிந்தனைக்குரிய விஷயம். மேலும் "ஜயதம்" என்பதன் ஸ்தானத்தில் "ஸார்வகாமிகம்" என்பது இங்கு கூறப் பட்டுள்ளது.

ஹ்தெ ஸர் நாயாஜொ த்ரியெழ்ரி வஸாநநாஂவெஸ்ஷூ
[உ-ஹுராஷிஷ-ஒ-

வெதஂ ஷிஷ்ஷிதெ த்ரிஜொாக யாமஸஂவஹ்ரவெதஷூவெ-
[ஸாயிகஜ் ‖ சுசு ‖

ளாகும். லிங்கத்தில், பிரம்மாம்சம், விஷ்ணுவம்சம், சிவாம்சம் என்று மூன்று பாகங்களுண்டல்லவா? அந்த மூன்று அம்சங்களும் ஒரே அளவு களமுள்ளதாகவும், ஒரே அளவு உயரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் லிங்கத்தின் சுற்றளவு அதன் முழு நீளத்திற்குச் சமமாகவே இருத்தல் அவசியம். ஏற்றத் தாழ்வாக இருக்கலாகாது. இவ்வாறு அமைக்கப்படும் லிங்கம், "ஸர்வஸமம்" எனப்படும்.

இனி வர்த்தமான லிங்கத்தைக் கூறுவாம். இதிலும் பெயரே இதன் தன்மையை உணர்த்த வல்லதாக இருக்கின்றது: "படிப்படியாக வளர்ந்து கொண்டே செல்வது" என்பது "வர்த்தமானம்" (வயூஹமநம்) என்னும் சொல்லின் பொருளாகும். முன்போலவே லிங்கத்திலுள்ள மூன்று அம்சங்களுள், முதல் அம்சம் பிரம்பாகமென்பது. அதைக்காட்டிலும் இரண்டாவதான விஷ்ணு பாகம் சிறிது வளர்ந்திருத்தல் வேண்டும். அதையும் விட மூன்றாவதான சிவாம்சம் வளர்ந்திருக்க வேண்டும். இதற்கான முறையாவது:— லிங்கத்தின் முழு உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று விருப்பமோ அதை இருபத்துநான்கு கூறுகச் செய்து கொள்ளவேண்டும். இதில் முதல் (பிரம்ம) பாகம் ஏழு கூறுகளிலும், இரண்டாவது (விஷ்ணு) பாகம் எட்டு கூறுகளிலும், மூன்றாவது (சிவ) பாகம் ஒன்பது கூறுகளிலும் அமைக்கவேண்டும். இதில் லிங்கத்தின் மூன்று பாகங்களிலும் படிப்படியாக உயரம் வளர்ந்துகொண்டே செல்வதால் இது வர்த்தமானம் என வழங்கப்படுகின்றது.

இனி "சிவாதிக" லிங்கம் கூறப்படுகின்றது. பெயரிலிருந்தே இதன் தன்மையையும் ஊகித்தறியலாம். மற்ற இரண்டு அம்சங்களைக் காட்டிலும் சிவாம்சம் மட்டும் அதிகமாக இருத்தல்

ஆயாமே த்³விதே ஶிவாம்ஶஸ்ய ஜாதிஷட்³ஷட்³பி⁴ருச்ச்²ரிதி꞉
காலாம்ஶேந ச பஞ்சபஞ்சயவாம்ஶைஸ்ஸப்தபி⁴꞉ [பஞ்சபி⁴꞉ ।
ஸ்யாத்கால்யாம்ஶகபி⁴ர்வா நாம்ஶ꞉ ஸ்யாத்³வா, கேவ- [லைஶ்ச
பஞ்சாம்ஶேந ச, அஷ்டாம்ஶேந ச வா [ஸ்யாத் ॥ ௬௭ ॥

இதன் தனிச் சிறப்பாகும். அதாவது, மற்ற இரண்டம்சமும் சம அளவாக இருக்க, சிவாம்சம் மட்டும் அதிகமாக இருக்குமென்றவாறு. அவ்வாறன்றிக்கே மூன்றம்சங்களும் படிப்படியாக ஒன்றைவிட மற்றொன்று அதிக உயரமுள்ளதாக அமைந்தால் அது வர்த்தமான லிங்கம் என்னும் முந்திய வகையையே சாருமேயன்றி சிவாதிகமாகாது. இதை அமைக்கும் வகை :— லிங்கத்தின் முழு உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று விருப்பமோ, அதைப் பத்து கூருகச் செய்து, மும்மூன்று கூறுகளால் முறையே பிரம்மாம்சமும் விஷ்ணவம்சமும் அமைத்து, எஞ்சியுள்ள நான்கு கூறுகளால் சிவாம்சத்தை யமைப்பது. இதில் மூன்ருவதான சிவாம்சம் மட்டும் மற்ற அம்சங்களைவிட அதிகமாக இருப்பதனுல் இது 'சிவாதிகலிங்க' மெனப்படுகின்றது. (66)

லிங்கத்தின் அகலம் பலவாருக விளக்கப்படுகின்றது. லிங்கம் நிர்மாணம் செய்ய விரும்புகின்றவர்கள், முந்துற முன்னம் தாங்கள் செய்ய விரும்பும் லிங்கத்தின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்பதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். அதன் பிறகு அவ்வுயரத்தின் ஆதாரத்தில் அதன் அகலத்தை நிச்சயிக்கவேண்டும். தனக்கு இஷ்டமான லிங்கத்தின் உயரத்தை இருபத்துநான்கு கூருகச்செய்து, அதில் எட்டுபாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது ஒரு அளவு. இருபத்துநான்கில், ஏழு அம்சமும் ஐந்து யவமும் கூடிய பாகத்தை லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது மற்ருேரளவு. இருபத்து நான்கு பாகத்தில், ஐந்து பாகமும்

ஏதத்பஞ்சயவஸமாயுக்தம் உச்ச்ரயம்
லிங்கம் விஸ்தாரமம்ஶகே
அஷ்டாம்ஶ யவஸம்யுக்தம் நிஶ்சிதம்
வ்யாஸம் யதேவ: பஞ்சபி: ।
ஸப்தைகம் பஞ்சபிர்வா பஞ்சபிர்யவைர்யுதை
ர்வர்ணாநாம் விஸ்தரம் க்ரமாத்
கர்ப்பாகார விஸ்தாரே நவாம்ஶைகம்
வ்யாஸம் லிங்கஸ்ய ஶாஸ்த்ரே ॥ ௬௭ ॥

ஐந்து யவமும் கூடிய பாகத்தை லிங்கத்தின் அகலத்தினளவாகக் கொள்ளலாம். இதுவும் ஒரு அளவாகும். மற்றுங்காண்மின்! லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்துநான்கு கூறுகச் செய்ததில், எட்டு பாகங்களும் ஒரு யவமும் கூட்டிய அளவு லிங்கத்தின் அகலம் இருக்கலாம். அல்லது இருபத்துநான்கு கூறுகச் செய்த லிங்கத்தி னுயரத்தில் ஐந்து பாகம் மட்டுமே அதன் அகலம் அமைக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அகலத்தில் ஒன்பதில் ஒருபாகமாகவும் லிங்கத் தின் அகலம் அமைக்கப்படலாம். (67)

இந்த சுலோகத்தில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக் கும் ஏற்றவிதமான லிங்கத்தினகலம் கூறப்படுகின்றது. இங்கு, முற்கூறப்பட்டபடியே லிங்கத்தின் முழு உயரத்தை முந்துற முன்னம் 24 கூறுகச் செய்து கொள்ள வேண்டும். அதில் லிங்கத்தின் அகலம் எட்டு அம்சம் அமைக்கலாம். இது முதல் அளவு. அதிலேயே ஏழு பாகமும் ஐந்து யவமும் லிங்கத்தின் அகலமாக அமைக்கலாம். இது இரண்டாமளவு. ஐந்து பாகமும் ஐந்து யவமும் லிங்கத்தினகலம் அமைக்கலாம். இது மூன்றுமளவு. அதிலேயே, ஐந்து பாகங்கள் மட்டும் லிங்கத்தினகலத்தில் அமைக்கலாம். இது நான்காவது அளவு. இவ்வளவுகள் நான்கும் முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவையாகும். இவ்வாறுகவே இந்த நான்கு வகையான லிங்கங்களிலும் முன்பு 66-வது சுலோகத்தில் கூறப்பட்ட விதமாக ஸர்வஸமம், வர்த்தமானம், சிவாதிகம், என்றும்

सार्धे षड्भागविष्कम्भे त्रिभिः षट्सप्त-
शृङ्गस्य दीर्घं प्रविभज्य सर्वशः ।
विष्कम्भं दण्डेन नय पञ्चभिस्तु
नाहं वितं षोडशभिस्तु सार्धैः ॥ ६८ ॥

शूलस्य षड्भागमतः क्रमेण
भागांशवृद्ध्या नवधा विशालैः ।
वक्ष्ये च तानि नवोदितानि
लिङ्गानि दिव्यानि सहस्रशस्ते ॥ ६९ ॥

மூன்று வகைகளையும் அததற்குற்ற முறையில் அவரவர்களுக்கு அமைத்துக்கொள்ள வேண்டும். (68)

இருபத்துநான்கு பாகமாக லிங்கத்தின் முழு உயரத்தை நன்றாகக் கவனித்து அளந்து வைத்துக்கொள்ளவேண்டும். அதில் ஐந்து பாகங்களால் அந்த லிங்கத்தின் அகலத்தை அமைக்கவேண்டும். அதன் சுற்றளவு, (இருபத்துநான்கு பாகமாகச் செய்யப்பட்ட அதன் உயரத்திலேயே) பதினாறு பாகமுள்ளதாக அளவிட்டு அமைக்கவேண்டும். இதில் பதினாறு பாகம் சுற்றளவு வருமாறு லிங்கத்தின் கனம் இருக்கவேண்டும். ஐந்து பாகமே லிங்கத்தின் கனம் இருக்குமாயின், அதன் சுற்றளவு பதினாறு பாகம் வருவது சாத்தியமில்லை. அதனால் இந்த இரண்டு அளவுகளையும் கூர்ந்து கவனித்துச் சரியாக வருமாறு ஏதாவதொன்றில் சிறிதளவு கூட்டியோ குறைத்தோ அல்லது உள்ள படியேயோ சிற்பிகள் கவனித்துச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். (69)

இருபத்துநான்கு பாகமாக லிங்கத்தின் முழு உயரத்தைப் பங்கு போட்டு, அதில் ஆறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்குமாறு அமைக்கலாம். அதற்குமேல் கால் பாகம் கூட்டி 6¼ பாகம் அமைக்கலாம். இப்படியே படிப்படியாகக் கால் கால் பாகம் கூட்டிக் கொண்டே போய் ஒன்பது அளவுகள் எடுக்கவேண்டும். ஒன்பதாவது அளவில் லிங்கத்தின் அகலம் (இருபத்துநான்கில்) எட்டு பாக

𑌅𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌧 𑌨𑌵𑌾𑌂𑌶𑌕𑍇𑌷𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑍇𑌧

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌕𑌂

𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂, 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌕𑍈𑌃 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌮𑌿𑌤𑌿.

𑌸𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌦𑍍𑌵𑌯𑌮𑍍𑌧𑍍𑌯𑌮𑌂 ।

𑌸𑌕𑍍𑌤𑌕𑌕𑍍𑌷𑍇 *𑌸 𑌸𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌕𑍈𑌃 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌕𑌾

𑌸𑌕𑍍𑌤𑍇 𑌵 𑌭𑌾𑌗𑌦𑍍𑌵𑌯𑌂

முள்ளதாக இருக்கும். இவ் வழியிலும் தனக்கிஷ்டமான ஒரு அள வில் லிங்கத்தின் அகலத்தை அமைக்கலாம். (70)

வேறு சில வழிகள் இதில் கூறப்படுகின்றன. லிங்கத்தின் முழு உயரத்தை எட்டு பாகமாகச் செய்யவேணும். எட்டரை பாகமாகவும், ஒன்பது பாகமாகவும் அதைச் செய்துகொள்ள வேணும். இவ்வாறு மூன்று விதமாக லிங்கத்தின் உயரத்தைக் கூறு செய்து, அந்த ஆதாரத்தில் லிங்கத்தின் அகலம் இருக்கவேண்டிய அளவு கூறப் படுகின்றது இங்கு. முதலில் லிங்கத்தின் உயரத்தை எட்டு கூருகச் செய்யும் பக்ஷத்தில் இழிவோம். இரண்டு பாகம் லிங்கத்தின் அகலம் அமைப்பது உத்தமபக்ஷம், மூன்று பாகம் கொண்டதாக லிங்கத் தின் அகலத்தை அமைப்பது அதமபக்ஷம். இதற்கு மத்தியில் இரண்டரை அம்சமுள்ளதாக லிங்கத்தின் அகலத்தை அமைப்பது மத்யமபக்ஷம். இவ்வாறு மூன்றளவுகள் இதில் கூறப்பட்டன.

எட்டரை அம்ச முள்ளதாக லிங்கத்தின் முழு உயரத்தைக் கூறு செய்யுமிடத்திலும் இவ்வாறே மூன்றளவுகள் லிங்கத்தின் அகலத்திற்குக் கண்டுகொள்க. ஆனால் ஒவ்வொன்றிலும், அரைப் பாகம் சேர்த்துக்கொண்டு, உத்தம மத்யமாதமபக்ஷங்களை இதில் நிர்ணயம் செய்யவேணும். அதாவது எட்டு கூருகச் செய்ததில் இரண்டு கூறு அகலம் உத்தமமானல், எட்டரை கூருகச் செய்த தில் இரண்டரை கூறு அகலம் உத்தமம்—என்கிற வழியில்

---

* 𑌕𑌕𑍍𑌷𑌾𑌂𑌶𑌕𑍈𑌃 என்று மூலத்தில் பாடம் உளது. 𑌕𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 என்று அதைத் திருத்தி அச்சிட்டுள்ளோம்.

விஷ்கம்ப4ம் பா4ஜயேதே3வ நவதா4
ஸங்க்2யயைவ ஸா த்ர்யம்ஶக: ॥ ௭௧ ॥

ஸாதி4காஸாஷ்டமாம்ஶம் த்ர்யம்ஶம் விஷ்கம்பே4 ஸம்யுதம் |
அஷ்டாம்ஶேந த்ர்யம்ஶகம் பரிணாஹம் ஸமீரிதம் ॥ ௭௨ ॥

விஷ்கம்ப4ம் த்ரிகு3ணம் க்ருத்வா
விஷ்கம்ப4 வஸ்வம்ஶகோऽஷ்டாம்ஶம் |

ஒன்பது கூறாக லிங்கத்தின் உயரத்தைப் பங்கிட்ட பக்ஷத்திலும் இவ் வழியிலேயே மேலும் அரைப்பாகம் கூட்டி உத்தம மத்யமாதமபக்ஷங் கள் ஊகித்தறிந்துகொள்க. இங்கு மூலத்தில் சுலோகத்தின் இரண் டாவது அடியில், "ஶ்ரேஷ்டம் க்ருத்வா ஸமம்ஶகை:" என்றிருத்தல் தகும். அவ்வாறே இருப்பதாகக் கருதி எம்மால் பொருள் தரப்பட் டது. ஆனல், "ஶ்ரேஷ்டம் ஶ்ரேஷ்டஸமம்ஶகை:" என்றே பாடமுள் ளது. அவ்வழியில் பொருள் பொருத்தமாக வரவில்லை. அறிஞர்கள் ஆய்ந்துணர்க. (71)

இந்த சுலோகத்தில், அகலத்தின் ஆதாரத்தில் சுற்றளவைத் தீர்மானிக்கும் முறை விளக்கப்படுகின்றது. இந்த சுலோகத்தின் முதல் அடியும் மூன்ருமடியும், அகலத்தை ஆதாரமாகக் கொண்டு சுற்றளவை நிர்ணயம் செய்யும் வகையைக் கூறுகின்றன. இவற்றி லுள்ள ஸங்கேதச் சொற்களின் கருத்து தெளிவாக விளங்கவில்லை. தற்காலம் சிற்பிகள் வழக்கமாகக் கையாளும் முறையாவது:— குறுக் களவை ஐந்தால் வகுத்து, மேலும் மூன்று பாகங்களைக் கூட்டி இதை இரண்டால் பெருக்கினல் சுற்றளவு வருமென்பது. அதாவது—சுற்ற ளவின் மொத்தத்தை இரண்டு கூறுக்கி ஒன்றை எட்டால் வகுத்து மூன்று பாகங்களை நீக்கி நின்றது குறுக்களவு என்றவாறு. இம்முறை தான் இந்த சுலோகத்தில் விளக்கப்படுகின்றதா? அல்லது வேறு முறையா? என்பதும் ஆராய்ச்சி செய்தறியவேண்டிய விஷயம். (72)

அகலத்தின் ஆதாரத்தில் சுற்றளவைக் கண்டுபிடிக்கும் வகை மற்ருென்று இந்த சுலோகத்தில் கூறப்படுகின்றது. குறுக்களவை மூன்ருல் பெருக்கி, குறுக்களவின் எட்டிலொருபாகத்தில் எட்டி லொருபாகத்தைக் கூட்டியதனல் கிடைப்பது சுற்றளவு. அதாவது—

விஸ்தாரவாஸ் த்ரிகுணம் ...
விம்ஶ ... நிவிஷ்டாயா வா பரா: ॥ எ௩ ॥

ஸர்வதோபத்ரகம் லிங்கம் வர்தமாநம் ஶிவாதிகம் ।
ஸ்வஸ்திகம் ச சதுர்தா வா பரா: தல்லக்ஷணம் ப்ருதக் ॥
விப்ராணாம் ஸர்வதோபத்ரம் ... வர்தமாநகம் ।
ஶிவாதிகம் விஶாம் ஶூத்ராணாம் ஸ்வஸ்திகம் ... ॥ எ௫ ॥

ஒரு லிங்கத்தின் குறுக்களவு 1 அடி (12 அங்குலம்) என்று வைத்துக் கொள்வோம். அதை மூன்றால் பெருக்கினால் மூன்று அடி (36 அங்குலம்) ஆகின்றது. குறுக்களவு ஒரு அடியை எட்டால் வகுத்தால் 1½ அங்குலம் ஒரு பாகமாகின்றது. அதையும் எட்டால் வகுத்தால் 1½ யவம் ஆகும். முன்பு கிடைத்த மூன்றடியு (36 அங்குலத்து)டன் இதையும் கூட்டினால் 3 அடி, 1½ யவம் சுற்றளவு வருகின்றது. இது ஒரு வழி. மற்றொரு வழியும் உண்டு. முன் கூறியபடி அகலத்தை மூன்றால் பெருக்கிக் கொண்டு, அகலத்தில் இருபத்தொன்றில் ஒரு பகுதியைக் கூட்டினாலும் சுற்றளவு கிடைத்துவிடும். முன் கூறியபடி ஒரு லிங்கத்தின் குறுக்களவு 1 அடி என்றே வைத்துக் கொள்வோம். அதை மூன்றால் பெருக்கினால் 3 அடியாகும். அத்துடன் குறுக்களவாகிய ஒரு அடியின் 21-ல் ஒரு பாகத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். ஒரு அடிக்கு 12 அங்குலம் அதாவது 96 யவம். இதை இருபத்தொன்றால் வகுத்தால் *4½ யவம் வரும். 3 அடியுடன் இதையும் கூட்டினால், 3 அடி 4½ யவம் சுற்றளவு என்று தேறுகின்றது. முன் காட்டிய வழியில் 3 அடி 1½ யவம்தான் சுற்றளவாகத் தேறிற்று. இதுதான் இவற்றின் வாசி. (73)

(1) ஸர்வதோபத்ரம், (2) வர்த்தமானம். (3) சிவாதிகம். (4) ஸ்வஸ்திகம் என்று லிங்கம் நான்கு வகைப்படும். அவற்றின் தனித் தனியான இலக்கணம் இனி கூறப்படுகின்றது. (74)

மேற் கூறியவை நான்கும், முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவை. பிரதிலோமர், அனுலோமர் இவர்கட்கும் ஸ்வஸ்திக மேற்றது. (75)

---

* இது உத்தேசமாகக் கூறப்பட்டது. சரியான கணக்கல்ல.

ப்ரதிமோபாநமோபாதி லக்ஷணாநாமத ஸம்ஸ்ருதி ।

யதோவிதாதாநவிதாநயுக்தாம்
ஶிலாம் யதோக்தக்ரமதோऽபிலப்ய ।
ஸமம் யாமாச்ரம் விதயீத ஸம்ய
க்ஷ்டாச்ரகம் வ்ருத்தமயம் க்ரமம் ச ॥ ௭௭ ॥

தாயமேவே ஸாமஸ்தே ப்ரஹ்மாம்ஸமத்யம-
த்யம் கோணமஷ்டாச்ரம் நா

ஸர்வதோபத்ரம்—முதலான லிங்க பேதங்களைக் கூறுவதற்காக, பொதுவான லிங்கஅமைப்பின் சில உண்மைகளை இது முதல் சில சுலோகங்களால் விளக்குகின்றார். முதன் முதலில், லிங்கம் செய்வதற்கேற்ற சிலையைப் பரீக்ஷித்தறிந்து கொண்டு, அதில் இருக்கவேண்டிய அகலம்—நீளம்—கனம், இவ்வற்றையும் தகுந்தவாறு கவனித்து, முறைப்படி துண்டித்து எடுத்துக்கொண்டுவர வேண்டும். அதை மூன்று பாகமாக (அளவுகோலால் அளந்து அடையாளம் செய்து)ப் பிரித்து, அடிப்பாகத்தை நான்கு மூலையாகவும், நடுப்பகுதியை எட்டு கோணமாகவும், நுனிப்பகுதியை வட்டவடிவமாகவும் செய்ய வேண்டும். (77)

இனி, மேற் கூறியவாறு லிங்கத்தின் மூன்று பகுதிகளையும் (சதுரம் - எண்கோணம் - வட்டம்) அமைக்கும் வகை இங்கு விளக்கப்படுகின்றது. முந்துற முன்னம் லிங்கத்திற்காக உத்தேசம் பண்ணிக் கொண்டுவந்த சிலையை முழுதும் சமசதுரமாகப் பண்ண வேண்டும். அதில் மூன்றில் ஒரு பாகம் (அடிப்புறத்தில்) பிரம்மாம்சத்தை ஒதுக்கிவிட்டு மத்திய பாகத்தை எண்கோணமாக்க வேண்டும். இதற்காக வேண்டிய வழி இங்கு கூறப்படுகின்றது. ஸமசதுரத்தின் ஓரங்களில் நான்கு கோடுகள் சென்று ஒன்றோடொன்று கலந்து ஒரு சதுரமாக நிற்கின்றன வல்லவா? அவற்றுள் ஒவ்வொரு கோடும் இணைந்துகொள்ளும் இடங்களே கோணங்கள் எனப்படும். ஸமசதுரத்தில் நான்கு கோணங்கள் உள்ளன. ஒவ்வொரு கோணத்

தஸ்யாக்³ராதி³ந்யுபக்ரம்ய வ்ருத்திஷ்வம்
யேயே ஸூத்ராணி பாதயேத் ।
க்ஷேத்ரா ஜ்யாஸ்யா ஸம்ஸ்தி²தா:
ஷோட³ஶாந்தி ஸம்ஜ்ஞாஸ்யா: ஸா:

திலிருந்தும் இரு புறங்களிலும் செல்லும் ஸம ரேகைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று "புஜம்" என்றும், மற்றொன்று "கோடி" என்றும் வழங்கப்படும். இது கணித சாஸ்திரஸங்கேதம். "கோடி" யினுடைய வும், "புஜ"த்தினுடையவும் இரு முனைகளையும் ஒன்று சேர்க்கும் வகையில் ஒரு கோடு வரைந்தால் அது "கர்ணஸூத்ர" மெனப் படும். இந்த சுலோகததில் விளக்கப்படும் முறைக்கும், மற்றும் பல விடங்களிலும் கூறப்படும் அளவு முறைகளுக்கும் இந்த விஷயம் இன்றியமையாததாகலின் இங்கு இவ் விஷயத்தை விளக்கமாகக் கூறும்படி நேர்ந்தது.

ஸமசதுரத்தில், கர்ணஸூத்திரம் செல்லும் வழியில் அதன் புஜஸூத்திரத்தைச் (புஜமெனப்படும் ஒரு ரேகையின் அளவுள்ள நீளத்தை) செலுத்தி அந்த இடத்தை அடையாளம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறே நான்கு கோணங்களிலிருந்தும் செல்லுகின்ற கர்ணஸூத்ரங்களின் வழிகளிலும் அந்தந்த புஜஸூத்ரங்களைச் செலுத்தி அதனதன் முடிவிடங்களை அடையாளம் செய்து கொள்ள வேண்டும். ஸமசதுரத்தின் உட்புறத்தில், ஒரு கோணத்தினின்றும் நேர் எதிரான மற்றொரு கோணத்தை நோக்கிச் செல்லும் ரேகையின் எல்லையில் மேற் கூறியவாறு நான்கு புள்ளிகள் இட்டு அடையாளம் செய்துகொள்வது, ஸமசதுரத்தை (நாற்கோணத்தை) எண்கோண மாகச் செய்வதற்கான முதல் செயல்,

பிறகு அந்த அடையாளப் புள்ளிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருபுறங்களிலும், ஸமசதுரக் கோடுகளைத் தொடும் வண்ணம் இவ் விரண்டு புஜஸூத்ரங்கள் செலுத்தி, அவ்விடங்களையும் அடை யாளப் புள்ளிகளால் குறித்துக் கொள்ள வேண்டும். ஸமசதுரத்தின்

ஷோடஶாஸ்ரம் விதாய த வ்ருத்தமபி த
ஸ்யாச்சதுரஸ்ராதிகேந ச I எஅ I

சதுரஶ்ரேஷ்டாஶ்ரே வ்ருத்தே
ப்ரஹ்மா விஷ்ணு: ஶிவ: க்ரமாத் ।
தேவதா: ஸர்வலிங்கேஷு
த்ரிஷ்வம்ஶேஷு விஶேஷத: I எகூ I

நான்கு கோணங்களின் இரு புறங்களிலும் சம அளவில் இந்த அடையாளங்கள் இடம் பெறும். இப்போது ஸமசதுரத்தின் நான்கு ரேகைகளிலும் தனித்தனியே இவ்விரண்டு புள்ளிகள் இடம்பெற்றுள்ளனவல்லவா? இவைதான் அதில் அமைக்கப்போகிற எட்டு கோணங்களின் குவிந்த மூலைகளாகும். இவ்வாறு அடையாளம் செய்து கொள்ளுவது, ஸமசதுரத்தை எண்கோணமாக்குவதன் இரண்டாவது செயல்.

இதன் பிறகு ஸமசதுரத்தின் நான்கு மூலைகளிலும் இரு புறங்களிலுள்ள அடையாளப் புள்ளிகளிலிருந்து நேர்க்கோடு ஒன்றுக்கொன்று வரைந்து கொள்ள வேண்டும். இந்தக் கோடு, ஏற்கெனவே உள்ள நான்கு கோணங்களையும் வெளிப்படுத்தியவாறு செல்லும். அந்தக் கோட்டின் அளவுக்கே நான்கு கோணங்களையும் ஆயுதத்தால் சிதைத்து நீக்கி விட்டால், நின்றது எண்கோணமாக அமைந்துவிடும். ஸமசதுரத்தை எண்கோணமாக்குவதில் இது தான் முடிவான செயல். இவ் வழியிலேயே அளவெடுத்து முயன்று, எண்கோணத்தைப் பதினாறு கோணமாகச் செய்ய வேண்டும். பிறகு அதையே வட்ட வடிவமாகவும் பண்ணவேண்டும். (78)

இதில் லிங்கங்கள் யாவற்றுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகின்றது. லிங்கத்தில் சதுரம்—எண்கோணம் வட்டவடிவம்—என்று மூன்று விதமாக அமைக்கப்படும் பாகங்களில், முறையே பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனும் தேவதைகளாவார்கள். எல்லா

ப்ராம்ஶ: பாதஶிலாயாம் ஸ்யாத் விஷ்ணோரம்ஶ: பீடிகாஸமே |
த்ருஶ்ய: ஶிவாம்ஶ: பூஜ்ய: ஸ்யாத் ஸர்வலிங்கேஷ்வயம் விதி: ||

ஸமதா ஹி வேதேர் லிங்கஸ்யாவாரிகா யதா |
பூஜாம்ஶ ஏவ நிர்திஷ்டோ லிங்கஶப்தேந சாத்ர ஹி ||

வேதாஶ்ரபீடிகாயாஶ்ச லிங்கே ஸமத்வம் ஸமம் க்ஷிபேத் |
தல்லிங்க பரிணாஹஸ்ய ப்ரஹ்மஸூத்ரசதுஷ்டயே || ௮௨ ||

விஸ்தாரே ஸமமேவ ஸ்யாச் சாயாதோஷோऽந்யதா பவேத் |
அதோ லிங்கஸமம் பீடம் ஸ்யாச்சாயாதோஷவர்ஜிதம் || ௮௩ ||

லிங்கங்களுக்கும் இது பொதுவானது. த்ரிகண்டலிங்கங்களில் இம்முறை சிறப்பாக அனுசரிக்கப்படவேண்டும். (79)

லிங்கத்தின் பிரம்மாம்சம், பாதசிலையில் பொருத்தப்பட்டிருக்கும். விஷ்ணுவின் அம்சம் பீடிகைக்குச் சமமாயிருக்கும். இது இரண்டும் கண்ணுக்குப் புலனாகாது. மேல் கண்ணுக்குத் தெரியும் பகுதி சிவாம்ச மெனப்படும். இது எல்லா லிங்கங்களுக்கும் பொதுவான விஷயம். (80)

லிங்கத்திற்கு ஆவாரிகை (ஆவுடையார்) எப்படி யிருக்கின்றதோ அவ்வாறே அதன் வேதியும் சம அளவுள்ளதாக இருக்கவேண்டும். இங்கு "லிங்கம்" என்னும் சொல்லால் பூஜாம்சமேதான் குறிப்பிடப் படுகின்றது. (81)

நான்கு மூலையுள்ள பகுதி, பீடிகை, லிங்கம், இவற்றில் இது ஸமமாகக் கவனிக்கப்படவேண்டும். அந்த லிங்கத்தின் பரிணாஹத் தில் (சுற்றளவில்) உள்ள பிரம்ம ஸூத்திரங்கள் நான்கிலும் அதன் விஸ்தாரம் (அகலம்) சம அளவாகவே இருக்கவேண்டும். இல்லை யேல் "சாயாதோஷம்" வந்துவிடும். ஆதலின் பீடம் லிங்கத்

பீடேஷு லிங்கதுல்யா ஸ்யாத் பரிணாஹஸமம் தத் விஸ்த்ருதி꞉
ததா தீர்கேஷு லிங்கேஷு பீடிகாயாஶ்ச விஸ்த்ருதி꞉ ॥ ௮௪ ॥

ஸமுந்நதே ஶிவாம்ஶே து வர்தயேச்ச தத்ஸமம் யதா ।
யாவத்வ்ருத்தம் ஶிவாம்ஶே து ப்ரஹ்மாம்ஶே ஹாபயேத்து தத் ॥

ததா ஸ்தூலேஷு லிங்கேஷு ந்யூநதாம் பீடவிஸ்த்ருதே꞉ ।
விஜ்ஞாய பூஜாபாகம் து க்ஷயம் குர்யாத் தத³ம்ஶத꞉ ॥ ௮௬

ப்ரஹ்மாம்ஶே வர்தயேத்தாவத் வ்ருத்திஹாநீ ந தோஷதே ।

திற்குச் சமமாகவே அமைக்கப்பட வேண்டும். அதுதான் சாயா தோஷமற்றதாக இருக்கும். பிரம்ம ஸூத்திரமென்பது, லிங்கத்தின் உச்சியிலிருந்து நடுமத்தியில் நான்கு புறமும் நேராகத் தொங்க விடப்படும் சூத்திரம். இதுவே மத்ய ஸூத்ரமென்றும் வழங்கப் படும். சாயாதோஷம்—நிழல் விழுவதனால் உண்டாகும் தோஷம். லிங்கங்களின் சுற்றளவு எத்தனை பாகமோ, அத்தனை பாகமே பீடங்களின் பரப்பு (அகலம்) இருத்தல் வேண்டும். (83½)

அப்படியே, உயரம் அதிகமுள்ள லிங்கங்களில் பீடத்தின் அகலமும் அதற்கேற்றவாறு அதிகரிக்கவேண்டியிருக்கு மல்லவா? அதையும் சாயாதோஷம் ஏற்படாதவாறு நன்றாகக் கவனித்து சிவாம்சத்தில் வளர்த்தவேண்டும். சிவாம்சத்தில் எத்தனை பாகம் அதிக உயரமாக்கப்பட்டுள்ளதோ, அத்தனை பாகத்தை பிரம்மாம் சத்தில் குறைத்துக் கொள்ள வேண்டும். (85)

அதுபோலவே ஸ்தூலமான (பெருத்த அளவுள்ள) லிங்கங் களில் பீடத்தின் அகலம் சிறிது குறைவாக அமைக்கவேண்டியிருக் கும். அதை நன்றாக் கவனித்து, அதற்கேற்றவாறு பூஜா பாகத்தை (சிவாம்சத்தை)க் குறுகியதாகச் செய்யவேண்டும். அவ்வாறு குறுக்கப்பட்ட அளவை, அதனுடைய பிரம்மபாகத்தில் கூட்டி, அதை

஛ாயாதோஷோ விநாயேந ஸ்யாத் லிங்கே ஸர்வஸமே ஸ்ம்ருத:।

வர்த்தமாநாதிலிங்கேஷு நைதத் ஸ்யாதிதி கேசந।
தத்வத் வ்யக்தேஷு லிங்கேஷு வ்யக்தாவ்யக்தே ச ரத்நஜே ॥ ௮௮ ॥

ஸ்வயம்பூவே ததா பாணே ஆர்ஷே வா நியமோ ந ஹி।
வர்த்தமாநாதிலிங்காநாம் த்ரயாணாம் ஸத்ருஶம் விதி: ॥ ௮௯ ॥

யமலக்ஷேத்ரே கதிதா ஛ாயாதோஷம் விநா யதா।
லிங்காயதி ப்ரமாணாதீத்யாதிநா பீடவிஸ்த்ருதி: ॥ ௯௦ ॥

ஶிவாம்ஶஸமமாநா ஸ்யாத் ப்ராப்தா ஸங்க்ரஹே ததா।

வளர்த்தவேண்டும். விஷ்ணு பாகத்தில் கூட்டுவதோ-குறைத்தலோ கிடையாது. சிவாம்சத்தில் குறைந்தால் அதை பிரம்மாம்சத்திலும், பிரம்மாம்சத்தில் குறைந்தால் அதை சிவாம்சத்திலும் சரிக்கட்ட வேண்டும். விஷ்ணுவம்சம் எப்போதும் ஒரே அளவாகவே இருக்கும். (77½)

இவ்வாறு சாயாதோஷம் வாராமைக்காகக் கூறப்பட்ட இவ் விஷயங்கள், "ஸர்வஸமம்" எனப்படும் லிங்கத்தில்தான் கவனிக்கப் படவேண்டும். "வர்த்தமானம்" முதலான லிங்கங்களில் இது அவசியமில்லை என்பது சிலருடைய கருத்தாகும். அதுபோலவே, வ்யக்தமான லிங்கங்களிலும், வ்யக்தாவ்யக்தமான லிங்கங்களிலும் இரத்தினத்தாலான லிங்கங்களிலும், ஸ்வயம்பூ லிங்கங்களிலும், பாண லிங்கங்களிலும், ஆர்ஷமான லிங்கங்களிலும் இந்த நியமம் இல்லை. வர்த்தமானம் முதலிய மூன்று வகையான லிங்கங்களுக்கும் இவ்விதி சமமானது. (89)

யமலக்ஷேத்திரத்தில், சாயாதோஷம் இல்லாமல் பீடத்தின் விஸ்தாரத்தை அமைக்கும் வகை, "லிங்காயதி ப்ரமாணாதி" என்று தொடங்கிக் கூறப்பட்டுள்ளது. அந்த பீடத்தினகலம், சிவாம்சத்திற்குச் சமமாக இருக்கவேண்டுமென 'சங்கிரக"த்தில்

𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌿𑌂𑌗𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌿𑌃

𑌸𑌂𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌲𑌿𑌂𑌗𑍋𑌚𑍍𑌚𑍇 𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌨𑌵𑌭𑌿𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌅𑌂𑌶𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌹𑌰𑍀𑌶𑌾𑌨𑌾𑌮𑌂𑌶𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌕𑍇 ॥

𑌲𑌿𑌂𑌗𑌾𑌯𑌾𑌮𑍇 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌂𑌶𑍇 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌃
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌭𑌾𑌗𑌾𑌸𑍍𑌤𑍁 𑌭𑌵𑌂 𑌵𑌾 𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌕𑍇 ॥ ௯௩ ॥

𑌪𑌂𑌚𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌭𑌾𑌗𑍈𑌰𑍍𑌵𑌾 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌂𑌚𑌷𑌡𑌂𑌶𑌕𑍈𑌃 ।
𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌂 𑌭𑌵𑍇𑌲𑍍𑌲𑌿𑌂𑌗𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌮𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௯௪ ॥

கூறப்பட்டுள்ளது. லிங்கத்தின் நீளம் எவ்வளவோ அவ்வளவு தான் பீடத்தின் அகலம் அமைக்கப்படவேண்டும். அதற்கு ஏற்றத் தாழ்வாக இருக்கலாகாது. (90—91)

இனி வர்த்தமான லிங்கம் கூறப்படுகின்றது மூன்று சுலோகங்களால். லிங்கத்தின் உயரத்தை 24 கூருகச் செய்து, ஏழு பாகம் பிரம்மாம்சமும், எட்டுபாகம் விஷ்ணவம்சமும், ஒன்பது பாகம் சிவாம்சமும் அமைக்கலாம். இது வர்த்தமான லிங்கத்தில் ஒரு வகை. (92)

அதிலேயே மற்றொரு வகை. லிங்கத்தின் உயரத்தை 21 கூருக்கி ஆறு பாகம் பிரம்மபாகமும், ஏழு கூறு விஷ்ணுபாகமும், எட்டு கூறு சிவபாகமும் அமைக்கலாம். இதுவும் ஒருமுறை. (93)

மற்றொருவகை. லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு கூருக்கி, அதில் முறையே 5—6—7 பாகங்களுள்ளனவாக பிரம்ம—விஷ்ணு—சிவாம்சங்களை அமைக்கலாம். அல்லது, லிங்கத்தின் உயரத்தைப் பதினைந்து கூருக்கி, முறையே நான்கு, ஐந்து, ஆறு பாகங்களில் பிரம்ம விஷ்ணு சிவபாகங்களை அமைக்கலாம். இவற்றில் முதலில் கூறியது (24 கூருக்கியது) உத்தமம். அடுத்தது மத்திமம். கடையான இரு வகைகளும் அதமம்.

லிங்காயாமே து ஸங்க்யாம்ஶே பாகாத் த்ரிஸ்த்ரீன் விபாஜிதே |
அம்ஶே ப்ரஹ்மமுராரிப்யாம் ஸ்யு: சதுர்லிங்கே ஶிவாயகே ||

லிங்கோத்ஸேதே து நவாம்ஶே ஷட்ஸப்தாஷ்டாம்ஶகை:
ப்ரஹ்மவிஷ்ணுஶிவாநாம் க்ரமாத் கண்டா: ப்ரகீர்த்திதா: ||

லிங்கம் த்ரைராஶிகம் நாம பவேத் ஸர்வஸமே ததா |
ஸ்வாயாமார்த்தார்த்த விஸ்தாரம் ஸ்வஸ்திகம் வா ஶிவாதிகம் ||௯௬||

ஸுரார்ச்சநார்த்தம் லிங்கம் நாம்நா வர்த்தமாநமீரிதம் |
தச்ச ஸார்வதேஶிகம் ஜ்ஞேயம் ஸர்வவர்ணஹிதாவஹம் ||

பௌஷ்கரே காரணே சைவ ப்ரயோக்தம் தத்தத்ஸ்யதே |

இனி சிவாதிக லிங்கம் பேசப்படுகின்றது. இதில் லிங்கத்தின் உயரத்தைப் பத்து கூறாகச் செய்து கொள்ளவேண்டும். அவற்றுள் முறையே மும்மூன்று பாகங்களில் பிரம்மாம்சமும், விஷ்ணவம்சமும், எஞ்சிய நாலு பாகங்களில் சிவாம்சமும் அமைக்கப்பட வேண்டும். (95)

லிங்கத்தின் உயரத்தை ஒன்பது கூறாகச் செய்து, அதில் ஆறுபாகம் பிரம்மாம்சத்தின் சுற்றளவாகவும், ஏழுபாகம் விஷ்ணுவம்சத்தின் சுற்றளவாகவும், எட்டு பாகம் சிவாம்சத்தின் சுற்றளவாகவும் இருக்குமாறு அமைக்கவேண்டும். "இது ஸர்வஸமம்" எனப்படும் லிங்கத்தில் "த்ரைராசிகம்" என்று வழங்கப்படும். தனது உயரத்தின் பாதியிலும் பாதியளவு அகலமுள்ளதாக இருக்கும் ஸ்வஸ்திகம், அல்லது சிவாதிகம், வர்த்தமானம் என வழங்கப்படும் லிங்கங்கள் தேவர் கூட்டங்களால் பூஜிக்கப் பெற்றவையாம். இதற்கு "ஸார்வதேசிகம்" எனப் பெயர். இது எல்லா வருணத்தவருக்கும் நன்மை செய்ய வல்லது.* (96-97-98)

பௌஷ்கரம் என்றும், காரணம் என்றும் வழங்கப்படும் சைவாகமங்களில் இவ் விஷயங்கள் பரக்கப் பேசப்பட்டுள்ளன. அவ்

* ஸார்வதேசிகம்—த்ரைராசிகம்— இவை மற்ற நூல்களில் வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளன.

[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௱ ॥

[illegible] ।

விஷயத்தை இங்கே கூறுவாம். அவற்றில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் வர்த்தமான லிங்கம் அமைத்துக் கொள்ளும் வகை முறைப்படி கூறப்பட்டுள்ளது. முதலாவது; பிரம்மாம்சம் நான்கு பாகம், விஷ்ணுவம்சம் ஐந்து பாகம், சிவாம்சம்—ஆறு பாகம். ஆக லிங்கத்தின் உயரத்தை 15 பாகங்களாகச் செய்து விவரிக்கப்படும் வகை இது. இதிலேயே 5—6—7 என்று பிரம்ம—விஷ்ணு—சிவாம்சங்களை முறையே அமைத்தால், லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு கூறுக்கிக் கொள்ள வேணும். இது இரண்டாவது வழி.

இவ்வாறுகவே 6—7—8 பாகங்களில் முறையே பிரம்ம விஷ்ணு சிவாம்சங்களை அமைத்தல் மூன்றும் வகை. இருபத்தொரு பாகமாக்கிக் கொள்ளவேணும் லிங்கத்தின் முழு உயரத்தை இதில்.

லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்துநான்கு கூறுக்கி, அதில் முறையே 7—8—9 பாகங்களில் பிரம்ம விஷ்ணு சிவாம்சங்களை அமைத்தல் நான்காவது வகை. இந்த நான்கு வகைகளும் முறையே நான்கு வருணத்தவருக்கும் ஏற்ற வர்த்தமான லிங்கங்களாகும். (100)

இனி திவாதிக லிங்கம் விவரிக்கப்படுகின்றது. இதிலும் முன் போலவே நான்கு வருணத்தவர்கட்கும் தனித்தனியாக உபயோகிக்கும் வகையில் நான்கு வகைகள் கூறப்படுகின்றன. முதலாவதாக, அந்தணர்கட்குத் தகுந்த சிவாதிக லிங்கம் விளக்கப் படுகின்றது. லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்திரண்டு பாகமாகச் செய்து கொள்ளவேணும். அதில் முறையே ஏழு பாகம் பிரம்ம பாகமும்

ஸப்தாஷ்டாம்ஶேஷு ஷஷ்டாம்ஶம் விப்ராபீஷ்டம் ஶிவாதிகம் ||

நவபாகவிம்ஶத்யூர்த்வே தாம்ஶே ஷட்ஷட்பாகாம்ஶ-
[பேதத: |

ப்ரஹ்மவிஷ்ணுபாகாம்ஶம் ஸப்த ஶைவே ந்ருபாயகே ஸ்ம்ருதம் ||

த்ரயோதஶாம்ஶே லிங்கோச்சே வேதவேதாம்ஶபேதத: |
பஞ்சபாகம் ஶிவாம்ஶம் ஸ்யாத் லிங்கம் வைஶ்யே ஶிவாதிகம் || ௱௯ ||

லிங்கோச்சே தஶாம்ஶே து ப்ராணாத்ரி த்ரிவிஷ்ணுகம் |
ப்ரஹ்மாத்யம்ஶேஷு ஶூத்ராணாமிஷ்டம் லிங்கம் ஶிவாதிகம் ||

ஏழு பாகம் விஷ்ணு பாகமும் எட்டு பாகம் சிவாம்சமும் அமைக்க வேண்டும். இது அந்தணர்களுக்குத் தகுந்ததான சிவாதிக லிங்கமாகும். (101)

இதிலேயே இரண்டாவது வகை. இதில் லிங்கத்தின் முழு உயரத்தைப் பத்தொன்பது பாகமாக்கிக் கொள்ள வேண்டும். அதில் பிரம்ம பாகம் ஆறு அம்சங்களாலும், விஷ்ணு பாகம் ஆறு அம்சங்களாலும், சிவாம்சம் ஏழு பாகங்களாலும் அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் சிவாதிக லிங்கம் அரசர்கள் பூஜை செய்வதற்கேற்றதாகும். (102)

லிங்கத்தின் முழு உயரத்தைப் பதின்மூன்று கூறு செய்து, நான்கு பாகம் பிரம்மாம்சமும், நான்கு பாகம் விஷ்ணவம்சமும் ஐந்து பாகம் சிவாம்சமும் அமைத்தால் இது வைசியர்களுக் கேற்ற தான சிவாதிக லிங்கமாகும். (103)

லிங்கத்தின் உயரத்தைப் பத்து கூறாகச் செய்துகொண்டு, மூன்று பாகம் பிரம்மாம்சமும், மூன்று பாகம் விஷ்ணவம்சமும், எஞ்சிய நான்கு பாகங்களில் சிவாம்சமும் அமைப்பது சூத்திரர்களுக் கேற்ற சிவாதிக லிங்கமாகும். (104)

பூர்வோக்த ஸமலிங்கே ச தாராலிங்கம் விகல்பயேத் |
சதுரஶ்ரம் அஷ்டாஶ்ரம் ததூர்த்வே ஷோடஶம் கல்பயேத் ||௱௫||

வேஷ்டாஶ்ரம் ஷோடஶாஶ்ரம் ச த்வாத்ரிம்ஶத்ரிகுணீக்ருதே |
ஷோடஶாதி த்விகுணாநாம் தாராலிங்கம் த்ரிதா மதம் ||௱௬||

சதுரஷ்டாஶ்ரம் வா ஷோடஶாஶ்ரம் யதாக்ரமம்,
தஸ்மாத் த்விகுணம் தத்ரோர்த்வத: ஸர்வத்ர ஸ்தாபிதா: |
ஏவம் பூர்வாசார்யைர் உக்தம்
ப்ரோக்தம் தாராலிங்கம் ஏதத் த்ரிதைவ ||௱௭||

முன்பு கூறப்பட்ட ஸம லிங்கத்தையே "தாரா" லிங்கமாகவும் பண்ணலாம். இந்த "தாராலிங்கம்" மூன்று வகையானது. அடி, நடு, நுனி—என மூன்ருகப் பிரிக்கப்பட்ட லிங்கத்தின் பகுதிகளில், அடியில் நாலு பட்டை, நடுவில் எட்டு பட்டை, நுனியில் 16-பட்டை உடையது முதல் வகை. அடியில் எட்டு பட்டை, நடுவில் 16-பட்டை, நுனியில் 32-பட்டை—உடையது இரண்டாவது வகை. அடியில் 16-பட்டை, நடுவில் 32-பட்டை, முடிவில் 64-பட்டை- உடையது மூன்ருவது வகை. லிங்கத்தின் மூன்று பகுதிகளில், முறையே ஒன்றைவிட மற்ருென்றில் பட்டைகள் இரட்டிப்பாக இருக்கவேண்டுமென்றவாறு. இப்படி லிங்கங்களின் எல்லா வகைகளிலும் தாரா லிங்கம் அமைக்கலாம். (105-106)

இவ் விஷயமே தெளிவாகக் கூறப்படுகின்றது. லிங்கங்களின் மூன்று பகுதிகளில், (பிரம்ம—விஷ்ணு—சிவாம்சங்களில்) மூலத்தில் (அடியில்) எட்டுப்பட்டை, 16 பட்டை, அல்லது நான்கு பட்டை உள்ளதாக அமைக்க வேண்டும். அதற்குமேல், அதைப்போல் இரு மடங்கு எண்ணிக்கையுள்ளதாக அமைக்கவேண்டும். அதாவது, அடியிலிருப்பதில் நான்கு பட்டையானல் நடுவில் 8-பட்டை, நுனியில் 16-பட்டை,. இதுபோல் மற்ற இரு வகைகளுக்கும் கண்டுகொள்வது. இவ்வாறு முன்னோர்கள் தாராலிங்கத்தை மூன்று வகையாகவே கூறியுள்ளனர். (107)

ஸமதாராஶ்ரிதம் ஶைவம் பாராபாரம் ஸமம் ததா பஞ்சவிம்ஶதி: ।
ஸர்வதோபத்ரகாராணாம் ஸதாம் தாரா: ஸமாஹ்ருதா: ॥ ௱அ ॥

ஏகைகஸ்யாஞ்ச தாராயாம் சத்வாரிம்ஶச்ச ஸங்க்யயா ।
கல்பயேச்ச ஸமாநி லிங்காநி ஸ்யாத் லிங்கம் ஸஹஸ்ரகம் ॥

சதுரஶ்ரஸ்ய கோணாக்ர ஸூத்ரயோர்மத்யம தத: ।
கோணத்வயாந்தரேகாஶ்ரம் கல்பயேத் விஷ்ணுபாகிகம் ॥

அதவா லிங்கவிஸ்தாரம் ஸப்ததா விபஜேத்தத: ।

ஸர்வதோபத்ர லிங்கங்களில், இருபத்தைந்து தாரைகள் இருத்தல் வேண்டும். ஏழிலைப்பாலை மரத்தின் இலை போல் ஒவ்வொரு தாரையும் சமானமான இடைவெளியுள்ளதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு தாரையிலும் நாற்பது லிங்கங்கள்—என்னும் கணக்கில் லிங்கங்களை அமைத்தால் ஆயிரம் லிங்கங்களாகும். இந்த லிங்கங்களும் (ஆயிரம் லிங்கங்களும்) ஒன்றுக்கொன்று அளவு ஏற்றக் குறைவாக இராமல் சம அளவுள்ளதாக இருக்கவேண்டும். அவற்றுள் ஏற்றத்தாழ்வு இருப்பின் ஆயிரம் லிங்கங்களின் அமைப்பு கவர்ச்சிகரமாயிராது. சாஸ்திர ரீதியிலும் அது தவறாகும். (108-109)

இனி சமசதுரத்தை எட்டு கோணமுள்ளதாகச் செய்யும் வகை விவரிக்கப் படுகின்றது. ஸமசதுரத்தின் மத்தியில் நேராக இரு ஸூத்திரங்கள் இழுக்கவேண்டும். அவ்விரு ஸூத்திரங்கள் செல்லுமிடத்தை அடையாளப் புள்ளிகளால் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். அதனின்றும் கோணத்திற்குச் செல்லும் இரு புறங்களிலுமுள்ள ரேகைகளில் மத்தியில் அடையாளம் செய்து கொண்டு, ஒவ்வொரு மூலையிலும் அவ்வடையாளங்களில் நேர்க்கோடு வரைந்து கொண்டு அதனளவில் கோணத்தைச் சேதித்து விட்டால் தின்றது எண்கோணமாகிவிடும். இதுவே விஷ்ணுபாகமாகும். (110)

மற்றொரு வழியும் இதற்குண்டு. லிங்கத்தின் அகலத்தை ஏழு ஸம பாகமாகப் பிரித்துக்கொண்டு அடையாளப் புள்ளிகள் வைத்துக் கொள்ள வேண்டும். நடுவில் மூன்று பாகங்களை நிறுத்திக்

தஸ்ய த்ரிபாகம் ஸம்ஸ்தாப்ய சிஷ்டாம்ஶவிவர்ஜிதம் ||

ஸமாச்ரம் ஸம்ப்ருக்தி ஸமம்;

அத வ்ருத்தம் ப்ரவக்ஷ்யதே |

சதுரச்ரஸ்ய லிங்கஸ்ய சிரோமத்யே நிதாய து |
ஸூத்ரம் ப்ரமணமார்கேண ஸ்ராவயேத் வ்ருத்தஸித்தயே || ௧௰௨ ||

அத சிரோவர்த்தனம் |

கோணே து பார்ச்வே ஸம்ஸ்ப்ருஷ்ய ஸமத்ரயம்
ஸமே த்ரிபாகம் தத்ஸமம்

கொண்டு இரு புறங்களிலும் இவ்விரண்டு பாகங்களை ஒதுக்கிவிட வேண்டும். ஸமசதுரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இவ்வாறே செய்துகொண்டு இவ்விரண்டு பாகங்களைக் கொண்ட கோணங்களைச் சிதைத்து விட்டால் நின்றது எண்கோணமாகிவிடும். முன் சுலோகத்தில் கூறப்பட்ட வழியைக் காட்டிலும் இவ்வழி பொருத்தமாகக் காண்கின்றது. இம் முறையில் கோணங்கள் ஏற்றத் தாழ்வில்லாமல் சம அளவாக அமைகின்றமையைக் காண்க. (111)

இனி வட்டவடிவமாக்கும் வகை கூறப்படுகின்றது. ஸம சதுரத்தின் (லிங்கத்தின்) சிரஸ்ஸின் (உச்சியின்) மத்தியில் ஸூத்திரத்தை வைத்துக்கொண்டு நாற்புறமும் சுழற்றினால் ஓரங்களில் விளிம்புகளில் தொடுகின்ற வகையில் அது செல்லும். அந்த ஸூத்திரம் செல்லும் வழியில் உட்பட்ட பகுதியை வைத்துக்கொண்டு வெளிப்பட்ட பகுதியைச் சிதைத்துவிட்டால் நின்றது வட்டமாகும். (112)

இனி சிரோவர்த்தநம் கூறப்படுகின்றது.

சிரோவர்த்தநமாவது, லிங்கத்தின் சிரத்தில் (உச்சியில்) ஸம சதுரமாகவுள்ள பகுதியை மழ மழ வென்று வழித்தாற்போல் சிதைத்து அதன் அமைப்பைப் பூர்த்தி செய்தலாகும். இதில் நான்கு

[illegible]
விப்ராதிவர்ணக்ரமாத் |
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௧௩ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] |

வகைகளுண்டு. தும்மட்டிக்காய் அல்லது வெள்ளரிப்பழம் இவற்றின் முனை போன்றதாக லிங்கத்தின் முனையைச் செய்வது ஒருவகை. குடை போன்றதாக அமைத்தல் இரண்டாவது விதம். பிறைச் சந்திரனுடைய வடிவம் போன்றது மூன்றாவது வகை. கோழிமுட்டை போல் அமைப்பது நான்காவது வகை. இந்நான்கு வகைகளும் முறையே அந்தணர் முதலிய நான்கு வகுப்பினருக்குமுரியவை.

இவ் வத்தியாயத்திலேயே 75-வது சுலோகத்தில் கூறப்பட்டபடி பல வகையான சுற்றள்ளவுள்ள ஸர்வஸமம் முதலான நான்கு வகை லிங்கங்களுக்கும் இம் முறை பொருந்தும். அதாவது, ஸர்வஸம லிங்கத்தில் வெள்ளரிப்பழத்தின் முனை போலும். வர்த்தமான லிங்கத்தில் குடை போலவும், சிவாதிக லிங்கத்தில் இளஞ்சந்திரன் வடிவமாகவும், ஸ்வஸ்திக லிங்கத்தில் கோழிமுட்டை போன்ற வடிவமாகவும் அமைக்கப்படவேண்டும் என்றவாறு. அநுலோமர்களுக்கும் முன் கூறப்பட்டபடியே ஊகித்தறிந்துகொள்க. (113)

இந்த சுலோகத்தில் சிரோவர்த்தனம் பண்ணும் வகை விளக்கமாகக் கூறப்படுகின்றது. முன் சுலோகத்தில் பொதுவாக அதன் அமைப்பு மட்டும் கூறப்பட்டது.

ஶ்ரீகரஶ்ரேஷ்டி ஶிரஶ்ரீ வ்ருக்ஷ க்ஷிதி ஶ்ருதி-
வர்தாங்ஶயோ ஶ்ரீகர
வஜ்ராஸனஶிரோஹாஸோ ஶ்ரேவரிஷ்டா-
லெரயபெக்ஷிஷோ ॥ ககச ॥

சிவலிங்கத்தின் தலையில் உள்ள அகலத்தை, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு, பதினொரு பாகங்களாகச் செய்துகொள்ள வேண்டும். அதில் முறைப்படி, இரண்டு, ஒரு , இரண்டு, மூன்று பாகங்களை நாற்புறமும் கழித்துவிட வேண்டும். சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினேழு, பதினைந்து, இருபத்தொன்று, பத்தொன்பது கூறுகளாகச் செய்துகொண்டு, மேலுள்ள பாகத்தை (ஒவ்வொன்றிலும்) செதுக்கிவிடவேண்டும். இங்கு கூறப்பட்ட நான்கு வகைகளும் முறையே நான்கு வருணத்தவருக்கும் அமையும். அது எங்ஙனேயெனில் :

(1) லிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தை எட்டுக் கூருக்கி இரண்டு கூறு கழிக்கவேண்டும்; அதன் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினேழு கூருக்கி, மேலிருந்து ஒரு பாகம் கழிக்கவேண்டும்;

(2) சிவலிங்கத்தின் தலையகலத்தை ஒன்பது கூருக்கி ஓரத்தில் உள்ள ஒரு பாகத்தைக் கழித்துவிட வேண்டும். இவ் வகையில் பூஜாம்சத்தின் உயரத்தை பதினைந்து கூருக்கி மேலிருந்து ஒரு பாகம் கழித்துவிட வேண்டும்.

(3) மூன்றாவது வகையில், சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தைப் பனிரண்டு கூருக்கிக் கொண்டு, நாற்புறமும் இரண்டு கூறுகளைக் கழித்துவிட வேண்டும்; சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தை இருபத்தொரு கூருக்கி, மேலுள்ள ஒரு பாகத்தை ஆழமாகக் கொள்ளவேண்டும்.

(4) நான்காவது வகையில், சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தைப் பன்னிரண்டு கூருக்கி, மூன்று கூறுகளை ஓரங்களில்

தத்நவாம்ஶே ப்ரவிபாஜ்ய தயா விபஜேத்
பாகம் விஶோத்ய வஸிதம், ஶிவபாகதைர்க்யம் ।
வாத்ரிம்ஶதம்ஶகதயா வஸிதம் த்ருதம், பாகாத்
வர்ணக்ரமேண இஹ ஏகவேதம் விஶோதயேத்வா ॥

ஏகத்ராஹம் த்ரயாஷோடாகாரம் குக்குடாண்டநிபம் ததா ।
அர்தேந்துவத்ஸ்யம் வா புத்புதாகாரம் தத் வஷேத் ॥ ககச

ஸர்வேஷாமபி லிங்கானாம் ஶிரோவர்தனம் க்ரமாத் ।

கழித்துவிடவேண்டும். இதற்கு ஆழம்: பூஜாம்சத்தினுயரத்தைப் பத்தொன்பது கூறாக்கிக்கொள்ள வேண்டும். அதில் மேலுள்ள ஒரு பாகத்தின் ஆழத்தைச் சிதைக்க வேண்டும். இவ்வாறு சிரோவர்த்தநத்தின் நான்கு வகைகள் நான்கு வருணத்தவர்க்கும் ஏற்றதாகக் கூறப்பட்டன. (114)

இதற்கே மற்றொரு வகை இந்தச் சுலோகத்தில் விளக்கப் படுகின்றது. சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தை ஒன்பது கூறாக்கிக் கொள்ள வேண்டும். அதில் நாற்புறமும் ஒரு பாகத்தைச் சேதித்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆழம்: சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தை முப்பத்திரண்டு பாகமாகச் செய்து, நான்கு வருணத்தவர்க்கும் முறையே ஒரு, இரண்டு, மூன்று, நான்கு பாகங்களை (மேலிருந்து) கழிக்க வேண்டும். (115)

சிரோவர்த்தநம் செய்த பிறகு சிவலிங்கத்தின் முனை இருக்க வேண்டிய விதங்கள் ஐந்து இச்சுலோகத்தில் விளக்கப்படுகின்றன. அவை முறையே, குடைபோலவும், வெள்ளரிப்பழத்தின் முனை போலவும், கோழிமுட்டையின் முனை போன்றும், பிறைச்சந்திரன் வடிவமாகவும், நீர்க்குமிழியின் வடிவத்தோடும் அமையுமாம். (116)

இனி, கீழ்க் கூறப்பட்ட ஐந்து வகையான சிரோவர்த்தநங்களை எல்லா லிங்கங்களுக்கும் அமைக்கும் வகை கூறப்படுகின்றது. முதலில், குடைபோன்ற அமைப்பு வருவதற்கான முறை. லிங்கத்தின்

𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶 𑌏𑌕𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ॥ ௧௧௭ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌾𑌤𑍇𑌕𑌦𑍇𑌽𑌯𑌃 𑌸𑌂𑌲𑌂𑌬𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑍋𑌭𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌃 ।
𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿 𑌛𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌣𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿 ॥

𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌚 𑌸𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌶𑌿𑌵𑌾𑌧𑌿𑌕𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌕𑍇 ॥ ௧௧௮ ॥

𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌸𑌙𑍍𑌕𑌰𑌂 𑌨𑍈𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌦𑍋𑌷𑌾𑌵𑌹𑌂 𑌯𑌤𑌃 ।
𑌷𑌡𑌂𑌶𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑍇𑌨 𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥

அகலத்தைப் பதினாறு கூறாக்கிக் கொள்ள வேண்டும். லிங்கத்தின் உச்சியிலிருந்து இருபுறங்களிலும் மேற்படி பதினாறு பாகங்களில் ஒரு பாக அளவு ஸூத்திரத்தைத் தொங்கவிட்டு, அப்பகுதியைக் கழித்து விட வேண்டும். இப்பொழுது லிங்கத்தின் முனை குடைபோல் அமையும். இதிலேயே, ஒரு யவம், இரண்டு யவம், அல்லது மூன்று யவம் அதிகமாகவும் சேதிக்கலாம். இவ்வாறு, குடை போன்ற அமைப்புக்கு நான்கு வகைகள் கூறப்பட்டன. (118)

ஏற்கனவே சொல்லப்பட்ட நான்கு வகை லிங்கங்களுள் ஸம லிங்கத்தில், முதல் இரு வகைகளை அமைக்கலாம். அதாவது, லிங்கத்தின் அகலத்தில் பதினாறில் ஒரு பாகமும், அதனுடன் ஒரு யவம் கூட்டியும், சேதிக்கும் இரு வகைகள். சிவாதிக லிங்கத்தில் மூன்றாம் வகையான, லிங்கத்தின் அகலத்தில் பதினாறில் ஒரு பாகத்துடன் இரண்டு யவம் சேர்த்துக் கழிப்பதும், வர்த்தமான லிங்கத்தில் நான்காவது வகையான, லிங்கத்தின் அகலத்தில் பதினாறில் ஒரு பங்குடன் மூன்று யவம் அளவு கூட்டிச் சிதைத்தலும் தகும். இந்த சிரோவர்த்தனத்தில், ஸங்கரம் (ஒன்றுக்குச் சொல்லியதை மற்றொன்றுக்கு அமைப்பது) கூடாது: அது தீங்கு விளைவிப்பதாகும். (119½)

இனி வெள்ளரிப்பழம் போன்ற அமைப்பின் முறை விளக்கப் படுகின்றது. லிங்கத்தின் அகலத்தை ஆறு கூறாக்கி அதில் இரண்டரை பாக அளவு முன்போன்று ஸூத்திரங்களை, இரு புறமு

[illegible] ।
[illegible] ‖ ௧௨௧ ‖

[illegible] ।
[illegible] ‖௧௨௨‖

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

தொங்கவிட்டு சேதிப்பதனால் வெள்ளரிப்பழம் போன்ற அமைப்பு உண்டாகும்.

லிங்கத்தின் அகலத்தை ஆறு கூறாக்கி, முன்போலவே மூன்று அம்சங்களைச் சேதிக்க, கோழிமுட்டை போன்ற வடிவம் அமையும். லிங்கத்தின் அகலத்தில் மூன்றில் ஒரு பாகத்தை முன்போலவே கழிப்பதனால், பிறைச்சந்திரன் போன்ற வடிவம் அமையும். (121)

லிங்கத்தின் அகலத்தை எட்டுக் கூறாக்கி, அதில், மூன்றரை பாகங்களை முன்போல் இரு புறங்களிலும் ஸூத்திரங்களைத் தொங்கவிட்டுக் கழிப்பதனால், லிங்கத்தின் சிரஸில் அழகிய நீர்க்குமிழி போன்ற வடிவம் அமையும். (122)

இந்த ச்லோகத்தில், மேலே கூறப்பட்ட பற்பல வகையான சிரோவர்த்தனங்களுக்கும் பொதுவான சில விஷயங்கள் கூறப்படுகின்றன. லிங்கங்களின் உச்சியிலிருந்து இரு புறங்களிலும் அததற்குக் கூறப்பட்ட அளவுகளில் ஸூத்திரங்களைத் தொங்கவிட வேண்டும். பிறகு, அந்த அந்த லிங்கத்தின் சுற்றுப்புறங்களில் சரியாக அமைவதற்காக அந்த ஸூத்திரங்களின் வரம்பில் (அதாவது, இரு புறங்களிலும் ஸூத்திரம் தொங்கும் அளவில்) இரு பக்கங்களிலும் இரண்டு மச்சங்களைக் கிடந்தவாறாகச் சித்தரித்துக் கொள்ள வேண்

தஸ்யாஸ்ய த்வயம் யாவந்நிர்கதம்
ஸம்யுக்தம் யத்ர
தத்ர அந்தரே த்ரிதயம் க்ருத்வா
ஸேவாய ப்ரசோதிதம் ॥ ௧௨௩ ॥

அத ஸ்தூலம் ஸ்தூலமூலம் ஸ்தூலமத்யம் க்ருஶம் ததா ।
ஶேஷம் ஸ்தூலஶிரஸ்கம் ச சதுர்த்தேதி ப்ரசோதிதம் ॥ ௧௨௪ ॥

லிங்கவ்யாஸேऽஷ்டதா பக்தே மூலமத்யாக்ரயோரபி ।
பாகமேகம் வர்த்தயேத் ஸ்தூலமூலாதிகம் ஸ்ம்ருதம் ॥ ௧௨௫ ॥

டும். அந்த மச்சங்களுடைய வாய்கள், வால்கள் இவற்றிலிருந்து முறையே இரண்டு ஸூத்திரங்கள் கிளம்பி ஒன்று சேருமாறு குறித்துக்கொள்ள வேண்டும். அவைகள் சேருமிடங்களில் மூன்று புள்ளி இடம் வைத்துக்கொண்டு, புத்திசாலியான சிற்பியானவன், ரொம்பவும் நிதானத்துடன், கீழ்க் கூறப்பட்ட பலவகையான சிரோ வர்த்தநங்களை அமைக்க வேண்டும். இதுசம்பந்தமாகப் பலவகையான சைவாகமங்களிலும் விரிவாகக் கூறப்பட்ட விஷயங்களை வேலையில் ஈடுபடும் பொழுது நன்கு மனதிற் பதியவைத்துக்கொள்ள வேண்டும். (123)

"ஸ்தூல மூலம்" (அடி பருத்தது) "ஸ்தூல மத்யம்" (நடுபருத்தது). அவ்வாறே, சுருங்கியதும், சிரஸ்ஸில் மட்டும் பருத்ததும் என நான்கு வகைகள் கூறப்பட்டன. இவைகளை அமைக்கும் வகை இப்பொழுது கூறப்படுகின்றது. லிங்கத்தின் அகலத்தை எட்டுக் கூறுக்கிக்கொள்ள வேண்டும். அதில், அடிப்புறம், நடு, நுனி இவற்றில் முறையே ஒரு பாகத்தை அதிகம் வைப்பதனுல், ஸ்தூல மூலம், ஸ்தூல மத்யம், ஸ்தூல சிரஸ் என்றும் மூன்று வகைகளும், முழுவதிலும் ஒரு பாகம் குறைக்க "க்ருசம்" என்னும் வகையும் அமையும். (124—125)

𑌲𑌿𑌂𑌗𑌮𑌾𑌰𑍍𑌷𑌂 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑍀𑌕𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌂𑌶𑍌 𑌲𑌿𑌂𑌗𑍇 𑌸𑍍𑌯𑌾𑌤𑌾𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌕𑍌
[𑌵𑌂𑌶𑌤𑌃 ॥ ௧௨௬ ॥
𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑍋 𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌚 𑌶𑌿𑌰𑌸𑍋 𑌵𑌾 𑌨 𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑍍 ।

𑌅𑌥 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌲𑌿𑌂𑌗𑌾𑌨𑌿 𑌜𑌰𑍍𑌜𑌰𑌾𑌣𑌿 𑌕𑍃𑌶𑌾𑌨𑌿 𑌚 ॥ ௧௨௭ ॥

𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌾𑌨𑌿 𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌣𑌿 𑌫𑌲𑌕𑌾𑌵𑌦𑍍𑌦𑍃𑌶𑌾𑌨𑌿 𑌚 ।
𑌅𑌨𑍇𑌕𑌾𑌗𑍍𑌰𑌾𑌣𑌿 𑌗𑍋𑌕𑌰𑍍𑌣𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌨𑌿 𑌦𑌾𑌡𑌿𑌮𑍀𑌫𑌲𑌵𑌤𑍍 ॥

𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌗𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑌾𑌨𑍋𑌨𑍍𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾 ।

லிங்கம், "ஆர்ஷம்" என்றும், "ஸ்வாயம்புவம்" என்றும் இரு வகைப்படும்.

(குறிப்பு :— இங்கு மூலம் பிழையாகவுள்ளது.
"𑌲𑌿𑌂𑌗𑌮𑌾𑌰𑍍𑌷𑌂 𑌤𑌥𑌾 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾"
என்று இருத்தல் தகும்.)

ஆர்ஷலிங்கமாவது, முனிவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கம் என்று பொருள்படும். அதில், பிரம்மாம்சமும் விஷ்ணு அம்சமும் நான்கு மூலைகள் உள்ளதாகவே இருக்கும். சிவாம்சம், வட்டவடிவமாகவே இருக்கும். இதற்கு சிரோவர்த்தநம் கிடையாது. (126½)

இனி சுயம்பு லிங்கங்கள் கூறப்படுகின்றன: இவை பலவகைப்படும். மிகவும் சிதிலமானவை சில, சில மெல்லியனவாயிருக்கும்; குட்டையாயும், நீண்டவையாயும் இருப்பவை சில; பலகை போல் தட்டையாயும் சில இருக்கும்; பல முனைகளுடன் கூடியனவும், பசுமாட்டின் காது போன்ற அமைப்புடையனவும், மாதுளம்பழம் போன்றவையாகவும் மற்றுஞ் சில உண்டு. (128)

மற்றுஞ் சில, ஆறு, ஐந்து, மூன்று, பத்து முனைகளுடன் கூடியவையாயிருக்கும். இவற்றுக்கு நீளம், அகலம் உயரம் முதலிய அளவுகளின் வரையறை இருக்காது. பல நிறங்களுடன் கூடிய பற்பல

ஶ்ருங்காண்யேவ வக்ராணி நாநாவர்ணாக்ருதீநி ச ॥ கஉகூ ॥

ஸபீடாநி விபீடாநி ஸாலயாநி நிராலயாணி ச |
வநபர்வதநத்யப்திதீர்த்தக்ஷேத்ரமடாதிஷு ॥ கங0 ॥

தர்ஶநஸ்பர்ஶநார்சாபி: யேஷாம் ஸித்திரநுத்தமா |
விஜ்ஞேயாஸ்ச ஸ்வயம்புலிங்காநி யேஷு நித்யம் ஸ்திதஶ்ஶிவ: ॥

மூலம் ந ஶோதயேத்தேஷாம் ஶோதநம் ஸர்வநாஶக்ருத் |
அபரீக்ஷ்யாணி தாந்யாஹு: பூஜ்யாந்யேவ யதாஸ்திதி ॥

தேஷாம் மூர்த்திவிபாகோऽஸ்தி நவஸ்தாநாங்கஸங்கர: |
மாநுஷேஷ்வேவ லிங்கேஷு மந்த்ரமூர்த்யாதிஸங்கர: ॥ கஙஉ ॥

வடிவமுள்ள கோணலான சிருங்கங்கள் (கொம்புகள்) இவற்றில் காணப்படும். (129)

இவற்றில் சில பீடத்துடன் கூடியிருக்கும், சிலவற்றுக்குப் பீடம் இருக்காது. சில கோயிலுடன் காணப்படும்; மற்றுஞ் சில, கோயி லில்லாமலும் இருக்கும்; காடு; மலை, ஆறு. கடல், புண்ய தீர்த்தங் கள். புண்ணிய க்ஷேத்திரங்கள் இவ்விடங்களில் இவை காணப்படும். இவற்றைக் காண்பதும், தொடுவதும், பூசிப்பதும் சிறந்த சித்தி யைத் தரவல்லன். இவைகளே சுயம்பு லிங்கம் எனப்பெறும். இவற்றில் சிவபெருமான் நித்தியமாக ஸாந்நித்தியம் செய்திருப்பர். இவற்றின் மூலத்தைச் சோதித்தல் கூடாது. அவ்வாறு செய்வது ஸர்வநாசத்தையே உண்டுபண்ணும். ஆராய்ந்து பார்க்காமல் உள்ள வண்ணமே பூஜிக்கப்பட வேண்டியவை இவை. (131-132)

இவற்றுக்கு மூர்த்தி விபாகம் கிடையாது. அதாவது, ஸாகாஸந மூர்த்தி முதலிய பாகுபாடுகள் இவற்றில் கிடையாது. அதனால், அவற்றுக்கு ஏற்பட்ட மந்திரங்களின் கலப்பும் அவற்றுக்குக் கிடை யாது. மனிதர்களால் சமைக்கப்படும் லிங்கங்களுக்குத் தான் மந்தி ரம், மூர்த்தி முதலியவற்றின் ஸங்கரம் (அதாவது கலப்பு) உண்டு.

𑌅𑌥 𑌬𑌾𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍍 ।

𑌬𑌾𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌯𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾𑌜𑌾𑌤𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌲𑍋𑌹𑌶𑍈𑌲𑌾𑌦𑍍𑌯𑌪𑍀𑌠𑍇𑌷𑍁 𑌭𑌾𑌗𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ॥

𑌪𑍀𑌠𑌂 𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑍇 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇
𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 𑌸𑍁𑌧𑍀𑌃 ।
𑌕𑍋𑌟𑍍𑌯𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑍍𑌰𑍌
𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌶𑍍𑌰𑍀𑌪𑌰𑍍𑌵𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥ ௧௩௫ ॥

𑌤𑌿𑌸𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌲𑌿𑌕𑌾𑌗𑌰𑍍𑌤𑍇 𑌤𑌿𑌸𑍍𑌰𑌃 𑌸𑍍𑌯𑍁𑌰𑌮𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑍇 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑍇 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑍍𑌰𑍌 𑌨𑍇𑌪𑌾𑌲𑍇 𑌕𑌨𑍍𑌯𑌕𑌾𑌶𑍍𑌰𑌮𑍇 ॥
𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌕𑍈𑌕𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌕𑍋𑌟𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑍋𑌟𑌿𑌸𑍍𑌤𑍁 𑌷𑍋𑌡𑌶

பாணலிங்கம்.

பாணலிங்கம் யாவற்றையும் அவை தோன்றியவாறே பீடங்களில் பொருத்தவேண்டும். உலோகங்கள் அல்லது கல்லாலும் இவற்றாலான அழகிய, சுபமான பீடத்தில் அவற்றை ஸ்தாபிக்க வேண்டும். பாதியளவு, அல்லது மூன்று அங்குலம் அல்லது ஐந்து அங்குலம் அல்லது இரண்டங்குலம் அளவு— இவற்றைத் தன் விருப்பம் போல் பீடத்தில் ஸ்தாபிக்கலாம். இந்த பாண லிங்கங்கள் உலகெங்கும் கோடிக் கணக்கில் காணப்படுகின்றன. லிங்காத்ரியில் மூன்று கோடிகளும், ஸ்ரீசைலத்தில் மூன்று கோடிகளும், காளிகாகர்த்தத்தில் மூன்று கோடிகளும், அமர்நாதத்தில் மூன்று கோடிகளும் உள்ளன. மற்றும் கன்யாதீர்த்தத்திலும், மஹேந்திர மலையிலும், நேபாளத்திலும், கன்னிகாச்சிரமத்திலும் தனித்தனியே ஒவ்வொரு கோடி உள்ளன. இவ்வாறு பாணலிங்கங்கள் மொத்தத்தில் பதினாறு கோடி இருக்கின்றன. (134—136½)

ஸபீடம் வாऽபீடம் வா ஸப்ராஸாதயுதம் து வா ॥ ௧௩௭ ॥

ஶிரோவர்த்தனஹீனம் தச்ச ஸர்வேஷாம் ஸாங்கர்யவர்ஜிதம் ।
ஸம்பூஜயேத் ஸ்தாபனாதிஜம் தச்ச ப்ரதிஷ்டாப்ய விதானத: ॥ ௧௩௮ ॥

அன்யான்யபி ச லிங்கானி நத்யப்திகிரிஜான்யபி ।
அக்ருதானி விஶிஷ்டானி தேவதைத்யர்ஷிஸித்தகை: ॥ ௧௩௯ ॥

ஶிவேஶ்வரேந்த்ரஷ்டிலக்ஷ்மேஶை:
ஸம்பூஜ்யான்யேவ ஹி பாணவத் ॥

இதி ஶில்பரத்னே உத்தரபாகே லிங்கலக்ஷணம் நாம
த்விதீயோऽத்யாய: ॥

இந்தப் பாணலிங்கங்களைப் பீடத்துடன் கூடியதாகவோ, அல்லது பீடம் இல்லாததாகவோ, பிராஸாதத்துடன் கூடியதாக, சிரோவர்த்தன மின்றிக்கே, மூர்த்திஸங்கரம், மந்த்ர ஸங்கரமொன்றுமில்லாமல் முறைப்படி பிரதிஷ்டை செய்வித்துப் பூஜிக்கவேண்டும். அவ்வாறு பூஜிப்பதனுல், புக்தி, முக்தி இவற்றைப் பெறலாம். (138)

மற்றும் தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மற்றும் சித்தர் முதலிய தேவகணங்கள் இவர்களால் செய்யப்படாததும், ஆறு, கடல், மலை இவற்றில் தோன்றியவையுமான வேறு லிங்கங்களும் சிறந்தவையே ஆகும். அவற்றையும், பாணலிங்கத்தைப் போலவே மதித்துப் பூஜிக்கவேண்டும்.

சில்பரத்நம் இரண்டாம் பாகம் லிங்கலக்ஷணத்தைக்கூறும்
இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ: ।

அத த்ருதீயோऽத்யாய: ॥

அத லக்ஷணோத்தார: ।

ஏவம் லிங்கம் காரயித்வா மஹாத்மா
  ஸந்த்யக்தம் தோஷைர் லக்ஷணை ராட்யம் ச ।
லக்ஷோத்தாரம் காரயேத் வர்ணயோக்யம்
  யதாஸ்வோக்தம் தந்த்ரஜ்ஞ ஸ்வாகமேஷு ॥ ௧ ॥

லிங்கம் மூர்த்னி க்ஷதம் ப்ராப்தேச்
  ராஜ்ஞாம் கர்த்துஸ்ச நாசனம் ஸ்யாத் ।
லலாடே பின்னம் பத்னீம் ச புத்ரான்
  வக்த்ரே ஹத்யாச் ஶில்பினம் ஹந்த்யாத் ॥ ௨ ॥

மூன்றும் அத்தியாயம்.

லிங்கத்தின் லக்ஷணோத்தாரம்.

மஹாத்மாவாகிய சில்பி, இவ்வாறு குற்றமற்றதும், நற்குறிகள் பொருந்தியதுமான லிங்கத்தைப் பண்ணித் தத்தம் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ள முறைப்படி அந்தந்த வருணத்துக் கேற்றவாறு * லக்ஷணோத்தாரத்தைப் பண்ணவேண்டும். (1)

லிங்கம் தலையிற் சிதைவுற்றிருந்தால்; அரசனுக்கும் செய்விப்பவனுக்கும் அழிவைத் தரக்கூடியதாம். நெற்றியின் மேற்புறம் சிதைவிருப்பின், அது (சிற்பியின்) மனைவி, மக்களையும், முகத்தில் முறைவிருப்பின் அது சிற்பியையும் கொல்லும்.

---

* "லிங்கஸ்ய வக்த்ர நிர்மாணம் லக்ஷணோத்தார உச்யதே" (காச்ய. 59—19.) என்றபடி லிங்கத்தில் முகம் உண்டுபண்ணுதல் லக்ஷணோத்தாரமெனப்படும். முகம் = (இங்கு) முன்புறமென்பதற்கான அடையாளம்.

மத்யே து:கம் பயம் சித்ரம்
க்ரோடே வ்ருஷ்டிவிநாசநம் ।
அத்யாயதம் சாதிஹ்ரஸ்வம்
க்ருஶம் ஸ்தூலம் ந்ருபாந்தக்ருத் ॥ ௩ ॥

ஸம்ஸ்க்ருத்ய க்ருத்யம் ஶிலாபி: ஸிகதாதிபி: ।
கோவாலரஜ்ஜுபிஶ்சைவ ஸமீக்ருத்ய விம்ருஜ்ய ச ॥ ௪ ॥

ஆதர்ஶோதரவத் ஸ்நிக்தம் ப்ரதிபிம்பம் ஸமவ்ருத்தகம் ।
தத: ஶுத்தாம்புகோக்ஷீரநாரிகேலேக்ஷுவாரிபி: ॥ ௫ ॥

ப்ரக்ஷால்ய தீர்த்ததோயேந லக்ஷ்மாணி ப்ரகல்பயேத் ।

இடையில் இருக்கும் சிதைவு துன்பத்தையும் பஞ்சத்தையும் தரும்; குரோடத்தில் (மார்பில்) இருக்கும் சிதைவால் மழையின்மை யுண்டாம். அதிகமான நீளமுள்ளதும், அதிகமாகக் குறுகியதும், அவ்வாறே மிகவும் மெல்லியதும் மிகவும் பெருத்ததுமான லிங்கம் அரசனுக்கு நாசத்தை விளைவிக்கும். (3)

இவ்வாறு பூர்வாங்கமாகச் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் செய்து முடிக்கப்பெற்ற லிங்கத்தைச் சாணைபிடிக்கும் கல்லினாலும், மணல் முதலியவற்றாலும் பசுமாட்டினுடைய வாலின் மயிர்களாலான கயிறுகளாலும், மேடு பள்ளமில்லாமல சமமாகத் தேய்த்து வழவழப் பாக்கவேண்டும். (4)

அவ்வாறு செய்வதனால் கண்ணாடியின் உட்புறம்போல் பொலிவுடனும், நம் உருவம் பிரதிபலிக்கும் அளவு பளபளப்பாகவும், ஒழுங்கான வட்டவடிவத்துடனும், லிங்கம் அமையும். பிறகு தூய்மையான நீர், ஆவின்பால், இளநீர், கரும்புச்சாறு இவற்றால் அதைக் கழுவி, பின்பு மீண்டும் சுத்தமான நீரால் கழுவி, அதற்கென விதிக்கப்பட்ட அடையாளங்களை அதில் பொறிக்கவேண்டும். ராஜஸர்ஷபம் (கருங்கடுகு) அளவு உள்ள பொற் புள்ளிகள் லிங்கத்தில் அல்லது

ராஜஸம்ஸ்தாநராஷ்ட்ரேஷு யத்ர ஸர்வே விஶீர்ணவ: ॥ ௬ ॥

ஶுபே ச பீடிகாயாம் ச ஸர்வவர்ணஹிதாவஹம் ।
ஸதோஷம் சேத் த்யாஜ்யம் லிங்கம் பீடம் ச தத்யஜேத் ॥ ௭ ॥
நிர்தோஷம் தத்ஸமாதாய லக்ஷணோத்தாரமாசரேத் ।
ஸூத்ர த்ரேதா ஶிவாம்ஶாயாம் பாகவிஸ்தரம்
ஸாரம் பாகத்வயம், ஶிஷ்டம்
த்யக்த்வாஷ்டாம்ஶம், ஸஹாஸ்ரார்த்தம் வ விஷ்ணுவஸிரா-
ஸோத்ர பாத்ராஷ்டாம்ஶே ।
ஶம்பாகம் யக்ஷ வாலாம ஏவ யவார்த்த-
ம்பஶ்சேம லக்ஷணகம்

பீடத்தில் காணப்படுமாயின். அந்த லிங்கம் மிகமிகச் சிறந்தது, எல்லா வருணத்தவர்க்கும் நன்மையைத் தரவல்லது. இவ்வாறன்றி லிங்கம், அல்லது பீடத்தில் சித்தனவேனும் குற்றம் காணப்படின் அதை அறவே நீக்கிவிட வேண்டும். குற்றமற்றதான மற்றொரு லிங்கத்தைக் கொணர்ந்து அதில் முறைப்படி செய்யவேண்டிய வற்றைச் செய்து லக்ஷணோத்தாரம் செய்யவேண்டும். (4—7½)

லக்ஷணோத்தாரம் செய்யும் வகை இனி விளக்கிக் கூறப்படு கின்றது. சிவலிங்கத்தில், பிரம்ம பாகம் - விஷ்ணு பாகம் - சிவாம்சம் அல்லது பூஜாம்சம் என மூன்று பிரிவினை ஏற்கெனவே கூறப்பட் டுள்ளதல்லவா? அதில் சிவாம்சத்தின் உயரத்தை மூன்று கூறாகச் செய்துகொள்ள வேண்டும். அதில், ? ச்சிமிரு்ள மூன்றிலொரு பாகத்தை விலக்கி விட வேண்டும். அதாவது இங்கு கூறப்படும் லக்ஷணோத்தாரம் சிவாம்சத்தின் கீழ்ப்புறமாக உள்ள மூன்றில் இரண்டு பாகத்திலேதான். மேலேயுள்ள மூன்றிலொரு பாகத் திலல்ல என்றவாறு. ஒரு லிங்கத்தின் சிவாம்சம் மூன்றடி உயரம் என்று வைத்துக் கொள்வோம். அதில் மேற்புறமுள்ள ஒரு அடியை நீக்கி, கீழுள்ள இரண்டடி உயரத்திற்குள் லக்ஷணோத்தாரம் பண்ணா

ஸ்ரீ யவாகாரஞ்ச வாரணாக்ஷிநிபம் ஶாலிவத் வி-

க்ருதாஞ்ஜலிவத் ஸ்ம்ருதம் ॥ 8 ॥

வேண்டுமென்பது தேற்றம். லக்ஷணம்—அடையாளம். உத்தாரம்—(அதை) அமைத்தல். வட்டவடிவமான சிவாம்சத்தில் எல்லாப் பக்கமும் ஒரே விதமாக இருக்குமல்லவா? அதில் ஒரு பக்கத்தில் அடையாளமிட்டு, அவ்வடையாளமுள்ள பக்கத்தையே லிங்கத்தின் முன்புறமாக வழங்குமாறு செய்தல்—லக்ஷணோத்தாரமென்பதாம். இனி மூன்று கூருக்கப்பட்ட சிவலிங்கத்தின் பூஜாம்சத்திலுயரத்தில் கீழுள்ள இரண்டு பாகங்களின் மொத்த உயரத்தை எட்டு பாகங்களாகப் பண்ணிக்கொள்ள வேண்டும். மலையில் தோன்றும் தாதுப் பொருள்களால் செய்யப்பட்ட திரவப் பொருளில் சூத்திரத்தை நனைத்து "விஷுவஸிரா" ஸூத்திரத்தைத் தட்டிப் பதியுமாறு அடையாளம் பண்ணிக்கொள்ள வேண்டும். இதிலுள்ள விசேஷங்கள் காச்யபீயம் முதலான நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆங்கு கண்டுகொள்க. விஷுவஸிரா ஸூத்திரமென்பது பூமியின் சுற்றுவட்டத்தில் அச்சு போல் நேராகச் செல்லும் கோடு. அதுபோல் சிவலிங்கத்தின் குறிப்பிட்ட பகுதியில் நூல் தட்டி அடையாளம் செய்து கொள்ளவேண்டும். எட்டு கூருக்கப்பட்ட பூஜாம்சத்தின் மேற்புறத்திலுள்ள எட்டாவதான பகுதியில் லிங்கம் போன்ற அடையாளத்தை (க்கோடிட்டுச்) செதுக்கிக்கொள்ள வேண்டும். இதுவே லக்ஷணோத்தார மென்பது. லிங்கம்போல் அடையாளமிடும் இது எல்லா. வருணத்தவருக்கும் பொதுவானது. அல்லது ஒவ்வொரு வருணத்தவருக்கும் தனித்தனியாகவும் லக்ஷணோத்தாரம் பண்ணுவதுண்டு, (1) யவம் எனப்படும் தானியம் போன்ற வடிவமுள்ளதாக லக்ஷணோத்தாரம் பண்ணலாம், (2) பெரிய யானையின் கண் போன்ற வடிவத்திலும், (3) நெல் போன்ற வடிவத்திலும், (4) இருகையும் கூப்பின நிலையில் தோன்றும் அடையாளம் போலவும் லக்ஷணோத்தாரம் செய்யலாம். இந்த நான்கு வகையும் முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவர்கட்கும் ஏற்றதாம். (8)

ஏவம் லக்ஷணமுத்³த்⁴ருத்ய மணிரேகாமதோ⁴முகீம்

ஷட³ம்ஶாயாமமாலிகே²த்

ஏவம் லக்ஷணபார்ஶ்வஸ்தே² ச பரிதி⁴-

ரேகா²த்³வயம் ததா²பயேத் ।

ஊர்த்⁴வாக்³ரௌ த்ரைகோஷ்ட²ம் ஸ்யாத் கோ-

ஷ்டா²தி³வ்யக்தமாஶ்ரயேத்

இவ்வாறாக "லக்ஷணோத்தாரம்" செய்தபின்பு, அந்த லக்ஷணத்தின் அடிப்புறத்திருந்து கீழ் நோக்கியவாறாக ஒரு ரேகை (கோடு) வரைய வேண்டும். இது லக்ஷணோத்தாரத்திற்கென வகுக்கப்பட்டப்பகுதியில் (பூஜாம்சத்தின் மூன்றில் இரண்டு பாகம் உயரத்தில்) ஏற்கெனவே எட்டு கூறாகச் செய்யப்பட்டதில் அடிப்புறத்தில் இரண்டு பாகம் நீக்கி, மற்ற ஆறு பாகம் வரை செலுத்த வேண்டியதாகும். இதுவே "மணிரேகை" என்று வழங்கப்படும். மற்றும், லக்ஷணத்தின் இரு புறங்களிலும் இரண்டு ரேகைகள் "மணிரேகை"யைப் போலவே கீழ் நோக்கிச் செல்லுமாறு வரையப்படவேண்டும். ஆனால் இவை மணிரேகை போல் ஆறு பாகம் வரை செல்லக் கூடாது. 5-வது பாகத்தில் பாதியளவு சென்று முடிந்துவிடவேண்டும். நாலரை பாகங்கள் வரை கீழ் நோக்கி வரவேண்டுமென்றபடி. பிறகு மேல் நோக்கியவாறு செல்லும் ருது ஸூத்திரங்களை வரைய வேண்டும். இவ்வாறு ருது ஸூத்திரங்களை வரைவதால் உண்டாகும் கட்டங்களில் அவ்வோ தெய்வங்களை ஆவாஹநம் செய்து பூஜிக்க வேண்டியிருப்பதனால் இவை "த்ரிகோஷ்டங்கள்" எனப்படும். பிறகு மணிரேகையின் இருபுறங்களிலும் செதுக்கப்பெற்றுக் கீழ் நாலரை பாகம்வரை வந்து முடிந்த அவ்விரண்டு ரேகைகளையும் பின்புறத்தில் கொண்டுபோய் ஒன்றுகூடுமாறு சேர்த்துவிடவேண்டும். அந்தந்த ரேகைகளின் "கர்ணம்" செல்லும் வழியில் அவ்விரு ரேகைகளையும் பின்புறத்தில் ஒன்றுவது ரேகையின் முடிவில் ஒன்றோடொன்று சேர்த்துவிட வேண்டும்.

तत्पार्श्वसूत्रकं सार्धमणिव-
स्त्रेण षष्ठेन योजयेत् ॥ ९ ॥

विस्तारोऽयमधमलक्षणे द्वियवं त-
स्तस्मात्पादवृद्ध्योर्ध्वतस्ता
एवं चतुर्यवान्तं स्यात् मणिरेखा
तत्रापि भेदास्तु नव वै ।
एवं त्रिकत्रिकाद्युत्तमादि
भेदाः क्रमाद्भवन्ति

குறிப்பு: இங்கு கூறப்பட்ட விஷ்வஸிரா ஸூத்திரமும் ருதுஸூத்திரங்களும் வரையப்பட வேண்டிய முறை தெளிவாக விளங்கவில்லை. அதைப் பிறகு விளக்குவோம். (9)

இந்தச் சுலோகத்தில் மணிரேகையையும் அதன் இரு புறங்களி லும் செல்லும் இரண்டு ரேகைகளையும் பொறிக்க வேண்டிய அளவு கூறப்படுகின்றது. உத்தமம்—மத்யமம்-அதமம்—என மூவகைப்படும் இந்த "லக்ஷணம்." அததற்கேற்றாற்போல் ரேகைகளின் அகலமும் ஆழமும் மாறுபடும். இரண்டு யவம் அகலமுள்ளதாக மணிரேகை செதுக்கப்படவேண்டும் அதமலக்ஷணத்தில். கால் யவம் அகலம் சேர்த்து அடுத்த அளவும், மேலும் கால் யவம் கூட்டி அதற்கடுத்த அளவும், இவ்வாறே நான்கு யவம் அகலம் வரை மணிரேகையின் அகலத்தைக் கால் கால் பங்கு உயர்த்திக்கொண்டே போகவேண்டும். ஆக ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன. இவைகளில் மும்மூன்று அளவுகள் முறையே உத்தமம்—மத்யமம்—அதமம் ஆகிய லக்ஷணங் களுக்கேற்றவை. மணிரேகையின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு ரேகைகளின் அகலம், அவ்வோ மணிரேகையின் அளவில் பாதி யளவு இருக்கவேண்டும்.

குறிப்பு:— "ஸமேத்ராத்யாஸ்வாதம் வா நதாயத- ஸேதம் கரயேத்" (காச்யபீயம் 49—163) என்னும் சுலோ கத்தின்படி மணிரேகையின் ஆழம் அதன் அகலத்திற்குச் சரி

𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌪𑌾𑌣𑌿𑌶𑌿𑌵𑌶𑍍𑌚

𑌅𑌂𑌶𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌦𑍈𑌵𑌤𑌾𑌃 ॥ ௰ ॥

𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍋 𑌨𑌾𑌗𑌰𑌲𑌿𑌙𑍍𑌗𑍇

𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌕𑍃𑌤𑍇 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑍇 ।

𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌵𑍇𑌦𑌭𑌾𑌗𑌾𑌂𑌶𑍍𑌚

𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌧𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௧௧ ॥

யாக இருக்கவேண்டும் என்று அறியப்படுகின்றது. இங்கு அதன் ஆழம் கூறப்படாமையின் அதையே வைத்துக்கொள்ள வேண்டும். இங்கு 'காச்சியபீயத்தில், மணிரேகை என்பது இருபுறங்களிலும் உள்ள ரேகைகளாகவும், நடுவிலுள்ளது நாளமெனவும் கூறப்படுகின்றது.

லக்ஷணத்தின் கீழ் வலதுபுறமும், இடதுபுறமும், மத்தியிலும் கீழ் நோக்கிச்செல்லும் மூன்று ரேகைகளுக்கும் முறையே, நான்முகனும், விஷ்ணுவும், சிவனும் தேவதைகள். சிவலிங்கத்தில், ஸமசதுரம், எண்கோணம், வட்டவடிவம்—என மூன்று அமைப்பாகக் காணப்படும் அம்சங்களே அவற்றின் தேவதைகளென்றவாறு. (10)

இனி இருபத்தாறு சுலோகங்களால், நாகர—த்ராவிட—வேஸர லிங்கங்களின் லக்ஷணோத்தாரத்தில் அறியவேண்டிய சில விசேஷங்கள் கூறப்படுகின்றன. முதலில் நாகர லிங்கத்தின் விஷயம் பேசப்படுகின்றது. லக்ஷணோத்தாரம் உத்தமம்—மத்யமம்—அதமம்—என்றிவ்வாறு பிரிக்கப்படுவதற்கேற்ப, நாகர லிங்கத்தின் சிவாம்சத்தின் உயரத்தைப் பதினாறு கூறாக்கி, மேற்புறத்தில் ஆறு—ஐந்து—நான்கு பகுதிகளை விலக்கி, கீழுள்ள பாகத்தில் லக்ஷணோத்தாரம் செய்யவேண்டும். அப்போது பத்து, பதினொரு, பன்னிரண்டு பாகங்கள் லக்ஷணோத்தாரத்திற்காக அமைகின்றனவல்லவா? இவை முறையே உத்தமம், மத்யமம், அதமமென அறியப்பட வேண்டும். (11)

ஏவம் த்ரிதோச்ச்ரயம்
ஜ்ஞாத்வா ச த்ர்யம்ஶகாம்ஸ்து ஸலிங்கேஷு |
விஷ்ண்வம்ஶாதி ப்ரஹ்மபாகே ச
ஸூத்ரே த்வே லம்பயேத் பார்ஶ்வயோ: ॥ ௧௨ ॥

ப்ருஷ்டே தயோர்யுதி: ஸ்யா-
திதி ப்ரோக்தம் ... |
உத்தமமத்யமாதமம்
பாகேஷு யுதிஸ்தயோ: ப்ருஷ்டே ॥ ௧௩ ॥

ப்ருஷ்டே ...
... |

இவ்வாறு மூன்று வகையான உயரத்தினளவை அறிந்து கொண்டு எல்லா லிங்கங்களிலும் மூன்று பாகமாக சிவாம்சத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, விஷ்ணுவின் அம்சம். பிரமனின் அம்சம்— எனப்படும் இரண்டு ஸூத்திரங்களையும் இரு புறங்களிலும் தொங்கவிட வேண்டும். (12)

அவ்விரண்டு ரேகைகளும் லிங்கத்தின் பின்புறத்தில் ஒன்று சேர வேண்டுமென்று கூறப்பட்டதல்லவா? அதிலும் கீழ்க் கூறப்பட்ட 'உத்தம மத்யமாதம' அளவுகள் மனதில் கொள்ளப்பட வேண்டும். அவற்றுள் அதம பக்ஷத்தில், அவ்விரண்டு ஸூத்திரங்களும் பின் புறத்தில் ஒன்று சேருமிடம் முறையே நான்காவது, மூன்றாவது, இரண்டாவது பாகங்களில் அமைய வேண்டும். மத்யமத்திலானால், முறையே, ஐந்தாவது, நான்காவது, மூன்றாவது அம்சங்களில் அவ் விரண்டு ஸூத்திரங்களும் பின்புறத்தில் சேரவேண்டும். (13)

உத்தமத்திலானால், அதே ஸூத்திரங்கள் முறையே ஆறு, ஐந்து, மூன்றும் அம்சங்களில் சேர வேண்டும். அவற்றுள், ஒரு

ஶேஷா ஶ்ரீவத்ஸகாம்ஶம்
த்ரிபாம்ஶம் ஸூத்ரவிஷ்கம்பம் ॥ ௧௪ ॥

யாவத்யோ விஷ்ணவம்ஶம் ப்ரோக்தோத்ஸேதே நயேத்தத் ஸமம் ।
ஸமம் நாகரலிங்கே ஸூத்ரம் ஸம்யக்ப்ரயோதிதம் ॥ ௧௫ ॥

பாதோநம் வாம்ஶமர்தம் வா ப்ரஹ்மஸூத்ரவிஸ்தாரதா ।
ஸவிஷ்ணவம்ஶாவதிர் ப்ரஹ்மஸூத்ரஸ்ய து ஸ்திதிஃ ॥

ததர்தம் பார்ஶ்வஸூத்ரஸ்ய வ்யாஸோ ஸ்யாத் ஸமந்ததஃ ।
ததா த்ராவிடலிங்கேஷு ப்ரஹ்மாம்ஶே க்ரமேண து ॥

அம்சம் கண்டம் (கழுத்து); ஸூத்திரத்தின் அகலம் ஒரு அம்சத்தின் மூன்றில் இரண்டு மடங்கு. (14)

அந்த ஸூத்திரத்தை, அதற்கெனக் கூறப்பட்ட உயரத்தில் விஷ்ணுபாகம் வரை கீழ் நோக்கிச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது ஏற்றத் தாழ்வில்லாமல், சமமாக ரேகையை இழுக்க வேண்டும். இவ்வாறு நாகரலிங்கத்துக்கான ஸூத்திரம் மயனால் நன்கு கூறப்பட்டது. பிரம்ம ஸூத்திரத்தின் அகலம், ஒரு அம்சத்தில் கால் பங்குகுறைந்தது (அதாவது, முக்கால் அம்சம்), அல்லது அரைபாக அளவு இருக்கலாம். இந்த பிரம்ம ஸூத்திரம், விஷ்ணு பாகம் வரை தொங்க வேண்டும். (16)

பிரம்மஸூத்திரத்தின் அகலத்தின் பாதியளவு பக்க ஸூத்திரங்களின் அகலம் அமைய வேண்டும்.

இனி திராவிட லிங்கத்தின் விஷயம் கூறப்படுகிறது. இதில் லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரம் பதினைந்து கூறாக்கப் பட வேண்டும். அதில், முறையே, ஒன்பது, பத்து, பதினொரு பாகங்கள் உயரமுள்ளதாக லக்ஷணோத்தாரம் செய்யப்பட வேண்டும். இம் மூன்றும் முறையே, அதம, மத்யம, உத்தம பக்ஷம் எனப்படும். (17)

நவஷட்பஞ்சபாகேஷு
 ஹீநாக்ரம் ச விஹாயித: ।
ஸப்தாஷ்டநவபாகேஷு (ஸப்தாஸ்யே? ஸ்வ:)
 க்ரமாத் ஸூத்ரே து லம்பயேத் ॥ ௧௮ ॥

நீசே பார்ஶ்வஸூத்ரயே
 த்வ்யம்ஶ வர்ணஸ்ய ஸூத்ரேஷு ।

குறிப்பு :— இங்கு ஹீநாத்ரம் என்று மூலத்தில் உள்ளது. அது ஹீநாக்ரம் என்று கொள்ளப்பட்டது.

அவற்றில், முறையே லக்ஷணோத்தாரத்தின் மேற் புறத்தில் ஆறு, ஐந்து, நான்கு பாகங்களை ஒதுக்கி விட வேண்டும். பிறகு, ஏழு, எட்டு, ஒன்பது பாகங்களில், இரு புறங்களிலும் முறையே ஸூத்திரங்களைத் தொங்கவிட வேண்டும். (18)

அதாவது, ஒன்பது அம்சங்களில் லக்ஷணோத்தாரம் செய்யும் பக்ஷத்தில் கீழ் இரண்டு அம்சத்தைக் குறைத்து, எஞ்சிய ஏழு பாகங்களில் பக்க ஸூத்திரங்களைத் தொங்க விட வேண்டும். பத்து அம்சங்களில் லக்ஷணோத்தாரம் பண்ணும் பக்ஷத்தில், அடியில் இரண்டு அம்சங்களை நீக்கி, எட்டு அம்சங்களில் ஸூத்திரங்களைத் தொங்க விட வேண்டும். பதினோரம்சங்களில் லக்ஷணோத்தாரம் செய்யும் பக்ஷத்தில், அவ்வாறே அடியில் இரண்டு அம்சங்களை நீக்கி, நின்ற ஒன்பது அம்சங்களில் ஸூத்திரங்களைத் தொங்க விட வேண்டும். இவ்வாறு லக்ஷணோத்தாரத்துக்காக முதலில் கூறப்பட்ட மூன்று வகைகளுக்கு முறையே மூன்று முறைகள் கூறப்பட்டன.

இனி, திராவிட லிங்கத்தில், லக்ஷணோத்தாரத்தில் பக்க ஸூத்திரங்கள் இரண்டும் பின்புறம் ஒன்று சேருவதற்கான அளவுகள் கூறப்படுகின்றன. இதிலும் மும்மூன்றாக அளவுகள் கொடுக்கப்பட்டிருப்பதால் ஏற்கெனவே கூறப்பட்டுள்ள உத்தம, மத்யம, அதம விபாகத்தை நன்கு மனதில் பதியவைத்துக் கொண்டு இவற்றைத்

𑌅𑌧𑍋 𑌸𑍍𑌰𑌾𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍇 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇
𑌸𑌲𑍇𑌖𑍇𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑍇 ॥ ௧௯ ॥

𑌯𑌾𑌵𑌤𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌸𑍂𑌤𑍍𑌰(𑌸𑍂𑌤𑍍𑌰 ? 𑌤𑍍𑌰)
𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑌾𑌰𑍍𑌧𑌤𑌃 𑌸𑌮𑌃 ।
𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌪𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌵𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌨𑍇 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌤𑍍 ॥ ௨௰ ॥

𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌸𑍍𑌯 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑍋 𑌦𑌶𑌾𑌂𑌶𑌕𑌃 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌂𑌶𑌸𑍍𑌯 𑌚 𑌤𑌤𑍍𑌭𑌾𑌗𑌾𑌨𑍍 𑌸𑌾𑌧𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌾𑌨𑍍 ॥ ௨௧ ॥

தெரிந்துகொள்ள வேண்டும். முதலில், அதம பக்ஷத்தில், கீழி ருந்து நான்கு, மூன்று, இரண்டாவது அம்சங்களில் முறையே பின் புறத்தில் ஸூத்திரங்கள் சேர வேண்டும். மத்யம பக்ஷத்தில், கீழி ருந்து ஐந்து, நான்கு, மூன்றாவது அம்சங்களில் முறையே ஸூத்தி ரங்கள் பின்புறம் சேர வேண்டும். உத்தம பக்ஷத்தில், கீழிருந்து, ஆறு, ஐந்து, நான்காவது பாகங்களில் முறையே பின்புறத்தில் பக்க ஸூத்திரங்கள் சேர வேண்டும். (19)

குறிப்பு :— உத்தம, மத்யம, அதம பக்ஷங்கள் ஒவ்வொன்றி லும் தனித்தனியே மும்மூன்று அளவுகள் தரப்பட்டதனால் அவற் றுள்ளும் உட்பிரிவாக உத்தம, மத்யம, அதம பக்ஷங்கள் கொள் ளப்பட வேண்டும். (உத்தமோத்தமம், அதமாதமம் முதலி யவை).

ஸூத்திரத்தின் அகலம் அந்தந்த பக்ஷத்தில் கூறப்பட்ட ஒரு அம்சத்தில் பாதியளவு இருக்க வேண்டும். பக்க ஸூத் திரங்களின் அகலமோ வெனில், மேற்கூறப்பட்ட பிரம்ம ஸூத் திரத்தின் அகலத்தில் பாதி யளவே இருக்க வேண்டும். அவற் றின் ஆழமும் அகலத்திற்குச் சம அளவுடையதாக இருக்க வேண்டும் (20)

இதிலேயே மற்றொரு வகை கூறப்படுகிறது. லிங்கத்தில் பூஜாம் சத்தின் உயரத்தைப் பதினறு கூறுக்க வேண்டும். அதில், மேல்

ஊர்த்வாக்ராகார ஶாலஸ்ய பார்ஶ்வமத்யத்ரயம் த்யஜேத் |
த்ர்யம்ஶம் விஹாய மத்யஸ்தே யாம்ஶேऽத்யர்த்ததயோர்பவேத் ||

அத வா ஷோடஶாம்ஶேஷ்வதோ
பாகம் வேதாம்ஶ முத்ஸ்ருஜேத் |
த்ர்யம்ஶே மத்யஸ்தே பாகாம்ஶேஷு
பூர்வவத் ஸூத்ரகல்பனா || ௨௬ ||
இத்தம் த்ராவிடலிங்கஸ்ய லக்ஷணோத்தாரணம் ஸ்ம்ருதம் |
அத வேஸர லிங்கஸ்ய ஶிவாம்ஶோ ஶிவோத்ருதே ||

நான்கு அம்சங்களையும், கீழ் இரண்டு அம்சங்களையும் கழித்து நடுவில் நின்ற பத்து அம்சங்களில் லக்ஷணோத்தாரம் செய்யவேண்டும்.

மொட்டு போன்ற லக்ஷணத்தின் வடிவத்திலிருந்து இரு புறங்களிலும் தொங்கவிடப்படும் இரண்டு பக்க ஸூத்திரங்களும் முறையே பின் புறத்தில் இரண்டு பாகங்களைக் கடந்து ஒன்று சேரவேண்டும்.

மற்றொரு முறையும் கூறப் படுகின்றது. லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினாறு கூறாகச் செய்து கொள்ள வேண்டும். மேற்புறத்தில் நான்கு பாகமும் கீழே ஒரு பாகமும் ஒதுக்கிவிட்டு, மற்ற பாகத்தில் லக்ஷணோத்தாரம் பண்ணவேண்டும். பதினொரு பாகங்களில் ஸூத்திரத்தைத் தொங்க விட வேண்டும். பக்க ஸூத்திரங்களைப் பின்புறத்தில் ஒன்று சேர்க்கும் வகைகள் யாவும் முன் போலவே கண்டு கொள்ள வேண்டும்.

இவ்வாறு திராவிட லிங்கத்தின் லக்ஷணோத்தாரம் செய்யும் வகை விளக்கிக் கூறப்பட்டது. (234)

இனி வேஸர லிங்கத்தின் லக்ஷணோத்தாரம் விளக்கப் படுகின்றது. இதில் சிவாம்சத்தின் உயரத்தைப் பதினைந்து கூறாக்கிக் கொள்ள வேண்டும். இதில் பத்து அம்சங்களில் நாளத்தின் (லக்ஷ

𑌨𑌾𑌳𑌾𑌯𑌾𑌮𑍋 𑌦𑌶𑌾𑌂𑌶𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌂𑌶𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌂𑌹𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂
𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌽𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑌾𑌂𑌶𑌰𑍇𑌖𑌕𑌃 ॥ ௨௫ ॥

𑌤𑌯𑍋𑌰𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑌨𑍍𑌧𑍇 𑌵𑍈 𑌤𑍍𑌰𑌿𑌵𑍇𑌦𑍇
𑌵𑌿𑌷𑍍𑌕𑌮𑍍𑌭𑌃 𑌵𑍇𑌦𑌬𑌾𑌣𑌾𑌂𑌶𑌕𑌃 ।

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌸𑌕𑌲𑌾𑌖𑍍𑌯𑌂 𑌤𑍁
𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௨௬ ॥

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌾𑌃 𑌵𑍇𑌦𑍍𑌯𑌂𑌶𑍋
𑌨𑌾𑌳𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌧𑍋𑌽𑌂𑌶𑌃 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑍇 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌿-
𑌭𑌾𑌗𑍇𑌷𑍁 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌯𑍋𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑌃 ॥ ௨௭ ॥

𑌶𑍍𑌰𑍀𑌤𑌾𑌂𑌶𑍇 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌸𑌕𑍍𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌵𑌾 𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑌃 ।

ணத்தின் அடியில் கீழ் நோக்கிச் செல்லும் ரேகை) நீளம் அமைக்க வேண்டும். இரு புறங்களிலும் செல்லும் பக்க சூத்திரங்களை எட்டாவது பாகம் முதல் இழுத்துப் பின் புறம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். பின்புறம்— ஐந்து, நான்கு, மூன்றாவது பாகங்களில் அவற்றைச் சேர்க்க வேண்டும். இது உத்தமம். அவற்றின் சகலம், சிவாம்சத்தின் பதினாறிலொரு பங்காக இருக்கும். (25)

இனி வேசர லிங்கத்தில் மத்யமமான லக்ஷணத்தைத்தாரம் கூறப் படுகின்றது. லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தை எட்டு கூறாக்கிக் கொள்ள வேண்டுமிதற்கு. அவற்றில் மேற்புறம் மூன்று பாகங்கள் ஒதுக்கப் படவேண்டும். பிறகு நான்கு பாகங்கள் நாளம் இருக்கும். அடியில் ஒரு அம்சம் கழிக்கப் படவேண்டும். மேல் மூன்று பாகங்களிலிருந்து கீழ் நோக்கியவாறு பக்க ஸூத்திரங்களைத் தொங்க

𑌣𑌾𑌂𑌶𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌵𑍇𑌸𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑍇 ॥ ௨௮ ॥

𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌵𑍇𑌸𑌰𑌸𑍍𑌯𑌾𑌥 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌵𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑍇 ।
𑌅𑌧𑍋𑌂𑌽𑌶𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑌂𑌶𑌦𑍍𑌵𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑌯𑍇𑌨𑍍𑌨𑌵𑌾𑌂𑌶𑌕𑍇 ॥
𑌸𑌂𑌭𑍂𑌤𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑍇𑌯𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍇𑌵 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌿𑌤𑍇
𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌯 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌪𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰-
[𑌯𑍋𑌃 ॥ ௨௯ ॥

𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌵𑍇𑌸𑌰𑍇 𑌚𑍈𑌵𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌦𑍍𑌧𑌾𑌰𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।

𑌛𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑍇
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌕𑍍𑌷𑌵𑌤𑍍 ।

விட வேண்டும். பின்புறம் மூன்று அல்லது இரண்டாவது பாகங்களில் அவை ஒன்று கூட வேண்டும். கூறு போடுகின்ற விதத்தில் வரும் ஒரு பாகத்தை மூன்றாக்கி அதில் இரண்டு பாகத்தினளவு ஸூத்திரத்தினகலம் இருக்க வேண்டும். இவ்வாறு வேஸர லிங்கத்துக்கு மத்யமமான லக்ஷணோத்தாரம் கூறப்பட்டது. (28)

இனி வேஸரலிங்கத்தில் கநிஷ்ட மான (அதம மான) பாகமும் கூறப்படுகின்றது. இதில் லிங்கத்தின் சிவபாகத்தின் உயரத்தைப் பன்னிரண்டு கூறாக்கிக்கொள்ள வேண்டும். கீழ்ப்புறத்தில் ஒரு அம்சத்தையும், மேற்புறத்தில் இரண்டு அம்சத்தையும் ஒதுக்கி விட்டு, நடுவில் நின்ற ஒன்பது அம்சங்களில் ஸூத்திரத்தை அமைக்க வேண்டும். இரு பக்கங்களிலும் பக்க ஸூத்திரங்களும் அவற்றைப் பின்புறம் இணைப்பதும் முன் போலவே கண்டு கொள்வது. சிவாம்சத்தின் உயரத்தைப் பதினாறு கூறாகச் செய்துகொள்க. அதில் ஒரு கூற்றின் அகலம் ஸூத்திரத்தில் இருக்கவேண்டும். பக்ஷ ஸூத்திரங்களில் அகலம், பிரம்மஸூத்திரத்தின் அகலத்தின் பாதியளவு இருக்கவேண்டும். இவ்வாறாக கநிஷ்ட வேஸர லிங்கத்திற்கு லக்ஷணோத்தாரம் கூறப்பட்டது. (301)

லிங்கத்தில் சிரோவர்த்தனம் குடைபோன்றதாயிருப்பின் அதில் அமைக்கப் படும் ஸூத்திரத்தின் நுனி (லக்ஷணோத்தாரம்) யானையின்

பாலேந்துஸத்ருஶே ஶீர்ஷே
  ஸூத்ராக்ரம் புத்புதோபமம் ।
ஶீர்ஷே த்ரபுஷாபே து
  ஸூத்ராக்ரம் குக்குடாண்டவத் ॥ ௩௨ ॥

குக்குடாண்டநிபே ஶீர்ஷே
  ஸூத்ராக்ரம் சத்ரவதிஷ்யதே ।
வாசாக்ரே து ஶீர்ஷாந்தம்
  ஸூத்ராக்ரமுதய கல்பயேத் ॥ ௩௩ ॥

கதளீமுகுளாபம் வா ஸரோஜமுகுளாக்ருதி ।
அஶ்வத்தபத்ரஸத்ருஶம் ஸாதாரம் ஹி யவோபமம் ॥ ௩௪ ॥

ஸப்ததஶாம்ஶே து ஶீர்ஷே* பாகம் த்ரேதா விபஜ்ய து ।

கண் போன்று அமைக்கப்பட வேண்டும். லிங்கத்தின் சிரோவர்த்தனம் பிறைச் சந்திரன் வடிவமாயிருப்பின், அதில் அமைக்கப்படும் ஸூத்திரத்தின் நுனி (லக்ஷணோத்தாரம்) நீர்க்குமிழிபோல் அமைய வேண்டும். லிங்கத்தின் உச்சி வெள்ளரிப் பழம் போன்றிருந்தால், அதில் அமைக்கப்படும் ஸூத்திரத்தின் முனை (லக்ஷணோத்தாரம்) கோழிமுட்டைவடிவமாயிருக்கவேண்டும். (32)

லிங்கத்தின் முனை கோழிமுட்டைவடிவமாயிருந்தால், அதில் அமைக்கப்படும் ஸூத்திரத்தின் நுனி (லக்ஷணோத்தாரம்) குடை போன்றிருக்க வேண்டும். (32½)

இனி லிங்கங்களுக் கெல்லாம் பொதுவாக லக்ஷணோத்தார ஸூத்திரத்தின் நுனி இருக்க வேண்டிய வகைகள் சில கூறப்படுகின்றன. வாழைப்பூ போன்றும், தாமரை மொட்டு போன்றும், அரசமரத்தின் இலைபோன்றும், யவம் (ஒரு வகை தானியம்) போன்றும் இது இருக்கலாம். (34)

லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினேழு கூறாக்கி, அதில் ஒரு கூறை மூன்றாகப் பிரித்து, அதில் இரண்டு பாக அளவு

* ஶே என்றிருத்தல் தகும்.

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௩௫ ॥
†𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌵𑍇𑌸𑌰𑌸𑍍𑌯𑍈𑌵𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌦𑍍𑌧𑌾𑌰 𑌈𑌰𑌿𑌤𑌃 |

𑌅𑌥 𑌮𑍁𑌖𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍍

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑍇𑌷𑍁 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑍇 𑌦𑌶𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௩௬ ॥

𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍌 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍈𑌸𑍍𑌤𑍁 𑌭𑌾𑌗𑍈𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍍𑌰𑍀𑌵𑌾 𑌦𑍍𑌵𑌯𑌂 |
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌕𑍁𑌟𑌂 𑌭𑌾𑌗𑌯𑍁𑌗𑍍𑌮𑌤𑌃 ॥ ௩௭ ॥

𑌭𑌾𑌗𑍇𑌨 𑌮𑍁𑌖𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌂𑌶𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌤𑍍 |
𑌲𑌲𑌾𑌟𑌕𑌣𑍍𑌠𑌭𑍍𑌰𑍂𑌨𑍇𑌤𑍍𑌰𑌘𑍍𑌰𑌾𑌣𑌗𑌣𑍍𑌡𑌮𑍁𑌖𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ ௩௮ ॥

மத்ய ஸூத்திரத்தின் அகலம் அமைக்கப்பட வேண்டும். பக்க ஸூத்திரங்களிரண்டுக்கும் மத்ய ஸூத்திரத்தின் அகலத்தினளவில் பாதியளவு அகலம் அமைய வேண்டும். இவ்வாறு கநிஷ்ட வேஸர லிங்கத்திற்கு லக்ஷணோத்தாரம் கூறப்பட்டது. (35½)

* முகலிங்கம்.

* கீழ்க் கூறப்பட்ட அவ்யக்த லிங்கங்களில், சிவாம்சத்தைப் பத்துக் கூறாக்கிக் கொள்ளவேண்டும். அதில் முகம் போன்ற வடிவத்தை அமைக்கவேண்டும். மேற்படி பத்துக் கூறுகளில் இரண்டு கூறு அளவு தோள்; மற்றும் இரண்டு கூறு அளவு கழுத்து: அடுத்த மூன்று கூறுகளில் முகம். அடுத்த ஒரு கூறில் உஷ்ணீஷம் (தலைப்பாகை.) அதன் மேல் இரண்டு கூறுகளில் மகுடம். இவ்வாறான முகத்தின் அகலம் ஒரு அம்சமே (அதாவது பத்தில் ஒரு பங்கு) அமையவேண்டும். நெற்றி, கழுத்து, புருவங்கள், கண்கள், நாசி, கன்னங்கள், முகம் இவற்றை ஸகல பிம்பத்தில் செய்வது போன்றே,

---

† 31வது சுலோகத்தின் முற்பாதியே மீண்டும் இங்கு இடம் பெற்றுள்ளது. பொருளில் வேறுபாடில்லை.

* லிங்கத்தின் பூஜாம்சத்தில் முகம் போன்ற வடிவத்தை அமைப்பதனால் அதற்கு முகலிங்கம் எனப் பெயர் வழங்கும்.

அதாநந்தரம் ப்ரவக்ஷ்யாமி முகலிங்கவிஶேஷகம் ப்ருதக் |
*ஸுவக்த்ரம் சதுர்வக்த்ரம் க்ராமாதிஷ்வேவ பத்தநேஷு ॥

த்விவக்த்ரம் ஶைலகாநநே பரராஷ்ட்ராதிகேஷ்வபி |
ஸ்தாபயேத் தத்ஸ்வமாஹாத்ம்யாத் விநாஶயதி ஶத்ருகான் ॥ ௪௰ ॥

சதுஸ்த்ர்யேகாநநம் ஸம்பத்ப்ரதம் பஞ்சாஸ்யம் அபிசாரகே |
த்விவக்த்ரம் சாரிநாஶாய ஸ்தாப்யம் ஶைலவநாதிஷு ॥ ௪௧ ॥

மாநம், உன்மானம் முதலிய அளவுகளை எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும். (38½)

இனி, முகலிங்கங்களில் சில விசேஷங்கள் கூறப்படுகின்றன. ஒரு முகம் உள்ள லிங்கம், அல்லது நான்கு முகங்கள் உடைய முக லிங்கத்தை, கிராமங்கள், பட்டணங்கள் இவற்றில் வைக்கலாம். (39)

இரண்டு முகம் உடைய முகலிங்கத்தை மலை, காடு, பகைவர்களின் ராஜ்யங்களின் எல்லை இவ்விடங்களில் ஸ்தாபிக்க வேண்டும். அது, தனது மகிமையினால் பகைவர்களை அழித்துவிடும். (40)

நான்கு, மூன்று, ஒரு முகங்களை யுடைய லிங்கங்கள் செல்வம் பயப்பன; ஐந்து முகம் உள்ள லிங்கம் அபிசாரத்திற்கு (ஏவல், சூனியம் முதலியவை) ஏற்றது. இரண்டு முகங்கள் உள்ள லிங்கம் பகைவர்களுக்கு அழிவைத் தரும்: அதனைக் காடு, மலை முதலிய இடங்களில் ஸ்தாபிக்க வேண்டும். (41)

---

* இங்கு ஸவக்த்ரம் என்று இருத்தல் தகும்; அவ்வாறிருந்தால் சுலோகம் கூடாது; ஏகவக்த்ரம் என்று இருந்தால் சரியாகிவிடும். இரண்டுமில்லாமல் மூலத்தில் ஸுவக்த்ரம் என்று உளது; ஆயினும், முந்திய பாடத்தைக் கொண்டே பொருள் கூறப்பட்டது.

सर्वेषां मुखलिङ्गानां निर्गमं स्यात् पृथक् पृथक् |
प्रविष्टा स्कन्धाकारयुक्ता विष्णुभागोपरिस्थिता ||४२||

हस्तादि पञ्चहस्तान्तं मुखलिङ्गं प्रकल्पयेत् |
अतः परं न कर्तव्यं मुखलिङ्गं शुभैषिणा ||४३||

पूजांशार्धे त्रिभागैकं
मानं वा स्फाटिके मुखम् |
समं त्रिपादमर्धं वा
पूजांशात्तस्य विस्तृतिः ||४४||

सधारं वाथ वृत्तं वा
लिङ्गं स्यात् स्फाटिकं शुभम् |
शिरोवर्तनं प्राग्वत्
पूर्ववत्तच्च कारयेत् ||४५||

எல்லா வகையான முகலிங்கங்களிலும் ஒவ்வொரு முகமும் ஒன்றுடன் ஒன்று சேராமல் தனித்தனியே கிளம்பி நிற்க வேண்டும். (நிர்கம: -என்பது இடைவெளி என்றும் பொருள்படும்.) அம் முகங்களின் கழுத்து விஷ்ணுபாகத்தின் மேல், அதனுள் சிறிது நுழைந்து நிற்குமாறு பொறிக்கப்படவேண்டும் (42)

ஒரு முழம் முதல் ஐந்து முழம் வரை முகலிங்கங்களின் உயரம் இருக்கலாம். இதற்கு மேலும் உயரம் உள்ளவையாக முகலிங்கங்களை அமைப்பது சுபத்தைத் தராது. (43)

இனி, ஸ்படிக லிங்கங்களின் விஷயம் கூறப்படுகின்றது. ஸ்படிக லிங்கத்தில் முகம் அமைப்பதானால், பூஜாம்சத்தில் பாதியளவு, அல்லது மூன்றிலொரு பங்கில் பதிவுள்ளதாக அமைத்தால் போதும். அதன் அகலம், பூஜாம்சத்தின் அகலத்திற்குச் சமமாகவே இருக்கலாம்; அல்லது, அதனில் முக்கால் பங்கோ, பாதியளவோ இருக்கலாம். (44)

இந்த ஸ்படிகலிங்கம் தாரைகளுடனும், அல்லது வட்டவடிவமாகவும் அமைக்கப்படலாம்: சிரோவர்த்தனம் இதற்கு முன் கூறப்பட்ட

ப்ரஹ்மஸூத்ரம் விநாப்யத்ர-
தேஜோத்ரவ்யம் ஸமாஶ்ரிதம் |
ஸ்படிகாதிஶிலாலிங்கம்
ஸ்யாதிஷ்டகாமதோ வரத: || ௪௬ ||

வஜ்ரம் ஶஸ்த்ரம் ஸ்வீகர்தவ்யம் கார்யே தேந ஶாணயா |
தாரணச்சேதநாதௌ து க்ருஷ்ணலோஹஶலாகயா || ௪௭ ||

ஶாணாசூர்ணேந தோயேந யதாயுக்தி ஸமாசரேத் |
ஸ்படிகாஶகலம் வாய தீவ்ரவஹ்நிகரோதகே || ௪௮ ||

விஷ்டாதச்சூர்ணீக்ருத்ய ஶ்லிஷ்டம் கடீக்ருதே |
விந்யஸ்யாங்காரராஶௌ து பாசயேந்மோதகம் யதா |

வாறே செய்யவேண்டும். இதில் பிரம்ம ஸூத்திரத்தை அமைக்க வேண்டியதில்லை. (45)

பிரம்மஸூத்திரம் இல்லாமலே, தேஜஸ்ஸைச் சார்ந்த பொருளாகிய இந்த ஸ்படிகலிங்கம், விரும்பிய வரம் தரவல்லது. ஸ்படிகம் முதலிய சிலைகளால் பிம்பங்கள் சமைக்கும் பொழுது, வஜ்ரத்தை ஆயுதமாகக் கொள்ள வேண்டும்; அந்த வஜ்ரத்தினுல் சாணை பிடித்து, கறுப்பு உலோகத்தினுலான (இரும்பினுலான) சலாகையினுல் சிதைத்தல், வெட்டுதல் போன்ற காரியங்களைச் செய்ய வேண்டும். (46, 47)

சாணைப் பொடியுடன் (மெருகு மணலுடன்) தண்ணீரைக் கலந்து தக்கவாறு தேய்க்க வேண்டும். அல்லது, வேறு விதமாகவும் செய்யலாம் :—

படிகக் கல்லின் துண்டு ஒன்றை நன்ருக எரித்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். பிறகு, அந்தப் பொடியை நீரை விட்டுப் பிசைந்து மாவு போன்ற நிலையில் அதை வாழைப்பட்டையில் வைத்து, நெருப்புத் தணல்கள் மீது வைத்து கொழுக்கட்டையைப் போல் வேக வைக்க வேண்டும். (49)

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌜𑌾𑌤𑍇 𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌚 𑌚𑍂𑌰𑍍𑌣𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌚𑍍𑌚𑍂𑌰𑍍𑌣𑌂 𑌕𑌿𑌂𑌶𑍁𑌕𑌕𑌾𑌷𑍍𑌠𑌫𑌲𑌕𑌾𑌯𑌾𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ ௫௰ ॥

𑌕𑌿𑌂𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌲𑍍𑌲𑌿𑌂𑌗𑌂 𑌤𑍇𑌨 𑌘𑌰𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌾𑌵𑌚𑍍𑌛𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑌾𑌜𑌾𑌲𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ॥ ௫௧ ॥
𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑌂 𑌹𑌿 𑌘𑌰𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 𑌸𑍍𑌫𑌾𑌟𑌿𑌕𑌾𑌦𑌿𑌷𑍁 ।

𑌅𑌥 𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌦𑌿

𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑌂 𑌨𑌾𑌧𑌿𑌰𑍋𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௫௨

அது நன்றாக வெந்த பிறகு, நெருப்புத் தணல் போன்ற நிலையை அடைகின்ற பொழுது அதனை எடுத்து நன்றாகப் பொடி செய்து கொள்ள வேண்டும். அப்பொடியைப் பலாச மரத்தினால் செய்யப்பட்ட பலகையில் கவனத்துடன் சிறிதளவு தூவி, அதனால் அந்த லிங்கத்தைத் தேய்க்க வேண்டும். நன்கு வழவழப்பாக ஆகும் வரை தேய்க்க வேண்டும். பளபளப்பான ஒளி வரும் வரையிலும் தேய்க்க வேண்டும். (50-51)

ஸ்படிகம் முதலியவற்றால் சமைக்கப்படும் லிங்கங்களை இவ்வாறே தேய்த்து உருவாக்க வேண்டும். (51½)

யோனி முதலியவை

லிங்கம் அல்லது பிம்பம் இவற்றின் உயரத்தை ஒரு எண்ணால் பெருக்கி, மற்றொரு எண்ணால் வகுப்பதன் மூலம், யோனி, நக்ஷத்திரம், ஆயம், வ்யயம், அம்சம் முதலியன கிடைக்கும். இதில், மூன்று விதமான அங்குலங்கள் இடம் பெறும். மாநாங்குலம், மாத்ராங்குலம், தேஹலப்தாங்குலம் அல்லது பேராங்குலம் என்பவை.

இவ்வங்குலங்களைக் கணக்கிடும் பொழுது. அதில் *ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கொள்ளக் கூடாது. விக்கிரகங்களில், அவற்றில் உள்ள

---

* ஜாத்யம்சமாவது: அந்தணர் முதலிய நான்கு வருணத்தவர்க்கும் ஏற்றபடி அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுமாறு ஆங்காங்கு கூறப்பட்ட எண்ணிக்கை. அதை இங்கு கூட்டிக்கொள்ளக் கூடாது.

ஸ்வைர்வைஷம்யை ஸ்தைஷம்யை யோந்யாத்யம்
கல்பயேத் ஸ்வேஷ்வேஷ்வபி ஸாங்குலை: ।
லிங்கானாம் சாபி ஶிஷ்டாநாம்
ஜாத்யம்ஶாரோபணம் உச்யதே ॥ ௫௩ ॥

ஶாந்தா வாஞ்சந்தி ஜாத்யம்ஶம்
விஶேஷ்யாம்ஶம் ததுச்ச்ரயே ।
ஷட்ஸப்தத்யம்ஶ விம்ஶாம்ஶ
விஸ்தாராணாம் யதாக்ரமம் ॥ ௫௪ ॥

ஏகைகாம்ஶாரோபணாத் தத்
ஜாத்யம்ஶாரோபணம் மதம் ।

ப்ராஹ்மக்ஷத்ரவிஶோத்ரயம்
த்ரிம்ஶதம்ஶாதிகம் க்ரமாத் ॥ ௫௫ ॥
ஶதாம்ஶாந்தம் விபஜேஜ்யேஷ்ட-
மாநேநோத்ஸேதகே பஞ்சயே: ।

அங்குலத்தையே வைத்துக் கொண்டு யோநி முதலியவற்றைக் கணக்கிட வேண்டும். (52½)

சான்றோர், லிங்கங்களுக்கும் ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கொள்வதை விரும்புகின்றனர். லிங்கத்தின் உயரம் முறையே 84, 62, 24, 16, கூறுக்கப் படவேண்டும். இதில் ஒவ்வொன்றிலும் முறையே அதிகமாக ஒவ்வொரு அம்சம் கூட்டிக் கொள்ளப்பட வேண்டும். இதுவே ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கணக்கிடும் வகையாகும். இங்கு கூறப்பட்ட நான்கு அளவுகளும் முறையே நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவை. (54½)

மற்றொரு முறையும் உண்டு. உத்தேசித்த பிம்பத்தின் உயரத்தை முப்பது கூற்றிலிருந்து நூறு கூறு வரை, பிரித்துக் கொள்ள வேண்டும். இதில் முறையே, அந்தணர் முதலாய நான்கு வருணத்தவர்க்கும் ஒவ்வொரு அம்சத்தைக் கூட்டிக் கணக்கிடுவதால் ஜாத்

உக்தம் விப்ராதிபேதேந
ஜாத்யம்ஶாரோபணம் ஸ்ம்ருதம் ‖ ௫௬ ‖

க்ருஹீதோதயமாநேந
மாநாங்குலவிபாஜிதே |
*வ்ருத்த்யா வாங்குலிவிச்சேதம்
பிந்நாம்ஶாத்யம் ப்ரகல்பயேத் ‖ ௫௭ ‖

மாநப்ரமாணமுக்யாநி
ஷடேதாந்யுக்தாநி ஶாஸ்த்ரத: |

யம்சத்தைக் கூட்டியதாகும். இதில், அந்தணர் முதலியவர்க்கேற்ற அந்தந்த அளவுகளில் ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கணக்கிட வேண்டும். (56)

எடுத்துக் கொள்ளப்பட்ட விக்ரகத்தின் உயரத்தின் அளவு மாநாங்குலத்தால் வகுக்கப்படும்பொழுது, பின்னமாக வரும் அரை, கால் முதலியவற்றை முழு அங்குலமாகச் சேர்த்துக் கணக்கிட வேண்டும். (57)

மாநம், ப்ரமாணம் முதலிய ஆறுவகை அளவுகள் கீழே கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றி, யோனி, வாரம் முதலிய

---

* விருத்தியினாலாவது என்று கூறுவதனால், குறைத்தும் கணக்கிடலாமென்று பெறப்படும்: காச்யபீயத்தில் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. அரைக்கு மேற்பட்டதை ஒன்றாக்கியும், அரைக்குக் குறைந்ததை விட்டு விடுதலும் முறையாம்.

யோகிவாராஷி யட்டகம்

யோஜயே ஶ்லோகம் யதா ॥ ௫௮ ॥

இதி ஶ்ரீஶில்பரத்நே உத்தரபாகே லக்ஷணோத்தாரவிதிர்நாம
த்ருதீயோऽத்யாய: ॥

வற்றை கணக்கிட்டறிய வேண்டும். அவற்றில் கூடாதவற்றை விலக்கி, சுபமானவற்றையே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

சில்பரத்நம் இரண்டாம் பாகத்தில் லக்ஷணோத்தாரத்தைக் கூறும் மூன்றும் அத்தியாயம் முற்றும்.

श्रीः

अथ चतुर्थोऽध्यायः

अथ सकलबिम्बोच्छ्रायः

द्वारोच्छ्रायसमं तद्वा त्रिपादमितं
द्वारोर्ध्वे चोदिते
नवांशेनाष्टांशकेन वा समं
सत्ये त्रिधा द्व्यंशकेन ।
कल्प्यानीत्थमितानि पञ्च* उन्नतबिम्-
बस्यात्र समाश्रये

நான்காம் அத்தியாயம்.

"ஸகல" பிம்பங்களின் உயரம்.

ஸகல பிம்பங்களாவது: அவயவங்கள் தெளிவாகத் தெரியுமாறு சமைக்கப்படும் பிம்பங்கள். இவை கர்ப்பகிருகத்தின் வாயிலின் உயரத்திற்குச் சம அளவுடையனவாகவோ, அல்லது அதில் கால்பங்கு குறைவாகவோ இருக்கலாம். வாயிற்படியின் உயரத்தை ஒன்பதால் வகுத்து, அதில் எட்டுப் பங்கு (அதாவது: வாயிலின் உயரத்தில் 8/9 பங்கு) விக்ரகத்தின் உயரம் அமைக்கலாம். வாயிலின் உயரத்தை மூன்று கூறாக்கி அதில் இரண்டு பங்கும் விக்ரகத்தின் உயரத்தை அமைக்கலாம்.

---

* நான்கு அளவுகளே கூறப்பட்டுள்ளன. ஆனால், "ஐந்து" என்று ஆசிரியர் கூறுவதனால், வழக்கையொட்டி ஒன்று சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பெறப்படும். தொடர்ச்சியிலிருந்து அது, வாயிற்படியின் உயரத்தில் கால் பங்கு கூடியதென்று கிடைக்கும். கீழ் 2-ம் அத்தியாயம் 16-ம் சுலோகத்தைக் காண்க.

[illegible]
... த்ரீணி வா ॥ ௧ ॥

கர்ப்பகேஹே ததோ நவாம்ஶே நவவிபாஜிதே ।
அதவா கர்ப்பகேஹஸ்ய த்ரிநவாம்ஶவிபாஜிதே ॥ ௨ ॥

ஏகாம்ஶாதேகவ்ருத்த்யா து ஸப்தவிம்ஶதியாவதஃ ।
அதவாஷ்டாதஶாம்ஶே து கர்ப்பகேஹவிபாஜிதே ॥ ௩ ॥
தாவதா பிம்பமாநோச்சம் ஏகாம்ஶாதேகவர்த்தநாத் ।

இவ்வாறு மந்திரபிம்பங்களின் உயரம் ஐந்துவகையாகக் கூறப்பட்டது.

மற்றும் மூன்று வகைகளும் இதிலுண்டு. கர்ப்பகிருகத்தின் அகலத்தை, மூன்று, ஐந்து, இரண்டு ஆகிய எண்களால் வகுத்து அவற்றில் முறையே, இரண்டு, மூன்று, ஒரு பாகம் உயரம் உள்ளதாக விக்கிரகங்களை அமைக்கலாம். (1)

கர்ப்பகிருகத்தின் அகலத்தை ஒன்பதால் வகுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஒவ்வொரு அம்சமும் விக்ரகத்தின் உயரத்திற்கேற்ற அளவுகளாகும். (அதாவது, கர்ப்பகிருகத்தின் அகலத்தில் $\frac{1}{9}$, $\frac{2}{9}$, $\frac{3}{9}$,......$\frac{9}{9}$ அல்லது முழுப் பாகம், என ஒன்பது வகை அளவுகள் கிடைக்கும்). மற்றொரு வகை: கர்ப்பகிருகத்தின் அகலத்தை இருபத்தேழால் வகுத்து, முன்போலவே ஒரு அம்சத்திலிருந்து ஆரம்பித்து இருபத்தேழாவது அம்சம் வரை ஒவ்வொன்றையும் விக்கிரகத்தின் அளவாகக் கொள்ளலாம். (அதாவது, $\frac{1}{27}$, $\frac{2}{27}$...$\frac{27}{27}$ அல்லது முழுப்பாகம் என இருபத்தேழு அளவுகள்.) (2½)

மற்றொரு வகை: கர்ப்ப கிருகத்தின் அகலத்தைப் பதினெட்டு கூறுக்கிக் கொள்ள வேண்டும். அதில் ஒரு கூறு விக்கிரகத்தின் உயரத்திற்கு ஒரு அளவாகும். இவ்வாறே ஒன்றுமுதல் பதினெட்டு வரை ஒவ்வொன்றாக ஏற்றிப் பதினெட்டு அளவுகள் கண்டுகொள்ள வேண்டும். (3½)

ஸமத்வாரஸ்ய ஷோடஶம் ஸமமாநவிபாஜிதே ॥ ௪ ॥

த்வாரோச்சஸ்ய அஷ்டதைகஸ்ய உச்ச்ரம் பஞ்சாம்ஶகம் |
மத்யமம் சதுரம்ஶம் ஸ்யாத் த்ரியம்ஶம் ப்ரதிமாதிக: ॥ ௫ ॥

அதமோத்தமயோர் மத்யம் வஸுபாகவிபாஜிதே |
நவதா லக்ஷணோச்சம் ப்ரதிமா க்ல்ப்யதே ॥ ௬ ॥

அதவா த்வாரதைர்க்யம் ஸப்தவிம்ஶதிபாஜிதே |

மற்ெறாரு வகை : கர்ப்பகிரகத்தில் வாயிலின் உயரத்தை எட்டால் வகுத்து அதில் ஐந்து பாகங்கள் விக்கிரகத்தின் உயரமாகக் கொள்ளலாம். இது உத்தமம். அதிலேயே, நான்கு கூறுகள் கொள்வது மத்திமம்; மூன்று கூறுகள் அதமம். (வாயிலின் உயரத்தில் 5/8, 4/8, 3/8 பாகங்கள் முறையே உத்தம, மத்திம, அதம பக்ஷங்களாகும்). இவ்வாறு துவாரமானத்தால் மூன்று அளவுகள் விக்கிரகத்தின் உயரத்துக்குக் கூறப்பட்டன. (5)

இதில் அதமபக்ஷத்தையும் உத்தம பக்ஷத்தையும் எல்லைகளாக வைத்துக் கொண்டு, அவற்றின் இடையிலுள்ள பகுதியை (கர்ப்ப கிருகத்தின் அகலத்தில் கால் பங்கு) எட்டுக் கூறாக்கி ஒவ்வொன்றையும் (கால்பங்கை எட்டுக் கூறாக்கினால் அரைவீசம் கிடைக்கும்.) விக்கிரகத்தின் அளவாகக் கொள்ளலாம். (அதாவது, கர்ப்பகிரகத்தின் அகலத்தில் 12/32 அல்லது 3/8 பங்கான அதமத்திலிருந்து ஆரம்பித்து, 13/32, 14/32,...16/32 அல்லது 4/8 பங்கான மத்திமத்திற்கு வந்து, பின் 17/32...20/32 அல்லது 5/8 பங்கான உத்தமம் வரை என ஒன்பதளவுகள் என்றவாறு). (6)

மற்றுமொரு வகை : கர்ப்பகிருகத்தின் வாயிலின் உயரத்தை இருபத்தேழு கூறுக்கிக் கொள்ள வேண்டும். அதில் ஒவ்வொரு அம்சமாகக் குறைத்துக் கொண்டே வந்து ஒவ்வொன்றையும் பிம்பத்தின் உயரத்துக்கு அளவாகக் கொள்ள. இருபத்தேழு அளவுகள் கிடைக்கும். (7)

ஸைகாம்ஶவிஹீநேந பிம்போச்சம் த்ர்யக்ஷஸேதுக: ।

ஸஸம் ஹி பாஜநேந ஷட்த்ரிம்ஶத்பேதமீரிதம் ।
அதிஷ்டாநகேந ஸஸ தேவாம்ஶஹாநக: ॥ ௮ ॥
பாதஹ்ருஸ்வாதிகேந ஹர்ம்யமேவாக்ரவர்ஜிதம் ।

குறிப்பு :— இங்கு " த்ர்யக்ஷஸேதுக: " என்பது " பீக்ஷஸேதுக: " என்று கொள்ளப்பட்டுப் பொருள் கூறப்பட்டது.

இவ்வாறு கர்ப்பகிருகத்தினுடைய வாயிலின் அளவைக் கொண்டு விக்கிரகத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகைகள் முப்பத்தாறு கூறப்பட்டன.

குறிப்பு :— முப்பத்தாறு வகை என்று கூறுகிறார். இது பொருந்தவில்லை. முதல் சுலோகத்தில் ஐந்து வகைகளும். 4—6 சுலோகங்களில் ஒன்பது வகைகளும், ஏழாவது சுலோகத்தில் இருபத்தேழு வகையும், சொல்லுகிறார். மொத்தம் நாற்பத்தொரு வகையாகிறது. முதல் சுலோகத்தில் கூறப்பட்ட எண்ணிக்கையைக் கொள்ளாது, 4—7 சுலோகங்களில் கூறப்பட்டவை மட்டும் முப்பத்தாறு வகை எனக் கொள்ளப்பட வேண்டும்.

இனி, அதிஷ்டானத்தின் அளவிலிருந்தும் பாதங்களின் அளவிலிருந்தும், வெளியில் தெரியும் விமானத்தின் அளவிலிருந்தும் விக்கிரகத்தின் உயரத்தின் அளவை நிர்ணயிக்கும் வகையை, இவ்வத்தியாயத்திலேயே கீழ் இரண்டாவது-மூன்றாவது சுலோகங்களில் கூறப்பட்டதான கர்ப்பகிருகத்தின் அளவைக் கொண்டு விக்கிரகத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகையைப் போலவே கண்டு கொள்வது,

குறிப்பு :— அதிஷ்டானம் உபபீடத்தின் மேல், ஸ்தம்பத்தின் கீழ் அமைக்கப்படும் பாகம். பாதம் : அதிஷ்டானத்தின் மேல் விமானத்திற்கு ஆதாரமாக, கம்பம் போல் நிற்கும் பகுதி. இது விமானத்தைத் தாங்கி நிற்கும் பகுதியாதலால், மனிதனைத் தாங்கும் கால் போல் " கால் " என்றே வழங்கப்படும் (8½)

𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌨𑌵𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌧𑌾 𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌤𑌃 ॥ ௯ ॥
𑌤𑌾𑌲𑌾𑌦𑌿 𑌦𑌶𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌾𑌲𑌮𑌾𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ।

𑌕𑌰𑍍𑌤𑍃𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌕𑌮𑍍 ॥ ௰ ॥
𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾𑌸𑍍𑌯𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌯𑌜𑌮𑌾𑌨𑌵𑌶𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍇 ॥ ௧௧ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌨𑌵𑌧𑌾 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌭𑌾𑌗𑍈𑌕𑌾𑌂𑌶𑌕𑌵𑍃𑌦𑍍𑌧𑍇𑌨 𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌸𑍁𑌕𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ ௧௨ ॥

இனி ஹஸ்தமாநம் விளக்கப் படுகின்றது. (ஹஸ்தம்—முழம்.) ஒரு முழம் முதல் ஒன்பது முழம் வரை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாகக் கொள்வதனுல், ஹஸ்தமானத்தைக் கொண்டு விக்கிரகத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகை ஒன்பது கிடைக்கும். (9)

ஒரு தாலம் முதல் பத்து தாலம் வரை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாகக் கொள்வதன் மூலம், தால மானத்தால் விக்கிரகத்தின் உயரத்துக்குப் பத்து அளவுகள் கிடைக்கும். (9½)

இனி, கோயில் முதலியவற்றைக் கட்டுவிக்கும் யஜமானனுடைய உயரத்திலிருந்து விக்கிரகத்தின் உயரத்திற்கு அளவெடுக்கும் முறைகள் கூறப்படுகின்றன: யஜமானனுடைய இதயத்தளவு உயரமுள்ளதாக விக்கிரகத்தை அமைக்கலாம்; அவ்வாறே அவனுடைய ஸ்தனங்கள் அளவும், தோள்களளவும், மோவா யளவும், வாயினளவும், நேத்ரஸூத்ரத்தின் (கண்) அளவும், அல்லது. அவனது முழு உயரத்துக்குச் சமமாகவும் விக்கிரகத்தை அமைக்கலாம். (11)

மற்றொரு முறை: யஜமானனுடைய முழு உயரத்தை ஒன்பது கூருக்கி, அதில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாகக் கொள்வதன் மூலம் (ஒன்பதில் ஒரு பங்கிலிருந்து முழு உயரம் வரை) எட்டு அளவுகள் (முழு உயரத்தை நீக்கி) விக்கிரகத்தின் உயரத்திற்குக் கிடைக்கும். (12)

मानाङ्गुलैर्वा मानेन प्रोक्तस्य मात्राङ्गुलेन वा ।
सप्ताङ्गुलं समारभ्य द्विद्व्यङ्गुलिविवर्धनात् ॥ ११ ॥
त्रयोविंशाङ्गुलं यावत्तावद्बिम्बोदयं स्मृतम् ।
विशेषादपि बिम्बानां प्रोक्तानां मानयोगतः
उष्णीषान्तोदयं ज्ञेयं तज्ज्ञैः पादादिकोदयम् ।

अथ बहुबेरे :—

संहोनाद्यास्त्रप्रमाणं वा माननीयाधिकेऽपि वा ॥ १२ ॥

*(त्रिकांशेऽप्यधिकायां हीनायां
तदुत्तमं चाधिकम्
स्पष्टायाश्चान्यद्विष्णुर्वा
विशेषतश्च साङ्गुलैः ॥

மானங்குலம், மாத்ராங்குலம் இவை முன்பே கூறப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு விக்கிரகங்களின் உயரத்தைக் கணக்கிடும் முறை இப்பொழுது கூறப்படுகின்றது. ஏழு அங்குலம் உயரம் கொண்டதாக விக்கிரகங்களை அமைப்பது இவற்றில் முதற்படியாகும். ஏழிலிருந்து இருபத்து மூன்று வரை, இரண்டு இரண்டாக அங்குலங்களைக் கூட்டிக் கொண்டு செல்வதன் மூலம் ஒன்பது அளவுகள் விக்கிரகத்தின் உயரத்துக்குக் கிடைக்கும். (7, 9, 11,...23 அங்குலங்கள்) இங்கு கூறப்பட்ட பலவகையான பிம்பங்களின் உயரமட்டம், உள்ளங்காலிலிருந்து உஷ்ணீஷம் (தலைப்பாகை) வரை உள்ள உயரமாகக் கொள்ளவேண்டும். அதாவது, விக்கிரகத்தின் உயரம் எனக் கொடுக்கப்படும் அளவுகள் பீடம், கிரீடம் முதலியவற்றை விலக்கி இடையிலகப்பட்ட (பாதம் முதல் பாகை வரை) உயரம் என்பது.

இனி, பல விக்கிரகங்கள் இருக்குமிடத்தில், பிரதானமான ஒரு விக்கிரகத்தின் அளவிலிருந்து மற்ற விக்கிரகங்களின் உயரத்தை நிர்ணயிக்கும் வகை கூறப்படுகின்றது.

* இந்த சுலோகம் சரியாக இல்லாமையின் பொருள் தராது விடப்பட்டது.

விஸ்தாரிஷ்ய பணாபூஷாவிஶோபிதம்
ஸாஜ்ஞம் பயிஶ்ருஷிதம்
... ...) ॥ கசு ॥

தயோர்மத்யேऽஷ்டதா ஹ்ருத்வா நவதா ஶக்திதுங்ககம் ।
ஸர்வேஷாமபி பார்ஶ்வாங்கஸ்தஶக்த்யுதயம் ததா ॥ கஎ ॥

பஹுபேரவிதானேது மூலபிம்பம்
ஸமம் த்வாரஸமம் ஶ்ரேயேண காரயேத் ।
பாதாம்ஶவிவ்ருத்த அர்த்தவ்ருத்தம்
பாதோனத்விகுணம் விஸம்ஹாரணக ॥ கஅ ॥

சிவபெருமானுடைய விக்கிரகத்தின் மூக்கு நுனி அளவாவது, தாள் அளவாவது, சக்தியின் உயரத்தை அமைக்கலாம். இவ்விரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள பகுதியை எட்டுக் கூறுக்கி ஒவ்வொரு கூறுகச் சேர்த்துக் கணக்கிட்டுக் கொள்ள, சக்தியின் உயரத்துக்கு ஒன்பது அளவுகள் கிடைக்கும். இது சிவ பெருமானுக்கும் சக்திக்கும் சொல்லப்பட்ட அளவாகும். இது போன்றே, மற்ற எல்லாத் தெய்வங்களின் விக்கிரகங்களின் உயரத்தையும் பக்கங்களில் அல்லது மடியில் உள்ள சக்திகளின் உயரத்தையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

பஹுபேர விதானத்தில் (பல விக்கிரகங்களை அமைத்துப் பூஜிக்கும் முறையில்) மூல விக்கிரகம், கர்ப்பகிருகத்தின் வாயிலுக்குச் சம அளவு உயரமுள்ளதாக இருக்கவேண்டும். கர்ப்பகிருஹ வாயிலின் உயரத்தில் கால்பாகம் கூட்டியும், அல்லது அரைப்பாகம் கூட்டியும் மூல விக்கிரகத்தை அமைக்கலாம். மேலும், கர்ப்பகிருஹ வாயிலின் உயரத்தைப் போல் ஒன்றே முக்கால் பங்கு உயரமாகவும், அல்லது இருமடங்கு உயரமாகவும் மூல விக்கிரஹத்தின் உயரத்தை அமைக்கலாம். (18)

गृहेष्वर्चार्थबिम्बानां मानं मात्राङ्गुलेन तु ।
कर्तव्यमन्यथा चेत्तु वक्तव्यं कर्तृनाशनम् ॥ १९ ॥

साङ्गुलैर्निर्मितं बिम्बं सर्वजात्यर्हकं शुभम् ।
साङ्गुलीरहिते बिम्बे जात्यंशं नाधिरोपयेत् ॥

साङ्गुलाद्यन्यबिम्बेषु सर्वेषामपि हाजिते ।
जात्यंशं रोपयेत्तत्र विप्रजात्यर्हकं पृथक् ॥

विशालायतषष्ठांशे हीनेऽष्टांशसमुन्नते ।
शूद्रजात्यर्हकं बिम्बं

स्यात्कु विवर्णांशिते ॥ २२ ॥

வீடுகளில் அவரவர்கள் தத்தமக்காகவே வழி படுவதற்காகச் செய்து கொள்ளும் விக்கிரகங்களுக்கு, மாத்ராங்குலத்தினலேயே அளவுகள் எடுத்துக் கொள்ளவேண்டும். (மாத்ராங்குலத்தின் விவரம் இந்நூலில் 46-வது பக்கத்தில் காண்க.) வேறு அளவால் செய்தால் யஜமானனுக்கு அழிவு வந்து விடுமென்பர். (19)

அங்குலங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு அளவுகள் எடுத்துப் பண்ணப்படும் விக்கிரகங்களை எல்லா வகுப்பாரும் வாசியில்லாமல் வழிபடலாம். அவை யாவருக்கும் நன்மை பயப்பனவாம். அவ்வாருன விக்கிரகங்களில் "ஜாத்யம்ச"த்தைக் கூட்டிக் கணக்கிடலாகாது. இவ்விஷயம் ஏற்கெனவே முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்டது. (20)

அங்குல அளவை ஆதாரமாகக் கொள்ளாமல் வேறு வகையில் சமைக்கப்பட்ட விக்கிரகங்களில் ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கொண்டே அளவுகள் எடுக்கவேண்டும். அதில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் முறையே அளவுகள் உள்ளன. விக்கிரகத்தின் முழு உயரத்தை, எண்பத்துநான்கு கூறுகவும், அறுபத்திரண்டு கூறுகவும், இருபத்துநான்கு கூறுகவும், பதினாறு கூறுகவும் பிரித்துக்

ஏகாம்ஶாதேகவர்ணம் ச வைஶ்யோ மூல்யம் பிம்பவித்திஷ்யதே ॥
ஷோடஶாம்ஶேஶ்வம்ஶஜாதேர்வர்ஜ்யம் பிம்பம் ஸம்ப்ராப்ய ஸம்ஸ்கதே

ஏவம் ஜாத்யம்ஶஸம்யோஜ்ய பிம்பமானேன ஸங்க்யயா ।
யோந்யாதீனி ஸமாநீய விதிவத்ஸாவதானத: ॥ ௨௪ ॥

நூதனாகாரப்ராஸாதே விஶேஷ: கத்யதேऽத்ர ஹி ।
யத்யோனிர்னிலயாகாரம் தத்யோநிஸ்ஸ்யாச்ச தேவதா ॥

கொள்ளவேண்டும். இவற்றில் ஒவ்வொன்றிலும் அவ்வோ வகையில் கிடைத்த ஒவ்வொரு அம்சத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். அப்போது எண்பத்துநான்கு பாகங்கள் எண்பத்தைந்தாகும். அறுபத்திரண்டு பாகங்கள் அறுபத்துமூன்றாகும். இருபத்து நான்கு பாகங்கள் இருபத்தைந்தாகவும், பதினாறு பாகங்கள் பதினேழாகவும் மாறும். இந்த நான்கு வகைகளும் முறையே அந்தணர் முதலிய நால்வகை வருணத்தவருக்கும் ஏற்றவை. (21, 22, 23)

இவ்வாறாக ஜாத்யம்சத்தைக் கூட்டி, அதன் மேல் கிடைத்த பிம்பமானத்தின் எண்ணிக்கையை ஆதாரமாகக் கொண்டு, யோனி-நக்ஷத்திரம் முதலியவற்றை அதற்கு விதிக்கப்பட்ட வழியில் கவனத்துடன் கணக்கிட்டுப் பார்த்து, அவற்றில் சுபமானவற்றை ஏற்றுக் கொண்டு அசுபமானவற்றை விலக்கவேண்டும். (24)

இங்கு ஒரு விசேஷம் மட்டும் விளக்கக் கூறப்படுகின்றது. புதிதாக ஒரு வீடு அல்லது கோயில் கட்டுவதாக இருந்தால் அதற்கு இவ்வழியிலேயே யோனி முதலியவற்றைக் கணக்கெடுத்து, சுபமான யோனியை ஏற்றுக்கொள்ளவேண்டும். அசுபமான யோனியை விலக்கவேண்டும். அதே க்ருஹத்தில் அல்லது ஆலயத்தில் வைத்துப் பூஜிப்பதற்காகப் பண்ணப்படும் விக்கிரகத்திற்கும் அந்த யோனியேதான் இருக்கலாம். வேறு யோனி இருக்கக் கூடாது என்பது தான் அந்த விசேஷம். (25)

கர்துர்ஜந்மநக்ஷத்ராத் ராஜவாஸ்த்வோர்பிம்பாந்தயா |
கணயேல்லோகமார்கேண தேந யோகவ்யவஸ்தித: || ௨௬ ||

விவர்ஜயேத் கணயோகாதி
ஸோமஜஸ்ய பவித்ரௌ ச |
பௌமவாரோ விவர்ஜ்ய: ஸ்யா-
ந்மத்யமௌ ஸௌரிபாஸ்கரௌ || ௨௭ ||

பாநுவாராதிஷு ப்ரோக்தம் விஶாகாதி சதுஷ்டயம் |
வியோகம் மரணம் நாஶம் அம்ருதம் ச யதாக்ரமம் || ௨௮ ||

ஸர்வேஷாம் ஶ்ரேயஸே ஜாத்யம்ஶாரோபணம் ஸ்ம்ருதம் |
தஸ்மாத்தத்ர கர்தவ்யம் ஆயாதீநாம் து சிந்தநே || ௨௯ ||

கோயில் முதலியன கட்டி வைக்கும் யஜமானன் பிறந்த நக்ஷத்திரத்திலிருந்தும், அவ்வாறே. அரசன், வாஸ்து (கோவில், வீடு முதலியன) இவற்றின் நக்ஷத்திரங்களிலிருந்தும், பிம்பத்தினுடைய நக்ஷத்திரம் வரையில், உலக வழக்கை யொட்டி எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலிருந்து கணம், யோகம் முதலியவற்றைக் கண்டு பிடிக்க வேண்டும். அவற்றில் சுபமானதை வைத்துக் கொள்ள வேண்டும். செவ்வாய்க்கிழமை கூடாது: சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடுத்தரமானவை. (26–27)

ஞாயிறு முதலிய கிழமைகளுடன், விசாகம் முதலாக, நன்னான்கு நக்ஷத்திரங்கள் கூடுமாகில், முறையே, வியோகம் (பிரிவு), மரணம், நாசம், அமிருதம் என்னும் யோகங்கள் அமையும். (28)

எல்லோருடையவும் மேன்மைக்காகவே ஆயாதிகளைக் கணக்கிடும் பொழுது, கீழ்க் கூறப்பட்டபடி, ஜாத்யம்சத்தைக கூட்டிக் கொள்ளுமாறு சான்றோர் விதித்துள்ளனர். அதனால், ஆயாதிகளைக் கணக்கிடும் பொழுது, மறவாமல் ஜாத்யம்சத்தைக் கூட்டிக் கொள்ளவேண்டும். (29)

அத கௌதுகோச்ச்ராய:

ஸகலே ஸதி மூலபிம்பகே
தச்சதுரம்ஶோந்நதி கௌதுபிம்பகம் ।
ஸகலாக்ருதி நிஷ்கலேऽபி வா
ஸ்தித ஆஸீந ஏத: ப்ரகல்ப்யதே ॥ ௩௰ ॥

ஆயாமேந ஶிவாம்ஶஸ்ய பாதயே-
நாஹேந வா ஸம்மிதம்
வ்யாஸேநாபி ச மந்த்ரலிங்கவிஷயே
தத்கர்மபிம்பம் ஶிவே ।
ஸூத்ர ஷோடஶயா வா நவ ஸப்த
பாகாத்மகேநோத்தமா-

கௌதுகபிம்பத்தின் உயரம்.

மூலபிம்பம் ஸகலம், நிஷ்கலம் என்று இருவகைப் படும். ஸகலம், உறுப்புக்களுடன் கூடியது; நிஷ்கலம், உறுப்புக்கள் இல்லாமல் இருப்பது. மூலபிம்பம் ஸகலமா யிருக்குமாயின், அதற்கேற்ற கௌதுகபிம்பம் மூலபிம்பத்தின் களத்தில் நாலில் ஒரு பங்கு களமுடையதா யிருக்க வேண்டும்; மூலபிம்பம் நிஷ்கலமா யிருக்குமாகில் (லிங்கம்), அதன் கௌதுக மூர்த்தியை ஸகலமாகவே செய்யவேண்டும். இந்த கௌதுக மூர்த்தி, நின்றவாறாகவும், வீற்றிருந்தவாறாகவும் தக்கவாறு அமைக்கப் படவேண்டும். (30)

மந்த்ரலிங்க விஷயத்தில், சிவபெருமானுடைய கர்மபிம்பத்தை லிங்கத்தின் சிவாம்சத்தினுடைய உயரமுள்ளதாகச் செய்யலாம். அல்லது, சிவாம்சத்தினுடைய சுற்றளவுக்குச் சமமாகவோ, அதன் (குறுக்கு) விட்டத்துக்குச் சமமாகவோ, கௌதுகமூர்த்தியின் உயரம் இருக்கலாம்; மற்றும், இம்மூன்று அளவுகளையும் தனித்தனியே பதினாறு கூறாக்கி, அவற்றில் பதினொரு, ஒன்பது, ஏழு, ஐந்து,

[illegible]
[illegible] ॥ ௩௧ ॥

[illegible] ... ... ।
... ... ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௩ ॥

[illegible] ।
[illegible] ॥ ௩௪ ॥

[illegible] ।
[illegible] ॥

அல்லது மூன்று அம்சங்களைக் கூட்டியும் குறைத்தும் கௌதுக மூர்த்தியின் உயரத்தை அமைக்கலாம். (31)

முந்தைய சாத்திரநூல்களைத் தழுவி, லிங்கத்தின் அளவைக் கொண்டு கௌதுகமூர்த்தியின் உயரத்தைக் கணக்கிடும் வகை இனி விளக்கப்படுகின்றது. லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப் போல் இருமடங்கு உயரமுள்ளதாக கௌதுக விக்கிரகத்தை அமைக்கலாம்; மற்றும், பூஜாம்சத்தினுயரத்தை முப்பத்திரண்டு கூறாக்கி, அதில் இருபத்தேழு பாகம், இருபத்தைந்து பாகம், இருபத்தொரு பாகம், பத்தொன்பது பாகம், பதினேழு பாகம், பதினான்கு பாகம், பதினொரு பாகம், ஒன்பது பாகம், ஏழு பாகம், ஐந்து பாகம் உயரமுள்ளதாகவும் கௌதுக மூர்த்தியைச் செய்யலாம். (32-34)

மேலும், லிங்கங்களுடைய பருமனான பகுதியின் சுற்றளவையோ, அல்லது அதன் குறுக்களவையோ கௌதுக மூர்த்தியின் உயரத்துக்கு அளவாகக் கொள்ளலாம்; இதிலும் முன்பு கூறியபடியே லிங்கத்

𑌸𑌂𑌮𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌂𑌶𑍈𑌃
𑌕𑍌𑌤𑍁𑌕𑍋𑌚𑍍𑌚𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌵𑌾 ।

𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌚𑍍𑌚𑌂 𑌤𑍁 𑌨𑌾𑌹𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌵𑍍𑌯𑌾𑌸𑌕𑌮𑍍
𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾
𑌤𑍇𑌷𑍍𑌵𑌾𑌂𑌶𑍇 [illegible] 𑌹𑍀𑌨𑍇 𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌸𑌪𑍍𑌤𑌨𑌵𑌰𑍁-
𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌂𑌶𑌕𑍈𑌰𑍍𑌵𑌾 ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௩௬ ॥

தின் பருமனை பகுதியின் சுற்றளவையும் குறுக்களவையும் தனித் தனியே பதினாறு கூறுகளாக்கி, அவற்றில் பதினொரு :, ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று அம்சங்கள் உயரமுள்ளதாகவும் கௌதுக மூர்த்தியை அமைக்கலாம். (35½)

சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரம், சுற்றளவு, அல்லது அகலம் இவற்றை, தனித்தனியே பதினாறு கூறுகளாகச் செய்து கொள்ள வேண்டும். மேற்கூறிய மூன்று விதமான அளவுகளுடன் மேற்படி (அவற்றின்) பதினாறு கூறுகளில் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொரு பாகங்களைக் குறைத்தோ, அல்லது கூட்டியோ வரும் அளவை கௌதுக மூர்த்தியின் உயரத்தின் அளவாகக் கொள்ளலாம். அல்லது, பூஜாம்சத்தின் உயரம், அதன் சுற்றளவு, அதன் குறுக்களவு இவற்றிற்குச் சமமாகவும் கௌதுக மூர்த்தியின் உயரத்தை அமைக்கலாம். இவ்வாறு லிங்கத்தின் அளவுகளிலிருந்து விக்கிரகத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகை, தொன்மையான சாத்திர நூல்களில் முப்பத்துமூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது. (36)

அத தாலநியம:

உத்தமம் தசதாலாக்யம் மத்யமம் நவதாலகம் ।
அதமம் அஷ்டதாலாக்யம் ... தாலமீரிதம் ॥ ...

இனி தாலநியமம் கூறப்படுகிறது.

தச (பத்து) தாலம் முதல், ஏக (ஒரு) தாலம் வரை தாலங்கள் பத்து வகைப்படும். பன்னிரண்டு அங்குலங்கள் கொண்டது ஒரு தாலம். இதைப் போல் பத்து தாலங்களாக ஒரு விக்கிரகத்தின் உயரத்தைக் கூறு போடுவதனால், அது தசதாலம் என வழங்கப்படும். (10 × 12 = 120), இயற்கையாகக் கிடைத்த இவ்வளவு 'மத்யம தசதாலம்' என வழங்கப்படும்; இதிலேயே, நான்கு அங்குலங்களைக் கூட்டியும், கழித்தும் கணக்கிடுவதனால் முறையே உத்தம தசதாலமும் அதம தசதாலமும் கிடைக்கும். இது போன்றே நவதாலம் அஷ்டதாலம் முதலிய தாலமானங்களுக்கும், இயற்கையாகக் கிடைக்கும் அளவை மத்யமமாகவும், அத்துடன் நான்கு அங்குலங்களைக் கூட்டியும் கழித்தும் கிடைப்பனவற்றை முறையே உத்தமம், அதமமாகவும் கொள்ளவேண்டும். இங்கு, ஒரு அங்குலம் எனப்படுவது, ஒரு தாலத்தில் பன்னிரண்டில் ஒரு பாகமாகும்; தாலம்— என்பது இவ்விடத்தில் சிற்பிகளுடைய சங்கேதச் சொல்லாக உபயோகிக்கப் படுகின்றது. அதைச் சிறிது விளக்கமாகக் கூறுவோமிங்கு.

ஒரு விக்கிரகத்தைச் செய்யு முன், அந்த விக்கிரகம் எவ்வளவு உயரம் இருக்கவேண்டும்— என்பதை அவரவர் நிலைமைகளுக்குத் தக்கவாறு நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு தான் அதற்கு " தாலம் " தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும். உத்தேசத்திலுள்ள விக்கிரகத்தின் முழு உயரத்தைப் பத்து சம பாகங்களாகக் கூறு செய்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தாலமாகக் கொள்ளலாம். இம்முறையே " தசதால " மெனப்படும். அல்லது உத்தேசித்த பிம்பத்தினுயரத்தை ஒன்பது கூறாகச் செய்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தால மெனலாம். இது " நவதால " மெனப்படும். அதே உயரத்தை எட்டுக் கூறாக்குவதன் மூலம்

ஸப்தம் த்விதாலஞ்ச கநீயஸம் தாலமுச்யதே ।

"அஷ்டதால" மெனவும் வழங்கப்படும். இவ்வாறே உத்தேசத்தி லுள்ள பிம்பத்தின் அதே உயரத்தை, ஏழு, ஆறு, ஐந்து, நாலு, மூன்று, இரண்டு, ஒரு கூறுகளாகச் செய்வதனால், முறையே, ஸப்த தாலம், ஷட்தாலம், பஞ்சதாலம், சதுஸ்தாலம், த்ரிதாலம், த்விதாலம், ஏகதாலம், என்பன வழங்கப் பெறும். *இந்தப் பத்து விதமான "தால"ங்களும், ஒவ்வொன்றும் "உத்தமம் மத்யமம்-அதமம்" என மூவகைப்படும். ஆக முப்பது வகையாகும் இந்தத் "தால"ங்கள். இதையே "தாலமானம்" என்பர், இங்கு ஊன்றிக் கவனிக்க வேண்டிய விஷயம்:— "தாலம்" என்பது விக்கிரகங்களின் உயரத்தை, அதற்கேற்ற முறைப்படி, சிற்பிகள் கூறுபோடும் முறையையே உணர்த்தும். அதுவன்றி, மற்ற அளவுகளான விதஸ்தி முழம் தண்டம்— இவை போல் இயற்கையின் அமைப்பை ஆதாரமாகக் கொண்டதன்று. நம் இஷ்டப்படி மாற்றி யமைக்கக் கூடிய அளவு முறையே "தாலம்" என்பதுதான், ஒரே அளவு உயரமுள்ள பல விக்கிரகங்களில், ஒன்று தசதாலமாகவும், மற்றொன்று நவதால மாகவும், வேறொன்று பஞ்சதாலமாகவும் இருக்கும். உயரத்தில் உள்ள ஏற்றத் தாழ்வை ஆதாரமாகக் கொண்டு தாலத்தின் வகை களை உணர முடியாது. பிம்பங்களின் அங்க அமைப்புக்களை ஊன் றிக் கவனித்தால் தான் அவற்றின் "தாலமானம்" புலப்படும்.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் "தாலம்" ஒவ்வொன்றும், தன்னுள் பன்னிரண்டு உட்கூறுகளைக் கொண்டதாகும். இந்த உட் கூறுகளே தாலமானத்தின் "அங்குலங்க"ளெனப்படும். ஆதலால் தாலமானத்தில் வழங்கப்படும் "அங்குல"ங்களும் சங்கேதச் சொற் களே யன்றி, மானாங்குலம்-மாத்ராங்குலம்— இவை போல் இயற்கை யான அமைப்பை ஆதாரமாகக் கொண்டவை யல்ல. இவ்வாறே, மேற்கூறிய "அங்குல"ங்களில் எட்டிலொரு பாகம் "யவம்" எனப்

* காச்யபீயத்தில் ஏகதாலம்-த்விதாலம்—இவற்றில் உத்தம-மத்யம-அதம பேதம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. "யதா ஏகதாலம் த்விதாலஞ்ச ஶ்ரேஷ்டாதித்ரயம் ந ஹி" காச்யபீயம்— 50-வது படலம். சுலோகம்-76.

தாஸும் ஸர்வத்ரயேஷ்வேஷு ஶ்ரேஷ்டாம்ஶமானிகா: ॥ ௩௮ ॥

படும். ஆதலின் தாலமானத்தில் வழங்கப்படும் "யவம்" இயற்கையான தானியத்தினளவல்ல, சங்கேதச் சொல். கடைசியாக ஒரு விளக்கம் காட்டுகின்றனம். ஒரு அளவு உயரமுள்ள பிம்பத்தை "தசதாலம்" என்னும் வகையில் சேர்த்தால், அதில் 120 அங்குலங்கள் அல்லது 960 யவங்கள் இருக்கும். அதே அளவுள்ள பிம்பத்தை "நவதால"மாகக் கருதினுல், அதில் 108 அங்குலங்கள் அல்லது 864 யவங்கள் இருக்கும். அதே பிம்பத்தைப் பஞ்சதாலமாக்கினுல், அதில் 60 அங்குலங்கள் அல்லது 480 யவங்கள் இருக்கும். இவ்வகையில் ஊகித்தறிந்து கொள்க. அடுத்து வரும் அத்தியாயங்களில், பலவிதமான தாலமானங்களில் அமைக்கப்பட வேண்டிய பிம்பங்களுக்கு, முகம் முதல் பாதம் வரை பல்வேறு உறுப்புக்களையும் அமைக்கும் வகை, இவ்வங்குலங்களையும் யவங்களையுமே ஆதாரமாக வைத்துக் கொண்டு விளக்கப்பட விருக்கின்றமையின் இவ்விஷயத்தை மனதில் நன்கு பதிய வைத்துக்கொண்டால்தான் அவ் விஷயங்கள் குழப்பமின்றிக்கே மனதில் தங்கும். அதற்காகவே தாலம் - அங்குலம் - யவம்— இவை இங்கு, சிறிது விளக்கிக் கூறப்பட்டன.

இவ்வாறு 'தசதாலம்' முதலான பலவகை அளவுகள் நம் இஷ்டம் போல் அமைத்துக் கொள்ளக்கூடியவையாக இருந்தாலும் சான்றோர்கள் அவற்றுள் ஒரு வரையறை ஏற்படுத்தியுள்ளனர். அதற்குட்பட்டுத் தான் சிற்பிகள் தாலமானத்தை அமைக்கலாம். பலவகையான பிம்பங்களையும் செய்யவேண்டிய அவசியமுள்ள சிற்பி, முந்துற முன்னம் இவ்வகையான வரையறையை மனதில் கொள்ளவேண்டுவது மிக மிக அவசியம். ஆதலால் அவ்வரையறை இங்கு விளக்கிக் கூறப்படுகின்றது, இவ்வத்தியாயம் முடியுமளவும் (பதினறு ச்லோகங்களால்). தசதாலம் எனப்படும் அளவு முறையில் விக்கிரகம் அமைக்கப்பட்டால். அதன் உறுப்புக்கள் பொலிவாகவும் பூர்ணமாகவும் எழில் மிக்கனவாகவும், காண்பதற்கு இனிய தோற்றமுள்ளனவாகவும் இருக்கும். அதனின்றும் தாலமானத்தின் தரம் குறையக் குறைய, மேற்கூறிய அம்சங்களும் குறைவுபடும். இதுவே தாலமானத்தின் மாறுபாட்டினுல் உண்டாகும் பயன். (38½)

உத்தமம் நவதாலாதி பிம்பாநாம் லக்ஷணம் த்விஹ |
உத்தமம் தஶதாலேந ப்ரஹ்மவிஷ்ணுமஹேஶ்வரா: ॥ ௩௯ ॥

மத்யமம் தஶதாலேந தஸ்யைவோமா ஸரஸ்வதீ |
உஷா பூமிஶ்ச துர்கா ச லக்ஷ்மீர்ஜ்யேஷ்டா ச மாதர: ॥ ௪௰ ॥

மத்யமம் தஶதாலேந வா த்ரிமூர்த்திம் ப்ரகல்பயேத் |
கந்யஸம் தஶதாலேந சந்த்ராதித்யாவதாஶ்விநௌ ॥ ௪௧ ॥

ஶாஸ்தாரம் ஶக்ரம் சைவ சண்டேஶம் க்ஷேத்ரபாலகம் |
மஹர்ஷீணாம் கணாம்ஶ்சைவ தேஷாம் தேவீஶ்ச காரயேத் ॥

உத்தமம் நவதாலேந வித்யேஶாந்லோகபாலகாந் |
வஸூம்ஶ்ச திக்பதீம்ஶ்சைவ சாஸ்த்ரமூர்த்தீம்ஶ்ச குஹ்யகாந் ॥ ௪௨ ॥
தேவாநந்யாம்ஶ்ச தேவீஶ்ச காரயேல்லக்ஷணாந்விதம் |

பிரமன், திருமால், சிவன் இவர்களின் விக்கிரகங்களை உத்தம தசதாலத்தினலேயே அமைக்கவேண்டும். (39)

அவ்வாறே, பார்வதி, கலைமகள், உஷா, பூமிதேவி, துர்க்கை, இலக்குமி, ஜ்யேஷ்டை, ஸப்த மாதரக்கள் இவர்களின் பிம்பங்களை மத்யம தசதாலத்தினல் அமைக்கவேண்டும். (40)

மும்மூர்த்திகளை (பிரம்மா, விஷ்ணு, சிவன்) மத்யமதசதாலத்தினல் அமைப்பதும் உண்டு. சந்திரன், சூரியன், அச்வினி தேவர்கள், சாஸ்தா (ஐயப்பன்), இந்திரன், சண்டேசுவரர், க்ஷேத்ரபாலகர், மஹர்ஷிகளின் கூட்டங்கள், அவர்களின் தேவிமார் இவர்களை மத்யம தசதாலத்தினல் அமைக்கவேண்டும். (42)

வித்யாதிபர்கள் (பிருஹஸ்பதி, சுக்கிராசாரியர் முதலியோர்.) லோகபாலகர்கள், அஷ்டவஸுக்கள், திக்பாலகர்கள், அஸ்திரங்களின் மூர்த்திகள், குஹ்யர்கள் (தேவயோனிகளில் ஒரு வகை), மற்றுமுள்ள தேவர்கள், அவர்களுடைய தேவிமார் இவர்களை உத்தம நவதாலத்தினல் அழகுறச் சமைக்கவேண்டும். (43)

மத்யமம் நவதாலேந வ்ருஷ்டமுக்திஸுராஸுராந் ॥ ௪௪ ॥

யக்ஷாஸுரகணாம்ஶ்சைவ குர்யாத்ஸம்யக்ஸுலக்ஷணம் ।
கந்யஸம் நவதாலேந வித்யாதரகணாம்ஸ்ததா ॥ ௪௫ ॥
அஸுராந் ஸித்தகந்தர்வாந் பித்ரூம்ஶ்ச ததைவ ச ।

அஷ்டதாலேந மர்த்யாம்ஸ்து பிஶாசாந் ஸப்ததாலத: ॥ ௪௬ ॥
ஷட்தாலேந குப்ஜாம்ஸ்து தத்ர ஶ்ரேஷ்டாதிகாரத: ।
தத்தத்தூத்தமமத்யாதிஹீநமேவ பவந்தித: ॥ ௪௭ ॥

பஞ்சதாலோத்தமேநைவ விக்நேஶம் ஸ்கந்தமேவ ச ।
வாமநம் ச குர்யாத்ஸர்வம் பூததாந்மத்யமாதமாத் ॥ ௪௮ ॥

அஷ்ட மூர்த்திகள், மருத்துக்களுடைய கணங்கள், யக்ஷர்கள், அஸுரகணங்கள் இவர்களை, மத்யம நவதாலத்தினால், சுபமான லக்ஷணங்களுடன் அமைக்கவேண்டும். அவ்வாறே, வித்யாதரர் களுடைய கணங்களையும், அஸுரர்களையும், ஸித்தர்கள், கந்தருவர் கள் ஆகியோர்களையும், பித்ருக்களையும் அதமநவதாலத்தினால் அமைக்கவேண்டும். (45½)

மானிடரை அஷ்டதாலத்தினாலும், பைசாசங்களை ஸப்ததாலத்தி னாலும், கோணலான வடிவமுடையவர்களை ஆறு தாலத்தினாலும் அமைக்கவேண்டும். இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு வகையிலும், உத்தம, மத்யம, அதமர்களை, அவரவர்களுக்கு வகுக்கப்பட்ட தாலங் களில் முறையே உத்தம மத்யம அதம தாலங்களால் செய்ய வேண்டும். (47)

விக்கிளேசுவரர், கந்தன், வாமன மூர்த்தி, இவர்களை உத்தம பஞ்சதாலத்தினால் அமைக்க வேண்டும். பூத கணங்களை மத்யமம், அல்லது அதம பஞ்சதாலத்தினால் அமைக்கலாம். (48)

𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂𑌚 𑌵𑍇𑌦𑌤𑌾𑌲𑍇𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍂𑌤𑌗𑌣𑌾𑌨𑌾𑌂𑌚 𑌵𑌾 ।
𑌤𑍍𑌰𑌿𑌤𑌾𑌲𑍇𑌨 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌃 𑌯𑌕𑍍𑌷𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌜𑌾𑌤𑌯𑌃 ॥ ௪௯ ॥

𑌦𑍍𑌵𑌿𑌤𑌾𑌲𑍇𑌨𑍈𑌵 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌨𑍍 𑌤𑌾𑌲𑌾𑌦𑍇𑌕𑌕𑍂𑌰𑍍𑌮𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌹𑌰𑍇𑌃
𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌮𑌾𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 ॥ ௫௦ ॥

𑌵𑌿𑌭𑌜𑍍𑌯𑍈𑌕𑌾𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑌾𑌲𑌂 *𑌗𑍋𑌲𑌕𑌂 𑌵𑌾 𑌕𑌲𑌾𑌨𑍍𑌤𑌯𑌾 ।
𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌕𑌂 𑌯𑌵𑌂 ॥ ௫௧ ॥

சிறுவர்களை நான்கு தாலத்தினால் அமைக்க வேண்டும்: பூத கணங்களையும் நான்கு தாலத்தினால் அமைப்பதுண்டு: யக்ஷர்கள், கின்னரர்கள் ஆகிய இனங்கள் மூன்று தாலத்தினால் அமைக்கப்பட வேண்டும். (49)

கூச்மாண்டங்களை (ஒருவகை கணங்கள்) இரண்டு தாலத்தினாலேயே அமைக்க வேண்டும். திருமாலின் கூர்ம (ஆமை) வடிவத்தை ஏக (ஒரு) தாலத்தினால் அமைக்க வேண்டும். இவ்வாறு, பல்வேறு மூர்த்திகளின் பாகுபாடுகளை அனுசரித்து, அதற்கேற்ற பிரதிமைகளின் உயரத்தை சில்பசாஸ்திரங்களில் வகுத்துள்ளனர். (50)

இவ்வாறு வகுக்கப்பட்ட தாலமானத்தின் உட்பிரிவுகள் இந்த சுலோகத்தால் விளக்கப்படுகின்றன. ஒரு தாலத்தைப் பன்னிரண்டு கூறுகளாகப் பிரிக்க வேண்டும். *"கோலகம்" "கலை" இவற்றையும் அவ்வாறே பிரிக்க வேண்டும். இதில் ஒருபாகம் (1/12) ஒரு அங்குலமாகும். இவ்வங்குலத்தில் எட்டிலொரு பாகம் ஒரு யவமாகும்.

இந்தக் கடைசி சுலோகத்தில், பிம்பங்கள் செய்வதற்கான கல்லைக் கொண்டு வந்து அதில் சிற்பவேலை செய்வதற்கு உபயோகமான முக்கிய விஷயம் ஒன்று கூறப்படுகின்றது. அவரவர்களுக்கு விருப்பமுள்ளபடி செய்யப் போகிற விக்கிரகங்களின் உயரம்-கனம்-அகலம்- இவற்றை முந்துற முன்னம் மனத்தில் நிர்ணயம் செய்து

---

* கோலகம்- கலா— இவற்றின் பொருள் தெளிவாக விளங்கவில்லை.

𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌾𑌂𑌶𑌤𑌿𑌥𑌿 𑌵𑌿𑌗𑍁𑌣𑍀𑌯𑌤𑍇𑌷𑍁-
𑌵𑌾𑌧𑍋𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌧𑌿𑌯𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌮 𑌶𑌿𑌲𑍍𑌪𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌰 ।

கொள்ளவேண்டும். அதன் பிறகே அதற்கான கல்லைக் கொண்டு வரவேண்டும். உத்தேசித்த உயரத்தைப் போல் இருமடங்கு உயர முள்ளதாகக் கல்லைக் கொண்டு வரவேண்டும். உத்தேசத்திலுள்ள அகலத்தைப் போல் 1½-பங்கு அகல முள்ளதாகவும், உத்தேசத்தி லுள்ள கனத்தைப் போல் 1½ பங்கு கனமுள்ளதாகவும் அந்தச் சிலை இருக்க வேண்டும். அகலம்-நீளம்-கனம்- இவை, இருக்கவேண்டிய தற்கு மேல் அதிகமாக இருப்பதனால் குற்றமில்லை. விக்கிரகம் வேலை தீர்ந்தவுடன் அனாவசியமான பகுதியைத் துண்டித்துக் கழித்து விடலாம். ஆனால், குறைவு படுமாயின் அதை ஒட்டவைக்க முடியா தல்லவா? அதற்காகவே இவ்வாறு முன்னெச்சரிக்கை செய்யப் படுகின்றது. "நெட்டைத் தச்சன் குட்டைக் கருமான்" என்பது பழமொழி. இரும்பு முதலிய உலோகங்களைக் காய்ச்சி அடித்து நீட்டு கின்ற கருமான் உத்தேசத்திலுள்ள அளவை மனதில் கொண்டு அதற்குக் குறைவான நிலையிலேயே நிதானமாகத் தட்டித்தட்டி, உத் தேசித்த அளவு வந்தவுடன் நிறுத்தி விட வேண்டும். உத்தேசத்தி லுள்ள அளவுக்கு மேல் போய் விட்டால் அதை மீண்டும் குறுக்குவது சாத்தியமாகாது. இது போலவே, கல், மரம், இவற்றைச் செதுக்கி வேலை செய்ய வேண்டியவனாகிய தச்சன் உத்தேசித்த அளவுக்கு அதிகமான நிலைமையிலேயே வேலைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வந்து உத்தேச அளவு வந்தவுடன் நிறுத்திவிட வேண்டும். கவனக் குறைவால் உத்தேசித்த அளவுக்கும் குறைவாகச் சிதைத்து விட்டால் அந்தச் சிலை அல்லது மரம் வீணாகிவிடும். அதைக் கைவிட வேண்டியது தான். அதனால் சிற்ப வேலையில் ஈடுபடுகிறவர்கள் முதன் முதலில் விக்கிரகத்திற்கான கல்லைக் கொண்டு வரும்போது அகலம்-நீளம்-கனம்— இவற்றை அதிகமாகவே வைத்துக் கொண்டு வரவேண்டும். அந்தக் கல்லை, ஜாக்ரதையுடன் சதுரமாக்க வேண்

शाययेत्तां समतले निपुणं न्याय-
प्रस्तारस्योपरि [illegible] ॥ ௫௨ ॥

इति शिल्परत्ने उत्तरभागे प्रतिमोच्छ्रायविधिर्नाम
चतुर्थोऽध्यायः ॥

டும். மேடு பள்ளமில்லாத தரையில் திறமையுடன் அதைக் கிடத்த வேண்டும். அதன் மேல் அதில் மந்திரமூர்த்தியின் அமைப்புக்குத் தொடங்க வேண்டும். (52)

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம் பிரதிமைகளின் உயரத்தை விதிக்கும் நான்காமத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ:

அத பஞ்சமோऽத்யாய:

அதோத்தமம் தசதாலம்

ப்ரதிமாயாஶ்ச ஶீர்ஷாந்தம் உஷ்ணீஷாந்தம் ச மானுஷம் |
தஸ்மா தாலவஶாத்கேஶாந்தம் காரயேத் புத்திமாந்நர: ‖ 1 ‖

கேஶாந்தாதக்ஷிஸூத்ராந்தம் பாதாம்ஶம் ப்ரதிமாயகம் |
அக்ஷிஸூத்ராந்நாஸிகாந்தம் தஸ்மாத்து மானஸீகம் ‖ 2 ‖

ஐந்தாவது அத்தியாயம்.

உத்தம தசதாலம்

கீழ் அத்தியாயத்தில் கூறப்பட்ட வரிசையில் உத்தம தசதாலத்திற்கான அளவுகள் இவ்வத்தியாயத்தில் விளக்கப் படுகின்றன. தலையிலிருந்து கால்வரை ஒவ்வொரு உறுப்புக்களுக்கும் இருக்கவேண்டிய உயரம் முதலில் கூறப்படுகின்றது. முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட விஷயங்களை மனதில் நன்கு நினைவுறுத்திக் கொண்டு இங்கு கூறப்படும் விஷயங்களைத் தவறுதல் வராமல் கையாளவேண்டும். இவ்வுபதேசங்களெல்லாம் ஓரளவுக்கு வழிகாட்டியாகவே இருக்கமுடியும். சிற்பியின் இயற்கையான கற்பனசக்தியும் கை லாகவமும் உண்மையான சிரத்தையும் சலியாத உழைப்பும் தளராத ஊக்கமும், ஆழ்ந்த தெய்வ பக்தியும், பெரியோர்களிடம் அடிபணிந்துக் கற்றவையும் கேட்டவையும், உறுதியான மனோபலமும், ஆழ்ந்த சிந்தனையும், விக்கிரகங்களைச் செய்விப்பவர்— வழிபட விரும்புகிறவர்கள் ஆகியவர்களுடைய நல்ல அதிருஷ்டமும் எல்லாவற்றுக்கும் அடிப்படையான இறைவனுடைய திருவருளும் தான் ஒரு விக்கிரகம்

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍇𑌕𑌂 𑌤𑌥𑌾 ।
𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌦𑌿 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁
𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌧𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ।

லக்ஷணமாய் அமைவதற்குக் காரணமாகும். இவை யில்லாவிடில், சமையலைப் பற்றின புத்தகங்களைப் படித்து அதனால் மட்டும் கிடைத்த அறிவைக் கொண்டு ஒருவன் சமையல் செய்வதையே ஒக்கும் இதுவும். இனி சுலோகத்தின் கருத்தை விளக்குவாம்.

உஷ்ணீஷத்தின் (தலைப்பாகையின்) உயரம், ஒரு அங்குலமும் மூன்று யவமுமாகும். அதனின்று முன்புறம் கேசாந்தம் வரை (முன் கூந்தல் வரை) மூன்று அங்குலம் உயர மிருக்கவேண்டும். கேசாந்தத்திலிருந்து அக்ஷி *ஸூத்திரம் வரை (கண்களின் மத்தியம் வரை) நான்கு அங்குலங்களும் மூன்று யவமும் உயரம் இருக்கும். அக்ஷி ஸூத்திரத்திலிருந்து மூக்கின் நுனி வரைக்கும், அதிலிருந்து தாள்கட்டை வரைக்கும் தனித் தனியே நான்கு அங்குலங்களும் மூன்று யவமும் உயரம் இருக்கவேணும். தாள்கட்டையிலிருந்து கழுத்து வரை நான்கு யவம். கழுத்தின் உயரம் மூன்றங்குலமும் ஏழு யவங்களுமாகும். கழுத்தின் முடிவில் குறுக்காகச் செல்லும்

* இங்கு "ஸூத்திரம்" எனப்படுவது ஒருவகை சங்கேதச் சொல். ஒரு உடம்பில் பற்பல இடங்களில் நூல் தட்டினாற் போல் நேர்மையான அமைப்பு இருப்பதாக வைத்து அந்நிலைமையையே சூத்திரம் என்னும் பெயரால் வழங்குவர். சூத்திரம் என்பது வெறுங் கற்பனையே.

नाभेर्मेढ्रमूलाग्रं
विंशांशत्रयमेवं व्ययकाः ॥ ५ ॥

मेढ्रमूलमध्यं त्वियत्-
सूत्रं मध्याभिधं ख्यातम् ।
मध्यसूत्रादूरुदैर्घ्यं
सप्तविंशांशकैः ख्यातम् ॥ ६ ॥

तथा चैवांशमानं जानु जङ्घं जमेष्टं नवकम् ।

ஸூத்திரம் "தாலு ஸூத்திர" மெனப்படும். * ஹிக்கா ஸூத்தி ரத்திலிருத்து ஹ்ருதயாந்தம் வரை, அவ்வாறே ஹிருதயத்திலிருந்து நாபி வரை, நாபியிலிருந்து மேட்ர மூலம் (ஆண் குறி ஆரம்பிக்குமிடம்) இவை தனித்தனியே பதினான்கு அங்குலங்களும் மூன்று யவங்களும் உயரமுள்ளவையாக இருத்தல் வேண்டும். (1—5)

மேட்ரமூலத்தில் குறுக்கே செல்லும் ஸூத்திரம் "மத்திய ஸூத்திரம்" எனப்படும். உடலின் மத்தியபாகம் இதுவென்றபடி. மத்திய ஸூத்திரத்திலிருந்து துடைகளின் நீளம் இருபத்தேழு அங்குலங்களாகும். அதிலிருந்து நான்கு அங்குலம் முழங்காலின் உயரம். அதிலிருந்து ஜங்கை (கெண்டைக் கால்) யின் உயரம் துடையின் உயரம் போலவே இருபத்தேழு அங்குலமாகும். அதிலிருந்து உள்ளங்கால் வரை நான்கு அங்குலம் உயரம் இருக்க வேண்டும்.

இவ்வாறாக உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை உத்தம தசதாலத்தில் பிம்பத்தின் உயரம், பல உறுப்புக்களிலும் இருக்க வேண்டிய வகை விளக்கப்பட்டது. நேராக மேலிருந்து கீழ் நோக்கி வரும் அளவு இங்கே கூறப்பட்டுள்ளது. உத்தம தசதாலத்தின் முழு உயரம் 124 அங்குலங்களென்று முன்பே கூறப்பட்டுள்

---

* ஹிக்கா— என்பது "நெஞ்சுக்குழி"யின் பெயர்.

தலாத்ரஷ்டதஸோத்வயம் யாம்ஸம் வஸிக்ருதம் ॥ ௭ ॥

ளது. இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் பல அளவுகளேயும் ஒன்ருகக் கூட்டினுல் 124 அங்குலங்களாக வேண்டும். அவ்வாருகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும் —

		அங்.	யவம்
(1)	உஷ்ணீஷோச்சம்	1	3
(2)	கேசாந்தம் வரை	3	0
(3)	அக்ஷிஸூத்திரம் வரை	4	3
(4)	நாஸிகாந்தம் வரை	4	3
(5)	ஹநுஸீமகம் (தாள்கட்டை வரை)	4	3
(6)	கழுத்தின் எல்லே வரை	0	4
(7)	கழுத்தின் உயரம்	3	7
(8)	ஹிருதயாந்தம் வரை	14	3
(9)	நாபி (கொப்பூழ்) வரை	14	3
(10)	மேட்ரமூலம் வரை	14	3
(11)	துடைகளின் நீளம்	27	0
(12)	முழங்கால் உயரம்	4	0
(13)	ஜங்கா (கெண்டைக்கால்) உயரம்	27	0
(14)	உள்ளங்கால் வரை	4	0
	ஆக	127	0

இளம் பதினுன்குக்கும் நூற்றிருபத்தேழு அங்குலம் ஆகின்றது.

உத்தம தசதாலத்தின் மொத்த உயரம் 124 அங்குலமே வர வேண்டுமல்லவா? அதற்கு மேல் மூன்றங்குலம் அதிகமாக இங்கு வருகின்றது. உறுப்புக்களின் தனித்தனியான அளவுகளில் எங்கேயோ மூன்றங்குலம் அதிகமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது என்பது தெளிவு. அந்தத் தவறுதலே வேருெரு நூலின் துணையால் திருத்திக்கொள்ள வேண்டும். காச்யபீயம், ஐம்பதாவது படலம், 96—97-வது சுலோகங்கள் ;

" ஹிக்காதோ ஹ்ருதயாந்தஞ்ச ஹ்ருதயம் நாபிஸீமகம் ॥ 96 ॥

நாபேர் மேட்ராந்தகம் ஸாம்யம் த்ரிதயமாயிகம் ।

த்ரயோதஶாங்குலம் ஸாத்ரியவம் ப்ரத்யேகம் விஜானதாம் !" ॥ 97 ॥

என்றுள்ளன. இதுவும் உத்தம தசதாலத்தை விவரிக்குமிடந்தான் "ஹிக்கையினின்றும் ஹிருதயம் வரை, ஹிருதயத்தினின்றும் நாபி வரை, நாபியிலிருந்து மேட்ரமூலம்வரை, இம்மூன்றளவுகளும் ஒரே விதமானவை. ஒவ்வொன்றும், பதின்மூன்றங்குலம் மூன்று யவம்" என்பது இந்த சுலோகங்களின் கருத்து. ஷெ மூன்றிடங்களிலும் 14-அங்குலம் 3-யவம், என்று இந் நூலில் கூறப்பட்டுள்ளது. இது நான் தவறுள்ள இடம். இதை ஷெ காச்யபீயத்தின் ஆதாரத்தின் பேரில் திருத்தி, பதின்மூன்றங்குலமே அவ்விடங்களில் வைத்துக் கொள்வோமாயின் மொத்தத்தில் மூன்றங்குலம் குறைந்து விடும். அப்போது உத்தம தசதாலத்தின் அளவாகிய 124 அங்குலங்கள் இந் நூலிலும் சரியாக வந்துவிடும்.

" நாபேர் மேட்ராந்தகம்
விஶ்வாம்ஶத்ரியவைர் யுதம் "

என்று இந்நூலில் "விச்வாம்சம்" என்று தெளிவாகக் கூறப்படுகின்றது. "விச்வம்" என்றால் "உலகம்" என்று பொருள். "உலகங்கள் ஈரேழு பதினான்கு" என்பது சான்றோர் வழக்காதலால் இச் சொல்லைப் "பதினான்கு" என்னும் எண்ணிக்கையைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இந்நூலிலும் மற்றும் பல நூல்களிலும் இந்தச் சொல் பல விடங்களிலும் இதே கருத்தில் பலதாமும் உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. ஆதலால் இச்சொல்லின் பொருளில் ஐயமொன்றுமில்லை. இச் சொல் இவ்விடத்தில் உபயோகிக்கப் பட்டது தான் தவறு. அச்சுப் புத்தகத்தில் சுவடியினின்றும் பார்த்து அச்சிடும்போது இந்தத் தவறு நிகழ்ந்திருக்கக்கூடும். அல்லது வேறு வழியில் ஏதாவது சமாதானம் இருந்தாலும் இருக்கலாம். அறிஞர்கள் ஆய்ந்துணர்க; விச்வம்—என்பது 13-எண்ணிக்கையையும் குறிப்பதாகக் கொள்ளக்கூடுமா என்று.

அங்குஷ்டாக்ராத்து பார்ஷ்ண்யந்தம் தலம் ஸப்ததசாங்குலம் |
*ஹிக்காஸூத்ராதயோ பாஹூ ஸப்தவிம்சாங்குலம் ததா ||

கூர்பராயாமோ த்வ்யம்ச ஏகவிம்சாம்சகம் தத: ||
ப்ரகோஷ்டஸ்யாயதம், தஸ்மாச்ச ஸார்த்தத்ரயோதசாம்சகம் ||
மத்யாங்குல்யக்ரபர்யந்தமாயாமம் கரஸ்ய து |

ஸார்த்தத்வாம்சமுதம் தாலம் || உத்தமே, தஸ்யாங்குலிவ்ருத்தி: ||

இனி இரண்டரை சுலோகங்களால் மற்றும் சில அளவுகள் கூறப்படுகின்றன. கால் கட்டை விரலின் நுனியிலிருந்து குதிகால் வரையிலுள்ள உள்ளங்காலின் நீளம் பதினேழு அங்குலங்கள். *ஹிக்காஸூத்ரத்தின் கீழ் புயங்களின் நீளம் இருபத்தேழு அங்குலமாகும். அதன் கீழ் முழங்கையின் நீளம் இரண்டு அங்குலம். அதிலிருந்து பிரகோஷ்டம் (முன்கை) இருபத்தொரு அங்குலம் நீண்டிருக்கும். அதிலிருந்து நடுவிரலின் நுனிவரையிலுமுள்ள கரத்தின் நீளம் பதின்மூன்றரை அங்குலமாகும். இவ்வாறுக உத்தம தசதாலத்தில் அமைக்கப்பட வேண்டிய பிம்பத்தின் முழு உயரம் பல்வேறு உறுப்புக்களின் அமைப்பில் பிரித்துக் கூறப் பட்டது. (8, 9½)

இனி, பிம்பத்தின் உறுப்புக்களின் அகலம் கணக்கிட்டுக் கூறப் படுகின்றது. (அகலம்—என்பது சில சமயம் குறுக்களவையும்

---

* ஹிக்கா ஸூத்ரமென்பது, கழுத்தின் அடிப்புறத்தில் குறுக்காகச் செல்லும் ஸூத்திரம்.

'' கண்டமூலாதயோ லம்பஸூத்ரம் ஹிக்காஸூத்ர உதாஹ்ருதம் ''
(காச். 50—96)

|| '' உத்தமே கர்ணவிஸ்தாரகம்
த்ரயோதசாம்சகம் பவேத் '' (காச். 50—102)

என்னும் சுலோகத்தைத் தழுவி ''காதுகள் இருக்குமிடத்தில்'' என்று பொருள் தரப்பட்டது. ''தஸ்யாம்ஸ'' என்பது, ''கர்ணாந்தே'' என்று இருந்திருக்கக் கூடும்.

ஸார்தத்ரயோதஶம் ஸமம்
ஶ்ரோத்ரதேஶே ஸார்தநவகம் |
க்ரீவாமூலே தஶாங்குலம் ப்ரோக்தம்
விஸ்தாரம் பரிகீர்த்திதம் || ௧௧ ||

* ஹிக்காயா பாஹ்வந்தவிஸ்தாரம் சத்வாரிம்ஶாம்ஶமேவ ஹி |
ஸார்தத்வாவிம்ஶதிம்ஶாத்து கக்ஷயோரந்தரம் ததா || ௧௨ ||

நவாம்ஶம் சதுர்யவோபேதம் பாஹுமூலவிஸ்தாரகம் |
ஏகவிம்ஶதிமாத்ரம் து ஸ்தநதேஶே து விஸ்த்ருதி: || ௧௩ ||

குறிப்பிடுகின்றது.) முகத்தின் அகலம் பன்னிரண்டரை அங்குலம். காதுகள் இருக்குமிடத்தில் முகத்தில் அகலம் பதின்மூன்றரை அங்குலங்களாகும். (காச்யபீயத்தில் இந்த அளவு அரை அங்குலம் குறைவாகக் கூறப்பட்டுள்ளது.) கழுத்தின் அகலம், நுனியில் ஒன்பதரை அங்குலமும், அடிப்புறத்தில் பத்து அங்குலமுமாகும். ஹிக்காவின் கீழ்ப்புறம் இருபுயங்களின் முடிவுவரை உள்ள அகலம் நாற்பது அங்குலமாகும். இரண்டு கக்ஷங்களின் மத்தியம் இருபத்திரண்டரை அங்குலம் அகலமாம். புஜங்களின் அடிப்புறத்தினகலம், ஒன்பது அங்குலம் நான்கு யவமாகும். ஸ்தனப்பிரதேசத்தின் அகலம் இருபத்தோரங்குலங்களாகும். ஹிருதயத்தின் அளவில் மார்பின் அகலம் பத்தொன்பது அங்குலமாகும். இடையில் (மத்தியத்தில்) இருக்குமகலம் பதினாறு அங்குலமும் நான்கு யவமுமாகும். ஸ்தனம்-ஹிருதயம் - இடை—இம்மூன்றிடங்களும் மேலிருந்து கீழே வரும் மூன்று உறுப்புக்கள் இவற்றில் மேலுள்ளதான ஸ்தனப்பிரதேசத்தைக்காட்டிலும், 4½ அங்குலம் அகலத்தில் குறைந்ததாக "மத்தியம்" கூறப்படுகின்றது. ஸ்தனத்திற்கும், மத்தியத்திற்கும் இடையிலுள்ள

---

* இதே இடத்தில் காச்யபீயத்தில்— [(50-103)
"ஹ்ருதயாத்பாஹ்வோ விஸ்தாரம் சத்வாரிம்ஶத்து ஸார்தகம்"
என்றுள்ளது. இதயமிருக்குமிடத்தில் இரு புஜங்களின் எல்லை வரை 40½ அங்குலம் அகலம் என்பது அதன் பொருள். ஆய்ந்துணருக.

ஹ்ருதயாவதி விஸ்தார ஏகோநவிம்ஶதிர்ஜ்ஞேய: ।
ஸ்தநாம்ஶம் தததஸ்தோத்யாம் ஷோடஶம் ஸார்தமத்யமாவதி தத்தாஸ்யத: ॥

ஸைகோநவிம்ஶகாம்ஶஞ்ச ஶ்ரோணீதேஶவிஶாலக: ।
தத்ர மேட்ரவிஶாலஞ்ச த்வியவாதிகமங்குலம் ॥ ௧௫ ॥

* ததத: கடிபார்ஶ்வாந்தம் ஸார்தவிம்ஶாம்ஶகை: ஸ்ம்ருதம் ।
ஊரோர்மத்யே த்ரயோதஶாம்ஶ ஷட்யவ்யவிஶாலக: ॥ ௧௬ ॥

ஜாநுதேஶஸ்ய விஸ்தாரம் ஷாட்யஷ்டநவாம்ஶகம் ।
ஸபாதவக்ஷ்யமாணஞ்ச ஜங்காக்ரம் விஶாலக: ॥ ௧௭ ॥

பாஷாணஸஹிதமாணஞ்ச ஜங்காமத்யவிஶாலகம் ।

ஹிருதயப் பிரதேசத்தில் அகலத்தினளவும் நடுத்தரமாக (19) இருக்கிறது. ஆதலால், ஸ்தனப் பிரதேசத்தில் 21-அங்குலத்தில் தொடங்கி, இடுப்பு வருமளவில் 16½ அங்குலமாக அகலத்தை அமைப்பது. படிப்படியாக மேலிருந்து கீழ் அகலத்தைக் குறைத்துக் கொண்டே வரவேண்டுமென்றதாகிறது. (14)

ச்ரோணீ தேசத்தின் (இடுப்புக்குக் கீழ்ப்புறத்தின்) அகலம் பத்தொன்பது அங்குலமாகும். ஆண் குறியின் அகலம் ஒரு அங்குலமும் இரண்டு யவங்களும். அதற்குக் கீழ் இடுப்பின் இருபுறங்கள்வரை உள்ள அகலம் இருபதரை அங்குலம். துடையின் மத்தியத்தில் அதன் அகலம், பதின்மூன்று அங்குலம் ஆறு யவம். முழங்காலின் அகலம், எட்டு அங்குலம் ஆறு யவம். அதற்கடுத்தாற்போலுள்ள ஜங்கையின் (கெண்டைக்காலின்) அடிப்புறத்தின் அகலம், ஐந்து அங்குலம் இரண்டு யவம். ஜங்கையின் நடுவில் அதன் அகலம்,

---

* வரிசைக்கிரமத்தைப் பார்த்தால் இந்த அரை சுலோகம், 15-வது சுலோகத்தின் பூர்வார்த்தமாக (முன்பகுதியாக ("ஏகோந விம்சத்..." என்பதற்கும் "தத்ர மேட்ர..." என்பதற்கும் இடையில்) இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

तयोर्मध्यस्थलं भागं नवभिः संप्रकीर्तितम् ॥

षडवं वेदमात्राङ्गं नलकायास्तु विस्तृतम् ।
त्रियवाधिकबाणांशं गुल्फाक्षव्यासमानकम् ॥ १९ ॥

अक्षाधस्तात्तलान्तं तु वेदयवेदाङ्गुलं स्मृतम् ।
पार्ष्णितारं च तत्तुङ्ग्यं पार्ष्णेर्मानं तथैव हि ॥

तलमध्यं षडंशं तु यवद्वयसमन्वितम् ।
तलाग्रविस्तृतं सप्तमात्रं प्रकीर्तितम् ॥ २१ ॥

द्वियवाधिकवेदांशं पादाङ्गुष्ठाङ्गुलायतम् ।
यवेनैकेन युक्तांशद्वयं तस्य विस्तार एव हि ॥ २२ ॥

ஆறு அங்குலம் ஆறு யவம். அவ்விரண்டுக்கும் இடையிலுள்ள பகுதியின் அகலம் ஒன்பது அங்குலம். (18)

நளகை (பாதத்திற்கு மேல் கெண்டைக்காலின் முடிவில் உள்ள பகுதி) யின் அகலம், நான்கு அங்குலம் ஆறு யவம். கணுக்காலில் இரண்டு புறமும் உள்ள இரண்டு முட்டுக்கள் *"குல்பாக்ஷம்" எனப் படும். அவற்றின் அகலம், ஐந்து அங்குலம் மூன்று யவம். (19)

அந்த முட்டுக்களிலிருந்து உள்ளங்கால் வரை (நேர்க்கீழாக) நான்கு அங்குலம் நான்கு யவம் அளவாகும்: குதிகாலின் அகலமும் உயரமும் அவ்வளவே. (நான்கு அங்குலம் நான்கு யவம்) (20)

உள்ளங்காலின் நடுவில் அதன் அகலம், ஆறு அங்குலம் இரண்டு யவம். உள்ளங்காலின் நுனியி (விரல்கள் முடியுமிடத்தி)ல் அதன் அகலம், ஏழு அங்குலம் இருக்கும். (21)

கால் கட்டைவிரலின் நீளம் நான்கு அங்குலம் இரண்டு யவம். அவ்விரலின் அகலமோவெனில், இரண்டு அங்குலம் ஒரு யவம். (22)

---

* குல்பாக்ஷம்—பாடு.

தாரஸ்யார்த்தம் நகவிஸ்தாரம் தத: பாதோந மாயதம் ।
த்ரியவோபேதவேதாம்ஶம் தர்ஜந்யாயாமமங்குலம் ॥ ௨௩ ॥

பாதே நபேஷமா மத்யா ஷட்யவம் த்ர்யங்குலம் பவேத் ।
யவோபேதாத்தமாமத்யா த்ர்யங்குலாயதம் ॥ ௨௪ ॥

ஸாயச்ச வேதாம்ஶ ஸாநஞ் கநிஷ்டாங்குலிகாயதம் ।
ஶேஷம் ப்ராக்வத் ஸ்தாரம் நவஸப்தாய்யஸப்தபி: ॥ ௨௫ ॥

ஷட்பிரம்ஶைஸ் ப்ரயக்த்ரா கல்பயே த்விதிஸ்த்ரை: ।
நகாநாம் ஸ்வதாராயஞ்ச ஸத்ப்ராத்யந்த ப்ரகாரத: ॥ ௨௬ ॥

தர்ஜந்யங்குலிவிஸ்தாரம் வேதாம்ஶே விபஜேத்புந: ।

அவ்விரலிலுள்ள நகத்தின் அகலமோவெனில், அவ்விரலின் அகலத்தில் பாதி (அதாவது, 1 அங்குலம் ½ யவம்) அந்த நகத்தின் நீளம் அதனுடைய அகலத்திலேயே காற்பங்கு குறைந்து இருக்கும் (அதாவது, 6⅜, ஆறேகாலே அரைக்கால் யவம்). கட்டைவிரலுக்கு அடுத்த விரலின் நீளம் நான்கு அங்குலம் மூன்று யவம். (23)

கால் நடுவிரலின் நீளம், மூன்று அங்குலம் ஆறு யவம்; அதற்கடுத்த விரலின் நீளம், மூன்று அங்குலம் ஒரு யவம். (24)

சிறு விரலின் நீளம், இரண்டங்குலம் நான்கு யவம்; கட்டைவிரலுக்கு அடுத்த விரல் தொடங்கி, சிறு விரல் ஈறாக, அவ்வைற்றின் அகலங்கள் முறையே, ஒன்பது, ஏழரை, ஏழு, ஆறு யவங்களாகத் திறமையுள்ள சிற்பி அமைக்க வேண்டும் (25½)

அவ்வைற்றின் நகங்களுடைய நீளம், அந்தந்த நகங்களின் அகலத்தில் பாதியளவு ஆகும், (26)

ஒவ்வொரு விரலின் அகலத்தையும் நான்கு கூறாகப் பிரிக்க வேண்டும்; விரலின் நடுவியில், அதில் மூன்று கூறு களம் இருக்க

த்ரிபா₄க₃ம் ஜ்ஞாநதோ ப்ராஜ்ஞ: சதுரம்ஶம் வா ப்ரகல்பயேத் ॥௨௭॥

த்ரியவாதி₄கவஸ்வம்ஶம் பா₃ஹுமத்₄யவிஶாலகம் ।
ஸபாத₃ஸப்தமாத்ராங்க₃ம் கூர்பரே வ்யாஸ உச்யதே ॥௨௮॥

பாதோ₃நஷண்மாத்ராங்க₃ம் ப்ரகோஷ்டே மத்₄யவிஸ்த்ருதி: ।
பாதோ₃நசத்வாரம்ஶம் மணிப₃ந்த₄விஶாலகம் ॥௨௯॥

ஸப்தாம்ஶம் தத்தலாயாமம் ஸார்த₄ஷட் மத்₄யமாங்கு₃லி: ।
ஸபாத₃பஞ்சமாத்ராம்ஶம் ஸ்யாத₃நாமிகாங்கு₃லாயதம் ॥௩௰॥

யவாதி₄கம் பஞ்சாம்ஶம் தர்ஜந்யங்கு₃லிகாயதம் ।
ஸபாத₃வேத₃மாத்ராம்ஶம் தீ₃ர்க₄மங்கு₃லித்₃வயே ॥௩௧॥

மாறும். நகத்தைத் தவிர மற்ற இடங்களில், அந்த நான்கு கூறு களமுள்ளதாகவும் அமைக்க வேண்டும்.* (27)

புஜங்களின் மத்தியில் அவற்றின் அகலம் எட்டங்குலம் மூன்று யவம்; முழங்கையின் அகலம் ஏழங்குலம் இரண்டு யவம். (28)

முன்கையின் மத்தியில் அதன் அகலம், ஐந்து அங்குலம் ஆறு யவம். மணிக்கட்டின் அகலம் மூன்றங்குலம்—ஆறு யவம். (29)

உள்ளங்கையின் நீளம் (விரல்களில்லாமல்) ஏழு அங்குலம். நடு விரலின் நீளம் ஆறு அங்குலம் நாலு யவம்; மோதிரவிரலின் நீளம் ஐந்து அங்குலம் இரண்டு யவம். (30)

ஆள்காட்டி விரலின் நீளம், ஐந்து அங்குலம் ஒரு யவம். மற்ற இரண்டு விரல்களிலும் (சுண்டு விரல், கட்டைவிரல்) நீளம், நாலங் குலம் இரண்டு யவம். (31)

---

* காச்யபீயத்திலும் மற்ற நூல்களிலும் இவ்விடம் மாறுபட்ட கருத்து காண்கின்றது. நகத்தைச் சுற்றிலுமுள்ள சதைப்பற்றின் அகலம் இங்கு கூறப்படுவதாகச் சிலர் கருத்து.

அங்கு³ஷ்ட²மூலவிஸ்தாரம் ஸவாதா⁴ம்ஶ த்³விமாத்ரகம் |
தர்ஜநீமூலம் ஏகாம்ஶம் த்³வ்யம்ஶம் யவமத்⁴யமே || ௩௨ ||

அநாமிகா தர்ஜநீவத், கநிஷ்டா² ஷட்³யவோந்நதா |
தத்தத³க்³ரவிஸ்தாரமஸ்ய ஷோட³ஶாம்ஶவிவர்ஜிதம் || ௩௩ ||

தத்தத³க்³ரவிஸ்தாராம்ஶே, தத்ரைவ ரஸபா⁴ஜிதே |
பஞ்சாம்ஶம் நக²விஸ்தாரம், ஶிஷ்டார்த⁴ம் பார்ஶ்வமாம்ஸயோ: ||

ஸபாதா³தா⁴ரம் ஸர்வேஷாம் நகா²நாமாயதம் ததா² |
வ்ருத்தாயதம் நகா²காரம் கரயோ: பாத³யோஸ்ததா² || ௩௫ ||

பெருவிரலின் அடிப்புறத்தில் அதன் அகலம், ஒரு அங்குலம் இரண்டு யவம். ஆள்காட்டி விரலின் அடிப்புறத்தில் அதன் அகலம் ஒரு அங்குலம்: நடுவிரலின் அடிப்புறத்தில் அதன் அகலம் ஒரு அங்குலம் ஒரு யவம். (32)

மோதிரவிரல், ஆள்காட்டி விரலைப் போன்றது (அதாவது அடிப் புறத்தில் அகலம் இரண்டுக்கும் சமம், ஒரு அங்குலம்.) சிறு விரல், அடிப்புறத்தில் ஆறு யவம் அகலமுள்ளதாகும். ஒவ்வொரு விரலி னுடையவும் நுனியின் அகலம், அதன் அடிப்புறத்தின் அகலத்தில் வீசம் குறைந்தது. ஒவ்வொரு விரலினுடையயும் (நுனி) அகலத்தில் ஆறில் ஐந்து பங்கு அந்தந்த விரல்களின் நகங்களின் அகலமாகும். நகங்களின் ஓரங்களிலுள்ள சதைப் பற்று, மிகுதியின் (ஆறில் ஒரு பாகத்தின்) பாதியளவாகும். (அதாவது, நகத்தின் நுனி அகலத் தில் 1/12 பாக மாகும்.) (34)

எல்லா விரல்களிலும் உள்ள நகங்களின் நீளம் அந்தந்த விரல் நகங்களின் அகலத்தில் காற்பங்கு கூடியது; கைகளிலும் கால்களிலு முள்ள நகங்களின் வடிவம் நீள்வட்டவடிவமாகும். (35)

நகத்³விகு³ணமாநம் ஸ்யாத் ஸர்வாங்கு³ல்யக்³ரபர்வணாம் ததா² |
அங்கு³ஷ்ட²மூலபர்வாயாம: ஸப்ததஶயவோ மத: ||௩௫||

ததை²வாஷ்டாத³ஶயவம் மத்⁴யமாமூலபர்வகம் |
தர்ஜநீநாமிகாமூலபர்வ ஷோட³ஶஸம்மிதே || ௩௭ ||

கநிஷ்டா²மூலபர்வம் த்ரயோத³ஶயவம் ஸ்ம்ருதம் |
மூலாக்³ரபர்வணோர்யோகா³ர்த⁴ம் தீ³ர்க⁴ம் ஸர்வாஸு மத்⁴யபர்வஸு ||௩௮||

அங்கு³ஷ்ட²ம் த்³விபர்வயுதம் ஶேஷாங்கு³ல்யஸ்த்ரிபர்விகா: |
பாணிதலாக்³ரம் பஞ்சாங்கு³லம் தத்ர வேத³யவம் ப⁴வேத் ||

மத்⁴யாம்ஶம் ஷட³ங்கு³லம் மூலே ஷட்³வேதா³ம்ஶகம் |

ஒவ்வொரு விரலினுடையவும் நுனியிலுள்ள கணுவின் நீளம், அந்தந்த விரல் நகத்தின் நீளத்தில் இரண்டு பங்காகும். பெருவிரலின் அடிக்கணுவின் நீளம் பதினேழு யவங்கள். (36)

அவ்வாறே, நடுவிரலின் அடிக்கணுவின் நீளம் பதினெட்டு யவம்; ஆள்காட்டி விரல், மோதிர விரல் இவற்றின் அடிக்கணுவின் நீளம் (தனித்தனியே) பதினாறு யவங்களாகும். (37)

சிறு விரலின் அடிக்கணுவின் நீளம் பதின்மூன்று யவமாகும். ஒவ்வொரு விரலினுடையவும் அடிக்கணுவினுடையவும் நுனிக் கணுவினுடையவும் நீட்டளவைக் கூட்டி வந்த மொத்தத்தில் பாதியளவு அவ்வவற்றின் நடுக்கணுவின் நீளமாகும். (38)

பெரு விரல் இரண்டு கணுவுள்ளதாகும். மற்ற விரல்கள் மும்மூன்று கணுக்களுடையனவாம். உள்ளங்கையின் நுனியில் உள்ள அகலம் ஐந்து அங்குலம் நான்கு யவம். அதன் நடுப்புறத்தினகலம், ஆறு அங்குலம். அதன் அடிப்புறத்தினகலம் ஆறு அங்குலம் நான்கு யவம். பெரு விரலின் அடிப்புறத்திலிருந்து, ஆள்காட்டி

*அங்கு³ஷ்ட²மூலாத்தர்ஜந்யா மத்⁴யம் பா⁴க³த்ரிபா⁴க³த: ॥ ௪௰ ॥

அங்கு³ஷ்ட²மூலாத் வேதா³ம்ஶம்
மணிப³ந்தா⁴ந்தமேவ ஹி ।
அப்⁴யந்தராம்ஶம் மத்⁴யே பாணி-
தலே, †பார்ஷ்ணௌ த்ர்யங்கு³லம் ॥ ௪௧ ॥

தலாக்³ரே த்வம்ஶமாத்ரம் ஸ்யாத் அங்கு³லீமூலதஸ்து ।
அம்ஶார்தே⁴நாதி⁴கம் ஸ்தௌ²ல்யம் சயோபசிதத: ॥ ௪௨ ॥

விரலின் அடிப்புறம் வரையிலுள்ள நீளம் மூன்று அங்குலம் நான்கு யவம். (39—40)

பெருவிரலின் அடிப்புறத்திலிருந்து மணிக்கட்டு வரை உள்ள நீளத்தினளவு நான்கு அங்குலமாகும். உள்ளங்கையின் நடுவில் அதன் கனம் ஒரு அங்குலமும் நான்கு யவமும் ஆகும். உள்ளங்கையின் அடிப்புறத்தில் (மணிக்கட்டளவில்) அதன் கனம் மூன்று அங்குலமாகும். (41)

உள்ளங்கையின் (கைத்தலத்தின்) நுனியில் அதன் கனம் ஒரு அங்குலமாகும். விரல்களின் அடிப்புறத்தில் அரை அங்குலம் அதிகமாக, சதைப்பற்று இருக்கவேண்டும். (42)

---

* "அங்கு³ஷ்ட²மூலாதா³ரப்⁴ய தர்ஜநீமூலகாந்தகம் ।
ஸார்த⁴ம் து த்³வ்யங்கு³லம் ப்ரோக்தம்" (காச். 50-129) என்னும் சுலோகத்தில் இவ்வளவு. 2½ அங்குலமெனக் கூறப்பட்டது.

† "அங்கு³ஷ்ட²மூலாதா³ரப்⁴ய
மணிப³ந்தா⁴வஸாநகம் ।
தீ³ர்க⁴ம் வேதா³ங்கு³லம் ப்ரோக்தம்
மத்⁴யாம்ஶஞ்ச ஸமம் ப⁴வேத் ॥"

என்னும் (காச்யபீயம், 50—129.) சுலோகத்தில் 2½ அங்குலம் இதன் கனமிருக்க வேண்டுமென்று கூறப்படுகின்றது.

விஸ்தாரம் த்வ்யங்குலம் தஸ்ய *ஶுகோதரவிஸாரிணஃ |
ஶேஷம் கிஞ்சித்ததா நிம்நம் மத்யதலமத்யஸ்திதம் || ௪௩ ||

ஸூக்ஷ்மரேகா ஸ்ருவேத்தஸ்மிந் யவாகாரா ஶ்சக்ரஶூலகம் |
பத்மம் வாங்குஶகம் வா யதாகாராயதோந்நதம் || ௪௪ ||

வ்ருத்தாகாரேக்ஷிதாஜ்ஞேஷு வ்யாஸே பஞ்சவிபாஜிதே |
ஸைகாம்ஶம் த்ரிகுணம் விஸ்தாரத்ரிகுணம் ப்ரகீர்த்திதம் || ௪௫ ||

கைத்தலத்தின் அடிப்புறத்திலுள்ள "சுகோதர"த்தின் (கிளியின் வயிறு போன்ற அமைப்புள்ள பகுதியின்) அகலம் இரண்டங்குலமாகும். கைத்தலத்தின் மற்ற பகுதி சிறிது அழுந்தியிருக்கும். (உள்ளங்கையில்), கைத்தலத்தில் அவ்வாறு அழுந்திய மத்தியபாகம், மணிக்கட்டிலிருந்து படிப்படியாக விரல்களின அடிப்புறம் வரையில், ஐந்து, நான்கு, மூன்று யவம் ஆழம் அமுங்கி யிருக்கும். (43)

அவ்வாறு அழுந்திய கைத்தலத்தின் மத்தியில் மெல்லிய ரேகைகளைப் பொறிக்கவேண்டும் யவம் போன்றதும், சக்கரம், சூலம், தாமரை மலர், அங்குசம், இவை போன்றதுமான அமைப்புக்கள் அந்த ரேகைகளில் இடம் பெறவேண்டும். அவ்வாறான ரேகைகளின் ஆழம் ஒரு யூகை அளவு இருக்கலாம். (யூகை—அரைக்கால் யவம்). (44)

வட்ட வடிவமான உறுப்புகளின் குறுக்களவை ஐந்தால் வகுத்து, அதில் ஒரு பங்குடன் குறுக்களவின் மூன்று மடங்கைக் கூட்டி வந்த அளவு அவற்றின் சுற்றளவாகும். (அதாவது, வட்ட வடிவமான பொருளின் குறுக்களவு 1 அடி என்றால், அதன் சுற்றளவு $3\frac{1}{5}$ அடி. இது உத்தேசமான அளவாகும்; நவீன கணித

---

*விஸ்தாரம் த்வ்யங்குலம் தஸ்ய ஶுகோதரவிஸாரிணஃ |
காச். 50—131. சுலோகத்தின் படி "சுகோதரம்" என்றே கொள்ளப்பட்டது. இங்குள்ளபடி பொருள் தெளிவாக இல்லை. சுகோதரம்— மணிக்கட்டினின்று இருபுறமும் மேடாகச் செல்லும் உள்ளங்கையின் பகுதி.

தத்வ்ருத்தம் பரிணாஹம்
ஸபாதத்ரி: ஸம்ப்ரகல்பயேத் ।

கர்ணோர்த்வே ஶிரஸோ நாஹம்
ஸாஷ்டத்ரிம்ஶாங்குலம் பவேத் ॥ ௪௬ ॥
கர்ணோர்த்வே து ஶிரோவ்யாஸம்
யவோபேதஷோடஶாங்குலம் ।

கர்ணயோர் மத்யமம் க்ருத்வா
த்வாவிம்ஶத்யங்குலம் பூர்வே ॥ ௪௭ ॥

கர்ணயோ: ப்ருஷ்டநாஹஞ்ச த்வாதஶாங்குலமுச்யதே ।
தயோர்மத்யஸ்தநாஹஞ்ச கர்ணஸ்திதிர்த்வ்யங்குலா ॥ ௪௮ ॥

ஶிரஸோ மத்யமாதூர்த்வம் உஷ்ணீஷம் மண்டலாந்தகம் ।

முறைப்படி, 1 அடி குறுக்களவுள்ள வட்டத்தின் சுற்றளவு 3¼ அடியாகும்', (45¼)

காதுகளுக்கு மேற்புறத்தில், தலையின் சுற்றளவு முப்பத்தெட்டு அங்குலமாகும்: அதே இடத்தில் (காதுகளின் மேற்புறத்தில்) 'தலையின் குறுக்களவு பதினோரங்குலம் ஏழு யவம். (46½)

இனி, காதுகளை நடுவாக வைத்து விட்டு, அதன் முன்னும் பின்னும் இருக்க வேண்டிய (சிரஸின்) சுற்றளவு இரண்டு விதமாகக் கூறப்படுகிறது. காதுகளின் முன்புறத்தில் உள்ள (தலையின் முன் பாதி' பகுதியின் சுற்றளவு 22 அங்குலம். (47)

காதுகளின் பின்புறத்தில் உள்ள (தலையின் பிற்பாகம்) பகுதியின் சுற்றளவு பன்னிரண்டு அங்குலமாகும்: இவ்விரு சுற்றளவுகளுக்கும் இடையில் உள்ள பகுதி, இவ்விரண்டங்குலம் இரு காதுகளின் இருப்பிடமாகும். (48)

சிரஸின் மத்தியிலிருந்து, உச்சந்தலையில் உள்ள மண்டலம் வரை உள்ள இடைப் பகுதியின் (கிரீடத்தால் மறைக்கப் பட்ட சிர

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௪௯ ॥

𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌦𑍇𑌵 𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍 𑌪𑍃𑌷𑍍𑌠𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌯𑌵𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

𑌲𑌲𑌾𑌟𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥

𑌭𑍍𑌰𑍁𑌵𑌾𑌵𑌾𑌪𑌾𑌕𑍃𑌤𑍀 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑍌 𑌚𑌾𑌪𑌾𑌕𑌾𑌰𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌾𑌰𑍍𑌧𑌵𑍇𑌦𑌯𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌰𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌾𑌰𑌂 𑌯𑌵𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌤𑍍𑌕𑍍𑌷𑍀𑌣𑍌 𑌭𑍍𑌰𑍁𑌵𑌾𑌵𑌗𑍍𑌰𑍇 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑌨𑍂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

ஸின் பகுதி) அளவு நான்கு அங்குலம்; இம் மண்டலத்திலிருந்து, முன்புறமுள்ள கேசாந்தம் வரை உள்ள அளவு ஒன்பது அங்குலமாகும். (49)

அதே மண்டலத்திலிருந்து, காதுகளின் அருகில் உள்ள கேசாந்தம் வரையில் உள்ள நீளம் ஒன்பது அங்குலம்; அதே மண்டலத்திலிருந்து, பின்புறத்திலுள்ள கேசாந்தம் வரை உள்ள நீளம் பத்து அங்குலம் நான்கு யவம். (50)

நெற்றியின் அகலம் ஒன்பது அங்குலம்; கேசாந்தத்துக்கும் அக்ஷி (கண்) ஸூத்திரத்திற்கும் நடுமத்தியில் இருக்குமாறு புருவங்களை அமைக்கவேண்டும்; அவற்றை வில் போன்ற வடிவில் ஒன்பது அங்குலம் நீளத்தில் அழகாக அமைக்க வேண்டும். புருவங்களிரண்டினுடையவும் மத்தியிலுள்ள பகுதி நாலரை யவம் அளவுள்ளதாகும். (51—52)

புருவங்கள் இரண்டும் தனித்தனியே ஐயைந்தங்குலம் நீளமாம்; அவற்றின் மத்தியபாகத்தில் அவைகளின் அகலம் இரண்டு யவம்; இரண்டு புருவங்களும் முதலாவது பிறைச்சந்திரன் போல், நடுவில் விசாலமாயும், படிப்படியாக நுனிகளில் சுருங்கிக் குவிந்தவாறும் அமைய வேண்டும். (53)

கநீநிகாயா விஸ்தாரம் யவமாத்ரம் விஶேஷத: |
க்ருஷ்ணமண்டலவிஸ்தாரம் ப்ரோக்தம் ஷட்யவம் பவேத் || ருச ||

ஸிதாம்ஶம் தத்ப்ரமாணம் க்ருஷ்ணமண்டலபார்ஶ்வயோ: |
மத்ஸ்யாக்ருதிகம் வாபி பத்மபத்ராக்ருதிரேவ வா || ருரு ||

அர்த்தசந்த்ராக்ருதிம் வாபி நேத்ராகாரம் ப்ரகல்பயேத் |
ததாகாரானுகூல்யேந ஸிதமண்டலகோடிஷு || ருசா ||
அர்த்தயவம் ரக்தம் மண்டலம் க்ஷயிகாம்ஶகே |

க்ருஷ்ணமண்டலமத்யே து ஜ்யோதிர்மண்டலகம் யவம் || ருஎ ||

ததஷ்டாம்ஶைகமாநேந தந்மத்யே த்ருஷ்டிமண்டலம் |

'கநீநிகா' என்பது கருவிழியின் நடுவில் 'பாப்பா' எனப் படும் பகுதியாகும்: இதன் அகலம் ஒரு யவமாகும்: கருவிழியின் அகலமும் உயரமும் (அதாவது குறுக்களவு) ஆறு யவம். (54)

கருவிழியின் இருபுறங்களிலும் உள்ள வெண்மையான பகுதிகளும் அவ்வளவே அகலம் (ஆறு யவம்) உள்ளவை யாகும். கண்ணின் முழுத் தோற்றம் மீனின் வடிவமாகவோ, தாமரையிதழ் வடிவமாகவோ, அரைச் சந்திரன் வடிவமாகவோ இருக்குமாறு அமைக்க வேண்டும். கண்களின் அகல, உயரங்களுக் கேற்றவாறு, வெண்மையான பகுதியின் இரு முனைகளிலும் அரை யவம் அளவு சிவந்த மண்டலம் (சதைப்பற்று) அமைக்க வேண்டும். (54—56½)

வட்ட வடிவமான கருவிழியின் மத்தியில் (கீழ்க் கூறப்பட்ட கநீநிகையின் நடுவில்), ஜோதி மண்டலம் எனப்படும் (ஒளி வீசும்) வட்டப் பகுதியின் அளவு ஒரு யவமாகும். (57)

அந்த ஜோதிமண்டலத்தின் மையத்தில் திருஷ்டி மண்டலம். அந்த ஜ்யோதிர்மண்டலத்தின் அளவில் எட்டில் ஒரு பங்குடையது.

ஸார்த⁴ம் து யவமாநம் ச ஊர்த்⁴வபக்ஷ்மவிஸ்தாரகம் || ௫௮ ||

அத⁴ ச தத்ப்ரமாணம் ஸ்யாத், தீ³ர்க்⁴யமஷ்டாத³ஶயவை: |
நேத்ரயோரந்தரம் கார்யம் ஸபாத³த்³வ்யம்ஶமாத்ரக: || ௫௯ ||

அதோ⁴த்³ருஷ்டிர்யஜமாநஸ்ய ஊர்த்⁴வத்³ருஷ்டிர்மஹத்³ப⁴யம் |
ப³ந்து⁴நாஶம் பார்ஶ்வத்³ருஷ்டிர்க்³ராமநாஶமதோ²ऽபி வா ||

(அரைக்கால் யவம்). கண்ணின் மேல் இமையின் அகலம் ஒன்றரை யவம். (58)

கீழ் இமையின் அகலமும் அவ்வளவே (அதாவது ஒன்றரை யவமே) யாகும்.

குறிப்பு:- இங்கு மூலம் "அத ச தத்ப்ரமாணம்" என்று இருப்பது பொருள் தராமையினால், தொடர்ச்சியை ஒட்டி "அத⁴ஶ்சைவ தத்ப்ரமாணம்" என்று திருத்திப் பொருள் கூறப்பட்டது. காச்யபீயம், ஐம்பதாவது படலம், 147-148-வது சுலோகங்களில்,

"ஊர்த்⁴வம் யவமாநம் து பக்ஷ்மவிஸ்தாரம் ப⁴வேத் |
"அத⁴ஶ்சைவ து தத்ப்ரமாணம்" என்று இருப்பதை ஒப்பு நோக்குக.

இமைகளின் நீளம் பதினெட்டு யவம்; கண்களிரண்டுக்கும் இடையில் உள்ள பகுதியை இரண்டே கால் அங்குலம் (பதினெட்டு யவம்) இருக்குமாறு அமைக்க வேண்டும். (59)

இனி, கண்பார்வைகளின் குணதோஷம் கூறப்படுகிறது. கீழ் நோக்கிய பார்வை பிம்பத்தின் நேத்திரத்தில் அமையுமாயின், எஜமானுக்கு அழிவுண்டாகும்; அவ்வாறே, பார்வை மேல் நோக்கியதாக இருந்தால், பெரும் இடுக்கண் தோன்றும்; பக்கங்களில் பார்வை செல்லுமானால், உறவினர்களுக்கு அழிவுண்டாகும்; மேலும், ஊருக்கே அழிவு வரினும் வரும். (60)

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ஸமத்ருஷ்டிம் ப்ரகாரயேத் ।
நாஸிகாபுடபாஹ்யஸ்ய தாரோஷ்டாதஶயவை: ॥

தந்மத்யே ஹ்யர்த்தவிஸ்தாரம், தஸ்யார்த்தம் ச குணவிஸ்த்ருதி: ।
ஓஷ்டோர்த்வாத்து நாஸாக்ரம் த்வ்யங்குலம் த்வுச்சம் பவேத் ॥

ஸார்த்தஸப்தயவம் வ்யாஸம் நாஸாரந்த்ரயயோ: ப்ருதக் ।
ஸாந்தர்தைர்க்யம் பஞ்சயவம் புடா நிஷ்பாவபீஜவத் ॥ ௬௩ ॥

திலபுஷ்பஸமாகாரம் நாஸிகாயா விஶேஷத: ।
புஷ்கரோத்த்வேய மத்யாம்ஶம் தத்ஸமம் த்ரியவம் பவேத் ॥ ௬௪ ॥

ஆதலின், மிகவும் முயற்சி செய்து, ஸமதிருஷ்டி (நேரான கண் பார்வை) இருக்குமாறு அமைக்க வேண்டும். (60½)

நாசித் துவாரங்களின் வெளிப்புறத்தின் அகலம் பதினெட்டு யவம். (61)

நாசியின் மத்தியில் அதன் அகலம் அதில் (பதினெட்டு யவத்தில்) பாதி. (அதாவது. 9 யவம்); நாசியின் தொடக்கத்தில் அதன் குறுக்களவு (கனம்), அதிலும் (9 யவத்தில்) பாதி (அதாவது, 4½ யவம்), மேலுதட்டின் மேல் வரம்பிலிருந்து, நாசி நுனி வரை உள்ள உயரம் இரண்டு அங்குலமாகும். (62)

நாசித்துவாரம் ஒவ்வொன்றின் உள் அகலம் தனித் தனியே ஏழரை யவம் ஆகும்; நாசித்துவாரத்தின் உள் உயரம் ஐந்து யவமாகும்; நாசித்துவாரங்கள் அவரை விதை போன்ற வடிவமுடையனவா யிருக்க வேண்டும். (63)

நாசியின் தோற்றம், எள்ளுச் செடியின் பூவைப் போல் அமைந்து, சிறப்புற விளங்க வேண்டும். நாசித்துவாரங்களிரண்டின் நடுவில் சுவர் போல் அமைந்துள்ள பகுதி 'புஷ்கரம்' எனப்

பாடயோருச்ச்ரயஸ்திஷ்டா பாஷாம்ஶமிதம் ஸ்ம்ருதே ।
ஸூத்ராத்யவஸார்த்தம் ஸ்யாந் நாஸாக்ரம் ப்ரலம்பிதம் ॥ ௬௫ ॥

நாஸாயுக்தயவம் கோஷ்டம்* ஸ்ருக்கோர்த்வாந்தாதிவஸ்திதம் ।
ஜோஷ்டோர்த்வரேகாயா ப்ராக் கோஜீ நாஸாந்த்ய ஸம்மிதம் ॥

ய்வஸார்த்தம் சதம் கோஜீம் ஸ்ருக்கேவம் நாஸிகாதய: ।
ஸமாதவ தாஸம்ஸம் தீர்க்க்ஷமாஸ்ய மாத்ரயா ॥ ௬௭ ॥

உத்தரோஷ்டாயதம் தஸ்ய தீர்க்கதாஸ்ய ஸமாயதம் ।
உத்தரோஷ்டஸ்ய மத்யே து ததம் ஸாயஸ்யமத்ரயம் ॥ ௬௮ ॥

படும். அதன் உயரம் ஒரு அங்குலமும், களம் மூன்று யவமும் ஆகும். (64½)

நாசித்துவார ஸூத்திரத்திலிருந்து, நாசியின் நுனி ஒன்றரை யவம் வளர்ந்து தொங்குமாறிருக்க வேண்டும். (65)

மேலுதட்டின் மேற்பகுதியிலிருந்து, மூக்குச் சுவர் வரை, கால் வாய் போல் சிறிது அழுந்தியதாகச் செல்லும் பகுதி 'கோஜி' எனப் படும். அதன் நீளம் நாலரை யவம்; அதிற் பாதி (2¼) யவம் அதன் அகலம். (66)

மேற் சொன்ன கோஜியின் ஆழம் அல்லது பதிவு ஒரு யவமாகும். வாயின் நீளம் (குறுக்கே) நாலங்குலம் இரண்டு யவமாகும். (67)

மேலுதட்டின் நீளம், முன்கூறிய வாயின் நீளத்துக்குச் சமமே யாகும். (அதாவது 4 அங்குலம் இரண்டு யவம்.) மேலுதட்டின் மத்திய பாகத்தில் அதன் அகலம் மூன்றரை யவம். (68)

---

* இங்கு "கோஷ்டம்" என்பது தவறு; "கோஜீ" என்று இருத்தல் வேண்டும்.

𑌆𑌨𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑌾𑌰𑌂 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋 𑌹𑍀𑌨𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌯𑌵𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌵𑌰𑌂 𑌪𑌾𑌲𑌿* 𑌤𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌸𑍍𑌤𑌥𑍋𑌪𑌰𑌿 ॥௬௯॥

𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌵𑌨𑍍𑌤𑌤𑌾 𑌪𑌾𑌲𑌿* 𑌤𑌤𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌮𑌾𑌨𑌤𑌃 ।
𑌦𑌶𑌾𑌷𑍍𑌟𑌯𑌵𑌂 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌦𑌲𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌂 𑌤𑌥𑌾 ॥௭௦॥

𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇𑌽𑌪𑌿 𑌚 ।
𑌦𑌲𑌾𑌨𑌂 𑌪𑌾𑌲𑌿𑌕𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌯𑌵𑌾𑌧𑍋𑌽𑌧𑌰𑌤𑌃 ॥௭௧॥

𑌮𑍁𑌖𑌾𑌦𑌧𑍋𑌽𑌧𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌷𑌡𑍍𑌯𑌵𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌸𑍍𑌮𑌿𑌤𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌂 𑌸𑌂𑌯𑍋𑌜𑍍𑌯 𑌸𑍁𑌷𑌮𑌂 𑌤𑌥𑌾 ॥௭௨॥

அங்கிருந்து, மேலுதட்டின் அகலம். இருபுறமும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும். அந்த மேலுதட்டின் மேல், ‘‘பாலி’’ என வழங்கப்படும் சதை விளிம்பு ஒரு யவம் களமுடையதாயிருக்கும்.

அந்த ‘‘பாலி’’, மேலுதட்டின் நீளத்தளவுக் கேற்றவாறு, மூன்று இடங்களில் வளைந்து இருக்கும். கீழுதட்டின் நீளம் பதினெட்டு யவம். (70)

கீழுதட்டின் அகலம் (அதன் மத்தியில்) ஒரு அங்குலம் ஒரு யவம். கீழுதட்டின் கீழ்ப்புறத்திலுள்ள ‘‘பாலி’’ ஒன்றரை யவம் கனமுள்ளதாகும். (71)

மோவாயிலிருந்து கீழுதட்டின் (நுனி வரை) உள்ள உயரம் ஆறரை யவம். இவ்வாறு உதடுகளை அமைக்கும் பொழுது, சிறிதளவு புன்னகையுடன் கூடிப் பொலிவுற்று விளங்குமாறு அமைக்க வேண்டும். (72)

---

* இங்கு ‘‘𑌪𑌾𑌲𑌿’’ என்பது ‘‘𑌪𑌾𑌲𑌿𑌃’’ என்று இருத்தல் வேண்டும். காச்யபீயம், ஐம்பதாம் படலம், சுலோகம் 158-ல் ‘‘𑌯𑌵𑌾𑌷𑍍𑌟𑌕𑌂 𑌵𑌰𑌂 𑌪𑌾𑌲𑌿𑌃’’ என்றும், ‘‘𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌵𑌨𑍍𑌤𑌤𑌾 𑌪𑌾𑌲𑌿𑌃’’ என்றும் இதே இடத்தில் பாடம் உள்ளமை காண்க.

ஆயாமஶ்சிபுகோஷ்டஸ்ய ஸார்த்தத்வ்யங்குலம் பவேத் |
சிபுகாத்து ஹநோர்மூலம் ஸார்த்தைகயவமிஷ்யதே ॥ ௭௩ ॥

ஸாயவத்ர்யங்குலம் ஹநோஸ்தாரமாயதவ்ருத்தவத் |
ஹநோரோஷ்டஸந்தே: கர்ணாவதி த்ர்யஶ்ரம் து தஶாங்குலம் ॥ ௭௪ ॥

ஹநோர்வாஹ்யஸ்ய தாரஸ்ய பார்ஶ்வே கர்ணப்ரவேஶகம் |
கர்ணவேஶம் த்ரிபாதைகம் தத்ர கர்ணம் ப்ரகல்பயேத் ॥ ௭௫ ॥

நேத்ராத்து கர்ணபர்யந்தவிஸ்தாரம் ஸப்தமாத்ரகம் |
கர்ணஸ்ய து விஶாலம் து அஷ்டாதஶ யவா: ஸ்ம்ருதா: ॥ ௭௬ ॥

அக்ஷிஸூத்ரோர்த்வத: கர்ணோத்துங்கோஷ்டாதஶ யவா: |

கீழுதட்டிலிருந்து மோவாயின் (கீழ்ப்புறம்) முடிவுரை இரண்டரை யங்குலம் உயரம். மோவாயிலிருந்து தாளின் (கன்னத்தின் கீழ்ப் புறம்) இருப்பிடம் ஒன்றரை யவமாகும். (73)

கன்னத்தின் அகலம் மூன்று அங்குலம் நான்கு யவமாகும்: கன்னம் நீள் வட்டவடிவில் அமைய வேண்டும். கன்னத்தின் சந்தியி (இரண்டு உதடுகளும் இருபுறமும் ஒன்று சேருமிடத்திலிருந்து. கன்னத்துடன் காது கூடும் வரையுள்ள அகலம் பத்து அங்குலம். (த்ர்யஶ்ரம் என்பது "அஶ்ரம்" என்றே கொள்ளப்பட்டது.) (74)

கன்னத்துக்கு அப்பால் உள்ள இடத்திற்கு "கர்ணவேசம்" என்று பெயர். இதன் அளவு ஒன்றே முக்கால் அங்குலம். இவ் விடத்தில் காதுகளை அமைக்க வேண்டும். (75)

கண்ணிலிருந்து காதளவு வரையுள்ள தூரம் ஏழு அங்குலம். காதின் அகலம், பதினெட்டு யவம். (76)

அக்ஷி (கண்) ஸூத்திரத்திலிருந்து காதின் (உச்சியின்) உயரம் பதினெட்டு யவம். காதின் மேற்புறத்தில், உட்புறம் வளைந்தவாறு

तदधोऽर्धायामं नवयवं, शेषं वृत्ताकारमाप्नुयात् ॥७७॥

नेत्रसूत्रादधः कर्णं यवाः सप्तदश स्मृताः ।
सार्धवेदाङ्गुलं दीर्घं नालं मृदुमयं भवेत् ॥७८॥

पुरस्तादेकमात्रं *नतं पृष्ठे सार्धाङ्गुलं तथा ।
नालयोर्विस्तारं वेदयवं(?) चतुर्यवाङ्गयोः ॥

नालमध्ये त्रिपादांशं वेदांशं विस्तारात् ।
कर्णतुङ्गमशेषं तु सप्तैकोननवाङ्गुलम् ॥ ८० ॥

विहीनवद्यर्धांशं पिप्पलि घनायतम् ।

உள்ள பாகத்தின் அகலம் அரைப் பாதி (ஒன்பது யவம்); காதின் மற்றப் பகுதி வட்ட வடிவமானதாகும். (77)

அக்ஷி (கண்) ஸூத்திரத்தின் கீழ் காதின் உயரம் (தொங்கல்) பதினேழு யவம். காதின் அடிப்புறத்தில் உள்ள மென்மையான சதைப் பற்று "நாளம்" எனப்படும். (காதணி அணியுமிடம்) அதன் நீளம் (தொங்கல்) நாலரை அங்குலமாகும். (78)

நாளத்தின் அகலம் (முன்புறத்தில்) ஒரு அங்குலம்; பின்புறத்தில் அதன் அகலம் ஒன்றரை அங்குலம். நாளங்களிரண்டினுடையவும் அகலம் நான்கு யவம். (79)

நாளங்களின் இடைவெளி முக்கால் அங்குலம் (ஆறு யவம்) அளவுள்ளதாம், அகலத்தில் காற்பங்கு கனமுள்ளதாக நாளம் இருக்க வேண்டும். காதின் முழு உயரம் நாளங்களுள்பட, எட்டு அங்குலம் ஏழு யவம். (80)

"கர்ணபிப்பலி" எனப்படும் பகுதியின் கனம் அரை அங்குலம்.

குறிப்பு:— विहीनवं என்பது, विष्वीनतं என்றிருக்கத் தகும். சில நூல்களில் இதன் கனம் 1½ அங்குலம் என்று கூறப்படுகின்றது. கர்ணபிப்பலி— என்பது காதின்

---

* இங்கு "नत" என்பது "ततं" என்று கொள்ளப்பட்டுப் பொருள் கூறப்பட்டது.

உச்ச்ரயம் சார்த்தமாத்ரம் ஸ்யாத் மூலாதக்ரம் க்ஷயான்விதம் ॥

த்விமாத்ரம் பிஞ்ஜூஷீதைர்க்யம் ஸயவ்யம்ஶாம்ஶம் விஸ்த்ருதம் ।
அக்ஷிஸூத்ராதத: கர்ணத்வார யவார்த்தாங்குலம் பவேத் ॥ ௮௨ ॥

மத்தியில் முன்புறத்திலிருந்து பின் புறத்தை நோக்கியவாறு சிறிது வளர்ந்து செல்லும் சதைப் பகுதியாகும். இதிலும் துளையிட்டு அணியை அணிவதும் நம் நாட்டில் உண்டு.

அதன் நீளம் அகலத்தைப் போல் இருமடங்காகும். இதன் உயரம் அரை அங்குலமாகும். அடிப்புறத்திலிருந்து (தொடங்கு மிடத்திலிருந்து) படிப்படியாக முனைவரையில் இதன் களமும் அகலமும் குறைந்து கொண்டே போகும். காதின் உட்புறத்தில், பிப்பலீயின் நேர் பின் பாகத்தில் உள்ள சுவர் போன்ற வளைவான பகுதி பிஞ்சுஷீ— எனப்படும், காதின் துவாரத்தின் எல்லையாகிய இவ் வெறுப்பு, கர்ணபிப்பலியை உள்ளே அழுத்தினால் அதற்கு ஆதாரமாக எதிர்ப்புறத்தில் நிலைத்து நின்று காதின் துவாரத்தை அடைத்துக் கொள்ள உதவும். கிரந்த எழுத்தில் "ல" என்னும் எழுத்து "ஞ" இவ்வாறு எழுதப்படும். காதின் அமைப்பை இவ்வெழுத்துடன் ஒப்பிட்டுக் கூறுவர் சான்றோர். இவ்வெழுத்தின் உட்புறத்தில் உள்ள பகுதியைப் போல் காதிலும் ஓரிடம் உள்ளதல்லவா? அதுவே பிஞ்சுஷீ-விஞ்சுஷீ பிஞ்சலீ— என்றெல்லாம் வழங்கப் படுவதாகும். இதன் நீளம் இரண்டு அங்குலங்கள். அதன் அகலம், ஒரு அங்குலம், நான்கு யவம். நேத்திர ஸூத்திரத்தின் கீழ் கர்ணத் துவாரம் அரை அங்குலமாகும்.

குறிப்பு :— இங்கு "கர்ணத்வார" என்பது "கர்ணத்வாரம்" என்றிருத்தல் தகும். காச்யபீயம். 50-வது படலம். 171-வது சுலோகம்— "அக்ஷிஸூத்ராதத: கர்ணத்வார யவார்த்தாங்குலம் பவேத்" என்பதற்கிணங்க, இந்நூலிலும் அடுத்த சுலோகம் "கர்ணத்வாரம்" என்று துடங்குகின்றமை காண்க. இங்கு கர்ணத்துவாரத்தின் அளவு, ஒரு அங்குலம் நான்கு யவம், என்று சில நூல்களில் கூறப்படுகின்றது. (82)

கர்ணத்வாரஞ்ச தந்நிம்நம் ஸமமேவ து வர்த்துலம் ।
கர்ணபாலிவிதம் ஸார்த்தயவம், நீவ்ரம் சதுர்யவம் ॥ ௮௩ ॥

ப்ருஷ்டகர்ணஸ்ய விஸ்தார ஏகாங்குலம் சதுர்யவம் ।
கேஶாந்தாச்ச ப்ருஷ்டகர்ணாந்தமந்தரம் ஸசதுர்யவம் ॥

ப்ருஷ்டகர்ணாவஸாநே து *(க்ருதா) த்யர்த்தாம்ஶம் வதேத் ।

காதின் துவாரம் சமமான வட்டவடிவமாக அமைய வேண்டும். "கர்ணபாலி" என்பது காதில் கடுக்கன் - ஓலை— முதலியவற்றை அணியுமிடம். அதன் கனம் (குறுக்களவு) ஒன்றரை யவம். அதனுடைய நீவ்ரம் (இடை வெளி) நான்கு யவமாகும். (83)

உத்தம தசதாளத்தில் பிம்பத்தின் முன்புறத்தின் அகல அளவு கள் கூறப்பட்டன. பின்புறத்தின் அகல அளவுகள் இனி விளக்கப் படுகின்றன.

காதின் பின்புறத்தினகலம் ஒரு அங்குலம் நான்கு யவம். கேசாந்தத்திலிருந்து காதின் பின்புறத்தின் எல்லை வரை உள்ள இடைப் பகுதியின் அளவு நான்கு யவம். (84)

குறிப்பு :— இவ்விடத்தின் அளவு சில நூல்களில், ஒரு அங்குலம் நான்கு யவம்— எனக் கூறப்படுகின்றது. காச்யபீயம்— "கேஶாந்தாத் ப்ருஷ்டகர்ணாந்தம் த்வ்யங்குலம் ஸசதுர்யவம்" (50—173) என்னும் ச்லோகத்தில் இதே இடத்தினளவு இரண்டங்குலம் நான்கு யவம்—என்று கூறப்படுகின்றது. இந் நூலிலுள்ளபடி எம்மால் மொழிபெயர்ப்பில் எழுதப்பட்டது. அறிஞர்கள் ஆய்ந்துணர்க.

காதின் பின்புறத்தில், மண்டை ஓட்டுடன் காது இணையுமிடத்தி லுள்ள, சிறிது மேடான பகுதி "க்ருதாளீ" எனப்படும், இதன்

---

* வளைவுக்குள் இருக்கும் எழுத்துக்கள் மற்ற நூல்களின் உதவியினால் எம்மால் சேர்க்கப்பட்டவை. அச்சிட்ட புத்தகத்தில் இவ்விடம் குறையாக விடப்பட்டது.

தலஹ்ராய: ப்ருஷ்டகர்ணாந்தம் யுகாம்ஶம் த்ரியவாதிகம் ||

க்ருகாடிகாயோர்க்ரீவாந்தம் (†ப்ருஷ்டாக்ராந்தம்) நவாம்ஶகம் |

கணம் நான்கு யவம். அதன் கீழ், பின் கழுத்தினுயரம் நான்கங்குலமும் மூன்று யவமும். (85)

குறிப்பு:— காச்யபீயம். 50—174. "தலஹ்ராய: ப்ருஷ்டக்ரீவாந்தம்" என்றிருப்பதனால் "பின் கழுத்தின் உயரம்" என்று பொருள் தரப்பட்டது. இந்நூலிலேயே "நலஹ்ராய: ப்ருஷ்டகர்ணாந்தம்" என்றொரு பாடம் உளது. அதன்படி "பின் காதின் உயரம்" என்று பொருள்படும். சில நூல்களில் அப்படியும் பொருள் படுமாறு பாடம் உளது. இதுவே பொருத்தமானதென்று தோன்றுகிறது. (85)

† க்ருகாடிகா— என்பவை தலையும் கழுத்தும் கூடுமிடத்தில் பின்புறத்திலுள்ள இரு ஸந்தி மர்மஸ்தானங்கள் அவற்றின் கீழ். பின்புறம் முதுகின் உச்சியிலிருந்து. கழுத்தின் உயரம் ஒன்பதங்குலம்.

---

* இங்கு வளைவுக்குள் உள்ள பகுதி காச்யபீயத்தின் பாடத்தைத் தழுவி எம்மால் சேர்க்கப்பட்டது. அச்சுப் பிரதியில் இவ்விடம் குறையாகவே விடப்பட்டது.

† "அத ஊர்த்வஜத்ருகதானி வ்யாக்யாஸ்யாம:... ......ஶிரோக்ரீவயோ: ஸந்தானே க்ருகாடிகே நாம. தத்ர சலமூர்த்ததா ... ... ஏவமேதானி ஸப்தத்ரிம்ஶத் ஊர்த்வஜத்ருகதானி மர்மாணி வ்யாக்யாதானி" (ஸுஸ்ருத ஸம்ஹிதை, (சாரீரஸ்தானம். ஸூ. 27).

கருத்து:— தலையும் கழுத்து மிணையுமிடத்தில் "க்ருகாடிகா" என்னும் இரண்டு ஸந்திமர்மங்கள் உள்ளன. அவைகளில் குறைவு உண்டானால் தலை அசைவற்று நிற்காது. ஆடிக்கொண்டேயிருக்கும்.

வ்யாஸோ க்ரீவஸ்ய மூலஸ்ய தாரம் ஸாயுகதஶாங்குலம் ||

ஊர்த்வாதூர்த்வம் க்ரமாத் க்ஷீணம் க்ரீவம் வ்ருத்தமிஷ்யதே |
ஹிக்காஸூத்ரோபரி ஸ்கந்தஸந்திஸ்தாஞ்சம் யமாங்குலம் ||

கர்ணபந்தாதத: ஸ்கந்தாந்தம் ஷண்மாத்ரம் ஸ்கந்தவிஸ்தக: |
ஸவேதாங்குலகனம் ஸ்கந்தம் ஹிக்காவதி க்ருஶாத்மக: || ௮௮ ||

வ்யாஸோ க்ரீவாதஸ்தாத்து ககுந்நாமம் தஶாங்குலம் |
தஸ்மாதாகடிஸூத்ராந்தம் வம்ஶ: ப்ருஷ்டாங்குலாயத: || ௮௯ ||

தத்வம்ஶேன நதவிஸ்தாரேண
ஸார்த்தஷோடஶகே யத்ர்தே: |

(இங்கும் கருத்து வேற்றுமை உளது. சில நூல்களில், க்ருகாடிகா விலிருந்து காதின் அடிப்புறம் வரையிலுள்ள இடைவெளி ஒன்பதங் குலம் என்று கருத்து உரைக்கப் பட்டுள்ளது.) பின் கழுத்தின் அடிப்புறத்தின் அகலம் பத்து அங்குலம் நாலு யவம். அடுத்தாற் போல் கழுத்தின் அடிப்புறத்தினகலம் கூறப்படுவதால், இந்த அளவு கழுத்தின் நுனியினகலத்திற்கே அமையுமென்பது எமது கருத்து.

கழுத்து, அடிப்புறத்தில் அகலமாகவும் மேலே செல்லச் செல்லப் படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்வதாயும் இருக்க வேண் டும். கழுத்தின் பரிதி (சுற்று) வட்டமாக இருக்க வேண்டும். (அதா வது— கழுத்து வட்ட வடிவமா யிருக்கவேண்டும்) ஹிக்கா ஸூத் திரத்தின் மேலிருந்து தோள்கள் ஒன்றுகூடு மிடம் நான்கு அங்கு லம் உயரமாகும். (87)

கர்ணபந்தத்தின் கீழ் தோள் வரையில் உள்ள இடைப்பகுதி யின் உயரம் ஆறு அங்குலமும் நான்கு யவமும். தோளின் கனம் ஏழு அங்குலம். அது (தோள்), ஹிக்காஸூத்ரம் வரையில் படிப்படி யாகக் குறைந்து கொண்டே வரும்.

கழுத்தின் பின்புற (பின் கழு) த்திற்குக் கீழ் பிடரியின் அளவு பத்து அங்குலங்கள் உயரம் அதிலிருந்து நேராகக் கீழே இடுப்

வம்ஶோ நாடீயஸ்தத்ர
வம்ஶதண்டம் ச நாமத: ॥ ௯0 ॥

*ப்ருஷ்டே து துங்கமேவஸ்யாத், வ்யாஸம் தஸ்ய ச வச்ம்யஹம் ।
ஸாயகீத்ர்யக்ஷாங்குலம் வ்யாஸம் கக்ஷயோரந்தரம் யவா: ॥

கக்ஷாத: ஸ்யாம்ஸபலகதுங்கம் ஸப்தாங்குலம் பவேத் ।
கக்ஷோர்த்வே பாஹுஶீர்ஷம் ஸப்தாங்குலமுதாஹ்ருதம் ॥

பின் இணைப்பு வரை செல்லும் முதுகெலும்பு (முள்ளந்தண்டு) இருபத்தேழு அங்குலம் உயரமாகும். இதற்கு "வம்சம்" என்றும், "வம்சதண்டம்" என்றும் பெயருண்டு. இதன் பதிவு (கனமும்) அகலமும் பதினைறரை யவம் அளவுள்ளதாகும். வம்சத்தின் (முதுகெலும்பின்) கீழ் அதன் அடிப்புறம் மூன்றங்குலம் உயரம். (90)

பின்புறத்தில் (இடை வரை) உள்ள உயரம் இவ்வாறு கூறப்பட்டது. இனி அகலத்தை ஐயமறக் கூறுகிறேன். கக்ஷங்க (அக்குட் குழிக)ளிரண்டினுடையவும் இடைப்பகுதியின் அகலம் 27 அங்குலமும் நான்கு யவமும். (91)

கக்ஷங்களின் கீழ்ப்புறத்திலுள்ள "அம்ஸபலகம்" பலகை போலுள்ள பின் தோளின் பகுதியின் உயரம் ஏழங்குலம். கக்ஷங்களுக்கு மேற்புறத்தில் புஜங்களின் எல்லைவரை ஏழங்குலம். (92)

குறிப்பு :— "கக்ஷங்களின் பின்புறத்திலுள்ள" அம்ஸபலகங்களின் உயரம் ஏழங்குலம்" என்று சில நூல்களில் கருத்து விளக்கப் படுகிறது.

---

* ப்ருஷ்டே து துங்கமேவம் ஸ்யாத் வ்யாஸம் தஸ்ய நிகா-ஒதே" என்னும் காச்யபீயம். 50-வது படலம், 178-வது சுலோகத்தைக் கருத்தில் கொண்டு இந்நூலில் 91-வது சுலோகம் முற்பகுதிச் சொற் பொருள் விளக்கப் பட்டுள்ளது.

ஸார்த்தஷோடஶமாத்ரம் து மத்யப்ருஷ்டஸ்ய விஸ்த்ருதம் ।
நாபிஸூத்ரே து விஸ்தாரம் ஸார்த்தவிம்ஶாங்குலம் ததா ॥

கடிபந்தே து விஸ்தாரம் த்ரிஷடங்குலமாநக: ।
ஷட்யவநவமாத்ரம் து ஸ்பிக்பிம்பம் ஸ்பிக்விஸ்த்ருதி: ॥ ௯௪ ॥

ஸம்வ்ருத்தௌ தௌ ஸமாவ்ருத்தௌ
தயோர்மத்யம் சதுர்யவம் ।
ஏவம் ப்ருஷ்டதலம் ப்ரோக்தம்,
பார்ஶ்வவிஸ்தார உச்யதே ॥ ௯௫ ॥

கக்ஷாத: பார்ஶ்வவிஸ்தாரம் ஸப்தமாத்ரம் ப்ரகீர்த்திதம் ।
ஸபாதஷோடஶாம்ஶம் து *ஹஸ்தஸூத்ரே து விஸ்த்ருதி: ॥

மத்தியத்தின் (இடையின்) பின்புறம் அகலம் பதினறங்குலம் நான்கு யவம். அவ்வாறே நாபி ஸூத்திரத்தினளவில் பின்புறத்தினகலம் இருபதங்குலம் நான்கு யவம். (93)

கடிபந்தத்தின் பின்புறம் விஸ்தாரம் (அகலம்) பதினெட்டங்குலம். ஸ்பிக் பிம்பங்களின் விஸ்தாரம் தனித்தனியே ஒன்பது அங்குலம் ஆறுயவம். (ஸ்பிக் பிண்டம் அல்லது ஸ்பிக் பிம்பம்-என்பவை, இடையின் கீழ், பின்புறத்தில் ஆசனவாயளவு வட்ட வடிவமாக இருபுறங்களிலும் இருக்கும் சதைப் பற்று. இவைகளே நிதம்பம் என்றும் வழங்கும்.) இவ்விரண்டும் நல்ல வட்டவடிமாக இருக்கவேண்டும். இவற்றின் இடைவெளி நான்கு யவமாகும். இவ்வாருகப் பின்புறத்தின் அகலம் சொல்லப்பட்டது. இனி, பக்கங்களின் அகலம் கூறப்படுகின்றது. (95)

கக்ஷங்களின் (அக்குட் குழிகளின்) கீழாயில் பக்கத்தின் அகலம் ஏழங்குலம். ஹஸ்த ஸூத்திரத்தினளவில் (பக்கத்தின்) அகலம் பதினாறு அங்குலம் இரண்டு யவம். (96)

---

* இங்கு " ஹஸ்த ஸூத்ரே "—என்பது " ஸ்தந ஸூத்ரே " என்றிருத்தல் தகும். " ஸபாதஷோடஶ மாத்ரம் ஸ்யாத்

ஸபாதத்வாதஶாம்ஶம் து மத்யே பார்ஶ்வவிஸ்தரம் பவேத் ।
ஶ்ரோணீமத்யே கனம் பார்ஶ்வே ஸப்ததஶாங்குலம் ॥

தத்ர ஶ்ரோண்யுதய: பூர்வை: ஸப்தமாத்ரோ விதீயதே ।
நாபிஸூத்ராததஶ்சோர்த்வே சதுஸ்த்ர்யங்குலம் க்ரமாத் ॥

ஶ்ரோண்யதஸ்தாத் கடேஸ்துங்கம்
ஸயுக்பஞ்சாங்குலம் பவேத் ।
தத்கடேஸ்து கனம் வித்யாத்
ஸயுகார்காங்குலம் பவேத் ॥ ௯௯ ॥

* தத்ர ஶ்ரோண்யுதயம் கல்பயேத்
... ... ।

இடையில் (பக்கத்தின்) அகலம் (குறுக்களவு) பன்னிரண்டங்குலம் இரண்டு யவம். ச்ரோணீ மத்தியத்தில், (அடி வயிற்றின்) மத்தியத்தில்) பக்கத்தின் கனம் (அகலம்) பதினேழங்குலம். (97)

அதில் ச்ரோணியின் உயரம் ஏழங்குலமென்று முன்னோர்களால் கூறப்பட்டுள்ளது. நாபிஸூத்திரத்தின் கீழ் நாலங்குலமும், மற்ற மூன்றங்குலம் நாபிஸூத்திரத்தின் மேல் புறத்திலுமாக இவ்வாறு அந்த ச்ரோணிதேசத்தின் உயரம் அமையும். (98)

ச்ரோணி தேசத்தின் கீழ் கடிப்பிரதேசத்தின் உயரம் ஐந்தங்குலம் நான்கு யவம். அந்தக் கடிப்பிரதேசத்தின் கனம் பன்னிரண்டங்குலம் நான்கு யவம். கடிப்பிரதேசம் என்பது இடுப்பின் இருபுறமும் சரிவாக உள்ள பகுதியாம். (99)

நூறாவது சுலோகத்தின் முற்பகுதி அரைகுறையாக இருப்பதால் பொருள் விளங்கவில்லை, "அதில் ச்ரோணியின் உயரத்தை...

ஹஸ்தஸூத்ரேண விஸ்த்ருதம்" (காச். 50-184) என்பதைக் காண்க. ஹஸ்த ஸூத்திரம் என்றொரு அளவு எந்த நூலிலும் காணப்படவில்லை.

* ச்ரோணியானது கடிப் பிரதேசத்தினருகில் சரிந்து பருத்

(स्फिक्) तारं षोडशाङ्गुलन्तु
दीर्घं सार्धं षण्मात्रमात्रम् ॥ १०० ॥

कक्षात् तुन्दिपर्यन्तं सार्धं द्व्यङ्गुलमुच्यते ।
सरन्ध्रं सावर्तकावेष्टं प्रदक्षिणवशेन तु ॥

कण्ठमूले तु तारञ्च नाहं चैव चतुर्यवम् ।
हिक्काद्व्यङ्गुलि सूत्रं तु जत्रुसूत्रान्तमायतम् ॥

......ப் பண்ணவேண்டும்" என்பது உள்ள பகுதிக்கு மட்டும் தெளிவில்லாமல் கிடைக்கும் கருத்து. ஸ்பிக்— எனப்படுவது நிதம்பமே யாகும். துடைகளின் அடிப்புறத்திலிருந்து உயர்ந்தவாறாக ஸ்பிக்குகளை அமைக்கவேண்டும். அதன் நீட்டம் நான்கங்குலம் நான்கு யவம். (100)

கக்ஷத்திலிருந்து வயிறு வரை உள்ள சரிவு இரண்டங்குலம் நான்கு யவம். அழகிய சுழி வடிவமான நாபியின் (கொப்பூழின்) அமைப்பை விளக்குவதற்கு ஒன்றுக்குள் ஒன்று சுற்றிக் கொண்ட வகையில் இரு ரேகைகள் பிரதக்ஷிணமாக அமைக்க வேண்டும். (101)

அதன் அகலமும் உயரமும் கண்ட (கழு)த்தின் அடிப்புறத்திற்குச் சரியாக (மத்ய ஸூத்திரத்தில்) நான்கு யவம்.

குறிப்பு:— இங்கு "கர்ணமூலே" என்பது, காச்யபீயம் 50—190. ச்லோகத்தைத் தழுவி "கண்டமூலே" எனக் கொள்ளப்பட்டது.

ஹிக்கையிலிருந்து இரண்டங்குலம் ஜத்ரு (காரை எலும்பு) ஸூத்திரங்களின் அளவாகும். இங்கும் காச்யபீயத்திலுள்ள (50—190) (हिक्कायाद्व्यङ्गुलात्सूत्रं जत्रुसूत्रान्तमायतम्) பாடமே ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. (102)

இருக்க வேண்டுமென்றும் கருத்து இவ்விடத்தில் மற்ற நூல்களில் காணப்படுகின்றது.

ஹிக்காமத்யாத்து கக்ஷாந்தம் குர்யாச் த்ர்யங்குலகை: ।
கண்டமூலே து தாம் ஹிக்காஸூத்ராதஸ்தாத்து ஸகுர்யாச் ॥
ஹிக்காஸூத்ரோபரிஷ்டாத்து நீலகண்டம் ப்ரகுர்யாச் ।

ஹ்ருதயாத் ஸ்தநபீடோச்சம் த்வ்யங்குலம் ஸமுதாஹ்ருதம் ॥

ஸத்விஶயவம் வ்யாஸம் *ஸ்தநமண்டலவிஸ்த்ருதம் ।
தந்மத்யே சூசுகோத்ஸேதவ்யாஸமேவ யவத்வயம் ॥ ௧0௫ ॥

ஹிக்கையின் மத்தியிலிருந்து கக்ஷாந்தம் வரை உள்ள இடைவெளி மூன்றங்குலம். கழுத்தின் அடிப்புறத்தில் ஹிக்காஸூத்திரத்தின் கீழ்ப்பகுதியைச் சிறிது உள்ளே அழுந்தியவாருக அமைக்க வேண்டும்.

குறிப்பு :- 103-வது சுலோகத்தின் பிற்பகுதியில் இந்நூலில் "கர்ணமூலே" என்றிருக்கிறது. காச்யபீயம். 50—193-ல் இதே சுலோகம் "கண்டமூலே" என்றுளது. அதைத் தழுவியே இங்கு பொருள் தரப்பட்டுள்ளது. "து தாம்" என்னுமிடம் "நதம்" என்றும், அதை யொட்டியே பாடம் மேற்கொள்ளப்பட்டது. (103)

சிவபெருமானது பிம்ப விஷயத்தில், ஹிக்காஸூத்திரத்தின் மேல் கழுத்தின் ஒரு பகுதியை நீல நிறமாக அமைக்க வேண்டும். (103½)

ஹிருதயத்திலிருந்து ஸ்தநபீடத்தினுயரம் இரண்டங்குலம். ஸ்தந மண்டலத்தின் அகலம் (ஸ்தந மண்டலத்திலுள்ள கருவட்டத்தின் குறுக்களவு அல்லது விட்டம்) இரண்டங்குலம் ஒரு யவம். அதன் (கருவட்டத்தின்) மத்தியில், சூசுகத்தின் (காம்பின்) உயரமும் அகலமும் இரண்டு யவமே யாகும். (105)

---

* ஸ்தநசூசீயு விஸ்த்ருதம் கா. 50—194.

𑌨𑌾𑌭𑍇𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌤𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌂𑌶𑌂 𑌦𑍍𑌵𑌿𑌯𑌵𑌂 𑌪𑌦𑌃 ।
𑌤𑌦𑌾𑌦𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌗𑌾𑌧𑌾𑌰𑌂 𑌯𑌵𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ॥ ௧௦௬ ॥

𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 ... ... ।
𑌨𑌾𑌭𑍇𑌰𑌧𑌃 𑌸𑌪𑌾𑌦𑍇𑌨* 𑌶𑍍𑌰𑍋𑌣𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌤𑌦𑌧𑌃 𑌤𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍋𑌣𑌿𑌭𑌾𑌗𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑍀𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

106-வது சுலோகத்தின் முற் பகுதியில் நாபியின் அகலம் கூறப் படுகின்றது. இது ஒரு அங்குலம் இரண்டு யவம். இங்கு "ஸ்தந" என்பது "ஸ்தான" என்றிருக்கக் கூடுமோ எனத் தோன்று கிறது. அந்தக் கொப்பூழானது வலஞ்சுழியாக இருக்கவேண்டும். அதன் உட்புறத்தின் ஆழமான பகுதியில் அகலம் இரண்டு யவங்களாகும். (106)

குறிப்பு:— 107-வது சுலோகத்தின் முற்பகுதியில் பாதியே மூலத்தில் உள்ளது. இங்கு "𑌹𑍃𑌨𑍍𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑍍" அல்லது, "𑌨𑌾𑌭𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑌮𑍍" என்னும் சொற்களைக் கூட்டிப் பொருள் தரப்படுகின்றது. காச்யபீயம். 50—196-வது சுலோ கத்தில் இவ்வாறே பாடமுள்ளமையைக் காண்க.

கொப்பூழ் குழியின் மத்திய பாகத்தில் குறுக்கே செல்வது "நாபி ஸூத்ரம்" எனப்படும். அதன் மத்தியில் மேலிருந்து கீழ்ச் செல் வது மத்திய ஸூத்திரம் எனப்படும். (107)

கொப்பூழின் கீழ் அடிவயிற்றின் உயரம் ஐந்து அங்குலம் இரண்டு யவம். இவ்வத்தியாயத்தில் கீழ் 98-வது சுலோகத்தில் இதே அளவு 4-அங்குலம் எனப்பட்டுள்ளது. அது பார்ச்வ அள

---

* காச். 50—197-வது சுலோகம், "𑌨𑌾𑌭𑍇𑌰𑌯𑌸𑍍𑌸𑌪𑌾-𑌦𑍇𑌨… …" என்பதைத் தழுவி. இங்கும் பொருள் தரப்பட லாம். (4-அங்குலம், 6-யவம்.)

தத³தோ⁴ மேட்⁴ரமூலம் து மேட்⁴ரபீட²ம் யுகா³ங்கு³லம் ॥ 108 ॥

ஸபாத³பஞ்சாங்கு³லம் லிங்க³தீ³ர்க⁴ம் த்³வியவாதி⁴கம் ।
லிங்க³மூலவிஶாலம் து ஸயவத்³வ்யங்கு³லம் ப⁴வேத் ॥ 109 ॥

லிங்கா³க்³ரே(அ)க்³ரகண்டீ³ தத்³தை³ர்க்⁴யத்ர்யம்ஶம் ப⁴வேத் ।
தத³த⁴ஸ்தா²த்³விஶாலம் து யவாதி⁴கம் ஸமந்ததா ॥ 110 ॥

அக்³ரகண்டீ³த³லம் ரக்தோத்பலமுகுலஸந்நிப⁴ம் ।

வாகும். அந்த அடி வயிற்றின் கீழ் "கடி" எனப்படும் பாகத்தின் உயரம் மூன்றங்குலமாம். (இங்கு காச்யபீயத்தில் இவ் வளவு 2½ அங்குல மெனக் கூறப்பட்டுளது. காச். 50—197.) அதனின்று மேட்ர மூலம் (ஆண்குறியின் அடிப்புறம்) வரையிலுள்ள மேட்ர பீடம் (ஆண்குறி தோன்று மிடத்திலுள்ள பீடம் போன்ற தட்டையான பகுதி) நான்கங்குலம் அகலம் அளவுள்ளதாகும். (இங்கு "மேட்ரமூலம் யுகாங்குலம்" என்னும் பகுதி "மேட்ர பீடம் யுகாங் குலம்" எனக் கொள்ளப் பட்டது. காச். 50—198-வது சுலோகத் தைக் காண்க.) (108)

லிங்கத்தின் (ஆண்குறியின்) நீளம் ஐந்தங்குலம் இரண்டு யவம். ஆண்குறியின் அடிப்புறத்தில் அதன் குறுக்களவு இரண்டங் குலமும் ஒரு யவமும். (109)

ஆண்குறியில் "அக்ரகண்டி" என்னும் பகுதி (ஆண்குறியின் முன் புறத்தில் தனிப்பட்டாற் போல் பருத்ததாகக் காணப்படும் முனை)யின் நீளம், அதன் மொத்த நீளத்தில் மூன்றிலொரு பாகமா கும். அந்த "அக்ரகண்டி" தோன்று மிடத்தில், அதற்குக் கீழ்ப் புறத்திலுள்ளதைக் காட்டிலும் ஒரு யவம் அதிகமாக ஆண் குறியின் குறுக்களவு இருக்கும். (110)

ஆண்குறியின் ... முனையான "அக்ரகண்டி" எனப்படும் ... பள முனை, செங்குவளை மலரின் மொட்டு போன்ற தோற்ற முள்ளதாக அமைக்கப்படவேண்டும்.

𑌉𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌯𑌤𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌞𑍍𑌚 𑌸𑌾𑌯𑌕𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥௧௧௧॥

𑌮𑍁𑌷𑍍𑌕𑌂 𑌸𑌾𑌯𑌮𑍂𑌲𑌾𑌂𑌶𑌞𑍍𑌚
𑌤𑌨𑍍𑌤𑍁𑌰𑍋𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ।
𑌰𑍋𑌮𑌊𑌰𑍁𑌵𑌸𑍍𑌯 𑌪𑍀𑌂𑌸𑌸𑍍𑌯
𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌸𑌪𑍍𑌤𑌾𑌯𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௧௧௨ ॥

இனி "முஷ்க"ங்களின் அளவு கூறப்படுகின்றது. ஆண்குறிக்குப் பின்புறம், அண்டம், பீஜம், விதை, என்றெல்லாம் வழங்கப்படும் பகுதி இரண்டும் முஷ்கங்கள் எனப்படும். இவைகள் நான்கு அங்குலம் நான்கு யவம் நீளமும் அகலமு முள்ளவை. அந்த முஷ்கங்களின் அடிபபுறத்திற்கு மேலாகத் துடைகள் மூன்று அங்குலம், நான்கு யவம் சதைப்பற்றுள்ளதாகவும் அகன்றதாகவும் வளர்ந்து வந்திருக்கவேண்டும்.

குறிப்பு :— இங்கு "𑌤𑌨𑍍𑌤𑍁𑌰𑍋𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌬𑌨𑍍𑌧𑌨𑌂" என்னும் பகுதி "𑌤𑌨𑍂𑌰𑍋𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌬𑌨𑍍𑌧𑌨𑌂" என்றிருப்பதாகக் கொள்ளப்பட்டுப் பொருள் எழுதப் பெற்றுள்ளது. சாதாரணமாக பந்தனம் எனும் சொல் "கட்டுதல்" என்று பொருள்படும். கருத்தொற்றுமையை உற்று நோக்கினால் இவ்விடத்தில், துடைகளின் சதைப்பற்று இருபுறமும் உள்ளே பீஜத்தினடியில் வளர்ந்திருப்பதையே கூறவேண்டும். பந்தநம் என்பதற்கே, சதைக்கட்டு என்று பொருள்கொண்டு மேற்கூறிய கருத்தைக் கொணர்ந்து விடலாமாயினும்; காச்யபீயம் (50—202 வது சுலோகம்) இதே இடத்தில் :—

"𑌰𑍋𑌮𑌪𑍀𑌂𑌸𑌸𑍍𑌯 𑌊𑌰𑍁𑌣𑌾𑌞𑍍𑌚 𑌊𑌰𑍁𑌰𑍂𑌰𑍁𑌵𑌸𑍍𑌯 𑌮𑌾𑌂𑌸𑌲𑌮𑍍"

என்று "மாம்ஸலம்" என்னும் சொல் காணப்படுவதால், அதை யொட்டி அவ்வாறு பொருள் தரப்பட்டது. மேட்ரமூலத்தின் (ஆண்குறியின்) பீடத்தின் அகலம் ஏழரை அங்குலம். (112)

மெட்ரமூலஸ்ய பீடாந்த ஊருமூலஸ்ய ஸம்ஶ்ரயம் |
ஜாநூர்த்வவிஸ்தாரம் ஸயவம் சதுரங்குலம் ॥ ௧௧௩ ॥

ஸார்த்தத்வ்யங்குலம் ப்ரோக்தம் ஜாநுநோரந்தரம் தத: |
ஸார்த்தத்வ்யங்குலம் ப்ரோக்தம் ப்ருஷ்டே ஜாநுநதம் விது: ॥

மேட்ர மூலத்தின் பீடம் வரை துடைகளின் அடிப்புறத்தின் சதைப்பற்று வளர்ந்து வந்திருத்தல் வேண்டும்.

முழந்தாளின் அகலம் (பின்புறத்தில்) நான்கங்குலமும் இரண்டு யவமும். *(113)*

ஜாநு மண்டலத்தின் (இரண்டு முழங்கால்களின்) இடைவெளி. இரண்டங்குலம் நான்கு யவம் (நிற்கும்போது இரு முழங்கால் களுக்குள்ள இடைவெளியே "நீவ்ரம்" எனப்படும். அதனளவே "2½ அங்குலம்" என இங்கு உரைக்கப்பெற்றது)

(பின்புறத்தில்) முழங்கால் மூட்டின் குறுக்களவு இரண்டங்குலம் நான்கு யவம். இங்கு "நதம்" என்னும் சொல்லுக்கு "உள்ளே அமுந்திய பாகம்" என்றும் பொருள்கொள்ளலாம். பின்புறத்தில் சிறிது அழுந்தியதாகக் காணப்படுகிறதல்லவா? அந்த அளவே இங்கு கூறப்படுவதாகக் கொள்வதும் தகும். *(114)*

இவ்வாறாக முக்கியமான அளவுகளெல்லாம் கூறப்பட்டன. மத்தியத்திலும் (இடையிலும்) பக்கங்களிலும் பிம்பத்தின் தோற்றம் அழகியதாக இருக்குமாறு, சிற்பியானவர் தனது கைத்திறமையை உபயோகித்து. எழில்மிக்கு, கவர்ச்சிகரமாக உத்தம தசதாள பிம்பத் தைப் பண்ணவேண்டும். இறைவனது சாந்நித்யம் பிம்பத்தில் பரிபூர்ணமாக இடம் பெறுவது சிற்பியின் வேலைத்திறமையையே சார்ந்திருக்குமாதலால், பொதுவாகத் தன் வேலையில் முன்னெச்சரிக் கையுடனேயே விழிப்பாக நடந்துகொள்ளும் இயல்புள்ள சிற்பிக்கு, உத்தம தசதாளத்தில், மேலும் அதிகக் கவனமாக இருந்து விக்கி

उद्धृत्य स्वल्पमुक्तोऽथ शेषं
यथावेलक्ष्यञ्च शास्त्रतः ।

इति शिल्परत्ने उत्तरभागे उत्तमदशताललक्षणं
नाम पञ्चमोऽध्यायः ।

ரகத்தில் எழில் குன்றுதவாறு செய்து முடிக்கவேண்டுமென வேண்டு
தல் செய்தபடி.

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், உத்தமதசதாலத்தை கூறும்
ஐந்தாம் அத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ:

அத ஷஷ்டோऽத்யாய:

அத மத்யம தஶதாலம்

மத்யமம் தஶதாலேந ஸ்த்ரீணாந்து விதிர் வக்ஷ்யதே ।
உஷ்ணீஷாத்யமேகாம்ஶம் கேஶாந்தந்து குணாம்ஶகம் ॥ ௧ ॥

கேஶாந்தாதக்ஷிஸூத்ராந்தம் ஷட்யவாட்யம் யுகாம்ஶகம் ।
அக்ஷிஸூத்ராத்புடாந்தந்து நாஸாபுடம் வேதாம்ஶமிஷ்யதே ॥ ௨ ॥

நாஸாபுடாத்து ஹந்வந்தம் ஷட்யவாட்யம் குணாம்ஶகம் ।
தஸ்யாத: கந்தரா நாளந்து வேதாங்குளமுதாஹ்ருதம் ॥ ௩ ॥

ஆறுவது அத்தியாயம்

இதில் மத்தியம தசதாளம் கூறப்படுகின்றது.

இவ்வத்தியாயத்தில் மத்தியம தசதாளத்தினுல் பெண் (விக்கிரகங்) களின் அளவு பேசப்படுகின்றது. இதிலும் முன்போலவே உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை படிப்படியாக உயரத்தினளவு கூறப்படுகின்றது. மத்யம தசதாளத்தின் முழு உயரம் 120 அங்குலம், என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டது. அதில் உஷ்ணீஷத்தின் உயரம் ஒரு அங்குலம். அதிலிருந்து கேசாந்தம் வரை மூன்றங்குலம், அதிலிருந்து அக்ஷிஸூத்ரம் வரை நான்கங்குலம் ஆறு யவம். அதிலிருந்து நாஸாபுடம் வரை நான்கங்குலம் நான்கு யவம். (2)

அதிலிருந்து ஹந்வந்தம் (தாடை) வரை மூன்றங்குலம் ஆறு யவம். அதன் கீழ் கழுத்தின் உயரம் நான்கங்குலங்களாகும். (3)

ஹிக்காதி ஹ்ருதயாந்தஞ்ச ஹ்ருதயா நாபிஶீர்ஷகம் ।
நாப்யாதி யோநிபர்யந்தம் த்ரயோதஶாங்குலம் ப்ருதக் ॥௪॥

ஊருவாயதம் ஷட்விம்ஶாம்ஶம் ஜாநுநீ யுகாம்ஶகம் ।
ஊருவாயதஸமம் ஜங்கா தலாந்தம் யுகாம்ஶகம் ॥௫॥

ஹிக்கையிலிருந்து ஹிருதயம் வரைக்கும், ஹிருதயத்திலிருந்து கொப்பூழ் வரைக்கும், கொப்பூழ் முதல் யோனி (பெண்குறி) வரைக்கும் தனித்தனியாக ஒவ்வொரு இடமும் பதின்மூன்றங்குலமாகும். (4)

துடைகளின் நீளம் இருபத்தாறு அங்குலமாகும். முழந்தாள் நான்கு அங்குலங்கள். ஜங்கா (கெண்டைக்கால்) துடையளவே (26-அங்குலம்) நீளமுள்ளது. அதனின்றும் உள்ளங்கால் வரை நான்கு அங்குலங்களாகும். (5)

இவ்வாறாக உயரத்தினளவு கூறப்பட்டது. இதன் விவரம் :—

		அங்குலம்.	யவம்.
(1)	உஷ்ணீஷத்தினுயரம்—	1	0
(2)	அதிலிருந்து கேசாந்தம் வரை	3	0
(3)	,, அக்ஷிஸூத்ரம் ,,	4	6
(4)	,, நாஸாபுடம் ,,	4	4
(5)	,, ஹநுவந்தம் ,,	3	6
(6)	,, கழுத்து ,,	4	0
(7)	,, ஹிருதயம் ,,	13	0
(8)	,, கொப்பூழ் ,,	13	0
(9)	,, யோனி ,,	13	0
(10)	துடைகளின் நீளம்	26	0
(11)	முழந்தாளின் ,,	4	0
(12)	கெண்டைக்காலின் நீளம்	26	0
(13)	அதிலிருந்து உள்ளங்கால் வரை	4	0
	ஆக	120	0

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ 6 ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

இனி உறுப்புக்களின் அகலம் கூறுப்படுகின்றது. முகத்தினகலம் பதின்மூன்றங்குலம். கழுத்தினகலம் ஏழங்குலம். இரண்டு கக்ஷங்களின் இடையில் பதினேழங்குலம், கொங்கைகளிரண்டும் தனித்தனியே ஒன்பதங்குலம் அகலம். அதன் கீழ்ப்புறம் பதின்மூன்றங்குலம் அகலம். அதற்கும் கீழ் இடையின் அகலம் பதின்மூன்றங்குலம். ச்ரோணிதலத்தினகலம் இருபதங்குலம். கடிப்பிரதேசத்தினகலம் இருபத்து நான்கங்குலம். துடைகளினகலம் பன்னிரண்டங்குலம். முழந்தாள்களிரண்டினுடையவும் அகலம் ஏழங்குலம். கெண்டைக்காலின் அகலம் ஆறங்குலம். நளகத்தினகலம் நான்கங்குலம். (6)

புஜங்களிரண்டின் நீளம் இருபத்தாறங்குலம். முழங்கையின் உயரம் இரண்டங்குலம். முன்கையின் நீளம் பதினெட்டங்குலம். உள்ளங்கையி(கைத்தலத்தி)ன் நீளம் ஏழங்குலம். பெருவிரல், ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல், சுண்டுவிரல் இவற்றின்

அங்குஷ்டாதிஷு, தத்ததிர் நவஸப்தா-
ஷ்டஸப்தஷண்மிதைர் யவை:
த்ரிஷ்வேஷு மணிபந்தகோர்பரமூலா-
க்ரமேணாங்குலைர் விஸ்த்ருதி: ॥ ௭ ॥

தஜ்ஜந்யோர்த்ரயோ மத்யமாயா மத்யமயவ-
ஸ்யுஸ்தத: பாதாங்குலீ-
ஷ்வாயாமோऽங்குஷ்டகே ஷோடஶாஷ்டஸார்த்த-
ஸப்தஸப்தஷண்மிதைர் யவை: ।
வ்யாஸ:, ஸ்தனயோ ர்வேதாங்குலைர் ஸ்தனோ-
ச்சய ஸ்த்ரீணி ஸ்வாங்கே
வ்யாஸோऽக்ஷ ஸ்தனசூசுகயோர்வேதாங்குலே-
நாபௌ ஷட்யவாக்ஷோஸ்ததி: ॥ ௮ ॥

நீளம் முறையே, நான்கு, ஐந்து, ஆறு, ஐந்து, நான்கு— அங்குலங்களாகும். அவ்விரல்களின் அகலம், பெருவிரல் தொடக்கமாக, சுண்டு விரலீறாக முறையே ஒன்பது, ஏழு, எட்டு, ஏழு, ஆறு— யவங்களினளவுள்ளதாகும். மணிக்கட்டினகலம் மூன்றங்குலம். முழங்கையினகலம் ஐந்தங்குலம். புஜங்களின் தொடக்கத்தில் அவற்றினகலம் ஏழங்குலம். (7)

கால் விரல்களில், கட்டைவிரல், அதற் கடுத்த விரல் இவற்றின் நீளம் நான்கங்குலம். நடுவிரலின் நீளம் மூன்றங்குலமும் நான்கு யவமும். அதற்கடுத்த விரலின் நீளம் மூன்றங்குலம். அதற்கடுத்த (சிறு) விரலின் நீளம் இரண்டங்குலம் நான்கு யவம். பெருவிரல் துடக்கமாக இவற்றினகலம், முறையே— பதினாறு, எட்டு, ஏழரை, ஏழு, ஆறு யவங்களாம். கொங்கைகளின் உயரம் நான்கங்குலம் நான்கு யவம். சூசுகங்களின் அகலம் (பரப்பு) மூன்றங்குலம், காம்புகளின் அகலம் (குறுக்களவு) மூன்று யவங்கள். கொப்பூழின் அகலம் ஆறு யவங்கள். கொங்கைகளின் காம்புகள் இரண்டு யவம் உயரம் இருக்கவேண்டும், (8)

யோநிபீடம் விஶாலஞ்ச ஸப்தாங்குலமதோர்த்வத: |
யோநிதாரம் சதுர்மாத்ரம் விஸ்தாரவதுச்ச்ரயம் ததா | ௯ ||
காயமாநம் சதுர்மாத்ரம். யோநிம் காயஸ்துதேநைவது |
ஸ்தநாந்தரம் யவாஷ்டாம்ஶ உந்நதம் ஸ்தநசூசயோ: || ௰ ||
ஸப்ததஶம், பாஹ்வோர்பாஹ்வோரேகத்ரிம்ஶாங்குலம் ததா |
ஶேஷ: சோத்தமதாலோக்தமார்கேணைவ ஸமாசரேத் || ௧௧ ||

யோனியின் பீடம் ஏழங்குலம் அகலமுள்ளது. அதன் மேல் யோனியின் அகலம் நான்கங்குலங்கள். யோனியின் உயரமும் அகலத்திற்குச் சமமே, அதன் உயரமும் நான்கு அங்குலமே யென்றவாறு. (9)

இந்த யோனியை ஆலிலை போன்ற அமைப்புள்ளதாகவும் கவர்ச்சிகரமாகவும் அமைக்கவேண்டும். (9½)

கொங்கைகளிரண்டினுடையவும் இடைவெளி மிகவும் குறுகியதாக இருக்கவேண்டும். ஒரு யவத்தின் எட்டிலொரு பாகமே அது இருக்க வேண்டும். ஸ்தனசூசிகள்— எனப்படுவன, கொங்கைகளின் உச்சியிலுள்ள காம்புகள். அவற்றில் ஒன்றினின்றும் மற்றொன்று வரை உள்ள இடைவெளி பதினேழு அங்குலம். தோள்களிரண்டினுடையவும் வெளிப்புறத்தில் ஒன்றினின்று மற்றொன்று வரை உள்ள இடைவெளி முப்பத்தோரங்குலம். மற்ற உறுப்புக்களின் அமைப்புக்களும் அவற்றின் அளவுகளும் உத்தம தசதாளத்திற்குக் கூறியபடியே இதிலும் வைத்துக் கொள்ளவேண்டும். மத்யம தசதாளத்தில் பெண் தெய்வங்களின் அங்க அளவுகள் இங்கு இவ் வத்தியாயத்தில் விளக்கிக் கூறப்பட்டன. ஆண்களிலும் சில மத்யம தசதாளத்தில் அமைக்க வேண்டியதாகக் கூறப்பட்டுள்ளதல்லவா? அவற்றையும் இங்கு காட்டிய வழியிலேயே ஊகித்

𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌵𑌾𑌞𑍍𑌚𑌾𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ‖

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 |

தறிந்து கொண்டு அதற்கேற்ற அங்க அமைப்புகளுடன் திறமை சாலியான சிற்பியானவன் செய்து முடிக்கவேண்டும்.

சிற்பரத்தினம் இரண்டாம் பாகம் மத்தியமதசதாளத்தைக்
கூறும் ஆறும் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

அத² ஸப்தமோऽத்⁴யாய: ।

அத⁴மம் த³சதாலம் ।

உஷ்ணீஷ ஏகமாத்ரம் ஸ்யாத் கேசாந்தம் த்ரிமாத்ரகம் ।
கேசாத்³ஹந்வந்தம் ஸார்த்³த⁴பஞ்சாங்குலம் ப⁴வேத் ॥

சதுர்மாத்ரம் க³லாயாமம் ஹிக்காஸூத்ராந்தமாயதம் ।
ஹிக்காத்³ஹ்ருத³யபர்யந்தம் தஸ்மாந்நாப்⁴யந்தமேவ ச ॥ ௨ ॥

நாபே⁴ர்மேட்⁴ராவஸாநம் ச ஸார்த்³த⁴த்³வாத³சமாத்ரகம் ।
மேட்⁴ராஜ்ஜாந்வவஸாநஞ்ச பஞ்சவிம்சாங்குலம் ஸ்ம்ருதம் ॥ ௩ ॥

ஏழாவது அத்தியாயம்.

அதம தசதாளம்.

அதம தசதாளத்தின் முழு உயரம் நூற்றுப்பதினாறு அங்குலங்களாகும். இதன் விவரம் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றது. உஷ்ணீஷம் (தலைப்பாகை) ஒரு அங்குலம் உயரம். அதனின்று கேசாந்தம் வரை மூன்றங்குலம். அதிலிருந்து ஹநு (தாள்) வரை ஐந்தரை அங்குலம். அதிலிருந்து ஹிக்கா ஸூத்திரம் வரை கழுத்தினுயரம் நாலங்குலம். அதிலிருந்து ஹிருதயம் வரையிலும், ஹிருதயத்திலிருந்து நாபி (கொப்பூழ்) வரையிலும், அதிலிருந்து மேட்ரம் (ஆண்குறி) வரையிலும் உள்ள உயரம் தனித்தனியே ஒவ்வொன்றும் பன்னிரண்டரை அங்குலம். மேட்ரத்திலிருந்து ஜாநுவின் (முழங்காலின்) நுனிவரை இருபத்தைந்தங்குலம் உயரம். (3)

[illegible] ।

முழங்காலின் உயரம் நாள்கங்குலம். ஐங்கைகளும் (கெண்டைக்காலும்) துடைபோலவே நீளமுள்ளவை. இருபத்தைந்தங்குலம் நீளமென்றவாறு. பாதத்தின உயரம் நான்கங்குலம். இவ்வாருக உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் உறுப்புக்களின் உயரத்தினளவு தனித் தனியாகப் பிரித்துக் கூறப்பட்டது. அதம தசதாளத்தின் முழு அளவு இவற்றினின்று உருவாகின்றமை காணீர் :—

				அங்குலம்.	யவம்.
(1)	உஷ்ணீஷம்—		உயரம்	1	0
(2)	கேசாந்தம்		,,	3	0
(3)	அதினின்று ஹநவந்தம்		,,	5	4
(4)	,,	கழுத்து	,,	4	0
(5)	,,	ஹ்ருதயம்	,,	12	4
(6)	,,	நாபி	,,	12	4
(7)	,,	மேட்ரம்	,,	12	4
(8)	,,	முழங்கால்வரை	,,	25	0
(9)	,,	முழங்கால்	,,	4	0
(10)	,,	கெண்டைக்கால் ,,		25	0
(11)	,,	உள்ளங்கால் வரை ,,		4	0
			ஆக	109	0

அதம தசதாளத்தின் முழு உயரம் 110 அங்குலம் என்பது ஏற்கெனவே கூறப்பட்டது. இந்நூலில் கொடுக்கப்பட்ட அளவுகளை வரிசையாகக் கூட்டினுல் 109 அங்குலம் தான் வருகின்றது. ஏழு அங்குலங்கள் குறைகின்றன. அதனுல் இந்நூலில் ஏதோ அச்சுப் பிழை இருக்கவேண்டு மென்று புலனுகின்றதல்லவா? இந்நூலுக்குப் பலவகையிலும் தோள்கொடுப்பதான காச்யபீயத்தினின்று இக்குறையைத் தீர்த்துவிடுவோம். காச்யபீயத்தில் ஐம்பத்திரண்டாவது படலம் அதமதசதாளத்தை விளக்குவதற்காக ஏற்பட்டது. அதில் :—

வேதாம்ஶம் பாணநேத்ரஸ்ய தேவம்ஶா சதுராங்குலா ॥ ௪ ॥

உஷ்ணீஷாத் ப்ருஷ்டகேஶாந்தம் ஸார்த்தபாநுமாத்ரகம் ।
உஷ்ணீஷாத் பார்ஶ்வகேஶாந்தமஷ்டமாத்ரம் ப்ரகீர்த்திதம் ॥ ௫ ॥

"கேஶாந்தாத் ஹநுபர்யந்தம் ஸார்த்தபாநுமாத்ரகம்
பவேத்" (காச்—52—4.)

என்னும் சுலோகம் இதே இடத்தில் உள்ளது. "கேசாந்தத்திலி ருந்து ஹநுவந்தம் வரையில் உள்ள உயரம் பன்னிரண்டரை அங்குலம்" என்பது இதன் பொருள். இதே இடத்தை விவரிக்கும் சுலோகம் இந்நூலில் :—

"கேஶாந்தாத் ஹநுபர்யந்தம் ஸார்த்தபாணாங்குலம்
பவேத்" (சில்பரத்தினம். 7-1,)

என்றுளது. "கேசாந்தத்திலிருந்து ஹநுவரை (தாள்வரை) ஐந்தரை அங்குலம் உயரம்" என்பது இதன் பொருள். பாணம் என்பது, மன்மதனுடைய பாணங்கள் ஐந்தாக இருப்பதையொட்டி. சிற்ப நூல்களில் "ஐந்து" என்னும் எண்ணிக்கையைக் காட்ட உபயோகிக்கப்படுகின்றது. அதேபோல், "பாநு" என்னும் சொல் சூரியனை உணர்த்துவதானமை பற்றி, பன்னிரண்டு மாதங்களில் ஆதவன் பன்னிரண்டு தன்மையுடன் தோன்றுதலை யொட்டிப் "பன்னிரண்டு" என்னும் எண்ணை காட்டுவதற்காக, சிற்பநூல்களில் உபயோகிக்கப்படுகின்றது. "பாநு" என்று அச்சிடவேண்டிய இடத்தில் இந்நூலில் "பாண" என்று தவறி விழுந்துவிட்டது. அதனால் ஏழு எண் குறைந்தது. இனி அதை பாநு—என்றே கொள்ளின் அக்குறை நீங்கி அளவும் சரியாகிவிடும். (4)

உஷ்ணீஷத்திலிருந்து பின்புறம் கேசாந்தம் வரையிலுள்ள இடைவெளி பன்னிரண்டு அங்குலம் நான்கு யவம். உஷ்ணீஷத்திலிருந்து பக்கங்களில் உள்ள கேசாந்தம் வரை உள்ள இடைவெளி எட்டங்குலமாகும். (5)

உஷ்ணீஷாத் ஸம்முகா²த் கேஶாந்தம் ஸார்த⁴பஞ்சாங்கு³லம் ஸ்ம்ருதம் |

கேஶாந்தாத்³ ஹநுபர்யந்தம் த்ரிபா⁴கீ³க்ருத்ய விந்யஸேத் ||
கேஶாந்தாத³க்ஷிஸூத்ராந்தம் தஸ்மாந்நாஸாபுடாந்தகம் |
தஸ்மாச்ச ஹநுபர்யந்தம் ப்ருத²க்கம் வேத³மாத்ரத: || ௭ ||

யவாதி⁴கத்³விமாத்ரம் ஸ்யாந்நேத்ரயோரந்தரம் ததா² |
தத்ஸமம் நயநாயாமம் ஸபஞ்சாங்க³ம் ப்⁴ருவாயதம் || ௮ ||

ப்⁴ருமத்⁴யாதூ³ர்த்⁴வகேஶாந்தம் ஸப்தத³ஶயவம் ப⁴வேத் |
யவம் ப்⁴ருவோர்மத்⁴யதாரம் க்ரமாத்³தீ⁴நம் த்ருதீயத: || ௯ ||

உஷ்ணீஷத்திலிருந்து முன்புறத்திலுள்ள கேசாந்தம் வரை உள்ள இடைவெளி ஐந்து அங்குலங்கள். (5½)

கேசாந்தத்திலிருந்து ஹநுவந்தம் வரையிலுள்ள உயரத்தை (12¾ அங்குலம்) மூன்று பங்காகச் செய்துகொள்ள வேண்டும். அவற்றில் ஒரு கூறு, கேசாந்தத்திலிருந்து அக்ஷிஸூத்திரம் வரையிலும்; மற்றொரு கூறு, அக்ஷி ஸூத்திரத்திலிருந்து நாஸாபுடம் வரையிலும், மூன்றுவது கூறு, நாஸாபுடத்திலிருந்து ஹநுவந்தம் வரையிலும் அமைத்தல் வேண்டும். இம்மூன்றிடங்களிலும் உள்ள இடைவெளி ஒரே அளவுள்ளதாம்— (4·¼ அங்குலம்) என்றவாறு.

கண்களிரண்டுக்கு முள்ள இடைவெளி இரண்டங்குலம் ஒரு யவம். கண்களின் நீளமும் அவ்வளவே. (2 அங். 1 யவம்). புருவங்களின் நீளம் ஐந்து அங்குலங்கள். (8)

புருவங்களின் மத்தியிலிருந்து மேற்புறம் கேசாந்தம் வரை உள்ள இடைவெளி பதினேழு யவங்களாகும். புருவங்களின் மத்தியில் அவற்றின் அகலம் ஒரு யவம் அளவாகும். அவை இருபுறமும் படிப்படியாக நுனிவரை அகலம் குறைந்துகொண்டே செல்லும். (9)

ஷட்யவம் நேத்ரவிஸ்தார ஊர்த்வ[1] வர்த்ம யவார்த்தகம் ।
அதோ[2] வர்த்ம ததார்த்யம் கரவீரம் து யவம் பவேத் ‖ ௰ ‖

நேத்ராயாமத்ரிபாகைகம் க்ருஷ்ணமண்டலவிஸ்த்ருதம் ।
யவார்த்தம் து தன்மத்யே ஜ்யோதிர்மண்டலகம் ஸ்ம்ருதம் ‖ ௧௧ ‖

அதோவர்த்மஸ்திதிம் நேத்ர ஸூத்ரே கார்யா விஶேஷத: ।
தஸ்ய கேஶாந்தயோர்மத்யே ப்ரூவல்லீஸ்யாதர்த்தசந்த்ரவத் ‖

கர்ணஸ்தானம் கர்ணமானம் உத்தமம் தஶதாலவத் ।
க்ராணமூலஸ்ய விஸ்தாரம் யவமாத்ரமுதாஹ்ருதம் ‖ ௧௩ ‖

ஆறு யவங்களளவு கண்களின் அகலம். கண்ணின் மேலிமை-கீழிமை— இவ்விரண்டும் தனித்தனியே ஒரு யவத்தில் பாதியளவு அகலமுள்ளவையாம். "கரவீரம்" ஒரு யவம் அளவுள்ளது. இங்கு காச்யபீயத்தில் "கரவீர யவம் பவேத்" என்றிருக்கிறது. அது சரியான பாடம். இந்நூலில் அச்சுப்பிழை யுள்ளது. (10)

கண்ணின் நீளத்தில் மூன்றிலொருபாகம் கருவிழியின் குறுக்களவாம். அதன் மத்தியில் ஒரு யவம் அளவு "சோதி மண்டலம்" அமைக்கவேண்டும். (11)

கீழிமையைச் சிறப்பாக நேத்திர ஸூத்திரத்திலேயே அமைக்க வேண்டும். அந்த நேத்திர ஸூத்திரத்திற்கும் கேசாந்தத்திற்கு மிடையில் புருவங்கள் பிறைச் சந்திரன் போன்றிருக்கும். (12)

காது இருக்குமிடம், அதன் அமைப்பு, அதிலுள்ள உள் உறுப்புக்கள், அவற்றின் அளவு, இவை யெல்லாம் உத்தம தசதாளத்தில் கூறியவாறே இங்கும் வைத்துக்கொள்ளவேண்டும். மூக்கின் அடிப்புறத்தின் அகலம் ஒரு யவம் அளவுள்ளதாகும். (13)

1, 2. காச்யபீயம். 52—12-வது சுலோகம்.

"ஊர்த்வவர்த்ம, அதோவர்த்ம" என்றே பாடமிருக்கின்றது. மேல் இமை, கீழ் இமை என்று பொருள். "வர்த்ம" என்பது அச்சுப்பிழை.

நாஸிகாக்³ரே விஸ்தாரஸ்து ப்ரோக்தமேகாங்கு³லம்ʼ ஸ்ம்ருʼதம் |
அத⁴ரோஷ்ட²ஸ்ய ஆயாமம்ʼ பக்ஷமாத்ரமுதா³ஹ்ருʼதம் ‖ 14 ‖

தத³ர்த⁴ம்ʼ தஸ்ய விஸ்தாரம்ʼ, சிபு³கம்ʼ து யவத்³வயம் |
விஸ்தாரம்ʼ தத்ஸமம்ʼ தை³ர்க்⁴யம்ʼ நிம்நமர்த⁴யவம்ʼ ஸ்ம்ருʼதம் ‖ 15 ‖

ததோ³ऽதோ⁴ மாம்ʼஸநிஷ்க்ராந்தம்ʼ யவோ ஸப்த ப்ரோக்தகம் |
க்³ரீவாமூலவிஸ்தாரம்ʼ து வஸ்வங்கு³லமுதா³ஹ்ருʼதம் ‖ 16 ‖

க்³ரீவாக்³ரஸ்ய து விஸ்தாரம்ʼ ஸார்த⁴ஸப்தாங்கு³லம்ʼ ததா² |
வக்ஷஃஸ்த²லஸ்ய விஸ்தாரம்ʼ ஸப்தவிம்ʼஶதிகாங்கு³லம் ‖ 17 ‖

மூக்கின் நுனியில் அதனகலம் ஒரு அங்குலமாகும். கீழ் உதட்டினுடைய நீளம் இரண்டங்குலம். *(14)*

அதன் அகலம், அதன் நீளத்தில் பாதியாம் (1 அங்குலம்). சிபுகம் (முகவாய்) இரண்டங்குலம் அகலமும் நீளமும். அதில் உள் அழுந்திய பகுதி அரையவம் அளவாம். (15)

குறிப்பு :— சிபு³கம்ʼ து யவத்³வயம். என்னுமிடத்தில். காச். 52-வது படலம். *17—18* சுலோகங்களில் இதே இடத்தில்— " சிபு³கம்ʼ வ த்³வயாங்கு³லம்ʼ " என்றிருக்கிறது. அதையே தழுவிப் பொருள் தரப்பட்டது. இந்நூலில் உள்ளபடி சிபுகத்தின் அகலமும் நீளமும் இரண்டு யவம் அளவே யாகும். அச்சுப்பிழை இது.

அதனின்றும் கீழ்ப்புறம். வெளியில் வளர்ந்து வந்துள்ள பகுதி ஏழு யவங்களளவாம். கழுத்தின் அடிப்புறத்தில் அதனகலம் எட்டங்குலமாம். (16)

அவ்வாறே கழுத்தின் நுனியில் அதனகலம் ஏழரை அங்குலம். மார்பின் அகலம் இருபத்தேழு அங்குலங்களாகும். (17)

பஞ்சவிம்ஶதிமாத்ராஸ்து பாஹ்வோர்தைர்க்யமுதாஹ்ருதம் ।
ஆயாமஸ்து ப்ரகோஷ்டஸ்ய நவதஶாங்குலம் ॥ ௧௮ ॥

தஸ்மாந்மத்யாங்குலாக்ராந்தம் ஸாயத்வாதஶாங்குலம் ।
ததர்த்தம் கரதலாயாமம் ஶேஷம் மத்யாங்குலாயதம் ॥ ௧௯ ॥

அங்குஷ்டஸ்ய து தைர்க்யம் து அஷ்டாவிம்ஶத்யவம் ஸ்ம்ருதம் ।
ஸாயவேதாங்குலம் தைர்க்யம் அநாமிகாங்குலாயதி: ॥ ௨௰ ॥

ததைவ தர்ஜநீதைர்க்யம் கநிஷ்டஸ்ய வேதாங்குலம் ।

தஶாஷ்டாவஷ்டஷட்பஞ்ச யவா ஜ்யேஷ்டாதிவிஸ்த்ருதி: ॥ ௨௧ ॥
ததஷ்டபாகோநம் தேஷாமக்ரவிஸ்தாரகம் ।

புஜங்களின் நீளம் இருபத்தைந்தங்குலம். பிரகோஷ்டத்தி (முன் கையி) ன் நீளமோ வெனில், பத்தொன்பது அங்குலம். (18)

அதனின்றும் (முன்கையிலிருந்து) கைத்தலத்தின் நடுவிரலின் நுனிவரை பன்னிரண்டங்குலம் நான்கு யவம். இது மொத்தத்தில் கூறப்பட்ட அளவு. கைத்தலத்தினளவு இதில் பாதியே யாகும். மற்றொரு பாதியளவு நடுவிரலினுடையது. (19)

கையில் பெருவிரலின் நீளம் இருபத்தெட்டு யவம். மோதிர விரலின் நீளம் நாள்கங்குலம் நான்கு யவம். (20)

ஆள்காட்டிவிரலின் நீளமும் அவ்வளவே (4½ அங்குலம்). சுண்டுவிரலின் நீளம் நான்கங்குலம். (20½)

பெருவிரல் முதலாக வரிசையாக ஐந்து விரல்களினுடையவும் அகலம், முறையே, பத்து, எட்டு, எட்டு, ஆறு, ஐந்து யவங்களாகும். அதனதன் அகலத்தில் எட்டிலொரு பாகம் குறைந்தவாறாக அவற்றின் (விரல்களின்) முனைப் பாகத்தின் அகலமிருக்க வேண்டும்.

𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌦𑍇𑌸𑍍𑌤𑌦𑌗𑍍𑌰𑌾𑌂𑌶𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌨𑌖𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥
𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇𑌣 𑌸𑌪𑌾𑌦𑌞𑍍𑌚 𑌨𑌖𑌾𑌯𑌾𑌮𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।

𑌯𑌵𑌤𑍍𑌰𑌯𑌂 𑌕𑌰𑌤𑌲𑌂 𑌤𑌦𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑍇𑌨 𑌹𑍀𑌨𑌕𑌃 ॥ ௨௩ ॥
𑌕𑌰𑌾𑌯𑌾𑌮𑌸𑌮𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌕𑌰𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ।

𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌂 𑌗𑍁𑌣𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨௪ ॥
𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌮𑍂𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 *𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌸𑌾𑌰𑍍𑌧𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌕𑌂 𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌰𑌗𑍍𑌰𑌦𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ ௨௫ ॥

அவற்றின் நுனியிலுள்ள அகலத்தை ஐந்து கூறாக்கி அதில் மூன்று கூறு அந்தந்த விரல்களின் நகங்களின் அகலமாகும். (22)

ஒவ்வொரு விரலின் நகமும், தத்தம் அகலத்தைப் போல் மேலும் கால்பாகம் சேர்த்து வரும் அளவு நீளமுள்ளது. (22½)

கைத்தலத்தின் கனம் (குறுக்களவு) மூன்று யவங்கள். கைத்தலத்தின் நுனியில் அதன் கனம் இதிலேயே எட்டிலொரு பாகம் குறைந்திருக்கும். கைத்தலத்தின் நீளம் எவ்வளவோ அவ்வளவே அதன் அகலமுமாகும். (23½)

மணிக்கட்டின் அகலம் மூன்றங்குலம் ஒரு யவம். முன்கையின் அடிப்புறத்தில் அதனகலம் எட்டங்குலம். புஜங்களின் நுனியில் அவற்றினகலம் ஐந்தங்குலம் நான்கு யவம். (25)

---

* " 𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌮𑍂𑌲𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇"
(காச். 42—20.)

என்னும் பாடம் முன்கையின் அடிப்புறத்தில் அதனகலம் 5½ அங்குலம் என்று பொருள் தருகின்றது. அதுவே சரியானது. இது பிழை எனத் தோன்றுகிறது.

𑌯𑌵𑌾𑌧𑌿 𑌷𑌣𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌬𑌾𑌹𑍁𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌿𑌃 ।
𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌰𑍍𑌮𑍂𑌲𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌤𑍁 𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௨௬ ॥

𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌰𑍍𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤𑌂* 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰 𑌅𑌷𑍍𑌟𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌕𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌕𑌕𑍍𑌷𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌬𑍁𑌧𑍈𑌃 ।
𑌹𑍃𑌦𑌯𑌾𑌵𑌧𑌿 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌭𑌵𑍇𑌦𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨௮ ॥

𑌉𑌦𑌰𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍋𑌣𑍀𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰 †𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌂𑌶 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௯ ॥

புஜங்களின் மத்தியில் அவற்றினகலம் ஆறங்குலம், நான்கு யவம். புஜங்களின் அடிப்புறத்தில் அவற்றினகலம் எட்டங்குலம்.

ஒரு புஜத்தின் வெளிப்புறத்திலிருந்து மற்றொரு புஜத்தின் வெளிப்புறம் வரை உள்ள இடைவெளி முப்பத்தெட்டங்குலம். ஹிக்கா ஸூத்திரத்தினின்றும் கக்ஷாந்தம் வரை எட்டங்குலம். (27)

கக்ஷங்களிரண்டினுடைய இடைவெளி இருபத்திரண்டு அங்குலமாம். ஹிருதயம் வரை (ஹிருதயப் பிரதேசத்தில்) பதினெட்டங்குலம் அகலம் இருக்கும். (28)

வயிற்றினகலம் பதினேழங்குலமாம். அடி வயிற்றின் அகலம் பதினெட்டங்குலமாம். (29)

---

* 𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌃 𑌬𑌹𑌿𑌰𑌨𑍍𑌤 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂— என்று பாடம். பொருத்தமுடைத்து.

† காச்யபீயம் 52-வது படலம் 32-வது சுலோகம் :—

" 𑌶𑍍𑌰𑍋𑌣𑍀𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 "

என்றுளது. அதமதசதாளத்தின் அளவைக் கூறுமிடம் இது. அடிவயிற்றினகலம் பத்தங்குலம்— என்பது அதன் பொருள். இந் நூலில் அடி அளவு 18 அங்குலமெனப்படுகின்றது. ஆய்ந்துணர்க.

𑌷𑌡𑍍𑌯𑌵𑌂 𑌨𑌾𑌭𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂, 𑌨𑌿𑌮𑍍𑌨𑌮𑌰𑍍𑌧𑌯𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌸𑍍𑌤𑌨𑌮𑌣𑍍𑌡𑌲 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 || ௩௰ ||

𑌚𑍂𑌚𑍁𑌕𑌂 𑌚 𑌯𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 𑌸𑍍𑌤𑌨𑌾𑌗𑍍𑌰𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌃 𑌸𑌾𑌯𑍁𑌗𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 || ௩௰௧ ||

𑌮𑍁𑌷𑍍𑌕𑌾𑌯𑌾𑌮𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍𑌸𑌮𑌮𑍍 |
𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌂 𑌮𑍁𑌕𑍁𑌲𑌂 𑌰𑌕𑍍𑌤𑌾𑌬𑍍𑌜𑌂 𑌤𑌥𑌾 || ௩௰௨ ||

𑌕𑌟𑌿𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌷𑌡𑍍𑌯𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 |
𑌊𑌰𑍁𑌮𑍂𑌲𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌸𑌾𑌯𑍁𑌗𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 || ௩௰௩ ||

𑌊𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌾𑌯𑍁𑌙𑍍𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 |
𑌜𑌾𑌨𑍁𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌸𑌾𑌯𑍁𑌗𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 || ௩௰௪ ||

நாபியின் (கொப்பூழின்) அகலம் ஆறு யவம். உள் அழுந்திய பகுதி அரையவம் அளவுடையதாம். ஸ்தன மண்டலத்தின் அகலம் அரை அங்குலம் (நான்கு யவமாம்.) (30)

சூசுகத்தின் அகலமும் உயரமும் ஒரு யவம் அளவாம். ஸ்தநாக்ரங்கள் (ஸ்தநங்களின் உச்சியிலுள்ள காம்புகள்) இரண்டிற்குமிடையிலுள்ள பகுதியின் அகலம் பன்னிரண்டங்குலம், நான்கு யவம். (31)

முஷ்கங்களின் (பீஜங்களின்) அகலமும் நீளமும் நான்கங்குலம். லிங்கம் (ஆண்குறி) ஐந்தங்குலம் நீளமுள்ளதாம். செங்குவளை மொட்டு போல் (லிங்கத்தின் முற்பகுதி) இருக்கவேண்டும். (32)

கடிப்பிரதேசத்தில் அகலம் பதினெட்டங்குலம் ஆறு யவம். தொடையின் அகலம், அடிப்புறத்தில் பன்னிரண்டங்குலம், நான்கு யவம் (33)

தொடையின் நுனியில் அதனகலம் ஒன்பதங்குலம் நான்கு யவம். முழங்காலின் மத்தியில் அதனகலம் எட்டங்குலம் நான்கு யவம். (34)

*जङ्घाग्रे तु विशालं तु सयवषण्मात्रमुच्यते ।
नलकाग्रस्य विस्तारं सयवं वेदाङ्गुलं भवेत् ।

†पार्ष्ण्यग्रस्य विस्तारं वेदाङ्गुलमिहेष्यते ।
तलमध्यविशालं तु पञ्चमात्रमुदाहृतम् ॥ ௩௬ ॥

पादाङ्गुष्ठस्यायामं वेदमात्रमुदाहृतम् ।
अनामिकादीर्घमानं तर्जन्याः ‡त्रिंशद्यवस्य या ॥ ௩௭ ॥

मध्यमाङ्गुल्याश्च तद्दैर्घ्यं वेदांशं तदनामिका ।
कनिष्ठिकाया दीर्घं तु सयवत्र्यङ्गुलं भवेत् ॥ ௩௮

ஜங்கையினுடைய (கெண்டைக் காலின்) அடிப் புறத்தில் அதன கலம் ஆறங்குலம் நான்கு யவம். நளகத்தின் (அதன் நுனியின்) அகலம் நான்கங்குலம், நான்கு யவம். (35)

காலின் அடிப்புறத்தின் (உள்ளங்காலின்) அகலம் நான்கங்குலம். உள்ளங்காலின் மத்தியில் அதனகலம் ஐந்தங்குலம். (36)

கால் கட்டைவிரலின் நீளம் நான்கங்குலம். அதற்கடுத்த விர லின் நீளம் முப்பது யவங்கள். (37)

நடுவிரலின் நீளமும் அப்படியே (30 யவமே) ஆகும். அதற் கடுத்த விரலின் நீளம் நான்கங்குலம். சிறு விரலின் நீளம் மூன்றங் குலம் நான்கு யவம். (38)

---

* காச்யபீயத்தில், "जानूर्ध्वविशालं च सयवषण्मात्रमुच्यते" (52—34)— என்று பாடமுளது. அது பொருத்தமானதாகத் தோன்றவில்லை.

† மேல் "तलमध्यविशालं तु" என்பதனால், இவ்வளவு உள்ளங்காலின் அடிப்புறத்திற்கே என்று ஊகிக்கலாம்.

‡ காச்யபீயம் 52—37.
"अनामिकायास्तु दीर्घं त्रयस्त्रिंशद्यवं भवेत्"
என்றுளது. இதே அளவு முப்பத்து மூன்று யவம் என்று அங்கு கூறப்படுகின்றது. மற்ற நூல்களில் இங்கு மாறுபாடுளது.

ஸப்தாஷ்டநவயவைர்வ்யாஸோ தசபி⁴ஸ்த்ரயோதச |
கநிஷ்டா²த்³யங்கு³ஷ்டா²ந்தம் விஸ்தாரம் பரிகீர்திதம் ॥ ௩௯ ॥

ஸ்வமூலாக்³ரஸமம் ப்ரோக்தம், தத்தாரம் த்ரிர்விபஜ்ய ச |
த்³விபா⁴க³ம் நக²விஸ்தாரம் ஆயாமம் தத்ஸமம் ததா² ॥ ௪௰ ॥

ஆயாமவத்³வ்ருத்தாகாரம் அர்த⁴சந்த்³ராக்ருதிஸம்ப⁴வேத் |

தலாக்³ரேऽங்கு³ஷ்ட²மூலே து த்³வ்யங்கு³லம் கநம் ஸ்ம்ருதம் *

இனி இவ்விரல்களின் அகலம் கூறப்படுகின்றது. சிறு விரல் தொடக்கமாகப் பெருவிரல் ஈறாக ஐந்து விரல்களும் முறையே, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதின்மூன்று, யவங்களினளவு அகலமுடையவைகளாம். (39)

கால் விரல்களினகலம் ஒவ்வொன்றிலும் அதற்குச் சொல்லப் பட்டது அடியிலிருந்து நுனிவரை ஒரே அளவாகும். இனி, கால் விரல்களின் நகங்களினளவு கூறப்படுகின்றது. கால் விரல்கள் ஒவ்வொன்றினுடையவும் அகலத்தை ஆதாரமாகக் கொண்டு அவ்வவற்றின் நகங்களினகலம் விளக்கப்படுகின்றது. ஒவ்வொரு விரலினுடையவும் அகலத்தை மூன்று கூறாக்கி, அதில் இரண்டு கூறு அந்தந்த விரல்களின் நகங்களுக்ககலமாக வமைக்கவேண்டும். நகங்களின் அகலத்தினளவே அவற்றின் நீளமும் அமையும். (40)

இந்த நகங்கள் நீண்ட வட்டவடிவமாக, அரைச்சந்திரன் போல் அமைக்கப்படவேண்டும். (40½)

உள்ளங்காலின் நுனியில், கட்டைவிரலினடியில் அதன் கனம் இரண்டங்குலம். சிறுவிரலினடியில் அதன் கனம் ஒன்பது யவமா

* கால் கட்டைவிரலினகலம் பதின்மூன்று யவமென்று காச்யபம் — 52—39. சுலோகம் கூறுகிறது.

கநிஷ்டாயாம் ஸ்வயம் தத்வஸ்ய வத உச்யதே ।

கக்ஷயோரந்தரம் ப்ருஷ்டே சதுர்விம்ஶதிமாத்ரகம் ॥ ௪௨ ॥

அத்ராநுக்தம் து யத்ஸர்வம் உத்தமம் தஶதாளவத் ॥ ௪௩ ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே அதமதஶதாலம் நாம ஸப்தமோத்யாய: ।

கும். கக்ஷங்களிரண்டினுடையவும் இடைவெளி, பின்புறத்தில், இருபத்துநான்கங்குலமாம். (12)

இந்த அதம தசதாளத்தில் சிறப்பாகச் சிற்சில அளவுகளே இவ்வத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. கூறாது விடப்பட்டவை பலவுண்டு. அவற்றில் உத்தமதசதாளத்தோடு வாசியில்லாமையே அதற்குக் காரணம். அதனல் இவ்வத்தியாயத்தில் தனியாக எடுத்துக் கூறப்படாத அளவுகள் இதற்கும் உத்தம தசதாளத்தில் போலவே அமைக்கப் படவேண்டும். (காச்யபீயம் பலவிடங்களிலும் அதம தசதாளத்தில் மாறுபட்ட அளவுகளைக் கூறுகின்றது.)

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், அதமதசதாளத்தைக் கூறும் ஏழாம் அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌅𑌥𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌨𑌵𑌤𑌾𑌲𑌮𑍍 ।

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌂 𑌤𑍍𑌵𑍇𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௧ ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌪𑍁𑌟𑌾𑌦𑍍𑌧𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌕𑌂 𑌤𑌥𑌾 ।
𑌕𑌣𑍍𑌠𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂, 𑌸𑌾𑌰𑍍𑌕𑌾𑌂𑌶𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌵𑌧𑌿 ॥ ௨ ॥

𑌤𑌤𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌭𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌦𑌿 𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌊𑌰𑍁𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌂𑌶𑌂, 𑌜𑌾𑌨𑍁 𑌯𑍁𑌗𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।

எட்டாவது அத்தியாயம்

உத்தம நவதாளம்

உஷ்ணீஷம் (தலைப்பாகை) ஒரு அங்குலம். அதனின்று மூன்றங்குலம் கேசாந்தம். அதனின்று அக்ஷிஸூத்திரம் வரை நான்கங்குலம். அதனின்று நாஸாபுடம் (மூக்கு நுனி) வரை நான்கங்குலம். அதனின்று ஹநுவந்தம் வரை நான்கங்குலம். கழுத்தின் உயரம் நான்கங்குலம். அதனின்று ஹிருதயம் வரை, அதனின்று நாபி (கொப்பூழ்) வரை, அதனின்று மேட்ரமூலம் வரை, தனித்தனியே ஒவ்வொன்றும் பன்னிரண்டங்குலம். (௩)

துடையின் நீளம் இருபத்துநான்கங்குலம். முழங்காலின் நீளம் நான்கங்குலம். ஜங்கா (கெண்டைக்கால்) நீளம். துடைபோ

ஜங்காதீர்க்கஞ்ச தாவத்ஸ்யாத் வேதாம்ஶம் சரணோதயம் ॥ ௪ ॥

லவே (இருபத்துநான்கங்குலமே). பாதத்தின் (குதிகாலின்) உயரம் நான்கங்குலம். (4)

இவ்வாருக உத்தம நவதாளத்தின் முழு உயரம், உச்சி முதல் உள்ளங்கால் வரை கூறப்பட்டது. உத்தம நவதாளத்தின் உயரம் 112 அங்குல மென்று முன்பே கூறப்பட்டுளது. இதன் உறுப்புக்களின் அங்குலங்களைக் கூட்டிப் பார்ப்போம் :—

				அங்குலம்.	யவம்.
(1)	உஷ்ணீஷம்		உயரம்	1	0
(2)	அதினின்று	கேசாந்தம்	,,	3	0
(3)	,,	அக்ஷிஸூத்ரம்	,,	4	0
(4)	,,	நாஸாபுடம்	,,	4	0
(5)	,,	ஹந்வந்தம்	,,	4	0
(6)	,,	கழுத்து	,,	4	0
(7)	,,	ஹ்ருதயம்	,,	12	0
(8)	,,	நாபிஸூத்திரம்	,,	12	0
(9)	,,	மேட்ர மூலம்	,,	12	0
(10)	,,	தொடைகளின்	,,	24	0
(11)	,,	முழங்கால்	,,	4	0
(12)	,,	ஜங்கைகள்	,,	24	0
(13)	,,	பாதம்	,,	4	0
			ஆக	112	0

இவ்வாருக உத்தம நவதாளத்தின் அளவுகளில் ஏற்றத் தாழ்வுகள் சிறிதும் தோன்ருதவாறு மேலிருந்து கீழ்வரை, தெளிவாக உறுப்புக்களின் உயரத்தினளவுகள் விளக்கிக் கூறப்பட்டன. (4)

𑌛𑌤𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑍀𑌰𑍍𑌷𑌂 𑌶𑌿𑌖𑌾𑌦𑍇𑌶𑌂 𑌸𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ।
𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑌥𑌾 ॥ ௫ ॥

𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑌂 𑌕𑌲𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌤𑌤𑍍 ।
𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌃 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌭𑌾𑌗𑍇 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌉𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ॥

𑌤𑌦𑌧𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌣𑌾𑌲𑌸𑌦𑍃𑌶𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ।
𑌏𑌕𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑌮𑍍 ॥

𑌕𑌰𑍍𑌣𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌯𑌶𑌿𑌰𑌃 𑌸𑌂𑌲𑌗𑍍𑌨𑌾 𑌕𑌰𑍍𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌽𑌙𑍍𑌕𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌤𑌃 ।
𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌤𑍀𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑍇𑌯 *𑌕𑌪𑍋𑌲𑌭𑍁𑌵𑌃 ॥ ௮ ॥

இனி இத்தாளத்தில் உறுப்புக்களின் குறுக்களவுகள் கூறப்படுகின்றன. தலையானது குடையின் வடிவம் போன்ற தோற்றமுடைத்தாயிருக்கவேண்டும். அதில் சிகை (குடுமி) இருக்குமிடம் சிறிது உயர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறே குடுமியின் முன்புறம் சிறிது தாழ்ந்து சரிந்திருத்தல் வேண்டும். (5)

குடுமியின் இருபுறங்களிலும் ஒரு கலையளவு தாழ்ந்திருத்தல் வேண்டும். குடுமியின் அமைப்பை விலக்கி மற்றப் பகுதியிலேயே இவ்வாறு தாழ்ந்திருக்க வேண்டும். குடுமியின் பின்புறத்தில் தலையின் அமைப்பு சிறிது உயர்ந்திருக்கவேண்டும். (6)

அதன் கீழ்ப்புறத்தில் (சிகையின் பின்புறம்) ஒரு பள்ளம் அமைக்க வேண்டும். இந்தப் பள்ளமான பகுதி ஒரு கால்வாயைப் போன்றதாக இருக்க வேண்டும். அந்தக் கால்வாய் போன்ற பள்ளம், ஒரு அங்குலம் அகலமும், இரண்டங்குலம் நீளமும் உள்ளதாயிருக்கும்.

தலையில் மயிர்கள் இருக்கும் அமைப்பு இனி விளக்கப்படுகின்றது. காதின் உச்சியுடன் தலை சேருமிடத்தில் ஒட்டிக்கொண்டாற்போல் (இடைவெளியில்லாமல்) மயிர்கள் முளைத்திருக்கும். காதின்

---

* 𑌕𑌪𑍋𑌲𑌭𑍂𑌃 — என்று பாடமிருத்தல் தகும். அவ்வாறே பொருள் கூறப்பட்டது.

ஏகைகாங்குலவிஸ்தாரஃ ஶிரோமத்யஸ்ய பார்ஶ்வயோஃ ।
ஈத்ருஶ பஶ்சிமே பாகே கதிதஃ கேஶஸம்பவஃ ॥ ௯ ॥

கேஶாஃ க்ருஷ்ணாஃ பிஶங்கா வா ஜடிலாஃ குடிலாஃ க்வசித் ।
விராஜந்தே யதா ஶோபம் தத்தத்ரூபாகாரஸம்பவாஃ ॥ ௰ ॥

அஷ்டாதஶாங்குலம் பூர்வம்
பஶ்சிமேऽபி ததைவ ச ।
ஸமேதாம் கர்ணயோர்மத்யபாகமௌ
பூர்வாபரௌ யதௌ* ॥ ௧௧ ॥

ஸீமந்தமத்யதைர்க்யம் ஸமேதஷ்டாதஶாங்குலம் ।

பின்புறம், ஒரு அங்குலம் ஒதுங்கி யிருக்குமிது. அதன்மேல் இவ்விரண்டங்குலம்-மூன்றங்குலம்-இவ்வாறாக வளர்ந்து வரும். தலையிலுள்ள பள்ளத்தின் இருபுறங்களிலும் ஒவ்வொரு அங்குலம் அகலமுள்ளதாக இருக்கும். இவ்வாறாகப் பின்புறத்தில் (தலை) மயிர்கள் அமைந்திருக்கும் விதம் கூறப்பட்டது. (9)

குழல்கள் கருமை நிறமாகவோ அல்லது பொன்னிறமாகவோ இருக்கலாம். சிலருக்கு சடைபோட்டுக் கொண்டவாறும், மற்றும் சிலருக்கு அவ்வாறில்லாமல் கோணலாகவும் இருக்கும். அந்தந்த வடிவங்களுக்கேற்றவாறு அழகாகத் தோற்றமளிக்கும் வகையில் குழல்கள் அமைக்கப்படும். (10)

காதின் மேல்ப்புறத்தில் முன்புறம் இருகாதுகளுக்கும் இடையிலுள்ள தூரம் பதினெட்டங்குலம். பின்புறமும் அவ்வளவேயாகும். இவ்விரண்டு அளவுகளும் சமமாயிருக்கும். (11)

ஸீமந்தம் (வகிர்). தலையின் பின்புறத்தில் மண்டை ஒட்டின் முடிவிலுள்ள பள்ளம். இவற்றின் இடையிலுள்ள நீளம் பதினெட்டங்கு

---

* யதௌ — என்னுமிடத்தில் "ஸதௌ" என்று பாடமிருத்தல் தகும்.

'வாமத³க்ஷிணயோர்வேஷ்ட்ய கர்ணயோர்மத்⁴யே தாலத்ரயமிஷ்யதே ||12||

ஏவம் ஶிரோருஹயோர்பா⁴க³யோ: விஸ்தாரோ த்³வயாஶ்ரய: |
ஷட்த்ரிம்ஶந்மாத்ரகம் தை³ர்க்⁴யம் ஶிரோஜாநாம் விசக்ஷணை: ||

ப்⁴ருவோ: ப்ருஷ்டாத் கேஶபர்யந்தம்
　　லலாடம் த்ர்யங்கு³லம் ப⁴வேத் |
ப்⁴ரூயுக்³மஸ்ய து மத்⁴யாத்து
　　தத³ர்தா⁴ங்கு³லாதி⁴கம் ||14||

ப்⁴ருவோ: ப்ராந்தம் ததை²வ கேஶாந்தம் த்³வ்யங்கு³லம் மிதம் |
ஆரோபிதத⁴நுர்ஜ்யா ப்⁴ருவோரேகா² விராஜதே ||

லம். இடது புறத்திலும் வலது புறத்திலும் சேர்ந்து காதுகளிரண்டும் அமைந்துள்ள இடத்தில் மண்டை ஓட்டின் மொத்தமாக உள்ள சுற்றளவு மூன்று "தால"ங்களினளவாம். (ஒரு தாளம் பன்னிரண்டங்குலம். மூன்று தாலம்-முப்பத்தாறங்குலம்). (12)

இவ்வாறாக, தலைமயிர் இரண்டுபாகங்களிலுமுள்ள அகலம் கூறப்பட்டது. தலையின் சுற்றளவு முப்பத்தாறங்குல மென்பர் அறிஞர். (13)

புருவங்களின் வளைவான இடத்தில் கீழ்ப்புறத்திலிருந்து செங்குத்தாகக் கேசாந்தம் வரையுள்ள நெற்றியின் உயரம் மூன்றங்குலம் அளவுள்ளதாம். புருவங்களிரண்டினுடையவும் மத்தியிலிருந்து கேசாந்தம் வரை உள்ள உயரம் அதனிலும் அரை அங்குலம் அதிகம் (14)

(இந்த அளவு 2½ அங்குலமென்பர் சிலர். ஸ்ரீ கோபிநாத ராவ். தாளமானம்.)

புருவங்களிரண்டினுடையவும் நுனியிலிருந்து கேசாந்தம் வரையிலுள்ள உயரம் இரண்டங்குலமாம். புருவங்களிரண்டினுடையவும் ரேகையின் அமைப்பு, நாணேற்றிய வில்லின் அமைப்பை யொக்கும்.

மாத்ரார்தததவிஸ்தாராஸ்
க்ரமஶ꞉ பரிஹீயதே ।
ப்ராந்தே ஸூக்ஷ்மா ச தீக்ஷ்ணா ச
ஸா ப்ரத்யேகம் த்ர்யங்குலா பவேத் ॥ ௧௬ ॥

த்ரியவம் ரோமதைர்க்யம் து ப்ரூமத்யே விதீயதே ।
த்வியவம் து பவேதாதௌ ப்ராந்தயோர்யவமாத்ரகம் ॥ ௧௭ ॥

விகல்பபஹுளே பாவே
விஸ்மயே த்ருதிகோபயோ꞉ ।
ஜுகுப்ஸிதே ஸூக்ஷ்மத்ருஷ்டௌ
ப்ரூமூலம் குஞ்சிதம் பவேத் ॥ ௧௮ ॥

புருவங்களிரண்டும், தொடங்கு மிடத்தில் (மத்தியில்) அரை அங்குலம் அகலமுள்ளவையாய், படிப்படியாக இருபக்கங்களிலும் அகலம் குறைந்து கொண்டே தேய்ந்தாற்போல் செல்லும். இரு புறங்களிலும் முடிவில் வழவழப்பாகவும் கூர்மையாகவும் புருவங்கள் அமையும். புருவங்களிரண்டும் தனித்தனியே மும்மூன்றங்குலம் நீளமாம். (16)

புருவங்களின் மத்தியிலுள்ள உரோமங்களின் நீளம் மூன்று யவம். புருவங்களின் தொடக்கத்தில் அவற்றின் நீளம் இரண்டு யவம். இரு முனைகளிலும் அவற்றின் நீளம் ஒரு யவம். (17)

பலவாறாக விகற்பங்கள் மனதில் தோன்றுங்கால், புருவங்களின் மத்திய பாகம் வளைந்து காணப்படும். சகிப்புத் தன்மையிலும், கோபத்திலும், வியப்பிலும் கூட மேற் கூறப்பட்டவாறாகவே புருவம் இருக்கும். அருவருப்பு, நுட்பமான பொருள்களை உற்று நோக்குதல், இதுபோன்ற நிலையில் புருவத்தின் அடிப்புறம் வளைந்திருக்கும். (18)

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌖𑌾 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑍇
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌾𑌕𑍃𑌤𑌿𑌃 ।
*𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌗𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌨𑌾𑌰𑌾𑌮𑍌
𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍌 𑌵𑌲𑌿𑌤𑍌 ॥ ௧௮ ॥

𑌉𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌖𑍍𑌯𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑍌 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍-
𑌭𑍍𑌰𑍁𑌵𑍋𑌃 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍌 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ।
𑌏𑌵𑌂 𑌲𑌲𑌾𑌟𑌂 𑌤𑍁
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌾𑌗𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௨௰ ॥

𑌉𑌤𑍍𑌕𑍍𑌷𑍇𑌪𑌃 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑍇 𑌸𑍍𑌯𑌾
𑌦𑍃𑌜𑍁𑌰𑍇𑌵𑌾 𑌽𑌲𑌕𑌾𑌵𑌲𑍀 ।
𑌸𑍍𑌥𑌾𑌪𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌚 𑌵𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾
𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌯𑌤𑌿𑌃 ॥ ௨௧ ॥

நெற்றியின் மேல் கேசாந்த ரேகையின் அமைப்பு இரண்டாம் பிறைச் சந்திரன் போன்றிருக்கும். அதன் (கேசாந்த ரேகையின்) இரு முனைகளிலும் உள்ள இடம் " உத்க்ஷேபம் " என்று வழங்கப் படும். (19)

அறிவாளியான சிற்பி, புருவங்களின் முனைகளை " உத்க்ஷேபங் களு"க்குச் சரியாக அமைக்க வேண்டும். இவ்வாறாக நெற்றியின் அளவு நான்கு பாகமாகக் கூறப்பட்டது. (20)

உத்க்ஷேபத்தின் ஓரத்தில் நேர்மையான முன் கூந்தல்களின் வரிசையிருக்கும். அது ஸ்தாபதீ ஸூத்திரம் வரை இரண்டு அங்குலம் அளவுள்ளதாக இருக்கும். (21)

• 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌾𑌵𑌰𑍍𑌤𑌵𑌨𑌾𑌰𑌾𑌮𑍌 - என்றே பாடமிருத்தல் தகும். அவ்வாறே பொருள் தரப்பட்டுள்ளது.

ததத⁴ஸ்ய ப்⁴ருவோ ரேகா த்³வ்யங்கு³லாயதஸம்மிதா ।
திர்யக்ஸ்தி²தா தத: கூர்சம் தத்³ரேகாவிஸ்த்ருதா மிதா ॥ ௨௨ ॥

கூர்சரேகாப்⁴ருவோ: ப்ராந்தம்
த்³வ்யங்கு³லம் ஸ்யாத்ததந்தரம் ।
ஶங்க²ம் தம் ப்ரவத³ந்த்யேதம்
ப்ரதே³ஶம் ஶாரீரகோவிதா³: ॥ ௨௩ ॥

பிப்பல்யா: கூர்சரேகாயா மத்⁴யே த்வங்கு³லமுச்யதே ।
ஏவம் ஸோமராஜேன கதி²தம் லலாடஸம்மானம் ॥ ௨௪ ॥

கர்ணாச்சா²த³னரூபேண ஶ்ரோத்ரத்³வாரஸ்ய புரத: ...

அதிலிருந்து (உத்க்ஷேபத்தின் முனையிலிருந்து) இரண்டங்குலம் அளவுள்ள ஒரு ரேகை குறுக்கே அமைக்கப்படவேண்டும். அதிலிருந்து கூர்ச்சம் (தாடி) தோன்றும். அந்த ரேகையின் அகலத்தின் அளவு ஒரு அங்குலமுள்ளதாக இருக்கும். (22)

கூர்ச்ச ரேகை (தாடி வளர்ந்து வரும் ரேகை)க்கும், புருவத்தின் ஓரத்திற்கும் இடையிலுள்ள பகுதி இரண்டங்குல அகலம் அளவாகும். உடற் கூறுகளை உணர்ந்த பெரியோர்கள் அந்த இடத்தையே (கூர்ச்ச ரேகைக்கும் புருவத்தின் ஓரங்களுக்கும் இடையிலுள்ள பகுதியையே) "சங்க" தேசம் என்று வழங்குவர். (23)

கர்ணபிப்பலீ-கூர்ச்சரேகை— இவற்றின் இடைப் பகுதி ஒரு அங்குலமாம். காதின் துவாரத்தை மூடிக் கொள்ளுகின்றாற் போல் முன்புறம் வளர்ந்து வந்துள்ள சதைப்பற்று 'கர்ணபிப்பலீ' எனப்படும். இவ்வாறாக ஸோமராஜன் நெற்றியின் அமைப்பை விளக்கிக் கூறியுள்ளான். (24)

புருவங்களின் மத்தியிலிருந்து மூக்கின் அடிப்புறம் அரை அங்குலம் அளவுள்ளதாம். நெற்றியின் அளவில் சிறிது தாழ்ந்ததாக இது (மூக்கின் அடிப்புறம்) அமைக்கப் படவேண்டும். அந்த மூக்

𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌲𑍍𑌲𑌲𑌾𑌟𑌤𑍋 𑌨𑌿𑌮𑍍𑌨𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑍇 ||

𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑍍𑌗𑌰𑍍𑌤𑍌
𑌅𑌕𑍍𑌷𑌿𑌕𑍂𑌟𑍇𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑍇 |
𑌅𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌵𑌗𑌾𑌹𑍇𑌨
𑌨𑍇𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌬𑌹𑌿𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 || ௨௬ ||

𑌅𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇 𑌤𑍁 𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌯𑍁𑌗𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌨𑌿𑌮𑍀𑌲𑌿𑌤𑌾 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌸𑍍𑌯 𑌭𑌵𑍇𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌿𑌃 || ௨௭ ||

𑌤𑍍𑌰𑌯𑌵𑌂 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌰𑍋𑌮𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂
(𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 𑌪𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌃 𑌶𑍁𑌭𑌾𑌵𑌹𑌾𑌃) |
𑌅𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂
𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌧𑍋 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑍇 || ௨௮ ||

கின் இருபுறங்களிலும் "அக்ஷிகூடம்" எனப்படும் கண் குழிகள் அமைக்கப்படும். கண்களைச் சுற்றிலும் இவற்றின் பள்ளமான தோற்றம் அமையும். கண்களின் இமைகளின் வெளிப்புறத்தில், அரை அங்குலம் ஆழ்ந்தவையாக இவை அமைக்கப்பட வேண்டும். (26)

கண்ணிமைகளிரண்டும் அரை அங்குலம் அளவுள்ளவை. அவற்றுள் மேல் இமையின் அகல அளவு, கண்ணை மூடிக்கொள் ளும்பொழுது ஒரு அங்குலமாகக் காணப்படும். (27)

கண்ணிமைகளின் நுனியிலுள்ள மயிர்களின் நீளம் மூன்று யவங்கள் அளவுள்ளதாம். கண்ணிமைகளில் மயிர்கள் அடர்ந்திருக்கவேண்டும். அவ்வாறிருத்தல் சுபமானது.

குறிப்பு :— இங்கு பாடம் தெளிவாக இல்லை. கண்களின் அடிப்புறம் அரை அங்குலம் அளவுள்ளதாம். (28)

த்3வ்யங்கு3லம் நேத்ரயோர் தை3ர்க்4யம்
விஸ்தார: ஸ்யாத் தத3ர்த4த: |
பஞ்சபஞ்சயவௌ காரயேத்
ஶுக்லபா4கௌ3 விசக்ஷணை: || ௨௯ ||

தந்மத்4யே மண்ட3லம் கார்யம் க்ருஷ்ணம் வர்துலாக்ருதி |
தத்3 பஞ்சயவா விஸ்தாரம் தந்மத்4யே த்3ருஷ்டிரிஷ்யதே || ௩௦ ||

வர்துலா யவமாத்ரா ச புத்ரிகா ஶிஶ்வாக்ருதி: |
ரக்தா ப்ராந்தயோ: ஶஸ்தா தீக்ஷ்ணாபாங்க3த்3வயோ: ஶுபா4வஹா || ௩௧ ||

உச்ச்ராயந்தம் நேத்ரகோ3ளம்
மத்4யே கார்யம் ப்ரயத்நத: |

கண்களின் நீளம் (தனித்தனியே) இவ்விரண்டங்குலமாகும். அதில் பாதியளவு (ஒரு அங்குலம்) அவற்றின் அகலமாம். கண்களின் வெண்மையான பகுதிகள் தனித்தனியே ஐயைந்து யவம் அளவுள்ளவையாக அறிவாளிகளால் அமைக்கப்படவேண்டும். (29)

அதன் (வெண்மையான பகுதியின்) மத்தியில் வட்ட வடிவமான கருவிழிகளின் மண்டலங்கள் அமைக்கப்படவேண்டும். அவற்றினகலம் (குறுக்களவு) ஐந்து யவம். அதன் (கருவிழியின்) மத்தியில் பார்வை இடம் பெறும். (30)

"கநீநிகா" எனப்படும் பாப்பாவானது, வட்டவடிவாக ஒரு யவம் குறுக்கு அளவுள்ளதாகச் சிறு குழந்தையின் வடிவத்துடன் காணப்படும். கண்களின் ஓரங்கள் சிவந்திருத்தல் சிறப்பானது. கடைக்கண்கள் கூர்மையாக இருப்பது உயர்ந்தது. சுபமானது.

நேத்திரகோளம் (கண்ணின் வட்டவடிவம்) மத்தியில் உயர்ந்ததாக ஸ்தபதியினால் ஜாக்ரதையுடன் அமைக்கப்பட வேண்டும்.

ஆகாரோ நேத்ரயோ: கார்யோ
நீலோத்பலத³லோபம: ॥ ௩௨ ॥

அபாங்க³யோரத⁴: கார்யௌ
கபோலௌ த்³வ்யங்கு³லோந்நதௌ ।
கர்ணபிப்பலிதே³ஶாந்தௌ
திர்யக்ஸூத்ரேண மாபிதௌ ॥ ௩௩ ॥

அபாங்க³பிப்பலீமத்⁴யம் பஞ்சாங்கு³லம் ப்ரமாணத: ।
ததே³வ ச ஸமம் திர்யக்³பா⁴விதம் சதுரங்கு³லம் ॥ ௩௪ ॥

அபாங்க³யோ: ஸமஸூத்ரே
கர்ணாய ஸ்த்ர்யங்கு³லம் ப⁴வேத் ।
உபர்யேகாங்கு³லம் யஸ்ய
கர்ணாவர்தஸ்ய ஶஷ்குலம் ॥ ௩௫ ॥

கண்களின் அமைப்பு கருநெய்தல் மலர் போன்றதாக இருக்க வேண்டும். (32)

இரு கடைக்கண்களினுடையவும் கீழ்ப்புறங்களில், கன்னங்கள் இரண்டங்குலம் உயரமுள்ளனவாக இருபுறங்களிலும் அமைக்கப் படவேண்டும். அவை யிரண்டும் கர்ணபிப்பலீ இருக்குமிடம் வரை குறுக்கே அகன்றிருக்கும். குறுக்கே ஸூத்திரத்தினால் இவ்வாறாக அளந்து அவற்றை அமைக்கவேண்டும். (33)

கடைக்கண்—கர்ணபிப்பலீ— இவற்றின் இடைப்பகுதி ஐந்தங்குலமாம். இது சிறிது வளைந்த அளவு. இதையே நேராகக் குறுக்கே அளந்தால் நாலங்குலமாம். (34)

கடைக்கண்களுக்குச் சரியான நேர்க் கோட்டிலிருந்து காது மூன்றங்குலம் கீழ்ப்புறமும், ஒரு அங்குலம் மேற்புறமும் நீண்டிருக்கும். சுழி போன்ற காதின் அமைப்பு இவ்வாறாக இருக்கும். (35)

கர்ணாவர்தஸ்ய பஹிர்ரேகா வ்ருத்தாயதஸமாக்ருதி: ।
ஷடங்குலாயதா ரம்யா ஸா ரேகா பரிகீர்திதா ॥ ௩௬ ॥

ஸம்ஶ்லிஷ்டாந்த ஸமேவைஷா தஸ்யாந்தராரிஷ்யதே ।
ரேகா த்விதீயமத்யஸ்ய விஸ்தார: பரிகல்ப்யதே ॥ ௩௭ ॥

மூலே சதுர்யவம் ப்ரோக்தோ மத்யே ச த்வியவோ மத: ।
ப்ராந்தே த்வேகயவோ ஹ்யஸ்ய க்ரமேணைவ நிரூபித: ॥

ஊர்த்வாதோபாகயோர் மத்யம் த்ர்யங்குலாயதமீரிதம் ।
தந்மத்யே பிப்பலீ நாம பிப்பலீ ஸத்ருஶாங்குலா ॥ ௩௯ ॥

தஸ்யாந்தரே ச ஸுஷிரம் ஶப்தக்ரஹணகாரணம் ।

சுழி போன்ற காதின் அமைப்பு (வெளிப்புறம்) நீண்ட வட்ட வடிவமாயிருக்கும். (கோழிமுட்டை போன்றிருக்கும்). அந்த ரேகையின் (வெளிப்புறக் கோட்டின்) நீளம் ஆறங்குலமாம். இவ்வாறு இந்த ரேகையை அமைத்தல் அழகியதாயிருக்கும். (36)

காதின் வெளிப்புறத்தில் சுற்றிலுமுள்ள ரேகையைப் போலவே அந்த ரேகையின் உட்புறத்திலும் அதற்குச் சரியாக மற்றொரு ரேகை அமைக்கப்பட வேண்டும். இவ்விரண்டு ரேகைகளுக்கும் இடையிலுள்ள (மத்தியப் பிரதேசத்தின்) பகுதியின் அகலம், அடியில் (தொடக்கத்தில்) நாள்கு யவமாம். மத்தியில் இரண்டு யவமும் முனையில் ஒரு யவமும் அதனகலம் இருக்கும். (38)

கர்ணபந்தத்தில் மேற்புறத்திற்கும் கீழ்ப்புறத்திற்கும் இடையிலுள்ள பகுதி மூன்றங்குலம் அளவுள்ளதாம். அதன் மத்தியில் "கர்ணபிப்பலி" என்னும் பாகம் இருக்கும். இது அரசமரத்தின் பழம் போன்ற வடிவமுள்ளதாக இருக்கும். இதன் நீளம் ஒரு அங்குலம். (39)

அந்த பிப்பலியின் உட்புறத்தில், ஒலியை யுணருவதற்குக் காரணமான காதின் துளை இருக்கும். செவியின் துளை பிப்பலி

[illegible] ॥ ௪௰ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௧ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௪௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௩ ॥
[illegible] ।
[illegible] ॥ ௪௪ ॥

யினால் மறைக்கப்பட்டிருக்கும். இந்தத் துளையின் அகலம் நான்கு யவம். (40)

கர்ண பிப்பலியின் எதிர்ப்புறத்தில் காதின் அமைப்பு, கிரந்த எழுத்தாகிய (ல) 'ல'காரத்தின் வடிவம் போல் அமையும். அதன் நீளம் அரை அங்குலம். அகலம் மூன்று யவம். (41)

மேல் அங்கமாதலால் காதுகளின் உட்புறத்திலுள்ள ரேகையைத் தொட்டவாறாக இது இருக்கும். "பிஞ்சலீ" என்னும் பாகம், காதின் துளைக்கும், காதின் உட்புறத்தில் வளைந்து செல்லும் விளிம்பு போன்ற ரேகைக்கும் மத்தியிலுள்ளது. (42)

செவியின் துளைக்கு வெளியிலுள்ள பகுதி "உத்பாதம்" என்று வழங்கப்படும். முன்பு கூறப்பட்ட பிஞ்சலீயின் கீழ்ப்புறத்திலும், ல (ல)காரம் போன்ற உறுப்பு கூடுமிடத்தில் வெளியில் உயர்ந்து காணப்படும் பகுதி "சூலீ" என்று வழங்கப்படும். இந்த "சூலீ"யின் நீளம் நான்கு யவம். அகலம் இரண்டு யவம். (43-44)

ஓகாரவச்ச யந்மத்யம் ஶ்ரோத்ரமத்யஸ்ய பார்ஶ்வகே |
யத்கர்ணகுஹரம் ஶ்ரோத்ரே மர்தாங்குலிதம் ஶுபம் ॥ ௪௫ ॥

ஊர்த்வே கர்ணஸ்ய விஸ்தார: ஸயவத்வயகோலக: |
மத்யே ச த்வ்யங்குலோ ஜ்ஞேய: அதஶ்சாங்குலஷட்யவா ॥ ௪௬ ॥

ததோऽத: பாலிகா கர்ணபாலீ சாந்யா ச கத்யதே |
ஸார்தாங்குலம் ச விஸ்தாரா மூலே மாத்ராவிதா ஶுபா ॥

முநிபாலாதிகர்ணாநாமவித்தாநாம் விஶேஷத: |
ஏகாங்குலதைர்க்யம் ஶ்ரோத்ரகம் கர்ணபால்யா விசக்ஷணை: ॥

செவியின் "ஓ"காரம் போன்ற அமைப்பின் மத்தியில், காதின் நடுப்புறத்தின் ஓரத்தில் காதின் பள்ளம் (கர்ண குஹரம்) காணப் படும். இதன் ஆழம் அரை அங்குலமாக அமைத்தல் சுபமாம். (45)

செவியின் மேற்புறத்தில் அதனகலம் இரண்டங்குலம் இரண்டு யவம். நடுவில் அதனகலம் இரண்டங்குலம். கீழ்ப்புறத்தில் அத னகலம் ஒரு அங்குலம் ஆறு யவம். (46)

அதன் கீழ் "பாலிகா" அல்லது "கர்ணபாலி" என்னும் பாகத்தை அமைக்க வேண்டும். செவியில் கீழ்ப்புறத்தில், ஓலை-கடுக் கன் முதலிய காதணிகளை அணியுமிடம் கர்ணபாலி—எனப்படும். இதன் நீளம் நான்கங்குலம். அகலம் அரை அங்குலம். இதன் அடிப்புறத்தில் ஒரு அங்குலம் அகலம் அமைப்பது சுபமாகும். (47)

முனிவர்கள், சிறு குழந்தைகள், இவர்கள் போன்றவரின் காது கள் குத்தப்படாமல் இருக்கும். அவர்களின் செவிகளில் கர்ணபாலி ஒரு அங்குலம் நீளமுள்ளதாகவே அமைக்கப்பட வேண்டும். (48)

இனி மூன்றரை சுலோகங்களால் மூக்கின் அமைப்பு விளக்கப் படுகின்றது. இவ்வத்தியாயத்திலேயே கீழ் 25-வது சுலோகத் துடன் இங்குள்ள மூன்றரை சுலோகங்களையும் கூட்டினல் கருத்து முற்றுப் பெறும்.

𑌕𑌨𑍀𑌨𑌿𑌕𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌂 𑌨𑌾𑌸𑌾𑌮𑍂𑌲𑌂 𑌤𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌮𑌧𑍍𑌯𑌂, 𑌨𑌾𑌸𑌾𑌗𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௪௯ ॥

𑌘𑍋𑌣𑌾𑌗𑍍𑌰𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌰𑍍𑌧𑍇𑌨 𑌪𑍁𑌟𑍌 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌦𑍍𑌵𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌨𑌾𑌸𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ ௫௰ ॥

𑌘𑍋𑌣𑌾𑌬𑌿𑌲𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑌮𑍇 𑌶𑍍𑌵𑌾𑌸𑍇 𑌸𑌹𑌾𑌸𑍇 𑌚 𑌕𑍋𑌪𑍇 𑌕𑌾𑌮𑍇 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌮𑍍 ॥

𑌤𑌿𑌲𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌮𑌾𑌕𑌾𑌰𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌗𑍍𑌰𑍇 𑌸𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌾 ।

இரு கண்களிலுமுள்ள கநீநிகை (பாப்பாக்)களின் மத்தியம் மூக்கின் அடிப்புறத்தின் எல்லையாம். இங்கு மூக்கின் அகலம் ஒரு அங்குலமாம். மூக்கின் மத்தியில் அதனகலம் ஒன்றரை அங்குலமாம். மூக்கின் நுனியில் அதனகலம் இரண்டங்குலமாம். (49)

"கோணு" என்பது மூக்கின் நுனியில் உயர்ந்த பகுதி. துதிக்கைபோல் காணப்படுவது. அதனகலம் ஒரு அங்குலம். அதன் இருபுறமும் உள்ள "புட"ங்கள் (குழல் போன்ற துவாரங்களின் ஓரங்கள்) ஒவ்வொன்றும் தனித்தனியே அரை அங்குலம் அகலமுள்ளவை. இவ்வாருக மூக்கின் நுனியின் இரண்டங்குல அகலம் விவரிக்கப்பட்டது. (50)

மூக்கின் இரு துவாரங்கள் "கோணு பிலம்" என வழங்கப்படும். அவை, ஒவ்வொன்றும், சிறு விரலின் அளவுள்ளவையாம். இது சாதாரண நிலைமையில். சிரமம் (களைப்பு), சிரித்துக்கொண்டே மூச்சு விடுதல், கோபம், காதல், இது போன்ற சந்தர்ப்பங்களில் அதற்கு மேலும் அகன்று விரியும். (51)

பொதுவில் மூக்கின் அமைப்பு எள்ளுப் பூப் போன்றிருத்தல் வேண்டும். நுனியில் சிறிதளவு உயர்ந்திருக்க வேண்டும். (51½)

तदधोऽर्धाङ्गुलं विस्तारं श्मश्रुदेशो निगद्यते ॥

तस्य दीर्घो वेदाङ्गुलो नासायाः पुरतः स्थितः ।
तस्य मध्यप्रदेशे तु गोजी प्रणालाकारधारिणी ॥

गोज्यर्धाङ्गुलदैर्घ्यं तु विस्तारं त्रियवं भवेत् ।
तदधोऽप्योष्ठसंस्थानं तस्य वेदाङ्गुलायतिः ॥௫௪॥

यवपञ्चकविस्तारः क्रमशः पार्श्वहीयते ।
श्मश्रूत्तरोष्ठयोर्मध्ये रेखा किञ्चित्समुज्ज्वला ॥௫௫॥
उन्नता यवमात्रा स्याद् दैर्घ्यमोष्ठप्रमाणतः ।

तदधोऽप्योष्ठसंस्थानं तस्य वेदाङ्गुलायतिः ॥௫௬॥

அதனின்று (மூக்கின் நுனியிலிருந்து) அரை அங்குலம் அகல முள்ளதாக "ச்மச்ருதேசம்" (மீசை முளைக்குமிடம்) அமையும். (52)

மூக்கின் முன்புறத்தில் அதன் (ச்மச்ரு தேசத்தின்) நீளம் நான் கங்குலமாம். அதன் மத்தியில் "கோஜி" என்னுமிடம் அமையும். இது ஒரு கால்வாய் போன்ற அமைப்புள்ளதாம். (53)

இந்த "கோஜி"யின் நீளம் அரை அங்குலமாம். அதனகலம் மூன்று யவமாம். அதன் கீழ் (கோஜியின் கீழ்) மேல் உதடு இருக்கும். இதனுடைய நீளமும் நான்கங்குலமேயாம். (54)

இந்த மேல் உதட்டின் அகலம் (மத்தியில்) ஐந்து யவமாம். இரு புறங்களிலும் படிப்படியாக இவ்வகலம் குறைந்து கொண்டே செல்லும். ச்மச்ருவுக்கும் மேல் உதட்டிற்கும் மத்தியில் ஒரு ரேகை பிரகாசமாகச் செல்லும். இதன் உயரம் ஒரு யவம் அளவாம். இதன் நீளம் மேல் உதட்டினுடையது போன்றதே (நான்கங்குலமே) யாம். (55½)

அதன் கீழ் நான்கங்குலம் நீளமுள்ள கீழ் உதடு இருக்கும். இரு உதடுகளினுடையவும் ஓரங்கள் கூடுமிடம் "ஸ்ருக்வ" எனப்படும்.

ദൃഷ്ട്യോരധസ്തയോഃ പ്രാന്തേ സംയോജ്യൌ സൃക്വിണീ ഇതേ ।
നേത്രജ്യോതിസ്സമേ കാര്യേ വികാരരഹിതാകൃതൌ ॥

വികാരേ ഹസിതേ സൃക്വ തഥാ സംകോചമേതി ച ।
ഛർദനാദിനിഷ്ഠാവേ ഭീതേ തഥൈവ രോദനേ ॥ ൫൮ ॥

ഹസിതേ സൃക്വണോ ചുംബനേകാമ്രൂഷായ യതൌ ।
ചൂഷണേ തൌ ... ... തഥാ ഭ്രാന്തിഹ്രസ്വശോഷണേ ॥ ൫൯ ॥

സംകാശേ സൃക്വണോരുത്ത്യഷ്ഠേ കോസ്തംഹസ്തമാത്രകഃ ।
ഭോജികായാമയോർദ്ധ്വം *ഭായർനേ ചതുരംഗുലം ॥

இந்த ஸ்ருக்வங்களிரண்டையும், சாதாரணமான நிலைமையில், கண்களின் ஜோதி மண்டலங்களுக்கு (பாப்பாவுக்கு)ச்சரியான அளவில் நேராகக் கீழ்ப்புறத்தில் அமைக்கவேண்டும். (57)

நகைத்தல், பயம், முதலிய விகாரங்கள் தோன்றும்போது ஸ்ருக்வங்கள் விரியும் அல்லது சுருங்கும். நகைப்பு, உண்ட உணவை வாந்தியெடுத்தல், பயம், பலவாருன ரோகங்கள், அழுகை இவை தோன்றுங்கால், ஸ்ருக்வங்களிரண்டும் ஒரு அங்குலம் அதிக நீளமாக வளரும். (58½)

அவ்வாறே. முத்தமிடுதல், மாம்பழம் முதலியவற்றை உறிஞ்சுதல் இது போன்ற சந்தர்ப்பங்களில் ஸ்ருக்வங்கள் இரண்டும் (அதிகமாகச் சுருங்கினல்) ஒவ்வொரு அங்குலம் குறையும்.

கோழி, கீழ் உதடு இவற்றின் நடுப்பகுதி வாயைத்திறக்கும் போது நான்கு அங்குலம் விரியும். இரு புறங்களிலும் இந்த அளவு

---

* വ്യാദാനേ- என்றிருத்தல் வேண்டும். அவ்வாறே பொருள் தரப்பட்டுள்ளது.

பார்ஶ்வத்³வயம் க்ரமாச்சேஷம் த்ர்யங்கு³லம் த்³வ்யங்கு³லைகத꞉ |

ஏகாங்குலமஹஸ்தா꞉ ஸ்யு꞉ ஸப்தமாந்த்யயவமாத்ரிதா꞉ ॥ ௬௧ ॥

ஊர்த்⁴வா꞉ பஞ்சயவோச்ச்²ராயா꞉ தத³தோ⁴ த்ரியவாத்மகா꞉ |

ராஜத³ந்தௌ து மத்⁴யஸ்தௌ² பார்ஶ்வயோர்மத்⁴யத³ந்தகௌ ॥

தயோ꞉ பார்ஶ்வக³தௌ யௌ து தத்பார்ஶ்வே பரிபக்ஷகௌ

அத⁴꞉ பங்க்திக³தௌ யௌ து த³ந்திஸந்த³ர்ஶநாமகௌ ॥ ௬௨ ॥

தத்பார்ஶ்வயோஸ்து கர்த்தநௌ,

தத꞉ஸ்யாதாம் ச த³ம்ஷ்ட்ரகௌ |

படிப்படியாக, மூன்றங்குலம், இரண்டங்குலம், ஒரு அங்குலம்— இவ்வாறுக் குறைந்து கொண்டே செல்லும். (60½)

இனி, பற்களைப் பற்றிய விஷயம் கூறப்படுகின்றது. மேல் வரிசையிலும் கீழ் வரிசையிலுமாகப் பன்னிரண்டு பற்கள் வெளியில் தெரியும். மேல் வரிசையில் ஆறு பற்கள் ஒவ்வொன்றும் ஐந்து யவம் உயரமுள்ளவையாம். கீழ் வரிசைப் பற்கள் மூன்று யவம் உயரமுள்ளவை. மேல் வரிசையல் மத்தியிலுள்ள இரண்டு பற்கள் "ராஜதந்தங்கள்" எனப்படும். அவற்றின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு பற்கள் "மத்திய தந்தம்" எனப்படும். அந்த மத்ய தந்தங்கள் இரண்டினுடையவும் இரு புறங்களிலும் இருக்கும் இரண்டு பற்கள் "பரிபக்ஷகம்" எனப்படும். (62½)

கீழ் வரிசையில் மத்தியிலுள்ள இரண்டு பற்கள் "ஸந்தம்சம்" என்னும் பெயருள்ளவை. ஸந்தம்சம்— நன்றாகக் கடித்துக் கொள்ளுதல்.

குறிப்பு — இங்கு "தந்தி ஸந்தர்ச நாமகௌ" என்னும் மூலம் பிழையாய் உள்ளது. "தந்தௌ ஸந்தம்ச நாமகௌ" என்று அதைத் திருத்திப் பொருள் தரப்பட்டது. (63)

ஸந்தம்சம் எனப்படும் மேற்கூறிய இரண்டு பற்களின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு கீழ் வரிசைப் பற்கள் "கர்த்தனம்"

𑌸𑍁𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌾𑌃 𑌕𑌾𑌨𑍍𑌤𑌿 𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃
𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌃 𑌶𑍁𑌭𑍍𑌰𑌾 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌾𑌃 ॥ ௬௪ ॥

𑌦𑌨𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌥𑌾 𑌓𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍇𑌵 𑌛𑌾𑌦𑌿𑌤𑌾𑌃 ।
𑌲𑌿𑌖𑌨𑍇 𑌦𑌂𑌶𑌨𑍇 𑌹𑌾𑌸𑍇 𑌤𑍍𑌰𑌾𑌸𑍇𑌽𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌵𑌿𑌦𑌂𑌶𑌨𑍇 ॥ ௬௫ ॥
𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌲𑍋𑌕𑌨𑍇 𑌦𑍃𑌶𑍍𑌯𑌾 𑌦𑌨𑍍𑌤𑌾 𑌬𑌹𑌿𑌰𑍍𑌦𑍃𑌶𑌿𑌤𑌾𑌃 ।

𑌸𑍃𑌕𑍍𑌵𑌣𑍋𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌦𑍇𑌶𑍋 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑌸𑍍𑌥𑌿𑌕𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌬𑌹𑌿𑌶𑍍𑌚𑌰𑌾𑌸𑍍𑌥𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑍇𑌨 𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑌾𑌲𑍍𑌪𑍀𑌯𑌤𑍇 𑌤𑌚𑍍𑌚 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌨𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௬௭ ॥

எனப்படும். கர்த்தனம்— கத்தரித்தல். அவற்றில் இருபுறங்களிலும் உள்ள மற்றும் இரண்டு பற்கள் "கண்டனங்கள்" எனப்படும். பற்கள் நன்ருக வழவழப்பாகவும், காந்தி உடையனவாகவும், நிர்மலமாகவும், வெண்மையாகவும் இடைவெளியில்லாமலும் அமைக்கப்பட வேண்டும். (64)

சாதாரண நிலையில் மேல்—கீழ் உதடுகளிரண்டினுலும் மறைக்கப்பட்டிருக்கும் பற்கள், எழுதும் பொழுதும் கடித்துக் கொள்ளும் பொழுதும். நகைக்கும் பொழுதும் பயப்படும் பொழுதும் விரலைக் கடிக்கும் பொழுதும் கண்ணுடியைப் பார்க்கும் பொழுதும் வெளியில் தெரியும். (65½)

ஸ்ருக்வங்கள் இரண்டினுடையவும் பக்கங்களிலுள்ள இடம் கழுத்தின் முனை வரையில் எலும்பில்லாத பகுதியாகும். அதன் வெளிப்புறத்தில் அசைந்து கொண்டிருக்கும் இயல்புள்ள தாள எலும்பு (தாடை எலும்பு) இருக்கும். இவ்வெலும்பு காதின் அடிப்புறத்துடன் இணைந்தவாருக அமைக்கப்படும். காதின் அடிப்புறத்திலிருந்து முன்புறம் முகவாய்க்கட்டை வரை இவ்வெலும்பு படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும், (67)

ஸாயாமம் சதுரங்கு³லம் ப⁴வேச் சிபு³கம்
த்ரியவோச்சம் ஸ்யாத் ஸ்தா²நஜ்ஞைஶ்ச ।
அத⁴ரோஷ்டா²த³தோ⁴பா⁴கே³
சிபு³கம் ஸம்ப்ரகீர்திதம் ॥ ௬௯ ॥

காஞ்ஜகூர்சம் ப⁴வேத் த்ரிஷ்ணீஷம் ச த்ரிப்ரமாணத꞉ ।
ஷோட³ஶாப்³தே³ ப⁴வேச் ச²ஶ்ருவும் ப்ரத²மம் ஶ்மஶ்ருவரோத்³க³ம꞉ ॥

யவமாத்ரம் ப்ரகாரயேத் ப்ரத²மம் ஸமுத்³ப⁴வம் ।
ஶில்பி ஶாஸ்த்ரஸ்ய ஸாரஸ்ய விசக்ஷண꞉ ॥ ௭௦ ॥
ப்ரகாரயேத் ததோ⁴ர்த்⁴வே அதி⁴கம் யவமாத்ரத꞉ ।

அஷ்டாங்கு³லம் ப⁴வேத் க்³ரீவா விஸ்தாரேண நிரூபிதா ॥ ௭௧ ॥
ஸார்த⁴வேதா³ங்கு³லம் சைவ தை³ர்க்⁴யேண பரிணாஹே சதுர்விம்ஶிகா ।

இந்தத் தாடையெலும்பின் உயரம் ஒரு அங்குலம் நான்கு யவம். இதன் நீளம் குறுக்கே நான்கு அங்குலமாம். கீழ் உதட்டினுடைய கீழ்ப்புறம் "சிபுகம்" எனப்படும். இதில் கொத்தாக மயிர் முளைத்து வளரும். இதுவே தாடி எனப்படும். (69)

முகவாய்க் கட்டையின் கீழ்ப்புறத்தில் எலும்பின் பருமனுக்கேற்றவாறு தாடி ஒரு அங்குலம் நீண்டு வளரும். 16 வயதுள்ள மனிதனுக்கு முதன் முதலாக தாடி மீசை இவைகள் தோன்றும். அறிவாளியான சிற்பி இவ்வாறாக முதன் முதலில் தோன்றும் தாடி மீசை இவற்றை ஒரு யவம் அளவுள்ளதாக அமைக்க வேண்டும். (70)

அதற்கு மேற்பட்ட வயதுள்ள மனிதனுக்கு, மேலும் ஒரு யவம் கூட்டிக் கொள்ளவேண்டும். (70½)

கழுத்தின் அகலம் எட்டங்குலமாம். அதன் நீளம் 4½ அங்குலம். அதன் சுற்றளவு (பரிதி) 24 அங்குலம். இது கழுத்தின் மத்தியில்

𑌗𑍍𑌰𑍀𑌵𑌾 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵 𑌵𑍍𑌯𑌾𑌸𑌦𑍇𑌶𑌸𑍍𑌤𑌤𑍍 𑌤𑌦𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌤𑌤𑍋𑌽𑌧𑌿𑌕𑌾 ॥ ௭௨ ॥

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌤𑌾𑌲𑌃 𑌤𑌾𑌲𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌤𑌨𑌚𑍂𑌚𑍁𑌕𑍇 ।
𑌕𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑍇 𑌤𑌥𑌾 𑌤𑌾𑌲𑌸𑍍𑌤𑌾𑌲𑌃 𑌕𑌕𑍍𑌷𑌧𑌰𑍋 𑌭𑌵𑍇𑌚𑍍𑌚 ॥ ௭௩ ॥

𑌕𑌨𑍍𑌧𑌰𑌾𑌚𑍍𑌚 𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌸𑌨𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾𑌶𑍍𑌚 𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ।
𑌕𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌾𑌤𑍍 𑌕𑌕𑍍𑌷𑌧𑌰𑍋 𑌭𑌵𑍇𑌦𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑌃 ॥ ௭௪ ॥

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌲𑌗𑍍𑌨𑍇 𑌜𑌤𑍍𑌰𑍁𑌣𑍀 𑌸𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑍇 ।
𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍁𑌨𑍍𑌨𑌤𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍇 ॥
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾𑌃 𑌕𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌾𑌚𑍍𑌚 𑌸𑍍𑌤𑌨𑌚𑍂𑌚𑍁𑌕𑌯𑍋𑌰𑍍𑌹𑍃𑌦𑌃 ।

உள்ள அளவு. அதற்குக் கீழ்ப்புறத்தில் அதன் சுற்றளவு மேலும் அதிகமாகும். (72)

ஹிக்கையிலிருந்து ஹ்ருதயம் வரையில் உள்ள நீளம் 1 தாளம் (12 அங்குலம்) அளவாம். ஹிக்கையிலிருந்து ஸ்தநங்களுடைய சூசுகங்கள் இரண்டினுடைய இடைப் பகுதியும் அவ்வளவேயாம். ஹிக்கையிலிருந்து கக்ஷத்தின் அடிப்புறம் வரையிலும் அவ்வாறே ஒரு தாளம் அளவு இருக்கும். ஹிக்கையிலிருந்து கக்ஷதர (காரை எலும்பு)ம் அவ்வளவேயாம். (73)

ஸ்கந்தத்தினுடைய ஸந்தி ஹிக்கையிலிருந்தும் கந்தர(கழுத்தின் பின்புற)த்திலிருந்தும் நான்கு அங்குலம் இடைவெளி யுள்ளதாக இருக்கும். கக்ஷத்தின் அடிப்புறத்திலிருந்து கக்ஷதரம் (காரை எலும்பு) 8 அங்குலம் நீளம் உள்ளதாம். (74)

புயங்களின் உச்சியில் உள்ள காரை எலும்புகள் இரண்டும் ஹிக்கையின் இருபுறங்களிலும் ஒட்டிக் கொண்டதாக இருக்கவேண்டும். அவை ஹிக்கையின் அளவைக் காட்டிலும் சிறிது உயர்ந்து முன்புறம் வளர்ந்து இருக்கவேண்டும். அவற்றின் நீளம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே பதினைந்தங்குலம். ஹிக்கை, கக்ஷமூலம், ஸ்தனங்களுடைய சூசுகங்கள், ஹ்ருதயம் இவற்றின் மத்தியிலுள்ள பகுதி

𑌤𑌦𑍇𑌵 𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌾𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ‖ ௭௬ ‖

𑌸𑍍𑌤𑌨𑌯𑍋𑌶𑍍𑌚𑌿𑌬𑍁𑌕𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌂 𑌤𑌾𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌤𑌨𑌚𑌿𑌬𑍁𑌕𑌯𑍋𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌮𑍇𑌚𑌕𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ‖

𑌚𑌿𑌬𑍁𑌕𑌂 𑌮𑍇𑌚𑌕𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌃 𑌯𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌿𑌰𑍍𑌮𑍀𑌯𑌤𑍇 ।
𑌉𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌤𑌚𑍍𑌚 𑌯𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌨𑌿𑌰𑍍𑌮𑍀𑌯𑌤𑍇 ‖ ௭௮ ‖

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌨𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌯𑌵𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌃 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑌨𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑌸𑍍𑌤𑌾𑌸𑌾𑌂 𑌷𑍋𑌡𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ‖ ௭௯ ‖

𑌬𑍃𑌹𑌤𑍀 𑌨𑌾𑌮 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌕𑍍𑌷𑌮𑍂𑌲𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ।
𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑍇𑌨 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌕𑍋𑌵𑌿𑌦𑍈𑌃 ‖

"வக்ஷஸ்தலம்" (மார்பு) எனப்படும். இதன் அளவு அகலம் எல்லா விதத்திலும் ஒரு தாளமேயாம். (76)

சூசுகங்களிரண்டினுடையவும் இடைவெளி ஒரு தாளமாம். (பன்னிரண்டங்குலமாம்). ஸ்தனங்களின் சூசுகங்களின் கறுமையான பகுதியின் வட்டம் இரண்டங்குலமாம். (77)

கறுமையான சூசுகங்களின் மத்தியில், அதன் காம்பு ஒரு யவம் அகலமும் ஒரு யவம் உயரமும் உள்ளதாக அமைக்கப்படும். (78)

பெண்களுக்காயின், இந்த சூசுகம் (காம்பு) இரண்டு யவம் அளவுள்ளதாக அமைக்கப்பட வேண்டும். (இங்கு "சிபுக:" என்று மூலம் உள்ளது. அது "சூசுக:" என்று கொள்ளப்பட்டது).

அவர்களின் (பெண்மக்களின்) கொங்கைகளின் சுற்றளவு பதினாறங்குலமாம். (79)

கக்ஷமூலங்களுக்கும், ஸ்தனங்களுக்கும் இடையிலுள்ள பகுதி "ப்ருஹதீ" என்று வழங்கப்படும். இந்த "ப்ருஹதீ"யின் அளவு *ஆறங்குலமாம். (80)

---

* இந்த அளவு சரிதானா என்பதை ஆராயவேண்டும்.

ஸ்தனமத்யப்ரதேஶஸ்து கிஞ்சிந்நிம்ந: ப்ரகீர்த்தித: |
ப்ரதேஶோ வார்த்த இத்யுக்த: ஶில்பஶாஸ்த்ர விஶாரதை: ||

க்ரீவாயா: ப்ருஷ்டதேஶே து பாஹ்வோர்மூர்த்னோ விஹாரத: |
அஷ்டாங்குலமிதே கக்ஷாந்தரே தாலேந ஸம்மிதே ||

அந்தர்பாகே ததைவாஸ்ய தாலமானேந நிர்மித: |
கக்ஷாந்தரே பரிணாஹஸ்ததைவாஸ்ய த்விதாலக: ||௮௩||

பாஹுமூலே து பார்ஶ்வாப்யாம் ஸம்ஸ்திதம் நிர்மிதம்
கக்ஷாந்தரா ... ... ஸம்ஸ்தி க்ஷேத்ர ப்ரமாணத: || ௮௪ ||

கொங்கைகளிரண்டின் மத்தியிலுள்ளப் பிரதேசம் "வார்த்தம்" எனப்படும். சிற்பசாத்திரத்தில் தேர்ந்தவர்கள் இதை (வார்த்தத்தை)ச்சிறிது உள் அழுந்தியவாறாகவும், இரண்டங்குலம் அளவுள்ளதாகவும் அமைப்பர், (81)

கழுத்தின் பின்புறத்தில், தோள்கள் ஒன்று கூடுமிடத்திலிருந்து புயங்களின் உச்சி எட்டங்குலம் அளவுள்ளதாம். கக்ஷங்களினடிப் புறத்தில் உள்ள இடைப்பகுதியின் குறுக்களவு, முன்புறமும் பின்புறமும் தனித்தனியே ஒவ்வொரு தாள (பன்னிரண்டங்குல)மாம். (82)

கக்ஷங்களின் உட்புறத்திலும் அவற்றினளவு ஒரு தாளமேயாம். கக்ஷங்களின் அடிப்புற (மூல)த்தில் அவற்றின் சுற்றளவு (தனித்தனியே) இரண்டு தாளமாம் (இருபத்து நான்கங்குலமாம்). (83)

குறிப்பு:— இந்த 84-வது சுலோகத்தின் கருத்து நன்கு விளங்கவில்லை. இதன் இரண்டாவது பாதியில் சிறிதளவு சிதைவு இருப்பதும் இதன் காரணம். இருப்பதைக் கொண்டு ஒருவாறாகப் பொருள் எழுதப் படுகின்றது.

புயங்களின் உச்சியும், புயங்களும் கக்ஷங்களுடன் சேருமிடத்தை, கக்ஷங்களின் மூலத்தினின்றும் குறுக்காகச் செல்லும் ஸூத்திரத்தின் அளவைக் கொண்டு அறியவேண்டும். (84)

வார்த்ததேஶாத்து நாபிஸ்து தாலேநைகேந கல்பிதா ।
நாபிரங்குலவிஸ்தாரா வ்ருத்தார்த்தாங்குலநிம்நகா ॥

வார்த்தஸ்ய பார்ஶ்வயோஸ்திர்யக் விஸ்தாரஸ்து விபாகத: ।
அஷ்டாங்குலயவாஶ்சைவ சதுர்பி: ஸப்ததஶாங்குலா: ॥ ௮௫ ॥
வார்த்ததேஶபரீணாஹ ஏகபஞ்சாஶதங்குல: ।

ததோ(அ)தோ மத்யமத்யஸ்ய வ்யாஸஸ்ஸ்யாச்சதுர்தஶாங்குல: ॥
மத்யதேஶபரீணாஹோ த்விசத்வாரிம்ஶதங்குல: ।

"வார்த்த" தேசத்திலிருந்து நாபி வரை உள்ள நீளம் ஒரு தாளமாம். நாபியானது ஒரு அங்குலம் விஸ்தாரம் உள்ளதாம், வட்டவடிவமாக இருக்கவேண்டும். அரை அங்குலம் ஆழமுள்ளதாக இருக்கவேண்டும். (85)

"வார்த்தம்" என்பது பெண்மக்களின் கொங்கைகளிரண்டினுடையவும் மத்தியில் சிறிது பள்ளமாகவுள்ள இடம். முன்பே இவ்விஷயம் விளக்கப் பட்டுள்ளது. அந்த "வார்த்த"த்தின் இரு புறங்களிலும் உள்ள குறுக்களவு தனித்தனியே எட்டங்குலம் நான்கு யவம். இவ்விரண்டையும் கூட்டினால் பதினேழு அங்குலம் ஆகின்றதல்லவா? இதுவே "வார்த்த" முள்ள இடத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்குச் செல்லும் மொத்தமான குறுக்களவு. இதை மூன்று மடங்காக்கினால் ஐம்பத்தொரு அங்குலம் வரும். இதுவே "வார்த்த"ப் பிரதேசத்தின் சுற்றளவாம். (86)

அதன் கீழ் மத்தியபாகம் (இடை) பதினான்கு அங்குலம் (ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் வரை) அகலமுள்ளதாம். இதன்

---

* இங்கு மூலம் தெளிவாக இல்லை. ஏதோ தவறு ஏற்பட்டுள்ளது. அதை மற்ற நூல்களின் துணையுடன் திருத்திக்கொள்ள வேண்டும்.

नाभिदेशस्य विस्तारो भवेत् षोडशाङ्गुलः ॥ ८८ ॥
नाभिस्थाने परीणाहो भवेदष्टचत्वारिंशकम् ।
श्रोणिदेशः स विज्ञातः कायशास्त्रविचक्षणैः ॥

पक्वाशयावृते मात्रे विस्तारोऽष्टादशाङ्गुलः ।
पक्वाशयपरीणाहश्चतुःपञ्चाशदङ्गुलः ॥ ९० ॥

स एव देशः कटिनामा काञ्चीनां विधायकः ।
स्त्रीणां वेदाधिकं कार्यं सामान्येनैव कर्तृभिः ॥

மும்மடங்காகிய நாற்பத்திரண்டங்குலமே மத்திய பாகத்தின் (இடையின்) சுற்றளவாம். (87½)

அந்த மத்திய தேசத்தின் கீழ் (இடையின் கீழ்ப்புறம்) நாபி தேசம் (கொப்பூழ் உள்ள இடம்) அமைக்கப்படும். அதன் குறுக்களவு (வலதுபுற மிருந்து இடது புறம்) பதினாறங்குலம். இதன் மும்மடங்கான நாற்பத்தெட்டங்குலமே இந்த இடத்தின் சுற்றளவாம். இந்தக் கொப்பூழ் இருக்குமிடமே "ச்ரோணிதேசம்" என்பர் உடற் கூறுகளை யுணர்ந்தவர். (89)

அதன் (ச்ரோணி தேசத்தின்) கீழ் "பக்வாசயம்" எனப்படும் உடற்பகுதி உள்ளது. நாம் உட்கொள்ளும் உணவு பக்குவமாகும் இடம் தான் "பக்வாசயம்" எனப்படுகின்றது. இவ்விடத்தின் குறுக்களவு (இடமிருந்து வலம்) பதினெட்டங்குலமாம். இதன் மும்மடங்கான ஐம்பத்துநான்கங்குலமே இவ்விடத்தின் சுற்றளவாம். (90)

இந்தப் பக்வாசயம் உள்ள இடத்திற்கே "கடிதேசம்" என்று பெயர். ஒட்டியாணம் முதலான அணிகளை இவ்விடத்திலேதான் அணிவர். கடிப் பிரதேசத்தின் இந்த அளவு ஆண்களுக்குக் கூறப் பட்டதாம். பெண்களுக்காயின் இந்த இடத்தின் அளவில், மேலும் நான்கங்குலம் கூட்டிக் கொள்ளவேண்டும். (91)

𑌵𑌸𑍍𑌤𑍇𑌰𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚 𑌪𑌰𑌿𑌣𑌾𑌹𑌃 𑌸𑌪𑍍𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ।
𑌪𑌰𑌿𑌣𑌾𑌹𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌵𑌸𑍍𑌤𑌿𑌨𑌃 ॥ ௯௨ ॥

𑌵𑌸𑍍𑌤𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌮𑍍𑌮𑌿𑌤𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌃 𑌪𑌰𑌿𑌣𑌾𑌹𑌃 𑌷𑌷𑍍𑌟𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌜𑌠𑌰𑍋𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑌨𑍍𑌧𑌿𑌭𑌾𑌗𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌗𑍋𑌮𑍁𑌖𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌕𑍃𑌶𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ॥

𑌮𑌾𑌨𑍇𑌨 𑌚𑌤𑍁𑌰𑍇𑌣 𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑍋
𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂
𑌵𑍃𑌷𑌣𑌯𑍋 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௯௫ ॥

வஸ்தியின் மேல்புறத்தில் உள்ள சுற்றளவு ஐம்பத்தேழங்குலமாம். இதில் மூன்றிலொரு பங்காகிய பத்தொன்பதங்குலமே மேற்கூறிய வஸ்தியின் உச்சியிலுள்ள குறுக்களவாம். (92)

வஸ்தி— மூத்திராசயம்.

வஸ்தி ஸூத்திரத்தின் (வஸ்தி இருக்குமிடத்தின்) அகலம்— (குறுக்களவு) இருபதங்குலமாம். இதன் மும்மடங்கான அறுபதங்குலமே இவ்விடத்தின் சுற்றளவாம் (93)

மார்பு வயிறு இவ்விரண்டும் ஒன்று சேர்ந்த இடத்தின் அமைப்பு பசுவின் முகம் போன்றதாக இருக்கவேண்டும். மத்திய தேசத்தின் அகலம் 14 அங்குலமெனவும், அதன் சுற்றளவு 42 அங்குலமென்றும் முன்பு (87—88) கூறப்பட்டதல்லவா? அது ஆண்களுக்கு மட்டும். பெண்களுக்கு அதே இடம் பத்தங்குலம் அகலமும், முப்பதங்குலம் சுற்றளவும் உள்ளதாக அமைக்கப்படவேண்டும். (94)

அதன் (வஸ்தியின்) கீழ் நான்கங்குலத்தில் லிங்கஸூத்திரத்தை அமைக்கவேண்டும். லிங்கத்தின் (ஆண்குறியின்) நீளம் ஐந்தங்குலம். அண்டங்களிரண்டினுடையவும் நீளம் தனித்தனியே நான்கங்குலம். (95)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

லிங்கஸூத்திரத்தினகலம் இரண்டங்குலமாம். லிங்கத்தின் இருபுறங்களிலும் அண்டத்தின் தொடங்குமிடத்திலிருந்து இரண்டங்குலமாம். (96)

"சலி" என்னும் பாகமும் இவ்வாறே அமைக்கப் படவேண்டும்.

குறிப்பு :— சலி என்பது "உறை" என்று பொருள்படும். இங்கு இச்சொல் ஆண்குறியின் மேல் உறை போன்ற சருமத்தைக் குறிப்பதாகக் கொள்வது தகும். அதுவே இப் பெயருக்குப் பொருத்தமாயுள்ளது. வேறு பொருத்தமான பொருளுண்டாயின் அதை ஆய்ந்துணர்க.

அண்டங்களின் அடிப்புறம் (தொடங்குமிடம்) நான்கங்குலம் அகலமாம். முஷ்கங்கள் (அண்டங்கள்) தோன்றுமிடத்தில் அடிவயிற்றுடன் இருதுடைகளும் கூடுமிடத்தில் இருபுறமும் இரண்டு ரேகைகள் (மேலிருந்து கீழாக) அமைக்க வேண்டும். (97)

அவ்விரு ரேகைகளும் இரண்டங்குலம் வெளியில் வளர்ந்துள்ளதாக அமைக்கப்படும். அந்தக் கோடுகளிரண்டினுடையவும் இடைப்பகுதி (அவற்றின் உச்சியில்) எட்டங்குலமாம். அவற்றின் கீழ்ப்புறத்தில் அவற்றின் இடைப்பகுதியின் (வஸ்தியின்) அகலம் ஆறங்குலமாம். (98)

ஸாமனகோஶம் ஸமைதைர்க்யம் மணிரேகாங்குலம் ததஃ |
ஷடங்குலஃ பரிணாஹோ மணியஷ்டி ... கோஶநாஶந ||

முஷ்கயோஶ்சதுரங்குலம் தைர்க்யம் ததர்தம் பீஜஸம்யுதம் |
ஸாமேவா ... கபிநாஸா ப்ரகல்ப்யதே ||௱||

முஷ்கௌ ஸபீஜகௌ வ்ருத்தௌ பாகத்வயவிபாஜிதௌ |
அஷ்டாங்குலபரிணாஹௌ கர்தவ்யௌ ஶில்பகோவிதைஃ ||

லிங்கத்தி (ஆண்குறியி)ன் நீளம் ஐந்தங்குலத்தில், நான்கங்குலம் லிங்கத்தின் நீளமும், மணிரேகையின் நீளம் ஒரு அங்குலமுமாம். லிங்கத்தின் சுற்றளவு ஆறங்குலமாம். மணிரேகையின் முனையில் இவ்வளவு சிறிது குறையும். (99)

குறிப்பு :— இங்கு மூலம் சிதைந்துள்ளது. அதனால் கருத்தில் தெளிவில்லை. முஷ்கங்களின் (அண்டங்களின்) நீளம் நான்கங்குல மென்று சொன்னோமல்லவா? அதில் பீஜத்துடன் கூடிய பகுதியின் நீளம் இரண்டங்குலமும் மற்ற பகுதியின் நீளம் இரண்டங்குலமுமாகப் பிரித்தறிந்து கொள்ளவேண்டும். அல்லது முஷ்கங்களின் அடிப்புறத்தில் ஒரு பாகத்திலும் (ஒரு அங்குலத்திலும்) பீஜங்களை அமைக்கலாம். "கபிநாஸா" எனப்படும் (குரங்கு மூக்கு) பகுதி முஷ்கங்களின் அடிப்புறத்தில் அமைக்கப்படும். "கபிநாஸா" என்பது என்னவென்று தெளிவாக விளங்கவில்லை. (100)

அண்டங்களிரண்டும் பீஜத்துடன் கூடியவையாகவும், வட்டவடிவமாகவும், இருபாகங்களாகப் பிரிந்தாற் போல் அமைந்தவையாகவும், எட்டங்குலம் சுற்றளவுள்ளனவாகவும், சிற்பத்தில் தேர்ந்த ஸ்தபதிகளால் அமைக்கப்பட வேண்டும். (101)

ஸ்பிக்ஸ்தானீ ததஸ்தஸ்ய ப்ருஷ்டே பார்ஶ்வயோஸ்து குகுந்தரே ।
ஸ்பிஜோரத: பரீணாஹ: ஸ்யாத்த்ரயஸ்த்ரிம்ஶதங்குல: ॥ ௧௦௨ ॥

ஊருமத்யபரீணாஹ: ஷட்த்ரிம்ஶத்ஸம்மிதாங்குல: ।
ஆணிதேஶபரீணாஹோ பவேச்சதுர்விம்ஶதி: ॥ ௧௦௩ ॥

ஶில்பினோ ஹி நரோ நார்யா
ஸம்யக் காரயேத்து விசக்ஷணை: ।

"குகுந்தரம்" என வழங்கப்படும் உடற்கூறுகள் இருபுறங்களி லும் இரண்டு உண்டு. அவை, பின்புறத்தில் ஆசனவாயின் இரு புறங்களிலும் இருக்கும் பள்ளமான பகுதிகளேயாகும். அவை யிரண்டும், அண்டங்களின் மத்தியில் கீழ் நோக்கிச் செல்லும் ஸூத் ரத்தில் ஒட்டிக் கொண்டாற் போல் அமைக்கப்பட வேண்டும். "ஸ்பிக்" என்றும் "ஸ்பிக் பிண்டங்கள்" என்றும் வழங்கப்படும் இரண்டு சதைப்பற்றுள்ள பாகங்கள் பின்புறத்தில் ஆசனவாயின் மேல் இருபுறமும் வட்டவடிவமாக இருக்கும் என்பது ஏற்கெனவே கூறப்பட்டதல்லவா? அவற்றின் கீழ்ப்புறத்தில் உள்ள சுற்றளவு முப்பத்துமூன்றங்குலமாம். (102)

துடைகளிரண்டினுடையவும் மத்தியில் அவற்றின் சுற்றளவு (தனித்தனியே) முப்பத்தாறங்குலமாம். "ஆணிதேச"த்தின் சுற்ற ளவு இருபத்துநான்கங்குலமாம். ஆணிதேசம்— என்பது துடை களின் முனைப்பகுதியைக் குறிக்கும். (103)

கைதேர்ந்த சிற்பிகள், ஆண்களுக்காயினும் பெண்களுக்காயி னும் துடைகளை அமைக்கும் போது மிகவும் விழிப்புடன் ஊன்றிக் கவனித்து அழகு மிக்கதாக அவற்றை அமைப்பர். துடைகளின் பருமன் மேலிருந்து கீழ் நுனி வரையில் படிப்படியாகக் குறைந்து கொண்டே வரும். துடைகளில் உரோமங்களிருத்தலாகாது. சதை

ஸுபோரகௌ வலீஶூந்யௌ

ரம்பாஸ்தம்பக்ருதோபமௌ ॥ ௧௦௪ ॥

ஶ்லக்ஷ்ணௌ மநோஹரௌ வ்ருத்தௌ

வம்ஶாம் வா யாவதிஷ்டா வா ।

தததஸ்தாஜ்ஜாநுநீ கார்யே

வேதாங்குலாயதே ॥ ௧௦௫ ॥

அங்குலத்ரயவிஸ்தாரே தத்பார்ஶ்வே விகுணே ப்ருதக் ।

பரிணாஹோஸ்ய ஸம்ப்ரோக்தோ அங்குலைரேகவிம்ஶதி: ॥

பஶ்சாத்பாகே மநாக்நிம்நே மத்யே கிஞ்சித்ஸமுந்நதே ।

ஜங்காமூலபரிணாஹோ ஹ்யேஷோடஶாங்குல: ॥ ௧௦௭ ॥

மடிப்புகளும் இருக்கக் கூடாது. வாழைமரத்தின் அமைப்புதான் துடைகளுக்குத் தக்க உபமானமாகும். (104)

மேலும், அவை வழவழப்பாக இருக்கவேண்டும். கவர்ச்சிகரமாகவும் வட்ட வடிவமாகவும் அமையவேண்டும். (104½)

அதற்கு (துடைகளுக்கு)க் கீழ்ப்புறத்தில் முழங்கால்களை அமைக்க வேண்டும். இவற்றின் நீளம் (ஒவ்வொன்றுக்கும்) நான்கங்குல மாம். இவற்றினகலம் மூன்றங்குலமாம். அவற்றின் (முழங்கால் களின்) இரு புறங்களும் தனித்தனியே நான்கங்குல அளவுள்ளவை யாம். முழங்காலின் சுற்றளவு இருபத்தோரங்குலமாம். பின்புறத் தில் சிறிது உள்ளழுந்தியவாறாகவும், மத்தியில் சிறிது உயர்ந்தவா றாகவும் இவை அமையவேண்டும். (106½)

கணைக்காலுக்கு மேல், முழங்காலுக்குக் கீழ் உள்ள காலின் பகுதி "ஜங்கா" (கெண்டைக்கால்) எனப்படும். தொடக்கத்தில் (முழங் காலை யொட்டினாற் போல் உள்ளவிடத்தில்) அதன் சுற்றளவு பதிறு

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌿𑌤𑍋
𑌹𑍍𑌯𑍇𑌵 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ।

𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌂 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇
𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௧௦௭ ॥
𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋
𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌃 ।

𑌸𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌚𑍍𑌚 𑌤𑌥𑌾 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂
𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌤𑍋 𑌸𑌾𑌮𑌤𑌃 𑌪𑍁𑌰𑌃 ॥ ௧௦௯ ॥
𑌗𑍁𑌲𑍍𑌫𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 𑌪𑌾𑌦𑍇 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇𑌣 𑌸𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌃
𑌪𑌾𑌦𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 𑌤𑍁 𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑍋𑌨𑍍𑌨𑌤𑌂 𑌗𑌜𑌪𑍃𑌷𑍍𑌠𑌵𑌤𑍍 ॥ ௧௧௦

𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑌸𑍍𑌤𑌲𑌦𑍇𑌶𑌸𑍍𑌤𑍁 *𑌨𑌿𑌮𑍍𑌨𑌮𑌪𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

றங்குலம். இதன் மத்தியில் சதைப்பற்றுடன் கூடிய பகுதி "இந்த்ர வஸ்தி" எனப்படும். அதன் சுற்றளவு பதினெட்டங்குலமாம். (107½)

பார்ஷ்ணி— என்பது குதிகால். அதற்குச் சரியாகக் குறுக்கே செல்லும் ஸூத்திரம் ஒரு அங்குலமாம். குதிகாலின் அகலம் ஐந்தங்குலமாம் (108½)

உள்ளங்காலிலிருந்து நான்கங்குல உயரத்திலும் குதிகாலிலிருந்து நான்கங்குலம் முன்புறத்திலும் "குல்பம்" இரண்டையும் அமைக்க வேண்டும். (குல்பம்— கணுக்காலின் இருபுறங்களிலுமுள்ள முண்டுகள்.) இவற்றின் அகலமும் நீளமும் இரண்டங்குலமாம். காலின் (பாதத்தின்) பின்புறம் (குதிகாலின் மேல்) யானையின் முதுகு போல் உயர்ந்தவாறாக அமைக்கப்படவேண்டும். (110)

அதன் கீழ் உள்ளங்கால் உட்புறம் வளைந்தவாறாக இருக்கும். உள்ளங்கால்கள், வெளிப்புறத்தில் குதிகாலிலிருந்து சுண்டுவிரல்

---

* 𑌨𑌿𑌮𑍍𑌨𑍋 என்றிருத்தல் தகும்.

ஸமஸ்தாநே ஸமம் கார்யம் பார்ஷ்ண்யங்குல்யந்தராத்ஸதா ।
அங்குஷ்டமூலப்ரதேஶே து துங்கம் கார்யம் ஸமாந்தத: ।
பாதாக்ரே து விஸ்தாரம் ஷடங்குலமுதாஹ்ருதம் ॥ ககஉ ॥
பார்ஷ்ண்யோஸ்து விஸ்தார: கதித ஶ்ருதாங்கமாத்ரக: ।

பாதப்ருஷ்டஸ்ய சோத்ஸேதோ வேதாங்குலயவாதிக: ॥
தத்பாதஸ்யோத்ஸேதஸ் த்ர்யங்குல: ஸமுதாஹ்ருத: ।
அங்குஷ்டமூலப்ரதேஶே து த்வ்யங்குலம் பரிகீர்த்தித: ॥

அங்குஷ்டஸ்ய ஸமுத்ஸேதோ மாத்ரா த்வியவாதிகா ।
அங்குஷ்டதைர்க்யம் உத்திஷ்டம் மாத்ரத்ரயமிதீரிதம் ॥ ககரு ॥

வரையில் ஸமமாக (வளைவின்றிக்கே தரையில் படிந்திருப்பதாக) இருக்கவேண்டும். (111)

காற் கட்டைவிரலின் அடிப்புறத்தில், உள்ளங்கால் உயர்ந்தவாருக (வளர்ந்ததாக) அமைக்கப்பட வேண்டும். (111½)

காலின் (பாதத்தின்) நுனியில் உள்ளங்காலின் அகலம் ஆறங்குலமாம். குதிகால்கள் இருக்கும் இடத்தில் உள்ளங்காலின் அகலம் நாலங்குலமாம். (112½)

காலின் (பாதத்தின்) பின்புறத்தினுடைய (புறங்காலினுடைய) உயரம்; நான்கங்குலமும் நான்கு யவமுமாகும். பாதத்தின் நுனியில் அதன் உயரம் மூன்றங்குலமாகும். கால் கட்டைவிரலின் அடிப்புறத்தில் பாதத்தினுயரம் இரண்டங்குலமாம். (114)

கால் கட்டைவிரலின் உயரம் ஒரு அங்குலமும் இரண்டு யவமுமாம். அதன் நீளம் மூன்றங்குலமாம். (115)

अङ्गुष्ठस्य परीणाहो मानेन पञ्चभिरङ्गुलैः ।
द्विपर्वाङ्गुष्ठमुद्दिष्टं, प्राक्पर्वार्धतो नखः ॥

तर्जनीदीर्घमुद्दिष्टं त्र्यङ्गुलं द्वियवाधिकम् ।
त्र्यङ्गुलस्तु परीणाहस्तस्यां पर्वत्रयं भवेत् ॥

मध्यमादीर्घमुद्दिष्टं यवषड्विंशतिर्मेयैः ।
परीणाहस्तस्यास्तु यवानामेकविंशतिः ॥ ११७ ॥

आयामोऽनामिकायास्तु यवविंशतिरिष्यते ।
अनामिकापरीणाहः कार्योऽष्टादशभिर्यवैः ॥

कनिष्ठादैर्घ्यमायातं सप्तदशभिर्यवैः ।
कनिष्ठायाः परीणाहो यवाः पञ्चदशस्मृताः ॥ १२० ॥

காற் பெருவிரலின் சுற்றளவு ஐந்தங்குலமாம். இதில் இரண்டு கணுக்கள் இருக்கும். அவற்றுள் இரண்டாவது (முன்புறத்தி லுள்ள) கணுவின் அளவில் பாதியே இவ்விரலின் நகத்திற்கமையும்.

காற் பெருவிரலுக்கடுத்த விரலின் நீளம் மூன்றங்குலம் இரண்டு யவமாகும். இதன் சுற்றளவு மூன்றங்குலமாம். இதில் மூன்று கணுக்கள் இருக்கும். (117)

காலின் நடுவிரலின் நீளம் இரண்டங்குலம் ஆறுயவம். அதன் சுற்றளவு இரண்டங்குலம் ஐந்து யவம். (118)

அதற் கடுத்த விரலின் (அணி விரலின்) நீளம் இருபது யவம் (இரண்டங்குலம் நான்கு யவம்). அதன் சுற்றளவு பதினெட்டு யவமாம். (இரண்டங்குலம் இரண்டு யவம்). (119)

கால் சிறு விரலின் நீளம் பதினேழு யவம். (இரண்டங்குலம் ஒரு யவம்). இதன் சுற்றளவு பதினைந்து யவமாம் (ஒரு அங்குலம் ஏழு யவம்), (120)

ஸர்வத்ராங்குலய꞉ ஸர்வா꞉ த்ரிபர்வாண꞉ (?) வ்ருத்திகா꞉ ।
அங்குஷ்டம் வர்ஜயித்வா து ஸர்வாஸாமக்ரதோ பவேத் ॥

ஸர்வாஸாம் பாதஶாகாநாம் ஸாமாந்யம் ப்ரோச்யதே நகா꞉ ।
அந்த்யபர்வார்தமாநா꞉ ஸ்யு꞉ சித்ரகர்மவிஶாரதை꞉ ॥ ௧௨௨ ॥

மர்மஸ்து ஸ்கந்தஸந்தேஸ்து ப்ருஷ்டதேஶே க்ருகாடிகா ।
தேஶதஸ்து தத꞉ கக்ஷமூலமேகாதஶாங்குலம் ॥ ௧௨௩ ॥

ஸ்கந்தாப்யாம் நிம்நகௌ ஸம்வ்ருதௌ
அம்ஸபலகௌ ஷட்ஷடங்குலௌ ।
தயோர்மத்யே பவேத்வம்ஶ꞉
கலாத்வ்யங்குலத꞉ ॥ ௧௨௪ ॥

விரல்கள் யாவற்றிலும் மூன்று கணுக்கள் இருக்கவேண்டும். (பெருவிரல் தவிர). அவ்வாறே எல்லா விரல்களும், முன்புறத்தில் அரை அங்குலம் உயர்ந்திருத்தல் வேண்டும். (121)

கால் விரல்கள் யாவற்றிற்கும் பொதுவான விஷயம் ஒன்றுண்டு. ஒவ்வொரு விரலினுடையவும் கடைசிக் கணுவின் பாதியளவுள்ளதாக அவ்வவற்றின் நகங்கள் அமைக்கப்பட வேண்டும். சித்திர. வேலையில் கைதேர்ந்த சிற்பிகள், அந்த நகங்களை முழுதும் செந்நிறமுள்ளவையாக அமைக்கவேண்டும். (122)

இனி, புயங்கள்-கைகள்— இவை விளக்கப்படுகின்றன.

தோள்களிரண்டும் ஒன்று சேருமிடத்தில் பின்புறத்தில் "க்ருகாடிகா" என்னும் ஸந்தி மர்மஸ்தானம் உள்ளது. கக்ஷங்களின் மூலம் அந்த க்ருகாடிகாவிலிருந்து பதினொரங்குலம், (123)

தோள்களிலிருந்து பின்புறம் சரிவாக வளர்ந்துள்ளதாகக் காணப்படும் பகுதிகள் "அம்ஸபலகங்கள்" எனப்படும். அவை ஒவ்வொன்றும் தனித்தனியே ஆறங்குலம் அளவுள்ளவையாம். அவ்விரண்டு அம்ஸபலகங்களின் மத்தியில் இரண்டங்குல அளவுள்ள "வம்சம்" இருக்கும். வம்சம்- என்பது முதுகெலும்பு, முள்ளந்தண்டு— என்பது. (124)

உத்தானகதலீபுஷ்பஸத்ருஶ: ப்ருஷ்டஸம்ஸ்தக: ।
தத்வத் ப்ருஷ்டஸ்ய ஸ்தூலம் ஸம்ஸ்தானம் பரிகீர்திதம் ॥ கஉரு ॥

கக்ஷாந்தாத் கூர்பராந்தம் யாவத்
பாஹுபர்வேதி கத்யதே ।
அஷ்டாதஶாங்குலம் தைர்க்யம்
நாஹோऽப்யஷ்டாதஶாங்குல: ॥ கஉசா ॥

கூர்பராத் தலபர்யந்தம்
பவேத் ஸப்ததஶாங்குலம் ।
மணிநாஹ: ப்ரகோஷ்டஸ்ய
ஷோடஶாங்குலஸம்மித: ॥ கஉஎ ॥

ப்ரகோஷ்டஸ்ய மணிநாஹ ஸ்ததக்ரே சதுர்தஶாங்குல: ।
மணிபந்தமணிநாஹ: கதிதோ த்வாதஶாங்குல: ॥ கஉஅ ॥

பின்புறத்தின் அமைப்பு, வாழைப்பூவை மேல்நோக்கியவாறாக நிற்கவைத்தாற் போலிருக்கும். வாழைப்பூவின் காம்பு போல், இதில் முள்ளந்தண்டு பருத்ததாக அமைந்திருக்கும். (125)

கக்ஷங்களிலிருந்து முழங்கைகள் வரையிலுள்ள பாகம், "பாஹு பர்வம்" எனப்படும். இதுவே "புயங்கள்" என்றும் வழங்கப்படும். இதன் நீளம் பதினெட்டங்குலம். சுற்றளவும் அவ்வளவேயாம். (126)

முழங்கையிலிருந்து உள்ளங்கை வரையிலுள்ள பகுதி (முன்கை) யின் நீளம் பதினேழங்குலமாம். இந்த முன்கையின் சுற்றளவு, (முழங்கையை யடுத்தாற் போலுள்ள பகுதியில்) பதினாறங்குலமாம்.

மணிபந்தத்தை (மணிக்கட்டை) அடுத்தாற்போலுள்ள முன்கையின் முனைப்பகுதியின் சுற்றளவு பதினன்கங்குலமாம். மணிக்கட்டினுடைய சுற்றளவு பன்னிரண்டங்குலமாம். (128)

விஸ்தாரஷ் ஷட்கலோ பாஹ்வோ:
கூர்பரே பஞ்சாங்குலம் |
பரிணாஹத்ரிபாகைக:
ப்ரபாஹோ விஸ்த்ருதிருக்தா ॥ ௧௨௯ ॥

ப்ரகோஷ்டே மணிபந்தே ச பரிணாஹத்ரிபாகத: |
மத்யாங்குலி பார்ஷ்ணீ: ஸப்தாங்குலம் ததா: ॥

ஷடங்குலம் தர்ஜந்யா நாஹோ த்வாதசார்த்தாம்ஶகாங்குல: |
கநிஷ்டாமூலரேகாயா ஹ்ருதயம் பஞ்சாங்குலம் ॥ ௧௩௧ ॥
இத்யாயாமஸ்தலஸ்யோக்த: பஞ்சமாத்ராஸ்து விஸ்த்ருதி: |

புயங்களின் அகலம் (குறுக்களவு) தனித்தனியே ஆறங்குலமாம். முழங்கைகளின் அகலம் தனித்தனியே ஐந்து அங்குலமாம். அதன் கீழுள்ள முன்கையின் அகலம், (குறுக்களவு) அதன் சுற்றளவில் மூன்றிலொரு பாகம். முன்கையின் தொடக்கத்திலும் மத்தியிலும் முனையிலும் சுற்றளவு மாறுபடுவதற் கேற்ப அவ்வோ இடங்களின் குறுக்களவும் மாறுபடுமென்றவாறு. (129)

பிரகோஷ்டத்தின் (முன்கையின் நுனியின்) அகலமும், மணிக்கட்டின் அகலமும் அப்படியே அதனதன் சுற்றளவில் மூன்றிலொரு பங்காம். நடுவிரலின் அடிப்புறத்திலிருந்து உள்ளங்கையின் அடிப்புறம் (குதிக்கை) வரையிலுள்ள தூரம் ஏழங்குலமாம். (130)

ஆள்காட்டி விரலின் அடிப்புறத்திலிருந்து உள்ளங்கையின் அடிப்புறம் வரை உள்ள நீளம் ஆறங்குலமாம். உள்ளங்கையின் சுற்றளவு பன்னிரண்டரை அங்குலமாம், சிறுவிரலின் அடிப்புறத்திலுள்ள ரேகையிலிருந்து உள்ளங்கையின் அடிப்புறம் வரை உள்ள தூரம் ஐந்தங்குலமாம். இவ்வாறாக உள்ளங்கையின் நீளத்தினளவு கூறப்பட்டது. உள்ளங்கையின் அகலம் ஐந்தங்குலமாகும். (131½)

அங்குஷ்டமூலரேகாயாஸ் தர்ஜந்யாஸ்தலகேவ ச ॥ ௧௩௨ ॥
மத்யமாந்தரணம் ஸ்யாத் த்ர்யங்குலயவஸம்மிதம் ।

கநிஷ்டாமூலரேகாயா ஆரப்யைகாங்குலாந்தரே ॥ ௧௩௩ ॥
அநாமிகாயா: த்வ்யங்குலாத் மத்யமாயா: ஸார்த்தமூலத: ।
ஆயுர்ரேகா பவேத்ஸா து கிஞ்சித்வக்ரா ப்ரத்ருச்யதே ॥
மத்யமாதர்ஜநீமத்யம் ப்ரவிஷ்டா ஸா ப்ரகல்ப்யதே ।

அங்குஷ்டமூலதர்ஜந்யோர் மத்யே த்ர்யங்குலமத்யமா ॥ ௧௩௫ ॥
ஶக்திரேகா ப்ரகல்ப்யா ஸா ஸாவதி வக்ரா பவேந்நக: ।
ஆயுரேகாயா அதோபாகே கநிஷ்டிகாயாந்தரே ॥ ௧௩௬ ॥

பெருவிரலின் அடிப்புறத்திலுள்ள ரேகையிலிருந்து ஆள்காட்டி விரலின் அடிப்புறத்திலுள்ள ரேகை வரையில் உள்ள இடைவெளியின் தூரம் மூன்றங்குலமாம். (132½)

சிறு விரலின் அடிப்புறத்திலுள்ள ரேகையிலிருந்து ஒரு அங்குலம் தூரத்திலும், மோதிரவிரலின் அடிப்புறத்திலுள்ள ரேகையிலிருந்து இரண்டங்குலம் தூரத்திலும், நடுவிரலின் அடிப்புறத்திலுள்ள ரேகையிலிருந்து ஒன்றரை அங்குலம் தூரத்திலும், உள்ளங்கையில் ஒரு ரேகை செல்லும். அதுவே "ஆயுள் ரேகை" எனப்படும். அது சிறிது வளைந்தவாறாக இருக்கும். நடுவிரல்-ஆள்காட்டி விரல் இவற்றின் மத்தியில் இந்த ஆயுள் ரேகை நுழைந்து செல்லும். (134½)

பெருவிரலின் அடிப்புறம், ஆள்காட்டிவிரலின் அடிப்புறம் இவற்றின் இடைப் பகுதியாகிய மூன்றங்குலம் தூரத்தில் நடுவில் ஒரு ரேகை செல்லும். சிறு விரலின் அடிப்புறத்தில் ஆயுள் ரேகையின் கீழ் இது தொடங்கும். இதற்கு "சக்திரேகை" என்று பெயர். இது

அநாமிகா கநிஷ்டாயா: ஸாமஸ்யாச் த்ர்யங்குலேऽதரமா ।

மத்யமே ஹ்யபவேத் ந்யா ரேகா சாதுரங்குலஸம்மிதா ॥ ௧௩௬ ॥

பும்ரேகா வைவநீயாத்து ஸஞ்ஜாதா ஶக்திரேகயா ।

கநிஷ்டாநாமிகாமத்யாநாம் ஸந்தி: ஸங்கோசகாரக: ॥ ௧௩௭ ॥

ஆயுஷ்யாத்து பவேத்தத்ர பார்ஶ்வம் ப்ரோக்தாவயாமயா ।

தர்ஜநீஸந்திதேஶே து ஶக்திரேகா ஸமுத்பவ: ॥ ௧௩௮ ॥

அங்குஷ்டதலஸந்தௌ து பும்ரேகா ஸம்வ்யவஸ்திதா ।

அங்குலத்ரிதயம் ஸாப்தியவாமேக கநிஷ்டிகா ॥ ௧௪௦ ॥

வும் சிறிது வளைந்தவாறாகவே செல்லும். இந்த ரேகை, சிறுவிரல், மோதிர விரல் இவற்றின் கீழ்ப்புறம் மூன்றங்குல தூரத்திலும், நடுவிரலின் கீழ்ப்புறத்தில் நான்கங்குல தூரத்திலும் செல்லும். (136½)

உள்ளங்கையின் அடிப்புறத்தின் (குதிக்கையின்) மத்தியிலிருந்து செல்லும் மற்றொரு ரேகை, வில்போல் வளைந்தவாறாகக் காணப்படும். இதுவே "ஆண்ரேகை" எனப்படும். இது "சக்தி ரேகை"யுடன் இணைந்தவாறாக வரையப் படவேண்டும். (137½)

சிறுவிரல், மோதிர விரல், நடுவிரல் இவற்றின் ஸந்தி (இவ்விரல்கள் உள்ளங்கையில் இணையுமிடம்) உள்ளங்கையின் சுருங்கிய அமைப்புக்குக் காரணமாம். இம்மூன்று விரல்களின் இணைப்பை உயர்த்தினால் உள்ளங்கை தொன்னைபோல் குழிந்து நீர் தேங்குமாறு மாறிவிடுகின்றதல்லவா? இவ்விரல்களின் இணைப்புக்குச் சரியாகவே முன்பு கூறப்பட்ட ஆயுள் ரேகையை வரையவேண்டும்.

ஆள்காட்டி விரல் உள்ளங்கையில் இணையுமிடத்தில் சக்திரேகை செல்லும். பெருவிரல் உள்ளங்கையில் இணையுமிடத்தில் "ஆண் ரேகை" படிந்திருக்கும். (139½)

சிறு விரலின் நீளம் மூன்று அங்குலம் நான்கு யவமாம். மோதிர விரலின் நீளம் நான்கங்குலம் இரண்டு யவமாகும். நடுவிரலின்

[illegible]

நீளம் ஐந்தங்குலம். ஆள்காட்டிவிரலின் நீளம் நாலங்குலம். பெருவிரலின் நீளம் நான்கங்குலம். (141½)

பெருவிரலின் சுற்றளவு கீழ்க்கூறிய வழியிலேயே ஊகித்தறிய வேண்டும். (குறுக்களவில் மும்மடங்கு என்றவாறு) (142)

பெருவிரலின் முதற்கணுவின் நீளம் இரண்டங்குலம் இரண்டு யவம். நுனிக் கணுவின் நீளம் இரண்டங்குலத்தில் இரண்டு யவம் குறைவாக இருக்கும். ஒரு அங்குலம் ஆறு யவமென்றவாறு. (143)

பெருவிரலின் பின்புறத்திலுள்ள கணுவின் நீளம் இரண்டங்குலமாம். பின்புறம் மேற்கணுவின் மேல்பாதியில் நகம் தோன்றும்.

ஆள்காட்டிவிரலின் முதற்கணு ஒரு அங்குலம் நான்கு யவம். நடுக்கணு, ஒரு அங்குலம் இரண்டு யவம். நுனிக்கணுவும் அவ்வாறே. (ஒரு அங்குலம் இரண்டு யவம்). நுனிக்கணுவின் மேல் பாதியில் நகம் தோன்றும். (145½)

மத்யமாத்யதலம் பர்வ ஸார்த்தம் மாநாங்குலம் ஸ்ம்ருதம் ॥ ௧௪௬ ॥
த்விதீயஞ்ச ததைவ ஸ்யாத், த்ருதீயம் த்வ்யங்குலம் பவேத் ।
அநாமிகாயாமேவமேவ ஸ்யாத் அக்ரே பேதோ தஶயவம் ஸ்ம்ருதம் ॥ ௧௪௭ ॥

கநிஷ்டாத்யதலம் பர்வ யவா தஶ, ததாக்ரிமம் ।
அங்குலம் மத்யபர்வஸ்யாத் நகஸ்யாத் பூர்வவத் பவ: ॥

நிர்லோமம் ஶ்லக்ஷ்ணம் கரதலம் பர்வாங்குலிதலம் ஸமாசரேத் ।

அங்குல்யக்ரே யவாத்பஶ்சாத் ஸஜீவ: க்ரியதே நக: ॥

நடுவிரலின் முதற்கணு ஒரு அங்குலம் நான்கு யவமாம். நடுக் கணுவும் அவ்வாறே. மூன்ருவது கணுமட்டும் இரண்டங்குலமாம். மோதிர விரலுக்கும் இவ்வாறே கணுக்களில் அளவு கண்டுகொள்வது. ஆனல் நுனிக்கணுவின் அளவு இதில் வேறுபடும். பத்து யவங்கள் அதன் அளவாம். (ஒரு அங்குலம் இரண்டு யவம்). (147)

சிறு விரலின் முதற் கணுவின் நீளம் பத்து யவங்களாம். (ஒரு அங்குலம் இரண்டு யவம்). இதன் நுனிக்கணுவும் இவ்வளவே யாம். நடுக்கணுவின் அளவு ஒரு அங்குலமே யாகும். இதில் நகத்தை முன் கூறியபடியே (நுனிக் கணுவின் பிற்பகுதியில் மேல் பாதியில்) அமைக்க வேண்டும். (148)

உள்ளங்கையும், விரல்களின் உட்புறமும், மயிர்களில்லாமலும் பளபளப்பாகவும் இருக்குமாறு அறிவாளியான சிற்பி அமைப்பான்.

விரல்களின் நுனியில் ஒரு யவம் அளவுக்குக் கீழ்ப்புறத்தில் உயிருடன் கூடிய நகம் அமைக்கப்படும். அதன் நுனியில் உள்ள பகுதி, (நகங்களின் நுனி) *உயிரற்றதாக அமைக்கப்படும். நகத்

---

* கேஶ ஶ்மஶ்ரு நகாதி நிர்ஜீவதே ஶ்ருதா வா
ணைவ க்ஷுமயேத்யா யதேகேஶ ஶ்மஶ்ரு ஶ்ருதாமேவக்ஷுமயேத்யா

तत्राप्रजीवसंज्ञं नखाग्रं परिकल्पयेत् ।
सजीवोनाशोषितः किञ्चित्किञ्चित् पर्वोपकल्पितः ॥ १५० ॥
यवत्रयप्रमाणेन नखाग्रं परिकल्पयेत् ।

தில் உயிருள்ள பகுதி—உயிரில்லாத பகுதி— என்பதன் கருத்து :—

விரலின் பின்புறத்தில் நுனிக் கணுவில் ஒட்டிக் கொண்டாற் போலுள்ள பகுதி உயிருள்ளதாகக் கருதப்படும். இது சிறிது செந்நிறமாக அமைக்கப்படும். நகங்களின் உயிரற்ற பகுதியாவது, விரல்களின் நுனிக்கு மேல் அதிகமாக வளர்ந்துள்ள நகங்களின் பகுதியாம். இதைக் கத்தி முதலிய கருவிகளால் துண்டிக்கும் பொழுது விரல்களில் எவ்விதமான நோவும் உண்டாவதில்லை. அவ்வாறு துண்டிப்பதாகத் தெரிவது கூட இல்லை. அதனுல் நகம்— மயிர்— இவற்றின் ஒதுங்கின பகுதியை உயிரற்றது என்கிறோம். நகங்களின் இந்தப் பகுதி, தேன்மெழுகு போன்ற வெண்மை நிறமுடையதாம். இவ்வாறுன (உயிரற்றதான) நகத்தின் நுனிப்பகுதியின் அளவு மூன்று யவமாம். (150½)

இவ்வாறாக (150 சுலோகங்களால்) உத்தம நவதாளத்தில், மானிடர்களில் ஆண்களின் அங்க அமைப்பு விளக்கிக் கூறப்பட்டது. இதில் உத்தம நவதாளத்திற்கும் உத்தம தசதாலத்திற்கும் வேறுபாடாக உள்ள அளவுகள் எல்லாம் எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. இதில் கூருமல் விடப் பட்டுள்ள அளவுகள் ஏதேனுமிருப்பின்

उपमृत्वगमेध्यावेति"

(தைத்-ஸம். காண்டம். 6, ப்ர. 1. அனு. 1.)

என்னும் வேதவாக்கியம். உடலினின்றும் கழித்துவிடக்கூடிய தன்மையிலுள்ள மயிர்-மீசை-நகங்கள். இவற்றை "உயிரற்ற அசுத்தமான தோல்" என்று கூறுவதைக் காண்க.

அந்தராணாந்தத்ஸ்தாநே ஸம்யோஜ்யம் தஶதாலவது³க்தவத் |

இதி ஶில்பரத்நே உத்தரபா⁴கே³ உத்தமநவதாலலக்ஷணம் நாம அஷ்டமோ(அ)த்⁴யாய꞉ |

அவற்றை உத்தம தசதாளத்தில் போலவே இதிலும் (உத்தம நவதாளத்திலும்) அமைத்துக் கொள்ளவேண்டியது.

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், உத்தமநவதாளத்தைக் கூறும் எட்டாம் அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌨𑌵𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌮𑌧𑍍𑌯𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌮𑍍 ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஒன்பதாவது அத்தியாயம்

மத்யம நவதாளம்

உத்தேசத்திலுள்ள பிம்பத்தின் மொத்த உயரத்தை நூற்றெட்டு கூறுக்ச் செய்து, ஒவ்வொரு கூற்றையும் ஒவ்வொரு அங்குலமாகக் கொண்டோமானால், (ஒரு தாளம் என்பது பன்னிரண்டங்குலம் என்னும் கணக்கில்) ஒன்பது தாளமாகும். இதில் அதிகமாக நான்கு கூறுகள் சேர்க்கப்படாமல், உள்ளது உள்ளபடியே கணக்கிடப்படுகின்றமையின் இது "மத்யம" மெனப்படுகின்றது. இந் நூலில் கீழ் 4-வது அத்தியாயம் 44—45-வது சுலோகங்களில், மத்யமநவதாளத்தில் எந்தெந்த மூர்த்திகளை அமைக்கலாம் என்னும் விஷயம் விளக்கப்பட்டது. இவ்வத்தியாயத்தில் இதன் அளவுகள் கூறப்படுகின்றன.

[illegible]

[illegible] ‖ ௧ ‖

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ।

				அங்குலம்.
(1)	உச்சந்தலையிலிருந்து நெற்றி வரையில்			3
(2)	நெற்றியிலிருந்து முகவாய்க்கட்டை வரை			12
(3)	அதிலிருந்து கழுத்து		,,	3
(4)	,,	ஹ்ருதயம்	,,	12
(5)	,,	நாபி	,,	12
(6)	,,	மேட்ரமூலம்	,,	12
(7)	,,	துடைகள்	,,	24
(8)	,,	முழங்கால்	,,	3
(9)	,,	கெண்டைக்கால்	,,	24
(10)	,,	உள்ளங்கால்	,,	3
			ஆக அங்குலம்	108

மத்யம நவதாளத்திற்கு மேலிருந்து கீழாகக் கொடுக்கப்பட்ட இந்த அளவுகளின் ஒவ்வொரு எல்லையிலும் நேராகக் குறுக்கே ஸூத்திரங்களை வரைந்து கொள்ளவேண்டும். அத்துடன் மற்றும் ஐந்து இடங்களிலும் குறுக்கே ஸூத்திரங்களை வரைந்து கொள்ள வேண்டும். ஆக மொத்தம் பதினாறு குறுக்கு ஸூத்திரங்கள் ஆகின்றன. (1) பீடத்தின் நாளம், (2) தாமரை மலர் (பீடத்தின் அமைப்பிலுள்ளது), (3) மகுடம் (முடி), (4) துடைகளின் மத்தியபாகம், (5) கெண்டைக்கால்களின் மத்தியபாகம் ஆகிய ஐந்து முன்பு கூறப்

[illegible]

[illegible]

படாத இடங்கள். இவற்றிலும் குறுக்கு ஸூத்திரங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். இவற்றின் விவரம் :—

(1)	மகுடத்தி(முடியி)ன் உச்சியில்	குறுக்கே	ஒரு	ஸூத்திரம்.
(2)	உஷ்ணீஷாந்தத்தில்	,,	,,	,,
(3)	நெற்றியின் உச்சியில்	,,	,,	,,
(4)	முகவாய்க்கட்டை யளவில்	,,	,,	,,
(5)	கழுத்தின் அடியில்	,,	,,	,,
(6)	ஹ்ருதயத்தினளவில்	,,	,,	,,
(7)	நாபித்தலத்தினளவில்	,,	,,	,,
(8)	மேட்ர மூலத்தில்	,,	,,	,,
(9)	துடைகளின் மத்தியில்	,,	,,	,,
(10)	துடைகளின் நுனியில்	,,	,,	,,
(11)	முழங்கால்களின் முடிவில்	,,	,,	,,
(12)	கெண்டைக்கால்களின் மத்தியில்	,,	,,	,,
(13)	,, நுனியில்	,,	,,	,,
(14)	உள்ளங்கால்களினளவில்	,,	,,	,,
(15)	பத்மபீடத்தின் நாளத்தினளவில்	,,	,,	,,
(16)	,, பத்மத்தினளவில்	,,	,,	,,

இவ்வாறாகக் குறுக்கு ஸூத்திரங்களை முந்துற முன்னம் அமைத்துக் கொள்வது பிம்பத்தைத் திறமையுடன் பொருத்தமாகப் பண்ணுவதற்கு இன்றியமையாததாம்.

அவ்வாறாகவே மேலிருந்து கீழ்நோக்கி வருமாறாகவும் ஏழு ஸூத்திரங்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

𑌵𑌕𑍍𑌷𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌵𑌸𑌾𑌨𑌿𑌤𑌿-

𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑍈𑌃 ॥ ௨ ॥

இந்த ஸூத்திரங்களின் விவரம் :—

(1) உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பிம்பத்தின் மத்தியில் ஒரு ஸூத்திரம். இதுவே "மத்திய ஸூத்ர" மென்று வழங்கப் படும்.

(2)
(3) இரு புறங்களிலும் காதுகளின் ஓரங்களில் இரு ஸூத்திரங்கள்

(4)
(5) இரண்டு கைகளின் எல்லையில் இரண்டு ஸூத்திரங்கள்.

(6)
(7) இரு கைகளிலுமுள்ள ஆயுதங்களின் எல்லையில் இரு ஸூத்தி ரங்கள்.

இவ்வாறாக மேலிருந்து கீழ் ஏழு ஸூத்திரங்கள் கூறப்பட்டன.

நெற்றியின் உச்சியிலிருந்து மூகவாய்க்கட்டை வரையில் முகத்தின் உயரம் பன்னிரண்டங்குல மென்பது முன்பே கூறப்பட்டது. இந்தப் பன்னிரண்டு அங்குலங்களிலும் பன்னிரண்டு குறுக்குக் கோடுகள் வரைந்து கொள்ளவேண்டும். அவ்வாறே மேலிருந்து கீழ்நோக்கியவாறாகவும் கோடுகளை வரைந்து, ஒரு அங்குலம் சதுர மான கட்டங்களாக இவ்விடத்தைச் செய்து கொள்ளவேண்டும். முகத்தில் அமைக்க வேண்டிய கண்-மூக்கு-காது முதலிய உறுப்புக் களைத் தவறாமல் சரியாக அமைத்தற்கு இந்தக் கட்டங்கள் அவசிய மாகும். இவ்வளவும் செய்துகொண்ட பிறகு உறுப்புக்களின் தனித் தனியான அளவுகள் கூறப்படுகின்றன. (2)

அஷ்டாங்கு³லா தத ஊர்த்⁴வாத⁴ஶ்சதுரங்கு³லம் லலாட-
மர்த⁴சந்த்³ரஸமாகாரம் ஸுந்த³ரம் ததா² ஸ்யாத் ।
நாஸா வேதா³யதா த்³வ்யங்கு³லவிஸ்தாரா
ஸ்யாதா³தா³வங்கு³லநிம்நகா ॥ ३ ॥

தத³க்³ரம் பார்ஶ்வயுக்³மம்* ச தது³ச்சம் திலபுஷ்பவத்
கோஷ்ட²மாத்ரமிதி விஸ்த்ருதேந ச ।

முதலில் நெற்றியின் அளவு கூறப்படுகின்றது. நெற்றியின் நீளம் எட்டங்குலம். அகலம் (மேலிருந்து கீழ்) நான்கங்குலம். அரைச்சந்திரன் போல் அழகாகக் காட்சியளிக்கும். இதிலிருந்து நான்கங்குலம் (கீழ்ப்புறம்) நீளமுள்ளதாகவும், இரண்டங்குலம் அகலமுள்ளதாகவும் மூக்கை அமைக்க வேண்டும். தொடங்குமிடத்தில் மூக்கானது ஒரு அங்குலம் உள்ளாழ்ந்தியவாறாக இருக்கும். நாசியின் நுனி (உச்சி), அதனகலத்தினளவே (இரண்டங்குலமே) உயர்ந்ததாக இருக்கவேண்டும் பொதுவில் எள்ளுச்செடியின் பூ போன்ற அமைப்புள்ளதாகக் கீழ்க் கூறப்பட்ட அளவுகளில் அழகாக நாசியை அமைக்கவேண்டும். (3)

கண்களின் அமைப்பு இனி விளக்கப்படுகின்றது. மூக்கின் அடிப்புறத்தின் இருபுறங்களிலும் கண்களை அமைக்கவேண்டும். முகத்தின் குறுக்கே வரையப்பட்டுள்ள பன்னிரண்டு கோடுகளில் (மேலிருந்து கீழ்) ஐந்தாவது ரேகையில் இக்கண்கள் இடம் பெறும். கண்களின் நீளம் (தனித்தனியே) இருகட்டங்களினளவாம். இவற்றினகலம் (தனித்தனியே) ஒவ்வொரு அங்குலமாம். கண்களின் மத்தியில் "தாரகைகள்" இருக்கும். (தாரகை— கருவிழி) கண்

---

* இங்கு "யுக்³மே" என்றிருந்தால் பொருந்தும். ஆனால் ச்லோகம் கெட்டுவிடும். அதற்காக "ஸுவிஶாலம் ஶேஷம் ஆயதாஸ" என்கிற வகையில் இது அனுமதிக்கப்பட்டுள்ளது.

[illegible]
[illegible] ॥ ௪ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫ ॥

[illegible]
[illegible]

ணின் நீளத்தில் மூன்றிலொரு பங்கு கருவிழிகளின் அளவாம். கருவிழிகளின் மத்தியில் ஜோதிமண்டலம் இருக்கும். கருவிழியின் அளவில் மூன்றிலொரு பாகம் ஜோதிமண்டலத்தினளவாம். தாமரை மலர் போல் அழகியதாகக் கண்களிரண்டையும் அமைக்க வேண்டும்.

நெற்றிக்கும் கண்களுக்கும் நடுவில் புருவங்களை அமைக்கவேண்டும். இவற்றின் நீளம் (தனித்தனியே) நந்நான்கங்குலம். புருவங்களிரண்டினுடையவும் இடைவெளி ஒரு அங்குலமாம். இவற்றினகலம் இரண்டு யவம் அளவுள்ளதாகும். இவ்வாறாகப் புருவங்கள் அகலக் குறைவாகவும் நீளம் அதிகமாகவும் அமைக்கப்பட வேண்டும். காதுகள் ஒவ்வொன்றும் இவ்விரண்டங்குலம் அகலமும் நந்நான்கங்குலம் நீளமுமுள்ளனவாக அமைக்கப்பட வேண்டும். (அகலம்-நீளம்— என்னும் சொற்கள், இங்கு, புருவங்களின் விஷயத்திலும் காதுகள் விஷயத்திலும் அவ்வவற்றின் அமைப்புக்கேற்றவாறு மாறுபட்ட பொருளில் உபயோகிக்கப் பட்டுள்ளமையை வாசகர்கள் உணரவேண்டும்). இந்தக் காதுகளின் உள்ளிருக்கும் துவாரம், கண்களின் மத்தியிலிருந்து தொடர்ந்தாற்போல் இருபுறமும் செல்லும் ரேகையின் அளவுக்குள்ளடங்கியதாக (அதற்கு மேற்படாதவாறாக) அமைக்கப்படவேண்டும். (5)

கீழ் உதடு இரண்டங்குலம் நீளமும், ஒரு அங்குலம் அகலமுமுள்ளதாம். மேல் உதடு ஒரு அங்குலம் நீளமும் அரை அங்குலம்

𑌕𑌂𑌬𑍀𑌰𑌕𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌸𑍍𑌰𑍁𑌕𑍍𑌸𑍍𑌰𑍁𑌵𑍋𑌦𑌰𑌂 𑌗𑍋𑌜𑍀𑌂
𑌘𑍋𑌣𑌾𑌗𑍍𑌰𑌸𑌂𑌨𑌿𑌹𑌿𑌤𑌮𑌷𑍍𑌟𑌯𑌵𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌂 ॥

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌲𑌵𑌿𑌵𑌰𑌂 𑌹𑌨𑍁𑌮𑌷𑍍𑌟-
𑌮𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌹𑌨𑍁𑌰𑌥𑍋 𑌦𑍍𑌵𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍍 ।
𑌗𑍍𑌰𑍀𑌵𑌾 𑌤𑌥𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌤𑌾 𑌕𑍁𑌚𑌯𑍋𑌰𑌵𑌕𑌾𑌶𑌂
𑌕𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑍍𑌤𑌨𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌰 𑌨𑌵𑌤𑌾𑌲𑍇 ॥ ௭ ॥

அகலமுமுள்ளதாம். இரண்டு உதடுகளினுடையவும் ஓரங்களில் "ஸ்ருக்வங்கள்" ஒரு அங்குலம் அகன்றிருக்கும். (ஸ்ருக்வ—கடைவாய்). உதடுகளின் மேற்புறத்தில் நாசியின் கீழ் "கோஜீ"யை அமைக்கவேண்டும். "கோஜீ" எனப்படுவது, மேல் உதட்டின் மத்தியிலிருந்து மூக்கின் நடுச்சுவர் வரை கால்வாய் போன்ற அமைப்புள்ள பகுதி. இதன் அமைப்பு, யாகத்தில் உபயோகிக்கப்படும் "ஸ்ருக்" "ஸ்ருவம்" இவை போன்றதாகவோ, அல்லது சமையலுக்கு உபயோகிக்கப்படும் கரண்டி போன்றதாகவோ இருக்கவேண்டும். சர்க்கரை முதலியன எடுத்தள்வதற்கான "ஸ்பூன்" போன்றதாகவும் இருக்கலாம். "கம்பிரகம்" என்னும் சொல் மேற்கூறிய பொருள்கள் யாவற்றையும் குறிக்கும். கோஜீக்கு உவமமாகக் கம்பீரம்—என்னும் பொருள் கொடுக்கப்பட்டிருத்தலால், தகுதியை அனுஸரித்து மேற்கூறியவற்றுள் ஏதேனுமொன்றைப் போல் கோஜியை அமைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. கோஜியின் பாதி பாகம் (மேற்புறம்) கோணையின் முனையால் மறைக்கப்பட்டிருக்கும். "கோணு" என்பது மூக்கின் நுனியில் உள்ள துதிக்கை போன்ற பகுதி. இந்த "கோஜீ" மேலிருந்து கீழ் எட்டு யவம் நீளம் சரிந்திருக்கும். (6)

காதிலிருந்து முகவாய்க்கட்டை வரையில் உள்ள இடைவெளியின் அளவு எட்டங்குலமாம். முகவாய்க்கட்டையின் அளவு இரண்டங்குலம், கழுத்தினகலம் எட்டங்குலம். கக்ஷங்களிரண்டினுடையவும் இடையிலுள்ள பகுதி இருபத்துநாலங்குலமாம். ஸ்தனங்

நாபிஸ்தலீ விபுலா ஜ்ஞேயா மாத்ராவிஸ்தாரேண:
அஷ்டாதஶாங்குலை: கடிதேஶ: ப்ருதுத்வேந ஸம்மித: ।
கக்ஷஸ்தநாந்தரம் ப்ரத்யேகம் ஷடங்குலமுதாஹ்ருதம்
கக்ஷாம்ஸயோஸ்ததா தாவத் அம்ஸௌ மாம்ஸலௌ ஸ்ம்ருதௌ ॥ ௮ ॥

கக்ஷாதிகூர்பராந்தஸ்ய தைர்க்யம் அஷ்டாதஶாங்குலை:
கூர்பராத் மணிபந்தாந்தம் ஏகாதஶாங்குலம் ஸ்ம்ருதம் ।
த்விதீயஸ்ய து ஹஸ்தஸ்ய தைர்க்யம் தஶாங்குலம் ததா
மூலே சதுரங்குலம் வ்யாஸ: அக்ரே த்ர்யங்குல ஏவ ஹி ॥

களிரண்டினுடையவும் இடையிலுள்ள பகுதியின் அளவு ஒரு தாள மாம். (பன்னிரண்டங்குலம்). (7)

நாபித்தலம் (கொப்பூழ்) ஒரு அங்குலம் அகலமுள்ளதாம். கடிப்பிரதேசம் (கொப்பூழுக்குக் கீழ்ப்புறம். அரை நாண் கயிறு அணியுமிடம்) பதினெட்டங்குலம் அகலமுடைத்தாம். கக்ஷத்திற்கும் ஸ்தநத்திற்கும் உள்ள இடைப்பகுதி (ஒவ்வொரு பக்கத்திலும் தனித்தனியே) அவ்வாறங்குலங்களாம். அவ்வாறே கக்ஷங்களுக்கும் தோள்களுக்கும் உள்ள இடைப் பகுதியும் அவ்வாறங்குல அளவாம். இரண்டு தோள்களும் அதிகமான சதைப்பற்றுள்ளவைகளாக அமைக்கப்பட வேண்டும். (8)

கக்ஷம் முதலாக முழங்கை வரையிலுள்ள நீளம் பதினெட்டங்குலம். முழங்கையிலிருந்து மணிக்கட்டு வரையிலுள்ள நீளம் பதினோரங்குலம். (நான்கு கைகளுடன் கூடியதாக பிம்பம் அமைப்பதாயின்) மற்றொரு முன்கையின் நீளம் பத்தங்குலம். கக்ஷமூலத்தில் (புஜம் தொடங்குமிடத்தில்) அதனகலம் நான்கங்குலம். புயத்தின் முடிவில் அதன் குறுக்களவு மூன்றங்குலம். முழங்கைகளிரண்டின் குறுக்களவும் அவ்வாறேயாம். (மூன்றங்குலமே). (9)

[illegible]
[illegible] ॥ ௰ ॥

[illegible]
[illegible] ॥ ௧௧ ॥

[illegible]

உள்ளங்கையின் நீளம் எட்டங்குலமாம். அதில் இரண்டங்குலம் குறைவாக (ஆறங்குலம்) அதனகலமாம். நடுவிரலின் நீளமும் ஆறங்குலமேயாம். நடுவிரலின் இருபுறமும் உள்ள இரு விரல்களின் (ஆள்காட்டிவிரல்—மோதிரவிரல்) நீளம், நடுவிரலின் நீளத்தில் 1/௰ (பத்தில் ஒரு பங்கு) குறைவாம். இதிலும் 1/௰ குறைவானது பெருவிரல், சிறுவிரல் இவற்றின் நீளம். (10)

பெருவிரலின் அகலம் பன்னிரண்டு யவம். இதில் மூன்றிலொரு பாகம் குறைவானது மற்ற விரல்களின் அகலம். ஒவ்வொரு கணுவும் முந்தியதைக் காட்டிலும் ஒரு யவம் குறைவாக இருக்கும். நடுவிரலின் முதலிரண்டு கணுக்களும் சமமான நீளமுள்ளவையாம். கடைக்கணு அதில் பாதியளவுள்ளது. (11)

ஆள்காட்டிவிரல், மோதிரவிரல் இவற்றின் கணுக்கள் இவற்றில் (நடுவிரலின் கணுக்களில்) 1/8 குறைவான அளவுள்ளவை. சிறுவிரலின் கணுக்கள், அவற்றில் (நடுவிரலின் கணுக்களில்) [illegible] பாகம் குறைவான அளவுள்ளவையாம். பெருவிரலின் இரண்டு

பர்வாணி, பர்வ மாநம் க்ரமஶோ(அ)ஸ்ய தர்ஜநீ-
மத்யமயோ: பர்வபர்வம் பூர்வபர்வஸமாயதா: ॥ 12 ॥

ஸ்வஸ்வாக்ரபர்வார்த்தமிதா நகா: ஸ்யு:
நாஹோ(அ)ங்குஷ்டே வேதாங்குலோ(அ)ஷ்டமாம்ஶவிஹீந-
மத்யாஸ்ய தர்ஜநிகாநாமிகயோஸ்ததோ(அ)ஷ்ட- [தத: |
நாஹோ(அ)ஷ்டமாம்ஶரஹிதோ விஹித: க்ரமேண ॥ 13 ॥

அங்குஷ்டதர்ஜநிகயோர்மத்யமங்குலாப்யாம்-
த்வ்யங்குலம், ப்ராங்குஷ்டமணிபந்தமத்யம் |
வேதாங்குலை: பரிமிதம், மணிபந்தகே(அ)பி
ததைவ விஸ்த்ருதி:. கரபதைர்க்யமர்த்ததாலம் ॥ 14 ॥

களுக்களும், முறையே ஆள்காட்டிவிரலினுடையவும் நடுவிரலினுடையவும் முதற்கணுக்களுக்குச் சமமான அளவுள்ளவையாம். (12)

ஒவ்வொரு விரலிலும் அதனதன் நுனிக்கணுவின் பாதியளவில் நகங்கள் அமைக்கப்படவேண்டும். பெருவிரலின் சுற்றளவு நான்கங்குலம். அதில் 1/8 பாகம் குறைந்தது நடுவிரலின் சுற்றளவு. அதிலும் 1/8 பாகம் குறைந்தது ஆள்காட்டிவிரல்-மோதிரவிரல் இவற்றின் சுற்றளவு. அதனிலும் 1/8 பாகம் குறைந்தது சிறுவிரலின் சுற்றளவாம். (13)

பெருவிரல், ஆள்காட்டிவிரல் இவற்றின் இடைவெளி இரண்டங்குலமாம். பெருவிரலுக்கும் மணிக்கட்டிற்கும் இடையிலுள்ள பாகம் நான்கங்குலம் அளவுள்ளதாம். மணிக்கட்டின் அகலமும் அவ்வளவே (நான்கங்குலமேயாம்). "கரபம்" எனப்படும் பகுதியின் நீளம் அரை தாளமாம். (ஆறங்குலமென்றவாறு).

குறிப்பு:— மணிக்கட்டிலிருந்து சிறுவிரலின் அடிப்புறம் வரையிலுள்ள உள்ளங்கையின் ஓரம் "கரபம்" எனப்படும். (14)

ஶிஶ்நம் யுகாங்குலமிதம், வ்ருஷணத்வயம் ஸ்யாச்ச
த்வ்யங்குலம், ஸ்பிக்பிண்டே ஸ்தூலே ச ।
வ்ருத்தே ஷடங்குலததே, அநயோ꞉ ஸந்தௌ
கௌபீநாதாரஸ்ய ஏகாங்குலா க்ரமாத் ॥ ௧௫ ॥

ஊரூ மூலமத்யாக்ரவிஸ்த்ருதி꞉ க்ரமஶோ நந்தார்கபாணை꞉ ஸ்யாச்ச
ஜங்காத்வயே ஷட்ஸப்தத்ரியவஸஹிதை꞉ ।
ஜாநுத்வயே ...
... ॥ ௧௬ ॥

ஆண்குறியின் நீளம் நான்கங்குலம். விருஷணங்களின் (அண்டங்களின்) நீளமும் இவ்விரண்டங்குலமே யாகும். ஸ்பிக்பிண்டங்களிரண்டினுடையவும் (கடிதேசத்தின் பின்புறம், வட்டவடிவமாயுள்ள இரண்டாகப் பிரிந்துள்ள சதைப்பற்றுள்ள உருண்டைகள் ஸ்பிக்பிண்டங்கள் எனப்படும்) அமைப்பு யானையின் மத்தகம் போன்றிருத்தல் சிறந்தது. அவையிரண்டும் வட்டவடிவமாயிருக்கும். ஒவ்வொன்றும் ஆறு அங்குலம் அகலமுள்ளவையாம். இவையிரண்டினுடையவும் மத்தியில் "கோவணம்" கட்டிக்கொள்ளும் அமைப்பும் ஒரு அங்குலம் அகலம் அமைக்கப்பட வேண்டும். இதன் நுனி (மேல்புறம்) படிப்படியாகத் தேய்ந்து கொண்டே வருமாறாக அமைக்கவேண்டும். (15)

துடைகளிரண்டினுடையவும் அடியிலும் நடுவிலும் நுனியிலும் இருக்கவேண்டிய அகலம் (குறுக்களவு): முறையே ஒன்பது, பன்னிரண்டு, ஐந்தங்குலங்களாம். அவ்வாறே ஜங்கைகள் (கெண்டைக்கால்கள்) இரண்டினுடையவும் அடியிலும், நடுவிலும், நுனியிலும் உள்ள அகலம் (குறுக்களவு) முறையே, ஆறங்குலம், ஏழங்குலம், மூன்றங்குலமும் மூன்று யவமும் ஆகும். ஜாநுப் பிரதேசம் (முழங்கால்கள்) இரண்டிலும் தனித்தனியே எட்டங்குலம் குறுக்களவு இருக்குமாறு அமைத்தல் வேண்டும். (16)

[illegible]

[illegible]

[illegible] |

[illegible]

[illegible]

[illegible] ॥ ௧௭ ॥

[illegible]

[illegible] |

[illegible]

[illegible] ॥

பாதத்தின் (உள்ளங்காலின்) அகலம் நான்கு இடங்களில் உள்ளவாறு கூறப்படுகின்றது. அடிப்புறத்தில் (குதிகாலில்) நான்கங்குலம். அதையடுத்தாற்போல் ஐந்தங்குலம். பிறகு ஆறங்குலம் இரண்டு யவம். முடிவில் ஆறங்குலம். இவ்வாறாக நான்குவிதம் உள்ளங்காலின் அகலமாம். உள்ளங்காலின் நீளம் பன்னிரண்டங்குலம். பெருவிரலின் எல்லையில் ஒரு அங்குலம் உயரமிருக்கவேண்டும். மற்ற விரல்களின் புறத்தில் அரை அங்குலம் உயரமிருக்க வேண்டும். பாதத்தின் முன்புறம் (நுனி) ஆறங்குலம் நீளமாம்.

காலின் பெருவிரலும், அதற்கடுத்த விரலும் தனித்தனியே மும்மூன்றங்குலம் நீளமுள்ளவையாம். நகம் உள்பட முழுவிரலின் நீளமே இது. மற்ற மூன்று விரல்களும் ஒன்றைவிட மற்றொன்று சிறியதாகவே இருக்கும். முந்திய விரலின் நகத்தினளவு போக மற்ற பாகம் அடுத்த விரலின் முழு நீளமாம் (நகம் உள்பட). பெருவிரலில் இரண்டு கணுக்களும் மற்ற விரல்களில் மும்மூன்று கணுக்களும் இருக்கும். நகங்களின் வடிவம் அஷ்டமீ சந்திரன் போன்றிருக்கும். (அரைவட்ட வடிவமாயிருக்கும்). (18)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பெருவிரலின் சுற்றளவு ஆறங்குலமாம். அதற்கடுத்த விரலின் சுற்றளவு மூன்றங்குலம். அதற்கடுத்த விரலி(நடுவிரலி)ன் சுற்றளவு இதில் எட்டிலொரு பங்கு குறைவாக இருக்கும். இதிலும் எட்டில் ஒரு பாகம் குறைந்தது அதற்கடுத்த விரலின் சுற்றளவு. அதிலும் எட்டிலொரு பாகம் குறைந்தது சிறுவிரலின் சுற்றளவு. விரல்களின் சுற்றளவுக்குப் பொதுவான மற்றொரு வழியும் கூறப்படுகின்றது. ஒவ்வொரு விரலினுடையவும் அகலத்தைப் போல் மும்மடங்கு அதனதன் சுற்றளவாம், (10)

தலையின் சுற்றளவு மூன்று தாலங்களாம் (36 அங்குலங்கள்). இரண்டு கக்ஷங்களின் நடுவில். உடம்பின் சுற்றளவு ஐந்து தாலமும் இரண்டங்குலமும் (62-அங்குலம்). வயிறு அளவில் உள்ள சுற்றளவு நான்கு தாலத்தில் பதினொன்கு யவம் குறைவாம் (46-அங்குலமும் 2 யவமும்). நாபி யளவில் (கொப்பூழ் இருக்குமிடத்தில்) சுற்றளவு மூன்றரை தாளங்களாம் (42 அங்குலங்கள்). அவ்வாறே கடிதடத்தில் (அரைநாண் கயிறு அணியுமிடத்தில்) சுற்றளவு நான்கு தாளமும் அரைதாளமுமாம். (54-அங்குலங்கள்). (20)

ஜங்கோருபாஹ்வோர்மத்யாம்ஶ்ச கராங்குலீஷு
கார்யா கரீந்த்ரகரவச்ச விவ்ருத்ததா ச।
கூர்மோபமதா ப்ரபதயோர்ஜங்காஸமதா ச
கண்டே, கபோலதலயோர்தர்பணஸமதா ச ॥௨௧॥

யத்து க்ருதம் ந கத்யதே ஹ்யத்ர
தத்ஸமஸ்தமகிலம் தம் யதோக்தம்।
உத்தமநவதாலலக்ஷண-
ப்ரோக்தமானமனுஸ்ருத்ய காரயேத் ॥ ௨௨ ॥

இதி ஶில்பரத்னே உத்தரபாகே மத்யமநவதாலலக்ஷணம்
நாம நவமோऽத்யாய꞉ ।

ஜங்கைகள் (கெண்டைக்கால்) துடைகள் இருபுஜங்கள் இவற்றின் மத்தியபாகம், கைவிரல்கள், இவற்றின் வடிவம் யானையின் துதிக்கை போன்ற அமைப்புடன் வட்டவடிவாக அமைக்கப்பட வேண்டும். புறங்கால்களிரண்டும் ஆமை போன்ற அமைப்புள்ளனவாக இருக்கவேண்டும். கழுத்தின் அமைப்பு சங்குபோன்றிருத்தல் வேண்டும். கன்னங்களிரண்டும் கண்ணாடி போன்றிருத்தல் வேண்டும். (21)

இவ்வாறாக மத்யமநவதாலத்தின் அளவுகள் விளக்கிக் கூறப்பட்டன. இதில் சிற்சில அளவுகள் கூறாமல் விடப்பட்டன. அவற்றையெல்லாம் உத்தம நவதாளத்தின் அளவிலேயே அமைத்துக் கொள்ளவேண்டும்.

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம், மத்யம நவதாளத்தின் இலக்கணத்தைக் கூறும் ஒன்பதாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

அத² த³ஶமோऽத்⁴யாய: ।

* அத⁴மம் நவதாலம் ।

உஷ்ணீஷோங்குலம் ஶிவாம்ஶம் வ்யாஸ: கேஶம் ஸாயபலிலாமயா ।
கேஶாந்தாந்நேத்ரஸூத்ராந்தம் பாகோ நவதாம்ஶக: ॥

தத்ரைவ தஸ்மாந்நாஸாந்தம் ததா தத்ர ஹநுவீக்ஷக: ।
ஸார்த்தக்ரீவாங்குலம் ஸ்ரீவத்ஸாங்குலாந்தம் தத: பர: ॥ ௨ ॥

பத்தாவது அத்தியாயம்.

அதம நவதாளம்.

இவ்வத்தியாயத்தில் அதமநவதாளம் விளக்கப்படுகின்றது. ஏற்கெனவே கூறப்பட்டுள்ளபடி அதமநவதாளத்தின் முழு உயரம் 104-அங்குலங்களாம். இதை முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இதன் உறுப்புக்களின் அளவுகளை அமைக்கவேண்டும்:—

			அங்குலம்.	யவம்.
(1)	உஷ்ணீஷம்— (தலைப்பாகை)	உயரம்	1	0
(2)	கேசாந்தம் வரை	,,	2	4
(3)	நேத்ரஸூத்திரம் வரை	,,	5	6
(4)	நாஸாபுடம் (மூக்கு நுனி) வரை	,,	3	6
(5)	ஹநுவந்தம் (தாள்கட்டை) வரை	,,	3	6
(6)	கழுத்தின்	,, ,,	3	4

* இந்நூலில், கீழ் நான்காம் அத்தியாயம் 45—46-வது சுலோகங்களில், இந்த அளவில் அமைக்கப்பட வேண்டிய பிம்பங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

ஹ்ருதயாந்தம் ததா நாபிமேட்ராந்தம் ச தத: பரத: ।
மேட்ராந்தஞ்ச ப்ருதக்கல்பா பாங்குலாத்ர்யம்ஶயுதகம் ॥ ௧ ॥

ஊரு தீர்கம் ததா யேர்காக்ருயோர்விம்ஶாம்ஶகம் ப்ருதக் ।
மானுதாம்யாங்குலம் ஜாநு ஜங்கா ஊர்வதாவபேக்ஷ: ॥ ௨ ॥

மாங்குலாநாம் வாயஸ்த்ரி-
ஸாமமேவ விதீயதே ।
பாஹ்வோரூருஸமம் தீர்கம்
ப்ரகோஷ்டம் ஷோடஶாங்குலம் ॥ ௩ ॥

தலதீர்கம் பஞ்சாம்ஶம் தத்வந்மத்யாங்குலீயகம் ।

				அங்குலம்.	யவம்.
(7)	ஹ்ருதயம்	வரை	உயரம்	11	2
(8)	நாபி (கொப்பூழ்)	,,	,,	11	2
(9)	மேட்ரமூலம்	,,	,,	11	2
(10)	துடைகளின்	,,	,,	22	4
(11)	முழங்கால்களின்	,,	,,	3	4
(12)	கெண்டைக்கால்களின்	,,	,,	22	4
(13)	கணுக்கால்	,,	,,	3	4
			ஆக மொத்தம்	104	0

புஜங்களின் நீளம் துடைகளின் நீளம் போன்றதே. (22-அங், 4 யவம்.) ப்ரகோஷ்டம் (முன்கை) பதினாறங்குலம் நீளம். (5)

உள்ளங்கையின் நீளம் ஐந்தங்குலம். கையின் நடுவிரலின் நீளமும் அவ்வாறே. (5 அங்குலம்).

𑌶𑍇𑌷𑌂 𑌯𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌵𑌤𑍍 ॥ கூ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌅𑌧𑌮𑌨𑌵𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌿𑌰𑍍𑌨𑌾𑌮

𑌦𑌶𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃।

இவ்வாறு அதமநவதாளத்திற்குச் சிறப்பாக உள்ள அளவுகள் கூறப்பட்டன. இதில் கூறப்படாத மற்ற அங்கங்களின் அளவுகளை உத்தம நவதாளத்தில் சொல்லியபடியே ஊகித்தறிந்து கொண்டு செய்யவேண்டும்.

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், அதமநவதாளத்தைக் கூறும் பத்தாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

அத² ஏகாத³ஶோ(அ)த்⁴யாய꞉ ।

* அஷ்டதாலோத்ஸேத⁴꞉ ।

உஷ்ணீஷாத்³யம் ஶிராம்ஶம் ஸ்யாத் கேஶம் ஸாயவமங்கு³லக꞉ ।
பாதோ³நத்³வ்யங்கு³லம் ஸ்யாத் கேஶாந்தாந்தம் விஶேஷத꞉ ॥ ௧ ॥

கேஶாந்தாத³க்ஷிஸூத்ராந்தம் த்ர்யங்கு³லம் சைகயாவக꞉ ।
தஸ்மிந்நேவ ச பட்டாங்க³ம் ஶேஷம் தத³ந்தம் விஶேஷத꞉ ॥ ௨ ॥

பதினோராவது அத்தியாயம்

அஷ்டதாளம்

அஷ்டதாளம்— எட்டு தாளம். $8 \times 12 = 96$ அங்குலம் ஆகின்றதல்லவா? இதுதான் இதில் மத்தியமம். இதற்கு மேல் நாலங்குலம் கூட்டினால் உத்தமமும், நாலங்குலம் குறைப்பதனால் அதமமும் வரும். இங்கு பொதுவாகவே மூன்றுவகைகட்கும் அளவுகள் கூறப்படுகின்றன. தசதாலம் — நவதாலம்— இவற்றின் அனுபோகத்திலிருந்தும் மற்ற நூல்களிலிருந்தும் ஒவ்வொன்றின் விசேஷங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

		அங்.	யவம்.
(1)	உஷ்ணீஷம் (தலைப்பாகை) உயரம்	1	0
(2)	கேசாந்தம் வரை ,,	2	4

---

* கீழ், நான்காம் அத்தியாயம் 46-வது சுலோகத்தில் விவரம் அறியலாம்.

𑌸𑌾𑌰𑍍𑌧𑍍𑌧𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌤𑌥𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂, 𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌦𑌿 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 |
𑌹𑍃𑌦𑍋 𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌂𑌶𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌨𑍍𑌮𑍇𑌢𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌂 𑌤𑌤𑌃 ||

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌊𑌰𑍁𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌂 𑌭𑌾𑌗𑌤𑌸𑍍𑌤𑌤𑌃 |
𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌕𑌂, 𑌜𑌾𑌨𑍁𑌨𑌾𑌂𑌶𑌂 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍇𑌧𑌃 ||

𑌜𑌙𑍍𑌘𑌾𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌜𑌾𑌨𑍁𑌨𑌾𑌂𑌶𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌃 |
𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑌾𑌂𑌶𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌾𑌦𑌤𑌲𑌂 𑌤𑌥𑌾 ||

			அங்.	யவம்
(3)	ஹநுவந்தம் ..	உயரம்	10	6
	கேசாந்தத்திலிருந்து ஹநு (தாள்)வரை உள்ள உயரத்தையே மூன்று கூறுக்கி, அக்ஷிஸூத்ரம், நாஸாபுடம், ஹநு, இவற்றின் உள் அளவாகக் கொள்ளவேண்டும்.			
(4)	கழுத்தின் உயரம்		5	4
(5)	ஹிக்காவிலிருந்து ஹிருதயம் வரை உயரம்		10	6
(6)	ஹ்ருதயத்திலிருந்து நாபி வரை	,,	10	6
(7)	நாபியிலிருந்து மேட்ரமூலம் வரை	,,	10	6
(8)	அதிலிருந்து துடைகளின் நீளம்	,,	21	4
(9)	முழங்கால்களின் உயரம்		3	4
(10)	கெண்டைக்காலின் நீளம்		21	4
(11)	அதிலிருந்து உள்ளங்கால் வரை		5	4
		ஆகமொத்தம்	100	0

புஜங்களின் நீளம் துடைகளின் அளவேயாகும் (21¾ அங்குலம்). பிரகோஷ்டம் (முன்கை) பதினறங்குலம் நீளமுள்ளதாம். இரு கைகளிலும் உள்ளங்கையின் நீளம் (விரல்கள் தவிர) ஐந்தங்குலமாம். கையின் நடுவிரலின் நீளமும் அவ்வளவேயாம் (5 அங்குலம்).

𑌸𑌾𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌂𑌶𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 𑌸𑌕𑌲𑌂 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌨𑌵𑌤𑌾𑌲𑍋𑌕𑍍𑌤𑌵𑌚𑍍𑌚 ॥ ௬ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌅𑌷𑍍𑌟𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌏𑌕𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

இவ்வாறாக அஷ்டதாளத்தின் அளவுகள் சுருக்கமாகக் கூறப்பட்டன. இதில் சொல்லப்படாத விஷயங்கள் யாவற்றையும் நவதாளத்தில் சொல்லியபடியே கண்டுகொள்வது. (6)

சில்பரத்தினம் இரண்டாம் பாகம் அஷ்டதாளத்தைக் கூறும்
பதினோராவது அத்தியாயம் முற்றும்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

*𑌅𑌥𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌸𑌪𑍍𑌤𑌤𑌾𑌲𑌮𑍍

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌂 𑌚 𑌯𑌵𑌾𑌰𑍍𑌧𑍇𑌨 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑌾𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌃 ।
𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌞𑍍𑌚 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍

𑌚𑌿𑌬𑍁𑌕𑌾𑌨𑍍𑌤𑌞𑍍𑌚 𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌗𑌲𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌪𑍍𑌤𑌭𑌾𑌗𑌞𑍍𑌚 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌂𑌶𑌂 𑌨𑌾𑌭𑌿𑌸𑍀𑌮𑌕𑌮𑍍 ॥ ௨ ॥

பன்னிரண்டாவது அத்தியாயம்

உத்தம ஸப்ததாலம்.

உத்தமஸப்ததாளத்தின் முழு அளவு எண்பத்தெட்டு அங்குலமாம். எண்பத்துநாலங்குலம் மத்யமஸப்ததாளத்தினுயரமும், எண்பதங்குலம் அதமஸப்ததாளத்தினுயரமும் ஆகும். இதன் அளவுகள் :—

		அங்.	யவம்.
(1)	உஷ்ணீஷம்	0	4
(2)	கேசாந்தம்	1	0
(3)	அக்ஷிஸூத்திரம்	2	4
(4)	நாஸாபுடம் வரை உயரம்	3	4
(5)	சிபுகம் (முகவாய்க்கட்டை) ,,	3	4
(6)	கழுத்தின் ,,	4	0
(7)	ஸ்தனங்கள் வரை ,,	7	0
(8)	நாபி (கொப்பூழ்) வரை ,,	11	0
(9)	யோனி மூலம் ,, ,,	11	0

---

* இம் நான்காமத்தியாயம் 46-வது சுலோகத்தில் விவரமறியலாம்.

ததேவ யோநிரந்த்ராணாம் விம்ஶாம்ஶம் பார்ஶ்வயோர்பவேத் |
ஜாநூர்த்வாநம் விநா தஸ்ய ஜங்கா பார்ஶ்வஸமா பவேத் || 1 ||

சரணாக்ரம் விநா ப்ரோக்தம், ஊர்த்வம் து தலாயதம் |
ஶ்ரோணீவிஸ்தாரமானம் ப்ரகோஷ்டம் தத்ஸமாந்திகம் ||

தலாயாமம் ஹஸ்தாம்ஶம் வேதாம்ஶம் தஸ்ய விஸ்த்ருதம் |
தத்தலாயாமஸத்ருஶம் மத்யமாங்குலிதீர்க்கம் || 5 ||

ஶேஷம் ப்ராக்ப்ரோக்தமார்கேண காரயேத்ஸவிஶேஷத: || 52 ||

இதி ஶில்பரத்னே உத்தரபாகே ஸப்ததாலலக்ஷணம் நாம த்வாதஶோऽத்யாய: |

		அங்.	யவம்
(10)	துடைகளின் நீளம் ,,	20	0
(11)	முழங்கால்களின் ,,	2	0
(12)	கெண்டைக்கால் ,,	20	0
(13)	பாதத்தின் உயரம்	2	0
	ஆக மொத்தம்.	88	0

பாததலத்தின் நீளம் பதின்மூன்றங்குலம். புஜங்களின் நீளம் துடைகள் போன்றதே (20 அங்குலம்). ப்ரகோஷ்டம் (முன்கை) பதினறங்குலம். உள்ளங்கையின் நீளம் ஐந்தங்குலம். அதனகலம் நாலங்குலம். நடுவிரலின் நீளம் உள்ளங்கையின் நீளம் போன்றதே (5 அங்குலம்). மற்ற அளவுகள் யாவும் முன் அத்தியாயங்களில் கூறப்பட்ட வழியிலேயே அமைக்கப்பட வேண்டும்.

சில்பரத்தினம் இரண்டாம் பாகம். ஸப்ததாலத்தின் இலக்கணத்தைக் கூறும் பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

த்ரயோதஶோ(அ)த்யாய: |

*அத ஷட்தாலம் |

உஷ்ணீஷம் யவமானம் ஸ்யாத் கேஶாந்தம் ஸமமேகாங்குலம் |
ஸார்த்தவஸ்வங்குலம் வக்த்ரம் க்ரீவா கேஶாந்தாத் ஸார்த்தமங்குலம் || க ||

ஸயோதயம் த்ரிமாத்ராயாம் ஸார்த்தமஷ்டாங்குலம் ஸ்ம்ருதம் |
ஹிக்காதி ஹ்ருதயாந்தஞ்ச நாப்யந்தஞ்ச ததஸ்த்ரிகம் || உ ||

மேட்ரம் தஸ்மாத் ஸார்த்தாஷ்டாங்குலம் மதம் |
பாயுமானம் ஜாந்வந்தம் ஜங்கா வைஸாவஶேஷகா || ங ||

பதிமூன்றுவது அத்தியாயம்

ஷட் (ஆறு) தாலம்

ஆறுதாலத்தில் உத்தமம் 76 அங்குலம். மத்யமம் 72 அங்குலம். அதமம் 68 அங்குலம். இதன் அளவுகள் ;—

		அங்.	யவம்
(1)	உஷ்ணீஷம்— (தலைப்பாகை)	0	4
(2)	கேசாந்தம்	1	0
(3)	வக்த்ரம்	8	4
(4)	கழுத்து (உயரம்)	5	4
(5)	ஹிக்கை முதல் ஹ்ருதயம் வரை	8	4
(6)	ஹிருதயம் முதல் கொப்பூழ் வரை	8	4
(7)	அதிலிருந்து மேட்ரம் வரை	8	4

* மேற் நான்காம் அத்தியாயம் 47-வது சுலோகம் பார்க்க.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௫ ॥
[illegible] தத்ராநுக்தம் விஶாரத: ।

இதி ஶில்பரத்னே உத்தரபாகே ஷட்தாலலக்ஷணம் நாம
த்ரயோதஶோऽத்யாய: ।

		அங்.	யவம்.
(8)	துடைகளினுயரம்	17	)
(9)	முழங்காலினுயரம்	1	(
(10)	கெண்டைக்காலினுயரம்	17	
(11)	அதிலிருந்து உள்ளங்கால் வரை	1	
	ஆக மொத்தம்	76	0

இவ்வாறாக உத்தம ஷட்தாலத்தின் உயரத்தின் அளவு உச்சிமுதல் உள்ளங்கால் வரை கூறப்பட்டது. மற்ற நூல்களில் இங்கு சில அளவுகள் மாறுபாடாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றை ஆய்ந்து தெளிக.

புஜங்களின் நீளம் துடைகள் போன்றதே (17 அங்குலம்). முன்கையின் நீளம் பதினொன்கங்குலம். உள்ளங்கையின் நீளம் ஐந்தங்குலம். நடுவிரலின் நீளமும் அவ்வளவே (ஐந்தங்குலமே)யாம். உள்ளங்காலின் நீளம் பன்னிரண்டங்குலம். இவ்வாறு முக்கிமான அளவுகள் கூறப்பட்டன. இதில் கூறாது விடுத்த மற்ற அளவுகளை முன் கூறப்பட்டவற்றிலிருந்து அறிவாளியான சிற்பியானவர் ஊகித்தறியவேண்டும்.

சிற்பரத்னம் இரண்டாம் பாகம் ஷட்தாலத்தின் லக்ஷணத்தைக் கூறும் பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

அத பஞ்சதசோऽத்யாய: ।

அத பஞ்சதாலோத்தமேந விக்நேஶ்வரலக்ஷணம் ।

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௨ ॥

பதினைந்தாவது அத்தியாயம்

*உத்தம பஞ்சதாலத்தில் பிள்ளையார் இலக்கணம்.

பஞ்சதாளத்தின் அளவாகிய அறுபது அங்குலத்துடன் நான்கு அங்குலம் கூட்டி அறுபத்துநான்கங்குலம் உத்தமபஞ்சதாளத்திற்கு வகுக்கப் பட்டுள்ளது. விநாயகமூர்த்தி நம் பாரதநாட்டில், எங்கும் எல்லோரும் வழிபடும் தெய்வம். அவரை இந்த அளவில் அமைக்க வேண்டியதாக, சில்ப சாஸ்திரகாரர்கள் கூறியிருப்பதனால் இந்த அளவு முக்கியமானதாகிவிட்டது. அதனால் இது சிறிது விஸ்தார மாகக் கூறப்படுகின்றது.

உச்சந்தலையிலிருந்து மஸ்தகத்தின் எல்லைவரை இரண்டங்குலம் உயரம், மஸ்தகத்திலிருந்து நேத்திர ஸூத்திரம்வரை நான்கங்குலங்கள். அதிலிருந்து ஹநுவின் முடிவு வரை எட்டங்குலம். கழுத்தின் உயரம் நாலங்குலம். அதிலிருந்து ஹிருதயம் வரை எட்டங்குலம். அதிலிருந்து நாபி, அதிலிருந்து மேட்ரம் வரையிலும்

* மேற் நான்காம் அத்தியாயம் 48-வது சுலோகத்தைக் காண்க.

ததோ நாபிஸ்தநோர்மத்யம் நவாம்ஶமிதி கீர்த்திதம் ।
ஊரூ ஸார்த்தஷடம்ஶௌ து ஜாநுநீ த்ரிமாத்ரகே ॥
ஜங்கா சோருஸமாயாமா தலோச்சம் த்ரிமாத்ரகம் ।
ஸத்ர்யம்ஶம் ததாயாமேங்குஷ்டே த்வ்யங்குலகே ॥ ௪ ॥

தனித்தனியே ஒவ்வொன்றும் ஒன்பதங்குலமாம். துடைகளிரண்டும் ஆறரை அங்குலம் உயரமுள்ளவை. முழங்கால்களினுயரம் மூன்றங்குலம். கெண்டைக்காலின் உயரமும் துடைகளுக்குச் சமமே.(ஆறரை அங்குலம் உயரம்). பாதத்தின் உயரம் மூன்றங்குலம். (3½)

உத்தம பஞ்சதாளத்தின் முழு அளவு அறுபத்து நான்கங்குலங்கள்.

		அங்.	யவம்.
(1)	மஸ்தகம்	2	0
(2)	நேத்திரஸூத்திரம்	4	0
(3)	முகவாய்க்கட்டை வரை	8	0
(4)	கழுத்து	4	0
(5)	ஹிருதயம்	8	0
(6)	நாபி	9	0
(7)	மேட்ரம்	9	0
(8)	துடைகள்	6	4
(9)	முழங்கால்கள்	3	0
(10)	கெண்டைக்கால்	6	4
(11)	பாதம்	3	0
	ஆக	63	0

இன்னும் ஒரு அங்குலம் குறைவுபடுகின்றது. அது அனுமதிக்கப் பட்டதேயாகும். எல்லா அளவுகளிலும் மொத்தத்தில் ஒரு அங்குலம் கூட்டியோ அல்லது குறைத்தோ பிம்பத்தின் எழில் குன்றாதவாறு அமைக்கும் உரிமை ஸ்தபதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

உள்ளங்காலின் நீளம் ஏழங்குலம். கால் கட்டைவிரலின் நுனி வரை உள்ள அளவு இது. காற் பெருவிரலின் நீளம் இரண்டங்

𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌯𑌤𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌞𑍍𑌚 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌕𑌾 ।
𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌯𑌵𑌹𑍀𑌨𑌤𑌃 ॥ ௫ ॥

𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌬𑌾𑌹𑍁𑌂 𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌮𑌂 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌲𑌾𑌯𑌾𑌮𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑌮𑍍 ॥ ௬ ॥

𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌨𑌾𑌮𑌿𑌕𑍇 𑌚𑍈𑌵 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌦𑍍𑌯𑌵𑌾𑌯𑌤𑍇 ।
𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌯𑌵𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌯𑍋𑌃 ॥ ௭ ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌷𑍍𑌟𑌨𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌯𑌵𑌾 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌿𑌃 ।

குலம். சிறுவிரலின் நீளம் ஒன்றரை அங்குலம். பெருவிரலுக்கடுத்த விரலின் நீளம். ஒரு அங்குலம் ஏழு யவம். கால் நடுவிரலின் நீளம் ஒரு அங்குலம் ஆறு யவம். அதற்கடுத்த விரலின் நீளம் ஒரு அங்குலம் ஐந்து யவம். இவ்வாருகப் பெரு விரல் முதலாகச் சிறு விரல் வரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு யவம், நீளத்தில் குறைந்ததாக அமைக்கவேண்டும். (5)

புயங்களேப் பதின்மூன்றங்குலம் நீளமுள்ளவையாக அமைக்கவேண்டும். முன்கையின் நீளம் ஒன்பதங்குலம். உள்ளங்கையின் நீளம் நான்கங்குலம். கையின் நடுவிரலின் நீளம் மூன்றங்குலம்.

சுட்டு விரலும் மோதிரவிரலும் ஒவ்வொன்றும இருபத்தொரு யவம் நீளமுள்ளவை. (2 அங்குலம், 5 யவம்). பெருவிரலும் சிறுவிரலும் தனித்தனியே பதினேழு யவம் நீளமுள்ளவையாம். (2 அங்குலம், 1 யவம்). (7)

பெருவிரலின் அகலம் பன்னிரண்டு யவம். சுட்டுவிரலின் அகலம் எட்டு யவம். நடுவிரலின் அகலம் ஒன்பது யவம். மோதிர விரலின் அகலம் எட்டு யவம். சிறு விரலின் அகலம் ஏழு யவம். ஒவ்வொரு விரலினுடையவும் நகங்களினகலம், அந்தந்த விரல்களின் அகலத்தின் முக்கால் பாகம் இருக்கவேண்டும். நகங்களின் அகலத்தில் கால் பாகம் குறைந்ததாக அவற்றின் நீளம்

தத்ர வ்யாஸஸ்த்ரிபாதோऽஸ்யாஶ்சவ்யாஸோऽஷ்டாங்குலோ மத: ॥ ௯ ॥

தத்ர ஸ்யாஸஸ்ய பாதோந:
ஸ்ரீவாயாம: ப்ரகீர்த்தித: |
வ்யாஸ: ப்ரகோஷ்டே வேதாம்ஶ:
கூர்பரோர்த்வே ஷடம்ஶக: ॥ ௧௦ ॥

பாஹுமூலேऽத தத்வ்யாஸ: உச்சேஷ்டாம்ஶம் தத: |
ஶிரோம்ஶம் த்ரிசதுர்வேஶே மூர்த்நி ஸப்தாம்ஶம் தஶாம்ஶகம் ॥ ௧௧ ॥

ஆஸ்யாத்து லம்பமாநஸ்து நாபிதேஶாவஸாநத: |
ஆதௌ ஷடம்ஶம் தாருஸ்ய வ்யாஸ: ஸார்த்தாங்குலம் ॥ ௧௨ ॥

ஹஸ்தரந்த்ரத்வயம் கார்யம் ஶில்பிக: |
கண்டாதூர்த்வம் கஜேந்த்ராஸ்யம் ஏவம் குர்யாத் விசக்ஷண: ॥

இருக்கும். முன்கையின் அகலம் நான்கங்குலம். முழங்கையின் மேற் புறத்தினகலம் ஆறங்குலம். (6)

புயங்கள் தொடங்குமிடத்தில் அவற்றினகலம் எட்டங்குலம். உச்சந்தலையினகலம் எட்டங்குலமாம். தலையில் கிரீடம் அணியுமிடத்தையடுத்தாற் போல் சிறிது உள் அழுந்தினாற் போலுள்ள பகுதியின் அகலம் ஏழங்குலம். முகத்தின் மத்தியில் அதனகலம் பத்தங்குலம்.

முகத்திலிருந்து கொப்பூழ் வரை, தொங்கியவாறாகத் துதிக்கை அமைக்கப்பட வேண்டும். தொடக்கத்தில் இதனகலம் ஆறங்குலம். முனையில் இதனகலம் ஒன்றரை அங்குலம். இந்தத் துதிக்கையில் இரண்டு துவாரங்கள் அமைக்க வேண்டும். அறிவாளியான சிற்பி, விநாயகரைக் கழுத்திற்கு மேல் யானை வடிவமுள்ளவாறாக அமைக்க வேண்டும். யானை முகத்தானாக அமைப்பானென்றவாறு. (12)

வாமதந்தாயதம் வேதா³ங்கு³லம் த்³ருஶ்யம் ஹி பா³ஹ்யத꞉ ।
த³க்ஷத³ந்தம் பா⁴க்³நாக்³ரம் த்³வியவாம்ஶம் ப்ரகல்பயேத் ॥ ௧௩ ॥

ஓஷ்ட²லம்ப³ம் த்³வ்யங்கு³லம் லம்ப³நம் ப³ஹிர்க³தம் ।
(தைலா? தைலா)யாம விஸ்தாரம் ச ஷட்³யவம் ப்ரகீர்திதம் ॥

கர்ணோச்ச்²ராயௌ ஹஸ்தகரௌ உத்ஸேதே⁴ஶ்சைவ தத்ஸம꞉ ।
அர்தா⁴ங்கு³லம் நதம் தஸ்ய கர்ணமூலம் வஸ்வங்கு³லம் ஸமாஹ்ருத꞉ ॥ ௧௫ ॥

பா³ஹ்வோ꞉ புஷ்ப³ஹிர்பா⁴கா³த் த்³வாத்ரிம்ஶத³ங்கு³லம் ப⁴வேத் ।
ஸைகோனவிம்ஶதிமாத்ரம் கக்ஷாந்தரமுதா³ஹ்ருதம் ॥ ௧௬ ॥

இடது புறம் உள்ள தந்தம் நாலங்குலம் வெளியில் நீண்டளொருகக் காணப்படும். வலது புறத்திலுள்ள தந்தம் ஒடிந்து போனதாகவும், இரண்டு யவம் அளவே உள்ளதாகவும் அமைக்கப்பட வேண்டும். (13)

உதடு வெளியில் வளர்ந்து தொங்குமாறு அமைக்கப்படும். இதன் வளர்ந்து தொங்கும் பகுதியின் அளவு இரண்டங்குலம். "தைலா" அல்லது "தைலம்" எனப்படும் உறுப்பின் அகலமும் நீளமும் ஆறு யவங்கள். (உதட்டின் முனையில் சிறிது வளர்ந்துள்ள பகுதியாக இருக்கக்கூடும் இது.) (14)

காதுகளின் உயரமும் அகலமும் ஐயைந்தங்குலம். காதுகள் உச்சியில் அரை அங்குலம் வளைந்தவாருக அமைக்கப்பட வேண்டும். காதுகளின் அடிப்புறம் எட்டங்குலம். (15)

இரண்டு புயங்களினுடையவும் வெளிப்புறத்தில் ஒன்றிலிருந்து மற்றொன்று வரை உள்ள அகலம் முப்பத்திரண்டங்குலம். கக்ஷங்களிரண்டினுடையவும் இடைப்பகுதி, பத்தொன்பதங்குலம், (16)

स्तनान्तरं षडंशं तु हिक्कायाश्च तथैव हि ।
स्तनाग्रचूचुकव्यासो यवद्वयं स्तनमण्डले ॥ १७ ॥

स्तनाधस्ताद्विस्तारस्तु भागेन पञ्चदशाङ्गुलैः ।
द्वाविंशत्यङ्गुलं वृत्तं जठराख्ये विस्तारतः ॥ १८ ॥

नाभेर्निम्नविस्तारौ सार्धाङ्गुलमुदीरितौ ।
लिङ्गायामं त्र्यंशं तु तदर्धं तस्य विस्तृतम् ॥

अण्डायामं विस्तारञ्च त्र्यङ्गुलमुदाहृतम् ।
ऊरोर्व्यासो द्वादशं जानुव्यासं नवाङ्गुलम् ।
जङ्घाग्रे विस्तारस्तु सप्तमात्रमुदाहृतम् ।

ஸ்தனங்களிரண்டினுடையவும் இடைப் பகுதி, பத்தங்குலம். ஹிக்கையிலிருந்து ஸ்தனந்தம் வரை உள்ள இடைப்பகுதியின் அளவும் இதுவேயாகும் (10 அங்குலம்). சூசுகங்களின் (முலைக்காம்பு களின்) அகல(மும் உயரமு)ம் இரண்டு யவம். ஸ்தனங்களின் வட்டமான பகுதியின் அகலம் இரண்டங்குலம். (17)

ஸ்தனங்களை யொட்டினாற் போலுள்ள கீழ்ப் பகுதியின் அகலம் பதினைந்தங்குலம். வயிற்றின் மத்தியில் இருபத்திரண்டங்குலம் அகலம். (18)

கொப்பூழினுடைய ஆழமும் அகலமும் ஒன்றரை அங்குலம். ஆண்குறியின் நீளம் மூன்றங்குலம். அதனகலம் அதில் பாதி (ஒன்றரை அங்குலம்). (19)

அண்டகோசங்களின் நீளமும் அகலமும் மூன்றங்குலமேயாம்.

துடையினகலம் பன்னிரண்டங்குலம். முழங்காலின் அகலம் ஒன்பதங்குலம். ஐங்கையின் (கெண்டைக்காலின்) அடிப்புறத்தில்

𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌞𑍍𑌚𑌾𑌪𑌿 𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௧ ॥

𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑌤𑌿𑌃 𑌸𑌾𑌰𑍍𑌧𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌞𑍍𑌚 𑌗𑍁𑌣𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌷𑍍𑌟𑌷𑌡𑌂𑌶𑌾𑌰𑍍𑌧𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌕𑌯𑌵𑍈𑌃 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌳𑍀𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௨௩ ॥

𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌨𑌖𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌤𑌦𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌯𑌦𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑍂𑌹𑍍𑌯 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௨௪ ॥

𑌅𑌥𑌾𑌨𑍍𑌯𑌥𑌾 :-

𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌂𑌶𑌮𑍁𑌪𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।

(தொடக்கத்தில்! அதனகலம் ஏழங்குலம். அதன் முனையில் அதன கலம் மூன்றரை அங்குலம், (21)

உள்ளங்காலின் நுனியில் அதனகலம் ஆறரை அங்குலம். குதி காலின் உயரமும் அகலமும் மூன்றங்குலமேயாம், (22)

கால் பெருவிரலின் அகலம் பன்னிரண்டு யவம். அதற்கடுத்த விரலின் அகலம் எட்டு யவம். கால் நடுவிரனினகலம் ஆறரை யவம். அதற்கடுத்த விரலினகலம் ஆறு யவம். கால் சிறுவிரலின் அகலம் ஐந்து யவம். (23)

ஒவ்வொரு விரலினுடையவும் அகலத்தில் முக்கால் பங்கு (¾) அதனதன் நகங்களினகலமாம். ஒவ்வொரு நகமும் தனது அகலத்தில் பாதி யளவு நீளமுள்ளதாயிருக்கும். இங்கு சொல்லப்படாமல் விட்ப்பட்ட மற்ற விஷயங்களை முன் கூறியபடியே ஊகித்தறிந்து கொண்டு செய்யவேண்டியது. (24)

இனி வேறொரு விதமாக அளவுகள் தரப்படுகின்றன :—

			அங்.	யவம்
(1)	கேசாந்தம் வரை	உயரம்	2	0

ஶ்ரோணீஸூத்ராந்தராம்ஶேஷ்வப்யேஷ ததஸ்ஸப்தாங்க³*ம்ஶத: ॥

ததோ மேட்⁴ராந்தம் ஸப்தாம்ஶம் ஸப்தமாம்ஶேந கக்ஷ்யயோ: ।
ஸார்த⁴ம்ஶத்³வாத³ஶாங்கு³லம் ஜாநுநீ த்³வ்யங்கு³லம் ததா² ॥ ௨௬ ॥

ஜங்கே⁴ த்³வாத³ஶாம்ஶம் ஸ்யாத் பாதௌ³ த்³வ்யம்ஶௌ து ।
த்³வாத³ஶாம்ஶம் து பா³ஹுப்⁴யாம் ப்ரகோஷ்டௌ² த³ஶாங்கு³லௌ ॥ ௨௭ ॥

ஹஸ்தௌ சதுரங்கு³லௌ மத்⁴யமாங்கு³லீம் சதுரங்கு³லம் ।

				அங்.	யவம்
(2)	முகத்தின்		உயரம்	7	0
(3)	கழுத்தின்		,,	4	0
(4)	அதிலிருந்து குசுகம் வரை		,,	7	0
(5)	,,	கொப்பூழ் வரை	,,	7	0
(6)	,,	மேட்ரம் ,,	,,	7	0
(7)	,,	துடைகளின்	,,	12	0
(8)	,,	முழங்காலின்	,,	2	0
(9)	,,	கெண்டைக்காலின்	,,	12	0
(10)		கால் (பாதம்)	,,	2	0
			ஆக	62	0

இம்முறையில் உள்ளங்காலின் நீளம் பத்தங்குலம். புயங்களின் நீளம் பதினொன்கங்குலம். முன்கைகளின் நீளம் பத்தங்குலம். உள்ளங்கையின் நீளம் நான்கங்குலம். கையின் நடுவிரலின் நீளமும்

* நவாங்கு³லத:— என்றும் பாடமுண்டு. அப்போது இந்த அளவு ஒன்பதங்குல மென்று பொருள் கொள்ள வேண்டும். ஏழு என்னும் எண் "அம்சம்" என்று வழங்கக் காணோம். "அங்கத:" (அங்க³த:) என்று பாடமிருக்கக் கூடும். ஆறங்கங்கள் போல், இராஜ்யத்தின் அங்கம் ஏழு என்கிற வகையில் "அங்கம்" என்னும் சொல் ஏழையும் உணர்த்தவல்லது.

इत्थमुत्तमतालेन विघ्नेशस्य विधिः स्मृतः ।

मध्यमपञ्चताले विघ्नेशः

विघ्नेशं मध्यमे पञ्चतालेन विन्यसेत्

त्र्यक्षं गजाननं

महाहस्तिमुखं स्थितं वाप्युपवि-

ष्टं वा स्थूलदेहकम् ।

उष्णीषान्तं मुखान्तं तु तालेन

हृदयं तालाद्र्धं ततः

அவ்வளவே (4 அங்குலமே). மற்ற அளவுகள் முன்போலவே கண்டுகொள்வது. (28)

இவ்வாறாக உத்தம பஞ்சதாளத்தில் பிள்ளையார் விக்கிரகத்தை அமைக்கும் வகை விவரிக்கப்பட்டது. இனி *மத்யம பஞ்சதாளத்தில் இதே பிம்பத்தை அமைக்கும் வகை கூறப்படுகின்றது.

விக்கினேச்வரனை (மத்யம) பஞ்சதாளத்தினுல் அமைக்க வேண்டும். இவருக்கு மூன்று கண்கள், பெரிய யானையின் முகம் போன்ற முகமுள்ளவர் இவர். மறைந்தும் மடிந்தவாறுகவும் இருக்கும் இவருடைய கழுத்து. நின்றவாறுகவும் வீற்றிருந்தவாறுகவும் இவரை அமைக்கலாம். மிகவும் பருத்த உடம்புள்ளவர் இவர். உச்சந்தலையிலிருந்து முகம் வரை ஒரு தாளம் உயரம் (பன்னிரண்டங்குலம்). முகத்திருந்து இடை (மத்தியம்) வரை உயரம் இரண்டரை தாளம், (முப்பதங்குலம்). அடியிலிருந்து உள்ளங்கால் வரை ஒன்றரை

---

* மத்யம பஞ்சதாளத்தின் முழு உயரம் அறுபதங்குலம்.

𑌕𑌟𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑌾𑌵𑌪𑌿

𑌯𑌾𑌵𑌤𑍍 𑌸𑌾𑌰𑍍𑌧𑍈𑌕𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌯𑍁𑌕𑍍𑌤𑍌 ॥ ௨௯ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌪𑌞𑍍𑌚𑌤𑌾𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

𑌏𑌕𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

தாளம், (பதினெட்டங்குலம்). கைகளும் ஒன்றரை தாளம் நீளமுள்ளவாகவே அமைக்கப்படவேண்டும். (பதினெட்டங்குலம்.) (29)

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம், பஞ்சதாளத்தின் இலக்கணத்தைக் கூறும் பதினொன்காவது அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌸𑍍𑌤𑌾𑌲𑌮𑍍 ।

𑌏𑌕𑌾𑌂𑌗𑍁𑌲𑌂 𑌶𑌿𑌰𑍋𑌨𑌤𑍍𑌰𑌂 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍𑌸𑌮𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍𑌸𑌮𑌮𑍍 ॥

𑌮𑌾𑌨𑌾𑌂𑌶𑌂 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾𑌨𑌸𑍂𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌕𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌗𑌲𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥௨॥

பதினைந்தாவது அத்தியாயம்

சதுஸ்தாளம் (நான்குதாளம்)

சதுஸ்தாளம் — என்பது நான்கு தாளம் எனப் பொருள்படும். நாற்பத்தெட்டங்குலம் இதன் அளவு. உத்தமமானால் மேலும் நாலங்குலம் கூட்டிக் கொள்ளவேண்டும். அதமமானால் நான்கங் குலம் குறைத்துக் கொள்ள வேண்டும். இந்நூலில் கீழ் ஐந்தாம் அத்தியாயத்தில் 49-வது சுலோகம் முதற்பகுதியில் இந்த சதுஸ் தாளத்தினால் அமைக்க வேண்டிய பிம்பங்களின் விவரம் கொடுக்கப் பட்டுள்ளது. இங்கு இதன் அளவு விளக்கப்படுகின்றது :—

			அங்குலம்.	யவம்.
*(1)	சிரஸின்	உயரம்	1	0
(2)	கேசாந்தம்	,,	1	0
(3)	நேத்ரஸூத்திரம் வரை	,,	2	0

* மற்ற நூல்களில் கூறப்பட்டுள்ள அளவுகளின் வகை வேறு விதமாகவுள்ளது.

ஸ்தநாத்து மேட்ரமூலாந்தம் *பஞ்சாத்ரமிதி ஸ்ம்ருதம் ।
த்வாதஶம் சோருதைர்க்யம் ஸ்யாஜ்ஜாநு த்வ்யம்ஶமேவ ஹி ॥ ௧ ॥

ஜங்காதைர்க்யம் தஶாம்ஶம் ஸ்யாத்

த்வ்யம்ஶம் பாதோதயம் மதம் ।

தஶாம்ஶோऽங்குஷ்டதலாயாமோ

ஸார்த்தாங்குலாம்ஶகஃ ஸ்ம்ருதஃ ॥ ௪ ॥

ப்ரதேஶிந்யாஸ்ததாம்ஶஃ ஸ்யாச்

தச்ச வேதாங்குலாயதம் ।

		அங்.	யவம்.
(4)	நாஸாபுடாந்தம்	2	0
(5)	முகவாய்க்கட்டை வரை	3	0
(6)	கழுத்தின் உயரம்	3	0
(7)	ஹிக்கையிலிருந்து ஸ்தநாந்தம்	9	0
(8)	ஸ்தனத்திலிருந்து மேட்ரமூலம் வரை	5	0
(9)	துடைகளின் நீளம்	12	0
(10)	முழங்கால்களின் உயரம்	2	0
(11)	கெண்டைக்கால் ,,	10	0
(12)	பாதத்தினுயரம்	2	0
	ஆக	52	0

உள்ளங்காலின் நீளம் பத்தங்குலம். புயங்களின் நீளம் பதினன்கங்குலம். முன்கையின் நீளம் பத்தங்குலம். உள்ளங்கையின் நீளம் நாலங்குலம். கையின் நடுவிரலின் நீளமும் நான்கங்குலமேயாம். மோதிர விரலின் நீளம் மூன்றரை அங்குலம். ஆள்காட்டி

* ஸப்தாத்ரமிதி ஸ்ம்ருதம்— என்றும் பாடமுண்டு. ஆனல் மொத்த அளவில் 2 அங்குலம் அதிகமாகப் போவதை தவிர்க்க வேண்டி "பஞ்சாத்ரம்" என்னும் பாடம் ஏற்கப்பட்டது.

பாதாம்ஶம் த்வ்யங்குலாயாம:
ஸார்தாங்குஷ்டாம்ஶகாரிகா ॥ ௫ ॥

தல்லம்பம் தர்ஜனீதீர்கம்
கநிஷ்டாயாம் குணாங்குலம் ।
அங்குஷ்டாயாமகம் தத்வத்
... ... தலவிஸ்த்ருதம் ॥ ௬ ॥

ப்ரகோஷ்டாக்ரம் குணாம்ஶம் ஸ்யாத்
தன்மூலம் வேதாங்குலம் ।
பாஹ்வந்தம் பாணமாத்ரம் ஸ்யாத்
விஸ்தார: ஸர்வதா க்ருத: ॥ ௭ ॥

விரலின் நீளமும் அதற்குச் சமம். (மூன்றரை அங்குலமே யென்ற வாறு). சிறுவிரலின் நீளம் மூன்றங்குலம். பெருவிரலின் நீளமும் மூன்றங்குலமேயாம். உள்ளங் கையினகலம் நாலங்குலம்.

குறிப்பு :— இங்கு மூலம் சிதைந்துள்ளது. "தல விஸ்த்ருதம்" என்பதற்கு முன்பு "வேதாம்சம்— அல்லது "யுகாம்சம்" என்னும் சொல் இருப்பதாக ஊகித்து எம்மால் பொருள் தரப்பட்டது. "தலாயாம ஸமம் ஜ்ஞேயம் தலஸ்யைவ விசாலகம்" என்ற, இந்நூல் ஏழாம் அத்தியாயம் இருபத்துநான்காவது சுலோகத்தின் கருத்துப்படி உள்ளங்கையின் அகலமும் நீளமும் சமமாயிருத்தல் வேண்டும். இது அதம தசதாளத்திற்கே கூறப்பட்டதாயினும் கீழ்ப்பட்ட தாளங்கள் யாவற்றுக்கும் தகும். இவ்வத்தியாயம் 5-வது சுலோகத்தில் "தலம் வேதாங்குலாயதம்" என்றிருப்பதை யொட்டி இவ்வாறாக ஊகிக்கப்பட்டது. (6)

முன்கையின் நுனியில் அதனகலம் மூன்றங்குலம். முன்கையின் அடிப்புறத்தில் அதனகலம் நாலங்குலம். புயத்தின் அடிப்புறத்தில் அதனகலம் ஐந்தங்குலம். (7)

सार्धाष्टांशो मुखव्यासः
सप्तांशं कण्ठविस्तृतम् ।
कक्षयोरन्तरव्यासः
त्रयोदशांशको भवेत् ॥ ८ ॥

भान्वंशो हृदि विस्तारः
रुद्रांशं मध्यविस्तृतम् ।
श्रोणिस्थाने तु भान्वंशं
कटौ विश्वांशविस्तृतम् ॥ ९ ॥

ऊरुमूले विस्तारस्तु वस्वंशं समुदाहृतम् ।
षडंशो जानुविस्तारः जङ्घाग्रं युगांशकम् ॥

त्र्यंशं नलकाग्रं
षडंशं तलविस्तृतम् ।

முகத்தினகலம் எட்டரை அங்குலம். கழுத்தினகலம் ஏழங்குலம். கக்ஷங்களிரண்டினுடையவும் இடைப்பகுதியினகலம் பதின்மூன்றங்குலம். (8)

ஹ்ருதயப் பிரதேசத்தினகலம் பன்னிரண்டங்குலம். மத்தியப் பிரதேசத்தினகலம் பதினோரங்குலம். ச்ரோணிப் பிரதேசத்தின் (கொப்பூழுக்குக் கீழ்ப் பகுதியின்) அகலம் பன்னிரண்டங்குலம். கடிப்பிரதேசத்தின் (அதற்கும் கீழ் உள்ள பகுதியின்) அகலம் பதின்மூன்றங்குலம். (9)

துடைகளின் அடிப்புறத்தில் அவற்றினகலம் எட்டங்குலம். முழங்காலின் அகலம் ஆறங்குலம். கெண்டைக்காலின் தொடக்கத்தில் அதனகலம் நாலங்குலம். (10)

நளகா— (கெண்டைக்காலின் நுனி) அகலம் மூன்றங்குலம். உள்ளங்காலின் அகலம் ஆறங்குலம். குதிகாலினகலம் நாலங்குலம். மற்றதைத் தக்கபடி ஊகித்தறிக. (11)

𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑍋 𑌪𑌾𑌦𑌾𑌂𑌶𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍-
𑌶𑍇𑌷𑌂 𑌪𑌾𑌦𑌾𑌗𑍍𑌰𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧௧ ॥

𑌅𑌥 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌚𑌤𑍁𑌸𑍍𑌤𑌾𑌲𑌮𑍍 |

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌮𑍇𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌮𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑍇𑌨 𑌚 ॥ ௧௨ ॥

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌦𑌿 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚
𑌷𑌡𑌂𑌶𑌮𑍁𑌦𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌮𑍇𑌢𑍍𑌰𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂
𑌷𑌡𑌂𑌶𑌮𑍁𑌦𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧௩ ॥

𑌦𑌶𑌾𑌂𑌶𑌮𑍂𑌰𑍁𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 𑌜𑌾𑌨𑍁 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 |

மத்யம சதுஸ்தாளம்.

இதனளவு நாற்பத்தெட்டங்குலம். அதன் விவரம்:—

		அங்.	யவம்.
(1)	உஷ்ணீஷம்	1	0
(2)	கேசாந்தம்	1	0
(3)	முகம்	8	0
(4)	கழுத்து	2	0
(5)	ஹிக்கை முதல் ஹ்ருதயம் வரை	6	0
(6)	ஹிருதயம் முதல் மேட்ரம் வரை	6	0
(7)	துடைகளின் நீளம்	10	0
(8)	முழங்கால்களின் நீளம்	2	0
(9)	கெண்டைக்கால் நீளம்	10	0
(10)	பாதத்தினுயரம்	2	0
	ஆக மொத்தம்.	48	0

ஜங்காதீர்கபத்ராபாதாந்தம்
விஸ்தாரம் ஶ்ரோணிர்த்வய: ॥ கச ॥

உக்தம் ஹஸ்தாயாமம் மத்யாக்ரம் ஷோடஶாங்குலம் ।
ஶேஷம் யதுக்த்யா தத் கர்தவ்யம் ஊஹமார்காநுஸாரத: ॥ கரு ॥

த்ரித்வ்யேகதாலமேயாநாம்
ப்ரதிமாநாம் விசக்ஷண: ।
ஸாங்கோபாங்காதிமாநாநி
ப்ரோஹயேச்ச பூர்வஶாஸ்த்ரத: ॥ கசு ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே சதுஸ்தாலவிதிர்நாம
பஞ்சதஶோऽத்யாய: ।

கைகளின் நீளம், நடுவிரல் நுனிவரை, பதினுன்கங்குலம். மற்ற அளவுகளைக் கீழ்ச் சொன்ன வகையிலேயே ஊகித்தறிந்து கொண்டு செய்யவேண்டும். (15)

இவ்வாருகவே மூன்றுதாளம், இரண்டுதாளம், ஒரு தாளம், இவற்ருல் அமைக்கப்படவேண்டிய பிம்பங்களின் உறுப்புக்களின் அளவு விவரங்களை முன்னேர்கள் சாத்திரங்களில் கூறியபடியே அறிந்துகொண்டு சமைக்கவேண்டும். (18)

சிற்பரத்னம் இரண்டாம்பாகம் நான்குதாளத்தை விளக்கிக் கூறும் பதினைந்தாம் அத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ:

அத ஷோடசோऽத்யாய:

அத கிரீடாதிலக்ஷணம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible]

பதினாறாவது அத்தியாயம்.

கிரீடம் (முடி) முதலியவற்றின் இலக்கணம்.

முந்துற முன்னம் கிரீடம் அமைக்கும் வகை விளக்கப்படுகின்றது. தலையில், மேல்நோக்கிக் கூர்மையாகக் காணப்படும் அணியே கிரீடம் எனப்படுவது. நம் நாட்டு விக்கிரகங்களில் ஸகஜமாக இது காணப்படும். இதில் பலவகைகள் உண்டு. கிரீடம்-என்பது ஒருவகை. திருமால் விக்கிரகங்களில் இதை அமைக்க வேண்டும். தலையில் கேசாந்தத்தில் உஷ்ணீஷபட்டம் ஒன்று தலையைச் சுற்றினவாறாக ஒரு அங்குல அளவில் அமைக்கப்படவேண்டும். கிரீடத்தின் அடிப்புறத்தில் தலையைச் சுற்றித் தலைப்பாகை போல் அங்குல அகலமுள்ளதாகப் பட்டையாக இருக்கும் பாகமே "உஷ்ணீஷபட்டம்" எனப்படுவது. இதன் மேல் மகுடத்துடன் ஒளி வீசும் கோடீரத்தை அமைக்க வேண்டும். கோடீரம், மகுடம், என்னும் சொற்கள் முடியின் (கிரீடத்தின்) உட்பகுதியைக் குறிப்

உஷ்ணீஷோபரி பாஸமாந மகுடா
யுதம் கிரீடம் ஹரே: ॥ க ॥

கார்யம் கிரீடம் ஶிகரைர்யுதம்
த்ரிபஞ்சஸப்தஸங்க்யைஸ்து ஶிகைர்யுக்தம் ।
அண்டாபம் வா ஸரோஜாபம் வா
ச்சத்ராபம் வா கூர்மாபம் வா ॥ உ ॥

பளவாம். மகுடம் என்பது, கிரீடத்தின் அடிப்பீடத்தையும், *கோடீ ரம் என்பது அந்த மகுடத்தின் மேற்பகுதியையும் உணர்த்துவ தாக விருக்கக் கூடும். இந்தக் கோடீரத்தின் அளவு எல்லாப் பக்கங் களிலும் எட்டங்குலமே யமையும்.

திருமாலுக்கு அமைக்கப்படும் கிரீடம், உஷ்ணீஷத்தின் மேல் விளங்கும் மகுடத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். அதன் அளவு, பதினறங்குலம், பதினெட்டங்குலம், இருபத்துநான்கங் கங்குலம் என்று மூன்று வகையில் அமையும் (1)

இவ்வாறாக அமைக்கப்படும் கிரீடத்தில் சிகரங்களை (உச்சி—நுனி) அழகியனவாக அமைக்க வேண்டும். மூன்று, ஐந்து அல் லது ஏழு எண்ணிக்கையுடன் கூடியனவாக இவை இருக்கவேண் டும். அந்தந்த பிம்பங்களின் அமைப்புக் கேற்றவாறாக இவ்வெண் ணிக்கைகள் இடம்பெறும். இந்தக் கிரீடம், அண்டம் (முட்டை) போன்றதாகவோ, தாமரைமலர் போன்றதாகவோ, குடைபோன்ற தாகவோ, ஆமைபோன்றதாகவோ அவரவர் விருப்பம் போல் அமைக்கப்படலாம், (2)

---

* சேர்த்துக் கட்டப்பட்ட குழல் கற்றைக்குக் கோடீரம் என்று பெயரிட்டழைப்பதும் உண்டு.

பார்ஶ்வலம்பா ஜடா: கார்யா
உப₄யோ: பார்ஶ்வயோ: ஸ்தி₂தா: ।
ஸங்க்₂யா தாஸாம் து ஸர்வாஸாம்
ப்ரத்யேகம் யுக்₃மஸம்யுதா ॥ ௩ ॥

ஏகஷஷ்ட்யங்கு₃லாந்தம் து
ஜடாதீ₃ர்க₄ம் த்₃வாத்ரிம்ஶதா₃தி₃கம் ।
அதோ₄ஜடாதீ₃ர்க₄தரா
ஹ்ரஸ்வா ஊர்த்₄வோர்த்₄வமாஶ்ரிதா ॥ ௪ ॥

ஸமாந்தரா ஸமா கார்யா பி₃ம்ப₃யோக்₃யவஶேந து ।
கனிஷ்டா₂ங்கு₃லிபரீணாஹ: ஜடாநாம் உதா₃ஹ்ருத: ॥ ௫ ॥

ஜடாமகுடதுங்க₃ம் து சதுர்விம்ஶாங்கு₃லம் வா ।

சடை முடியாக அமைக்கும் விஷயத்தில். இருபுறமும் சடைகள் தொங்குமாறு அமைத்தல் வேண்டும். அந்தச் சடைகளின் எண்ணிக்கை, தனித்தனியே ஒவ்வொரு புறமும் இரட்டையான எண்ணுடன் கூடியதாக இருக்கவேண்டும். அவற்றின் நீளம், முப்பத்திரண்டங்குலம் முதலாகத் தொடங்கி, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அங்குலம் கூட்டிக் கொண்டே சென்றால் அறுபத்தோரங்குலம் வரை செல்வதாக அமைக்கப்படவேண்டும். அதிலும் அடிப்புறத்திலுள்ள சடைகள் அதிகம் நீண்டவையாகவும், அதினின்று மேல் மேல் இடம் பெற்றுள்ள சடைகள் முறையே நீளத்தில் குறைந்தனவாகவும் அமைக்கப்படவேண்டும். சடைகளின் இடைவெளி ஒரேவிதமாக ஏற்றத்தாழ்வில்லாமல் இருக்கவேண்டும். பிம்பங்களின் தகுதியை ஊன்றிக் கவனித்து இதைச் சமைக்கவேண்டும். சடைகள் ஒவ்வொன்றினுடையவும் சுற்றளவு சுண்டுவிரலின் சுற்றளவேயாகவமையும். (5)

சடைமுடியின் உயரம் பலவாறுக அமைக்கப்படலாம். இருபத்து நான்கங்குலம், இருபத்தோரங்குலம், பதினெட்டங்குலம், பதினேழங்

ஏகவிம்ஶாங்குலம் வாபி அஷ்டாதஶாங்குலம் ॥ ௬ ॥
ஸப்ததஶாங்குலம் வாபி ஷோடஶாங்குலமேவ வா ।

கேஶாந்தாந்மகுடாந்தாந்தம் லலாடே பட்டஸம்யுதம் ॥ ௭ ॥

முகாந்தவிஸ்தாரஸத்ருஶம் மகுடஸ்ய விஶாலகம் ।
§ தத்தாயாமம் வா த்ரிபாதம் வா யதாஶோபம் ப்ரகல்பயேத் ॥

தத்ஸப்தாஷ்ட நவாம்ஶைகஹீநம் அக்ரவிஶாலகம் ।
சதுஷ்பூரிமஸம்யுக்தம் த்வாதஶம் பூரிமோதயம் ॥ ௯ ॥

குலம், பதினாறங்குலம், இவற்றில் ஏதேனுமொரு வகையில் அதன் உயரம் அமைக்கப்படலாம். (6½)

கேசாந்தத்திலிருந்து மகுடாந்தம் வரை நெற்றியில் பட்டம் அமைக்கப்படவேண்டும். (7)

முகாந்தத்தின் அகலம் எவ்வளவோ அவ்வளவே மகுடத்தினகலமாம். (இவ்வளவு மகுடத்தின் அடிப்புறத்தினகலத்திற்கே). முகத்தின் உயரத்தில் பாதியளவு அல்லது முக்கால் பங்கு மகுடத்தின் அடிப்புறத்தினகலம் அமைக்கப்படலாம். அழகாக இருக்குமாறு அமைத்தல் வேண்டும். மேற்கூறிய விதங்களில் எது தகுதியானதோ அதை ஏற்கலாம். (8)

மகுடத்தின் அடிப்புறத்தினகலத்தில் ஏழு, எட்டு, அல்லது ஒன்பதில் ஒரு பங்கு குறைந்ததாக அதன் நுனியின் அகலம் இருக்கும். அதில் நான்கு "பூரிம"ங்கள் இருக்கவேண்டும். பூரிமங்களின் உயரம் பன்னிரண்டங்குலம். (9)

---

* இது பொதுவாகவே கூறப்பட்டாலும் முன்தொடர்ச்சியை யொட்டி "முகத்தினுயரத்தின் பாதி" என்று உரைக்கப்பெற்றது.

ஸம்போர்ஜடாயாம் கர்தவ்யா உத்ஸேதமஸ்ய ப்ரமாணத: ।
ஸா த்வாதஶாங்குலாயதா வாऽத ஷோடஶாங்குலஸம்மிதா ॥ ௰ ॥
ஹ்ருதயேஞ்ஜலிஸம்யுக்தா ஸர்வஸ்த்ரீலக்ஷணாந்விதா ।

கிரீடமகுடமேவ கேஶம் வா தத்ர கல்பயேத் ॥ ௧௧ ॥
மூலாதக்ராந்தம் க்ரமாத் க்ஷீணம் கரண்டமகுடஸ்ய து ।
அக்ரே முகுளாகாரம் மகுடஸ்ய ப்ரகல்பயேத் ॥ ௧௨ ॥

த்ரிசதுஷ்பஞ்சஸங்க்யாகரண்டைஶ்ச விராஜிதம் ।
கரண்டமகுடம் சாப்யுக்தம் ஶேஷம் பூர்வவதாசரேத் ॥ ௧௩ ॥

தாலநாரிகேலாதிபத்ரைஶ்ச பத்ரகுண்டலமிஷ்யதே ।

சிவபெருமானது சடையில், தக்க அளவுடன் கங்கையையும் அமைக்கவேண்டும். பெண்வடிவமான இந்தக் கங்கை பன்னிரண்டு அல்லது பதினாறு அங்குலம் உயரம் இருக்கவேண்டும். மார்பில் இரு கைகளையும் ஒன்றுசேர்த்துக் கூப்பியவாறாக இவளை அமைத்தல் வேண்டும். பெண்களுக்கேற்ற இலக்கணங்கள் யாவற்றுடனும் இவளை அமைக்கவேண்டும். (10½)

கிரீடமகுடத்தையோ, அல்லது கூந்தல்களையோ இவள் தலையில் அமைக்கலாம். கரண்ட மகுடத்தையும் சமைக்கலாம். கரண்ட மகுடத்தில் அடியிலிருந்து படிப்படியாக நுனிவரையில் அகலம் குறைந்து கொண்டே போகும். மகுடத்தின் நுனி, மொக்கு போன்றதாக அமைக்கப்படவேண்டும். (12)

கரண்டமகுடம் அமைப்பதாயின், மூன்று, நான்கு அல்லது ஐந்து கரண்டங்கள் உள்ளவாறாக அமைக்கவேண்டும். மற்றயாவும் முன்போலவே யமையும். (13)

பனை, தென்னை, முதலியவற்றின் ஓலைகளையே சுற்றிக் காதணி யாக அணிதலுண்டு. அவை "பத்ரகுண்டலம்" எனப்படும். அவற்றினகலம், மூன்று, நான்கு, அல்லது ஐந்து அங்குலம் இருக்கலாம்.

யவம் வ்ருத்தயவாம் ப்ரோக்தம் ஶ்ரோத்ராலம் வா து விஶேஷத: ॥

மகரம் குண்டலம் வாத ஸிம்ஹகுண்டலம் ஏவ வா ।
கஜாதிகுண்டலம் வாத விவர்த்தேஷ்வப்யதாகதி ॥ ௧௫ ॥
காயதாரஶ்ரோத்ரம் ச தன்மானம் தத்ராகாராநுஸாரத: ॥

வ்ருத்தகுண்டல விஸ்தாரம் அஷ்டாதஶயவம் பவேத் ॥ ௧௬ ॥
வேதாங்குலோன்னதம் தத்ஸ்யாத் பத்மமுகுலாகாரவத் ॥

ஹிக்காஸூத்ரோர்த்வதஸ்தாது உபக்ரீவம் ப்ரகல்பயேத் ।
ருத்ராக்ஷம் வாத ரத்னம் வா ஹேமகணவது மணிமாலா வா ।
நானாசித்ரவிசித்ராணி ஹேமபத்ரயவாதிகம் ॥ ௧௭ ॥

இவற்றின் சுருள்களின் கனம் ஒரு யவம் இருக்கவேண்டும். வெள்ளை நிறமாகவோ, செந்நிறமாகவோ இவை இருக்கலாம். (14)

மகரம் (ஒருவகை மீன் அல்லது முதலை) போன்றதும் சிங்கம் போன்றது மாகவும் காதணியை அமைக்கலாம். யானை போன்றதா கவும் அமைக்கலாம். இவற்றின் அகலமும் உயரமும், அததன் வடி வத்துக் கேற்றவாறு இரண்டு, நான்கு, அல்லது ஐந்து அங்குல முள்ளதாக அமைக்கப்படவேண்டும். (15½)

வட்ட வடிவமான குண்டலத்தின் அகலம் பதினெட்டு யவம் இருக்கவேண்டும். அதனுயரம் நாலங்குலமிருக்கவேண்டும். வாழைப்பூ, தாமரை மொக்கு, இவை போன்ற வடிவமுள்ளதாக இதை யமைக்கவேண்டும். (16½)

ஹிக்கா ஸூத்திரத்திற்கு மேல்ப்புறத்தில் இருக்குமாறு "உப க்ரீவம்" (உள் கழுத்தில் அணியும் அட்டிகை) அமைக்கவேண்டும். மேலும் கழுத்தில் பலவகையான அணிகளை அணிவிக்க வேண்டும். ருத்திராக்ஷம், இரத்தினமாலை, பொன்மணிமாலை, பல சித்திர வேலைப்பாடுகளுடன் விளங்கும் அட்டிகை இவற்றைத் தக்கவாறாக அணிவிக்கவேண்டும். (18)

கடகம் வலயமேவைகம் ப்ரகோஷ்டே து ப்ரகல்பயேத் |
கநிஷ்டாங்குலி பரிணாஹம் வலயம் வர்த்துலந்து வா ||௧௯||

அதவா வலயமேவாத்ர பட்டம் சித்ரயவந்து வா |
யவத்வித்ரிமானவிஸ்தாரம் நானாரத்நவிசித்ரிதம் || ௨௰ ||
த்வயம் த்வயம் தத்ர ப்ரகோஷ்டேஷு ப்ரகல்பயேத் |

கேயூரம் கூர்பராதூர்த்வே வலயோர்த்வமாச்ரிதம் ||
பத்மாகாரந்து கேயூரம் ஸர்வதா சாஷ்டபத்ரகம் |
நானாரத்நஸமாயுக்தம் மௌக்திகாதியுதாபி வா || ௨௨ ||

முன்கையில் கடகம், வலயம் இவற்றை அணிவிக்க வேண்டும். (முன் கையிலணியும் வளைகளின் இருவகைகள் கடகம்- வலயமெனப் படுகின்றன) இந்த வளையின் சுற்றளவு, கையின் சிறு விரலின் சுற்றளவுக்குச் சமமாம். இவ்வளை வட்டவடிவமாகவும் இருக்கலாம். (அல்லது தட்டையாகவும் இருக்கலாம்). (19)

கைவளையின் அளவில் வேறு ஒருவிதம் கூறப்படுகின்றது. வளையின் கனம், இரண்டு அல்லது மூன்று யவம் இருக்கவேண்டும். அதுபோல் (கனத்தைப் போல்) இருமடங்கு வளையின் அகலம் இருக்க வேண்டும். பலவகையான இரத்தினங்கள் பொருத்தப் பெற்று சித்திர வேலைகளுடன் கூடியதாக இதை அமைக்கவேண்டும். முன் கையில் இந்த வளையை இரண்டாகவே அணிவிக்க வேண்டும். (20½)

முழங்கையின் மேற்புறத்தில் (புயத்தில்) "கேயூரம்" என்னும் அணியை அணிவிக்க வேண்டும். இதுவே தற்காலம் "வங்கி" தோள்வளை எனப்படுகின்றது. இதன் அமைப்பு ஒரேவிதம் தான். எட்டுகால் தாமரைப்பூவை இதில் அழகாக அமைக்கலாம். பலவகையான இரத்தினங்களையும் ஒளிவீசுமாறு இதில் பொருத்தவேண்டும். தாமரை மலருக்குப் பதிலாக, பாசிக் கொத்து போன்ற அமைப்பையும் பண்ணலாம். (22)

பத்ரபூரிதஸம்ஜ்ஞம் ச பாஹுமத்யே ப்ரகல்பயேத் ।
பத்ரபூரிதநாளம் ச கேயூரஸத்ருஶம் பவேத் ॥ ௨௩ ॥

தத்பூரிதாததோநாளம் ஸர்வபாஹுவ்யாபகம் வா ।
த்ரிவேதேஷ்வங்குலமாத்ரம் வா பத்ரபூரிதவிஸ்த்ருதிஃ ॥ ௨௪ ॥

தத்வ்யாஸார்தம் தத்துங்கம் வா பாதோநத்விகுணம் வா ।
த்விகுணம் வாபி கர்தவ்யம் தத்பாஹுவலயம் பவேத் ॥ ௨௫ ॥

மத்யமாங்குலிம் வினா ஶேஷா அங்குல்யா ஊர்மிகாந்விதாஃ ।
ஊர்மிகா மூலபர்வஸ்தா வ்ருத்தா யவகநாந்விதாஃ ॥ ௨௬ ॥

இலைகள் போன்ற அமைப்பு இதில் காணப்படவேண்டும். இதையே "பத்ரபூரிதம்" என்பர். இவ்வாறான கேயூரத்தைப் புயத்தின் மத்தியில் அணிவிக்க வேண்டும். இந்தப் பத்ரபூரிதத்தின் காம்பின் கனம் கேயூரத்தின் கனம் போன்றதேயாம். (23)

அவ்வாறான பத்ரபூரிதத்தின் கீழ்ப்புறமுள்ள காம்பு புயம் முழுதும் வியாபித்திருக்குமாறு காணப்படும். பத்ரபூரிதத்தினகலம்; மூன்று, நான்கு, அல்லது ஐந்து அங்குலங்களிருக்கலாம். (24)

அதனகலம் அதன் உயரத்தில் பாதியேயாம் அகலத்தின் அளவை இருமடங்காக்கி, அதில் கால் பாகம் குறைவாகவும் அதனுயரத்தை யமைக்கலாம். அல்லது அகலத்தைப் போல இருமடங்கு உயரமுள்ளதாகவும் அமைக்கலாம். இதுவே "பாஹுவலயம்" (புயத்தில் அணியும் வளை) எனப்படும். (25)

நடுவிரல் தவிர மற்ற விரல்கள் யாவற்றிலும் மோதிரம் அணிவிக்கவேண்டும். அம்மோதிரங்கள் விரல்களில் அடிக்கணுவிலேயே அணிவிக்கப் படவேண்டும். வட்டவடிவமாகவும், ஒரு யவம் கனமுள்ளவையாகவும் மோதிரங்கள் அமைக்கப்பட வேண்டும். மோதிரங்களில் பலவகையான இரத்தினங்களைப் பொருத்தி விசித்திரமான

𑌨𑌦𑍍𑌧𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌤𑌃 ।

𑌅𑌭𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌗𑍍𑌰𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌚𑍂𑌚𑍁𑌕𑌂 𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௭ ॥
𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌸𑌦𑍃𑌶𑌾 𑌵𑌕𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌕𑍍𑌰𑌂 𑌤𑌦𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌂 𑌬𑌹𑌿𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௮ ॥

𑌤𑌦𑍇𑌵 𑌵𑌰𑌦𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌂 𑌕𑌟𑍇𑌃 𑌸𑌮𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌂 𑌬𑌹𑌿𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌤𑌦𑍇𑌵 𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍍𑌣𑌾𑌖𑍍𑌯𑌂 𑌤𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌂 𑌯𑌦𑌿 ।
𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌂 𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑌗𑌤𑌂 𑌤𑌥𑌾 ॥ ௩௰ ॥

வேலைகள் செய்து மிக்க அழகு நிறைந்தாகவும், அந்தந்த பிம்பங்களுக்குத் தக்கவாறாகவும் இவற்றை அமைக்கவேண்டும். (26½)

அபய ஹஸ்தம் அமைக்கும்பொழுது, கையின் நடுவிரலின் நுனி மேல் நோக்கியவாறாக, ஸ்தனசூசுகத்தின் மேற்புறத்திற்குச் சமமாக இருக்கவேண்டும். ஆள்காட்டிவிரல் முதல் சுண்டுவிரல் வரை உள்ள விரல்கள் யாவும் அடிப்புறம் சமமாகவே இருக்குமாறும் சிறிது வளைந்தவாறாகவும் அமைக்கப்பட வேண்டும். பெருவிரல் சிறிது வளைந்தும், வெளிப்புறத்தை நோக்கியவாறாகவும், நுனி மேல் முகமாக உள்ளதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறாக அமைக்கப் படும் ஹஸ்த(கைத்தல)மே அபயஹஸ்த மெனப்படும். (28)

வரத ஹஸ்தமும் இதைப்போன்றதே. ஆனால் விரல்களின் நுனி கீழ் நோக்கியவாறாக இதில் அமைக்கப்பட வேண்டும். மணிக்கட்டு, கடிப்பிரதேசத்திற்குச் சரியாக வரவேண்டும். நடுவிரலின் நுனி, மேட்ரத்தின் நுனியளவில் முன்புறம் பார்த்தவாறாகத் தொங்கவிடப் படவேண்டும். இதுவே வரதானமுத்திரையாகும். (29)

அதிலேயே நடுவிரலின் நுனி உள்ளங்கையின் நடுவிலும், அதன் பக்கத்திலுள்ள மோதிரவிரல் அதைத் தொடர்ந்து வளைந்து

𑌸𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌂, 𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌾𑌃 ।

[illegible] ॥ ௩௧ ॥

𑌯𑌦𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌕𑌟𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 [illegible] ।

[illegible] 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 [illegible] ॥ ௩௨ ॥

[illegible] ।

[illegible] *𑌕𑌰𑍍𑌤𑌰𑍀𑌹𑌸𑍍𑌤𑌾 [illegible] ॥ ௩௩ ॥

[illegible] ।

வந்து அதனிலும் சிறிது பின்தங்கியவாறாகவும், மற்ற விரல்கள் முன் போலவேயும் அமைக்கப்படின், இதற்கு "ஸிம்ஹகர்ண" முத்திரை என்று பெயராம். (30)

கடக முத்திரை என்று மற்றொன்றுண்டு. இதில், அபய ஹஸ்த முத்திரையே அமைப்பில் முக்கியமானது. ஆனால் அந்த அபய ஹஸ்தத்தை மார்பளவில் மேல் நோக்கிய விரல்களுடன் அமைப்பதற்குப் பதிலாக, இதில் நேராகத் தொங்கவிட்டுத் துடையில் பொருந்துமாறு அமைக்க வேண்டும். மணிக்கட்டு துடையின் வெளிப்புறத்தில் இருக்கும். அறிவிற் சிறந்த சிற்பிகள் இந்த முத்திரையில் துடைக்கும் மணிக்கட்டிற்கும் உள்ள இடைவெளியை, ஒன்று, இரண்டு, அல்லது மூன்று அங்குலம் அளவுள்ளதாக அமைப்பர். பிம்பங்களின் தகுதிக் கேற்றவாறாக இதை நிர்ணயித்துக் கொள்க.

கர்த்தரீ ஹஸ்தம் இனி விளக்கப்படுகின்றது. இதில் ஹிக்கா ஸூத்திரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும் நடுவிரலின் நுனி. கை மேல் முகமாக இருக்கும். உள்ளங்கை அபயஹஸ்தத்தில் போலவே எதிர்ப்புறம் பார்த்திருத்தல் வேண்டும், மோதிர விரலும் பெருவிரலும் வளைந்து உள்ளங்கையின் நடுவில் கவிழ்ந்த

---

* இம்முத்திரை நாட்டிய சாஸ்திரத்தில் வேறுவிதமாக கூறப்பட்டுள்ளது. நாட்டிய சாஸ்திரம் 9—32.

கிஞ்சித்குஞ்சா கநிஷ்டா²ஸ்யா சாபவத்³ருஜுக்ரியௌ ||

தயா ஸூசீதி விக்²யாதா கர்ணஸூத்ரஸமோந்நதா |
தர்ஜந்யக்³ரம் ததா² தத்ர யோஜயேத³ங்குஶாதி³கம் || ௩௫ ||

அங்கு³ஷ்டா²நாமிகாமத்⁴யாஸ்தலமத்⁴யஸுஸம்யதா꞉ |
கிஞ்சித்குஞ்சா கநிஷ்டா²ஸ்யா தர்ஜந்ய்ருஜுதரா ப⁴வேத் || ௩௬ ||

யஜ்ஞோபவீதம் ஸர்வேஷாம் யவாஷ்டாம்ஶஸமநாஹிதம் |
உபவீதம் த்ரிஸூத்ராட்⁴யம் ஶ்லக்ஷ்ணஸூத்ரஸமந்விதம் || ௩௭ ||

வாறாகக் காணப்படும். சிறுவிரல், அவை போலன்றிக்கே. சிறிதளவு வளைந்தவாறாக நிற்கும். மற்ற இரண்டு (ஆள்காட்டி விரல், நடுவிரல்) விரல்களும் வளைவின்றிக்கே நேர்மையாக மேல் நோக்கி நின்றவாறிருக்கும். சங்கு, சக்ரம் முதலியவற்றை இவ்விரு விரல்களில் அமைப்பர். இம்முத்திரை "கர்த்தரி" என வழங்கப் படும். (35)

இனி ஸூசி முத்திரை விளக்கிக் கூறப்படுகின்றது. இம்முத்திரையில் ஆள்காட்டிவிரல் ஒன்று தவிர மற்ற விரல்கள் யாவும் வளைந்து மடங்கியிருக்கும். அதிலும்; பெருவிரல், மோதிர விரல், நடுவிரல் ஆகியவை உள்ளங்கையின் நடு வரையில் நன்றாக வளைந்து மடங்கியவாறாகவும், சிறுவிரல் மட்டும் அவைபோல் அதிகமாக வளைந்து மடங்காமல் சிறிது வளைந்துமிருக்கும். ஆள்காட்டி விரல் நேராக நிற்கும். அதன் நுனி, கர்ண ஸூத்ரத்திற்குச் சமமாக மேற்புறம் உயர்ந்திருக்கும். இந்த நிலைமைக்கே ஸூசி முத்திரை என்று பெயர். அங்குசம் முதலியவற்றை இதில் அமையுமாறு இணைக்கவேண்டும். (36)

எல்லா பிம்பங்களுக்கும் யஜ்ஞோபவீதம் (பூணூல்) அமைக்க வேண்டும். ஒரு யவத்தில் எட்டிலொரு பாகம் அதன் கனம் இருக்க

ஶாகலேவ ஹ்ருத்ஸூத்ரம் உபவீதவதாஶ்ரிதம் ।
வாமஸ்கந்தாவஶிஷ்டாந்தம் நாப்யோர்த்வாங்குலாந்தகஃ ॥ ௩௮ ॥

யஜ்ஞோபவீததீர்கம் து நாபேர்தக்ஷிணபார்ஶ்வகம் ।
ஸவரேவம் ஸமாஶ்ரித்ய யஜ்ஞஸூத்ரம் நியோஜயேத் ॥ ௩௯ ॥

உரஸ்ஸூத்ரம் ஸமாரப்ய ஸ்தநாதஷ்டாங்குலாந்தரே ।
யஜ்ஞோபவீதவச் சாயடம் ஸ்கந்தயோரந்தயோரபி ॥ ௪௦ ॥

வேண்டும். முப்புரி நூலாக இது காணப்படும் "உரஸ்ஸூத்ரம்" என வழங்கப்படும் மார்பைச் சுற்றிலுமுள்ள நூலோடு இவ்வுபவீதம் இணைந்திருக்கும். அந்த ஸூத்திரமும் பூணூலைப் போலவே ஒரு யவத்தின் எட்டிலொரு பங்கு கனமுள்ளதாயிருக்கும். ஆனால் மூன்று நூலாக இராமல் ஒரே நூலாக அமைக்கப்படும். இடது தோளின் மேலிருந்து பூணூல் தொங்கியவாறாக விருக்கும் கொப்பூழின் வலதுபுறம் கீழே இரண்டங்குலம் வரை அது தொங்கும். உபவீதத்தின் நீளம் இதுவேயாம். பின்புறத்திலும் தொடர்ந்து காணப்படும் யஜ்ஞோபவீதம். முதுகெலும்பை யொட்டியவாறாக அதை அமைத்தல் வேண்டும். (39)

சன்னவீரம்— என்னும் அணி இனி விளக்கப் படுகின்றது. மார்பில் ஸ்தனங்களுக்கு எட்டங்குலம் தூரத்தில், உரஸ்ஸூத்திரத்திலிருந்து தொங்கியவாறாக இது அமைக்கப்படும். இதுவும் யஜ்ஞோபவீதம் போலவே அமையும். ஆனால் இரு தோள்களிலிருந்தும் தொங்கும் இது. இரண்டு பக்கங்களிலும் யோனிக்கு மேற்புறம் வரை இது தொங்கும். இதையே சன்னவீரம் என்பர்.

குறிப்பு :— கைகளில் செல்லாமல் உடம்புக்கு மட்டும் அளவுடன் நிருமிக்கப்பட்டு அணியப்படும் பொன்மயமான சட்டை போன்றது சன்னவீர மென்பர் சிலர். உடம்பின் மேற்பகுதியில் அணியப்படும் **அணிகள்** யாவற்றையும் ஒன்று சேர்த்துக்

[illegible]

[illegible] ॥ ௪௪ ॥

[illegible]

[illegible] ॥ ௪௫ ॥

[illegible]

[illegible] ॥ ௪௬ ॥

கட்டினாற் போல் தோன்றுவதும், வலதுபுறம் பூணூல் தொங்குகிற வகையில் வயிற்றில் இடது புறம் தொங்கும் முத்துமாலையும் போன்றதுமான ஒரு அணியே ஈதென்பது எமது ஊகம். அறிஞர்கள் ஆராய்ந்து தெளிக. (40)

இனி ஹாரம் (மாலை) கூறப்படுகின்றது. ஹிக்கா ஸூத்திரத்திலிருந்து ஆறு அங்குலம் கீழ்ப்புறம் தொங்கியவாறாக இது அமைக்கப்படும். ஸ்தனங்களிரண்டினுடையவும் நடுவில் இது இடம்பெறும். இதனகலம் நாலங்குலமாம். இதற்கு "க்ரைவேயஹாரம்" என்று பெயர் ("அட்டிகை வடிவமான மாலை" என்பது இதன் பொருள்). இதன் கனம் மூன்று யவங்களளவாம். பல்வகையான இரத்தினங்களையும் செம்பொன்னுடன் இணைத்துப் பளபளப்பாக ஒளிவீசுமாறு இதை அமைக்க வேண்டும். (42)

கழுத்திலிருந்து உதரபந்தம் வரை தொங்குமாறு அக்ஷமாலையை அமைக்கவேண்டும். உதரபந்தம் — வயிற்றில் உள்ள கட்டு அதாவது ஸ்தனங்களுக்கும் நாபிக்கும் மத்தியில் வயிற்றைச் சுற்றி அமைக்கப்படும் பட்டம் போன்றது. அக்ஷமாலை — ருத்திராக்ஷமாலை, அல்லது தாமரைமணி மாலை, துளசி மணிமாலை முதலியது. இதையே "ஹ்ருன் மாலை" என்றும் ஆன்றோர் கூறுவர். "ஸ்கந்தமாலை" என்ற மற்றொரு வகையான அணியையும் அணிவிக்க வேண்டும்.

𑌮𑌾𑌲𑌾𑌪𑍌𑌷𑍍𑌪𑌮𑌯𑍀 𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌦𑍇𑌶𑍇 𑌸𑌾 𑌸𑌂𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌾 ।

𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑌵𑌂 [illegible]
𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌤𑍁 [illegible] ।
𑌪𑍇𑌟𑍍𑌰𑌾𑌧𑌃 𑌕𑍃𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌸𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ४५ ॥

𑌤𑌾𑌰𑌂, 𑌤𑌾𑌰𑌸𑌮𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌘𑌨𑌮𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌦𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌦𑌾𑌮𑌾𑌦𑌿 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥ ४६ ॥

𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑍍𑌜𑌾𑌲𑌕𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌗𑍁𑌲𑍍𑌫𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ।

ஸ்கந்தம்— தோள். பலவகையான மலர்களாலான இம்மாலை தோளின் மேற்புறத்தில் தொடங்கிப் புயத்தின் மேலேயே இருபுறமும் தொங்கியவாறாகக் காணப்படும். (43½)

கடிஸூத்திரம் (அரைஞாண்கயிறு) மூன்று நூல்களுள்ளதாக அமைக்க வேண்டும். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு யவம் கனமுள்ளதாக இருக்கவேண்டும். (44)

"க்ருத்ரிமாஸ்யம்" என்னும் அணி இனி விளக்கப்படுகின்றது. கடிஸத்திக்கு மேற்புறத்தில் பேட்ரத்தின் கீழ் இந்த "க்ருத்ரிமாஸ்யம்" அணிவிக்கப்படவேண்டும். க்ருத்ரிம—செயற்கையான, ஆஸ்யம்—முகம். முன்புறம் மத்தியில் ஸிம்ஹம் முதலியவற்றின் முகம் போன்ற அமைப்புள்ளதாகிய பட்டம் இடையில் சுற்றியவாறாக அமைக்கப் படுகின்றதல்லவா? அதில் முன்புறத்தில் மத்தியில் முகம் போல தோன்றும் பகுதி தான் இந்த "க்ருத்ரிமாஸ்யம்". இந்த க்ருத்ரிமாஸ்யத்தின் அகலம், ஐந்து, ஆறு, அல்லது ஏழு அங்குலமிருக்கலாம். அகலத்தினளவே உயரமுமாகும். இதன் கனம் அரை அங்குலமாம். அதிலிருந்து அடியில் மூன்று அங்குலம் அளவு வரையில் முத்து ஸரங்கள் முதலியவற்றைத் தொங்கவிட வேண்டும்.

பாதங்களிரண்டிலும் கணுக்காலுக்கு கீழ் ஜாலகம் அணிவிக்க வேண்டும். ஜாலகம் என்பது பட்டைஸரம் என்றும், பாதஸரம்

ஜாலகாபத்தஸூத்ரஞ்ச யவத்வயவிஸ்தரம் ॥ ௪௭ ॥

தத்ஸூத்ராஜ்ஜாலகானாம் து த்ரியவம் பஞ்சயவம் து வா ।
த்ரியவம் ஜாலநாலஞ்ச வ்யாஸதைர்க்யஸமம் பவேத் ॥ ௪௮ ॥

யவோந்நதம் வனம், ஶேஷம் ஸுஷிரம் ஶங்கவத்ப்ரியம் ।
ஸாஷிரம் வா ததா கார்யம் ஸுஷிரே ஶர்கரான்விதம் ॥ ௪௯ ॥

ஸுஷிரம் வா ஸாக்ஷி ஸம்யுக்தம் கனாகாரமதாபி வா ।

என்றும் வழங்கப்படும். சிலவிடங்களில் "பட்டைகொலுசு" என்றும் இதை வழங்குவர். இதில் ஜாலகங்களை ஒரு ஸூத்திரத்தில் கோத்துக் கட்டவேண்டும். ஜாலகம் எனப்படுவன, முத்துக்கள் போல் தனித்தனியாகப் பண்ணப் பெற்று, ஜாலகஸூத்திரத்தில் கோக்கப்பட்டு வலைபோல் இணைந்து நிற்கும் சிறுபட்டைகள். இவைகள் எல்லாம் ஒன்று கூடியதே பாதஸரமாகும். இந்த ஜாலகங்களைக் கோத்துக் கட்டுவதற்கான நூலின் கனம் இரண்டு யவமாம். (47)

அந்த ஸூத்திரத்திலிருந்து ஜாலங்கள் தொங்குவதற்கான அளவு மூன்று அல்லது ஐந்து யவம். ஜாலகங்களின் நாளம் (காம்பு) மூன்று யவம். அதன் உயரமும் அகலத்திற்குச் சமமே.

இதன் கனமும் ஒரு யவம் அளவு, இதில் மற்ற பகுதியைப் பள்ளமாக அமைக்கவேண்டும். சங்கைபோல் உட்புறத்தில் இடமுள்ளதாக (கெட்டியாக இராமல்) ப்பண்ண வேண்டுமென்றவாறு. அவ்வாறு இடமுள்ள பகுதி வட்டவடிவமாயிருக்கவேண்டும். இதனுள் சிறு கற்களைப் போட்டு வைக்கவேண்டும். இந்த ஜாலகங்களை, உள்ளிடமில்லாமல் கெட்டியாகவும் அமைக்கலாம். இவ்வாறாயின், உட்புறத்தில் கற்களைப் பொருத்தவேண்டிய அவசியமும் இல்லாமல் போகும். (49½)

𑌸𑌾𑌰𑍍𑌧𑌦𑍍𑌵𑌯𑌂 𑌯𑌤𑍍𑌤𑍁 [illegible] ॥ ௫௰ ॥
𑌤𑌤𑍍𑌫𑌣𑍇𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌸𑌪𑌾𑌦𑌂 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑌮𑍍 ।
[illegible] ॥ ௫௧ ॥

[illegible] ।
[illegible] ।

[illegible] ।
[illegible] ॥

சில விக்கிரகங்களில் முன்கையில் வளைபோல் பாம்புகள் சுற்றிக் கொண்டவாறாக அமைக்கவேண்டியிருக்கும். ஆங்கு அவ்வாறாகப் பாம்பு சுற்றிக்கொள்ளுமிடத்தின் சுற்றளவு போல் மேலும் கால்பாகம் கூட்டிய அளவே அப்பாம்பின் நீளமாகும். முன்கையில் பாம்பு சுற்றிக் கொள்ளுமிடத்தின் சுற்றளவு பன்னிரண்டு அங்குலமென்று வைத்துக் கொள்வோம். அவ்விடத்தில் சுற்றியவாறாக அமைக்கப்பட வேண்டிய பாம்பின் நீளம் பதினைந்தங்குலமிருக்கவேண்டும். இவ்வாறாகவே மற்ற இடங்களிலும் கண்டுகொள்க.

அவ்வாறாகிய பாம்பின் நீண்ட வடிவத்தின் மேல் அதனுடைய படத்தை அமைக்கவேண்டும். படத்தின் நீளம் பன்னிரண்டங்குலமாம். படத்தின் அகலம் ஏழங்குலமும், கனம் ஒரு அங்குலமுமாம். மிகவும் கூர்மையாகக் காணப்படும் இரண்டு நாக்குகளையும் அப்பாம்பின் வாயில் அமைக்க வேண்டும். மற்றும் இரண்டு கண்களையும் அமைக்கவேண்டும். இப்படிக் கைகள் முதலிய இடங்களில் சுற்றிக் கொண்டவாறாகக் காணப்படும் பாம்புகளின் வடிவத்தைப் பொருத்தமாகச் சமைக்கவேண்டும். (52)

இனி ஆடைகளின் விஷயம் கூறப்படுகின்றது. பட்டாடைகள் பஞ்சுத் துணிகள், மர உரிகள், பல்வேறு விதமான தோல்கள், இவற்றில் ஏதேனுமொன்றை விக்கிரகங்களுக்கு ஆடையாக அணிவிக்கலாம். அந்தந்த விக்கிரகங்களின் தகுதியை உற்று நோக்கி இதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். (53)

யத்³த்³ரவ்யேண க்ருதம் பி³ம்ப³ம் தத்தத்³ரவ்யாயுதா⁴ந்விதம் ।
ஶதாங்கு³லாயதம் சாபம் நவஸப்தஶராக்³நிகை: ॥ ௫௪ ॥

இனி பிம்பங்களின் ஆயுதங்களைப் பற்றிப் பேசப்படுகின்றது. எந்தப் பொருளினால் பிம்பம் பண்ணப்படுகின்றதோ அதே பொருளினால்தான் அதன் ஆயுதங்களையும் பண்ணவேண்டும். வேறு பொருள் கூடாது. செம்பு முதலிய உலோகத்தால் பண்ணப்படும் பிம்பங்களுக்கு அந்தந்த உலோகங்களாலேயும், கல்லில் சமைக்கப்படும் பிம்பங்களுக்குக் கல்லினாலும், மரத்தால் பண்ணப்படும் பிம்பங்களுக்கு மரத்தினாலும் ஆயுதங்கள் அமைக்க வேண்டுமென்றவாறு. இது எல்லா ஆயுதங்களுக்கும் பொதுவான விஷயம். இதைக் கருத்தில் பதியவைத்துக்கொண்டு, செயலில் ஈடுபடவேண்டும்.

வில் (தநுஸ்) அமைப்பதற்கான விவரங்கள் முதலில் தரப்படுகின்றன. நூறங்குலம் நீளமுள்ளதாக வில்லை அமைக்கவேண்டும். இது நடுத்தரமான அளவாகும். இதற்கு மேல், ஒன்பது, ஏழு, ஐந்து அல்லது மூன்று அங்குலங்கள் கூட்டியும் குறைத்தும் வில்லின் நீளத்தை அமைக்கலாம். அதனால் வில்லின் உயரம் ஒன்பது வகையாம் :--

		அங்குலம்.
(1)	வில்லின் உயரம்	109
(2)	,, ,,	107
(3)	,, ,,	105
(4)	,, ,,	103
(5)	,, ,,	100
(6)	,, ,,	97
(7)	,, ,,	95
(8)	,, ,,	96

𑌶𑌾𑌖𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑌾
𑌨𑌵𑌯𑌾 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌶𑍋𑌧𑌯𑍇𑌤𑍍 ।

𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌷𑌷𑍍𑌟𑌿 𑌨𑌾𑌹𑌃
𑌸𑌨𑍍𑌧𑌾𑌨𑌯𑍁𑌕𑍍𑌤𑌧𑌨𑍁𑌷𑍍𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 ॥ ௫௫ ॥

𑌅𑌗𑍍𑌰𑍇 ... 𑌅𑌯𑍁𑌤𑌾𑌂𑌶𑌾𑌂𑌶𑌵𑍍𑌯𑌾𑌸𑍇𑌨
𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌗𑍁𑌣𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇 ।

	வில்லின் உயரம்	அங்.
(9)	,, ,,	91

இவ்வகைகளில் ஏதேனுமொன்றை அந்தந்த விக்கிரகத்தின் தகுதியைக் கவனித்து அமைக்கலாம். (54½)

தனுஸ்ஸின் பருமை கைப்பிடிக்குள் அடங்கியதாக இருக்கவேண்டும். கைப்பிடிக்குள் நிறைந்திருக்கவும் வேண்டும். வில்லின் மத்தியில் கையால் பிடித்துக் கொள்ளவேண்டிய இடத்திற்கே இந்த அளவு அமையும். மத்தியிலிருந்து இருபுறமும் நுனிவரை வில்லின் பருமை படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். இரு முனைகளிலும் வில்வினகலம் (குறுக்களவு) அரை அங்குலமே இருக்க வேண்டும். மற்றும் இருமுனைகளிலும் மும்மூன்றங்குலம் மடங்கி வளைந்து வட்டவடிவமாக இருக்குமாறு அமைக்கவேண்டும். வில்வில் மத்தியில் அதன் நீளத்தில் மூன்றிலொரு பாகத்தில் "பாண நாபி" என்னும் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். "பாண நாபி" எனப்படும் இது இன்னதென்பது தெளிவாக விளங்கவில்லை. நாபி என்பது உடம்பின் மத்திய பாகத்திலிருக்கிறதல்லவா? அதே போல் வில்லில் வைத்து எய்வதற்காக அம்பு நாணில் வைக்கப்படும் போது, அம்பின் அடிப்புறம் நாண்கயிற்றிலும், அதன் மத்தி (நாபி) வில்லில் கைப்பிடி இருக்குமிடத்திலும் இருக்குமாதலால், அவ்வாறாக உள்ள வில்லின் மத்தியப் பிரதேசத்தையே "பாண நாபி" என்று சொல்வதாக நினைக்க இடமுண்டு. பலவகையாக வில்லைக் கையில் பிடிக்கும்போது இந்த "பாண நாபி"யும் ஒதுங்கினவாறாக அமை

விபக்தா சாபதைர்க்யேண
பாணநாடீஷு கல்பித: ॥ ௫௬ ॥

ஸர்வாயாமாஷ்டமாம்ஶோனம் ஜ்யாதைர்க்யம் தனுஷ: ஸ்ம்ருதம் |

த்ரிவக்ரஶோபிதம் சாபம் சார்தசந்த்ராக்ருதிரேவ வா ॥ ௫௭ ॥

ஏகவிம்ஶாங்குலம் பாணம் தைர்க்யம் த்விமாத்ராங்குலம் வா |
கநிஷ்டாங்குலிதௌல்யேந பரிணாஹ: ஶரஸ்ய து ॥ ௫௮ ॥

முகஸ்யாயாம: பஞ்சமாத்ர: தாவானேவ தத்ஸம: |

யக் கூடுமாகையால்தான் போலும் வில்லின் முழு நீளத்தில் மத்தி யிலுள்ள மூன்றிலொருபாகம் இதற்கென வகுக்கப் பட்டுள்ளது. இதற்கு வேறு பொருளுண்டாயின் ஆய்ந்துணர்க. (56)

இனி வில்லின் நாண்கயிறு விளக்கிக் கூறப்படுகின்றது. வில் லின் முழு நீளத்தில் எட்டிலொரு பங்கு குறைந்ததாக அதன் நாண் கயிறு இருக்கவேண்டும். நாண்கயிற்றின் நீளம் மட்டும் இங்கு கூறப்பட்டது. அதுபற்றிய மற்ற விவரங்கள் ஏனைய நூல்களி லின்று கண்டுகொள்க. (56½)

வில் மூன்று இடங்களில் வளைந்திருக்க வேண்டும். "த்ரி ணதர்" என்பது வில்லுக்கு மற்ருெரு பெயர். மூன்று வளைவுகளுள் ளது என்பதே அதன் பொருள். இவ்வாறின்றி ஒரே வளைவுள்ள தாகப் பிறைச்சந்திரன் போலவும் வில்லை அமைக்கலாம். (57)

அம்பின் நீளம் இருபத்தோரங்குலம் இருக்கவேண்டும். இதைப் போல் இருமடங்கு (42 அங்குலம்)ம் அதன் நீளம் இருக்கலாம். அம் பின் சுற்றளவு. கையின் சிறுவிரலினுடைய சுற்றளவு போன்றதாக இருக்கவேண்டும். (58)

அம்பின் முனை ஐந்தங்குலம் அகலமும் அவ்வளவே நீளமுமுள்ள தாக இருக்கவேண்டும். அம்பின் நுனியின் (கூர்மையான "முகம்"

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌃 𑌪𑌕𑍍𑌷𑌵𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌪𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௫௯ ॥

𑌪𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌜𑍍𑌯𑌾𑌨𑌾𑌭𑌿𑌰𑍀𑌰𑌿𑌤𑌃 ।
𑌵𑌾𑌲𑌤𑌾𑌰𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑍈𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌃 ॥ ௬௦ ॥

𑌟𑌙𑍍𑌕𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑍋 𑌬𑌾𑌹𑍍𑌯𑌮𑍁𑌖𑌃 𑌪𑌰𑌃 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂 𑌪𑌰𑌶𑍁𑌵𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌶𑍂𑌲𑌵𑌦𑌾𑌯𑍁𑌧𑌮𑍍 ॥ ௬௧ ॥

என வழங்கப்படும் பகுதியின்) நீளத்திற்குச் சமமான அளவுள்ள பகுதி அதன் அடிப்புறத்தில் பலவகையான இறகுகளால் அழகாகக் காட்சியளிக்குமாறு அமைக்கப்பட வேண்டும். (59)

அவ்வாறு அம்பின் அடிப்புறத்தில் அமைக்கப்படும் இறகுகள் ஒரு அங்குலம் அகலமுள்ளனவாக இருத்தல் வேண்டும். அம்பின் பின்புறத்தில் "ஜ்யாநாபி" என்னும் அமைப்பைப் பண்ணவேண்டும். "ஜ்யா—நாண்கயிறு. நாபி—அதன் மத்தியம்." முன்பு "பாணநாபி" என்னும் சொல்லுக்குப் போலவே இங்கு ஜ்யாநாபி—என்னும் சொல்லுக்கும் பொருள் காணவேண்டும். நாண்கயிற்றில் அம்பைப் பதிய வைத்து எய்வதற் கேற்றதாக அம்பின் அடிப்புறத்தில் பருமனாகச் செய்துகொள்ள வேண்டியிருக்கும். ஸம்ஸ்க்ருதத்தில் "புங்கம்" என்று இதை வழங்குவர். இதையே இங்கு "ஜ்யாநாபி" என்று குறிப்பிடுவதாகத் தோன்றுகின்றது. நாண்கயிற்றின் மத்தியில் அவ்வாறாக ஏதேனுமொரு அமைப்பு இருந்தாலும் இருக்கலாம். இந்த ஜ்யாநாபியின் ஆழமும் அகலமும் அம்பின் வால் போன்ற பின் புறத்தின் அகலத்தில் மூன்றிலொரு பங்காகும். (60)

இனி டங்கம் எனப்படும் மழுவின் இலக்கணம் கூறப்படுகின்றது. சிவபெருமான் விக்கிரகங்களில் கையிலேந்தப்படும் ஆயுதங்களுள் முக்கியமானது இது. இதன் உயரம் பன்னிரண்டங்குலமாம். இதன் முகம் வெளிப்புறத்தை நோக்கியவாறாக அமைக்கப்படவேண்டும். சிறு கோடரி போன்றதாகக் காணப்படும் ஆயுதமே டங்கம் எனப்படுவது. இதுபோலவே மானும் சிவபெருமான் தனது கையில்

த்³வாத³ஶாங்கு³லமாயாமம் தத்³வ்யாஸம் யஷ்டிகஸ்துரேத் ।
த்³வாத³ஶாங்கு³லவிஸ்தாரம் சக்ரம் ஶங்க²ம் ததை²வ ச ॥ ௬௨ ॥

ட³மரோர்தை³ர்க்⁴யவிஸ்தாரே பஞ்சாஷ்டாங்கு³லாயதே ।
மத்⁴யம் த்ர்யங்கு³லம் வ்யாஸமாயாமஞ்சைவ தத்ஸம: ॥ ௬௩ ॥

வஸுபஞ்சசதுர்யக்ஷம் வக்த்ரவக்த்ராதி³வக்த்ரகம் ।

தரிக்கப்பட வேண்டியவற்றுளொன்றும். இதனுயரமும் முன்போல் பன்னிரண்டங்குலமேயாம். வெளியில் நோக்கியவாருகவோ அல்லது உள் நோக்கியவாருகவோ இருவகையாகவும் இதை அமைக்கலாம் எவ்வாருன அமைப்பு கவர்ச்சிகரமாகவும் பொருத்தமாகவும் இருக்குமோ அவ்வாருக நன்கு யோசித்து இவற்றை அமைக்க வேண்டும். (61½)

இனி, திருமால் விக்கிரகங்களின் கைகளிரண்டிலும் அணிவிக்க வேண்டியவையான சங்கு சக்கரம் இவற்றின் விஷயம் கூறப்படுகின்றது. இவற்றின் அகலம் பன்னிரண்டங்குல மிருக்கவேண்டும். இவை வட்டவடிவமாக அமைக்கப்பட வேண்டியவை யாதலால் அகலம் போன்றதே இவற்றின் நீளமு மாகும். அதனுல்தான் போலும் நூலாசிரியர் இங்கு இவற்றின் நீளத்திற்கென்று தனியாக அளவு கொடுக்காமல் விடுத்தார். (62)

டமரு— எனப்படும் உடுக்கையின் அளவு இனி விளக்கப்படுகின்றது. இதன் நீளம் எட்டங்குலம். அகலம் ஐந்தங்குலம். இதன் மத்தியில் குவிந்து சுருங்கியவாருக உள்ள பகுதியினகலம் மூன்றங்குலமாம். அப்பகுதியின் நீளமும் அவ்வளவே (மூன்றங்குலமே). இந்த உடுக்கையில் இரண்டு வளையங்கள் இருக்கவேண்டும். தோல் வார்களால் இது நன்கு கட்டப்பட்டிருக்க வேண்டும். (63½)

இனி கமண்டலுவின் அளவு கூறப்படுகின்றது. கமண்டலு என்பது, முனிவர், பிரம்மா, முதலானோர் கையில் வைத்திருக்கும்

நவாங்குலம் து விஸ்தாரம் ததர்தாயம் [illegible] ॥ ௬௪ ॥

உக்தம் கலஶ[illegible] ஸோமஸூத்ராகாரம் ததைவ ச ।

[illegible] ॥ ௬௫ ॥

[illegible]
[illegible]
நாலம் [illegible] விதநேத
[illegible] ।

ஒரு வணக்கப் பாத்திரம். மேற்புறத்தில் வளைவான கைப்பிடியுடனும் வயிற்றில் நீரைக் கொட்டுவதற் கேற்ற சிறு குழாய் போன்ற நாளத்துடனும் இது காணப்படும். மேல் பிடி இல்லாமலும் சிற்சில இடங்களில் உண்டு. இது நம் நாட்டு மக்களுக்கு மிகவும் பழக்கமான தொன்றும். இதனகலம் ஒன்பதங்குல மிருக்கவேண்டும். அகலத்தில் பாதி அல்லது முக்கால் பங்கு இதன் உயரம் இருக்கலாம். அந்தந்த பிம்பங்களின் தகுதியைக் கவனித்துப் பொருத்தமாக இக்கமண்டலுவை அமைக்கவேண்டும். (64½)

முடிவில் இரண்டு சுலோகங்களால் பத்ம பீடம், நாளம், இவற்றின் இலக்கணம் கூறப்படுகின்றது. இந்த சுலோகங்களிரண்டும் இந் நூலில் இருபத்தேழாம் அத்தியாயத்தின் தொடக்

𑌜𑌪𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾 𑌨𑌰𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑍁

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌗𑌣𑌾𑌯𑌤𑌂

𑌤𑍍𑌰𑍍𑌯𑌶𑍍𑌰𑌂 𑌸𑍁𑌖𑌸𑍃𑌷𑍍𑌟𑍇 𑌚 𑌵𑍇𑌦𑌵𑌸𑍁𑌷𑍁

𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌶𑌃 ॥ ௬௬ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑌟𑌕𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌨𑌾𑌮 𑌷𑍋𑌡𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

கத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றின் கருத்தை ஆங்கே கண்டுகொள்க. (65-66)

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், கிரீடம் கடகம் முதலானவை
களின் இலக்கணத்தைக் கூறும் பதினாறும் அத்தியாயம்
முற்றும்.

ஶ்ரீ:

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌅𑌥 𑌲𑍇𑌪𑍍𑌯𑌬𑌿𑌮𑍍𑌬𑍇 𑌶𑍂𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌲𑍇𑌪𑍍𑌯𑌬𑌿𑌮𑍍𑌬𑍇 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍇 𑌕𑌾𑌰𑌯𑍇𑌚𑍍𑌛𑍂𑌲𑌮𑌾𑌦𑌿𑌤𑌃 ।
𑌤𑌤𑍍𑌤𑌦𑌙𑍍𑌗𑌾𑌨𑌸𑌾𑌰𑌂 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌪𑌸𑍍𑌤𑌂 𑌵𑌸𑍍𑌤𑌂 𑌶𑍂𑌲𑌮𑍇𑌵 𑌤𑌤𑍍 ॥ ௧ ॥

பதினேழாவது அத்தியாயம்.

லேப்ய பிம்பத்தில் சூலத்தின் இலக்கணம்.

லேப்ய பிம்பமாவது, வர்ணம் பூசுவதனுல் உருவாக்கப்படும் பிம்பம். லேப்யம்—பூசப்படுவது. செம்பு முதலிய உலோகங்களி னுல், அல்லது கல் முதலியவற்ருல் பிம்பம் அமைப்பதற்கான வழி கள் கீழே கூறப்பட்டன. அவ்வாறு செய்வதற்கு இயலாத போது மரத்துண்டுகளால் விக்கிரகம் போன்ற அமைப்பை உண்டுபண்ணி அதிலும் வழிபாடு நடத்தலாம். உத்தேசித்த பிம்பத்தைக் குறிப் பிட்ட மரக்கட்டையில் அளவுடன் அமைத்து, தக்கவாறு வர்ணம் தீட்டிவிட்டால் நன்கு கவர்ச்சிகரமாகக் காட்சி யளிக்கும். இதுவே லேப்யபிம்பம் என வழங்கப்படும். இதற்கேற்ற மரக்கட்டையே இங்கு சூலம் என்று கூறப்படுகின்றது. அஃது இருக்கவேண்டிய இலக்கணம் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றது.

லேப்யபிம்பம் செய்யவேண்டியிருந்தால் முந்துற முன்னம் சூலத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டும். அந்த சூலமானது, பிம்பத்தில் இருக்கவேண்டிய எல்லா அங்கங்கள், அந்தரங்கங்கள் இவை எல்லாவற்றுடனும் கூடியதாக இருக்கவேண்டும். நம் உடம் பில் எலும்புபோல், லேப்ய பிம்பத்தில் சூலம் ஜீவாதாரமான பகுதி யாகும்.

க²தி³ராத்³யை꞉ ஸாரவ்ருக்ஷை꞉ பூர்வோக்தை꞉ ஶூலமாசரேத் ।
ஶிலாஸங்க்³ரஹணவத்ஸர்வம் கார்யம் விதி⁴வத்ததா² ॥ 2 ॥

பும்வ்ருக்ஷேணைவ தே³வாநாம்
தே³வீநாம் ஸ்த்ரீமஹீருஹை꞉ ।

(நபும்ஸகஸ்ய காஷ்ட²ஸ்ய
ஶூலஸம்ஸ்தா²பநம் நஹி ॥ 3 ॥)

கருங்காலிமரம் போன்ற உறுதியான மரங்களால் திறமையுடன் ஷ்டி சூலத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். அதற்காக, தகுந்த முன்னேற்பாடுகளுடன் மரம் இருக்குமிடத்திற்குச் சென்று உத்தேசித்த கட்டையை வெட்டி எடுத்துவரவேண்டும். இந்நூலில் முதல் அத்தியாயம் 29 சுலோகங்களில் கூறப்பட்டபடி, பிம்பத்திற்கான கல்லைத் தேர்ந்தெடுப்பதில் போலவே இதிலும் விதிமுறைகளை அனுசரித்தல் வேண்டும், (2)

அதிலும் தேவர்களை ஆண்மரங்களாலும், பெண்தெய்வங்களைப் பெண்மரங்களாலும் அமைக்க வேண்டும். (நபும்ஸகமரம் சூலஸ்தாபனத்திற்கு உதவாது) ஆண்-பெண்-அலி மரங்களின் வாசியறிதல் போன்ற விவரங்கள் இந்நூலில் விரித்துரைக்கப்படவில்லை. காச்யபீயம் 79 வது அத்தியாயத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. ஆங்கே கண்டுகொள்க. (2½)

இந்த சூலத்தில், வம்சதண்டம், பக்ஷதண்டம் (அல்லது வக்ஷோதண்டம்), கடிதண்டம், என்று மூன்று தண்டங்கள் இணைக்கப்பட வேண்டும். அவற்றுள் வம்சதண்டம் என்பது முதுகெலும்பு போன்ற அமைப்புடன் திகழும். இது கீழ் மேலாக நிற்கும். பக்ஷதண்டம், கடிதண்டம் எனப்படும் மற்ற இரண்டு தண்டங்களும் உடலில் குறுக்கே சென்றவாறாக அமைக்கப்படும். ஹிக்கை என்று வழங்கப்படும் நெஞ்சுக்குழிக்குக் கீழ் உள்ள உடலின் நீளத்திற்குச் சமா

உதரஸ்யார்த்தவிஸ்தாரஸ்ய சதுர்ப்பாகேண விஸ்த்ருதம் |
ததஷ்டாம்ஶவிஹீநம் ஸ்யாத் அக்ரதேஶஸ்ய விஸ்த்ருதம் || ௪ ||

நாப்யந்தம் சதுரஶ்ரம் ஸ்யாத் ஹிக்காந்தம் வஸுகோணகம் |
ததூர்த்வம் வ்ருத்தமாக்யாதம் ஸர்வம் வ்ருத்தமேவ வா || ௫ ||

த்வாத்ரிம்ஶதங்குலம் தைர்க்யம் பக்ஷதண்டாயதம் ஸ்ம்ருதம் |
விஸ்தாரம் ஸார்த்தஷண்மாத்ரம் ஸப்தாங்குலமதாபி வா || ௬ ||

விஸ்தாரார்த்தம் கநம் ப்ரோக்தம் பக்ஷதண்டஸ்ய தஸ்ய து |
மத்யாதாரப்ய கோட்யந்தம் க்ரமஶோ ஹ்ராஸமா வேதமாத்ரகே || ௭ ||

ளமாகவே இத்த வம்ச தண்டத்தின் நீளம் இருக்கவேண்டும். வயிற்றின் நடுப்புறத்தின் அகலத்தில் நாலிலொரு பாகம் வம்சதண்டத்தின் அகலமிருக்கவேண்டும். அந்த வம்சதண்டத்தின் அகலத்திலும் எட்டிலொரு பங்கு குறைந்ததாக அதன் நுனியினகலம் இருக்கவேண்டும். (4)

இந்த சூலமானது பாதத்திலிருந்து நாபி (கொப்பூழ்) வரையில் நாலு மூலையுள்ளதாகவும், அதிலிருந்து ஹிக்கை வரை எட்டுப்பட்டை யுள்ளதாகவும், அதிலிருந்து உச்சந்தலை வரை வட்டவடிவமாகவும் இருக்கவேண்டும். இந்நூல்— இரண்டாமத்தியாயம் 77-வது சுலோகத்தில் சிவலிங்கத்திற்குக் கூறப்பட்ட வழியிலேயே இதையும் ஊகித்தறிக. இவ்வாறின்றி உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை வட்ட வடிவமாகவே சூலத்தை அமைப்பதும் தகுதியுடைத்தேயாம். (5)

இனி பக்ஷதண்டம் விளக்கப்படுகின்றது. இதன் நீளம் முப்பத்திரண்டங்குலம். இதனகலம் ஆறரை ஆங்குலமாம். ஏழங்குலம் அகலமிருந்தாலும் இருக்கலாம். அகலத்தில் பாதியளவு இதன் கனமிருக்கவேண்டும். இதன் மத்தியத்திலிருந்து இருபுறமும் மூலை வரை படிப்படியாக அகலம் குறைந்து கொண்டே செல்லும். இரு மூலைகளும் நாலங்குலம் அகலம் இருக்கவேண்டும். (7)

பக்ஷதண்டஸ்ய மத்யே து ச்சித்ரம் ஸார்த்தத்ரயாங்குலம் |
*ஶிக்காஸூத்ராததஸ்தாத்து பக்ஷதண்டோர்த்வபார்ஶ்வகம் ‖ ௮ ‖
த்வ்யங்குலம் த்வதஸ்தாத் தத் வம்ஶதண்டே து யோஜயேத் |

ஷோடஶாங்குலதைர்க்யஃ கடிதண்டோ விஶாலகம் | அஷ்ட |
வஸ்வங்குலம் தந்நாஹம் வேதாங்குலம் ஸ்ம்ருதம் |
ஊர்த்வே பஞ்சாங்குலம் ஶ்ரோண்யாம் கார்யம் சித்ரம் வேதாங்குலம் ‖ ௰ ‖
கடிதண்டஸ்ய பார்ஶ்வம் ஸ்யாத் வம்ஶே ஸம்யோஜயேத் |

பக்ஷதண்டாக்ரயோஶ்சைவ கடிதண்டாக்ரயோஸ்ததா ‖ ௧௧ ‖

இத்தப் பக்ஷதண்டத்தின் மத்தியில் ஒரு துளை (துவாரம்) இடவேண்டும். இத்துளையின் அளவு மூன்றரை அங்குலமிருக்கும். இந்தப் பக்ஷதண்டத்தை ஶிக்காஸூத்திரத்துக்குக் கீழ்ப்புறத்தில் குறுக்காக அமைக்க வேண்டும். அதிலும் பக்ஷதண்டத்தின் மேற்புறம் ஶிக்காஸூத்திரத்தின் கீழ் இரண்டங்குலம் தாழ்ந்ததாக இருக்கவேண்டும். இந்தப் பக்ஷதண்டத்தை வம்ச தண்டத்தில் இணைக்கவேண்டும். (8½)

கடிதண்டம் எனப்படும் மற்றொன்றின் நீளம் பதினாறங்குலம். இதன் அகலம் எட்டங்குலம், இதன் கனம் நாலங்குலம். கொப்பூழின் கீழ் ஐந்தங்குல அளவில் இதன் மேற்புற மிருக்குமாறு இது குறுக்காக அமைக்கப்படும். இதன் மத்தியிலும் நாலங்குல அளவுள்ளதாக ஒரு துளை இருக்கும். இதையும் (பக்ஷதண்டத்தைப் போலவே) வம்சதண்டத்தில் இணைக்கவேண்டும். (10½)

பக்ஷதண்டம், கடிதண்டம் இவற்றின் இருமுனைகளையும் சிறிது வளைந்தவாறாக அமைக்கவேண்டும். அதில் கைகளையும் (ஹஸ்த தண்டங்களையும்), கால்களையும் (பாததண்டங்களையும்), பொருத்தமாக அமைக்கவேண்டும். இவ் விளைப்புகள் பொருத்தமாக அமை

---

* ஶிக்காஸூத்ராத — என்றிருக்கல் தகும்.

ஹஸ்தபக்ஷ்ணோர்யோகமாயாமம் கார்யம் த்ர்யம்ஶிகா: க்ரமாத் ।
ஸ்ருஷ்டாக்ரா: ஶிகாயாமா: ஹஸ்தஸங்க்யாநுகம் ததா ॥ ௧௨ ॥

பக்ஷதண்டவிஶாலஸ்ய ஷஷ்டேநைவம் விசக்ஷண: ।
ஏகத்வித்ரிசது:பஞ்சஷட்ஸப்தாஷ்டாதிபி: கரை: ॥

தத்தத்பிம்பாநி தத்பாவஜ்ஞ: ஸத்ருஶ்யாகாரஜாதயே ।
ஶிகாவ்யாஸம் பக்ஷதண்டஸ்ய ஷடம்ஶே த்ர்யம்ஶத: க்ருஶம் ॥

கடிதண்டாக்ரயோர்வக்ரா ஶிகா த்ர்யங்குலதீர்கா ।

வதற்காகவே இவ்வாறு கோணலாக அவற்றின் முனை அமைக்கப்பட வேண்டு மென்றவாறு. அவ்வாறுள்ள வளைந்த முனையின் நீளம் இரண்டங்குலம். அதன் அகலம், அதில் பொருத்தப்படவேண்டிய கைகளின் எண்ணிக்கையைத் தழுவியதாம். இரண்டு கை அமைப்பதானுல், அதற்கேற்றதாகவும், நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட கைகள் அமைப்பதானுல் அதற்கேற்றவாருகவும் அதனகலம் இருக்க வேண்டும். (12)

அறிவாளியான சிற்பியானவன், அந்தந்த பிம்பங்களின் தன்மைக்கேற்றவாருக, ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு அல்லது எட்டு எண்ணிக்கையுள்ளதாகக் கைகளை அமைக்க வேண்டும். அததற்கேற்றவாருகப் பக்ஷதண்டத்தின் முனைகளின் அகலத்தையும் அமைத்துக் கொள்ளவேண்டும். பக்ஷதண்டத்தின் சிகை (முனை)யின் அகலம் அதில் ஒரு பாகம். இது அடிப்புறத்தில். சிகையின் நீளமாகிய இரண்டங்குலத்தில் தொடக்கத்தில் இந்த அளவு. அதன் நுனியில் அதனகலம் சிறிது குறைந்திருக்கவேண்டும். (14)

இவ்வாறே கடிதண்டத்தின் இரு முனைகளிலும் வளைந்தவாருக மூன்றங்குல நீளத்தில் சிகையை அமைக்கவேண்டும். இதனகலம் ஒன்றரை அங்குலம். இந்த சிகை நல்ல வட்டவடிவமாக இருக்க

[illegible]

[illegible]

[illegible]

வேண்டும். இதன் கனமும் அகலத்திற்குச் சமமானதே யாகும். (ஒன்றரை அங்குலமே யென்றவாறு). (15)

ஸகல பிம்பம் நின்ற வண்ணமாக இருக்கும் நிலையில் சூலம் ஸ்தாபிக்கவேண்டியிருந்தால், துடைகளின் நீளத்தில், மேற்புறத்தில் எட்டங்குலம் கூட்டிக்கொண்டு ஊரு (துடை) சூலத்தின் நீளத்தை அமைக்கவேண்டும். ஸகலபிம்பம் வீற்றிருந்தவாருக சூலத்தை அமைக்கும் போதும் இவ்வாறே துடைகளின் நீளத்தின் மேல் எட்டங்குலம் கூட்டிக்கொள்ள வேண்டும். (16½)

துடைகளின் அடிப்புறத்தில் துளைகளை அமைத்துக்கொண்டு, கடிதண்டத்தின் இருமுனைகளிலுமுள்ள சிகைகளில் பொருத்தவேண்டும். அவ்வாருக இணைத்து, பலங்கொண்டவரையில் அழுந்துமாறு அதைக் கட்டவேண்டும். (17½)

அவ்வாறே முழங்காலின் அளவைத் துடையிலும் கெண்டைக்காலிலும் பகிர்ந்துவிடவேண்டும். அதாவது, இந்த சூலஸ்தாபனத்தில் முழங்காலுக்காகத் தனியாக ஒரு தண்டம் (மரத்துண்டு) வைக்கப்படுவதில்லை. ஆதலால் துடைக்காக அமைக்கப்படும் ஊருதண்

[illegible] ।
[illegible] ॥ ௨௰ ॥
[illegible] ।
[illegible] ॥ ௨௧ ॥
[illegible] ।

டத்தின் நுனியிலும், கெண்டைக்காலுக்காக அமைக்கப்படும் ஜங்கா தண்டத்தின் தொடக்கத்திலுமாக முழங்காலின் வடிவத்தை இரு கூறாகச் செய்து அமைத்து இணைத்துவிட வேண்டுமென்றவாறு. துடைகள், கெண்டைக்கால் இவற்றின் நடுவில் சிகையை அமைத்துக் கொண்டு நன்கு பொருந்துமாறு அவற்றை ஒன்றோடொன்று இணைக்கவேண்டும். முழங்காலில் அமைக்கவேண்டிய சிகையின் அளவு மூன்றங்குலம். கெண்டைக்காலின் நீளமும் துடைகளின் நீளம் போன்றதேயாகும். (19)

துடையின் மத்தியில் ஊரு மூலத்தின் அகலம் (ஊரு மூலம் துடையாக அமைக்கப்படும் மரத்துண்டு) துடையின் நீளத்தில் மூன்றிலொரு பங்கு இருக்கவேண்டும். துடையின் நுனியில் இருக்க வேண்டிய அகலம், நடுவில் உள்ளதில் முக்கால்பாகமாகும். கெண்டைக்காலின் தொடக்கத்திலும் அகலத்தினளவு இதுவேயாகும். (20)

கெண்டைக்காலின் அடிப்புறத்தினகலத்தில் மூன்றிலொரு பாகம் குறைந்தது அதன் நுனியின் அகலம். ஜாநுவின் முனையில் ஜங்காவை (கெண்டைக்காலை) இணைக்கவேண்டும். இது விற்றிருக்கும் பாவனையில் அமைக்கப்படும் விக்கிரகங்களுக்கு. நின்றவாறாக உள்ள விக்கிரகங்களுக்கு இவ்வாறான இணைப்பு வேண்டியதில்லை. துடை-முழங்கால், கெண்டைக்கால், இம் மூன்று உறுப்புக்களையும் தனித்தனியாகச் செய்து இணைக்காமல் ஒரே மரத்துண்டில் அமைத்துவிடலாம். அந்தந்த அமைப்பு தோன்றுமாறு வேலைப்பாடு மட்டும் இருந்தால் போதும். கெண்

ஜங்காந்தோபரிஷ்டாத்து தலஸூத்ரம் ப்ரவேசயேத் ||

த்ரிதா பாததலாயாமம் க்ருத்வா பாகத்வயாயத: |
தலாக்ரவிஸ்த்ருதஸ்யாபி த்ரிபாகம்ஸம்விஸ்த்ருதம் ததா || ௨௩ ||
வ்யாஸாயாம் வா விஸ்தாரம் தத்தலாதோ த்வ்யங்குலோச்ச்ரித:
கர்தவ்யம் ஸுஷிரம் தஸ்மிஞ்ஜங்காக்ரசிகாம் ந்யஸேத் ||

பாஹுமூலே த்ரிவிஸ்தாரஞ் சாக்ரே த்வ்யங்குலமாத்ரகம் |
அக்ரந்தஸ்ய த்வ்யங்குலம் வ்யாஸ: ப்ரகோஷ்டஸ்யைவ தத்ஸம: || ௨௫ ||

உபயோர்மூலநாஹார்த்த வ்யாஸம் ஸ்யாச்ச ப்ரகோஷ்டயோ:
பாஹ்வோ: ப்ரகோஷ்டயோர்மத்யே கூர்பரம் ஜாநுவத்பவேத்

டைக்காலின் முடிவுக்கு மேல் உள்ளங்கால் வடிவமான சூலத்தை (தல சூலத்தை) இணைக்கவேண்டும். (22)

பாததலத்தின் நீளத்தை மூன்று பாகமாகச் செய்து அதில் இரு பாகம் உள்ளங்காலின் முன்புறமாகவும், மூன்றாவதான ஒரு பாகம் குதிகால் எனப்படும் பின்பாகமாகவும் கொள்ளவேண்டும். உள்ளங்காலின் நுனியின் அகலத்தில் மூன்றிலொரு பாகம், அல்லது பாதி அளவு உள்ளங்காலின் அடிப்புறத்தினகலம் இருக்கவேண்டும். உள்ளங்காலின் அடிப்புறத்தில் இரண்டங்குல உயரத்தில் துளை செய்யவேண்டும். மேல் கெண்டைக்காலின் முனையில் உள்ள சிகையை அந்தத் துளையில் பொருந்தவிட வேண்டும். (24)

புயத்தின் அடிப்புறத்தில் அதனகலம் மூன்றங்குலம். புயத்தின் நுனியில் அதனகலம் இரண்டங்குலம். பிரகோஷ்டம் எனப்படும் முன்கையினகலமும் அதுவே. 2 அங்குலமே. (25)

முன் கைகளிரண்டிலும் அவற்றின் அடிப்புறத்தில் (தொடக்கத்தில்) உள்ள அகலத்தில் பாதியளவு அகலம் முனையில் அமைக்கப் படவேண்டும். புயங்களுக்கும் முன் கைகளுக்கும் மத்தியில் முழங்

[illegible] ஶிகாந்தம் யோஜயேத்து த்ருடம் யதா ।

[illegible] யோஜயேத் ॥

[illegible] ।

[illegible] ॥ ௨௭ ॥

[illegible] ।

[illegible] யோஜயேத் ॥

கைகளை அமைக்கவேண்டும். காலில் முழங்கால் அமைப்பதுபோலவே கையில் முழங்கை அமைப்பதும். (26)

சிகையின் நீளம் இரண்டங்குலம். உறுதியாக இதை இணைக்க வேண்டும். இங்கும் மடங்காமல் நேராகத் தொங்கவிடப்பட்டதாகவோ, அல்லது எதிர்ப்புறம், மேற்புறம், பின்புறம் நேராகவோ நீண்டதாகவே கைகள் இருப்பின் இணைப்புக்களில்லாமலே கைகளை அமைக்கலாம் என்பதை ஊகித்தறிக. (26½)

வம்சதண்டத்தின் இருபுறங்களிலும் பார்ச்வ (பக்க) தண்டங்களை இணைக்கவேண்டும். இவ்வாறாக இணைக்கப்படும் இரண்டு பக்கதண்டங்களின் நீளம் கடிதண்டத்திற்கும் பக்ஷதண்டத்திற்கும் இடையிலுள்ள உயரமேயாகும். அவற்றினகலம் மும்மூன்றங்குலம். வம்சதண்டத்தின் இருபுறங்களிலும் சமமான இடைவெளியில் இவை பொருத்தப்பட வேண்டும். இவ்விரண்டிலும் மேலும் கீழும் சிகைகளிருக்க வேண்டும். வம்சதண்டம், புச்சம் இவற்றிற் கிடையில் மூன்றங்குலத்தில் டி பார்ச்வதண்டங்களை உறுதியாக இணைக்கவேண்டும். (28½)

கைத்தலங்கள், பாததலங்கள், காதுகள் இவ்விடங்களில் செம்புப் பட்டை (தகடு)களை இணைத்து அழகுறச் செய்யவேண்டும். (29)

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

உத்தேசித்த தெய்வத்தின் மூர்த்தி நேர்மையாகவே இருப்பதாயின் அதற்கான சூலமும் நேர்மையாகவே அமைக்கப்படும். உத்தேசத்திலுள்ள தெய்வம் வளைந்த உடம்புள்ளதாக இருந்தால் அதற்கான சூலமும் வளைவுள்ளதாகவே அமைக்கப்படும். இவ்வாறாக தேவர்களுக்கான சூலஸ்தாபனம் கூறப்பட்டது. தேவிகளுக்கும் இது போலவே சூலஸ்தாபனம் கண்டுகொள்ள வேண்டும், அதிலுள்ள சிறிது மாறுபாடு இதோ விளக்கப்படுகின்றது. (30)

இதில் வயிற்றின் மத்தியத்தை மூன்றாகப் பிரிக்கவேண்டும். அதில் ஒரு பங்கு வம்சதண்டத்தின் அகலமாகும். அதன் அகலத்தில் எட்டிலொரு பங்கு குறைந்தது அதன் நுனியினகலம். அந்த வம்சதண்டம் நல்ல வட்டவடிவாயிருக்கும். (31)

இனி பக்ஷதண்டத்தினளவு கூறப்படுகின்றது. ஒரு புயத்தின் வெளிப்புறத்திலிருந்து மற்றொரு புயத்தின் வெளிப்புறம் வரையிலுள்ள அகலம் பாஹுபர்யந்த விஸ்தாரமெனப்படும். இதில் ஒவ்வொரு புயத்திலுடையவும் அகலத்தில் பாதிபாகத்தை வெளிப்படுத்தி உள் நின்ற பாகம் பக்ஷதண்டத்தின் நீளமாகும். அதில் பாதியளவு அதனகலமிருக்கவேண்டும். இவ்வாறே ஊகித்துக் கொண்டு கடிதண்டத்தையும் அமைக்கவேண்டும். கடிப்பிரதேசத்

ஶேஷம் ப்ராகிவ கர்தவ்யம் தாலமேகம் விஶேஷத꞉ |
ஶூலமேவம் ஸதண்டாத் வம்ஶமஷ்டாங்குலம் ப்ரஸாரயேத் ॥ ௩௪ ॥

பாதாம்ஶம் ப்ருஷ்டபாகஸ்ய ஶேஷம் ரந்த்ரே ப்ரவேஶயேத் |
ஸம்யாகண்டாத் ஷடங்குலம் ப்ரஸாரயேத் ப்ரோதகே யதா ॥

ஸர்வம் கர்தவ்யமேவாஸ்ய ஶாஸ்த்ரவத் ஸமயோசிதம் |
விசித்ரம் ஶ்லிஷ்டம் ஸர்வஸ்ய ஶில்பஜ்ஞ꞉ பாலயேத் ॥ ௩௫ ॥

உபஶூலாஶ்ரயம் ப்ரோக்தம் ப்ரதானஸ்தம்பகம் பவேத் |

தின் அகலத்தை ஐந்து பாகமாக்கி, அதில் ஒரு பாகத்தைக் கழித்து நாலுபாகம் நீளமுள்ளதாகக் கடிதண்டத்தை அமைக்க வேண்டும். இந்தக் கடிதண்டத்தின் அகலம்-கனம்— இவையெல்லாம் முன்போலவே ஊகித்தறிந்து கொண்டு பண்ணவேண்டும். அதில் வீற்றிருந்தவாறாக அமைக்கப்படும் பிம்பத்தில் சிறப்பாக ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். வம்சதண்டத்திலிருந்து எட்டங்குலம் நீளம் கூட்டிக் கொள்ளவேண்டும். (34)

அதில் நாலங்குலம் பிருஷ்டபாகத்துள்ளவாம். மற்ற நாலங்குலத்தைத் துளையில் நுழைத்து விடவேண்டும். நின்றவாறான பிம்பத்தில், ஐங்கா தண்டத்திலிருந்து ஆறங்குலம் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதைக் குழியில் சொருகினாற் போல் நுழைக்க வேண்டும். இவ்வாறு மற்ற விஷயங்களையும் ஊகித்தறிந்து கொண்டு செய்துகொள்ள வேண்டும். (35)

இனி உபசூலத்தை விளக்கிக் கூறுகிறேன். உபசூலம்-என்பது பிம்பம் போல் நிறுத்தப்பட்டிருக்கும் பிரதானசூலம் சாய்ந்து விழுந்து விடாமலிருப்பதற்காக அதைத் தாங்கியவாறாக நிறுத்தப் படும் சூலமாம். சுவற்றின் மத்தியிலிருந்து இது ஸ்தாபிக்கப் பட வேண்டும். சுவற்றின் மத்தியில் தொடங்கி, பிரதான சூலத்தின் பக்ஷதண்டத்தின் முன்புறம் வரையில் உபசூலத்தின் நீளமிருக்க

வேதாங்குலம் [illegible] தீவ்ரம் [illegible] ஸ்யாத் ||

ஶூலஸ்யாலகம் [illegible] தஸ்ய மத்யே து [illegible] |
[illegible] ஶிகாத்வயம் [illegible] ஸ்யாத் || ௩அ ||

குட்யஸ்ய [illegible] ஶூலகம் |
[illegible] ந்யஸேத் || ௩௯ ||

கடிதண்டம் பக்ஷதண்டம் [illegible] |
உபஶூலஸ்ய [illegible] || ௪௰ ||

வேண்டும். இதன்கலம் எட்டங்குலமிருக்கவேண்டும். இதன் நீவ்ரம் (இடைவெளி) நாலங்குலமிருக்கவேண்டும். இந்த உபசூலத்தையும் சூலத்திற்கு தக்கதான மரத்திலேயே அமைக்கவேண்டும். (37)

சூலத்தினகலத்திற் கேற்றவாருக அதன் மத்தியில் துளை இருக்கும். இந்த உபசூலத்தில் சிகைகள் இரண்டு இருக்கவேண்டும். அறிஞனே! சுவற்றின் மத்தியில் சூலத்தின் அடிப்புறத்தை நன்ருகப் பொருந்தவிட்டு உறுதியாகக் கட்டிவிடவேண்டும். (38)

கடிதண்டம், பக்ஷதண்டம் இவ்விரண்டையும் தரித்துக் கொண்டு, வம்சதண்டத்தை இந்த உபசூலத்தின் துளையில் உறுதியாகப் பதியுமாறு நிதானமாக ஆணிகளின் உதவியுடன் இணைக்க வேண்டும், (39)

உபசூலத்தின் சிகையின் நுனியும் பக்ஷதண்டத்தின் முன்புறமும் ஸமமாக இருக்கவேண்டும். அவ்வாறு கணக்காகப் பார்த்து அமைக்கவேண்டும். இணைப்பு வெளியில் தெரியாதவாருகப் பொருத்தமாக அமைக்கவேண்டுமென்றபடி. உபசூலத்தின் சிகையிலும் வம்சதண்டத்தின் உச்சியிலும் துளைகளைச் செய்துகொள்ள வேண்டும். (40)

𑌯𑍋𑌜𑌨𑌂 𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌸𑍍𑌥𑌿 𑌶𑍂𑌲𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌸𑌮𑌾𑌧𑌾𑌨𑍇𑌨 𑌚 ॥௪௧॥

𑌶𑍂𑌲𑌸𑍍𑌯 𑌬𑌿𑌮𑍍𑌬𑌵𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍁𑌰𑍍𑌵𑌰𑌃 ।
𑌜𑌲𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥௪௨॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌶𑍂𑌲𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌨𑌾𑌮 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

அந்தத் துளைகளை ஒன்ருகப் பொருந்த விட்டு, அதனுள் உலோகத்திலாகிய அல்லது மரத்திலுற் செய்யப்பட்ட ஆணியைச் செலுத்தி முன்யோசனையுடன் உறுதியாகப் பிடிப்பு உண்டாகுமாறு செய்யவேண்டும். சூலம் என்பது பிம்பத்தின் எலும்பு போன்றதென்பது ஏற்கனவே கூறப்பட்டது. அதனால் கீழ்ச் சொல்லியபடி முன்ஜாக்கிரதையுடன் காரியங்களைச் செய்யவேண்டும். (41)

குருவானவர் சூலத்திற்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் (பண்பாடுகள்) அனைத்தையும் பிம்பத்திற்குச் செய்வது போலவே செய்யவேண்டும், ஜலாதிவாஸம் (நீரில் மூழ்கியவாருக வைப்பது) போன்ற சடங்குகள் யாவற்றையும் செவ்வனே முடித்துப் பிரதிஷ்டையையும் செய்து முடிக்க வேண்டும். (42)

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம் சூலஸ்தாபனத்தின் இலக்கணத்தைக் கூறும் பதினேழாவது அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌅𑌥 𑌰𑌜𑍍𑌜𑍁𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍

𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌶𑍂𑌲𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌨𑍍𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌧𑌿𑌵𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌸𑍍𑌯 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥

𑌶𑍈𑌲𑍇𑌨 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑌕𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌕𑌯𑌾𑌪𑌿 𑌵𑌾 ।
𑌶𑍂𑌲𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌦𑍇 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾𑌮𑌾𑌧𑌾𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ ௨ ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑌦𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 ।

பதினெட்டாவது அத்தியாயம்.

ரஜ்ஜுபந்தம் (சூலத்தைக் கயிற்றால் கட்டுதல்).

இவ்வாறாக முறைப்படி மரத்தைக் கொண்டுவந்து சூலத்தைப் பண்ணி, சுத்தம் செய்து, அதிவாஸனங்கள் பண்ணி அதற்குமேல் பிரதிஷ்டை பண்ணவேண்டும். (1)

கர்ப்பகிருஹத்தில் சூலத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தில் கருங்கல் அல்லது செங்கல்லால் பீடம் அமைத்துக் கொள்ளவேண்டும். சூலத்தை ஸ்தாபிப்பதற்கான பள்ளத்தில் "ஆதாரசிலை" எனப்படும் கல்லை ஸ்தாபிக்க வேண்டும். (2)

நின்றவாறாக ஸ்தாபிக்கப்படும் ஸகலபிம்பங்களின் விஷயத்தில், சூலங்களை ஸ்தாபனம் செய்வதற்கான பள்ளங்களிரண்டிலும்,

अन्यायं व्यासं त्र्यङ्गुलं स्थानके शक्तेस्तथा ॥ ३ ॥

पीठमध्ये चतुरङ्गुलनिम्नमेकावटं खनेत् ।
शूलस्थापनायाधारशिलायां च रत्नन्यासं यथाविधि ॥ ४ ॥

आनीय देशिकः शूलं विधिवद्गर्भवेश्मनि ।
जङ्घाशूलकमूलं वा वंशशूलस्य मूलकम् ॥ ५ ॥

तद्योग्यावटके न्यस्य सन्धया वाष्टबन्धतः ।
अचलं स्थिरं शूलं दृढीकृत्य यथाबलम् ॥ ६ ॥

अथवा पूर्ववद्गर्भस्थानभेदान् यथाविधि ।

(ஒன்று இறைவனுக்கும் மற்றொன்று தேவிக்கும்) ஆறு அங்குலம் ஆழமும், மூன்றங்குலம் அகலமுமிருக்க வேண்டும். (3)

பீடத்தின் மத்தியில் நாலங்குலம் ஆழமுள்ளதாக ஒரே குழியும் தோண்டிக் கொள்ளலாம். (இது ஒரே சூலத்தை ஸ்தாபிக்கின்ற பக்ஷத்திற்காக இருக்கக்கூடும்.) ஆதாரசிலையில் முறைப்படி இரத்தினங்களை வைக்கவேண்டும். (4)

பிறகு சூலஸ்தாபனத்தை நடத்திவைக்கும் ஆசாரியன், அதற்கேற்ற சடங்குகளைச் செய்து முடித்து, கர்ப்பகிருஹத்தில் சூலத்தைக் கொண்டு வரவேண்டும். நின்றவாருக அமைக்கப்பட்ட சூலமாயிருந்தால் ஜங்காசூலத்தின் அடிப்புறத்தையும், வீற்றிருந்தவாருன சூலமாயிருந்தால் வம்சதண்டத்தின் அடிப்புறத்தையும் அதற்கேற்றவாருகத் தோண்டி வைக்கப்பட்டுள்ள குழியில் நன்கு பொருந்துமாறு வைக்கவேண்டும். பிறகு கன்னறும்பு அல்லது அஷ்டபந்தனம் இவற்றில் ஏதேனுமொன்றைக் கொண்டு சூலத்தை பலங்கொண்டவரை உறுதியாக அசைவற்று நிற்குமாறு செய்யவேண்டும். (5-6)

அல்லது, முன் கூறியவாறு கர்ப்பகிருஹத்தில் பிராம்மம், தைவம், மானுஷம், பைசாசம் எனப்படும் ஸ்தான பேதங்களை முறைப்படி

[illegible] प्रतिष्ठापयेच्च कारयेत् ॥ ७ ॥

अथ सन्धिषु सर्वेषु
　　ताम्रपट्टैश्च वेष्टयेत् ।
शूलेऽष्टबन्धनं लिप्त्वा
　　कारयेत् सूत्रबन्धनम् ॥ ८ ॥

श्रीवेष्टकं चतुर्भागं कुन्दुरुष्कं त्रिभागकम् ।
गुग्गुलुं पञ्चभागं तु गुडमेकांशकं [illegible] ॥ ९ ॥

सर्जरसं त्वष्टांशं
　　गैरिकं तु त्रिभागकम् ।
सर्वमेकत्र संमर्द्य [illegible]
　　[illegible] ॥ १० ॥

அறிந்து கொண்டு, உத்தேசத்திலுள்ள சூலத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தைத் தீர்மானித்துக் கொண்டு அதன்மேல் சூலத்தை ஸ்தாபித்தலும் தகும். (7)

பிறகு சூலத்தில் இணைப்பு உள்ள இடங்களிலெல்லாம் செம்புப் பட்டங்களைச் சுற்றிக் கெட்டிப்படுத்த வேண்டும். அதன் மேல் சூலத்தில் அஷ்டபந்தனத்தைப் பூசிக் கயிற்றால் கட்டவேண்டும். (8)

அஷ்டபந்தனத்திற்கான பொருள்கள் கூறப்படுகின்றன. அஷ்ட— எட்டு. பந்தனம்— கட்டுதல். எட்டுப் பொருள்களைக் கூட்டி ஒரு சேர்க்கைப் பொருளைத் தயாரித்து அதனால் விக்கிரகங்களைக் கெட்டிப்படுத்துதல் என்பது இச் சொல்லின் பொருள். திருவட்டம் பிசின் நான்கு பாகம், குந்துரிக்கம் மூன்று பாகம், குங்கிலியம் ஐந்துபாகம், வெல்லம் ஒரு பாகம், வெள்ளைக் குங்கிலியரஸம் எட்டுபாகம், காவி மூன்று பாகம், இவ்வாறு பொருள்களையும் அத

[illegible]
[illegible] ॥ கக ॥
[illegible]

[illegible] ॥ கஉ ॥
[illegible]
[illegible] ॥ ககூ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ கச ॥

தற்குக் கூறப்பட்ட அளவு முறைப்படி ஒன்றாகக் கூட்டி நன்றாகப் பொடி செய்யவேண்டும். பிறகு அந்தப் பொடியை மண் பாத்திரத்தில் வைக்கவேண்டும். (10)

அதில் நெய், எண்ணெய், இவற்றை வார்த்துக் கலந்து மந்தமான (தணிவான) தீயில் வைத்து வேக வைக்கவேண்டும். தேன்போல வரும். அப்போது அதை சூலத்தில் பூசவேண்டும். இதுவே சித்த சாத்திரத்தில் தேர்ந்தவர்களால் அஷ்டபந்தனம் என்று கூறப்படும். (11)

இனி சூலத்தில் பலவிதமான நாடிகளை அமைக்கும் வகை விளக்கப்படுகின்றது. நன்றாக முற்றிய பழுத்த தேங்காயின் மேல் மட்டையை எடுத்து சுத்தமான ஜலத்தில் ஊற வைக்கவேண்டும். நன்றாக ஊறின பிறகு அதிலுள்ள சோற்றை விலக்கிவிட்டு நரம்புகளைத் தனிப்படுத்தி எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நாறுகளால் அததற்கேற்ற அளவுப்படி சூலத்தில் நாடிகளை அமைக்க வேண்டும். (13)

மூலத்தாரத்திலிருந்து நாபியின் வழியாக மேல் நோக்கிச் செல்லும் மூன்று நாடிகள். அம்மூன்றனுக்குள், நடுவில் செல்வது

ஜாமேதஸ்ய பார்ஸ்வயோர்நாட்யோ நாடயஸ்திதா: |
விசித்ரரஜ்ஜுவர்ணாபாஸ்ததா ஸ்யாமேவ த்ரிவக்ரகா: ||

தேஷாம் ப்ரூமத்யமார்க்கேண யோகோऽத்ர ஸம்ப்ரவேஸ
தடியோ விஹஹாஸ்யுஷ்டு வம்ஸதண்டஸ்ய பார்ஸ்வத: || ௧௬ ||

ப்ரூமத்யாத்மூர்த்தபர்யந்தம் த்ரிநாடீ ஏகவத்ஸ்திதா |
மூர்த்நி பஞ்சதா பிந்நா ஸப்தாத்மா விஸ்ருதா || ௧௭ ||

காந்தாரீ ஹஸ்திஜிஹ்வா ச பூஷா சைவ யஸஸ்விநீ |
அலம்புஷா குஹூஸ்சைவ ஸங்கிநீ த்வேவ ஸப்தகா: || ௧௮ ||

காந்தாரீ ஸர்வகாத்ரேஷு ஹஸ்திஜிஹ்வா ஸுநாஸிகா |

"ஸுஷும்நா" எனப்படும் முறையே ஸுஷும்நையின் வலதுபுறம் "பிங்கலா"வும் இடதுபுறம் "இடா"வும் செல்லும். இவைதான் முக்கியமான நாடிகளாம். இவை ஒவ்வொன்றும் மூன்று கயிறுகளால் முறுக்கேற்றப் பட்டவையாகவும் இவ்விரண்டங்குலம் அகல முள்ளவையாகவு மிருக்கும். (15)

இம் மூன்று நாடிகளும் புருவங்களின் மத்தியில் ஒன்றுகூடி விடும். அதற்குக் கீழ் வம்சதண்டத்தின் முன்புறத்திலிருக்கும். (16)

புருவங்களின் மத்தியிலிருந்து உச்சந்தலைவரை மூன்று நாடிகளும் ஒன்றுபோல் இணைந்து நிற்கும். உச்சந்தலையின் மேல் சென்றவாறே அவை ஏழுகிளைகளாகப் பிரியும். (17)

அவற்றின் பெயர்களாவன:— காந்தாரீ (1). ஹஸ்திஜிஹ்வா (2). பூஷா (3). யசஸ்விநீ (4). அலம்புஷா (5). குஹூ (6). சங்கிநீ (7). (18)

இனி இவை செல்லும் வழிகள் விளக்கப் படுகின்றன. இந்த ஏழு நாடிகளுள், காந்தாரீ என்னும் நாடியானது உடல் முழுவதி

பூஷா தக்ஷிணகர்ணாந்தா வாமகர்ணாத் யஶஸ்விநீ ॥ ௧௯ ॥

அலம்புஷா மேட்ரமூலாந்தா பாயுதேஶாந்தகா குஹூர் பவேத் ।
நாபிமத்யஸ்திதா லம்பா ஶங்கிநீ லம்பிதா பவேத் ॥ ௨௰ ॥

தேஷ்வாத்யாஸ்து சதஸ்ர: ஸ்யுர்யவத்ரயமிதா: ।
ஶேஷநாட்யஸ்த்ரயாணாம் து யவைகைகம் பவேத் ॥ ௨௧ ॥

தக்ஷிணாவர்திதா: ஸர்வா: ஸவ்யே தத்ர ப்ரவர்திதா: ।
வ்யாவ்ருத்தா நாட்யஸ்திஸ்ரோ மேட்ரஸ்ய மூலகே ॥ ௨௨ ॥

லும் பரவிச் செல்லும். ஹஸ்திஜிஹ்வா என்னும் நாடி நாக்கின் அடிப்புறம் வரை செல்லும். பூஷா என்பது வலது காது வரையி லும், யசஸ்விநீ என்பது இடது காது வரையிலும் செல்லும். (19)

அலம்புஷா என்னும் நாடி, மேட்ரத்தின் (ஆண்குறியின்) அடிப் புறம் வரை செல்லும். குஹூ என்னும் நாடி "குதம்" (ஆசன வாய்) வரை செல்லும். கொப்பூழின் மத்தி வரையில் சென்று அங்கேயே தொங்கியவாறாக நின்றுவிடும் "சங்கினி" என்னும் நாடி. (20)

அவற்றுள் முதன்மையான நான்கு நாடிகள், ஒவ்வொன்றும் மூன்று யவம் களமுள்ளவையா யிருக்கும். மற்ற நாடிகள் தனி ஒன்று யவம் களமுள்ளவையா யிருக்கும். (21)

இந்த நாடிகள் யாவும் இரண்டு புரியில் முறுக்கப்பட்டவையாக வும் பிரதக்ஷிணமாக முறுக்கேற்றப்பட்டவையாகவு மிருக்கும். இடை, பிங்கலா, ஸுஷும்னா, என்று முன்பு கூறப்பட்ட முக்கிய மான மூன்று நாடிகளின் அடிப்புறமும் ஆண்குறியின் அடிப்புறத் தில் தொங்கியவாறாக விருக்கவேண்டும். (22)

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌧𑍋𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌡𑍍𑌯𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌦𑌶 𑌨𑌿𑌸𑍍𑌸𑍃𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌮𑌲𑌾 𑌘𑍋𑌷𑌿𑌣𑍀 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀 𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿(𑌨𑍀) 𑌤𑌥𑌾 ॥ ௨௩ ॥

𑌵𑌾𑌯𑌵𑍀 𑌕𑌮𑌨𑍀 𑌚𑍈𑌵 𑌮𑌦𑌨𑍀 𑌰𑍋𑌦𑌨𑍀 𑌤𑌥𑌾 ।
𑌰𑌸𑌵𑌾𑌹𑍀 𑌮𑍃𑌦𑌙𑍍𑌗𑍀 𑌚 𑌸𑍍𑌰𑌂𑌸𑌿𑌨𑍀 𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௨௪ ॥

𑌸𑌪𑍍𑌤𑌸𑍍𑌪𑍃𑌶𑌾𑌙𑍍𑌗𑍀 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 𑌚 𑌸𑌂𑌹𑌾𑌰𑍀 𑌸𑌞𑍍𑌚𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 𑌤𑌾𑌮𑌸𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌦𑌧𑍋𑌗𑌤𑌾𑌃 ॥ ௨௫ ॥

𑌤𑌾𑌸𑌾𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 𑌷𑌟𑍍 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 𑌷𑌟𑍍 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌮𑍇𑌵 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ॥ ௨௬ ॥

𑌅𑌧𑍋𑌽𑌧𑌶𑍍𑌚 𑌗𑌤𑌾 𑌏𑌤𑌾 𑌮𑍂𑌲𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌵𑌦𑍍 𑌸𑌂𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾𑌃 ।
𑌜𑌙𑍍𑌘𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌷𑌣𑍍𑌣𑌾𑌡𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௨௭ ॥

அந்த நாடிகளின் அடிப்புறத்திலிருந்து தனியாகப் பதினெட்டு நாடிகள் பிரிந்து செல்லும். அவையாவன:— விமலா (1). கோஷிணீ (2). ப்ருத்வீ (3). வாஹிநீ (4). தேஜஸ்விநீ (5). வாயவீ (6). கமநீ (7). மதநீ (8). ரோதநீ (9). ரஸவாஹிநீ (10). ம்ருதங்கீ (11). ஸ்ரம்ஸிநீ (12). சப்தஸ்ப்ருசாங்கீ (13). பூர்ணா (14). ஸம்ஹாரீ (15). ஸஞ்சாரிணீ (16). வாஹிநீ (17). தாமஸீ (18) இவை யாவும் ஆண்குறியின் அடிப்புறத்தில் தோன்றுமவை.

இவற்றுள் முதல் ஆறுநாடிகள் வலதுகாலில் செல்பவையாம். முடிவிலுள்ள ஆறுநாடிகளும் இடதுகாலில் செல்பவையாம். (26)

இந்தப் பன்னிரண்டு நாடிகளும் இந்த சூலத்தில் பரணிற்போல் கீழ் நோக்கிச் செல்லும். உள்ளங்கால் வரை சென்று, மீண்டும் நாகத்தின் நுனிவரை மேல்நோக்கி வந்து ஆறு நாடிகளின் நுனிகளையும் அதைச் சுற்றி வளைத்து ஒன்றுபோல் சேர்த்துத் திரித்துப் பொருத்திவிட வேண்டும். (27)

𑌸𑍁𑌷𑍁𑌮𑍍𑌨𑌾𑌮𑍂𑌲𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌵𑌂𑌶𑌸𑍍𑌯 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌤𑌃 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑌕𑍍𑌷𑌦𑌣𑍍𑌡𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌯𑍋𑌃 ।

𑌗𑌮𑌨𑍀 𑌮𑌦𑌨𑍀 𑌚𑍈𑌵 𑌰𑍋𑌧𑌨𑍀 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ।
𑌰𑌸𑌵𑌾𑌹𑍀 𑌮𑍃𑌦𑌙𑍍𑌗𑍀 𑌚 𑌸𑍍𑌰𑌂𑌸𑌿𑌨𑍀 𑌵𑌾𑌮𑌬𑌾𑌹𑍁𑌗𑌾𑌃 । ௨௯ ।

𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌂 𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌯𑌂 𑌚𑍈𑌕𑌤𑌾𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑌧𑌾 𑌭𑌵𑍇𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌵𑍋𑌰𑍍𑌵𑌾𑌮𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑌥𑌾 ।

𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌾𑌤𑍍𑌕𑌰𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌷𑍍𑌟𑍌𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌿𑌤𑌾𑌃
𑌸𑌙𑍍𑌕𑍋𑌚𑍍𑌯 𑌤𑌦𑌗𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌸𑌮𑌾𑌵𑍃𑌤𑌂 𑌯𑌥𑌾 । ௩௰ ।

நடுவில் கூறப்பட்ட ஆறுநாடிகளும் ஸுஷும்னையின் அடிப்புறத்தைப் பற்றி, வம்சதண்டத்தின் பக்கத்தில் மேல் நோக்கி ஏறிப் பக்ஷதண்டத்தின் மேலேறி இருபுஜங்களின் அடிப்புறத்தை யடையும். (28)

அதிலும், கமநீ, மதநீ, ரோதநீ என்னுமிவை வலதுகையையும், ரஸவாதீ, ம்ருதங்கீ, ஸ்ரம்ஸிநீ இவை இடது கையையும் அடையும்.

இவ்வாருகப் புயங்களின் அடிப்புறத்தை யடைந்த உடன் அம்மூன்று நாடிகளும் அவ்விடத்தைச் சுற்றியவாருக ஒன்று கூடி, ஒன்றேபோலாகிவிடும். மீண்டும் அவை எட்டுக்கிளைகளாகப் பிரிந்து இடம் வலம் இருபுறங்களிலும் கைகளில் செல்லும். (30)

இவ்வாருகப் புயங்களின் அடிப்புறத்திலிருந்து உள்ளங்கையின் நுனி வரையில் எட்டு நாடிகள் கைகளினூடே பரவினாற் போல் செல்லும். கைத்தலத்தில் சென்ற இந்த நாடிகளை மடக்கி மீண்டும் மணிக்கட்டு வரை கொண்டுவந்து அதைச் சுற்றியவாருக ஒன்று சேர்த்துக் கட்டிவிட வேண்டும். (31)

ததா கரோர்த்₄வஹஸ்தேஷு ஸர்வேஷ்வேவம் ப்ரஸாரயேத் |
ப்ரதா₄நநாட்₃யஸ்த்வேவம் கல்பயேத் ப்ரதிமாஸு ச || ௩௨ ||

தாஸ்வேகைகஸ்யா நாட்₃ய: ஸஹஸ்ரஶ: ஸமாவ்ருதா: |
த்₃விஸப்ததி ஸஹஸ்ராணி நாட்₃ய: ஸந்தி தே₃ஹிந: || ௩௩ ||

நாடீ₃பி₄ஸ்தாபி₄ரேதம் ஶூலம் ஜீர்ணாஶ்வத்த₂த₃லவத் |
நாட்₃யஸ்திதி ஸங்க்₃ருஹ்ய த₃ஶாதி₃ப்ரதா₄நிகா: || ௩௪ ||

யவஷட்கவிஸ்தீர்ணாப்₄யாம் ரஜ்ஜுப்₄யாம் த்₃ருட₄யேத் த்₃ருட₄ம் |
பா₃ஹ்யம் நிரந்தரம் ரஜ்ஜுப்₄யாம் ஶூலமேதத் ப்ரத₃க்ஷிணாவர்தகம் ||

இரண்டுக்கு மேற்பட்ட கைகள் உள்ள பிரதிமைகளிலும் இவ்வாறே ஒவ்வொரு கையிலும் எட்டெட்டு நாடிகளைப் பரவ விட்டுக் கட்டவேண்டும். இப்படிப் பிரதிமைகளில் முக்கியமான நாடிகளை அமைக்கவேண்டும் (32)

இவை ஒவ்வொன்றிலிருந்தும் அனேகம் நாடிகள் பிரிந்து சென்று உடல் முழுதும் பரவி நிற்கும். எழுபத்திரண்டாயிரம் நாடிகள் ஒவ்வொருவரது உடம்பிலும் பரவியிருப்பதாக மகரிஷிகள் கூறுகின்றனர். (33)

ஆனால் இங்கு முக்கியமான நாடிகளே கூறப்பட்டன. இந்த நாடிகளால் சூழப்பட்ட சூலம், அரசமரத்து உதிர்ந்த இலையில் மெல்லிய நரம்புகள் சூழ்ந்தவாறாகக் காணப்படுவது போல் காணப்படும். இவ்வாறாக நாடிகளை அமைத்துப் பிறகு அவற்றை மறைத்து விடவேண்டும். (34)

அதற்காக ஆறு யவம் அளவு அகலமுள்ள உறுதியான இரண்டு கயிறுகளால் சூலத்தைச் சுற்றி இடைவெளியில்லாமல் பிரதக்ஷிணமாகக் கட்டவேண்டும். (35)

ஹ்ருத்பத்மம் ஸாஷ்டபத்ராபம் ரஜ்ஜ்வா தாம் காரயேத்ஸுதீ: ।
தஸ்ய நாலந்து நாப்யந்தம் க்ருத்வா யோஜ்யம் ஸுஷும்நயா ।

ஜீவஸ்தாநம் ஹ்ருத்பத்மமித்யுக்தம் மஹர்ஷிபி: ।
ஸமூலமந்த்ரஸ்ம்ருத்யா ரஜ்ஜுபந்தம் ஸமாசரேத் ॥ 37 ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே ரஜ்ஜுபந்தலக்ஷணம் நாம அஷ்டாதஶோऽத்யாய: ।

இதேபோல் எட்டு இதழ்களுள்ள தாமரைமலர் போன்ற அமைப்புடன் ஹ்ருதயபத்மத்தையும் கயிற்றினாலேயே அறிவாளியான சிற்பியானவன் அமைக்கவேண்டும். அந்த ஹ்ருத்பத்மத்தின் காம்பு, நாபிவரை தொங்கியவாறாக விருக்கும். அந்த நாளம் ஸுஷும்ன நாடியுடன் இணைந்தவாறாக விருக்கவேண்டும். (36)

இந்த ஹிருதயபத்மமானது ஜீவாத்மாவின் இருப்பிடமென்று மகரிஷிகள் கூறுகின்றனர். அதனால் மிகுந்த கவனத்துடன் மூலமந்திரத்தைத் தியானம் பண்ணிக் கொண்டு கயிற்றைக் கட்டவேண்டும். (37)

சில்பரத்தினம் இரண்டாம்பாகம் சூலத்தைக் கயிற்றினால் கட்டும் வகையைக் கூறும் பதினெட்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

𑌅𑌥𑍈𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌅𑌥 𑌮𑍃𑌲𑍍𑌲𑍇𑌪𑌨𑌮𑍍

𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌂 𑌚 𑌤𑌥𑌾𑌨𑍂𑌪𑌂 𑌸𑌂𑌮𑌿𑌶𑍍𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌮𑍃𑌦𑌃 ।
𑌅𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌵𑌨𑌮𑍇𑌤𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑍃𑌦𑌂 𑌜𑌾𑌙𑍍𑌗𑌲𑌕𑌂 𑌹𑌰𑍇𑌤𑍍 ॥ ௧ ॥
𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌕𑌷𑌾𑌯𑌾𑌢𑍍𑌯𑌗𑌨𑍍𑌧𑌸𑌾𑌰𑌂 𑌵𑌨𑌾𑌨𑌕𑌮𑍍 ।
(𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑍃𑌦𑌾𑌶𑍍𑌰𑌯 𑌤𑌦𑌨𑍂𑌪𑌕𑌮𑍍) ॥ ௨ ॥

பத்தொன்பதாவது அத்தியாயம்.

ம்ருல்லேபநம் (மண்பூசுதல்).

இவ்வத்தியாயத்தில், சூலத்தின் மேல் மண்பூசும் விதம் கூறப்படுகின்றது. முன்கூறியபடி நாடிகள் அமைக்கப்பெற்றுக் கயிற்றினுல் உறுதியாகக் கட்டப்பட்ட சூலத்தின் மேல், தக்கவாறாக மண்ணைப்பூசி அதன் மேல் வர்ணம் தீட்டி வேலையை முடிக்கவேண்டும். அதற்கான மண் எடுக்கும் வகை முதலில் விளக்கிக் கூறப்படுகின்றது. இப்பூமியிலுள்ள மண் பொதுவில் மூவகையானது. ஜாங்கலம் (1). அனூபம் (2). மிச்ரம் (3). என மூன்று வகையாம். அவற்றுள் ஜாங்கலமென்னும் முதல் வகை; வெட்டியெடுப்பதற்கு முடியாதவாறாக மிகவும் உறுதியாக அழுந்திக் கிடக்கும் மண் "ஜாங்கலம்" எனப்படும். கருமணல் நிறையக் கலந்துள்ளதும் சிரமமின்றிக்கே வெட்டியெடுக்கக் கூடியதுமான மண் "அனூபம்" எனப்படும்.

தயோர்மிஶ்ரவிகாராத் மிஶ்ரஸம்ஸ்ருஷ்டதாஸ்ததஃ |

தேஷு ஸௌம்யஜலோபேதே ஸாலே ஶைலே ஶுபோதரே ||
நதீவாபீதடாகாதௌ ஜாதம் பங்கம் ஸமாஹரேத் |
ஶ்வேதவர்ணம் த்விஜா வா ரக்தவர்ணம் க்ஷத்ரியேஷு வா || 4 ||

விப்ராதிவர்ணபேதேந
க்ருஷ்ணவர்ணாவஸாநி வா |

ஸங்க்ருஹ்யாநீய ஶோத்ய வா க்ஷேத்ரே
ஸாரவஸநவர்ஜிதா || 5 ||

குறிப்பு:— இங்கு அரை சுலோகம் பொருள் தெளிவாக விளங்காமல் மூலம் சிதைந்துள்ளது.

மேற்கூறிய இருவகை மண்ணும் கலந்து காணப்படுவதே மூன்றும் வகையான மண், (2½)

அவற்றுள், வற்றாத நீருடையதும், தூய்மையானதும், பலவகையான பலவிருக்ஷங்களாலும் நறுமணங் கமழும் நன்மலர்களைத் தாங்கி மந்தமாருதத்தில் கலந்து வீசி வெகு தூரத்தில் செல்பவர்களையும் "வா" "வா" வென்றழைக்கும் மல்லிகை முல்லை முதலிய பூங்கொடிகளாலும் சூழப் பெற்றதும், வண்டினம் மயிலினம் மற்றும் இனிய குரலோசையை யுடைய பலவகைப் பறவைகளால் நிரம்பப் பெற்றதுமான இடத்தில், ஆறுகள் ஏரிகள் இவைகளிலுண்டான சேற்று மண்ணைக் கொண்டு வரவேண்டும். (3½)

மண்ணில் பல நிறங்கள் உண்டு. அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் முறையே, வெண்மை சிவப்பு மஞ்சள் கருமை நிறமுள்ள மண்கள் தகுந்தவையாம். (4½)

மேற்கூறியவாறான மண்ணைக் கொண்டு வந்து நீரை விட்டு நன்றாகக் கலக்கித் துகைத்துப் புதிய துணியால் வடிகட்டவேண்

[illegible]

[illegible] ‖ ௬ ‖

[illegible] ‖ ௭ ‖

[illegible]

டும். அவ்வாறு துணியின் வழியாக வடிக்கட்டப்பட்ட குழம்பை ஒரு பாத்திரத்தில் வைத்து வெயிலில் உலர்த்தவேண்டும். நீரெல்லாம் வற்றிப் போய்விடும் வரை நன்றாக உலர்த்தவேண்டும். (5½)

பிறகு அரக்குப் பொடியை அத்துடன் கலக்கவேண்டும். பால் மரங்களின் (ஆல், அத்தி, அரசு, இச்சி) பட்டைகளை நீரில் ஊற வைத்து அந்தக் கஷாயத்தை விட்டு நன்றாகத் துவைக்க வேண்டும்.

மீண்டும் அந்த மண்ணை நன்கு உலர்த்த வேண்டும். அதற்குப் பிறகு, கருங்காலி மருதை இம்மரங்களின் பட்டைகளை இடித்து நீரில் கொதிக்க வைத்து அந்தக் கஷாயத்தை அந்த மண்ணில் ஊற்றித் துவைக்க வேண்டும். பிறகு அதை மீண்டும் உலர்த்த வேண்டும். இம்முறை உலர்த்தும் போது, நன்றாகப் பொடியாகும் வரை உலர்த்தக் கூடாது. குழம்பான நிலைமை மாறி உருண்டையாக உருட்டி வைக்கக்கூடிய பக்குவம் வருகின்ற வரையில் உலர்த்தினால் போதும். (7)

பிறகு முக்களிகளை (கடுக்காய், தான்றிக்காய் நெல்லிக்காய்) நீரில் போட்டுக் கொதிக்க வைத்து அந்தச் சாற்றை அம்மண்ணில் ஊற்றி

ஸம்ஶுஷ்கே ஶர்கராயுக்தம் பிண்டம் க்ருத்வா தத: ஸுதீ: । அ ।

பிண்டமத்யே தலேரேகா த்ருஶ்யந்தே பிண்டகம் ததா ஸ்ம்ருதம் ।
க்ருதம் பேதக்ருதே தஸ்மிந் பாகம் யோஜயேத் க்ரமாவதி । கூ ।

த்ரிபலாம்பஸா தத: ஸம்ஸ்க்ருத்ய ஸப்தாஷ்டதஶவாஸராந் ।
யவகோதூமமாஷாம்ஶ்ச காயவ்ருக்ஷதலம் ததா । ௰ ।
யதா ஸமாம்ஶம் ஸம்யோஜ்ய சூர்ணீக்ருதம் ஸந்தாநம் ம்ருத: ।
அஷ்டாம்ஶம் ஸம்யோஜ்ய நாலிகேரஸலிலேநாத்ரகை: । கக ।

நன்றாகத் துவைக்க வேண்டும். அறிவாளியான சிற்பி, சிறிது இளக்கமாக இருக்கும் நிலையிலேயே அம்மண்ணை உருண்டையாகப் பண்ணிக் கொள்ளவேண்டும். (8)

உருண்டையாக உருட்டிக் கைத்தலத்தில் வைத்துக் கொண்டால் கையிலுள்ள ரேகைகள் அவ்வுருண்டையில் தானகப் படிய வேண்டும். இந்தப் பக்குவத்தில் மண்ணை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றவாறு. பிறகு அந்த மண்ணை நான்கு பாகமாகப் பண்ணிக் கொள்ள வேண்டும். அதில் ஒரு பாகத்தினளவு *சாதாரணமான மண்ணைக் கூட்டிக் கொள்ளவேண்டும். (9)

பிறகு அம்மண்ணை த்ரிபலா கஷாயம் விட்டுத் துவைக்கவேண்டும். அந்நிலையிலேயே, ஏழு, எட்டு அல்லது பத்து நாட்கள் புளிக்குமாறு வைத்திருக்க வேண்டும். பிறகு யவம், கோதுமை உளுந்து காயாவின் இலை, இவற்றை ஸமபாகம் சேர்த்து நன்ருகப் பொடி செய்து கொள்ளவேண்டும். அதன்மேல் எட்டிலொரு பாகம் மண்ணைச் சேர்த்துத் தேங்காயிலுள்ள இளநீரை வார்த்துப் பாத்திரத்தி

* இங்கு மற்ற நூல்களில் பொறுக்காய்கல்லைப் பொடி செய்து ஷெ மண்ணில் நாலிலொரு பாகம் கூட்டிக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறது.

[illegible] |

[illegible] || கஉ ||

[illegible]

[illegible] |

[illegible]

*[illegible] || கங ||

[illegible] |

[illegible] |

[illegible] |

[illegible] | கரு |

விட்டு நன்றாகத் துகைக்க வேண்டும். முன்பு கூறியபடி பத்துநாள், எட்டுநாள், ஏழுநாள் இவ்வாறாகப் புளிக்க வைத்து மீண்டும் மீண்டும் இளநீரை விட்டுத் துகைக்க வேண்டும். (113)

திருவட்டம் பிசின், குங்கிலியம், குந்துரிக்கம், ஸர்ஜாரஸம். இவற்றைச் சம அளவு பொடி செய்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மண்ணின் முழு அளவில் பதினாறி லொரு பாகம் இவற்றைக் கலக்கவேண்டும். (15)

பிறகு, சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள் இவைகளைச் சமபாகம் (டி மண்ணில் 10-ல் ஒரு பங்கு) எடுத்துப் பொடி செய்து, அந்தப் பொடியை அம் மண்ணோடு 24-ல் ஒரு பங்கு கலந்து நன்றாகத் துகைக்கவேண்டும். மீண்டும் அத்துடன், தேன் பால் நெய் இவற்றைக் கலந்து துகைக்க வேண்டும். (15)

---

* இங்கு மற்றை நூல்களில் வேறு விதமாகக் கூறப்படுகின்றது.

கபித்தபில்வநிர்யாஸசூர்ணம் ம்ருத: பஞ்சதசாம்சகம் |
த்ருட: பஞ்சதசாம்சேந தச்சூர்ணேந விநிக்ஷிபேத் ॥ ௧௬ ॥

தைலேநாலிப்ய ஸம்ஶோஷ்ய பஶ்சாத் குங்குமசந்தநம் |
ஹரிதாலம் குஷ்டகர்பூராகருகோரோசநாதி ச ॥ ௧௭ ॥
ஸமம் ஸஞ்சூர்ண்ய ம்ருத்ஸ்தாயாம் த்ரிம்ஶாம்ஶம் யோஜயேத்தத: |

ததஶ்சாயாத்ருமோத்பந்நநிர்யாஸம் வா விநிக்ஷிபேத் ॥ ௧௮ ॥
ஸ்வர்ணராஜதயோஶ்சூர்ணம் யதாஸம்பவம் |

[illegible] ॥ ௧௯ ॥
[illegible] |

விளாமரம், பில்வமரம் இவற்றின் கோந்துகளைப் பொடிசெய்து மண்ணில் 15-ல் ஒரு பங்கு கலக்கவேண்டும். கோந்துப் பொடிகள் இரண்டும் சமபாகமாக இருக்கவேண்டும். (16)

பிறகு எண்ணெயை ஊற்றித் துகைத்து, மீண்டும் குங்குமப்பூ சந்தனம் இவற்றைச் சேர்க்கவேண்டும். மேலும், அரிதாலம், கோஷ்டம், கற்பூரம், அகில், கோரோசனம், இவற்றைச் சமபாகமாகப் பொடி செய்து மண்ணில் 30-ல் ஒரு பாகம் சேர்க்கவேண்டும். (17½)

பிறகு அதில் காயாமரத்திலிருந்து தோன்றும் பசை அல்லது எண்ணெயை விட்டுத் துகைக்க வேண்டும். பொன் வெள்ளி இவற்றின் பொடிகளையும் இயன்றவளவு மண்ணுடன் கலக்கவேண்டும். (18½)

பிறகு பலவிதமான மண் பொடிகளைக் கலக்கவேண்டும். ஆறு, கடல் இவற்றின் மண், நண்டு வளையின் மண், புற்றுமண், கலப்பை நுனியால் உழுதவிடத்தின் மண், பயிர்கள் வேரிலுள்ளமண், எருதுகள் கரைகொந்தும் போது அவற்றின் கொம்புகளில் ஒட்டியிருக்கும்

பேஷணஞ்ச [illegible] நாநாக3ந்த4ஸமந்விதம் ॥ ௨௰ ॥

ஸம்யோஜ்யாத2 மதூ4கத்வக்கஷாயஜலஸம்ஶ்ருதை: |
கபித்த2பி3ல்வநிர்யாஸை: [illegible] ॥ ௨௧ ॥

[illegible] |
[illegible] ॥ ௨௨ ॥
[illegible] |

[illegible] ॥ ௨௩ ॥

மண், அவ்வாறே யானைகளின் தந்தத்தில் ஒட்டிய மண், இவற்றைக் கிடைத்தவரை நன்கு பொடி செய்து, பல்வகையான வாசனைத் திரவியங்களையும் சேர்த்துக் கலக்கவேண்டும். (20)

பிறகு இலுப்பை மரத்துப் பட்டையில் காய்ச்சப் பட்ட கஷாயத்தில் விளாம்பிசின், பில்வமரத்துப் பிசின் இவற்றுடன் அடி மண்ணை யும் சேர்த்துத் துகைத்து ஐந்து தினங்கள் அந்நிலையிலேயே வைத்திருக்கவேண்டும். (21)

பிறகு நன்கு முற்றிய தேங்காயின் மட்டையிலுள்ள நார்களை அடி மண்ணுடன் கலக்கவேண்டும். அவற்றை ஒரு அங்குலம், அல்லது ஒன்றரை அங்குலம், அல்லது இரண்டங்குலம் நீளம் உள்ளதாகத் துண்டு போட்டுக்கொண்டு அதன்மேல் அடி மண்ணுடன் கலக்கவேண்டும். மண்ணின் அளவில் நாலிலொரு பாகம் இந்தத் தேங்காய் நார் இருக்கவேண்டும். இவ்வாறு சேர்த்துப் பலதரம் நன்கு அம்மண்ணைத் துகைக்கவேண்டும். (22)

இப்படிப் பண்பாடடைந்த அம்மண்ணைக் கயிற்றால் கட்டப் பட்டுள்ளதும் லேபயபிம்பத்தின் எலும்பு போன்றதுமான சூலத் தின் மேற்புறத்தில் நன்குகப் பூசவேண்டும். அது நன்கு உலர்ந்

தஸ்மிந்நூர்த்வே ரஜ்ஜுபந்தம் ததா ம்ருல்லேபநம் புந: ।
ம்ருத்ஸ்நம் பஶ்சாத்ததாஸ்த்ரம் யதாயுக்தம் ப்ரலேபயேத் ॥ ௨௪ ॥

காலம் நிரீக்ஷ்ய கர்தவ்யம் ம்ருல்லேபஸ்தத: ஶநை: ।
தத்தஜ்ஜாத்யாதிபேதேந ஸமாஹார்யம் ம்ருதம் பரம் ॥ ௨௫ ॥
பதாநாம் பேத விஜ்ஞாய தத்யம்ஸாம்ஸாவஸாநகம் ।
ம்ருல்லேபம் ததநந்தரம் தத்தத்ஸ்தாநாம்ஶமாத்ரகம் ॥ ௨௬ ॥
தஸ்யாந்த்யமதபோகாம்ஶம் ஜாங்கலாவ்யத்யமாத்ரகம் ।
தத்தத்தேஶஸ்த்ருதிதைவ தத்தத்பாகம் ப்ரலேபயேத் ॥ ௨௭ ॥

கல்பநவ்யஞ்ஜநார்தம் ம்ருதுமிஶ்ரேண பாவயேத் ।

ததும் மீண்டும் கயிற்றால் கட்டவேண்டும். அதன்மேல் மீண்டும் மண்ணைப் பூசவேண்டும். மேலே பூசவேண்டிய மண்ணின் கனம், அதனதன் தகுதிக்கேற்றவாறு (ஜாங்கலம், அநூபம், மிச்ரம், என்று இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்ட மூவகைகளுக்கும் முறையே) ஒரு அங்குலம், இரண்டங்குலம், மூன்றங்குலம் இருக்கலாம். (24)

இப்படி நன்ருகக் கவனித்து மெதுவாக மண்ணைப் பூசவேண்டும். அந்தந்த உறுப்புக்கள் இருக்குமிடத்தில் சூலத்தின் மேல் மண்ணின் கனம் இருக்கவேண்டிய அளவை நான்கு பாகமாகச் செய்து கொள்ளவேண்டும். அதில் முதல்பாகம் முடியும் வரை அநூபம் என்னும் வகையைச் சேர்ந்த மண்ணைப் பூசவேண்டும். இதை யடுத்தாற் போல் "மிச்ரம்" என்னும் மண்ணை இரண்டாம்பாகத்தில் பூசவேண்டும். அதற்கடுத்த பாகத்தில் "ஜாங்கலம்" எனப்படும் மண்ணைப் பூசவேண்டும். அந்தந்த தேசத்தில் கிடைக்கும் மண்ணைக் கொண்டே அந்தந்த பாகத்தைப் பூசவேண்டும். (27)

இவ்வாருக மூன்று பாகங்கள் மூன்றுவிதமான மண்களால் பூசிய பிறகு மேலும் ஒரு பாகம் மிச்ச மிருக்கின்றதல்லவா ? அதைக்

ஸுதீக்ஷ்ணதார நீபாஶ்மரயா ஸஹ ॥ ௨௯ ॥
நதீவாலுகஶர்கரா யோஜ்ய ஸுஶ்லக்ஷ்ணம் சூர்ணயேத்புத: |
கபித்த நிர்யாஸஜலைர்மர்த்தயித்வா விஶோஷயேச்ச ॥

புந: கார்பாஸதந்தூம்ஶ்ச
ஸம்யுக்தம் பரிவேஷ்டயேச்ச |
ஶிலாப்ருஷ்டேவர்ந: ஶோஷம்
க்ருத்வா பூர்வத்து பேஷயேச்ச ॥ ௩௰ ॥
த்ரிவாரம் பேஷயேதேவம் ததஶ்ஶோஷம் ப்ரகல்பயேச்ச
ஸஞ்ஜாதாஜ்ஞாதி ஸம்பந்தம் ஸ்ருஷ்டாவஸ்தாதிகல்பவி ॥

கல்கத்தால் பூசிப் பூர்த்தி பண்ணவேண்டும். அதற்காகக் கல்கத்தைப் பண்ணி வைத்துக் கொள்ளவேண்டும். "கல்கம்" எனப்படுவது, சிமெண்டு போன்ற ஒரு வகைத்தான கலப்பு. மிகவும் கருப்பான ஆற்றுமணலுடன் ஆற்றிலுள்ள சுக்காங்கற்களைக் கலந்து நன்றாகப் பொடியாக்கிக் கொள்ளவேண்டும். பிறகு விளாம்பிசின் ஜலத்தை விட்டுத் துகைத்து உலர்த்தவேண்டும். (29)

மீண்டும் அதில் பஞ்சு நூலைப் பொடி செய்து கலந்து துகைக்க வேண்டும். பிறகு அதைக் கல்லின் மேல் பரப்பிக் காயவைத்து மீண்டும் முன்போலவே விளாம்பிசின் நீரை விட்டுத் துகைக்க வேண்டும். (30)

இவ்வாறாக மூன்றுதரம் நீரை விட்டுக் கலப்பதும் உலர்த்துவதுமாக மாறி மாறிச் செய்யவேண்டும். இவ்வாறான கற்பொடியே "கல்கம்" எனப்படும். இதனால் முன்கூறப்பட்ட (4-பாகங்களில்) நான்காம் பாகத்தைப் பூசவேண்டும். (30½)

முக்கியமான உறுப்புக்கள், உபாங்கங்கள் எனப்படுகின்ற மற்ற உறுப்புக்கள் இவற்றையும் அணிவகைகள் பலவற்றையும், ஆடைகளையும், இந்தக் கல்கத்தினாலேயே அமைத்து நன்றாகக் காயவைக்க

கஷாயேணைவ லிம்பேத் ஸம்யக் ஸம்ஶோஷ்ய ஶுஷ்கவதி ।
த்ரிஃபலாக்வாதஜேநைவ ஸம்யகாலிப்ய ஶூலகம் ॥ ௩௨ ॥

ஶோஷிதே ஸ்வர்ணசூர்ணேந
பேஷிதேந ஸுசூர்ணேந ।
சித்ரகர்மக்ரமாத் பஶ்சாத்
வர்ணைரேவம் ப்ரலேபயேத் ॥ ௩௩ ॥

ஶ்வேதஸ்தாநேஷு வர்ணேஷு முக்தாசூர்ணம் ப்ரலேபயேத் ।

இதி ஶில்பரத்நே உத்தரபாகே ம்ருல்லேபநவிதிர்நாம
ஏகோநவிம்ஶோऽத்யாய: ।

வேண்டும். நன்கு உலர்ந்த பிறகு த்ரிபலா கஷாயத்தை (கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவற்றைக் கொதிக்கவைத்து அதனின்று வடிக்கட்டின ஜலம்) ஷ சூலத்தின் மேல் முழுதும் நன்ருகப் பூசவேண்டும். (32)

பிறகு அதுவும் நன்ருக உலர்ந்ததும், பொன்பொடியை நன்ருக அரைத்து அதை ஷ சூலத்தின்மேல் முறைப்படி நன்ருகப் பூசவேண்டும். அதற்குப் பிறகு சித்திரங்கள் வரைவதற்கான முறைப்படி வர்ணந்தீட்ட வேண்டும். (33)

அவ்வாறு வர்ணந்தீட்டும் பொழுது வெள்ளை நிறம் தீட்ட வேண்டிய இடங்களில் முத்துக்களைப் பொடி செய்து அதைக் கொண்டு பூசவேண்டும். (33½)

சிற்பரத்தினம் இரண்டாம் பாகம், மண்பூசும் விதத்தைக்
கூறும் பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥 𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

𑌅𑌥 𑌦𑍇𑌵𑍀𑌕𑍁𑌮𑌾𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌵𑍍𑌯𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌸𑍍𑌥𑌯𑌾 ।
𑌆𑌸𑍀𑌨𑌾𑌨𑌾𑌮𑌾𑌸𑍀𑌨𑍇 𑌦𑍇𑌵𑍀 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌵𑌿𑌪𑌤𑍍𑌤𑌯𑍇 ॥ ௧ ॥

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌦𑍇𑌵𑍀 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾 𑌸𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍀𑌠𑌾𑌐𑌕𑍍𑌯𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾 𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌯𑌾𑌵𑌦𑍇𑌵 𑌵𑌾 ।

இருபதாவது அத்தியாயம்

தேவிகள் குமாரர்கள் இவர்களின் இலக்கணம்.

நின்றவாறாக உள்ள தேவர்களுக்குத் தேவிமாரும் நின்றவாறாகவே அமைக்கப்படவேண்டும். வீற்றிருக்கும் தேவர்களுக்கு வீற்றிருந்தவாறாகவே தேவிமாரும் இருத்தல் வேண்டும். வேறு விதமானால் பெருங் கெடுதல் உண்டாகும். (1)

ஆண் தெய்வத்தின் இடதுபுறத்தில் தேவி இருக்கவேண்டும். இருவரையும் ஒரே பீடத்தில் அமைக்கலாம். வெவ்வேறு பீடங்களிலும் அமைக்கலாம். இறைவனைக் கட்டித் தழுவியவாறாகவும் அல்லது வேறு வகையிலும் தேவியை அமைக்கலாம். (2)

ஹந்வந்தம் வா ப்ரபோஸ்த்வஸ்ய தேவ்யாயாமமிஹோதிதம் ॥ ௩ ॥

க்ரீடாப்ஜம் வாமஹஸ்தே து கட்யவலம்பீ வா தக்ஷிண: ।
ஸர்வாபரணஸம்யுக்தா தத்தத்ஸ்தாநவிபூஷணை: ॥ ௪ ॥

கிஞ்சித்தேவாஶ்ரிதம் வக்த்ரம் ப்ரஸந்நம் ஸுந்தரம் பவேத் ।
தேவீதேவஸயோர்மத்யே குமாரம் ஸ்தாபயேத்து வா ॥ ௫ ॥

ஹிக்காந்தம் வா ஸ்தநாந்தம் வா தயோர்மத்யேஷ்டபாஜிதே ।
ஏகைகாம்ஶகஹீநேந நவதா தாம்ஶபாவகே ॥ ௬ ॥

இறைவனுடைய மூக்கு நுனியளவு, நெற்றியளவு, அல்லது முகவாய்க்கட்டை யளவு தேவியின் உயரம் இருக்கலாம். (3)

தேவியின் இடது கையில் விளையாட்டுக்கான அழகிய தாமரை மலர் இருக்கும். வலது கையை இடுப்பில் தாங்கியவாறாக வைக்க வேண்டும். (அல்லது அதிலும் தாமரை மலரையே வைக்கலாம்) ஆபரணங்கள் எல்லாவற்றையும் அதனதன் இடங்களில் தக்கவாறாக அமைக்கவேண்டும். (4)

அருள் நிரம்பியதும் இனிய தோற்ற முள்ளதுமான தேவியின் முகம், சிறிதளவு தேவன் பக்கம் சாய்ந்தவாறாக விருக்கவேண்டும். குழந்தையை, தேவி தேவன் இருவருக்கு மிடையிலும் அமைக்கலாம். வெளியிலும் அமைக்கலாம். (5)

தேவியின் விக்கிரகத்தின் ஆதாரத்தில் குமாரனுடைய விக்கிரகத்தின் உயரம் இருக்கவேண்டும். 'தேவியின் ஹிக்கை வரை குமாரனுடைய உயரம் இருக்கலாம். அல்லது கொங்கையளவு இருக்கலாம். இவ்விரண்டு அளவுகளின் மத்திய பாகத்தை எட்டு கூறாக்கி,

தேவீவிம்ஶோச்ச்ராயேண குமார ப்ரதிமோந்நதம் ॥ ௬½ ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே தேவீகுமாரலக்ஷணம்
நாம விம்ஶோऽத்யாய: ।

அவை ஒவ்வொன்றையும் குமாரனுடைய உயரத்தினளவாகக் கொண்டால், குமாரனுடைய உயரம் ஒன்பது வகையாம். (6½)

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம், தேவிமார் குமாரன் இவர்களின் இலக்கணத்தைக் கூறும் இருபதாம் அத்தியாயம் முற்றும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌅𑌥𑍈𑌕𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ।

𑌅𑌥 𑌵𑌾𑌹𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌵𑍃𑌷𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

[illegible] ।
[illegible] ॥ க ॥

*[illegible] ।

இருபத்தோராவது அத்தியாயம்.

வாகனங்களின் இலக்கணம்.

முதலில் விருஷபத்தின் இலக்கணம் கூறப்படுகின்றது :—விருஷபம் பண்ணுவதற்கு, முந்துற முன்னம் அதன் அளவுகளைக் கூறுவதற்காக அங்குலத்தின் அளவு கூறப்படுகின்றது. விருஷபம் இருக்க வேண்டிய முழு உயரத்தை முதலில் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். அதைப் பதினைந்து பாகமாகச் செய்தால், அதில் ஒரு பாகம் ஒரு அங்குல மென்னும் அடிப்படையில் இங்கு அளவுகள் கூறப்படுகின்றன. விருஷபத்தின் முகத்திலிருந்து பின்புறம் வரையிலுள்ள முழு நீளம் நாற்பது அங்குலமாம். (1)

இனி விருஷபத்தின் உயரம் விளக்கப்படுகின்றது. முகத்தின் உயரம் கழிருந்து மேல் ஒன்பதங்குலம். அதிலிருந்து கழுத்துவரை

---

*[illegible] ।
[illegible] ॥

(காச்யபீயம். 40—37)

இந்த இடத்தில் காச்யபீயத்தில் ஷ்டி சுலோகம் உள்ளது. ஆய்ந்துணர்க.

[illegible] ॥ ௨ ॥
ஜாநோர்தீர்க்கம் ஷடங்குலம் ஜாநுநாஹம் த்வ்யங்குலம் ।
ஜங்காநாஹம் ஷடம்ஶம் ஸ்யாத் குராநாஹம் த்வ்யங்குலம் ॥ ௩ ॥

ஶ்ருங்கயோரந்தரம் வஸ்வம்ஶம் ஶ்ருங்கோத்ஸேதம் யுகாங்குலம் ।
ஶ்ருங்கமூலவிஶாலம் ச யுகாங்குலமுதீரிதம் ॥ ௪ ॥

தத்ராக்ரவிஸ்தாரம் அர்த்தாங்குலம் க்ரமாத்க்ருஶம் ।
கிஞ்சித்வக்ரம் ததா மத்யே ஶ்ருங்காக்ரம் தீக்ஷ்ணம் ॥ ௫ ॥

உயரம் எட்டங்குலம். அதிலிருந்து மார்பு வரை உயரம் பதினறங்குலம். துடைகளின் உயரம் ஆறங்குலம். முழங்காலின் உயரம் இரண்டங்குலம். கெண்டைக்காலினுயரம் ஆறங்குலம். குளம்பி னுயரம் இரண்டங்குலம். (3)

குறிப்பு:— இரண்டாவது சுலோகத்தின் தொடக்கத்தில் சிறிது பாடம் தவறுதலாக அச்சிடப் பட்டிருக்கக் கூடும் என்று எண்ணி, வேறு விதமாகக் கருத்து உரைக்கப் பட்டுளது. உள்ளபடியே மூலம் மட்டும் அச்சிடப் பட்டுள்ளது. அதற்கே பொருள் பொருத்தமாகக் கிடைக்குமாயின் அறிஞர்கள் கண்டு கொள்ளவேண்டும்.

கொம்புகளிரண்டினுடையவும் இடைவெளி எட்டங்குலம். கொம்புகளின் உயரம் நாலங்குலம். கொம்புகள் தொடங்குமிடத்தில் அவற்றினகலம் நாலங்குலம். (4)

கொம்புகளின் முனையினகலம் அரை அங்குலம். அடியிலிருந்து நுனிவரை படிப்படியாகக் குறைந்துகொண்டே செல்லும் இவை. கொம்புகளின் மத்தியில் சிறிது வளைவு இருக்கவேண்டும். (5)

லலாடாயாமம் நவாம்ஶம் பஞ்சவ்யாஸம் முகாம்ஶகம் |
ததாயாமஞ்ச தத்துல்யம் நேத்ராயாமம் த்வ்யங்குலம் ஸமீரிதம் ||

அத்யர்த்தாங்குலம் நேத்ரோச்ச்ரயம் மத்ஸ்யாக்ருதி லோசநம் |
நேத்ரமத்யாந் முகாயாமம் அஷ்டாங்குலம் ப்ரகீர்த்திதம் || ௭ ||

தஸ்மாதேவ க்ரீவாந்தம் ஷண்மாத்ரம் விநிர்திஶேத் |
நேத்ரமத்யாத் லலாடாந்தம் வேதமாத்ரம் ப்ரகீர்த்திதம் || ௮ ||

நேத்ரகர்ணாந்தரம் தத்ஸ்யாத் கர்ணாயாமம் ஶராம்ஶகம் |
கர்ணமூலவிஸ்தாரம் த்விமாத்ரமிதி கத்யதே || ௯ ||

நெற்றியினகலம் ஒன்பதங்குலம். முகத்தினகலம் ஐந்தங்குலம். அதன் நீளமும் அவ்வளவேயாம். கண்ணின் நீளம் இரண்டங்குலம். (6)

கண்ணின் உயரம் ஒன்றரை அங்குலம். கண்ணின் அமைப்பு மீன் போன்றதாக இருக்கவேண்டும். கண்களின் மத்தியிலிருந்து முகத்தின் உயரம் எட்டங்குலம்.

அதிலிருந்தே (கண்ணின் மத்தியிலிருந்து) கழுத்தின் பின்புறம் வரை நீளம் ஆறங்குலம். அதிலிருந்தே நெற்றியின் உச்சிவரை உள்ள நீளம் நாலங்குலம். (8)

கண், காது இவற்றின் இடைவெளியினளவும் அதுவேயாம். (நாலங்குலம்). காதின் நீளம் ஐந்தங்குலம். காதின் அடிப்புறத்தில் அதனகலம் இரண்டங்குலம். (9)

அபராஜித பருச்சா, காச்யபீயம் முதலிய நூல்களில் விருஷப லக்ஷணம் சிறிது மாறுபட்டதாகக் கூறப்படுகின்றது. ஆய்ந்துணர்க.

𑌮𑌧𑍍𑌯𑍇 [illegible] 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ।
[illegible]𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 [illegible] 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௰ ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 ... ... ॥ ௰½ ॥

𑌅𑌶𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌮𑍁𑌖𑌂 𑌤𑌾𑌲𑍁𑌤𑍍𑌰𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌯𑌾𑌮𑍇𑌨 [illegible] ।
[illegible] 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 [illegible] ॥ ௧௧ ॥

𑌮𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑌰𑍍𑌤𑍁𑌲𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌂 𑌤𑌤𑌃 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑌾 [illegible] 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௨ ॥

𑌕𑌰𑍍𑌣𑌮𑍂𑌲𑌾 [illegible] 𑌕𑌰𑍍𑌣𑍌 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌵𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑍌 ।
[illegible] 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑍌 ॥ ௧௩ ॥

காதின் நடுவில் அதனகலம் நாலங்குலம். நுனியில் அதனகலம் ஒரு அங்குலம். காதின் களம் அரை அங்குலம். கன்னமும் காது போன்ற அளவுள்ளதேயாம். (10)

மூக்கின் நீளம் ஒரு அங்குலம். (மூலம் இங்கு சிதைந்துள்ளது). (10½)

குதிரையின் இலக்கணம்.

குதிரையின் முகம் மூன்று தாளம் நீளமிருக்கவேண்டும். அம்முகத்தினுள் இருக்கும் உறுப்புக்களின் அளவுகளை இனி விளக்கிக் கூறுவோம். (11)

குதிரையின் உச்சந்தலை வட்டவடிவமாக இருக்கவேண்டும். அதன் அளவு ஆறங்குல மிருக்கவேண்டும். காதுகளின் அடிப்புறம் வரை உள்ள உயரம் மூன்றங்குலமென அறுதியிடப்பட்டது.

காதின் அடிப்புறத்திலிருந்து எட்டங்குலம் நீளமுள்ளனவாகக் காதுகள் அமைக்கப்பட வேண்டும். இவற்றினகலம் நாலங்குல

கர்ணமூலஸ்ய நேத்ரஸ்ய மத்⁴யம் மாத்ரம் நவாங்குலம் |
நேத்ரே ப்ரத்யேகமாயாமே வேதாங்குலவிஸ்த்ருதே ||

ப்⁴ருவௌ த்³வ்யங்குலவிஸ்தாரௌ ஷட³ங்குலமாயதே |
ப்⁴ருவோர்மத்⁴யஸ்ய தை³ர்க்⁴யம் த்³வாத³ஶாங்குலஸம்மிதம் || கரு ||

ஷட³ங்குலம் ஸகேஶாந்தே மத்⁴யம் ஸாஷ்டாங்குலம், அத⁴ஸ்தத꞉ |
அஷ்டாங்குலம், தத꞉பஶ்சாத் த்³வாத³ஶாங்குலவிஸ்த்ருதம் || கசு ||

லலாடஸ்ய து தை³ர்க்⁴யம் ஸ்யாத் தாலமாத்ரம் ப்ரகீர்திதம் |
நயநாந்தவிஸ்தார꞉ ஷோட³ஶாங்குலமிஷ்யதே || கஎ ||

நாஸாவம்ஶஸ்ய தை³ர்க்⁴யம் ஸ்யாத் ஷோட³ஶாங்குலமிஷ்யதே

மிருக்கவேண்டும். வெற்றிலைபோன்ற அமைப்புள்ளனவாம் இவை.

காதுகளின் அடிப்புறத்திற்கும் கண்களுக்கும் இடையில் ஒன்ப தங்குலம் நீளம் இருக்கவேண்டும். கண்களிரண்டும் தனித்தனியே நான்கங்குலம் நீளமும், இரண்டரை அங்குலம் அகலமுமுள்ளனவாக இருக்கவேண்டும். (14)

புருவங்களிரண்டும் தனித்தனியே இரண்டங்குலம் அகலமும், ஆறங்குலம் நீளமுமுள்ளனவாக இருக்கவேண்டும். புருவங்களிரண்டினுடையவும் இடையிலுள்ள பகுதியின் நீளம் பன்னிரண்டங்குலம். (15)

நெற்றியினகலம், கேசாந்தத்தை யொட்டிய இடத்தில் ஆறங்குலம், நடுவில் எட்டங்குலம். அதன் கீழ்ப்புறத்தில் பன்னிரண்டங்குலம். (16)

நெற்றியின் நீளத்தினளவு ஒரு தாளமாகும். கண்களிருக்குமிடத்திலிருந்து கன்னங்களின் அகலம் பதினாறங்குலமாகும். (17)

இனி மூக்கின் அளவு கூறப்படுகின்றது. குதிரையின் மூக்கில், முதுகெலும்பு போல் சற்று உயர்ந்த பகுதி காணப்படுகின்றதல்

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌯𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 ॥

𑌨𑌾𑌸𑌾𑌪𑍁𑌟𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃 ।
𑌪𑍁𑌟𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌭𑌾𑌗𑍇 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥௧௯॥

𑌅𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍇, 𑌤𑌦𑌧𑍋 𑌰𑍇𑌖𑌾𑌤𑍍𑌰𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑌃 𑌪𑍍𑌰𑍋𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌂𑌮𑌿𑌤𑌃 ॥
𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌃 𑌦𑍀𑌰𑍍𑌘𑌘𑌨𑌂 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।

*𑌮𑍁𑌖𑌰𑌾𑌜𑍇𑌃 𑌪𑍁𑌟𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥
𑌮𑍁𑌖𑌰𑍇𑌖𑌾𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑌾𑌗𑍇 𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ।
𑌚𑌿𑌬𑍁𑌕𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌂 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥௨௨॥

லவா? அது, "நாஸா வம்சம்" எனப்படும். அதன் நீளம் பதினறங்குலம். அகலம் மூன்றங்குலம். மூக்கின் அகலம் நாலங்குலம். (18)

மூக்கின் இரண்டு துவாரங்கள் "நர்ஸாபுடம்" எனப்படும். அவை இரண்டும் தனித்தனியே இவ்விரண்டங்குலம் அகலம் உள்ளனவாம். நாஸாபுடங்களின் உட்பகுதி மேற்புறத்தில் ஆறங்குலமாம்.

கீழ்ப்புறத்தில் அதனகலம் நாலங்குலமாம். அதன் கீழ் மூன்று ரேகைகள் இருக்கும். அந்த ரேகைகளின் கீழ் "ப்ரோதம்" எனப்படும் உறுப்பு இருக்கும். இதன் அகலம், நீளம், கனம், எல்லாம் நாலங்குலமேயாம். (20)

முகராஜிக்கும் நாஸாபுடத்திற்கும் இடைப்பகுதி நாலங்குலம் அளவுள்ளதாம். முகரேகையின் வெளிப்புறத்தில் தாள்கட்டை நாலங்குலம் வளர்ந்திருக்கும். அவ்விடத்தில், அறிவாளியான சிற்பி ஐந்தங்குலம் அளவுள்ளதாக முகவாய்க்கட்டையை அமைக்க வேண்டும். (22)

---

* முகராஜி என்பது, முகத்தின் மத்தியில் மேலிருந்து கீழ் நேராகச் செல்லும் ரேகையாக இருக்கக் கூடும்.

𑌪𑍍𑌰𑍋𑌥𑌾𑌚𑍍𑌚 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌸𑍍𑌯𑌰𑍇𑌖𑌾 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 ।
𑌉𑌚𑍍𑌚𑌾𑌤𑍍 𑌕𑌾𑌕𑌸𑌾𑌯𑌾𑌵𑌤𑍍 𑌚𑌤𑍁𑌸𑍍𑌤𑌾𑌲𑌮𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௩ ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌕𑍇𑌸𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌃 𑌶𑍀𑌰𑍍𑌷𑍇 𑌸𑌮𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌤𑍍𑌰𑌯𑌃 ।
𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚𑍈𑌕𑌮𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌕𑍇𑌸𑌰𑌕𑌃 𑌛𑍇𑌦𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌕𑌾𑌕𑌸𑌾𑌵𑌧𑌿 ।
𑌕𑌾𑌕𑌸𑌾𑌯𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌕𑍇𑌸𑌰𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃 ॥

𑌉𑌚𑍍𑌚𑌕𑍇 𑌚 𑌤𑌥𑌾 𑌕𑍇𑌶𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌦𑍀𑌰𑍍𑌘𑌕𑌾𑌃 ।
𑌤𑌰𑌙𑍍𑌗𑌿𑌤𑌾𑌵𑌨𑌤𑌾𑌃 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌃 𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌾𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌃 ॥

ப்ரோதத்திலிருந்து கடைவாய் வரையிலும் "ஆஸ்யரேகை" (வாயின் அமைப்பில் கோடிட்டாற் போல் காணப்படும் பகுதி) ஏழங்குலம். உச்சந்தலையிருந்து காகஸாவரை நான்கு தாளம் அளவாம். "காகஸா" என்பது திமிலின் இருபுறங்கள். நான்கு தாளம்— 48 அங்குலம். (23)

பிடரிமயிர் உள்ள இடம் தலையில் மூன்றங்குலம் அகலமிருக்கும். நடுவில் நாலங்குலமும் ஓரத்தில் ஓரங்குலமுமிருக்கும். (24)

குதிரையின் ஸ்கந்தத்தில் (தோள் போன்ற பாகம்) காகஸா வரை, பிடரிமயிரைக் கத்தரித்து விடவேண்டும். ஆனால் காகஸாவில் பிடரிமயிர்கள் நீளமுள்ளனவாக இருத்தல் வேண்டும். (25)

தலையிலுள்ள மயிர்களின் நீளம் பன்னிரண்டங்குல மிருக்க வேண்டும். அலைபோல் அசைந்தசைந்து அழகுற்று விளங்குபவை யாகவும், அடர்த்தியாகவும் வழவழப்பாகவும் ஒன்றோடொன்று படிந்து ஒற்றுமையுடன் கவர்ச்சிகரமாகவும் இவை இருக்கவேண்டும். (26)

𑌨𑌿𑌗𑌾𑌲𑌾𑌤𑍍𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾 𑌤𑌾𑌲𑌦𑍍𑌵𑌯𑌾𑌯𑌤𑌾 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌤𑍍𑌰𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌮𑌪𑌿 𑌵𑌾𑌜𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌦𑍇𑌶𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑌃 𑌷𑌟𑍍𑌤𑌾𑌲𑌾𑌃 𑌸𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌤𑍍𑌰𑌯𑌃 ।
𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌮𑌧𑍍𑌯𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑌃 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ॥ ௨௮ ॥

𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌬𑌨𑍍𑌧𑌪𑌰𑍀𑌣𑌾𑌹𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑌾𑌲𑌶𑍍𑌚 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌃 ।
𑌵𑌕𑍍𑌷𑍋𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌂𑌮𑌿𑌤𑌃 ॥ ௨௯ ॥

𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌷𑍋𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌵𑌕𑍍𑌷𑌃𑌕𑌾𑌕𑌲𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௩௰ ॥

𑌤𑌥𑌾 𑌚𑌰𑌣𑌯𑍋𑌰𑍍𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌦𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।

"நிகாலம்" என்பது குதிரையின் நெஞ்சுக்குழி உள்ள இடம். அதிலிருந்து தோள்வரை உள்ள கழுத்து இரண்டு தாளம் (24 அங்குலம்) அளவுள்ள தாம். இதனகலம் மூன்றங்குலம். எல்லா வகையான குதிரைகளுக்கும் இது ஒரே விதமாயிருக்கும். (27)

குதிரையின் தோள் உள்ள இடத்தின் சுற்றளவு ஆறுதாளம், மூன்றங்குலம். (75 அங்குலம்) தோளின் மத்திய பாகத்தின் சுற்றளவு 54 அங்குலமாம். (28)

கழுத்து கூடுமிடத்தில் சுற்றளவு மூன்று தாளம் ஒன்பதங்குலம். (45 அங்குலம்). மார்பின் அகலம் பன்னிரண்டங்குலம். (29)

மார்பின் நீளம் பதினெட்டங்குலம். மார்புக்கும் "காகலா" என்று வழங்கப்படும் பகுதிக்கும் இடையிலுள்ள பகுதியினளவு நாற்பத்திரண்டங்குலம். (30)

கால்களின் நீளமும் நாற்பத்திரண்டங்குலமேயாம். பாஹு— என்பது, மானிடர்களுக்குத் தோளிலிருந்து முழங்கை வரையில் உள்ள கையின் பகுதி, "புஜம்" எனப்படுவது. குதிரைக்கும் இதே

[illegible] त्रयं प्रोक्तं [illegible] ॥

बाहुमूलपरीणाहस्त्रिंशदङ्गुलसंमितः ।
बाहुमध्यपरीणाहो वितस्तिद्वयसंमतः ॥ ३२ ॥

[illegible] अष्टादशाङ्गुलः ।
अष्टादशाङ्गुलो [illegible] ॥ ३३ ॥
[illegible] ।
[illegible] षडङ्गुलम् [illegible] ॥ ३४ ॥

போன்ற பகுதி உண்டல்லவா? அதன் நீளத்தினளவு "பாஹா தைர்க்யம்" என்று இங்கு கூறப்படுகின்றது. பதினெட்டங்குலம் இதன் நீளம். (31)

மேலே கூறப்பட்ட புயத்தின் அடிப்பறத்தில் அதன் சுற்றளவு முப்பது அங்குலம். புயத்தின் மத்தியில் அதன் சுற்றளவு இரண்டு * "விதஸ்தி" களைக் கூட்டி வரும் அளவாம். (32)

புயத்தின் நுனியில் அதன் சுற்றளவு பதினெட்டங்குலம். முழங்காலினுடைய சுற்றளவும் பதினெட்டங்குலமேயாம். நளகம் வரையிலுள்ள கெண்டைக்காலின் நீளம் பத்தொன்பதங்குலம். அதன் சுற்றளவு பன்னிரண்டு அங்குலமாம். குதிரைகளுக்கு, "பயிஹஸ்தம் அல்லது வலிஹஸ்தம்" எனப்படும் உறுப்பொன்றுண்டு. கால்களின் நுனியில் குளம்புக்கு மேல் கணுக்கால் சந்திப்பின் முன்புறமே இப் பெயருள்ளதாம். இதன் நீளம் ஆறங்குலம். (33-34)

---

* "[illegible]"
(சில்பரத்நம்- முதல்பாகம் 2—9)

என்னும் சுலோகத்தில், "பன்னிரண்டங்குலம் நீளம் விதஸ்தியின் அளவாகக் கூறப்பட்டுள்ளது.

வஸ்திஹஸ்தபரீணாஹோ ஹ்யஷ்டாதஶாங்குல: ।
குஷ்டிகாயாஸ்ததோ தைர்க்யம் ஷடங்குலமுதீரிதம் ॥ ௫௫ ॥

குஷ்டிகாயா: பரீணாஹோ விம்ஶத்யங்குலஸம்மித: ।
குரதைர்க்யம் ஸமாக்யாதம் ஷடங்குலமிதம் புதை: ॥

குரேஷு பரிணாஹோ விம்ஶத்யங்குலஸம்மித: ।
ப்ருஷ்டப்ரதேஶதைர்க்யஞ்ச சதுஸ்தாலமுதாஹ்ருதம் ॥

கக்ஷ்யாதேஶபரீணாஹ: ஶதாங்குலமிதோ பவேத் ।
யந்த்ரஸ்தானபரீணாஹ: ஸப்ததாலம் ஸப்தாங்குலம் ॥ ௫௮ ॥

இந்தப் பஸிஹஸ்தத்தின் சுற்றளவு பதினெட்டங்குலம். குஷ்டிகா— என்றொரு உறுப்பு குதிரைகளுக்குண்டு. கணைக்கால் சந்திப் பின் கீழ் அதையொட்டினவாறே இதுள்ளது. குளம்புகளுக்கு மேல். குளம்புத் தண்டு- என்றும் இதை வழங்குவர். இதன் நீளம் ஆறங் குலம். (55)

குஷ்டிகாவின் சுற்றளவு இருபதங்குலம். குளம்புகளின் நீளம் ஆறங்குலமென்று அறிவாளிகளால் கூறப்பட்டது. (56)

குளம்புகளின் சுற்றளவு இருபதங்குலமாம். குதிரையின் பின்புறம் (முதுகு) நாலு தாளம் நீளமுள்ளதாம். ஒரு தாளம் பன்னிரண்டங்குலம். 4X12. நாற்பத்தெட்டங்குலம் நீளமென்றவாறு. (57)

கச்சுகளிருக்குமிடத்தின் சுற்றளவு நூறங்குலம். ஏந்த்ரம் உள்ள இடத்தின் சுற்றளவு ஏழுதாளம் ஏழங்குலம். தொண்ணூற்றோரங்குலமென்றபடி. ஏந்த்ரம்— என்பது யோனி. (58)

ரந்த்ரோபரந்த்ரயோர்மத்யம்
விம்ஶத்யங்குலமாயதம் ।
த்ரிகப்ருஷ்டாந்தஸ்ய விஸ்தார:
த்ரிகுணை: ஷோடஶாங்குலை: ॥ ௩௯ ॥

ஜகநஸ்ய து விஸ்தார: ஷட்சத்வாரிம்ஶதங்குல: ।
ஸக்திப்ராந்தபரீணாஹ: தாலத்விதயஸம்மித: ॥ ௪௦ ॥

நவாங்குலாயதா ஸ்தூரா நாஹேந த்ரிம்ஶதங்குலா ।
உபரந்த்ராச்ச ஸமாரஸ்ய கோஶஸ்தாநம் து தாலத: ॥ ௪௧ ॥

ரந்த்ரத்திற்கும் உபரந்த்ரத்திற்கும் இடையிலுள்ள பகுதியின் நீளம் இருபதங்குலம். த்ரிகம் எனப்படுவது முதுகெலும்பின் அடிப்புறம். அஃதிருக்குமிடம் நாற்பத்தெட்டங்குலம் அகலம். (39)

ஜகநம் எனப்படுவது த்ரிகத்திற்குக் கீழ்ப்புறம் சதைப்பற்றுக உள்ள இரு புறங்கள், யோநி, இவைகளடங்கிய இடம். இதன கலம் நாற்பத்தாறங்குலம். துடைகளின் முனையில் அவற்றின் சுற்றளவு இரண்டு தாளமாம். (இருபத்துநாலங்குலம்). (40)

குதிரையின் பின்புறத்தில் முதுகின் மேல் "ஸ்தூரா" என்னும் ஒரு உறுப்பு உண்டு. பின்புறத்தில் முனையில் இருபுறத்திலும் தட்டையாய் சரிவான பகுதியே இது. இதன் நீளம் ஒன்பதங்குலம். சுற்றளவு முப்பதங்குலம். உபரந்த்ரம் என்னும் பகுதி ஒன்றுண்டு. சிறு துவாரம் என்பது "உபரந்த்ரம்" என்னும் சொல்லின் பொருள். பின்புறம் உள்ள துவாரத்தின் (ஆஸனத் துவாரம்) சமீபத்திலுள்ளதாம் இது. இதனின்றும் ஒரு தாளம் (பன்னிரண்டங்குலம்) தூரத்தில் "கோசத்தின்" இடம் உள்ளது. கோசம்—என்பது "உறை" என்று பொருள் படும். இங்கு குதிரைகளின் ஆண்குறியின் மேலுள்ள தோலைக் குறிக்கும். (41)

चतुरङ्गुलायतः कोशो बीजे त्वष्टाङ्गुलायते
स्थूरायाः पश्चात्पादजङ्घे च पलिहस्तकौ [illegible]

कुष्ठिके च पादशङ्कं कायस्य पौर्वस्त्यवत् ।
स्कन्धोऽङ्गुष्ठश्च मध्यश्च कृशं कार्यं प्रमाणतः ॥

स्तनस्थानं जघनं योषायाः (?) विस्तृतम् ।
बालपृष्ठं खुरान्तं वा चामरं चारुरूपकम् (?) ॥ ४४ ॥
यान्यनुक्तानि तान्यत्र कार्याणि शिल्पिना स्वतः ।

இந்த "கோசம்" நாலங்குலம் நீளமுள்ளதாம். முஷ்கங்களிரண்டும் (பீஜங்கள்) எட்டங்குலம் நீளமுள்ளவை. முற்பு கூறப்பட்ட ஸ்தூரா என்னுமிடத்திலிருந்து பின் கால்களிரண்டும் தொடங்கும். இந்த ஸ்தூராவின் நடு மத்தியிலிருந்து பின் கால்கள் தோன்றும். இவற்றில் "ஜங்கா" என்னும் கெண்டைக்காலும், பலிஹஸ்தம் எனப்படும் கணுக்கால் சந்தியின் முன்புறமும், குஷ்டிகா என்னும் குளம்புத் தண்டுகளும், இரண்டு (பின் கால்களிலுமிருக்கும்) குளம்புகளும், முன்புறம் இரண்டு கால்களில் அமைக்கப்பட்டது போலவே அமைக்கப்படவேண்டும். ஸ்கந்தம் எனப்படும் தோளும், அங்குஷ்டம் எனப்படும் (இங்கு குஷ்டம் எனப்படும் குளம்புத் தண்டும்— என்று இருத்தல் தகும்) பகுதியும், இடுப்பு எனப்படும் மத்திய பாகமும் அளவில் குறைந்ததாகவே அமைக்கப்பட வேண்டும். (43)

பெண்குதிரைகளுக்கு, மார்பும், புகளமும் (பின்புறம் பெண்குறி உள்ள இடம்) அகன்றதாக இருக்க வேண்டும். குளம்பின் பின்புறம் வரை தொங்கிக் கொண்டிருக்கும் வண்ணம் சாமரம் போன்ற அழகிய வால் அமைக்கப்பட வேண்டும். மற்றும் தனித்தனியாக எடுத்துக் கூறப்படாத உறுப்புக்களையும் சிற்பியானவன் தனது திறமையினால் செய்து முடிக்க வேண்டும். (44)

𑌅𑌥 𑌗𑌜𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

𑌗𑌜𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑌾𑌯 𑌶𑌿𑌲𑍍𑌪𑌵𑍇𑌦𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ ௪௫ ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌤𑌃 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌮𑍁𑌖𑌂 𑌤𑌤𑍍 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌗𑌜𑌾𑌨𑌾𑌂 𑌶𑌿𑌲𑍍𑌪𑌵𑍇𑌦𑌿𑌭𑌿𑌃 ॥

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌤𑌃
𑌶𑍀𑌰𑍍𑌷𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌨𑍀 𑌕𑍁𑌮𑍍𑌭𑍌 𑌦𑍍𑌵𑍌
𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑍌 𑌕𑍁𑌚𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑍌 ॥ ௪௭ ॥

𑌵𑌾𑌯𑍁𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌶𑍀𑌰𑍍𑌷𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌧𑍇𑌰𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑌤𑌃 ।
𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑍀𑌦𑌨𑍍𑌤𑌵𑍇𑌷𑍍𑌟𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 𑌮𑍁𑌖𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௪௮ ॥

யானையின் இலக்கணம்.

இனி, சிற்பிகளுக்கு நன்கு விளங்குமாறு யானையின் இலக்கணங்களைக் கூறுகின்றேன். (45)

சித்திரவேலைகளில் தேர்ந்த அறிவாளிகள் யானைகளின் வடிவத்தின் அமைப்பில் கேசாந்தம் முதலாக * "ப்ரதிமானகம்" வரையிலுள்ள பகுதியை "முகம்" என்று அறுதியிடுவர். (46)

கேசாந்தத்தின் மேல் உச்சந்தலை வரை "கும்பம்" (மத்தகம்) அமையும். உச்சந்தலையின் மேல், கொங்கைகள் போன்ற அமைப்புள்ள இரு மத்தகங்கள் அமைக்கப்படவேண்டும். (47)

வாயு கும்பத்திற்கும் உச்சந்தலைக்கும் சந்தியிலிருந்து ப்ரதிமானம் வரையில், † பிப்பலீ, ‡ தந்த வேஷ்டம் (உதடு) இவற்றால் சூழப்பட்டது "முகம்" என்று வழங்கப்படும். (48)

---

* ப்ரதிமானகம்— இரண்டு தந்தங்களின் மத்தியபாகம்.
† பிப்பலீ - காதின் முன்புறம் உள்ள பகுதி.
‡ தந்த வேஷ்டம் - உதடு.

त्रिधा विभज्य तत्तालांस्त्रीन् भागान् विकल्पयेत् ।
त्रिधा विभज्य तन्मुखं त्रितालं विकल्पयेत् ॥ ४९ ॥

यावत्प्रमाणकं नागं कर्तुमिच्छति शिल्पिराट् ।
चतुर्थांशविभाजिते तस्मिन् द्वादशांशस्त्वङ्गुलम् ॥

ऊर्ध्वादि लम्बसूत्राणि विन्यसेद्धि यथोचितम् ।
नागे त्रयोदश सूत्राणि तालान्तरेण विन्यसेत् ॥ ५१ ॥

तत्प्रमाणान्येव तिर्यक्सूत्राणि कारयेत् ।
नागादिदेवतानां कल्पनं सूत्रकोष्ठके ॥ ५२ ॥

அதன் தாளங்களை மூன்றாகப் பிரித்து மூன்று பாகங்களைச் செய்து கொள்ளவேண்டும். அந்த "முகம்" எனக் கூறப்பட்ட பாகத்தை மூன்றாகப் பிரித்து மூன்று தாளங்களை அமைத்துக் கொள்ளவேண்டும். (49)

யானையின் வடிவத்தை எவ்வளவு பெரிதாக அமைக்க ஸ்தபதி விரும்புகின்றாரோ அந்த அளவை நான்கு பாகமாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். அந்த நாலில் ஒரு பாகமே "தாலம்" என வழங்கப்படும். அதில் பன்னிரண்டிலொருபாகம் அங்குலமாம். (50)

லம்பஸூத்திரங்கள்— என்பவை மேலிருந்து நேராகக் கீழே தொங்கும் நூல்களாம். யானையின் வடிவத்தை ஓவியத்தில் தீட்ட விரும்புபவர்கள், நேராகத் தொங்கும் பதின்மூன்று ஸூத்திரங்களை ஒவ்வொரு தாளம் இடைவெளியுள்ளனவாகத் தொங்கவிட வேண்டும். (51)

அதேபோல் குறுக்காகச் செல்லும் ஸூத்திரங்களையும் அவற்றினூடே அமைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதனால் யானையின் வடிவத்திற்கான அமைப்பில் பல 'கட்டங்கள்' இடம் பெறும். அவற்றில் அமைக்கவேண்டிய உறுப்புக்களின் விவரம்

ஸவிம்ஶச்சதஸங்க்யா: கோஷ்டா: ஸ்யுஸ்தத்ர யே புந: |
தத்ர ஸம்ப்ரோக்தா வக்ஷ்யாமி ஹஸ்திநாமங்கஸம்ஸ்திதிம் ॥

ஸம்முகஸூத்ரம் பஹிர்ஷ்டம் யத் தத்ஸ்ருஷ்டம் ப்ரதிமாநகே |
நிதாநே(ந)ஸாயுஜ்யகும்பாக்ரே தந்தமூலே த்விதீயகம் ॥

பிந்த்வோர்மத்யே ஹஸ்திதேஶே ஸ்ருக்காந்தே த்ருதீயகம் |
கண்டே ச பிப்பலீதேஶே கும்பஹஸ்தாந்தே துரீயகம் ॥ ௫௫ ॥

அடுத்தாற்போல் தரப்படுகின்றது. இந்தக் குறுக்குஸூத்திரங்கள் பதினொன்றேயாம். இவைகளும் ஒவ்வொரு தாளம் இடைவெளியிலே அமைக்கப்பட வேண்டும். (52)

இவ்வாறு ஸூத்திரங்களை அமைத்துக் கொள்வதனால் 120 'கட்டங்கள்' ஏற்படும். இந்தக் கட்டங்களில் யானையின் உறுப்புக்கள் யாவற்றையும் பொருத்தமாக அமைக்க வேண்டும். இனி அவ்வகையைக் கூறுகின்றேன். (53)

முன்புறத்தில் வெளியிலுள்ள முதலாவது லம்பஸூத்திரம், ப்ரதிமானகம் எனப்படும் பகுதியில் இணைந்தவாறாக அமையும். இரண்டாவது லம்பஸூத்திரம், நிதானத்திலும் வாயுகும்பத்தின் துனியிலும் தந்தங்களின் அடிப்புறத்திலும் இணைந்தவாறிருக்கும். (54)

பிந்து (விது)* வின் மத்தியத்திலும், நெற்றியின் பெருகுவதற்கான ஒட்டையிலும் கடைவாய்களிலும் ஒட்டியவாறாக மூன்றாவது லம்பஸூத்திரம் அமையும். கழுத்திலும் "பிப்பலீ" இருக்குமிடத்திலும் மத்தகத்தின் ஓரத்திலும் நான்காவது லம்பஸூத்திரம் தொங்கவிடப் படும். (55)

---

* விது — என்பது இரண்டு மத்தகங்களினுடையவும் இடைப் பகுதி.

ஆஸநே கர்ணமத்₄யே ச புரோநக₂ஸ்ய ப்ருஷ்ட₂கே ।
த்₃விதீயே நக₂லக்₃நம் ச பஞ்சமம் ஸூத்ரகம் பதேத் ॥ ௫௬ ॥

ஸ்கந்தே₄ ச கர்ணகோணாக்₃ரே பஶ்சாந்நக₂ஸ்ய ப்ருஷ்ட₂கே ।
ஸூத்ரம் ஷஷ்ட₂ம் ப்ரலம்ப₃யேத் ஸூத்ரதத்த்வவிஶாரத₃: ॥

மத்₄யதே₃ஶே வபுர்நாக₃ஸ்ய லம்பஸூத்ரசதுஷ்டயம் ।
ஸூத்ராணாமுபயோகோ₃(அ)யமேவம் கதி₂தா ஸூத்ரவேதி₃பி₄: ॥

பேசகம் மாம்ஸபிண்டி₃கா வக்த்ராதௌ₃ ஸம்ஸ்தி₂தம் ।
தத்ர பஶ்சாந்நக₂ஸ்யாபி மத்₄யே ஏகாத₃ஶம் ஸ்ம்ருதம் ॥ ௫௯ ॥

ஆஸன (பாகன் உட்காருமிட)த்திலும் காதுகளின் மத்தியிலும் (காலின்) முன் நகத்தின் பின்புறத்திலும் இரண்டாவது நகத்திலும் ஒட்டியவாறாக ஐந்தாவது ஸூத்திரம் அமையும். (56)

தோளிலும் காதுகளின் மூலையிலும் காலின் பின்புறத்திலுள்ள நகத்தின் பின்புறத்திலும், ஸூத்திரங்களையறிந்தவர் ஆறாவது லம்பஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (57)

யானையின் வடிவத்தின் நடுப்பகுதியில் நான்கு லம்பஸூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். இவ்வாறாகப் பத்து ஸூத்திரங்களின் உபயோகம் கூறப்பட்டது. (58)

வாயின் தொடக்கத்திலுள்ள ஒருவகையான மாமிச உருண்டை "பேசக" மென்பது. அதிலும் பின்காலின் பின்புறத்திலுள்ள நகத்தின் மத்தியிலும் பதினோராவது ஸூத்திரம் தொங்கவிடப் படவேண்டும்.

த்ரயோதஶம் பஹிஃஷ்டஜ்ஞா பாஶ்வமூலே ஸாவலம்பிகம் |

மஸ்தகே வம்ஶபாஹ்யேஷு ச திர்யக்ஸூத்ரம் ப்ரதமம் || ௬௰ ||

வாயுகும்பஸ்ய ஶீர்ஷஸ்ய ஸம்யோகே பிப்பலீதேஶகஃ |
பேசகே ச வியாத்தவ்யம் ஸூத்ரம் த்விதீயகம் || ௬௧ ||

வாயுகும்பஸ்ய மத்யே ச நேத்ரகர்ணாக்ரதேஶகஃ |
பேசகஸ்யாதோபாகே ஸூத்ரம் கார்யம் த்ருதீயகம் ||

குறிப்பு:— இங்கு மூலத்திலுள்ள ஒரு சொல்லின் பொருள் நன்கு விளங்கவில்லை.

பன்னிரண்டாவது ஸூத்திரம் ஜகனத்தைத் தொட்டவாறாக அமையும். (ஜகனம் என்பது வால் தொடங்குமிடத்தின் கீழ்ப்புறம்) பதின்மூன்றாவது ஸூத்திரம், பின்புறம் வாயின் அடிப்புறத்தில் இணைக்கப்பட்டு வெளியில் தொங்கும். (59)

இனி குருக்கே செல்லும் ஸூத்திரங்களின் வழி சொல்லப்படுகின்றது. மத்தகத்திலும் முதுகெலும்பின் பின்புறத்திலும் (வெளிப்புறத்திலும்), முதலாவது குருக்கு ஸூத்திரம் செல்லும். (60)

வாயுகும்பமும் தலையும் ஒன்று சேருமிடத்திலும், காதில் பிப்பலீ உள்ள இடத்திலும், பின்புறம் வாயின் தொடக்கத்தில் பேசகத்திலும் இரண்டாவது குருக்கு ஸூத்திரம் செல்லும். (61)

வாயு கும்பத்தின் மத்தியிலும், கண் காது இவைகளின் முனையிலும், பேசகத்தின் கீழ்ப்புறத்திலும் மூன்றாவது குருக்கு ஸூத்திரம் செல்லும். (62)

[illegible] ‖ ௬௩ ‖

[illegible] ‖ ௬௪ ‖

[illegible] ‖ ௬௫ ‖

[illegible] ‖ ௬௬ ‖

முகத்தின் மத்தியிலும், கடைவாய் இருக்குமிடத்திலும், வாயின் நடுவிலும் நன்கு பொருந்தியவாறுக நான்காவது குறுக்குஸூத்திரத்தை ஓவியம் வரைவதில் தேர்ந்தவன் அமைக்க வேண்டும். (63)

அதன் கீழ்ப்புறத்தில் ஐந்தாவது குறுக்கு ஸூத்திரம் செல்லும். வயிற்றின் முடிவில் ஆறுவது குறுக்குஸூத்திரமும், புயங்களின் (யானையின் கால்களின் மேல் பாகத்தை புஜங்களாகக் கொள்ள வேண்டும்) மத்தியில் ஏழாவது குறுக்கு ஸூத்திரமும், எட்டாவது குறுக்கு ஸூத்திரம் முழங்காலின் மத்தியிலும் செல்லுமாறு அமைக்க வேண்டும். (64)

கெண்டைக்கால் நடுவில் ஒன்பதாவதும், கணுக்கால் முட்டுக்கு மேல் பாகத்தில் பத்தாவதும், காலின் கீழ்ப்புறத்தில் (தரையில் உள்ளங்காலில் தொட்டுக் கொண்டிருக்குமாறு) பதினோராவது குறுக்கு ஸூத்திரமும் அமைக்கப்படவேண்டும். (65)

கழுத்திலிருந்து வால் வரையிலுள்ள வயிற்றோடு இணைந்த உடலின் நீளம், முகத்தின் நீளம் போல் மும்மடங்கு இருக்கவேண்டும். அல்லது இதில் பதினறில் ஒரு பாகம் குறைவாக இருந்தாலும் இருக்கலாம்.

பாதாஸ்து காயஸமம் ப்ரோக்தம் புச்சம் ஜாநுவிலம்பிதம் ।
புச்சமூலே பரிணாஹம் தாலமாத்ரம் ப்ரகீர்த்திதம் ॥

ததக்ரே அர்த்தம் ஸ்தூலம் க்ரமாத் க்ஷீணம் ப்ரகல்பயேத் ।
ததக்ரம் வர்த்துலம் கார்யம் ஸ்தூலரோமாணி பார்ஶ்வயோ: ॥

ஶ்ரோத்ரகும்பாக்ஷி தந்தோஷ்ட ஹஸ்தாதிஷு விஶேஷத: ।
விக்னேஶவச்ச ஸர்வாங்கம் கர்த்தவ்யம் தேந ஹஸ்தின: ॥௬௯॥

கால்கள் உடம்பின் உயரத்திற்குச் சமமான உயரமுள்ளனவாக இருக்கவேண்டும். வால், கணுக்கால் முட்டுவரை தொங்குமாறு அமைக்கப்படவேண்டும். வாலின் அடிப்புறத்தில் அதன் சுற்றளவு ஒரு தாளம் (12-அங்குலம்) அளவுள்ளதாம். (67)

வாலின் நுனியில் அதன் சுற்றளவு, அதில் அரைப்பாகம் (½ தாளம்) உள்ளதாம். நுனியின் செல்லச் செல்ல வாலின் பருமன் படிப்படியாகத் தேய்ந்தாற் போல் குறைந்து கொண்டே செல்ல வேண்டும். வாலின் நுனி வட்டவடிவமாக இருக்கவேண்டும். வாலின் நுனியில் இருபுறங்களிலும் பருத்த ரோமங்களை (மயிர்களை) அமைக்க வேண்டும். (68)

யானையின் உடலமைப்பில் பொதுவாகச் சிலவற்றை இங்கு விளக்கினோம். இன்னும் இதில் விரித்துரைக்க வேண்டியவை பல இருக்கின்றன. முக்கியமாக, யானையின் காதுகள் இரண்டும், மத்தகங்களிரண்டும், கண்களும், தந்தங்களும், துதிக்கையும் மற்றைப் பிராணிகளுக்கு இருப்பது போலன்றிக்கே வேறு வகையில் அமைந்தவையாம். அவற்றை அமைக்கும் வகையை, முன்பு பிள்ளையாருக்கு (விநாயகருக்கு)க் கூறப்பட்ட முறையிலேயே அமைக்க வேண்டும். பொதுவில் யானையின் தோற்றம் மிகவும் கவர்ச்சிகரமாக இருக்குமாறு மிகுந்த முன் யோசனையுடன் நடந்து கொள்ளுதல் அவசியமானது. (69)

ஸாமாந்யாநி வாஹநாநி

தத்தத்தேவாநுரூபத: ।

யதாஶாஸ்த்ரம் ஸ்வபுத்த்யா ச

தத்தத்வாஹநகல்பநம் ॥ ௭௦ ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே வாஹநலக்ஷணம் நாம
ஏகவிம்ஶோऽத்யாய: ॥

இவ்வாறே அந்தந்த தெய்வங்களுக்கேற்ற வாகனங்கள் யாவற்றையும் அவற்றைப் பற்றி விளக்கிக் கூறும் சாத்திர நூல்களை ஆர்ந்து கவனித்துத் தனது சுயபுத்தியையும் உபயோகித்து, அழகிய கவர்ச்சிகரமான தோற்றமுள்ளனவாகத் திறமையுடன் செய்து முடிக்கவேண்டும். (70½)

சிற்பரத்தினம் இரண்டாம்பாகம் வாகனங்களின் இலக்கணத்தைக்
கூறும் இருபத்தோராவது அத்தியாயம்
முற்றும்.

குறிப்பு:— இருபத்திரண்டாவது அத்தியாயம் முதல் இருபத்தேழாம் அத்தியாயம் வரை உள்ள ஆறு அத்தியாயங்கள் அடுத்தாற் போல் 1 to 250 பக்கங்களில் அச்சாகியுள்ளன. அடுத்த பக்கத்தின் எண்ணிக்கை "345" என்றில்லையே என்று தயங்க வேண்டாம். வேறு அச்சகத்தில் அச்சிட்டதனால் அவ்வாறாயிற்று. நூலின் தொடர்பில் சிறிதும் மாறுபாடில்லை.

—(ப-ர்.)

ஶ்ரீ:

|| ஶ்ரீஶில்பரத்நே உத்தரபாகே ||

த்வாவிம்ஶோऽத்யாய:

அத த்யாநம் —

தத்ராதௌ ஶைவே ஸுகாஸநமூர்த்தி:—

ருஜ்வங்கம் ¹ராஜராஜாபம் பத்ரபீடோபரி ஸ்திதம் |
வாமாங்க்ரிம் ஶாயயேத் பீடே தக்ஷிணாங்க்ரிஞ்ச லம்பயேத் ||௧||

²ஜாமதஞ்ச (ஜ்யாயதம்) ஸுகாஸீநம்
ப்ரவாளஸத்ருஶப்ரபம் |
த்ரிநேத்ரஞ்ச ப்ரஸந்நாஸ்யம் ஸம்பந்நம்
ராஜவேஷதாரிண: ||௨||

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

இனி தியானத்தைப்பற்றிக் கூறப்போகிறோம். அதில் முதலில் சைவத்தில்

ஸுகாஸன மூர்த்தி — ௧-௯

நேரான உடம்புள்ளவர். ராஜராஜன் போன்றவர். பத்ரபீடத்தின் மேல் அமர்ந்தவர். இடது கால் பீடத்தில் மடக்கி கிடத்தப்பெற வேண்டும். வலது பாதம் தொங்க விடப்பெற வேண்டும். இவ்வாறு சுகமாக அமர்ந்திருக்கும் இம் மூர்த்தி (நேராக நிமிர்ந்திருப்பவர்). இவரைப் பவழம் போன்ற நிறமுள்ளவராகவும், மூன்று கண்களுள்ளவராகவும், அருள்ததும்பிய தெளிந்த முகமுள்ளவராகவும்,

---

(1) "ராஜஸம் ஸ்வம்" — என்றே மற்ற நூல்களில் உள்ளது. ரஜோகுணம் நிறைந்தவர் என்பது அதன் பொருள். ஆனால் இந்நூலில் மட்டும் பாடம் வேறாக உள்ளது.

(2) "ஜ்யாமதம்"—என்றும், "ஜ்யாயதம்"—என்றும் மற்ற நூல்களில் பாடம் உள்ளது. நேராகவும் நீண்டதுமான உடம்புள்ளவர் என்பது அதன் பொருள். ஆனால், இந்நூலில் "ஜாமதம்" என்றே உள்ளது. அதன் பொருள் விளங்கவில்லை.

வ்யாக்ராஜிநவரோபேத: துகூலவஸநாந்வித: ।
தக்ஷிணே பரஶும் வாமே க்ருஷ்ணம் ஹஸ்தே ஸமந்வித: ॥ ௩ ॥

அபயம் தக்ஷிணே வாமே [1]கடகம் ஸிம்ஹகர்ணகம் ।
தக்ஷிணே [2]மகராஸ்யம் வா குண்டலம் ஸிம்ஹமேவ வா ॥ ௪ ॥

பத்ரகுண்டம் து ந்ருத்தே வாமகர்ணே விஶேஷத: ।
அதவா கர்ணயோர்த்வயே வ்ருத்தகுண்டலகம் ந்யஸேத் ॥ ௫ ॥

ஜடாமகுடஸம்யுக்தம் நாநாபரணபூஷிதம் ।
யஜ்ஞோபவீதஸம்யுக்தம் ஸர்பகங்கணாந்விதம் ॥ ௬ ॥

ஏவம் ஸுகாஸநம் ப்ரோக்தம் ராஜராஷ்ட்ரஸுகாவஹம் ।

ரஜோகுணம் நிரம்பியவராகவும், சிறந்த புலித்தோல் அணிந்தவாறும், அழகிய வெண் பட்டாடை உடுத்தவாறும், வலது கையில் கோடாலி உள்ளவராகவும், இடது கையில் புள்ளி மானை ஏந்தியவாறும் அமைக்கவேண்டும். மற்றொரு வலக்கரத்தில் அபயதான முத்திரை. மற்றொரு இடது கையில் கடக முத்திரை அல்லது சிங்கத்தின் காது போன்ற முத்திரை. வலது காதில் மகரக் குழை அல்லது சிங்க உருவினதான குழை அணிவிக்கவேண்டும். இடது காதில் வட்டமான ஓலைச்சுருளை அணிவிக்கவேண்டும். அல்லது, இரண்டு காதுகளிலும் வட்டவடிவமான குண்டலம் அணிவிப்பதும் உண்டு. சடை முடியுடன் கூடியவர். பலவித மான அணிகளை அணிந்தவர். யக்ஞோபவீதம் (பூணூல்) அணிந்தவர். பெரிய பாம்புகளைக் கைவளையாக அணிந்தவர். இவ்வாறாக அமைக்கப்படும் ஸுகாஸன மூர்த்தி நாட்டுக்கும் அரசனுக்கும் சுகத்தைக் கொடுக்கக் கூடியவர்.

---

(1) கடக முத்திரை, ஸிம்ஹகர்ண முத்திரை இவற்றின் லக்ஷணத்தைத் தனியான அநுபந்தத்தில் விளக்கியுள்ளோம். ஆங்கு கண்டுகொள்க.

(2) மகரம்—முதலை அல்லது ஒரு வகை மீன்.

𑌅𑌥 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍇𑌶𑍍𑌵𑌰𑌃

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍇𑌶𑍍𑌵𑌰𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥ ௭ ॥

𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌂 𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌦𑍇𑌵𑍋 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀 𑌚 𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑍇 ॥ ௮ ॥

𑌶𑌾𑌯𑌯𑍇𑌦𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑍋𑌤𑍍𑌪𑌲𑌂 𑌕𑌰𑍇 ॥ ௯ ॥

𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌯𑌾𑌮𑌨𑌿𑌭𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 ¹𑌹𑌾𑌰𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑍇𑌯𑍂𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ॥ ௰ ॥

𑌵𑌾𑌮𑍋𑌰𑍁𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑍍𑌯 𑌤𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌨𑍍𑌦𑍍𑌯𑌾𑌵𑌰𑍍𑌤𑌂² 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌵𑌾 ॥ ௰௧ ॥

ஸோமாஸ்கந்தேசுவரர்—௭-௧௧

இனி அழகிய ஸோமாஸ்கந்தேசுவரரைப்பற்றிச் சிறப்பாகச் சொல்லப்போகிறேன். முன் கூறிய ஸுகாஸன மூர்த்தி எவ்வாறு அமைக்தனரோ, அவ்வாறே இந்த மூர்த்தியிலும் சிவன் அமைக்கப்பெறவேண்டும். ஒரே ஆசனத்தில் இறைவனது இடதுபுறம் பார்வதியும் வீற்றிருப்பார். தேவிக்கு வலது பாதம் பீடத்தின் மேல் மடங்கியவாறு கிடத்தப்பெறவேண்டும். இடது பாதம் கீழே தொங்க விடப்பெற வேண்டும். இவர் (தேவி) இடது கையில் வரதான முத்திரையும் வலது கையில் குவளை மலரும் தரித்திருப்பர். தேவியின் நிறம் அருகம்புல் போன்றது. தேவி எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பர். தேவியின் ஆடை சிவப்பு நிறமாயிருக்கும். முத்துமாலைகள், கிரீடவடிவமான மகுடம் இவற்றை அணிந்திருப்பர். அல்லது இடது தொடைக்கு வெளிப்புறம் பீடத்தின்மேல் இடது கையை வைத்தவாறும், வலது கையில் வளைந்த (காம்பையுடைய) குவளை மலரை தரித்தவாறும் தேவியின் கைகளை

---

(1) “𑌹𑌾𑌰𑌿” என்றும் பாடம்.
(2) 𑌵—என்றும் பாடம் உண்டு.

தேவீதேவயோர் மத்யே து ஸ்கந்தமேவ ப்ரகல்பயேத் ।
கேஶாந்தே வா (ஶி ? ஶி) ரோதேஶதா[1] கரண்டமகுடாந்விதம் ॥

உபயோர் ஹஸ்தயோ: புஷ்பம், வாமே வரதமேவ வா ।
கடகம் வாऽத தக்ஷே து ஸிம்ஹகர்ணம் ததாபி வா ॥ ௰௩ ॥

அதவா புஸ்தகம் தக்ஷஹஸ்தே வாமே பூர்வோக்தவத் ।
கடிஸூத்ரயுதம் நக்நம் ஸாமாம்ஸவலயாந்விதம் ॥

ஆஸீநம் வா ஸ்திதம் வாத ந்ருத்தம் வா ஸ்கந்த ஸமாசரேத் ।
ந்ருத்தம் சேத் பலம் வாமஹஸ்தே ஸ்ருத்வா ஸூசிகாம் ॥ ௰௫ ॥

அதவா வாமஹஸ்தஸ்ய பலம் த்யக்த்வா ப்ரஸாரயேத் ।
வக்ஷ்யமாணவிதாநேந ஸ்கந்தம் ந்ருத்தம் ஸமாசரேத் ॥ ௰௬ ॥

அமைக்கலாம். தேவிக்கும் இறைவனுக்கும் இடையில் கந்தனை எழுந்தருளப் பண்ணவேண்டும். முருகன் தனது சிரஸ்ஸில் கேசாந்தத்தில் (குழல்களுக்குமேல்) பேழையின் வடிவையொத்த மகுடம் அணிந்திருப்பர். இரு கைகளிலும் மலர்கள் வைத்திருப்பர். அல்லது, இடது கையில் வரதான முத்திரையுடன் இருப்பர். அந்த வலக்கையில் கடகம் அல்லது சிங்கத்தின் காதுபோன்ற முத்திரையுடன் இருப்பர். அல்லது வலது கையில் புத்தகமும், இடது கையில் முன் கூறியபடியும் (வரத முத்திரை) அமைக்கலாம். அரைநாண் கயிறு அணிந்திருப்பர். ஆடையின்றிக்கே இருப்பர். புயங்களில் தோள்வளைகள் அணிந்திருப்பர். வீற்றிருந்தவாறு, அல்லது நின்றவாறு, அல்லது கூத்தாடுகின்றவாறாகவும் கந்தனை அமைக்கலாம். அதில், கூத்தாடும் விதமாக அமைத்தால், இடது கையில் கனியைப் பிடித்தவாறும் மற்றொரு கை 'ஸூசி' முத்திரையுடன் உள்ளவாறாகவும் அமைக்கவேண்டும். அல்லது இடது கையில் கனி இல்லாமல் விரிந்தவாறும் அமைக்கலாம். முருகனுடைய நடனத்தைப் பின்கூறப்போகும் முறையில் அமைக்கவேண்டும்.

---

(1) த–என்றும் பாடம் உண்டு. "கேஶாந்தே நாஸிகோதேஶம்" என்று காச்யபீயத்தில் பாடம் உள்ளது.

(2) "ஸூசி" முத்திரையின் விளக்கம் அநுபந்தத்தில் காண்க.

𑌅𑌥 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌃

𑌕𑍇𑌵𑌲𑌂 𑌗𑍌𑌰𑍀𑌸𑌹𑌿𑌤𑌂 𑌆𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌕𑍇𑌵𑌲𑌂 𑌸𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௧௭ ॥

𑌅𑌭𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌹𑌰𑌿𑌣𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌟𑌙𑍍𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ॥ ௧௮ ॥

𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 [1]𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌽𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌶𑍇𑌖𑌰𑌮𑍍 ।
𑌵𑌾𑌮𑍇𑌨𑍍𑌦𑍁𑌶𑍇𑌖𑌰𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌸𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥ ௧௯ ॥

𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌵𑌦𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌾 𑌨𑌲𑌕𑌾𑌵𑌧𑍌 ॥ ௨௦ ॥

சந்திரசேகரர் [பிறைசூடி]—௧௭-௨௯.

சந்திரசேகர மூர்த்தி, "கேவலம்" என்றும், "பார்வதியோடு கூடியவர்" என்றும், "ஆலிங்கம்" என்றும் மூன்று வகைப்படுவர். அவற்றுள் 'கேவலம்' இரண்டு கால்களும் சமமாக உள்ள நிலையில் நின்றவாறு அமைக்கப்பெற வேண்டும். வலது கையில் அபயதான முத்திரையும், இடது கையில் வரதான முத்திரையும் அமைக்கவேண்டும். மற்றொரு இடது கையில் பெண்மானையும், மற்றொரு வலது கையில் மழுவையும் அமைக்கவேண்டும். இவர் சடைமுடியுடன் கூடியவர். வலது புறத்தில் பாதி (பிறைச்)சந்திரனை அணிந்திருப்பர். அல்லது இடது புறத்திலும் மேற்படி சந்திரனை அமைக்கலாம். பவழம்போன்ற சரீரகாந்தி யுடையவர். மூன்று திருக்கண்களுடையவர்; அழகிய முகமுள்ளவர். எல்லா அணிகளும் அணிந்திருப்பர். பொன்னிறமான ஆடை அணிந்திருப்பர். இரு புறங்களிலும் வஸ்திரத்தின் நுனி, நலகம் (முழங்காலினின்றும் கீழ்ச்செல்லும் நீண்ட ஒரே எலும்பு, கணைக்கால் வரை 'நலகம்' எனப்படும்)

---

(1) நூலில் உள்ளபடி "பாதிசந்திரன்" என்று பொருள் தரப் பட்டது. "பிறைச்சந்திரன்" என்பதுதான் அதன் கருத்து என்பதையும் ஞாபகப்படுத்துகிறோம்.

உபயோ: பார்ஶ்வயோ ரேவ மத்யகேஶாந்தமத்யத: ।
கேவலம் சைவ விக்யாதம், வாமே கௌரீஸமந்விதம் ॥ ௨௧ ॥

ஸிம்ஹாஸநே விஶேஷேண கௌரீஸஹிதம் விது: ।
தேவோ வரதஹஸ்தேந தேவீம் தத்பார்ஶ்வ ஸம்ஸ்திதாம் ॥ ௨௨ ॥

ஸ்த(ந)நாப்யந்தரே வாமபார்ஶ்வ மாலிங்கநம் கரம் ।
பார்ஶ்வஸூத்ரா த்வரே வாமபாஹும் ஆலிங்கநம் து வா ॥

தேவீ தக்ஷிணஹஸ்தேந ஶம்போர் தக்ஷிணபார்ஶ்வத: ।
கடிஸூத்ரோபரி ததா வாமே பார்ஶ்வஸ்திதா கரே ॥ ௨௪ ॥

அதவா ப்ராக்வதே வேஶோ தேவீ ரக்தோத்பலாந்விதா ।
கரே து தக்ஷிணே, வாமஹஸ்தே த்ருக் ப்ரஸம்பதேத் ॥ ௨௫ ॥

முடியும்வரை தொங்குமாறும் நடுவில் இரு தொடைகளின் மத்தியில் தோன்றுமாறும் அமைக்கவேண்டும். "கேவலம்" எனப்படும் சந்திரசேகரமூர்த்தி இவ்வாருக அமைக்கப் பெற வேண்டும்.

முன் கூறியபடி அதே சந்திரசேகரமூர்த்தி, இடதுபுறம் தனியான பீடத்தில் பார்வதியுடன் சேர்த்து அமைக்கப் பெற்ருல், அதை "கௌரீஸஹித சந்திரசேகரமூர்த்தி" என்பர். தனது பக்கத்தில் சார்ந்திருக்கும் தேவியை, கொங்கைகளுக்கும் நாபிக்கும் நடுவில், சிவபெருமான் தனது வரதக் (இடது) கையினுல் இடதுபுறமாக அணேத்த வாறு அமைக்கப்பட்டால் இவர் "ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தி" எனப்படுவர். "பார்ச்வ" ஸூத்ரத்திற்கு அடுத்தாற்போல் இடது புயத்தை ஆலிங்கனம் செய்த வாறும் அமைக்கலாம். இதில், தேவியின் வலது கையினுல் சிவனுடைய வலதுபுறத்தை அரைநாண் கயிற்றுக்குமேல் அணேத்தவாறும், அவளது இடது கையில் புஷ்பத்தைத் தரித்தவாறும் அமைத்தல் வேண்டும்.

ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தியை மற்ருெரு விதமாக வும் அமைக்கலாம். இதில், சிவன் முன்போலவே இருப்பர். தேவி, தனது வலது கையில் சிவப்பான குவளே மலரை

आलिङ्गनं चन्द्रमूर्तिं च त्रिधा गौर्या च कल्पयेत् ।
एवं पञ्चविधं प्रोक्तं चन्द्रशेखरमूर्तिकम् ॥ ௧௯ ॥

अथ वृषारूढमूर्तिः

दक्षिणं [1]सौवस्तिकं (पादं) वामेवाथ च कुञ्चितम् ।
वृषस्य मस्तकोर्ध्वे तु न्यसेद्वै वामकूर्परम् ॥
तस्य दक्षिणहस्ते तु वक्रदण्डं प्रदापयेत् ।
कनिष्ठाङ्गुलिपरीणाहं अग्रे वक्रत्रयान्वितम् ॥ ௨௰ ॥
लोहजं दारुजं वापि वक्रदण्डं प्रकीर्तितम् ।
परहस्तद्वये चैव टङ्कं कृष्णमृगं न्यसेत् ॥ ௨௧ ॥
जटामकुटयुक्तं वा जटाभारं च लम्बितम् ।
जटाबन्धशिरो वापि कर्ता शिल्पविशारदः ॥ ௨௨ ॥

வைத்திருப்பள். இடது கையைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பள். இப்படி ஆலிங்கன சந்திரசேகரமூர்த்தி மூன்று வகைப்படுவர். இவ்வாறாக, சந்திரசேகரமூர்த்தி ஐந்து விதம் கூறப்பட்டது. (கேவலம் ஒன்று, கௌரீ ஸஹிதம் ஒன்று, ஆலிங்கன சந்திரசேகரர் மூன்று, ஆக ஐந்துவிதம்).

விருஷபாரூடமூர்த்தி—௨௭-௯௨.

வலது காலை இயற்கையாகவும், இடது காலை மடக்கிய வாறும், எருதினுடைய தலையின்மேல் இடது முழங்கையை வைத்தவாறும் அமைக்கவேண்டும். இவர் தனது வலது கையில் வளைவுள்ள கோல் ஒன்று வைத்திருப்பார்; அது சுண்டுவிரல் பருமன் உள்ளதாயிருக்கும். அந்தக் கோலின் நுனியில் மூன்று வளைவுகள் இருக்கும். இந்த வளைவுள்ள கோல் உலோகத்தினாலும், மரத்தினாலும் அமைக்கப்படலாம். மற்ற இரண்டு கைகளிலும் மழுவையும், புள்ளிமானையும் அமைக்கவேண்டும். சடைமுடியுடன் கூடியவராகவோ, அல்லது கட்டவிழ்ந்து தொங்கும் சடைகளை உடையவராகவோ, அல்லது சடைகளைப் பின்புறம் முடிந்தவராகவோ

(1) மற்ற நூல்களில் "ஸ்வஸ்திகம்" என்று பாடமுள்ளது. ஆனால் இந்நூலிலே பெரும்பாலும் "ஸௌவஸ்திகம்" என்றே பாடமுள்ளது.

ஸர்வாபரணஸம்யுக்தம் ரக்தாபம் ரக்தவாஸஸம் ।
வாமே வா ஸவ்யகே வா தேவீ தக்ஷிணே வா விஶேஷத꞉ ॥ ௧௧ ॥

ஶம்புவத் தக்ஷிணம் பாதம் வாமபாதந்து குஞ்சிதம் ।
உத்பலம் தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தம் ப்ரலம்பிதம் ॥ ௧௨ ॥

அத ந்ருத்தம்

ந்ருத்தம் ¹அஷ்டஶதவிதம் தத்ராதௌ நவ கத்யதே ।
ரவிருத்ரதஶாம்ஶம் வா தந்மதம் ²ந்ருத்தநதம் ஸமேத꞉ ॥ ௧௩ ॥

ஹிக்காஸமம் ஸவ்யஹஸ்தாங்குல்யக்ரம் ஸமுத்ருதம் ।
தலஸ்ய மத்யே வா மத்யமாங்குல்யக்ரகே ॥ ௧௪ ॥

அவரவருடைய விருப்பம்போல் அமைக்கலாம். எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பர். சிவப்பு நிறமுள்ளவர். செந்நிறமான ஆடையணிந்திருப்பர். தேவி இடது புறத்திலாவது, அல்லது வலது புறத்திலாவது இருப்பள். இதில் வலதுபுறம் இருப்பதே சிறந்தது. தேவியின் வலது கால் [சிவனுடையது போன்றே] இயற்கை நிலையில் இருக்கும். இடது காலும் [முன்போன்றே] மடங்கியவாறு இருக்கும். வலது கையில் குவளை மலர் வைத்திருப்பள். இடது கை நேராகத் தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும்.

நடனமூர்த்தி—௧௧-௧௫.

சிவபெருமானுடைய நடனம் நூற்றெட்டு வகைப்படும். அவற்றுள், முதலில் ஒன்பது வகைகள் கூறப்படுகின்றன. ந்ருத்தத்தினுடைய உயர்ந்த நிலையும் தாழ்ந்த நிலையும் பன்னிரண்டு, பதினொன்று, பத்து அம்சங்களுக்குள் இருக்க வேண்டும். வலது கையின் விரல் நுனியை நெஞ்சுக்கு நேராக உயர்த்தவேணடும். இடது கையின் உள்ளங்கை மத்தியிலாவது அல்லது நடுவிரலின் நுனியிலாவது,

(1) மற்ற நூல்களில் "அஷ்டாதஶவிதம்" என்றே பாடமுள்ளது. 18 வகை என்பது அதன் பொருள்.

(2) "ந்ருத்தோந்நதம்" என்பது மற்ற நூல்களில் பாடம். நடனத்தின் உயரம் என்று பொருள்.

𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌪𑌰𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌵𑌹𑍍𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ।
𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌾𑌥𑌵𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌹𑍍𑌯𑌪𑌰𑍇 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌤𑌥𑌾 ॥ ௧௫ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌅𑌭𑌯𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 ।
𑌅𑌭𑌯𑍇 𑌕𑍋𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌵𑌲𑌯𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥ ௧௬ ॥

𑌦𑍋𑌲𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑌾 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌪𑌰𑌵𑌾𑌮𑌕𑍇 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑌜𑌾𑌨𑍋𑌰𑍍𑌵𑌾𑌮𑌜𑌾𑌨𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌷𑍋𑌡𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௧௭ ॥

𑌸𑍁𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌜𑌟𑌾𑌭𑌾𑌰𑌂 𑌨𑌾𑌨𑌾𑌨𑌾𑌗𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑌪𑌾𑌲𑌿𑌕𑌾𑌭𑌿𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌧𑌤𑍍𑌤𑍂𑌰𑌕𑍁𑌸𑍁𑌮𑍈𑌶𑍍𑌚 𑌭𑍁𑌜𑌙𑍍𑌗𑌮𑍈𑌃 ॥

𑌮𑌕𑍁𑌟𑌂 𑌚𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌽𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௯ ॥

அல்லது நடுவிரலின் நடுக்கணுவிலாவது நெருப்புச் சட்டியை அமைக்கவேண்டும்; அல்லது, அச்சட்டியில்லாமல் வெறுங்கையுடனும் அமைக்கலாம். மற்றொரு வலது கையில் உடுக்கையையும் அமைக்கவேண்டும். வலது முன் கையில் முன் கூறியபடி அபயதான முத்திரையை அமைக்க வேண்டும். அபய ஹஸ்தத்தில், கோஷ்டத்தின் (முற்பகுதியின்) நடுவில் பாம்பு வலயத்தை அமைக்கவேண்டும் (பாம்பு வளைபோல் சுற்றியிருப்பது). மற்றொரு இடது கையை, தகுந்தவாறு அசைந்தாடும் நிலையில் அமைக்க வேண்டும். ஊன்றி நிற்கும் காலின் முழங்காலுக்கும் இடது காலின் முழங்காலுக்கும் பதினாறு அங்குலம் இடைவெளியும் உயரமும் இருக்கவேண்டும். சடைகள் அழகாகச் சிதறிக் கிடக்கும். சடையில் பல்வேறு விதமான பாம்புகள் விசித்திரமாகச் சுற்றிக் கொண்டிருக்கும். தலையில் மகுடம் அணிந்திருப்பர். அதில் மண்டை ஓடுகளும், ஊமத்த மலர்களும், பாம்புகளும் இலங்கும். இம்மகுடத்தில், வலது புறம் அரைச்சந்திரனை அணிந்திருப்பர். தலையணி செந்தூரத்தினால் அலங்கரிக்கப்படும். ருத்திராக்ஷ மாலையை தொங்க விட்டுக் கொண்டிருப்பர். அவரது திருமேனி முழுதும்

ஸப⁴ஸ்மோத்³தூ⁴ளிதஸர்வாங்க³ம் கிஞ்சிச்ச ¹ப்ரஹஸிதாநநம் ।
யஜ்ஞோபவீதஸம்யுக்தம் வ்யாக்⁴ரசர்மாம்ப³ராந்விதம் ॥ ௨௰ ॥

த³க்ஷிணம் குஞ்சிதம் பாத³ம் ஹ்யபஸ்மாரோபரி ஸ்தி²தம் ।
சதுஸ்தாலேந கர்தவ்யோ(அ)பஸ்மாரம் ப்ரமாணத꞉ ॥ ௨௧ ॥

ஶம்போ⁴ ஸவ்யக³தம் தஸ்ய ஶிர꞉ கார்யமதோமுக²ம் ।
பாதௌ³ விகீர்ணஹஸ்தாப்⁴யாம் ²வ்யாளீஶீர்ஷோபமாந்விதம் ॥ ௨௨ ॥

வ்யாளம் வை வாமஹஸ்தே து த³க்ஷிணம் முத்³ரயாந்விதம் ।
ஸஸ்யஶ்யாமநிப⁴ம் கார்யமபஸ்மாரம் விஶேஷத꞉ ॥ ௨௩ ॥

பத்³மபீட²மத꞉ கார்யம் ஷோட³ஶாங்கு³லமுச்ச்²ரயம் ।
தச்சதுர்கு³ணவிஸ்தாரம் ப்ரபா⁴மண்ட³லஸம்யுதம் ॥ ௨௪ ॥

திருநீறு பூசப்பெற்றிருக்கும். சிறிது குறுநகையுடன்கூடிய முகத்தினராயிருப்பர். முப்புரி நூல் முதலியவை அணிந்திருப்பர். புலித்தோலை ஆடையாக அணிந்திருப்பர். வலது காலை மடக்கி அபஸ்மாரத்தின்மேல் பதியவைத்தவாறு நின்றிருப்பர். (அபஸ்மாரம் — சிவபெருமான் நடனமாடும் பொழுது, அவரது பாதத்தின் கீழுள்ள 'முயலகன்' எனப் படும் குறட்பூதத்தின் பெயர்) இந்த அபஸ்மாரத்தின் அளவு நான்கு தாலமாகும்; (தாலமானத்தின் விவரம் மற்றொரு இடத்தில் காண்க). இவ் வபஸ்மாரத்தின் தலை, சிவனது வலதுபுறம் கீழ் நோக்கியவாறு இருக்கும். கால்களும், மேல்தூக்கி விரிக்கப்பட்ட கைகளும் சர்ப்பம் படமெடுத்தது போன்றிருக்கும். இடது கையில் பாம்பைப் பிடித்திருக்கும்; வலது கை முத்திரையுடன் கூடியிருக்கும். இவ்வபஸ்மாரத்தை, சிறப்பாகப் பசுமையான பயிர் நிறமுள்ளதாகச் செய்யவேண்டும். அதன் கீழ் பதினாறு அங்குலம் உயரமுள்ள பத்ம பீடம் (தாமரை மலர் பீடம்) அமைக்க வேண்டும். அந்தப் பீடத்தைப்போல் நான்கு மடங்கு அகலமுள்ள (வட்டமான) பிரபையுடன் கூடியவர். இங்கு

(1) 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்' அப்பர் திருவிருத்தம் 6–4.

(2) "மாளி" என்னும் மிருகம் பாய்கின்ற வகையில் இருக்கும் கூறும் பொருள்.

ரவிபிம்பவத்வ்ருத்தஞ்ச ப்ரபாபிம்பம் ப்ரகல்பயேத் ।
தத்ர வாமே து பார்ஶ்வே து தேவீம் ப்ராகுக்தவிதிநா காரயேத் ॥ ௪௫ ॥

ஏதத் ஸர்வஸ்ய ப்ரதமம் ந்ருத்தம் ஸர்வலோகஹிதாவஹம் ।
தஸ்யைவ தக்ஷிணே பார்ஶ்வே ஜடாக்ரே ஜாஹ்நவீம் ந்யஸேத் ॥ ௪௬ ॥

ஷோடஶாங்குலமுத்ஸேதம் தேவஸ்ய ஶாங்குலேந து ।
ஸ்த்ரீணாம் துல்யோந்நதாம் தேவீம் ஹ்ருதி பத்தாஞ்ஜலிஸம்யுதாம் ॥

ஏவம் ஜாஹ்நவிஸம்யுக்தம் ந்ருத்தம் த்விதீயகம் ।
தஸ்யைவ வாமபாதம் து அபஸ்மாரோபரி ஸ்திதம் ॥ ௪௭ ॥

உத்த்ருதம் தக்ஷிணம் பாதம் த்ருதீயம் ந்ருத்த(ந்ருத்)மாசரேத் ॥
ஶேஷாணி ப்ரதமம் ப்ரதமோக்தவதேவ து ॥ ௪௮ ॥

அமைக்கப்படும் வட்டவடிவமான பிரபை சூரிய மண்டலம் போல் அமைக்கப்பட வேண்டும். அங்கு, முன் கூறியபடி இடது புறம் பார்வதி தேவியையும் அமைக்கவேண்டும். இதுவே, அனைத்துலகுக்கும் நலம் பயப்பதான முதல் வகை நடனம்.

இரண்டாவது நடனமூர்த்தி

இதே நடனமூர்த்தியில் சடையின் நுனியில் வலதுபுறம் கங்காதேவி வீற்றிருப்பள். சிவபெருமானுடைய அர்ச்சா விக்ரகத்தின் அங்குலத்தினால் பதினாறு அங்குலம் உயரமுள்ளதாக இந்தக் கங்காதேவியை அமைக்கவேண்டும். பெண்களுக்கேற்ற உயரமுள்ளவளாகவும், இதயத்தில் கை கூப்பியவாறாகவும் இந்தக் கங்காதேவி அமைக்கப்பெற வேண்டும். இவ்வாறு கங்கையுடன் கூடியது சிவபெருமானுடைய நடனங்களில் இரண்டாவதாகக் கருதப்படுகிறது.

மூன்றாவது நடனமூர்த்தி

அதே வடிவத்தில், அந்த அபஸ்மாரத்தின்மேல் இடது காலைப் பொருத்திவைத்து, வலது காலைத் தூக்கியவாறு அமைத்திடின், இது மூன்றாம் வகையான நடனமாகும்; மற்றவையெல்லாம் முதல் வகையைப் போன்றே இதிலும் அமைக்கவேண்டும்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[1] [illegible] ॥ ௫௧

[illegible] ।
[2] [illegible] ॥ ௫௨ ॥

நான்காவது நடனமூர்த்தி

இதில் சிவபெருமானின் நடனத்துக்கேற்ப, சடைகளும் சாய்ந்தவாறிருக்கும்; சடைமுடியணிந்தவாறாகவும், அல்லது மண்டலம்போல் வட்டவடிவமாக சடைகள் உள்ளவாறும் அமைக்கப்படலாம். மற்றவை முதல் நடனத்தில் போலவே கண்டுகொள்க.

ஐந்தாவது நடனமூர்த்தி

இதில் சிவனது தலைப்பாகை (கிரீடம்) க்குமேல், ஒரு மாத்திரை அளவுக்கு வலது காலை உயர்த்தவேண்டும்; இடது பாதம், வளைந்தவாறு அபஸ்மாரத்தின்மேல் பொருத்தப்படவேண்டும்; இந்த மூர்த்தியில் எட்டு(துணைக்) கைகள் உண்டு. அபய முத்திரை, சூலம், பாசக்கயிறு, உடுக்கை இவைகளை வலது கைகளிலும், கபாலம், தீச்சட்டி, தடி, யானைத் துதிக்கைபோன்ற கை, இவைகளை இடது கைகளிலும் தரித்திருப்பர். ஆறு அங்கங்களுடன்

---

(1) [illegible] என்று மற்ற நூல்களில் பாடம். எட்டு பூதங்களுடன் கூடியவர் என்பது பொருள்.

(2) [illegible] என்பது காச்யபீயத்திலுள்ள பாடம். இதிலும் "[illegible]" என்னுமிடத்தில் "[illegible]" என்றிருக்கக்கூடும். யானைத் துதிக்கையைப் போன்றதாக மேல் உபமானம் கூறப்படுவதனாலும் அடுத்த நடனமூர்த்தியில் [illegible] என்பதும் காணப்படுவதனாலும் இவ்வாறு [illegible]க்கப்படுகிறது.

ஷட்புஜ: ¹ஷடங்கஸம்யுக்தம் வாமே கௌரீஸமாயுதம் |
ஸ்கந்தோ பயாத் கராப்யாம் து மாது: ஸ்தநமுரோதராந் வா ||
க்ஷிப்ய வா கராப்யாம் வாமேநாபோஹ்ய க்ருதாஞ்ஜலிம் |
ஸபயம் கௌரீ கிரீஶஸ்யாஸ்யம் வீக்ஷ்ய அதிஸ்நேஹவிஸ்மயாத் ||

அபயம் டமருகம் சைவ வஜ்ரம் ஶூலம் ததைவ ச |
பாஶம் டங்கம் ததா தண்டம் நாகம் சைவ து தக்ஷிணே கரே ||௫௫

கஜஹஸ்தகரம் சைகம் வாமம் ஜாநுகராவலம்பிதம் |
அநலம் மிதுநம் சைவ வலயம் கேடகம் சைவ || ௫௬ ||

கூடியிருப்பர். இடது புறம் பார்வதியுடன் கூடியிருப்பர். கந்தன் பயத்தினால் தனது இரு கைகளாலும் தாயினுடைய கொங்கைகளையோ, மார்பையோ வயிற்றையோ அணைத்துக் கொண்டிருப்பர். அல்லது இடது புறம் இருகைகளையும் உயர்த்திக் கூப்பியவாறிருப்பர். இவ்வாறாக சிவபெருமானைப் பார்த்தவாறு, பயம், எல்லை கடந்த அன்பு, வியப்பு இவற்றுடன் கூடியவளாய் பார்வதி இருப்பள்.

ஆறாவது நடனமூர்த்தி

அபய முத்திரையையும், உடுக்கையையும், வஜ்ரம், சூலம் இவற்றையும், பாசக்கயிறு, மழு, தடி, பாம்பு இவற்றையும் வலக்கைகளில் தரித்திருப்பர். இடது புறத்து எட்டுக் கைகளுள், யானைத் துதிக்கை போன்றது ஒன்று. முழங்கால் வரை நீண்டு, வீசிய நிலையில் இருக்கும் மற்றொன்று. மற்ற கைகளில், நெருப்பு, மிதுனம் (இரட்டை),

---

(1) காச்யபீயத்தில் இவ்விடத்தில் 'ஷோடஶபுஜஸம்யுக்தம்' என்றுள்ளது. பதினாறு கைகளுள்ளவர் என்பது இதன் பொருள். இது பொருத்தமாக இல்லை. ஐந்தாவது நடன மூர்த்திக்குக் கைகள் எட்டுதான். நாட்டிய சாஸ்திரத்தின் வழியில் நடனத்திற்கான ஆறங்கங்களுள்ளவர் என்று இதற்குப் பொருள் கொள்ளக்கூடும். கை, கால், இடுப்பு, பக்கம், மார்பு, தலை என ஆறு உறுப்புக்கள் நாட்டியத்தில் முக்கியமானவைகளாகக் கூறப்பட்டுள்ளன. "ஶிரோஹஸ்தகடீவக்ஷ: பார்ஶ்வபாதஸமந்வித:" பரதநாட்டிய சாஸ்திரம் 8–13.

[illegible] ।
[illegible] 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 [illegible] ॥ ௫௭ ॥

𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚𑌾𑌷𑍍𑌟𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌵𑌿𑌕𑍀𑌰𑍍𑌣𑌜𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑌦𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ ௫௮ ॥

𑌉𑌦𑍍𑌧𑍃𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌬𑍍𑌜𑌾𑌗𑍍𑌰𑌸𑌮𑍍𑌮𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌭𑌯𑌂 𑌶𑍂𑌲𑌪𑌾𑌶𑍌 𑌚 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑌰𑍇 ॥ ௫௯ ॥

𑌕𑌪𑌾𑌲𑌂 𑌚𑌾𑌗𑍍𑌨𑌿𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑌹𑌸𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌗𑌜𑌹𑌸𑍍𑌤𑌂 [illegible] 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑌵𑍍𑌯𑌾𑌸𑌵𑍍𑌯𑌾𑌨𑍁𑌗𑌂 𑌤𑌥𑌾 ॥ ௬௰ ॥

𑌵𑌾𑌮𑍇 𑌗𑍌𑌰𑍀𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌕𑍍𑌤𑌂 𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍇𑌵 𑌹𑌿 ।
𑌤𑌦𑍇𑌵 𑌷𑌡𑍍𑌭𑍁𑌜𑍋𑌪𑍇𑌤𑌂 𑌅𑌭𑌯𑌂 𑌡𑌮𑌰𑍁𑌂 𑌤𑌥𑌾 ॥ ௬௧ ॥

வளையம், கொடி, மணி, மண்டையோடு இவற்றைத் தரித்திருப்பர். (இந்த ஆறாவது நடனத்தில் சிவபெருமானுக்குத் திருக்கைகள் பதினாறு). இதில், சிவனுடைய கால்கள், ஐந்தாவது நடனமூர்த்திக்குள்ளவாறே அமைக்கப்பெற வேண்டும்.

ஏழாவது நடனமூர்த்தி

மூன்று கண்களும் எட்டு கைகளும் இவருக்குண்டு. இவரது சடைகள் அழகாக நாற்புறமும் விரிந்து பரந்திருக்கும். இடது கால் வளைக்கப்பட்டு அபஸ்மாரத்தின் மேல் வைக்கப்பட்டிருக்கும். வலது பாதம், தாமரை மலரையொத்த கட்டைவிரலின் நுனியளவு உயர்த்தப்பட்டிருக்கும். நான்கு வலது கைகளில் முறையே அபய முத்திரை, சூலம், பாசம், உடுக்கை இவற்றை வைத்திருப்பர். இடதுபுறம் உள்ள கைகள் நான்கனுள் இரண்டு, மண்டையோடும் தீச்சட்டியும் ஏந்தியிருக்கும். மற்றொன்று வியப்பை உணர்த்தும் குறியில் அமைந்திருக்கும். மற்றொன்று, யானைத் துதிக்கைபோல் தொங்கிய நிலையில் இருக்கும். இது, வலதுபுறமும் இடதுபுறமுமாக ஊசலாடும் நிலையில் அமைந்தாலும் தகும். இடதுபுறத்தில் பார்வதி வீற்றிருப்பள். இவ்வகை ஏழாவது நடனமாகும்.

शार्दूलकृत्तिवासश्च करवामं विलम्बयन् ।
गजहस्तोपमं वामे वामश्च स्यात्तदूर्ध्वके ॥ ६२

पञ्चमस्य च षष्ठस्य नृत्तस्याक्षिद्वयं विदुः ।
तच्छेषाणां तु नृत्तानां नेत्रत्रयमुदाहृतम् ॥

वरदाभयं त्रिनेत्रं जटामण्डलसंयुतम् ।
अभयं डमरुं सव्ये ¹दक्षे गजहस्तवत् ॥ ६४ ॥

எட்டாவது நடனமூர்த்தி

இதில் முன் (ஏழாவது) போலவே எல்லாம் அமையும். கைகள் மட்டும் ஆறு. வலது மூன்று கரங்களில் அபய முத்திரை, உடுக்கை, சூலம் இவை விளங்கும். இடது மூன்று கைகளில் இரண்டு, மண்டையோடு வியப்புக்குறி இவற்றுடன் அமைய, மற்றொன்று யானைத் துதிக்கை போல் தொங்கவிடப்பட்டிருக்கும். இது எட்டாவது வகை நடனமூர்த்தியாகும்.

ஐந்தாவது ஆறுவது நடனங்களில் சிவபெருமானுக்குக் கண்கள் இரண்டும், ஏனையவற்றில் மூன்றுமாக அமைக்க வேண்டும்.

ஒன்பதாவது நடனமூர்த்தி

இதில் கைகள் நான்கு, கண்கள் மூன்று, பரந்து விரிந்த சடைகள்; அபய முத்திரை, உடுக்கை இவற்றை ஏந்திய வலது கைகள்; திச்சட்டியுள்ளதும், யானைத் துதிக்கை போன்று தொங்குவதுமான இடது கரங்கள். இதில்,

---

(1) இங்கு காச்மபீடத்தில் "வாமே" என்று பாடமுள்ளது. இடது புறத்தில் என்று பொருள். அதையொட்டியே பொருள் தரப்பெற்றுள்ளது. "தக்ஷ" என்னும் இப்புத்தகப் பாடப்படி வலது கையில் திச்சட்டியும் யானைத் துதிக்கை போன்ற அமைப்பும் வருகிறது. அது பொருத்தமாகத் தோன்றவில்லை. அதனால் கைவிடப்பட்டது. அபயமும் டமருவும் வலக்கை மேலேயே தொடர்ந்து வருகின்றன.

अपस्मारं विना पीठे वामाङ्घ्रिं कुञ्चितं स्थितम् ।
ततः पार्श्वस्थिता पीठे सव्यपादकनिष्ठिका ॥ ६५ ॥

तत्पादं कुञ्चितं यस्मात् नवमं नृत्तमीरितम् ।
गङ्गाधरमतो वक्ष्ये सर्वलोकसुखावहम् ॥ ६६ ॥

संस्थितं दक्षिणं पादं वामपादं तु कुञ्चितम् ।
विश्लिष्टं स्याज्जटाबन्धं वामे ईषन्नताननम् ॥ ६७ ॥

दक्षिणे पूर्वहस्ते तु वरदं [1]दक्षिणेन तु ।
देवीं वामाश्रितेनैव देवीमालिङ्ग्य कारयेत् ॥

காலின்கீழ் அபஸ்மாரம் இல்லை. பீடத்தின்மேல் இடதுகால் மடங்கியவாறு வைக்கப்பட்டிருக்கும். வலதுகால் சுண்டு விரல் அதற்கு முன் பீடத்தில் பொருத்தப்பட்டிருக்கும். வலது காலும் சாதுர்யமாய் மடங்கியவாறே அமைககப்பட வேண்டும். இதுவே ஒன்பதாவது வகை நடனமூர்த்தியாகும்.

கங்காதரமூர்த்தி—௬௬-௭௧

இனி, எல்லாவுலகுக்கும் சுகத்தைக் கொடுக்கும் கங்கா தரமூர்த்தியை விளக்கப் போகின்றேன்: இவருடைய வலது பாதம் நன்கு தரையில் ஊன்றியவாறு இருக்கும்; இடது பாதம் சிறிதளவு மடங்கியவாறு இருக்கும். சடை கட்டவிழ்ந்து சரிந்திருக்கும். முகம் இடது புறம் சற்று தாழ்ந்திருக்கும். இவருக்குக் கைகள் நான்கு. அவற்றில் வலது முன் கையில் வரதான முத்திரை இலங்கும். இது தேவியின் முகத்தைத் தொட்டவாறு அவளை அணைத்துக்

---

(1) கங்காதரமூர்த்திக்கு நான்கு கைகள் உண்டு. அவற்றுள் முன் கைகளிரண்டனுள் வலது கையில் வரதான முத்திரை. இடது கை தேவியை ஆலிங்கனம் பண்ணியவாறிருக்கும். மேல் கைகளிரண்டனுள் வலது கை கங்கையைத் தொட்ட வாறும், இடது கை மானை ஏந்தியவாறும் இருக்கும்.

காச்யபீயத்தில் 67வது படலத்தில் கங்காதரமூர்த்தி விளக்கப் பட்டுளது. வலதுகையால் தேவியின் மார்பைத் தொட்டுக் கொண்டும், இடதுகையால் அணைத்துக்கொண்டும், மற்றொரு வலக்கையால் கங்கையைத் தொட்டவாறும், மற்றொரு இடது கையால் மானை ஏந்தியவாறும் கூறப்பட்டுள்ளது. இந்நூலில் அதுபோல தெளிவாக இல்லை.

தக்ஷிணாபரஹஸ்தேந உத்த்ருத்ய த்ருணீஷவர்த்திகம் ।
ஸ்ப்ருஶேத் ஜடாகதாம் கங்காம் வாமேந த்ருத ம்ருகம் பவேத் ॥ ௬௯ ॥

தேவஸ்ய வாமபார்ஶ்வே து தேவீ விரஹிதாநநா ।
ஸுஸ்திதம் வாமபாதஞ்ச குஞ்சிதம் தக்ஷிணம் பவேத் ॥ ௭௰ ॥

ப்ரஸார்ய தக்ஷிணம் ஹஸ்தம் வாமஹஸ்தே ச புஷ்பத்ருக் ।
ஸர்வாபரணஸம்யுக்தௌ ஸர்வாலங்காரஸம்யுதௌ ॥

முநீந்த்ரம் தக்ஷிணே து பார்ஶ்வே து ஸந்நிவேஶிதம் ।
ஸுகாஸநா ப்ரவக்ஷ்யாமி ஶ்ரீகாரணாகமோதிதம் ॥ ௭௨ ॥

தக்ஷிணம் ஸுஸ்திதம் பாதம் வாமபாதம் து குஞ்சிதம் ।
தக்ஷிணே பூர்வஹஸ்தே து நாகஸூத்ரவஸாநகே ॥

கொண்டிருக்கும். மற்றொரு வலது கையைத் தலைப்பாகை அளவு உயர்த்திச் சடையில் இருக்கும் கங்கையைத் தொட்டவாறு இருப்பர்; [1]மற்றொரு இடது கை மானைத் தூக்கியவாறு இருக்கும். இறைவனது இடது புறத்தில் தேவி பிரிவாற்றாமையைத் தோற்றும் முகத்தினளாய்க் காட்சியளிப்பள். அவளது இடது பாதம் தரையில் நன்றாய் ஊன்றியிருக்கும். வலது பாதம் சற்று மடங்கியிருக்கும். வலது கையை நீட்டிய நிலையில் தொங்கவிட்டுக்கொண்டும், இடது கையில் மலரை ஏந்தியவாறும் இருப்பள். தேவியும் இறைவனும் எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பர்; எல்லா அலங்காரங்களுடனும் கூடி விளங்குவர். இவர்களுக்கு வலதுபுறம் முனிசிரேஷ்டர்களுடன் கூடிய பகீரதனை அமைக்க வேண்டும்.

திரிபுராந்தகமூர்த்தி—௭௨-௮௯

இனி எட்டு வகையான திரிபுராந்தக மூர்த்தியைப் பற்றிச் சொல்லப் போகிறேன். இவருக்கும் வலது கால் இயற்கையான நிலையிலும், இடது கால் சிறிது வளைந்தும் இருக்கும். (இவருக்குக் கைகள் நான்கு; அவற்றில்) வலது முன் கையில் நாகஸூத்ரத்தின் முடிவில் "ஸிம்ஹகர்ண"

---

(1) முதல் இடது கை தேவியை அணைத்தவாறிருக்கும். இந் நூலில் அது தெளிவாகக் கூறப்படவில்லை.

ஸிம்ஹகர்ணஞ்ச தத்ஹஸ்தம் பாணயுக்தமிஹேரிதம் |
வாமஹஸ்தே தநுர்த்ருத்வா கக்ஷாந்தோர்த்வம் ஸமர்ப்யதே ||

(1)கர்த்தரீ வரஹஸ்தௌ த்வௌ டங்கக்ருஷ்ணம்ருகாந்விதௌ |
டங்கஞ்ச தக்ஷிணே, வாமே க்ருஷ்ணஸாரங்கமேவ ஹி || ௭௫ ||

ஜடாமகுடஸம்யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் |
ப்ரவாளஸத்ருஶப்ரக்யம் வாமே கௌரீஸமந்விதம் || ௭௬ ||

இதம் ப்ரதமரூபகம்; த்விதீயஞ்ச தத: ஶ்ருணு |
ததைவ வாமபாதஞ்ச த்வபஸ்மாரோபரி ஸ்திதம் || ௭௭ ||

ஶேஷம் ப்ரதமதுல்யம் ஹி; த்ருதீயமத லக்ஷ்யதே |
ஸ்தாபிதம் வாமபாதஞ்ச தக்ஷிணம் குஞ்சிதம் பவேத் || ௭௮ ||

முத்திரையுடன், அம்பை நடுவில் பிடித்திருப்பர். இடதுகை அக்குளின் அளவு வரை உயர்த்தப்பட்டு வில்லைப் பிடித்தவாறிருக்கும். மற்ற இரண்டு கைகளும் "கர்த்தரீமுக" முத்திரையுடன் கூடியிருக்கும். அவ்விரண்டிலும் மழுவும் புள்ளிமானும் இலங்கும். வலது கையில் மழுவும், இடது கையில் புள்ளிமானும் இருக்கும். சடைமுடியுடன் கூடியிருப்பர். அணிகலன்கள் அனைத்தும் அணிந்திருப்பர். பவழம் போன்ற நிறமுடையவர். இடது புறம் பார்வதி தேவியும் இருப்பர். இவ்வாறான இந்த மூர்த்தி எட்டு வகை திரிபுராந்தகமூர்த்திகளுக்குள் முதலாவதாகும்.

இரண்டாவது திரிபுராந்தகமூர்த்தி

இம் மூர்த்தியிலும் எல்லாம் முதலாவதைப் போன்றே இருக்கும். இடது கால் மட்டும் அபஸ்மாரத்தின் மீது பொருத்தப்பட்டிருக்கும்.

மூன்றாவது திரிபுராந்தகமூர்த்தி

இவருக்கு இடது கால் இயற்கை நிலையிலும், வலது கால் மடங்கியவாறும் இருக்கும். மற்றதெல்லாம் முன் போலவே அமையும்.

---

(1) "கர்த்தரீ" முத்திரையின் விளக்கம் அநுபந்தத்தில் காண்க.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நான்காவது திரிபுராந்தகமூர்த்தி

இவருக்கும் இடதுகால் இரண்டாவது வகை போலவே அபஸ்மாரத்தின் மேல் பதிந்திருக்கும்; முன் கைகள் இரண்டும் முன்போலவே இதயத்தளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கும். இரண்டு கைளிலும் "கடக" முத்திரை காணப் படும். இடது கை மேல்நோக்கியும், வலது கை கீழ்முகமாகவும் இருக்கும். வலது கை அம்பின் அடியைப் பிடித்திருக்கும். இடது கை அம்பின் நுனியில் சம்பந்தப்பட்டிருக்கும். மற்ற வலது கையில் மழுவும், இடது கையில் வில்லும் இருக்கும். இடது கையில் புள்ளிமானையும் அமைக்கலாம். இவரது இடதுபுறத்தில் பார்வதி தேவியும் அமைக்கப்பெற வேண்டும்.

ஐந்தாவது திரிபுராந்தகமூர்த்தி

இவ்வாறே அபஸ்மாரம் இல்லாமல் அமைக்கப்படுவது ஐந்தாவது திரிபுராந்தக மூர்த்தியாகும்.

ஆறாவது திரிபுராந்தகமூர்த்தி

இவருக்குக் கைகள் எட்டு. வலது புறத்துக் கைகளில் முறையே, வரதான முத்திரை, அம்பு, பாசம், வாள் இவைகள் விளங்கும். இடதுபுறக் கைகள் நான்கில் முறையே, வில், ஆச்சரியக்குறி, கேடயம், கோழி இவற்றைத் தரித்

---

(1) இங்கு காச்யபீயத்தில் 'மான்' எந்தியவாறாகக் கூறப்படுகிறது'
"[illegible] ।
[illegible] ... ... காச்யபீயம் 67-39.

யதாஶோபம் ததா கார்யா வாமே கௌரீஸமாயுதம் ।
ஸவ்யே தக்ஷிணே பாணம் சக்ரம் ஶூலஞ்ச டங்ககம் ॥ ௮௪
டங்கம் வஜ்ரம் ததா வாமே தநுஷம் ஸூசிவிஸ்மயே ।
+ + + கேடாந்தி ஸவம் ச ஶங்கம் ததா பரே ॥ ௮௫ ॥
அஷ்டமம் கார்யா ஸ்யோபரி விஶேஷத: ।
தக்ஷிணாங்க்ரேஸ்ததா ஜாநும் வாமபாத தலம் பாத: ॥ ௮௬
பார்ஶ்வித்ரயஸம்யுக்தம் விஶேஷதஸ் யதோதிதம் ।
[1]ரதஸ்தா ஶாகாலோகே ஶாகாலம் கஜநாவகம் ॥ ௮௭ ॥

திருப்பர். எவ்வாறு அமைத்தால் அழகாக இருக்குமோ அவ்வாறு தக்கமுறையில் இவற்றை அமைக்கவேண்டும். இவரது இடதுபுறம் பார்வதியையும் அமைக்கவேண்டும்.

ஏழாவது திரிபுராந்தகமூர்த்தி

இவருக்குக் கைகள் பத்து. அவற்றுள் வலதுபுறத்துக் கைகளில் முறையே, அம்பு, சக்கரம், சூலம், மழு, வஜ்ராயுதம் இவற்றைத் தரித்திருப்பர். இடதுபுறக் கைகளில் வில், ஸூசீ முத்திரை, ஆச்சரிய முத்திரை, சங்கு, கேடயம் இவற்றைத் தாங்கியிருப்பர்; மற்றவையெல்லாம் முன் போலவே அமைக்கவேண்டும்.

குறிப்பு: இந்த ஏழாவது திரிபுராந்தக மூர்த்தியின் விவரணத்தில் இந் நூலில் சிறிது சிதைந்துள்ளது. காச்யபீயத்திலிருந்து எடுத்து அது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது, மொழிபெயர்ப்பில் மாத்திரம்.

எட்டாவது திரிபுராந்தகமூர்த்தி

இவரையும் இவ்வாறே (ஏழாவதைப் போன்றே) அமைக்கவேண்டும்; ஆனால், இவரது வலது காலின் முழங்காலைப் பூமியின்மேல் வைக்கவேண்டும்; இடது உள்ளங்காலை எதிரிலுள்ள தேரின் மேல் தக்கவாறு

---

(1) காச்யபீயம் 67வது படலம் த்ரிபுராந்தகமூர்த்தியைப் பற்றியது. அதில் எட்டாவது த்ரிபுராந்தகமூர்த்தியைக் கூறுமிடத்தில்: "ரதஸ்தா ஶாகாலோகே ஶாகாலம் ரஜநாzzவகம்" என்றிருக்கிறது. அதையொட்டியே கருத்தும் தரப்பட்டுள்ளது. இந் நூலில் உள்ளபடி பொருள் விளங்கவில்லை.

𑌮𑍁𑌕𑍁𑌲𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍌 𑌦𑍍𑌵𑍌 𑌵𑍇𑌣𑍁𑌦𑌣𑍍𑌡𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌮𑍍 ॥
[1]𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾𑌂 [2]𑌪𑌦𑍍𑌮𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ।
𑌰𑌥𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍁𑌲𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌦𑍍 𑌵𑍃𑌷𑌭𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍 ॥ ௮௯ ॥

𑌅𑌥 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௯௰ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌗𑍌𑌰𑍀𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑌧𑍃𑌕𑍍 ॥
𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑍇 𑌤𑌥𑌾 ॥ ௯௧ ॥

அமைக்கவேண்டும். இந்தத் தேர் "முகுளத்துடன்" கூடியதாயிருக்கும். (முகுளம் — தேரின் முன்புறம் தேரோட்டி அமரும் இடம்). இந்த முகுளம் கயிற்றினால் சூழப்பட்டதாகயிருக்கும். முகுளத்தின் நடுவில் பிரம்மா வீற்றிருப்பார். அவருக்கு நான்கு முகங்கள், நான்கு கைகள். அவருடைய (பிரமனுடைய) வலது புறத்திலுள்ள இரு கைகளிலும், மூங்கில் தடியும், கமண்டலமும் விளங்கும். குண்டிகையையும், கடிவாளத்தையும் இடக் கரங்களில் தரித்திருப்பார். தேர்த் தட்டின்கீழ் வெண்மையான எருது இருக்கும்.

கல்யாணமூர்த்தி — ௯௰-௱௨

இனி, எல்லாவிதமான நன்மைகளையும் கொடுக்கக் கூடிய கல்யாணமூர்த்தியின் இலக்கணம் கூறப்படுகிறது. இவருடைய இடது கால் இயற்கையான நிலையில் நன்கு பொருந்தியிருக்கும்; வலது கால் மடங்கியிருக்கும். இவர் நான்கு கைகள் உடையவர். வலது முன்கை தேவியின் வலது கையைத் தாங்கியிருக்கும். இடது முன்கை வரதான முத்திரையுடன் விளங்கும். மற்ற இரண்டு கைகளில், வலது

---

(1) குண்டிகை என்பது கமண்டலத்தின் வகையைச் சார்ந்ததே. வலது கையில் கமண்டலமும், இடது கையில் குண்டிகையும், தரித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. காச்யபீயத்திலும் இவ்வாறே உளது.

(2) பத்மபாசம் எனப்படுவது தாமரை மலர்களினால் நிருவப்பட்ட பாசம் என்று பொருள் கொள்ளப்பட்டு கடிவாளம் எனப் பட்டது.

[1] தக்ஷிணே வரதம் வாபி கட்யாம் க்ருஷ்ணம்ருகம் வரம் ।
ஜடாமகுடஸம்யுக்தம் ஸர்வாபரணஸம்யுதம் ॥ ௩௨ ॥
ப்ரவாளவர்ணஸங்காஶம் [2] தேவ்யஸ்ய விஶேஷதஃ ।
[3] தத்ர ஶ்யாமநிபா தேவீ ப்ராகுக்தமாநஸம்யுதா ॥ ௩௩ ॥
உத்பலம் வாமஹஸ்தே து த்ருத்வா தக்ஷிணஹஸ்தகம் ।
ஶம்போர் தக்ஷிணஹஸ்தேந ஸாக்ருஹ்யம் லஜ்ஜயாஸமந்விதம் ॥ ௩௪ ॥
பார்ஶ்வே து ஶ்ரீ ஶ்ச பூமிஶ்ச ஸர்வாபரணபூஷிதா ॥
[4] ஹஸ்தாப்யாம் ஸம்ஸ்பர்ஶயேதாம் கௌரீம் தேவிகரத்வயே ॥ ௩௫

பின்கையில் கோடாலியையும், இடது பின்கையில் புள்ளி மானையும் தரித்திருப்பர். சடைமுடியுடன் கூடியிருப்பர். அணிகலன்கள் யாவும் அணிந்திருப்பர். இவரது திருமேனி பவழம்போன்ற நிறமுள்ளதாயிருக்கும். அங்கு தேவி கருமை நிறமுள்ளவளா யிருப்பள். தேவியின் (மூர்த்தி) அளவுகள் முன்போலவே அமைக்கப்பெறவேண்டும். தேவி யினுடைய இடது கையில் குவளை மலர் இருக்கும். வலது கையை மிகுந்த வெட்கத்துடன் சிவபெருமானுடைய வலது கையால் பிடிக்கப்பட்டிருக்கும்படி அமைக்கவேண்டும். இலக்குமியும் நிலமகளும் எல்லா ஆபரணங்களும் அணிந்து பார்வதி தேவியின் பின் நிற்பர். இவர்களும், தங்களது இரு கைகளாலும் பார்வதியின் இரு கைகளையும் தொட்டுக்

(1) வலது கையில் வரத முத்திரை அல்லது கோடாலி என்றி யிருப்பதாக காச்யபீயத்திலுள்ளது.
.... வரஹஸ்த அபயோபேதம் ।
தக்ஷிணே வரதம் வாம.......................... । காச்ய. 68–5.

(2) தேவ்யஸ்ய என்னுமிடத்தில் 'வாமபார்ஶ்வகஸ்ய' என்று காச்ய பீய பாடமுளது. "அவருடைய பக்கத்தில்" என்பது பொருள்.

(3) தத்ர ஶ்யாமே என்னுமிடத்தில் "ஸஸ்யஶ்யாமே" என்பது காச்ய பீய பாடம். பயிர்போல் கருமையான நிறம் என்று பொருள்.

(4) இங்கு காச்யபீயத்தில் "ஹஸ்தாப்யாம் ஸம்ஸ்பர்ஶ தேவீ கௌரீபார்ஶ்வஸ்த கரிம்ஸிஜ:" என்று பாடம் உளது. அதைத் தழுவிய பொருள் சற்றுப் பொருத்தமாக இருக்கும்போல் காண்கின்றது.

देवाग्रे कारयेत्कुण्डं तत्र होमं प्रजापतिः ।
संस्थाप्य स्तनसीमान्तं प्रजेशस्योदयं तथा ॥

चतुर्भुजं चतुर्वक्त्रं सर्वाभरणभूषितम् ।
¹प्राङ्मुखौ देवि देवेशौ देवी देवस्य दक्षिणे ॥

दक्षिणाभिमुखो विष्णुः होमकुण्डस्योत्तरस्थितः ।
संस्थाप्य ²नाभिसीमान्तं श्रेष्ठं स्तनतलान्तकम् ॥

तन्मध्ये नवधा भक्त्वा पूर्ववन्नवधा स्थितम् ।
श्यामवर्णं चतुर्बाहुं शङ्खचक्रे परे करे ॥ ४४ ॥

கொண்டிருப்பர். இறைவனுக்கெதிரில் ஹோமம் பண்ணுவதற்கான குண்டம் அமைக்கப்படவேண்டும். அதில் ஹோமம் செய்வதாக "நான்முகன்" அமைக்கப்படவேண்டும். நான்முகனுடைய (பிரமனுடைய) உயரம் சிவபெருமானுடைய மார்பளவுள்ளதாக இருத்தல் வேண்டும். அவர் (நான்முகன்) நான்கு கைகளும், நான்கு முகங்களுமுள்ளவராகவும், எல்லா அணிகளாலும் அலங்கரிக்கப் பெற்றவராகவுமிருப்பர். (இவர் வடக்குமுகமாக இருக்க வேண்டுமென்று காச்யபீயத்தில் கூறப்படுகிறது). தேவனும் தேவியும் (சிவனும் பார்வதியும்) கிழக்கு முகமாகவிருப்பர். இறைவனுடைய வலதுபுறத்தில் தேவி இருப்பாள். ஹோம குண்டத்தின் வடபுறத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணு, தென்திசையை நோக்கியவாறாக இருப்பர். சிவனுடைய நாபியளவு (உயரமுள்ளவராக) விஷ்ணுவை அமைப்பது சிறந்தது. அவருடைய மார்புவரை உயர்ந்தவராக அமைப்பது நடுத்தரமானது. இவ்விரண்டுக்குமிடையில் உள்ள பகுதியை ஒன்பது விதமாகக் கூறுசெய்து ஒன்பது அளவு உயரத்தில் முன்கூறியபடி விஷ்ணுவை அமைக்கலாம். கருத்த நிறமுள்ளவராக விஷ்ணு இருப்பர். கைகள் நான்கனுள் மேலிரண்டு கைகளில் சங்கும், சக்கரமுமேந்தியிருப்பர்.

---

(1) அக்னி ஜ்வாலையை நோக்கியவாறென்று காச்யபீயத்திலுளது

(2) "நாஸி ஸீமாந்தம்" என்பது காச்யபீயப் பாடம். நாசி (மூக்கு) அளவு உயரம் உத்தமபக்ஷம்; மார்பளவு அதமம். இதன் மத்தியில் ஒன்பது அளவுகள் என்பது அதன் பொருள். காச்ய.பட–13

ஹிரண்யகரகேணாபி பரயுக்மஹஸ்தயோஸ்ததா ।
ஸம்க்ருஹ்ய வரதே ஹஸ்தே தத்³யா தா⁴ரகவத்³ப⁴வேத் ॥ ௧௦௦ ॥

அஷ்டௌ லோகேஶவித்³யேஶா: ஸித்³த⁴யக்ஷக³ணாத³ய: ।
ருஷயஶ்ச க³ந்த⁴ர்வா மாத்ருஶ்சாந்யதே³வதா: ॥ ௧௦௨ ॥

தத்தச்ச²க்திஸமோபேதா ஹ்ருத³யாஞ்ஜலிஸம்யுதா: ॥
ஸாஶ்சர்யமநஸோபேதா ஸம்வீக்ஷ்ய பரித: ஸ்தி²தா: ॥ ௧௦௨

அர்த⁴நாரீஶ்வரம் வக்ஷ்யே ஸுஸ்தி²தம் த³க்ஷிணாங்க்⁴ரிகம் ।
குஞ்சிதம் வாமபாத³ஞ்ச ஸர்வாப⁴ரணபூ⁴ஷிதம் ॥ ௧௦௩ ॥

மற்ற இரண்டு கைகளாலும் பொன்னாற் செய்யப்பட்ட கிண்டியினின்றும் (கமண்டலம்) நீரை எடுத்துக்கொண்டு வரத ஹஸ்தத்தில் (வரதான முத்திரையுடன் கூடிய கையில்) தாரை வார்த்துக் கொடுப்பவராக விஷ்ணுவை அமைக்க வேண்டும்.

எட்டு லோகபாலகர்கள் (இந்திரன் முதலானவர்கள்) கல்விக் கதிபதியான பிருகஸ்பதி முதலானவர்கள், சித்தர்கள், யக்ஷர்கள், கணங்கள் முதலியவர்; ரிஷிகள், கந்தர்வர்கள், மாத்ரு கணங்கள் (ஏழு) மற்றுமுள்ள தேவர்கள் இவர்களெல்லோரும் தங்கள் தங்களுடைய சக்தியோடுகூடியவராய், மார்பில் கூப்பிய இரு கரங்களை உடையவராய், பரபரப்புடன்கூடிய மனதை உடையவர்களாய், சிவபெருமானையும் பார்வதியையும் நோக்கிய வண்ணம் நாற்புறமும் நின்றவாறிருப்பர்.

அர்த்தநாரீச்வரர் — ௩௩-௩௫

இனி அர்த்த நாரீச்வரரைச் சொல்லப் போகிறேன். இவரது வலது கால் இயற்கையாக நன்கு பொருந்திய வாறும், இடதுகால் மடங்கியும் இருக்கும். அணிகள் எல்லாவற்றையும் அணிந்திருப்பர். இவரது இடது பாதி பார்வதி

வாமாயாம் பார்வதீரூபம் தக்ஷிணாயாம் மஹேஶ்வர: ।
அபயம் பரஶும் தக்ஷஹஸ்தே வாமே த்ருதம் ஸரோஜ: ॥ ௧௦௪ ॥

வ்ருஷஸ்ய மூர்த்நி விந்யஸ்தகோர்பரம் வாமதோ ஹர: ।
வாமஸ்யப்ரகோஷ்டகம் க்வசித் [1]கடகாமுத்ரிதம் ஸ்தித: ॥ ௧௦௫

கஜஹாரமூர்த்திகம் வக்ஷ்யே ஸர்வாபரணபூஷிதம் ।
பாஶஞ்ச கஜசர்மஞ்ச தக்ஷபார்ஶ்வகராந்விதே ॥ ௧௦௬ ॥

கஜஸ்ய ஶ்ருங்கம் சர்மஞ்ச வாமபார்ஶ்வ கராந்விதே ।
ஶூலஞ்ச டமருகம் பாஶம் கஜசர்மஞ்ச தக்ஷிணே ॥ ௧௦௭ ॥

வடிவமாயும், வலதுபாதி பரமசிவன் வடிவமாயும் இருக்கும். இவருக்குக் கைகள் நான்கு. வலது கைகள் இரண்டில் முறையே அபயமுத்திரையும் கோடரியும் தரித்திருப்பர். இடதுகைகளில் ஒன்றினுடைய முழங்கையை அழகாக எருதின் தலையின்மேல் வைத்திருப்பர். மற்றொரு அழகான இடது கையில் கடகமுத்திரையுடன் மலரைத் தரித்திருப்பர். இந்த மூர்த்தியில் அறியவேண்டிய மற்ற விசேஷங்கள் காச்யபீயம் 69வது படலத்தில் காண்க.

கஜஹார (யானையைக் கொன்ற) மூர்த்தி—௱௬-௱௰௭

இனி, யானையைக் கொன்ற மூர்த்தியைச் சொல்லப் போகிறேன். இவர் எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பர். இவருக்குக் கைகள் நான்கு அல்லது எட்டு. அவற்றுள் வலதுபுறம் இரு கைகளில் முறையே பாசத்தையும் யானைத்தோலையும் வைத்திருப்பர். இடதுபுறத்துக் கைகள் இரண்டில் யானையின் கொம்பையும், தோலையும். தரித்திருப்பர். அல்லது வலதுபுறம் நான்கு கைகளில் முறையே சூலத்தையும், டமரு, பாசம், யானைத்தோல் இவற்றையும்;

---

(1) காச்யபீயத்தில் 69-வது படலத்தில் அர்த்தநாரீச்வரரை நான்கு கைகளுடனும், ஆறு கைகளுடனும், இரண்டு கைகளுடனும் அமைக்கலாம் என்று கூறப்படுகிறது. நான்கு கைகள் உள்ள ஒரு வகையே இந்நூலில் காணப்படுகிறது.

(1) காச்யபீயத்தில் 70வது படலத்தில் கஜஹாரமூர்த்திக்கு நான்கு கைகள் அல்லது எட்டு கைகள் தான் சொல்லப்பட்டுள்ளன. அதற்கேற்ப விவரமும் தரப்பட்டுள்ளது. அதனால் இந்நூலிலும் நான்கு அல்லது எட்டு கைகளுள்ளவராகவே கூறப்பட்டு விவரமும் எழுதப்பட்டுள்ளது.

கஜஶ்ருங்கம் கபாலஞ்ச பாஶம் சர்ம ச வாமகை: ।
ஶம்போர் வாமாங்க்ரிபாதாதோ கஜமஸ்தகம் த்ருஶ்யதே ॥ ௧௦௯ ॥

மகுடஸ்யோபரிஷ்டாத்து கஜபுச்சம் ப்ரகல்பயேத் ।
[1]பார்ஶ்வயோர் கஜபாதாம்ஶ்ச யதாயோக்யம் து காரயேத் ॥

ப்ரபாமண்டலவச்சிஷ்டம் கஜசர்ம ப்ரகல்பயேத் ।
வ்யாக்ரசர்மாம்பரோபேதம் துகூலவஸநாந்விதம் ॥

ஸர்வாபரணஸம்யுக்தம் ரக்தவர்ணஸமந்விதம் ।
ஸாவஷ்டம்பம் வாமபாதம் கஜாஸுரஸ்ய மஸ்தகே ॥ ௧௧௧ ॥

உத்த்ருதம் தக்ஷிணம் பாதம் கக்ஷஸூத்ராந்தமேவ ச ।
கௌரீ ஸ்கந்தம் ஸமாதாய ஶம்போர் வாமே பயாந்விதா ॥

இடதுபுறமுள்ள நான்கு கைகளில் முறையே யானைக் கொம்பையும், கபாலத்தையும், பாசத்தையும், தோலையும் தரித்திருப்பர். சிவபெருமானுடைய இடதுகாலின் கீழ் யானையின் தலை காணப்படும். முடியின் மேற்புறத்தில் யானையின் வாலை அமைக்கவேண்டும். இருபுறங்களிலும் யானையின் கால்கள் கழுத்து இவைகளைத் தக்கவிதமாக அமைக்க வேண்டும். எஞ்சிய யானைத்தோலை ஒளிக்குவியல் சூழ்ந்திருப்பதுபோல் அமைக்கவேண்டும். இவர் புலித்தோலையும், வெண்பட்டையும் உடுத்திருப்பர். ஆபரணங்கள் எல்லாவற்றையும் அணிந்திருப்பர். மிகவும் சிவப்பான ஒளியுடன் கூடியிருப்பர். இவரது இடதுகால் யானை வடிவமான வீரனுடைய தலையின்மேல் நன்றாகப் பதிந்திருக்கும். வலதுகாலை கக்ஷஸூத்ரம் வரையில் மேலே தூக்கினவாறு அமைக்கவேண்டும். பார்வதி, சிவனுடைய இடதுபுறத்தில் அச்சமுற்றவளாய் சுப்பிரமணியனை அணைத்தெடுத்துக் கொண்டவாறிருப்பள். கஜஹாமூர்த்தியை (எட்டு கை உள்ளவரை வேறு வகையிலும் அமைக்க

---

(1) "பார்ஶ்வயோர்ஜயாயா:" என்பது காச்யபீய பாடம் காச்யபீயம் 70–9.

ஶூலம் க2ட்3க3ஞ்ச த3ந்தஞ்ச க3ஜசர்ம ச ।
த3க்ஷிணே, வாமகே கபாலஞ்ச கண்டாம் கேடகம் ததா2 ॥
[1]பூர்வம் க3ஜசர்மஞ்ச கௌபீனம் + வாமகே ।
[2]அத2 பாஶுபதம் வக்ஷ்யே சந்த்3ரஶேகரவத் ஸ்தி2தம் ॥ ௧௧௪
சதுர்பு4ஜம் த்ரிநேத்ரஞ்ச ஊர்த்4வகேஶம் மஹாதநும் ।
த3க்ஷிணே (அ)ப4யகம் ஶூலம் கபாலம் வாமகம் வரே ॥ ௧௧௫

ப்ரவாளஸத்3ருஶப்ரக்2யம் ஸர்வாப4ரணபூ4ஷிதம் ।
கங்காலமூர்த்திரூபம் வக்ஷ்யே பாத3யோ: பாது3காந்விதம் ॥
ஸ்வாபா4விகம் வாமபாத3ம் த3க்ஷிணம் க3மனோத்3யதம் ।
பாத3ம் கிஞ்சித் ஸமுத்3த்4ருத்ய கமனோத்3யுக்தவத் ஸ்தி2தம் ॥ ௧௧௬ ॥

லாம். அப்பொழுது சூலம், கத்தி, யானையின தந்தம்-தோல், இவற்றை வலது கைகளிலும், கபாலம், கேடயம், மணி, யானைத் தோல் இவற்றை இடது கைகளிலும் அமைக்க வேண்டும்.

பாசுபத மூர்த்தி — ௱௰௪-௱௰௫

இவர் சந்திரசேகரமூர்த்தியைப்போலவே நின்றவாறு இருப்பர். இவருக்குக் கைகள் நான்கு. மூன்று கண்கள், தலை மயிர்கள் மேல்நோக்கி நெறித்தவாறிருக்கும். பெரிய உடம்பு உள்ளவர். வலது கைகளில் அபயமுத்திரையும் சூலமும் தரித்திருப்பர். இடது கைகளில் கபாலத்தையும், வரதான முத்திரையையும் தரித்திருப்பர். பவழம்போன்ற நிறமுள்ளவர். எல்லா ஆபரணங்களும் அணிந்திருப்பர்.

கங்காளமூர்த்தி — ௱௰௬-௱௨௮

இனி கங்காளமூர்த்தியைச் சொல்லப்போகிறேன். இவர் இரண்டு பாதங்களிலும் பாதுகைகளை (மரவடிகளை) அணிந்திருப்பர். இடதுகால் இயற்கையான நிலையில் அமைந்திருக்கும். வலதுகாலை, நடந்து செல்வதற்காகச் சிறிதளவு உயரத் தூக்கினவாறு மிகவும் அழகாய் வைத்

---

(1) காச்யபீயத்தில் மணிக்குப் பதிலாகக் கத்தி யென்றவாறு விளக்கப்படுகிறது. "க2ட்3க3ம் கேடகம் வஜ்ரம் க3ஜசர்ம ச வாமகே" காச்யபீயம் 70–10.

(2) பாசுபதமூர்த்தியில் பல விசேஷங்கள் காச்யபீயத்தில் கூறப் பட்டுள்ளன. அங்கு காண்க.

ஶுத்தஶ்வேதநிபம் ஸர்வாபரணைர்பூஷிதம் ।
ரத்நகஞ்சுகஸம்யோகம் ஜடாமகுடமண்டிதம் ॥ ௧௧௮ ॥

வாமபார்ஶ்வே நாகஹாரம் வாமே தக்ஷேந்துஶேகரம் ।
கிஞ்சித்வ்யக்தஸிதாஸ்யஸ்ததஶநாம்ஶுவிராஜிதம் ॥ ௧௧௯ ॥

தக்ஷிணம் ஹரிணீவக்த்ரே வ்யாப்ருதம் ஸிம்ஹகர்ணவத் ।
வாமஹஸ்தே ச தண்டம் ச கங்காலாஸ்தி ச தாரயேத் ॥ ௧௨௦ ॥

கதவ்யாக்ருதி நிர்மாம்ஸம் த்விபாதம் த்விகராந்விதம் ।
க்ருஷ்ணஶ்யாமநிபாகாரம் அபாநே தண்டவேஶநம் ॥ ௧௨௧ ॥

தண்டே கங்காலபாதௌ த்வௌ ரஜ்ஜுநா பத்நீயாத் த்வயம் ।
கேசித்து தண்டேந நேத்ராப்யாம் நிஷ்க்ராந்தம் ருதிரதாரயா ॥

திருப்பர். தூய வெண்மை நிறம் உள்ளவர். எல்லா ஆபரணங்களையும் அணிந்து அழகே வடிவம் கொண்டாற்போல் இருப்பர். ரத்தினங்கள் இழைக்கப்பெற்ற கவசத்தை உடம்பில் பூட்டியிருப்பர். அழகிய சடைமுடியுடன் பிரகாசிப்பர். இடது புறம் ஊமத்தை மலரையும் பாம்பையும் அணிந்திருப்பர். வலது புறம் பிறைச்சந்திரனைச் சூடியிருப்பர். சிறிதளவு வெளியில் தெரியுமாறு உதடுகளினுள்ளே ஒளி வீசும் பற்களுடைய காந்தியுடன் பிரகாசிப்பர். இவரது வலது கை சிங்கத்தின் காது (ஸிம்ஹகர்ணம்) போன்ற முத்திரையுடன் மானுடைய முகத்தில் வைக்கப்பட்டிருக்கும். இடது கையில் தடியும் மனிதனது எலும்புக்கூடும் தரித்திருப்பர். அந்த எலும்புக்கூடு மாமிச மற்றதாக இருக்கும். அது இரண்டு காலும், இரண்டு கைகளும் உடையதாக இருக்கும். கனமான கருப்பு நிறமுள்ளதாயிருக்கும். அதனுடைய அபானத்தில் (ஆஸன த்வாரத்தில்) தடியை நுழைத்தவாறு காணப்படும். எலும்புக்கூட்டினுடைய கால்களிரண்டையும் அந்தத் தடியில் கட்டி விடவேண்டும். சிலர் கொள்கைப்படி தண்டத்தினால் கண்களிரண்டினின்றும் இரத்தம் வெளிக்கிளம்பியவாறு இருக்கு

ஸவ்யம் கங்காளதண்டம் து வாமஸ்கந்தோபரி ந்யஸேத் |
பலிபாத்ரயுதம் பூதம் வாமேऽக்ரே கச்சதி த்ருதம் ||௧௨-௧||

தக்ஷிணேऽந்நம் து தத்பார்ஶ்வே ப்ரியாய க்ருதஜாயயா |
கிஞ்சித் ப்ரகாஶிதம் யோநி லம்பமாந துகூலயா ||௧௨-௩||

ஸம்ப்ரமோத்பந்நமாநஸம்(1), ஜாயா: ஸர்வா: ஸஸ்நேஹகா: |
வ்யாக்ரசர்மாம்பரோபேதம் துகூலவஸநாந்விதம் ||

தக்ஷிணே கடிபார்ஶ்வே து க்ஷுரிகாம் சைவ பந்தயேத் |
க்ஷுரிகா ஹேமஸங்காஶா (2)ரூபபந்தஸமந்விதா ||௧௨-௪||

மாறும் அமைக்கலாம். இவ்வாறான கங்காள தண்டத்தை இடது தோளின் மேல் வைக்கவேண்டும். இடது இடதுபுறம், பலி பாத்திரத்தை ஏந்திய ஒரு பூதம் முன்னே நடந்து செல்லும். வலதுபுறம், அது தன் பக்கத்தில் அன்னத்தை (சோற்றை) வைத்துக்கொண்டிருப்பவளும், அல்குலோடு இணைந்திருக்கும் தொங்கிய ஆடையுடன் கூடியவளுமான மனைவியுடன் கூடிப் பிரகாசிக்கும். மனைவியர் அனைவரும் பரபரப்புள்ள மனத்துடன் கூடியிருப்பர். புலித்தோலும் வெண்பட்டும் அணிந்திருப்பர். வலது புறம் இடுப்பில் சிறிய கத்தியைக் கட்டவேண்டும். அக் கத்தி பொன்போன்ற நிறமுள்ளதாக இருக்கும். கூப பந்தத்துடன் கூடியிருக்கும். (கூப பந்தம்) என்பது கத்தியின் அடிப்புறத்தில் கையால் பிடித்துக்கொள்வதற்கேற்ற துவாரமுள்ள பகுதியாயிருக்கக்கூடும். ரூபபந்தம் என்பதைக் காட்டிலும் கூபபந்தம் என்பதே உசிதமான பாடம் போல் தோன்றுகிறது. ரூபபந்தம் என்றே பாடம் கொள்

(1) காச்யபீயம் 72-40. மனைவிமார் அனைவரும் பரபரப்புள்ள மனதுடன் கூடியிருப்பர் என்று கூறுகிறது. அதையொட்டி இங்கும் பொருள் தரப்பட்டது.

(2) கூப என்று ஒரு பாடம். இவ்விடம் பொருள் விளங்கவில்லை. காச்யபீயத்திலும் 72வது படலத்தில் 41வது சுலோகம்: "க்ஷுரிகா ஹேமஸங்காஶா உபபந்தஸமந்விதா" என்று கூறுகிறது. இதற்கும் பொருள் தெளிவாக விளங்கவில்லை. உபபந்தம் என்பது கைப்பிடியின் மேலுள்ள வளைவான பகுதியின் பெயராகயிருக்கலாம்.

யக்ஷகிந்நரஸித்தாத்யை: ஸேவிதம் பூஜிதம் நதம் ।
சாமரே ரத்நதண்டாட்யாம் வீஜிதம் சந்த்ரஸூர்யகை: ॥

அண்டாநாம் ஸம்ஸ்ருஷ்டிகார்யேண ஸர்வலோகோபகாரகம் ।
கங்காலமூர்திநாமா து(ஸ)ஸ்யாச்ச கங்காலகாரண: ॥

அத வக்ஷ்யே ஹரிஹரம் ஸம்ஸ்திதம் ஸர்வதாயகம் ।
தக்ஷிணே அபயம் வாமே கடிஹஸ்தம் ப்ரஸாரிதம் ॥ ௧௨௯ ॥

பரஶும் தக்ஷிணே வாமே ஶங்கம் தத்ர பரமாத்மகே ।
வாமே ச விஷ்ணும் ஹரிம் ச தக்ஷிணே ஶிவரூபகம் ॥ ௧௩௦

வின் அழிவது என்று பொருள் கொள்ளலாம். யக்ஷர்கள், கிந்நரர்கள், சித்தர்கள் இவர்களால் வணங்கப்பட்டவர் — பூஜிக்கப்பட்டவர் — துதிக்கப்பட்டவர். சூரியன், சந்திரன் இவர்கள் இரத்தினங்களிழைக்கப்பெற்ற சாமரங்களை வீசியபடியிருப்பர். ஆயிரங்கோடி அண்டங்கள் சிதறி யோடாதவாறு எல்லாவுலகுக்கும் உபகாரம் பண்ணுவதற்காக இந்த "கங்காளமூர்த்தி" தோன்றியவர். கங்காளம் எனப்படுவது எலும்புக்கூடு. இது பாபத்தின் அறிகுறி. அதனின்றும் விடுபடுவதற்காக இந்த மூர்த்தியை வழிபட வேண்டும். அதனால் அதுவே ("கங்காளம்" என்பதே) இவருக்குப் பெயராயிற்று.

ஹரிஹரமூர்த்தி—௱௨௯-௱௩௦

இனி ஹரிஹரமூர்த்தியைக் கூறுவோம். இந்த மூர்த்தியின் பெயரே இவரது தன்மையை விளக்கும். சிவனும் திருமாலும் சேர்ந்த ஒரே வடிவமாக இவர் காட்சியளிப்பர். இரு கால்களும் ஸமமாக இருக்குமாறு பொருந்தி நின்றவண்ணமிருப்பர். வலது கையில் (கீழ்ப்புறமுள்ளது) அபயமான முத்திரை இருக்கும். இடது புறம் கடிஹஸ்தமாய் தொடையில் சேர்ந்திருக்கும். மேல் கைகளில் வலதுபுறம் கோடரியும், இடது புறம் சங்கும் ஏந்தியிருப்பர். இடது புறத்தில் திருமாலும், வலது புறத்தில் சிவபெருமானும் இருக்குமாறு இம்மூர்த்தியை அமைக்க

க்ருஷ்ணஶ்யாமம் ப்ரவாளாபம் யதோசிதவிபூஷணம் ।
தக்ஷிணே ரௌத்ரத்ருஷ்டிஸ்ஸ்யாத் வாமே ஶீதலநேத்ரகம் ॥

கிஞ்சித் ப்ரகாஶிதோர்த்வாக்ஷம் தக்ஷிணார்த்தே லலாடகே ।
ஶிரஶ்சக்ரஸமோபேதம் தஸ்ய லக்ஷணமுச்யதே ॥ ௧௧௨ ॥

¹ருத்ராங்குலவிஸ்தாரம் அர்க்காம்ஶேந ²பிண்டகம் ।
³ஸம்வ்ருத்தம் சக்ரவ்ருத்தம் வா பத்மாக்ருதிரதாபி வா ॥ ௧௧௩ ॥

ஶிரஶ்சக்ரவிஶாலஸ்ய ஸப்தாம்ஶைகாம்ஶகம் ।
ஶிரஶ்சக்ரஸ்ய நாளஸ்ய விஸ்தாரம் பரிகீர்த்திதம் ॥ ௧௧௪ ॥

வேண்டும். இடது புறம் (திருமாலின் பாகம்) கருப்பு நிற மாகவும், வலது புறம் (சிவபாகம்) பவழம்போன்ற நிறமுள்ள தாகவும் இருக்கவேண்டும். இருவருக்கும் அவ்வவருக்குத் தகுந்த அணிகளை அணிவிக்க வேண்டும். வலது புறம் உக்ரமான (கொடூரமான) பார்வையும், இடது புறம் குளிர்ந்த நோக்கும் இருக்குமாறு அமைக்கவேண்டும். வலது புறம் நெற்றியில் மேல்கண் (மூன்றாவது கண்) சிறிதளவு பிரகாசிக்குமாறு அமைக்கவேண்டும். சிரச் சக்கரத்தோடு கூடியிருத்தல் வேண்டும். (தலையில் பின் புறம் சக்கரம் அமைக்கப்படும். அதுவே "சிரச்சக்கர மெனப்படும்). இனி அதன் (சிரச்சக்கரத்தின்) இலக்கணம் கூறப்படுகின்றது. சிரச்சக்கரம் பதினோரங்குலம் பரப் புள்ளதாக இருக்கவேண்டும். அதன் பரப்பில் பன்னிரண் டிலொரு பாகம் பருமன் உள்ளாக (குறுக்களவுள்ளதாக) இருக்கவேண்டும். (இங்கு மூலம் தெளிவாக இல்லை). வட்ட வடிவமாகவும், சக்கரம் போன்ற வட்டவடிவமுள்ளதும், தாமரை மலர் போன்ற வடிவமுள்ளதும் இவ்வாறாக சிரச் சக்கரத்தை அமைக்கலாம். சிரச்சக்கரத்தின் அகலத்தை ஏழு பாகமாக்கி அதிலொரு பாகத்தை சிரச்சக்கரத்தின் நாளத்தினுடைய (காம்பினுடைய) விஸ்தாரமாக அமைக்க

---

(1) காச்யபீயம் 73வது படலம் 6வது சுலோகம் :—
"ருத்ராங்குலவிஸ்தாரம் ருத்ராம்ஶேந பிண்டகம்"
என்று பாடமுளது. அதன் பிரகாரம் அகலத்தில் பதினொன் றில் ஒரு பாகம் கனமுள்ளதாயிருத்தல் வேண்டும்.

(2) பொ என்பதொரு பாடம். (3) ஸவ்ரு என்றும் பாடம்.

चक्रतारत्रिभागैकं चक्राच्छिरसयोरन्तरम् ।
(1)अग्रात् ललाटपट्टस्य शिरश्चक्रस्य नालकम् ॥ १८ ॥
कोणादूर्ध्वे तु (2)कट्यूर्ध्वे त्र्यङ्गुले
चक्रनालं प्रकल्पयेत् ।
चक्रमध्यांशमालायाः पुष्पमाला प्रलम्बिका
सर्वेषामपि देवानां देवीनामेवमाचरेत् ।
अथ भिक्षाटनं वक्ष्ये पादौ पादुकसंयुतौ ।
सम्यक् तु वामपादं तु सम्यक् दक्षिणं [illegible] ।

வேண்டும். சிரச்சக்கரத்தின் அகலத்தை மூன்று பாகங்களாக்கி, அதிலொரு பாகத்தை, சிரச்சக்கரத்துக்கும் சிரஸுக்கும் உள்ள இடைவெளியாக அமைக்கவேண்டும். லலாடபட்ட (நெற்றியின் மேற்புறத்திலுள்ள பட்டம்)த்தின் நுனியிலிருந்து சிரச்சக்கரத்தின் நாளம் அமைக்கப்பட வேண்டும். கோடியினின்றும் (முனையினின்றும்) மூன்றங்குலம் உயரத்தில் சக்கரத்தின் நாளம் இருக்கவேண்டும். சக்கரத்தின் மத்தியில் மூன்றங்குலத்திலிருந்து பூமாலை தொங்கவேண்டும். எல்லா தேவர்களுக்கும் தேவிகளுக்கும் இவ்வாறு செய்யவேண்டும்.

பிக்ஷாடனமூர்த்தி — ௱௲௫ - ௱௪௩

இனி பிக்ஷாடனமூர்த்தியைக் கூறப்போகிறேன். இவரது தன்மையையும் பெயரிலிருந்தே அறியலாகும். இவரது கால்களிரண்டிலும் பாதுகைகள் அணிந்திருப்பர். இடது கால் பூமியில் நன்றாக பொருந்தியிருக்கும். வலது காலோவெனில் நடந்து செல்வதற்காக உயரத் தூக்கப்

(1) "अग्रे ललाटपट्टस्य" என்பது காச்யபீய பாடம், லலாடபட்டத்தின் நுனியில் என்பது அதன் பொருள். காச்ய. 73–9.
(2) கொ என்றும் பாடம்.

குறிப்பு:—இங்கு மூலத்தில் "கட்யூர்த்வே" என்றுளது. "இடையினின்றும் மேற்புறத்தில்" என்பது அதன் பொருள். "கோட்யூர்த்வே" என்பது அடிக்குறிப்பிலுள்ள பாடம். அதையொட்டியே பொருள் கொள்ளப்பட்டது.

ஸம்விகீர்ணஜடாபாரம் ஜடாமண்டலமேவ வா ॥ ௧௮ ॥

விமுக்தபந்தஜடம் வாபி உபாநத்ரஹிதம் து வா ।
லலாடபட்டஸம்யுக்தம் சந்த்ரேண யுக்தசேகரம் ॥ ௧௯ ॥

ஸர்வாபரணஸம்யுக்தம் ஸுப்ரஸந்நவிக்ரஹம் ।
ஶுத்தஸ்படிகஸங்காஶம் நாநாநாகவிபூஷிதம் ॥ ௨௦ ॥

தக்ஷிணம் பூர்வஹஸ்தம் து ம்ருகஸ்ய ஸ்பர்ஶகம் பவேத் ।
வாமே து [1] பூர்வஹஸ்தம் து ஸிதவஸ்த்ரோத்தரீயகம் ॥ ௨௧ ॥

பட்டிருக்கும். தலையிலுள்ள சடை அழகாக (நாற்புறமும்) சிதறினவாறிருக்கும். அல்லது சடையை மண்டலமாகவும் (வட்டவடிவமாகவும்) அமைக்கலாம். அல்லது கட்டவிழ்ந்த நிலையிலும் அமைக்கலாம். பாதுகைகள் இல்லாமலும் இம் மூர்த்தியை அமைக்கலாம். லலாட பட்டம் (நெற்றியில் கட்டப்படும் பட்டம்) இவருக்குண்டு. தலையில் பிறைச் சந்திரனை அணிந்திருப்பார். அணிகள் யாவற்றையும் அணிந்து அழகுமிக்கு விளங்குவர். அரைநாண் கயிறு கிடையாது. தூய வெண்மை நிறமுள்ளவராயிருப்பர். சிறியதும் பெரியதுமான பலவகைப்பட்ட பாம்புக் கூட்டங்களை அணிந்திருப்பர். வலதுபுறமுள்ள முன்கை மானைத் தொட்டவாறு இருக்கும். இடதுபுறம் முன்கையோவெனில் (வரதான முத்திரையுடன் கபாலத்தை ஏந்தியவாறிருக்கும்) வெண்மையான ஆடையை மேல்வேஷ்டியாக அணிந்திருப்பர். வெண்மையான யக்ஞோபவீதம் (பூணூல்) அணிந்

---

(1) இங்கு மூலம் சிதைந்துள்ளது. காச்யபீயம் 74-வது படலம். 8-வது சுலோகம்:—

தக்ஷிணே பூர்வஹஸ்தம் து ம்ருகஸ்ய ஸ்பர்ஶகம் பவேத் ।
வாமே து பூர்வஹஸ்தம் து வரதம் ஸ்யாத் கபாலயுக் ॥

என்றுளது. அதன் பிரகாரம் இடது முன்கை வரதமுத்திரையுடன் கபாலத்தை ஏந்தியவாறிருக்குமென்று ஏற்படுகிறது. அக்கருத்தும் உரையில் தரப்பட்டுள்ளது.

ஶ்வேதயஜ்ஞோபவீதஞ்ச கடௌ நாகேந வேஷ்டிதம் ।
நீலகண்டம் த்ரிபுண்ட்ராட்யம் பத்மபீடோபரி ஸ்திதம் ॥ ௧௪௨ ॥

கங்காலமூர்த்திவச்சேஷம் ஸர்வம் தத்ர விஶேஷத꞉ ।
சண்டேஶாநுக்ரஹம் சைவ ஸோமாஸ்கந்தவதாசரேத் ॥ ௧௪௩ ॥

வாமே கிஞ்சிந்நதம் வக்த்ரம் ¹தக்ஷிணே வரதம் விது꞉ ।
தத்ஸ்தே வரதம் கார்யம் வாமேந கடகம் விது꞉ ॥ ௧௪௪ ॥

சண்டேஶமூர்த்நி விந்யஸ்ய தத்ஸ்தம் காருண்யாந்விதம் ।
ஹ்ருதயே அஞ்ஜலிஸம்யுக்தஶ்சண்டேஶோ ஸந்நிவேஶக꞉ ॥ ௧௪௫ ॥

திருப்பர். இடுப்பில் பாம்பினல் சுற்றிக்கொள்ளப்பட்டிருப்பர். இவரது கழுத்து கருமை நிறமுள்ளதாயிருக்கும். அழகாக த்ரிபுண்ட்ரம் (மூன்று ரேகையாக நெற்றியில் அணியும் அடையாளம்) அணிந்திருப்பர். பத்மபீடத்தின் மேல் இருப்பர். இன்னும் இந்த பிக்ஷாடனமூர்த்தியில் அமைக்கவேண்டிய மற்ற விஷயங்கள் எல்லாம் கங்காள மூர்த்திக்குச் சொல்லியபடியே கண்டுகொள்வது.

சண்டேசுவரப்பிரஸாதமூர்த்தி—௱௪௩-௱௪௫

சண்டேசானுக்ரஹ மூர்த்தியை ஸோமாஸ்கந்த மூர்த்தியைப் போலவே அமைக்கவேண்டும். ஆனல் இடது புறம் சிறிதளவு சாய்ந்த முகமுள்ளவராக இவர் இருப்பர். மேலும் இவரது வலது கையில் அபயதான முத்திரையை அமைக்காமல் வரதான முத்திரையை அமைக்கவேண்டும். அவ்வாறே இடது கையில் கடக முத்திரையை அமைக்காமல், அக்கரத்தை அருளுடன் சண்டேசுவரரின் தலையில் வைத்தவாருக அமைக்கவேண்டும். இப்படியாகச் சில விசேஷங்களை நினைவில் கொண்டு மற்ற அம்சங்களில் எல்லாம் இவரையும் ஸோமாஸ்கந்த மூர்த்தியைப்போலவே அமைக்க வேண்டும். இவருடைய ஆஸனத்தின் கீழ் சண்டேசுவரர் பக்தியுடன் இதயத்தில் (மார்பில்) இருகை

---

(1) "ரூபம் தக்ஷிணே வாமே கடகம் ஸிம்ஹகர்ணவத்" சில்பரத்னம் 23 – 4வது சுலோகத்தில் ஸுகாஸனமூர்த்திக்குக் கூறப்பட்ட அமைப்பு; அவ்வாறு ஸோமாஸ்கந்தமூர்த்திக்கும் கூறப்பட்டுள்ளது. இம்மூர்த்தி ஸோமாஸ்கந்தரைப்போல் என்றதஞல் சிறிது வேற்றுமையை விளக்குகிருர்.

[illegible]
दक्षिणामूर्तिरीशानं कल्पये[illegible] ॥ ௧௪௬

[illegible] दक्षिणं पादं [illegible]
[illegible] ॥ ௧௪௭ ॥

दक्षिणे पूर्वहस्ते तु ज्ञानमुद्रां तु धारयेत् ।
दक्षिणे परहस्ते तु कारयेदक्षमालिकाम् ॥ ௧௪௮ ॥

वरदं वामहस्ते तु दण्डं वा [illegible] ।
वामजानु[illegible]

களையும் கூப்பியவண்ணம் ஸாதகமாய் அமர்ந்திருப்பர். அவருடைய (சண்டேசுவருடைய) நிறம் பொன்போன்றதாயிருக்கும். இவ்வாறாக சண்டேசுவரப் பிரஸாத மூர்த்தியின் தன்மை விளக்கப்பட்டது.

தக்ஷிணாமூர்த்தி—௱௪௬-௱௬௭

சிவபெருமானுடைய வடிவங்களுள் பதினாறாவது தக்ஷிணாமூர்த்தி யெனப்படுவது. இவரை ஆலமரத்தினடியில் அமைக்கவேண்டும். இவர் வீற்றிருந்தவாறாகக் காட்சியளிப்பர். இவரது வலது பாதம் தொங்கவிடப்பட்டிருக்கும். இடதுகால் மடங்கிக் கிடத்தப்படவேண்டும். இடது காலின் நலகத்தின் நுனி (வலது முழங்காலிற்குச்) சமமாக அமைக்கப்படவேண்டும். ("நலகம் என்பது முழங்காலிலிருந்து பாதம் வரையில் கீழ்நோக்கிவரும் நீண்ட எலும்பு. கணைக்காலில் முடிவடையும் இது. இந்த எலும்பின் நுனி வலது முழங்காலின் மேல் பொருந்துமாறு ஒன்றன்மேலொன்றாக அமைக்க வேண்டுமென்றவாறு".) இவருக்குக் கைகள் நான்கு. வலதுபுறம் முன் கையில் ஜ்ஞான முத்திரையை அமைக்கவேண்டும். வலதுபுறத்திலேயே மேல் கையில் அக்ஷமாலையை அமைத்தல்வேண்டும். இடதுபுறம் முன்கையில் வரதான முத்திரை அல்லது தண்டம் (தடி) இவற்றிலொன்றை அமைக்கவேண்டும். தடியை அமைப்பதாயின் இடது முழங்கால்மேல் இடது முழங்கையை வைக்கவேண்டும். இடதுபுறம் மேல்கையில் அக்னி

வாமே வாமகரேணைவ வஹ்நிம் வா ம்ருகமேவ வா ।
விகீர்ணம் பிங்கலம் வாபி ஜடாமண்டலஸம்யுதம் ॥ ௧௫௦ ॥

ஜடாபிர் வேஷ்டிதாங்கம் வா ஜடாமகுடஸம்யுதம் ।
ஶுத்தஸ்படிகஸங்காஶம் + + + + ॥ ௧௫௧ ॥

வாமே தத்தூரபுஷ்பம் ச நாகஶ்ச ஶிரஸி ஸ்திதம் ।
தக்ஷிணே சந்த்ரகண்டம் ச ஸர்வாபரணபூஷிதம் ।
ஸிதவஸ்த்ரோத்தரீயம் ச ஸிதயஜ்ஞோபவீதிநம் ॥ ௧௫௨ ॥

வ்யாக்ரசர்மாம்பரதரம் த்ரிநேத்ரம் க்லேஶவர்ஜிதம் ।
ருத்ராக்ஷம் கண்டமாலாம் ச ஹ்ருந்மாலாம் விந்யஸேத் ॥ ௧௫௩ ॥

நாரதோ ஜமதக்நிஶ்ச வஸிஷ்டோ தக்ஷபார்ஶ்வகே ।
பாரத்வாஜஶ்ச ஶௌநக அகஸ்த்யோ வாமபார்ஶ்வகே ॥ ௧௫௪ ॥

அல்லது மான் இவற்றிலொன்றை அமைக்கவேண்டும். தலை மயிர்கள் நாற்புறமும் சிதறினவாறு அல்லது ஜடை மண்டலமுள்ளவாறு அல்லது சடைகளால் உடலெல்லாம் கட்டப்பட்டதாக அல்லது சடைமுடி (மகுடம்) உடையவராக அமைக்கலாம். சுத்தமான பளிங்குக்கல் போன்ற நிற முள்ளவராயிருப்பர். (இங்கு மூலம் சிதைந்துள்ளது.) முடியில் இடதுபுறம் ஊமத்த மலரும் பாம்பும் இருக்கும். வலதுபுறம் பிறைச்சந்திரன் விளங்கும். ஆபரணங்கள் எல்லாம் அணிந்திருப்பர். வெண்மையான ஆடையும் மேல் வேஷ்டியும் அணிந்திருப்பர். வெண்ணிறமான பூணூல் அணிந்திருப்பர். புலித்தோலை ஆடையாக உடுத்திக்கொண் டிருப்பர். மூன்று கண்களுள்ளவராயிருப்பர். கிலேசங்கள் (மனக் கவலைகள்) சிறிதுமில்லாதவராயிருப்பர். ருத்திராக்ஷ மாலையையும், கண்டமாலையையும் (கழுத்தை யொட்டினாற் போல் அமைந்தது), ஹ்ருன்மாலையையும் (ஹ்ருதயமுள்ள இடம் வரையில் மார்பில் தொங்கும் மாலை) அமைக்க வேண்டும். இவருடைய வலது புறம் நாரத மகரிஷியும், ஜமதக்கி முனிவரும், வஸிஷ்ட முனிவரும் இருப்பர். இடது புறம் பாரத்வாஜரும், சுனகரும், அகத்திய முனிவரும்

---

(1) காச்யபீயம் 76 – 11. "நாரதோ ஜமதக்நிஶ்ச வஸிஷ்டோ ப்ருகுர் தக்ஷிணே" என்றும் சுலோகத்தில் "பிருகு" மகரிஷியும் வலதுபுறம் உள்ளதாகக் கூறுகிறது.

यक्षैश्च किन्नरैश्चैव सेवितं भक्तिसंयुतैः ।
अपस्मारोपरिष्टात्तु सव्यपादं न्यसेत् ॥ १५५

धर्मव्याख्यानमुद्रः स्यादेवं सर्वसौख्यावहम् ।
तथैव वामपादेनोत्कुटिकासनसंयुतम् ॥ १५६ ॥

पूर्वहस्तद्वये वीणां चैव तद्वीणाधरं स्मृतम् ।
अथवा पूर्वहस्ताभ्यां ज्ञानमुद्राभयौ धृतौ ॥

वामं प्रसारितं वापि वामजानूर्ध्वकूर्परे ।
अपरे दक्षिणे चाक्षमालां वामे तु उत्पलम् ॥ १५७ ॥

இருப்பர். கின்னரர்கள், கிம்புருஷர்கள் முதலிய தேவ-யோனி விசேஷங்களால் பக்தியுடன் வணங்கி வழிபடப் பெற்றவராயிருப்பர். இவரது கால்களில் ஒன்று தொங்க விடப்பட்டிருக்குமென்பது முன்பே சொன்னோம். அந்தப் பாதம் (வலது கால்) அபஸ்மாரத்தின்மேல் பொருந்துமாறு அமைக்கப்பட வேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் தக்ஷிணாமூர்த்தியே எல்லோருக்கும் சுபத்தைக் கொடுக்கின்ற "தர்ம வியாக்யான மூர்த்தி" எனப்படுவர். (தர்மத்தை விரித்துரைக்கும் மூர்த்தி என்று பொருள்).

வீணாதர தக்ஷிணாமூர்த்தி

இவரும் முன்போலவே பெரும்பாலும் இருப்பர். சிறிதே மாறுதல். இடதுகாலினால் "உத்குடிகாஸன"த்தில் அமர்ந்திருப்பர். இவர் முன்கைகளிரண்டிலும் வீணையை ஏந்தியிருப்பர். இவருக்கு வீணாதர தக்ஷிணாமூர்த்தி என்று பெயர்.

ஜ்ஞானமூர்த்தி

இரண்டு முன்கைகளிலும் முறையே ஜ்ஞான முத்திரையும் அபயதான முத்திரையும் தரித்திருப்பர். அல்லது இடதுகை இடது முழங்காலின் மேற்புறத்தில் விரிந்தவாறு அமைக்கப்படுவதும் உண்டு. பின் கைகளிரண்டில், வலதுபுறம் அக்ஷமாலையையும், இடதுபுறம் குவளை மலரையும்

[1]ஜ்ஞாநமூர்த்திரிதி க்யாதம் ஸர்வகாரணகாரணம் |
ஆஸநத்வாரஸம்ஸ்தம் து [2]ஸ்பிக்பிண்டாதஃ புரஸ்ஸ்தலே

ஜ்ஞாநமுத்ராம் ஹ்ருதிஸ்தாநே ஸவ்யஹஸ்தாந்தரம் கரம் |
வரதம் வாமஹஸ்தந்து மேட்ரபீடோபரி ந்யஸேத் || ௧௨௦ ||

பரயோர் ஹஸ்தயோஃ பூர்வவத் அக்ஷமாலோத்பலம் ததா |
நாஸாக்ரம் ஸ்வம் ஸமீக்ஷ்ய ஸ்வ யோகாஸநம் ஸமாசரேத் || ௧௨௧

ஏந்தியிருப்பர். காரணமான பொருள்கள் எல்லாவற்றுக்கும் ஆதிகாரணமான இவர் "ஜ்ஞான தக்ஷிணாமூர்த்தி" என்று அழைக்கப்படுவர்.

யோக தக்ஷிணாமூர்த்தி

இரண்டு உள்ளங்கால்களையும் மாற்றி ஆஸனத் துவாரத்தின் முன்புறத்தில் ஸ்பிக்பிண்டத்தின்கீழ் அமைக்க வேண்டும். ஜ்ஞான முத்திரையுள்ள வலதுகையை உள் நோக்கியவாறு இதயத்திற்குச் சரியாக அமைக்கவேண்டும். வரத முத்திரையுடன் கூடிய இடது கையைப் போவெனில் மேட்ரபீடத்தின்மேல் வைக்கவேண்டும். ஆண்குறிக்கு மேட்ரம் எனப்பெயர். மேட்ர பீடம் என்பது அந்த இடத்தைக் குறிக்கும். இவ்வாறு முன் கைகளிரண்டுக்கும் உபயோகம் கூறப்பட்டது. பின் கைகளிரண்டிலும் முன் போலவே அக்ஷமாலையையும் குவளை மலரையும் அமைக்க வேண்டும். தனது மூக்கின் நுனியைப் பார்த்தவாறாகவும்,

(1) காச்யபீயம் 76 – 18. "ஶுத்தஸ்படிகஸம் வர்ணம் வஸநம் ச ஸிதாம்பரம்" என்று இம்மூர்த்தியைத் தூயவெண்ணிறமுள்ளவராகக் கூறுகிறது.

(2) காச்யபீயம் 76 – 19.
"ஸ்வேந்த்ராந்த்ராஸ்த்ரம் ஸ்திரம் ஸ்பிக்பிண்டாயுஃ புரஸ்ஸ்தலே" என்னும் சுலோகமும் "ஸ்பிக் பிண்டம்" என்றே கூறுகிறது. ஆசனத் துவாரத்தின் இருபுறத்திலுமுள்ள வட்டமான உடற் பகுதியையே இச் சொல் உணர்த்துகிறது.

[illegible]
[illegible] ॥ கக௨ ॥

[illegible]
[illegible] ॥ கக௩ ॥

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible] ॥

நேர்மையான உடம்புள்ளவராகவும் இருப்பர். சடைகள் எல்லாம் அழகாகச் சிதறிக் கிடக்கும். இவர் யோக தக்ஷிணமூர்த்தி யெனப்படுவர்.

இதிலேயே சிறப்பான மற்றொரு வகை.

வலது காலைத் தொங்கவிடவேண்டும். இடது காலில் முன்போல் உத்குடிகாஸனம் அமைக்கவேண்டும். தனது உடம்பையும் உத்குடிகாஸனத்திலுள்ள இடது பாதத்தையும் யோக பட்டத்தினால் நன்றாகக் கட்டவேண்டும். இடது கை விரித்தவாறு இடது முழங்கால்மேல் பொருத்தப்பட்டிருக்கும். மற்ற அடையாளங்களெல்லாம் (பின் கைகள் இரண்டும் அமைந்திருக்கவேண்டிய பொருள்களும் மற்றவையும்) முன்போலவே இவருக்கும் அமைக்கவேண்டும்.

இதிலேயே மற்றொரு வகை.

இரண்டு பாதங்களின் குதிகால்களும் இரண்டு தொடைகளின் அடிப்புறங்களிலும் மாற்றி வைக்கப்பட்டு நன்றாகப் பதிந்திருக்கவேண்டும். இரு ஜங்கைகளின் (ஜங்கை — என்பது முழங்காலுக்கும் கணைக்காலுக்கும் மத்தியிலுள்ள நீளமான காலின் பகுதி) மத்தியில் யோகப்பட்டம் சிறப்புற்று விளங்கும். முன் கைகளிரண்டும் விரிக்கப்பட்டு முழங்கால்களின்மேல் வைக்கப்பட்டிருக்கும். மேலுள்ள

அபரே புஸ்தகேந வாஸுகிர்வா வாமே கண்டமூலம் ।
ஜடாமண்டலஸம்யுக்தம் கரோட்யர்த்தேந்துஶேகரம் ॥ ௧௬௬ ॥

நீலக்ரீவாஸமாயுக்தம் ஶங்ககுந்தேந்துஸந்நிபம் ।
யோகதக்ஷிணவிஶேஷாக்யம் ஶேஷம் ப்ராக்வச்ச காரயேத் ॥

காலாரிம் காரயேதீஶம் நதாம்ஸம் வாமதோ நத: ।
ஸம்ஸ்திதம் தக்ஷிணம் பாதம் பத்மபீடோத்ருத்ஸ்திதம் ॥ ௧௬௮ ॥

குஞ்சிதம் கிஞ்சிதுத்க்ஷிப்ய ந்யஸேத் காலஸ்ய வக்ஷஸி ।
ஸதம்ஷ்ட்ராஸ்யம் த்ரிநேத்ரஞ்ச ஜடாமகுடமண்டிதம் ॥ ௧௬௯ ॥

இரண்டு கைகளுள், வலது கையில் அக்ஷமாலையையும் இடது கையில் கமண்டலுவையும் வைத்திருப்பர். சடைகள் மண்டலாகாரமாய்த் திகழும். மண்டை ஓடு பிறைச் சந்திரன் இவற்றை அணிந்திருப்பர். கருநிறமான கழுத்துள்ளவர். சங்கு, குருக்கத்திப்பூ, சந்திரன் இவற்றைப் போன்ற வெண்மையான நிறமுள்ளவராயிருப்பர். யோக தக்ஷிணாமூர்த்தியிலேயே இந்த மூர்த்தியும் ஒருவகை. இவருக்கும் முன்போலவே மற்ற அங்க அடையாளங்கள் எல்லாம் அமைக்கப்படவேண்டும். தனியாகச் சொன்ன சிலமட்டுமே சிறப்பாக அமையும்.

காலஸம்ஹார மூர்த்தி—௱௬௮-௱௭௬

காலாரி என்பது, கால—அரி என்னும் இரண்டு சொற்களின் சேர்த்தி. காலன் என்று நமனுக்குப் பெயர். அரி என்னும் சொல் "பகைவன்" எனப் பொருள்படும். நமனை வென்றவர் என்றபடி, காலஸம்ஹார மூர்த்தி என்றும் இதே பெயர்தான். இந்த சிவமூர்த்தியைச் சிறிது இடது புறம் சாய்ந்த உடம்புள்ளவராக அமைக்கவேண்டும். வலது கால் இயற்கையாக பத்மபீடத்தில் நன்கு படிந்திருக்கும். மற்றது பத்மபீடத்தின் மேலிருந்து சிறிது மடக்கப்பட்டு உயரத் தூக்கப்பெற்று யமனுடைய மார்பில் வைக்கப்பட்டிருக்கும். கோரைப் பற்களுடன்கூடிய முகமுள்ளவர். மூன்று கண்களுள்ளவர். சடைமுடியால் அலங்கரிக்கப்

சதுர்ஹஸ்தயுதம் வாபி வஸுஹஸ்தஸமாயுதம் |
தக்ஷிணே பூர்வஹஸ்தே து ஶூலம் (1)கர்ணாந்தஸம்ஸ்தி²தம்

தக்ஷிணே பரஹஸ்தே து பரஶும் வரத³ம் து வா |
வாமே பூர்வகரம் நாபி⁴ஸூத்ராந்தே ஸூசிம் ஸமாசரேத் ||

வாமே து பரஹஸ்தே து விஸ்மயம் பரிகல்பயேத் |
உஷ்ணீஷாந்தம் ஸமுத்³த்⁴ருத்ய விஸ்மயே நாஸிகாந்திகம் || ௧௭௨ ||

ஶூலம் பரஶுவஜ்ரௌ ச க²ட்³க³ம் த³க்ஷிணஹஸ்தகே |
விஸ்மயம் கேடகம் பாஶம் ஸூசிஹஸ்தம் ச வாமகே || ௧௭௩ ||

ஶுத்³த⁴வித்³ருமஸங்காஶம் ஸர்வாப⁴ரணஸம்யுதம் |
தஸ்யாத⁴: காலயேத் காலம் த்³விபு⁴ஜம் பாஶஹஸ்தகம் || ௧௭௪ ||

பெற்றவர். இவரை நான்கு கைகளுள்ளவராகவோ அல்லது எட்டு கைகளுள்ளவராகவோ அமைக்கலாம். முதலில் நான்கு கைகளின் விவரம் கொடுக்கப்படுகிறது. வலதுபுறம் முன் கையால் சூலத்தைப் பிடித்திருப்பர். இது காது அளவு உயர்ந்திருக்கும். வலதுபுறத்து மேல் கையில் கோடரியை அமைக்கலாம். அல்லது வரதான முத்திரையையும் அமைக்கலாம். இடதுபுறம் முன் கையை நாபி ஸூத்திரத்தின் முடிவில் ஸூசி முத்திரையுடன் அமைக்க வேண்டும். (ஆள்காட்டி விரலை நீட்டி மற்ற விரல்களை மடக்கிய கை ஸூசி முத்திரையுள்ளதாகும்.) இடதுபுறம் மேல் கையின் மோதிர விரலின் நுனியைத் தலைப்பாகையளவு உயர்த்தி ஆச்சரியத்தைக் காட்டுமாறு அமைக்கவேண்டும்.

இனி இவருக்கே எட்டு கைகளின் உபயோகம். வலது புறம் முறையே; சூலம், கோடரி, வஜ்ரம், கத்தி இவற்றையும், இடதுபுறம் முறையே ஆச்சரியக்கை, கேடயம், பாசம், ஸூசிஹஸ்தம் இவற்றையும் அமைக்கவேண்டும். சுத்தமான பவழம்போன்ற செந்நிறமுடையவர். ஆபரணங்கள் எல்லாவற்றையும் அணிந்திருப்பர். இந்தக் காலாரி மூர்த்தியின் கீழ்ப்புறத்தில் யமனை (காலனை) ஸ்தாபிக்கவேண்டும். இந்த யமனுக்குக் கைகளிரண்டு. அவற்றால் பாசத்தைப் பிடித்திருப்பான். பேழைபோன்ற கிரீடம் அணிந்திருப்

---

(1) காச்யபீயம் 77-8 ... ... "ஶூலம் பார்ஶ்வஸம்ஸ்தி²தம்" என்று பாடமுளது. "கம்ராக்³ரம்" என்றும் பாடம்.

கராளகோடிவக்த்ரம் ச தம்ஷ்ட்ரம் விக்ருதானநம் ।
ஸஸ்ருக்ப்ரவாஹஸம்யுக்தம் [1]மஹாபயஸமந்விதம் ॥ ௭௫ ॥
ஹ்ருதயாஞ்ஜலிஸம்யுக்தம் விகீர்ணசரணத்வயம் ததா ।
அத லிங்கோத்பவம் வக்ஷ்யே லிங்காகாரஸ்ய மத்யத: ॥ ௭௬ ॥
நலகாத் பாதஸ்ய தலம் லிங்கே [2]குஹ்ய ஸமந்விதம் ।
சந்த்ரசேகரவத் ஸர்வம் காரயேத்ஸௌம்யரூபக்ருதிம் ॥ ௭௭ ॥
ப்ரஹ்மா தத்ர ஹம்ஸரூபேண ஊர்த்வகோ வாமபார்ஶ்வக: ।
விஷ்ணு வராஹரூபேண தக்ஷிணாம்ஶே அதோகத: ॥

பான். கோரைப் பற்களுடன் கூடியவன். பயங்கரமான முகமுள்ளவன். வெள்ளமாகப் பெருகியோடும் இரத்தப் பெருக்குடன் கூடியவனும், பெரும் அச்சம் கொண்டவனுமாக இவன் இருப்பான். இரு கைகளையும் கூப்பி இதயத்தில் வைத்தவாறிருப்பன். இவனது கால்கள் இரண்டும் இயற்கை நிலையில்லாது நிலை குலைந்து காணப்படும்.

லிங்கோத்பவ மூர்த்தி—௭௬-௭௭

இனி லிங்கோத்பவ மூர்த்தியைக் கூறுகிறோம். லிங்கத்தின் வடிவத்தினுள்ளேயே இம் மூர்த்தியை அமைக்க வேண்டும். தனி விக்ரஹமல்ல. அதனால் இவருக்கு லிங்கோத்பவமூர்த்தி என்றே பெயர் வழங்கும். உத்பவம்= தோன்றினது. லிங்கோத்பவம் என்பதற்கு லிங்கத்தினுள் தோன்றியது என்று பொருள். அதுவே பெயராகவும் வழங்குகின்றது. சிவலிங்க வடிவத்தின் மத்தியில் முன் கூறப்பட்ட சந்திரசேகர மூர்த்தியைப்போலவே அழகிய வடிவமுள்ளவராக இவரையும் அமைக்கவேண்டும். நலகத்திலிருந்து உள்ளங்கால் வரை லிங்கத்தினுள் மறைந்தவாறு அமைக்கவேண்டும். நலகம் என்பது கணைக்காலை அடுத்தாற்போலுள்ள காலின் குறுகிய பகுதி. இவருடைய இடதுபுறம் அன்னப்பக்ஷி வடிவங்கொண்டு பிரமன் மேல் நோக்கிச் சென்றுகொண்டிருப்பர். வலதுபுறத்தில் பன்றி வடிவங்கொண்ட விஷ்ணு கீழ்முகமாய்ச் சென்றுகொண்

(1) "பயயுக்த" என்றும் பாடம்.
(2) காச்யபீயம் 68—2.
"நலகாத்பாதகயோ லிங்கே குஹ்ய ஸமந்விதம்" என்று பாடமுள்ளது. அதைத் தழுவி உரை எழுதப்பட்டுளது. இந் நூலிதுள்ளபடி பொருள் நன்கு விளங்கவில்லை.

¹ ஸ்ருஷ்டிபூர்வஸ்தி²திஸம்ஹாரகர்த்ரோ ரக்ஷ்யாதிஶயேந பரௌ ।
விக்ஷேபேண பரம்லிங்க³ம் த்³ருஷ்டம் ஸ்ம்ஶோக்ஷம் ஸ்துதௌ ॥ ௧௭௬ ॥

॥ அத² ஶ்ரீ பஞ்சாக்ஷரீ ॥

பி³ப்⁴ரத்³தோ³ர்பி⁴: குடா²ரம் ம்ருக³மப⁴யவரௌ ஸுப்ரஸந்நோ மஹேஶ:
ஸர்வாலங்காரதீ³ப்த: ஸரஸிஜநிலயோ வ்யாக்⁴ரசர்மாத்தவாஸா: ।
த்⁴யேயோ முக்தாபராகா³ம்ருதரஸகலிதாத்³ரிப்ரப⁴: பஞ்சவக்த்ரஸ்த்ர்யக்ஷ:
கோடீரகோடிக⁴டிததுஹிநரோசிஷ்கலாதுங்க³மௌலி: ॥

டிருப்பர். இருவரும் சுமரூபத்துடனும் இதயத்தில் இரு கைகளையும் கூப்பியவாறிருப்பர். முறையே, சிவந்ததும், கருப்பானதுமான நிறமுள்ளவர். பிரமனும் விஷ்ணுவும் தங்களால் அளவிடமுடியாதவாறு வளர்ந்துள்ள லிங்கத்தைப் பார்த்தவண்ணமாயிருப்பர். இதுவே லிங்கோத்பவ மூர்த்தி எனப்படும். இவ்வாறாக சைவத்தில் பதினெட்டு மூர்த்திகளின் அமைப்பும் தியானத்துக்கு உபயோகமாகக் கூறப்பட்டது.

ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.—நாமம்

தனது நான்கு கைகளால் கோடரியையும், மானையும் அபயதான முத்திரையையும் வரதான முத்திரையையும் தரித்திருப்பர். நன்றாக அருள் நிரம்பிய தோற்றமுள்ளவர். ஆபரணங்கள் எல்லாவற்றாலும் மற்றும் பலவகை அலங்காரங்களாலும் கண்கொள்ளாக் காட்சியளிப்பர். தாமரை மலரின்மேல் இருப்பர். அழகிய புலித்தோலை ஆடையாக உடுத்திருப்பர். தூய வெண்மையான முத்துக்களைப் பொடி செய்து அவற்றை அம்ருத ரசத்தோடு கலந்து அதனாலுண்டு பண்ணப்பட்ட பெரிய மலைபோல் அழகிய தோற்றமுள்ளவர். ஐந்து முகங்களுள்ளவர். மூன்று கண்களுள்ளவர். தனது முடியின் நுனியில் பொருந்தி விளங்கும் குளிர்ந்த கிரணங்களை வீசுகிற பிறைச் சந்திரனால் பொலிவுற்ற உன்னதமான தலையுள்ளவர். பஞ்சாக்ஷரத்தில் விவரிக்கப் பட்ட சிவபெருமானை இவ்வாறாகத் தியானிக்கவேண்டும்.

(1) "ஸ்வார்தே⁴ந ஶிவாஶ்லிஷ்டௌ ப்³ரஹ்மவிஷ்ணூ விஶேஷத: பார:" என்னும் ஸகலாதிகார வசனத்தைத் தழுவிப் பொருள் தரப்பட்டது.

[1] [illegible]
[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] (?) [illegible]
[illegible] ॥ ௧௮௭ ॥

௧௮௮ [illegible] ;—

[illegible]
[illegible]

இதில் சிவபெருமானுடைய ஐந்து முகங்களும் அவற்றின் திசைகளும் கூறப்படுகின்றன :—

சிவபெருமானுடைய ஐந்து முகங்களுள் ஈசானம் எனப்படுவது மேல் நோக்கியவாறிருக்கும். நிர்மலமான ஈசான முகத்தை இவ்வாறாக வணங்குவோம். குங்குமத்தின் நிறமுள்ள தத்புருஷ முகத்தைக் கிழக்கு முகமாகவும், அகோர ரூபியான சிவனைத் தெற்கு முகமாகவும் வணங்குகிறோம். மேருமலை, செம்பரத்தம்பூ இவற்றிற்கொப்பான நிறமுள்ள அழகிய வாமதேவ முகத்தை (மேற்கு முகமாகத் தொழ வேண்டுமென்று) பெரியோர் பணிப்பர். பெரிய காந்தியுள்ள ஸத்யோஜாத முகத்தையோவெனில் வடக்கு நோக்கி வைத்திருப்பர். இந்த ஸத்யோஜாதம் பசுவின் பாலினுடைய நுரைபோன்ற ஒளியுடையதாயிருக்கும்.

ருத்திரன்—௧௮௮

அழகிய சிருங்கார சேஷ்டைகளும் இனிய "பாவ"ங்களும் மிளிர்ந்து விளங்குகிறவர், செந்நிறமான ஆடை, சந்தனம் இவற்றையுடையவர், புன்சிரிப்புள்ள முகமுடையவர், மோவாய்க்கட்டையின் நுனிக்குச் சரியான கம்பீரமான மூக்கையுடையவர், செந்நிறமானவர், பூமாலைகளால் விளங்கும் குழல் கற்றையையுடையவர், பலவகையான உல்லாஸ

---

(1) இந்த சுலோகம் சில சுவடிகளில் இல்லை.

குறிப்பு:— வாமதேவம், ஸத்யோஜாதம் இவற்றுக்குத் திசை கூறப்படவில்லை. வரிசைக் கிரமத்தை யொட்டி வகைதால், மேற்கு, வடக்கு என எம்மால் சேர்த்து எழுதப்பட்டது.

नानाविभ्रमदीक्षितप्रणयिनं भावेन पाशाङ्कुशौ
खट्वाङ्गं च कपालमपि क्रमेण करैर्बिभ्र-
दधानं हरम् ॥

अथ प्रासादः ;—

देवं नौमि शिरसा परशुत्रिशूलविद्या-
कपालरुचिरोज्ज्वलदोर्दण्डम् ।
व्याघ्राजिनाम्बरधरं सितभसितवेषोज्ज्वलं
युतजटावलिचन्द्रबिम्बम् ॥ ௧௰௩ ॥

तद्भेदः :—

वन्दे त्रिशूलस्फटिकाक्षमाला-
विद्याप्रसादोद्यतबाहुमीशम् ।
सितोपवीतं सितभासिताङ्गं
कोटीरकोट्युज्ज्वलचन्द्ररेखम् ॥ ௧௰௪ ॥

விளையாட்டுக்களுடையவர், அடியார்களிடம் அடங்காக் காதல் கொண்டவர், தனது நான்கு கைகளால் முறையே பாசம், அங்குசம், கட்வாங்கம், (மண்டை ஓடுடன்கூடிய தடி) கபாலம் (மண்டையோடு) இவற்றைத் தரித்திருப்பவர், அதற்கேற்ற "பாவ"ங்களுள்ளவர். இவ்வாறான அரனை வணங்குகின்றேன்.

ப்ராஸாதம் — ௧௰௩

கோடரி, த்ரிசூலம், வித்யை, கபாலம் — இவற்றால் பிரகாசிக்கும் தண்டம் போன்ற நான்கு புயங்களையுடையவரும், புலித்தோலை ஆடையாக உடுத்தியவரும், திருநீறு பூசப்பட்டு வெண்மையான அழகிய தோற்றமுள்ளவரும், வெண்மையான பூணூல் அணிந்தவரும், சிரஸ்ஸின்மேல் பிரகாசிக்கும் சடையில் பொருந்திய சந்திரபிம்பத்தையுடையவருமான இறைவனை வணங்குகிறேன்.

இதிலேயே மற்றொரு வகை — ௧௰௪

த்ரிசூலம், பளிங்குக் கல்லாலான அக்ஷமாலை, வித்யா, ப்ரஸாதம் இவற்றைத் தாங்கிய நான்கு கைகளையுடையவரும், வெண்மையான பூணூலுடையவரும், திருநீறு பூசப்பெற்ற வெண்மையான உடம்புள்ளவரும், கிரீடத்தின் நுனியில் ஒளி வீசும் பிறைச்சந்திரனையுடையவருமான சிவனை வணங்குகின்றேன்.

𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌞𑍍𑌜𑌯𑌃 :—

𑌶𑍁𑌭𑍍𑌰𑌾𑌂𑌭𑍋𑌜𑌪𑍁𑌟𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑌣𑍍𑌡𑌲𑌗𑌤𑌂
𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌰𑌿𑌶𑍂𑌲𑌤𑍍𑌰𑌯𑍀-
𑌟𑌂𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌵𑌲𑌿𑌕𑌲𑌸𑌤𑍍𑌕𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌂 𑌕-
𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌹𑌿𑌮𑌾𑌦𑍍𑌰𑌿𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ।
𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌭𑍂𑌷𑌿𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑌯𑌨𑌂
𑌨𑌾 (𑌨𑍋 ? 𑌗𑍋)𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌂 𑌶𑌿𑌵𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌾𑌜𑌿𑌨𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌂
𑌕𑍋𑌟𑍀𑌰𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍍 ॥ ௧௮௫ ॥

𑌶𑍂𑌲𑌾𑌹𑌿𑌟𑌙𑍍𑌕𑌘𑌣𑍍𑌟𑌾𑌸𑌿𑌸𑍃𑌣𑌿𑌕𑍁𑌲𑌿𑌶-
𑌪𑌾𑌶𑌾𑌗𑍍𑌨𑍍𑌯[1]𑌭𑌾𑌤𑍀𑌰𑍍𑌦𑌧𑌾𑌨𑌂
𑌦𑍋𑌰𑍍𑌭𑌿𑌃 𑌶𑍀𑌤𑌾𑌂𑌶𑍁𑌰𑍇𑌖𑌾𑌵𑍃𑌤𑌵𑌿𑌕𑌟
𑌜𑌟𑌾𑌭𑌾𑌰𑌮𑍌𑌲𑌿𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 ।

ம்ருத்யுஞ்ஜயர் — ௧௮௫

வெண்மையான இரண்டு தாமரை மலர்களின் புடத்தினுள்ளிருக்கும் சந்திர மண்டலத்தில் இருப்பவர், மூன்று கண்களுள்ளவர்; த்ரிசூலம், மூன்று வேதங்கள், கோடரி, அக்ஷமாலை, இவற்றைத் தரித்துக்கொண்டிருக்கும் நான்கு கைகளையுடையவர், இமயமலை போன்ற வெண்மையான தேஹ காந்தியுள்ளவர், ஐந்து முத்திரைகளால் அலங்கரிக்கப்பெற்றவர், மூன்று கண்களுள்ளவர், பாம்பையே மேல் ஆடையாக உடுத்தியவர், சிறந்த புலித்தோலை உடுத்தியவர், முடியில் உள்ள பிறைச்சந்திரனால் ஒளிமிக்கிருப்பவர்; இவ்வாறான சிவனை வணங்குகிறேன்.

இதுவுமது

சூலம், பாம்பு, கோடரி, மணி, கத்தி, அங்குசம், வஜ்ராயுதம், பாசம், அக்கி, அபயமுத்திரை இவைகளைக் கைகளால் தரித்திருப்பவர், குளிர்ந்த கிரணமுள்ள சந்திரனுடைய ரேகையுடன் இணைந்துள்ள சடைமுடியுடன்கூடிய சிரமுள்ளவர், மூன்று கண்களுள்ளவர், பலவகையான ஆபரணங்களால் அழகுற்று விளங்கும் உடம்பையுடையவர்,

---

(1) "𑌭𑌾𑌤𑍀" என்று பாடம் உளது. அதை "𑌭𑍀𑌤𑍀" என்று கருதி "அபய முத்திரை" என்று பொருள் தரப்பட்டது.

நாநாகல்பாபிராமாவயவ மபிமதார்த்தப்ரதம்
ஸுப்ரஸந்நம் பத்மஸ்தம்
பஞ்சவக்த்ரம் ஸ்படிகமணிநிபம் பார்வதீஶம் நமாமி ॥ ௧௬ ॥

ஶைவ அஷ்டாக்ஷரம் :—

வாமோத்ஸங்கஸ்த்த வாமேதர கரகமலோ-
யா ஸ்வயா வாமபாஹ்வாஸக்தா-
ரக்தோத்பலாட்யா: ஸ்தநவிஹிதகரோ-
வாமபாஹ்வோ: ப்ரியாயா: ।
ஸர்வாகல்பாபிராமோ த்ருதபரஶும்ருகேஷு:
கரை: காஞ்சநாபோ த்யேய:
பத்மாஸநஸ்த: ஸ்மரஸலலிததநு:
ஸம்பதே பார்வதீஶ: ॥ ௧௭ ॥

வேண்டின வரங்களை யெல்லாம் கொடுப்பவர், அருள் நிரம்பிய கவர்ச்சிகரமான முகமுள்ளவர், தாமரை மலரில் இருப்பவர், ஐந்து முகங்களுள்ளவர், பளிங்குக் கல்போன்ற தூய வெண்ணிறமுள்ளவர்; இவ்வாறான பார்வதியின் கணவனை (சிவனை) வணங்குகிறேன்.

சைவமான அஷ்டாக்ஷரம் — ௧௭

தனது இடது கையினால் தேவியை அணைந்தவாறிருப்பர். தேவியின் தாமரை மலர் போன்ற வலது கை இவரது இடது மடியில் வைக்கப்பட்டிருக்கும். தேவியின் இடது கையில் செந்நிறமான குவளை மலர் விளங்கும். அவளுடைய கொங்கைமேல் தனது இடது கையை வைத்திருப்பர். எல்லாவிதமான அணிகளையும் அணிந்து அழகு வெள்ளமாய் விளங்குவர். மற்ற மூன்று கைகளால்; கோடரி, மான், அம்பு, இவற்றைத் தரித்திருப்பர். பொன் போன்ற நிறமுள்ளவர். பத்மாஸனத்தில் அமர்ந்திருப்பர். மன்மதன் போல் அழகிய மென்மையான உடம்புள்ளவர். இப்படிப் பட்ட பார்வதீசனைச் செல்வம் பெறுவதற்காகத் தியானிக்க வேண்டும்.

[1] 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 :—

𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌦𑌾𑌤𑍍𑌰𑍀𑌂 𑌪𑌰𑌶𑍁𑌹𑌰𑌿𑌣𑍌
𑌬𑌾𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌮𑍇𑌕𑌂
𑌜𑌾𑌨𑍍𑌵𑌾𑌸𑌕𑍍𑌤𑌂 𑌦𑌧𑌾𑌨𑍋 𑌭𑍁𑌜𑌗𑌵𑌰-
𑌸𑌮𑌾𑌬𑌦𑍍𑌧𑌕𑌕𑍍𑌷𑍍𑌯𑍋 𑌵𑌟𑌾𑌧𑌃 ।
𑌆𑌸𑍀𑌨𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌖𑌣𑍍𑌡𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌟𑌿𑌤𑌜𑌟𑌃
𑌕𑍍𑌷𑍀𑌰𑌗𑍌𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑍋
𑌦𑌦𑍍𑌯𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌶𑍁𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌰𑌭𑌿
𑌵𑍃𑌤𑍋 𑌭𑌾𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌭𑌵𑍋 𑌵𑌃 ॥ ௧௧௮ ॥

𑌅𑌘𑍋𑌰𑌃 —

𑌕𑌾𑌲𑌾𑌭𑍍𑌰𑌾𑌭𑌃 𑌕𑌰𑌾𑌗𑍍𑌰𑍈𑌃 𑌪𑌰𑌶𑍁𑌡𑌮𑌰𑍁𑌕𑍌
𑌖𑌡𑍍𑌗𑌖𑍇𑌟𑍌 𑌚 𑌬𑌾𑌣𑍇𑌷𑍍𑌵𑌾𑌸𑍌
𑌶𑍂𑌲𑌂 𑌕𑌪𑌾𑌲𑌂 𑌦𑌧𑌦𑌤𑌿𑌭𑌯𑌦𑍋
𑌭𑍀𑌷𑌣𑌾𑌸𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌃 ।

தக்ஷிணமூர்த்தி — ௧௧௮

மங்களகரமான பொருள்களைத் தரும் (ஞான) முத்திரையையும், கோடரி, மான், இவற்றையும் மூன்று புயங்களால் தரித்தவர், நான்காவது கையைத் தனது முழங்காலில் ஊன்றியவாறிருப்பவர், சிறந்த பாம்பினால் நன்றாகக் கட்டப்பட்ட இடையை உடையவர், ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருப்பவர், அழகிய சந்திரனுடைய கலையுடன் பிணைக்கப்பட்ட சடைமுடியையுடையவர், பால்போல் வெண்மையான நிறமுள்ளவர், மூன்று கண்களுள்ளவர், ஆதிகாலத்திலவர்களான சுகபரப்ரம்ம ரிஷி முதலிய முனிவர்கள் பலராலும் சூழப்பட்டவர்; இவ்வாறான சிவன் உங்களுக்கு மனத்தூய்மையைக் கொடுக்கட்டும்.

அகோரமூர்த்தி

கருமுகில் போன்ற நிறமுள்ளவர். எட்டு கைகளுடையவர். ஒவ்வொரு கையின் நுனியிலும், முறையே—கோடரி, டமருகம், கத்தி, கேடயம், அம்பு, வில், சூலம், கபாலம் இவற்றைத் தரித்திருப்பவர், மிகவும் அச்சத்தைத்

---

(1) 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌭𑌃 என்று வேறு பாடம். தக்ஷிணமூர்த்தி விஷயமான மூன்று அநுஷ்டுப் என்று அதன் பொருள்.

ரக்தாகாராம்பராஹிப்ரவரவஹிதம்-
ஶாத்ரவாரிநாகக்ரஹாதீந்
வாஞ்சிதார்த்தப்ரதாயீ பவது நஶிக-
க்ஷதயே ஸ்யாதகோர: ॥ ௧௮௯ ॥

ம்ருத்யுஞ்ஜயபேத:—

அமலே த்வே ஸரோஜபுடா-
ந்த:ஸ்தம் ஶிஶுவேஷமீஶம் ஶம்பும் ।
த்யாத்வா ஜபாச்ச யமாச்ச
ப்ரத்யக்ஷம் ம்ருத்யுநாஶநம் த்ருஷ்டம் ॥ ௧௯௦ ॥

சிந்தாமணி: —

ஸர்ப்பஶஶிகங்காபத்ததுங்கஜடாமகுடோ-
த்விதஶரணாப்ஜோ + + + ஸ்த்ரீவிலாஸ: ।

தரும் தோற்றமுள்ளவர், பயங்கரமான முகமுள்ளவர், மூன்று கண்களுள்ளவர், செந்நிறமான ஆடையும் சிறந்த பாம்பும் உடம்பில் உடுத்தியவர், பகைவர்கள், யானைகள் (பாம்புகள்) க்ரஹங்கள் (பூதப்ரேத பிசாசங்கள்) இது போன்றவற்றைக் கடித்துத் தின்றுகொண்டிருப்பவர். விரும்பின வரங்களை யெல்லாம் கொடுக்கவல்லவர். இவ்வாறான அகோரமூர்த்தி, உங்களுடைய துன்பங்களை யெல்லாம் நீக்கவேண்டும்.

ம்ருத்யுஞ்ஜயத்தின் ஒரு வகை—௱௯௦

நிர்மலமான (தூய) தாமரை மலரிரண்டின் புடத்தினுள்ளிருப்பவரும், சிறு குழந்தை வடிவமுள்ளவருமாகிய சிவனை முறைப்படி தியானம் செய்வதனாலும், ஜபம் பண்ணுவதனாலும் நிண்ணமாக இறப்பு ஒழியும். இது பிரத்யக்ஷமாகக் கண்டவுண்மை.

சிந்தாமணி — ௱௯௧

பாம்பு, சந்திரன், கங்கை, இவற்றுடன் பிணைப்புண்ட உயர்ந்த சடை முடியுடையவரும், தேவர் கூட்டங்களால் வணங்கப்பட்ட திருவடிகளையுடையவரும், பெண்களுக்கேற்ற மெய்ப்பாடுடையவரும், தனது எட்டு கைகளால்,

[illegible]

[illegible] [1] [illegible] ॥ ௱௬௧ ॥

[1] அதவா .—

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] ॥ ௱௬௨ ॥

அநுஷ்டுப் :—

[illegible] [3] [illegible]

[illegible]

[illegible]

[illegible] ।

முறையே பாம்பு, மழு, சூலம், கத்தி, நெருப்பு, கபாலம், அம்பு, வில், இவற்றைத் தரித்திருப்பவருமான சிவ பெருமான் உங்களை வெகுகாலம் காப்பாற்றட்டும்.

வேறு — ௱௬௨

பலவிதமான சிருங்கார சேஷ்டைகளும், எண்ணங் களும் கலந்த அழகிய அர்த்தநாரி (பாதி பெண்) வேஷத்தில் இருப்பவரும், பயங்கரமான மற்றொரு பாதி (ஆண் பகுதி)யை உடையவரும், தனது நான்கு கைகளில், முறையே பாசம், குவளை மலர், கபாலம், சூலம் இவற்றைத் தரித்திருப்பவரு மாகிய பரமசிவனை ஜபம் செய்யும்பொழுது த்யானிப்பது செல்வத்தைத் தரும்.

அனுஷ்டுப் — ௱௬௩

வெண்மையான தூய தாமரை மலரில் இருப்பவரும், நன்றாகப் பிரகாசிக்கிற ஆபரணங்களணிந்தவருமாகிய சிவ பெருமான், தனது இரு கரங்களினுள்ளே, நிறைந்த குடத் தைத் தரித்திருப்பர். மற்ற இரண்டு கைகளால் வேதத்தை யும் அக்ஷமாலையையும் தரித்திருப்பர். மற்றுமிரண்டு கை

---

(1) 'பரிஶோபி' என்றும் பாடம். இதன் பொருள் விளங்கவில்லை.

(2) இந்த ச்லோகம் சில சுவடிகளில் இல்லை.

(3) உ என்று பாடம். மடியில் என்பது அதன் பொருள்.

ஸாந்த்³ரம் கும்பௌ⁴ ச ஹஸ்தைர்த³த⁴தௌ

　　ஶிரஸி ஶஶிகலாபூ⁴ஷணே

ஸ்ராவயந்தௌ தே³ஹம் தே³வோ த³யாந꞉

　　ப்ருதி²ஸுதா⁴ விஶதா³க்லின்நகாய꞉ ஶ்ரியம் வ꞉ ॥ ௧௱௬௩ ॥

ஸம்வாத³ம் :—

பத்³மஸ்த²ஶீதாம்ஶுமத்⁴யே நிஷண்ணம்

　　கரவிலஸிதபாஶம் ஸாங்குஶம் ஸாப⁴யம் ச ।

விமலஶஶிபயோக்ஷீரகௌ³ரம் த்ரிநேத்ரம்

　　ப்ரணமத ஸுரவக்த்ரம் ஶீக்⁴ரம் ¹ஸம்வாத³யந்தம் ॥ ௧௱௬௪ ॥

களால் எப்பொழுதும் நிறைந்ததாகவேயுள்ள இரண்டு குடங்களைத் தாங்கிக் கொண்டிருப்பர். அவ்விரண்டு குடங்களினின்றும் அமுதம் போல் பெருகிவரும் தண்ணீரால், பிறைச் சந்திரனுடன் மிளிரும் தனது சிரஸ்ஸில் அபிஷேகம் பண்ணிக்கொண்டு நனைந்த உடம்பை யுடையவரா யிருப்பர். இவ்வாறான தேவன் (சிவன்) உங்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

ஸம்வாதம் — ௱௬௪

வெண்ணிறமான தாமரை மலரில் அழகாய் பிரகாசிக்கும் சந்திரன் மத்தியில் அமர்ந்திருப்பவர், தனது நான்கு கைகளில், முறையே; பாசம்-அங்குசம் அபயதான-முத்திரை வரதான முத்திரை இவற்றைத் தரித்திருப்பர். நிர்மலமான (களங்கமற்ற) சந்திரன், பால் இவற்றைப் போல் வெண்ணிறமானவர், மூன்று கண்களுள்ளவர், தேவர்களுக் கெல்லாம் முகம்போன்ற (தமான ஸம்வாத மந்திரத்தை சீக்கிரம் வணங்குங்கள்) வர். "ஸம்வாத ஸூக்தத்தைச் சொல்லிக்கொண்டிருப்பவர்." இவ்வாறான சிவ பெருமானை வணங்குங்கள்.

---

(1) ".... யந்தம்" என்றே ப்ரபஞ்ச ஸாரத்தில் பாடம் உள்ளது.

ஶக்தி பஞ்சாக்ஷரீ :—

அதோ⁴ கல்பத்³ருமஸ்ய த்³ருதகநகநிப⁴ம்
சாருபத்³மாஸநஸ்த²ம்
வாமாங்காரூட⁴கௌ³ரீ நிபி³ட³குசப⁴ர
ஆபோ⁴க³கா³டோ⁴பகூ³ட⁴ம் ।
ஸர்வாலங்காரகாந்தம் வரபரஶு
ம்ருகா³பீ⁴திஹஸ்தம் த்ரிநேத்ரம்
வந்தே³ பா³லேந்து³ [1]மௌலிம் க³ஜவத³நகு³ஹா
ஶ்லிஷ்டபார்ஶ்வம் ॥ ௧௩௫ ॥

[2]அத²வா :—

வந்தே³ ஶூலம் வரத³மப⁴யம் கபாலம் த³தா⁴நம்
[illegible] ।

சக்தி பஞ்சாக்ஷரீ — ௩௩௫

கற்பக விருக்ஷத்தின் அடியில் அழகிய பத்மாஸனத்தில் அமர்ந்திருப்பார். உருக்கின பொன்போன்ற திருமேனி நிறமுடையவர் இவரது இடதுபுறம் மடியில் பார்வதி அமர்ந்திருப்பாள், அவளால் தனது அடர்த்தியான (இடைவெளியில்லாத) கொங்கைகளால் அகன்றமார்பில் நன்றாக அணைத்துக் கொள்ளப்பட்டிருப்பார். ஆபரணங்கள் எல்லாம் அணிந்து அழகு மிகுந்தவராய் மனதைக் கவருகிறவராயிருப்பர். வரதான முத்திரை, மழு, மான், அபயதான முத்திரை, இவற்றைத் தனது நான்கு கைகளால் தரித்திருப்பர். மூன்று கண்களுள்ளவர். பிறைச் சந்திரனை முடியில் சூடியவர். முருகன் பிள்ளையார் இவர்களால் இருபுறங்களிலும் சூழப்பட்டவர். இவ்வாறான சிவபெருமானை வணங்குகிறேன்.

இதுவுமது (வேறுருவகை) — ௩௩௬

வரதான முத்திரை, சூலம், கபாலம், அபயதான முத்திரை இவற்றைத் தனது நான்கு கைகளால் தரித்திருப்பர்.

(1) "வ-ிபம்" என்றும் பாடம். பொருளில் வேறுபாடு இல்லை.
(2) [illegible] இல்லை.

𑌵𑌾𑌮𑍋𑌰𑍁 𑌪𑍀𑌠𑌤𑌯𑌾 𑌨𑌿𑌜𑌵𑌾𑌮𑌸𑍍𑌥𑌯𑌾
𑌧𑍃𑌤𑌕𑌰𑌶𑍋𑌣𑍋𑌤𑍍𑌪𑌲𑌯𑌾 𑌪𑌰𑌿𑌰𑌬𑍍𑌧𑌦𑍇𑌹𑌃 ॥ ௱௧௬ ॥

𑌕𑌾𑌲𑌾𑌰𑌿𑌃 :—

𑌵𑌾𑌮𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌧𑍃𑌤𑌚𑌰𑌣𑌹𑌰𑌿𑌣𑌂 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑌂
𑌬𑌿𑌭𑍍𑌰𑌚𑍍𑌛𑍁𑌭𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌰𑌪𑌿 𑌪𑌰𑍇𑌣 𑌕𑌠𑍋𑌰𑌂 𑌕𑍁𑌠𑌾𑌰𑌮𑍍 ।
𑌵𑌕𑍍𑌷𑍋𑌭𑍇𑌦𑍇 𑌤𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌶𑌿𑌖𑌰𑍇𑌣𑌾𑌤𑍍𑌰 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑍃𑌤𑌾𑌨𑍍𑌤𑌂
𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌜𑌯𑌤𑌿 𑌶𑌶𑌿𑌨𑌾 𑌬𑌾𑌲𑌕𑍋𑌟𑍀𑌰𑌮𑍌𑌲𑌿𑌃 ॥ ௱௧௭

𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌶𑌿𑌵𑌃 :—

𑌶𑍍𑌮𑌶𑌾𑌨𑌸𑍍𑌥𑍋 𑌮𑍌𑌨𑍀 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌪𑌿𑌶𑌾𑌚𑍈𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑌃
𑌜𑌟𑍀 𑌚 𑌕𑍌𑌪𑍀𑌨𑍀 𑌸𑍁𑌵𑌿𑌮𑌲𑌸𑌿𑌤𑌭𑌸𑍍𑌮𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌤𑌨𑍁𑌃 ।

தனது இடது துடையாகிற பீடத்திலமர்ந்தவளும், தன்னுடைய இடது கையில் தரிக்கப்பட்ட செந்நிறமான குவளை மலருடன் கூடியவளுமான இமயமலையின் மகளான பார்வதியினால் நன்கு தழுவிக்கொள்ளப்பட்ட உடம்பையுடையவர். சுடர்மிக்கு விளங்குகிறவர். இவ்வாறான அரனை வணங்குகிறேன்.

காலாரி — ௱௧௭

துள்ளியோடும் புள்ளிமான் குட்டியைத் தனது அழகிய காந்தியுள்ள இடது கையினால் தரித்திருப்பவரும், மற்றொரு கையினால் கொடூரமான கோடரியைத் தரித்திருப்பவரும், வெண்மையான நிறமுள்ளவரும், மூன்று முனைகளுள்ள த்ரிசூலத்தின் நுனியால் மார்பில் குத்தி யமனைக்கொன்று விட்டு நின்றுகொண்டிருப்பவரும், இளஞ் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட முடியின் நுனியை யுடையவருமான சிவபெருமான் நன்றாக விளங்குகிறார்.

கின்னரசிவன் — ௱௧௮

இவர் சுடலையிலிருப்பார். பேசாத விரதம் (மௌனம்) பூண்டவர். பலவிதமான பிசாசுகளால் நாற்புறமும் சூழப்பட்டிருப்பார். சடைகள் வளர்ந்துள்ளவர். கௌபீனம் (கோமணம்) கட்டியிருப்பார். நல்ல வெண்ணிறமான சாம்பலை உடம்பெல்லாம் பூசியிருப்பவர். கையில் பெரிய

த்ரிஶூலேநோக்ரம் க்ருத்வா நிவிஷ்டம் பபக்ஷாக்ஷ்வமஹாஸிம்
கபாலாக்நௌ ஜுஹ்வந்தம் நாநாவிதம் ந்ருஸிம்ஹஶிவ: ॥

ரக்ஷோக்ந: :—

த்ரிஶூலம் பரஶும் சைவ கபாலம் டமரும் ததா ।
பிப்ராணம் பயங்கரவபுஷம் த்ரிநேத்ரம் சந்த்ரஶேகரம் ॥

தம்ஷ்ட்ராகராலநிநதம் ப்ருகுடீகுடிலாநநம் ।
படபாக்நிஸத்ருஶம் தஹந்தம் லோகத்ரயம் ॥ ௨௦௦ ॥

பூதப்ரேதபிஶாசாம்ஶ்ச பக்ஷயந்தம் மஹாபலம் ।
ஏவம் த்யாத்வா ஜபேந்நித்யம் ரக்ஷோக்நாக்நிம் ஸமாஹித: ॥

த்ரிசூலம் வைத்திருப்பார். அதன் நுனியில் பெரியதொரு சிங்கத்தைக் குத்தியெடுத்து அதைக் கபாலாக்கினியில் ஓமம் செய்து (போட்டு)ப் பொசுக்குவார். பலவிதமான ராஜயக்ஷ்மா (எலும்புருக்கி நோய்) க்களே அந்தச் சிங்க வடிவமுள்ளதாகக் காணப்படுவது. இப்படிப்பட்ட ஸிம்ஹ ஸிவன் உங்களது தீவினையையும் கொளுத்தட்டும்.

ரக்ஷோக்னர் — ௱௯௯—௨௱௧

இவருக்கு நான்கு கைகள். அவற்றில் முறையே த்ரிசூலத்தையும், கோடரியையும், கபாலத்தையும், டமருவையும், தரித்திருப்பர். பயங்கரமான உடம்புள்ளவர். மூன்று கண்களுள்ளவர். பிறைச்சந்திரனைத் தலையிலணிந்தவர். பெரிய கோரைப்பற்களுள்ளதும், பேரொலியை யெழுப்புவதும், புருவம் நெறித்ததால் கோணலாகவுள்ளதுமான முகமுடையவர். வடபாமுகத்தினின்றும் வெளிவரும் பெருங்கனல்போன்றவர். மூவுலகங்களையும் சுட்டெரித்துக் கொண்டிருப்பவர். பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசுகள் இவற்றைத் தின்றுகொண்டிருப்பவர். மிகவும் பலமுள்ளவர். இவ்வாறாக இராக்கதர்களைக் கொல்லும் இயல்புடைய அக்கினியை, நிலைத்து நின்ற மனதுடன் தியானித்துத் தினந்தோறும் இவரது மந்திரத்தை ஜபம் பண்ண வேண்டும்.

𑌅𑌥 𑌸𑌦𑍍𑌯𑍋𑌜𑌾𑌤𑌾𑌦𑌿𑌪𑌞𑍍𑌚𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑌃

𑌸𑌦𑍍𑌯𑍋 𑌵𑍇𑌦𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌭𑌯𑌵𑌰𑌦𑌕𑌰𑌃
𑌕𑍁𑌨𑍍𑌦𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌗𑍌𑌰𑍋 𑌵𑌾𑌮𑌃

𑌕𑌾𑌶𑍍𑌮𑍀𑌰𑌵𑌰𑍍𑌣𑍋𑌽𑌭𑌯𑌵𑌰𑌦
𑌪𑌰𑌶𑍍𑌵𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑍋 𑌵𑌿𑌲𑌾𑌸𑍀 ।

𑌅𑌕𑍍𑌷𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑍇𑌦 𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶 𑌡𑌮𑌰𑍁𑌕
[1]𑌖𑌟𑍍𑌵𑌾𑌂𑌗 𑌶𑍂𑌲𑌾𑌨𑍍 𑌕𑌪𑌾𑌲𑌂

𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑍋 𑌭𑍀𑌮𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑍋𑌽𑌞𑍍𑌜𑌨𑌰𑍁𑌚𑌿𑌰𑌤𑌨𑍁
𑌰𑍍𑌭𑍀𑌷𑌣𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌯𑌘𑍋𑌰𑌃 ॥ ௨௦௨ ॥

ஸத்யோஜாதம் முதலிய
ஐந்து மூர்த்திகள் — ௨௦௨ - ௨௦௫

ஸத்யோஜாத மூர்த்தியானவர், வேதம், அக்ஷமாலை, அபயதான முத்திரை, வரதான முத்திரை, இவற்றைத் தனது கைகளால் தரித்திருப்பார். குருக்கத்திப்பூ, மந்தார மலர் இவைபோல் வெண்மையான நிறமுள்ளவர். வாமதேவ மூர்த்தி, குங்குமப்பூவின் நிறம்போன்ற வர்ணமுள்ளவர். அபயதான முத்திரை, வரதான முத்திரை, கோடரி, ருத்திராக்ஷமாலை, இவற்றைத் தனது கைகளால் தரிப்பவர். அழகிய செயல்கள் உள்ளவர். அகோரமூர்த்தி; எட்டு கைகளுடையவர். அவற்றில் முறையே; அக்ஷமாலை, வேதம், பாசம், அங்குசம், டமருகம், கட்வாங்கம் (இது சிவபெருமானுக்கே உரியது). சூலம், கபாலம், இவற்றைத் தரித்திருப்பார். பயங்கரமான பற்களையுடையவர். மெய் போல் மிக மிகக் கருப்பான நிறமுள்ளவர். மா பெரும் உடலுள்ளவர். பார்த்தவர் நடுங்கும்படியானவர்.

---

(1) "𑌖𑌟𑍍𑌵𑌾𑌂𑌗𑌂" (கட்வாங்கம்) என்பது மண்டையோட்டுடன் இணைந்த தடி.

𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑌯𑌨𑌿𑌭𑌾𑌂 𑌵𑍇𑌦𑌾𑌭𑌯
𑌵𑌰𑌦𑌕𑌠𑌾𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑍈𑌃,
𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑌲𑍍𑌪
𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾 𑌶𑍁𑌭𑍍𑌰𑌭𑌾𑌸𑍍𑌵𑌰 |
𑌈𑌶𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌞𑍍𑌚𑌾𑌸𑍍𑌯𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌂
𑌕𑌰𑌕𑌶𑍋𑌭𑌿𑌤𑌂
𑌵𑌞𑍍𑌚𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑌨𑌾𑌥𑌶𑍇𑌖𑌰𑌵𑌿𑌵
𑌰𑌦𑍇 𑌸𑍍𑌵𑌰𑌾𑌃𑌸𑍍𑌯𑍁𑌃 𑌶𑌿𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌃 ॥ ௨௦௬ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌯𑍍𑌯𑌾𑌨𑍇
𑌶𑍈𑌵𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂 𑌨𑌾𑌮 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

தத்புருஷ மூர்த்தி

இவரது நிறம் மின்னல்போன்றது. இவருக்குக் கைகள் நான்கு. அவற்றில் முறையே வேதம், அபயதான முத்திரை, வரதான முத்திரை, கோடரி, இவற்றைத் தரித்திருப்பர். ஸத்யோஜாதம் முதலிய இம்மூர்த்திகள் யாவருமே மூன்று கண்களுள்ளவர்கள். மேலும் ஒவ்வொருவருக்கும் நந்நான்கு முகங்கள், கைகளும் நான்கு. ஈசான மூர்த்திக்குமட்டும் ஐந்து முகம். இவர் முத்துபோல் வெண்மையான நிறமுள்ளவராயிருப்பர். இவருக்கு அகோர மூர்த்தியைக் காட்டிலும் மேலும் இரண்டு கைகள் அதிகம். அவற்றில் அபயதான முத்திரையும், வரதான முத்திரையும் தரித்திருப்பர். (மற்ற எட்டு கைகளும் அவற்றில் தரிக்கும் பொருள்களும் அகோர மூர்த்தியைப் போலவே இவருக்கும் எனக் கண்டுகொள்வது). இவ்வாறாக ஈசான மூர்த்தியை த்யானிக்கவேண்டும். இவ்வைந்து மூர்த்திகளுக்கும் முறையே, பிரமன், விஷ்ணு, ருத்ரன், ஈசுவரன்: சிவன், என்னுமிவர்கள் அபிமானி தேவதைகளாவார்கள்.

சிற்பரத்தினத்தில் பிற்பகுதியில், த்யானங்களைச் சொல்லுமிடத்தில்,
சைவப்பிரகரணமெனப்படும்
இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ:

அத த்ரயோவிம்ஶோऽத்யாய: ॥

அத வைஷ்ணவ ப்ரகரணம் — அஷ்டாக்ஷரீ :—

ஸகேயூரவாஹம் கிரீடாந்வித மகரலஸத்குண்டலம்
தீப்திராஜத்கேயூரம் கௌஸ்துபாபாஸ்யம்
ஶோபமாநாம் ஹீர ஹாரம் (ரத்நஹாரம்)
ஹாரம் பீதாம்பராட்யம் ।

நாநாரத்நாம் ஶுபாபரண
ஶதகாஞ்சம் ஶ்ரீபராஶ்லிஷ்டபார்ஶ்வம்
வந்தே தோ:ஶங்கசக்ராம்போருஹகதம்
விஶ்வவந்த்யம் தேவதேவம் ॥ க ॥

இருபத்து மூன்றாவது அத்தியாயம்

வைஷ்ணவப் பிரகரணம்.

அஷ்டாக்ஷரீ — க (எட்டெழுத்துள்ள விஷ்ணுமந்திரம்)

ஆயிரங்கோடி ஸூர்யன்களுடையது போன்ற ஒளியுள்ளவர், கிரீடத்துடன் கூடி ஒளிவீசும் மகர குண்டலங்கள் (முதலை வடிவமான காதணிகள்) உள்ளவர், தனது ஒளிக்குவியலினால் மிளிரும் தோள்வளைகளுள்ளவர், கௌஸ்துபமென்னும் செழுமணியுடன் திகழ்பவர், பலவிதமான ஒளிவீசும் முத்துமாலையுள்ளவர், அழகிய பீதம்பரம் (பொன்னுடை) அணிந்தவர், பலவிதமான இரத்தினங்களின் காந்திகளுடன் தனித்தனியே மிளிர்கின்ற எண்ணற்ற ஆபரணங்கள் உள்ளவர், லக்ஷ்மி, பூதேவி, இவர்களால் இருபுறங்களிலும் அணைக்கப்பெற்றவர், தனது கைகளால், சக்கரம், தாமரைப்பூ, சங்கு கதை இவற்றை ஏந்தியவர், உலகங்களுக்கெல்லாம் வணங்க வேண்டியவர்: இவ்வாறான முகுந்தனை வணங்குகின்றேன்.

கா³யத்ரீ :—

த்⁴யேய: ஸதா³ ஸவித்ருமண்ட³லமத்⁴யவர்தீ
நாராயண ஸரஸிஜாஸநஸந்நிவிஷ்ட: ।
கேயூரவாந் மகரகுண்ட³லவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபுர் த்⁴ருதஶங்க²சக்ர: ॥ ௨ ॥

த்⁴ருதஶங்க²(க³தா³) சக்ரவாரிஜமுதா
காஞ்சோஜ்ஜ்வலபாணிம் ஸிதபத்³மக³தம் ।
ஸவலயாங்க³த³ஹார கிரீடத⁴ரம்
நவகாஞ்சநிப⁴ம் ப்ரணமாமி ஸதா³ ॥ ௩ ॥

ஶ்ரீகா³ருடா³ஷ்டாக்ஷரம் :—

க்ஷீராப்³தி⁴த்³வீபமத்⁴யே ப்ரவிலஸித
ஸுரோத்³யாந கல்பத்³ருமாதோ⁴
ப⁴த்³ராம்போ⁴ஜந்மபீடே² பரிக³தவிநதா-
நந்த³நஸ்கந்த⁴ஸம்ஸ்த²: ।

காயத்ரீ — ௨-௩

எப்பொழுதும் சூரியமண்டலத்தின் நடுவில் அமர்ந்திருப்பவர், தாமரை மலராசனத்தில் வீற்றிருப்பவர், அழகிய தோள்வளைகள், மகரகுண்டலங்கள், கிரீடம் இவைகளையுடையவர், முத்துமாலையணிந்தவர், பொன்மயமான திருமேனியுள்ளவர், சங்கு சக்கரங்களையேந்தியவர், இவ்வாறாக ஸ்ரீமந் நாராயணனை த்யானம் செய்யவேண்டும்.

சங்கு, சக்கரம், தாமரை மலர், கதை, இவற்றை யேந்தியபடி பிரகாசிக்கும் உழவைத்தடியைப்போன்ற திருக்கைகளையுடையவர், வெண் தாமரை மலரில் அமர்ந்திருப்பவர், கைவளைகள், தோள்வளைகள், முத்துமாலை, கிரீடம், இவற்றைத் தரித்தவர், அப்போதலர்ந்த குருக்கத்தி மலர் போன்ற நிறமுள்ளவர், இவ்வாறான (ஸ்ரீமஹாவிஷ்ணுவை) எக்காலமும் வணங்குகின்றேன்.

ஸ்ரீ கராஷ்டாக்ஷரம் — ௪

திருப்பாற்கடலின் மத்தியில் ஒரு தீவு. அதில் சிறப்புடன் திகழும் தேவர்களுடைய பூங்கா. அதிலுள்ள கற்பகமரத்தின் கீழ், மங்களமான தாமரைமலரின்மேல் வீற்றிருப்பார் கருடன். அவருடைய தோளின்மேல் அமர்ந்திருப்பவர்,

தோர்பிர் பிப்ரத் ரதாங்கம் வரதயுக்
கதாபத்மே ச ஸ்வர்ணவர்ணே
பாஸ்வத்கோடீரஶாலீ விசித்ராபரண பரிகத:
ஸ்யாச்ச்ரியை வோ முகுந்த: ॥ ௪ ॥

ஸுதர்ஶநம்:—

சித்ராபார்கப்ரகாஶ ப்ரபா
பாபிர்திஶோ பாஸயந்
பீமாக்ஷ: க்ஷுப்தாட்டஹாஸ-
விலஸத்தம்ஷ்ட்ராப்ரதீப்தாநந: ।
தோர்பிஶ்சக்ரம் தரௌ கதாப்ஜமுஸலே
ப்ராஸம் ச பாஶாங்குஶௌ
பிப்ரத் பிங்கஶிரோருஹோऽவது வ:
சக்ராபிதாநோ ஹரி: ॥ ௫ ॥

தனது திருக் கைகளால், சக்கரம், வரதம், (வேண்டியவற்றைக் கொடுக்கும் பாவனையிலுள்ள கைமுத்திரை) பொன்னிறமான கதை, தாமரை மலர் இவற்றைத் தரித்திருப்பவர், ஒளிவீசும் கிரீடம் தரித்திருப்பவர், அற்புதமான அணிகளால் திருமேனி முழுதும் அலங்கரிக்கப் பெற்றவர், இவ்வாறான முகுந்தன் உங்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

ஸுதர்சனம்—ரு

பலவகையான நிறமுள்ள சூரியனுடைய சிறந்த ஒளிகளால் திக்குக்களையெல்லாம் விளங்கச் செய்பவர், பயங்கரமான கண்களையுடையவர், கிளர்ந்தெழுகின்ற அட்டஹாஸத்தினால் (உரத்த குரலுடன்கூடிய நகைப்பு) பிரகாசிக்கின்றன கோரைப் பற்கள்; அவற்றால் கொழுந்துவிட்டெரிகின்றது போன்ற முகத்தை உடையவர்; கைகளால் சக்கரம், சங்கம், கதை, தாமரை மலர், உலக்கை, ஈட்டி, பாசம், அங்குசம், இவற்றைத் தரித்திருப்பவர், பொன்னிறமான தலைமயிர்களையுடையவர், சக்கரத்தாழ்வான் என்னும் பெயருள்ளவர். இவ்வாறான விஷ்ணு உங்களைக் காப்பாற்றட்டும்.

अथ सुदर्शनचक्रम्:—

शङ्खं चक्रं च चापं परशु-
मसिमिषुं शूलपाशाङ्कुशाग्नीन्
बिभ्राणं वज्रखेटं हलमुसल-
गदाकुन्तमत्युग्रदंष्ट्रम्।
ज्वालाकेशं त्रिनेत्रं कनक[illegible]
गात्रमत्युग्ररूपम्
ध्यायेत् षट्कोणसंस्थं सकलरिपुजन-
प्राणसंहारचक्रम्॥ ६॥

अथ नृसिंहः:—

जान्वोरासक्ततीक्ष्णस्वनखरुचि-
लसद्बाहुसंलग्नकेशः
चक्रं शङ्खं च दोर्भ्यां
दधदनलसमज्योतिषा दग्धदैत्यः।

தண்டிக்கும் சக்கரம்—௬

சங்கு, சக்கரம், வில், மழு, எறியும் கத்தி, அம்பு, சூலம், பாசம், அங்குசம், நெருப்பு, வெட்டும் கத்தி, (வாள்) கேடயம், கலப்பை, உலக்கை, கதை, ஈட்டி, இவற்றைத் தரித்திருப்பவர், நெருப்புக் கொழுந்துகளையே தலைமயிராக வுடையவர், மூன்று கண்ணுள்ளவர், பொன்னிறமாகத் திகழும் திருமேனியுள்ளவர், மிக்க பயங்கரமான வடிவமுள்ளவர், ஆறுகோண (மூலைகள்) முள்ள கட்டத்திலமர்ந்திருப்பவர், பகைவர்கள் அனைவருடைய உயிரையும் அழிக்கும் இயல்புள்ளவர். இவ்வாறான சக்கரத்தாழ்வாரை வணங்குகின்றேன்.

நரசிங்கம்—௭

முழங்கால்களில் பொருத்தப்பட்டவையும், கூரிய தனது நகங்களின் காந்தியினால் பிரகாசிக்கின்றதுமான புஜங்களில் பரவி விழுந்த (பிடரி) மயிர்களையுடையவர், சங்கு சக்கரம் இவற்றை (மற்ற) இருகரங்களால் தாங்கியவர், கனல் போன்ற (தனது திருமேனியின்) ஒளியினால் அசுரர்களை

ஜ்வாலாவலீவலயிதோ ரவிசசி-
தஹந த்ரீக்ஷணோ தீப்தஜிஹ்வோ
தம்ஷ்ட்ரோக்ரம் யன்முககேசம் தூதகேசோ வஹந்து
பாதாத்ஸ வோ நரஸிம்ஹ: ॥ ௭ ॥

அத விதாரண ந்ருஸிம்ஹ:—
உத்யத்ஸஹஸ்ரரவிஸந்நிபம்
த்ரீக்ஷணோக்ரவஜ்ரம்
வஹ்நிந் நயாய விஸ்ருஜந்தமிவ
ஸடாவலீஷணம் ஸமுதீக்ஷணேப்ய: ।
தீப்தாம்சுதீப்தமம் ஸ்வநவரத்ந
ஹேமாங்கமாத்யபரணை ரதநத்யகே:
ஸம்பிந்நதைத்யபதிதேஹம்
ததநந்ததநும் நரஸிம்ஹம் நமாமி ॥ ௮ ॥

மூறியடித்தவர், ஜ்வாலைகளின் வரிசைகளால் சூழப்பெற்றவர், சூரியன், சந்திரன், அக்கி, இம்மூன்றையுமே மூன்று கண்களாக உடையவர், பளபளப்பான (ஒளி வீசுகின்ற) நாக்கையுடையவர், கோரைப்பற்களால் பயங்கரமான முகம், அதில் உதறி அசைக்கப்பட்ட மயிர்களையுடையவர். இவ்வாறான நரசிங்கப்பெருமான் உங்களைக் காக்கட்டும்.

(இரணியனைக்) கீண்ட நரசிங்கம் – அ

ஆயிரம் கோடி சூரியன்கள் உதயமானாற்போன்ற ஒளியையுடையவர், வஜ்ராயுதம் போன்றவர், மூன்று கண்களாலும், பார்வையினாலேயே சட்டென நெருப்பைக் கக்குகிறவர், மின்னல் கூட்டங்கள்போல் வானளாவியிருக்கும் பிடரி மயிர்களால் பயங்கரமானவர், ஒளிக்கதிர்களால் மிளிர்கின்ற பலவிதமான திருவாபரணங்களால் ஜ்வலிக்கின்ற பொன் மேனியையுடையவர், தனது நகங்களது காந்தியினால் பிரகாசிக்கின்றவையும், பருத்து நீண்ட தடிபோன்றவையுமான கைகள் பலவற்றோடுகூடியவர், அசுரர்குலத் தலைவன் (இரணியன)து உடலைக் கீண்டவர், மிகப் பெரிய திருமேனியுடையவர். இவ்வாறான நரசிங்கப் பெருமானை வணங்குகின்றேன்.

த்விதீய: ஷடக்ஷரீ :—

ஸ்வாபாவ்யா த்விவ்யராஜத்ரௌத்ராக்ருதிரதி-
 விக்ரு(வ்ரு)தாஸ்யோல்லஸத்தீக்ஷ்ணதம்ஷ்ட்ர:
சக்ரம் ஶங்கம் ச பாஶாங்குஶகுலிஶ
 கதா தாரணாவ்யாப்ருதாங்க: ।
ரக்தாகாரஸ்த்வநாபே ரத உபரி ஸிதோ
 திவ்யபூஷாவிஶேஷா
தேவோ ஸூர்யாக்நீந்துநேத்ரா
 ஸகலஸுகதோ நாரஸிம்ஹ: ஶ்ரியம் வ: ॥ ௯ ॥

அத வராஹ: :—

ஜாநோ ராபாத ஶுத்தகநக ஸம
 ஹிமவத் ராஜநாபே: நாபே:
கண்டாதாநாமி வஹ்நிப்ரப ஶி
 ஶிரஸ ஶ்யாமலம் நீலவர்ணம் ।

ஆறு எழுத்துக்களுள்ள மற்றொருவகை—௯

இயற்கையிலேயே (ஒரு காரணமுமில்லாமலே) பயங்கரமான வடிவமுள்ளவர், அதிகமாக விகாரமடைந்துள்ள (அதிகமாகத் திறக்கப்பட்ட) முகத்திலுள் பிரகாசிக்கின்ற கூர்மையான பற்களையுடையவர், சக்கரம், சங்கு, பாசம், அங்குசம், வஜ்ராயுதம், கதை, இழிக்கும் கைகள் (தாரணம்) இவற்றைத் தரித்திருப்பவர். நாபித்தலத்தின் கீழ் சிகப்பான நிறமுள்ளவர், மேல்புறத்தில் வெண்மையான நிறமுள்ளவர், திவ்யமான அணிகளால் பிரகாசிப்பவர், சூரியன், அக்னி, சந்திரன், இவற்றையே கண்களாக உடையவர், அனைவருக்கும் ஸௌக்கியத்தைக் கொடுப்பவர். இவ்வாறான நரசிங்கப்பெருமான் உங்களை நீண்டகாலம் காப்பாற்றட்டும்.

வராஹப் பெருமான் — ௰

பாதங்களிலிருந்து முழங்கால்கள் வரை, சிறந்த பொன்னிறமானவர்; அதிலிருந்து நாபிவரை பனி போன்ற நிறமுடையவர்; அதினின்றும் கழுத்துவரை அனல்போன்ற ஒளியையுடையவர்; அங்கிருந்து தலைவரை நீல நிறமுடையவர்; தலையினின்றும் கிரீடம் வரை

¹ द्यौरिव व्योमाभो भास्वच्चक्रं करसरसि-
शंखासिखेटं गदाख्यं
शक्तिं वराभीतियुक्तं दधत्
हस्तैर्यो भूविलसद्दंष्ट्रो वराहः ॥ ३ ॥

ध्येयः :—
सजलाम्बुदाभवपुषा परिघ-
परिघं भुजायतकराग्रतः
विपुलशैलकायधृतसितया
दंष्ट्रया पृथिवीं दधत् स कोलो ध्येयः ॥ ३१ ॥

वराहश्री :—
श्रीमत्कल्पद्रुमोद्यत्
कमलमणिलसत्कर्णिकामध्यसंस्थ-
स्कन्धावालम्बिपद्मोत्पल विगलद्-
संव्याप्त रत्नाभिषिक्तः ।

ஆகாயம்போன்ற நிறமுள்ளவர், ஒளிமிகுந்த சக்கரம், சங்கு, கத்தி, கேடயம், கதை, சக்தி, (வேல்) வரத முத்திரை அபய முத்திரை, இவற்றைக் கைகளால் தாங்கியிருப்பவர், தனது கோரைப் பல்லில் பிரகாசிக்கின்ற பூமியுடன் கூடியவர். இவ்வாறான வராஹப்பெருமானை வணங்குமின்!

அதில் ஒருவகை — ௩க

நீர்கொண்ட மேகம்போன்ற நிறமுள்ளவர், உழலைத் தடிபோன்ற கைகளை உயரத் தூக்கியபடி யுள்ளவர், மலைபோன்ற பெரிய திருமேனியுடையவர், வெண்மையான கோரைப் பல்லால் பூமியைத் தாங்கியவர். இவ்வாறாகவும் இவ்வராஹ நாயனாரை த்யானிக்கக் கூடும்.

நான்கெழுத்துள்ள மந்திரம்—௩௨

சீர்மிக்க கற்பக மரத்தின்மேல் மலர்ந்த ஒளிமிக்க தாமரைப் பூவினுடைய அழகிய இதழ்களின் மத்தியில் வீற்றிருப்பவர், அதன் கிளைகளில் தொங்குகின்ற தாமரை மலர்களின் உட்புறத்தினின்றும் உதிரும் எண்ணிறந்த

---

(1) " द्यौरिवव्योमाभं " என்றும் ஒரு பாடமுண்டு.

ஶோணீபி: ஸ்வப்ரபாபி: த்ரிபுவநமகிலம்
பாஸயந் வாஸுதேவ:
பாயாத்வ: பாயஸாஶீ நவநவ
நவநீதாம்ருதாஶீ வஶீ ஸ: ॥ ௰௨ ॥

தந்வந்தரி:—

க்ஷீராப்தேர் மத்யமாநாதம்ருதமபீப்ஸ-
த்பிர் தேவபுத்ரௌகதேவை-
ருத்தீர்ண: பீதவாஸா கநருசிருசி-
ர்விஶ்வலோகத்ராணஹேது: ।
பிப்ரத் தோர்பிஶ்சதுர்பிர் ஜலூகா-
மபயம் சாம்ருதம் ஶஸ்த்ரயந்த்ரம்
ஸோऽஸௌ தந்வந்தரிர் ந: ஸகலகத-
பயாத் பாது தேவ: ஸதாத்ய: ॥ ௰௩ ॥

இரத்தினங்களால் அபிஷேகம் பண்ணப்பெற்றவர், பொன்னிறமான தனது திருமேனியின் ஒளியினால் மூவுலகையும் விளங்கச் செய்பவர், பால்சோறு, புத்தப் புதியதான வெண்ணெய், அமுதம் இவற்றை யுண்பவர், எல்லாவற்றையும் அடக்கியாள்பவர். இவ்வாறான அவ் வாஸுதேவன் உங்களைக் காப்பாற்றட்டும்.

தன்வந்தரி — ௰௩

அமுதத்தை விரும்பின தேவர் குமாரர்களால் கடையப் பெற்ற பாற்கடலினின்றும் வெளிக்கிளம்பியவர், பொன்னிறமான ஆடையணிந்திருப்பவர், கார்முகில் வண்ணன், உலகங்களைக் காப்பதற்குக் காரணமானவர், தனது நான்கு கைகளால், அட்டையையும் (நீரில் வாழும் ஜந்து) அபயஹஸ்த முத்திரையையும், அமுத (கல்ய)த்தையும், சத்திர சிகித்ஸைக்கான கருவியையும் தாங்கியவர், முதற் கடவுளான அந்த தன்வந்தரியானவர் நம்மை எல்லாவிதமான நோய்களின் துன்பங்களினின்றும் நித்தமும் காக்கட்டும்.

अन्यच्च :—

शङ्खरथाङ्गजलौका रत्नमयामृतकुम्भ
व्यग्रकराब्जः काञ्चनपीताम्बराढ्यः ।
तनुवसनविराजद्द्योतमौलिरारोग्यदायी
शक्रमणिवर्णः पातु धन्वन्तरिर्नः ॥ १४ ॥

हयग्रीवः :—

क्षीरोदवीचीवलये
रत्नौघशीतीकृते
दैवे हेमाश्वत्थमूले मणिमये
सिंहासने भ्राजसे ।
शुभ्राभं हयवक्त्रमिन्दुवपुषं
व्याख्यानमुद्रान्वितं
शिष्येभ्यः प्रतिपादयन्तमनिशं
शास्त्राणि [1] विद्यामहे ॥ १५ ॥

அதன் மற்ருெருவகை — ௰௪

சக்கரம், சங்கு, அட்டை, இரத்தினமயமான அம்ருத கலசம், இவைகளை யேந்திய திருக்கைகளையுடையவர், அழகிய பொன்னுடை தரித்தவர், மெல்லிய வஸ்திரத்தை உடுத்தியவர், ஒளி வீசுகிற கிரீடத்தை யுடையவர், யாவருக்கும் ஆரோக்கியத்தைக் கொடுப்பவர், இந்திர நீலக்கல்போன்ற நிறமுள்ளவர்; இவ்வாருன தன்வந்தரி பகவான் நம்மைக் காக்கட்டும்.

ஹயக்ரீவப் பெருமாள் — ௰௫

திருப்பாற்கடலில் பொங்கியெழும் அலைக் கூட்டங்களால் மிகவும் குளிர்ந்ததாகப் பண்ணப்பட்ட பொன்மயமான தெய்விகமான அரசமரத்தில், ஒளிவீசும் இரத்தின சிங்காதனத்தில் அமர்ந்திருப்பவர், சந்திரன்போல் வெண்மையான திருமேனியுடையவர், வியாக்கியான முத்திரையுடன்கூடிய திருக்கையையுடையவர், சீடர்களுக்கு எக்காலமும் சாஸ்திரங்களை உபதேசம் செய்தவண்ணமாக வீற்றிருக்கிறவர்; இவ்வாருன ஹயக்ரீவனை, (குதிரையினுடையதுபோன்ற முகமுள்ள இறைவனை) யான் அறிய வேண்டும் (தியானிக்கவேண்டும்)

(1) "भावये । का" என்றும் ஒரு பாடமுண்டு.

[illegible] —

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௬ ॥

[illegible] ;—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கார்த்தவீர்யன்—௰௬

கைலாஸமலைபோன்ற வெண்மையான ஒளியுள்ளவர், பெரிய யானை மீது அமர்ந்திருப்பவர், பயங்கரமானவர், யானைகள், தேர்கள், குதிரைகள், காலாட்கள் இவற்றின் கூட்டங்களால் நிறைந்த சேனையால் சூழப்பெற்றவர், தாமரைபோன்ற திருக்கரங்களில்; வில், அம்பு, பாசம், அங்குசம் இவற்றைத் தாங்கியவர், மிகச் சிறந்தவர், இவ்வாறான அவரை (கார்த்தவீர்யார்ஜுனனை)ப் பகைவர் கூட்டங்களை ஒழிப்பதற்காகவும், பெரும் செல்வத்துக்காகவும் தியானிக்க வேண்டும்.

ஶ்ரீ பஞ்சாம்ருதம்—௰௭

பரிசுத்தமான திருப்பாற்கடலில், தூய்மையான ஒளி ரிக்க மணிகளால் ஒளிவீசும் மணல்வெளியில், முத்துமாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற திவ்யாஸனத்தில் அமர்ந்திருப்பவர், ஸ்படிகம் போன்றவர், (ஸ்படிகம் போன்றவையான)

---

(1) "ஹ" என்றும் பாடமுண்டு. அப்பொழுது இவ் வடைமொழி யானைக்கு அமையும். கைலாஸமலை போன்ற வெண்மையான யானைமேல் அமர்ந்தவர் என்றவாறு.

शारदाभ्रभ्रमदभ्रवर्षि ¹विरचिते च
मुक्तावलीपरिभूषितदेहः
सानन्दो नः² पुनीयाद्रथाङ्गारविन्द
गदाशङ्खपाणिर्मुकुन्दः ॥ १७ ॥

सन्तानगोपालम् :—

व्याकोचन्नीलाम्भोजरुचिरुचिराङ्गं
सरोजनेत्रं सरोजस्थो
बालो जङ्घाकटीरस्थलकलित
रणत्किङ्किणीको मुकुन्दः ।
दोर्भ्यां हैयङ्गवीनं दधदतिविमलं
पायसं विश्ववन्द्यो
+ + गोपीपरीतो रुरुनखविलस
त्कण्ठभूषश्चिरं वः ॥ १८ ॥

முத்துக்களால், அலங்கரிக்கப்பட்ட திருமேனியையுடையவர், மேலே ஸஞ்சரிக்கிற வெண்மையான பெரிய மேகங்களால் பொழியப்பட்ட அமுத மழைகளால் ஆனந்தமடைந்தவர், சக்கரம், தாமரை மலர், கதை, சங்கு, இவற்றைத் திருக்கரங்களில் தரித்திருப்பவர்; இவ்வாறான முகுந்தன் (பக்தர்களுக்கு போக மோக்ஷங்களை அளிப்பவரான ஸ்ரீமந் நாராயணன்) நம்மைப் பரிசுத்தமாகப் பண்ணவேண்டும்.

ஸந்தான கோபாலம்—கஅ

மலர்ந்த நீலத்தாமரைமலர்போன்ற நிறமுள்ள திருமேனியை யுடையவர், செந்தாமரைபோன்ற கண்ணுள்ளவர், தாமரை மலரில் அமர்ந்திருப்பவர், இளவயதினர் (சிறுவயதினர்), முழங்காலின் கீழ்ப்புறத்திலும் இடையின் பின்புறத்திலும் கோர்த்துக் கட்டப்பட்டவையும் இனிமையாக ஒலிக்கின்றவையுமான பொன் மணிகளை யுடையவர்; இரு கைகளாலும் மிகவும் நிர்மலமான (தூய்மையான) நவநீதத்தை (நேற்று கறந்த பசுவின் பாலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெயை)யும் நிர்மலமான பாயஸத்தையும் (பால் சோற்றையும்) ஏந்தியவர், உலகங்களிலுள்ளார் யாவராலும் வணங்கப்படுபவர், கோப கன்னிகைகளால் சூழப்பெற்றவர், ருரு எனப்படும் ஒருவகை மானின் (அல்லது ஒருவகையான நாயின்) நகத்துடன் பிரகாசிக்கும் கழுத்து மாலையை யுடையவர்; இவ்வாறான முகுந்தன் உங்களை வெகுகாலம் காப்பாற்றட்டும்.

---

(1) "விர..." என்றும் பாடம்.

(2) "வ:" என்றும் பாடம். "உங்களுக்கு" என்று பொருள்.

த்யானம் :—

சக்ரஶங்கதரம் க்ருஷ்ணம் ரதஸ்தம் ச சதுர்புஜம் ।
ஸர்வாபரணஸந்தீப்தம் பீதவாஸஸமச்யுதம் ॥ ௧௯ ॥

த்விஜவர்யார்சகம் விஷ்ணுதேஜோபப்ரும்ஹிதம் ।
ஸமர்ப்பயந்தம் விப்ராய நஷ்டாம்ஸ்தத்தனூ ஸபாலகான் ॥ ௨௦ ॥

ஆவஹந்தீ :—

ஶோணநலினஸம்ஸ்தம் காஞ்சனோத்தீப்தவர்ணம்
கரயுததரசக்ரம் பீதகௌஶேயவஸ்த்ரம் ।
கனககலஶ × ரக்தோத்பலாஸக்தபாணிம்
ஶ்ரியமுபயகராப்யாம் பிப்ரதம் நௌமி விஷ்ணும் ॥ ௨௧ ॥

அதன் மற்றொருவகை—௧௯

சக்கரம், சங்கு இவற்றைத் தரிப்பவர், தேரில் அமர்ந்தவர், நான்கு கைகளுள்ளவர், எல்லா ஆபரணங்களாலும் ஒளி வீசுகின்ற திருமேனியை யுடையவர், பொன்னிறமான ஆடையணிந்தவர், தன்னை யடைந்தவரைக் கைவிடாதவர், சிறந்த அந்தணர்களைப் பூஜிப்பவர், (அல்லது சிறந்த அந்தணர்களால் பூஜிக்கப்படுகிறவர்) விஷ்ணு தேஜஸ் மிக்கவர், ஒரு அந்தணருக்குக் காணாமற்போன குழந்தைகளைச் சிறு குழந்தையுள்பட மீட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பவர்; இவ்வாறான கிருஷ்ணனை (வணங்குகிறேன்).

ஆவஹந்தீ — ௨௧

செந்தாமரை மலரில் வீற்றிருப்பவர், பொன்போல் மின்னுகின்ற திருமேனியை யுடையவர், கைகளில் சங்கு சக்கரங்களைத் தாங்கியவர், பொன்னிறப் பட்டாடை யுடுத்தியவர், பொற்குடம் - செந்தாமரை மலர் அல்லது செந்நிறமான குவளை மலர் இவற்றைக் கைகளில் வைத்திருக்கும் திருமகளை (ஸ்ரீ மஹாலக்ஷ்மியை) மற்ற இரண்டு கைகளிலும் தரித்திருப்பவர்; இவ்வாறான விஷ்ணுவை வணங்குகின்றேன்.

पुरुषसूक्तम् :—

गोक्षीराभं पुण्डरीकासनस्थं
चक्राब्जाढ्यं शङ्खकौमोदकीहस्तम् ।
श्रीभूमिभ्यां सेवितं योगिध्येयं
ध्यात्वा ¹देवं पूजयेत् पौरुषाख्यम् ॥ २२ ॥

लक्ष्मीनारायणौ :—

पद्मे विद्यां सरसिजगदाशङ्खचक्राणि बिभ्रत्
पद्मादर्शौ कनककलशं मेघविद्युन्निभाभम् ।
वामोत्तुङ्गस्तनघनतराकल्पगाढाश्लेषलोला
देहैकत्वं वपुरवतु वः पुण्डरीकाक्षलक्ष्म्योः ॥

புருஷஸூக்தம்—உஉ

பசுவின் பால்போன்ற திருமேனி நிறமுள்ளவர், செந்தாமரை மலராகிய ஆஸனத்தில் அமர்ந்தவர், சக்கரம், தாமரை மலர், சங்கு, கௌமோதகீ எனப்படும் கதை இவற்றை (நான்கு கைகளால்) தாங்கியவர், திருமகள் (ஸ்ரீதேவி), நிலமகள் (பூமிதேவி), இவர்களால் பூஜிக்கப் பட்டவர், யோகிகளால் தியானிக்கப்பட்டவர்; இவ்வாறாகத் தியானித்து "புருஷன்" எனப்படுகின்ற இறைவனைப் பூஜிக்கவேண்டும்.

லக்ஷ்மீநாராயணம் — உ௩

தாமரைமலர், கதை, சங்கு, சக்கரம், இவற்றையும், வித்யை, தாமரைமலர், கண்ணாடி, பொற்குடம், இவற்றையும் கையிலேந்தியது; மேகம், மின்னல், இவற்றினுடையதுபோன்ற அழகுள்ளது, இடதுபுறம் உன்னதமான கொங்கையுடையது, அடர்த்தியான ஆபரணங்கள் உள்ளது, ஒருவருக்கொருவர் அணைத்துக் கொள்வதில் ஆசை மிகுதியால் சரீரம் ஒன்றாகிவிட்டது, இவ்வாறான செந்தாமரைக் கண்ணனுடையவும் திருமகளுடையவும் திருமேனி உங்களைக் காக்கட்டும்.

---

(1) "दिव्यम्" என்றும் பாடம்.

த்வாவிம்ஶத்யக்ஷரீ :—

வேணும் வேதமயம் க்வணந் ம்ருதுஶகம்
ஶ்ரவ்யாம்வலிம் ஸவ்யாம்வலிம் ச
பாணிப்யாம் கமலோபமாப்யாம் ஜபவஸநம்
வேதம் ததாநோ ஹரி: ।
வாணீவேஷ விசித்ரவேஷ விலஸ-
த்தேஹஶ்ரியா ஸேவ்யதாம்
அஜ்ஞாநாத்யதமோவிநாஶநபடு:
ஸர்வார்த்ததஸ் ஸந்ததம் ॥ ௨௪ ॥

விம்ஶத்யக்ஷரீ :—

ஶ்ரீமத்யாம் த்வாரகாயாம் நவகநகமயே
மத்யே ரத்நநத்யோ:
த்வய்யோ: கல்பத்ருமூலே
[1]விமலமணிமயூகமண்டபே ஸந்நிவிஷ்ட ।

இருபத்திரண்டெழுத்துள்ள மந்திரம் — ௨௪

வேதவடிவமான புல்லாங்குழலை இசைப்பவர், தாமரை மலர் போன்ற இரண்டு கைகளிலும், ஜபம் பண்ணுவதற்கான வஸ்திரத்தையும், வேதத்தையும் தரித்துக்கொண்டிருப்பவர்; இவ்வாறான திருமால் (ஸ்ரீ மஹாவிஷ்ணு) எனக்கு எல்லா விதமான மேன்மைகளையும் கொடுக்கட்டும். கலைமகளின் வேஷம்போன்ற அற்புதமான வேஷத்தால் (ஆடையாபரணங்களால்) பிரகாசிக்கின்ற திருமேனியுடையவரும், அறியாமை எனும் இருளை அழிப்பதில் தேர்ச்சிபெற்றவரும், வேண்டிற்றெல்லாம் தரும் இயல்பு உள்ளவருமான (ஸ்ரீ மஹாவிஷ்ணு) உன்னால் எக்காலமும் வணங்கப்படவேண்டும்.

விம்சத்யக்ஷரீ — ௨௫

செல்வம் மல்கும் த்வாரகா பட்டணத்தில், புதிய பொன்மயமான தரையில், இரத்தினங்களைக் கொழிக்கும் இரு ஆறுகளுக்கிடையில் திகழ்கின்ற கற்பக மரத்தினடியில், சுடர்மிக்கதும் குற்றமற்றதுமான சிறந்த மண்டபத்

---

(1) "விவிதமணிமயூகமண்டபே" என்பது பாடபேதம். பலவிதமான இரத்தினங்களால் ஒளி வீசும் மண்டபத்தில் என்று அதற்குப் பொருள்.

𑌚𑌕𑍍𑌰𑌂 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌚 𑌵𑍇𑌣𑍁𑌂 𑌨𑌲𑌿𑌨𑌕𑍇𑌲𑌿 𑌗𑌦𑌾𑌂
𑌯𑍋𑌗𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌂 𑌦𑌧𑌾𑌨𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 (1) 𑌸𑌂𑌸𑌿𑌚𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌮𑌣𑌿𑌮𑌯𑌕𑌲𑌶𑍈𑌃
𑌪𑌤𑍍𑌨𑍀𑌭𑌿𑌰𑍍𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌮𑍍 ॥ ௨௫ ॥

𑌅𑌨𑍍𑌯𑌚𑍍𑌚 :—
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌮𑌣𑌿𑌮𑌯𑌵𑌿𑌟𑌪𑍇
𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌕𑌲𑍍𑌪𑌮𑍂𑌲𑍇
𑌸𑍍𑌫𑍁𑌰𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑌾𑌸𑌨𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑍇
𑌕𑍌𑌮𑍋𑌦𑌕𑍀𑌂 𑌪𑌦𑍍𑌮𑌚𑌕𑍍𑌰𑍇 𑌦𑌧𑌤𑌮𑌥 𑌶𑌙𑍍𑌖𑌂 ।

தில் ஈன்கமர்ந்திருப்பவர், சக்கரம், சங்கு, புல்லாங்குழல், தாமரைமலர்; கதை, யோகமுத்திரை, இவற்றைத் தரித்திருப்பவர், தன் காதலிகளால் இரத்தினமயமான குடங்களால் அபிஷேகம் செய்விக்கப்படுகிறவர். இவ்வாறான முகுந்தனை வணங்குகின்றேன்.

அதன் மற்றொருவகை — ௨௬.

இரத்தினங்களைக் கொழிக்கும் இரு ஆறுகளின் மத்தியில், கற்பக மரத்தின் அடியில், இரத்தின மயமான மண்டபத்தில், சுடர்மிக்க இரத்தினங்கள் நிறைந்த தாமரைமலராகிய ஆஸனத்திலுள் அமர்ந்தவர்; கதை, தாமரை மலர் சக்கரம், சங்கு இவற்றைத் தரித்தவர், பொன்னிறமான திருமேனியை யுடையவர், தனது இடதுபாதத்தினுல் இரத்தினக் குடத்தின் முகத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறவர், ருக்மிணீ முதலான (1) எட்டு தேவிமார்களுடைய கையிலுள்ள இரத்தினக் குடங்களினின்றும் விழுகின்ற இரத்தின தாரைகளால் அபிஷேகம் செய்விக்கப்பட்டவர்; இவ்வாறான கோவிந்தனைத் துதிக்கின்றேன்.

---

(1) "𑌸𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑌾𑌨𑌂" என்றும் பாடம். தியானிக்கப்பட்டவர் என்று பொருள்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ உசு ॥

அத்ர பாடாந்தரம் :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ உஎ ॥

அதன் மற்றொருவகை — உஎ

குவிந்த கலாயம் பட்டாணி மலர் (நீலவர்ணமானது) போன்ற நிறமுள்ளவர், மயில் தோகையுடன் மிளிரும் குழல் கற்றையுடையவர், கோபஸ்திரீகளுடைய குவளை மலர் போன்ற கண்களால் பூசிக்கப்பட்ட (குளிர நோக்கப்பட்ட) அழகிய திருமேனியுடையவர், இடையர்களாலும், பசுக் கூட்டங்களாலும் சூழப்பெற்றவர், அழகு மிக்க தாமரை போன்ற திருமுக மண்டலத்தால் திங்களை (சந்திரனை) ஏளனம் செய்பவர், (அதைவிட அழகாக இவரது முகம் உள்ளதென்கை) பொன்னிறமான ஆடையுடையவர், புல்லாங்குழலின் இன்னோசையினால் மக்கள் யாவரையும் கிலேகுலேயச் செய்தவர்; இவ்வாறான அந்தத் தேவகியின் மைந்தன் உங்களைக் காக்கட்டும்.

---

(1) ஸ்ரீ கிருஷ்ணனுடைய தேவிமார் எண்மராவார்கள் :—

(1) ருக்மிணி, (2) காளிந்தி, (3) மித்ரவிந்தா, (4) ஸத்யா (நாக்நஜிதி), (5) ஜாம்பவதி, (6) பத்ரா, (7) ஸத்யபாமா, (8) லக்ஷ்மணை. ஸ்ரீவிஷ்ணு புராணம் 5—28.

(2) "ஜாலோ" என்றும் பாடம்

𑌤𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃:—

𑌅𑌂𑌸𑌾𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌵𑌾𑌮𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌧𑌰𑌂 𑌮𑌨𑍍𑌦𑍋𑌨𑍍𑌨𑌤 [1]𑌭𑍍𑌰𑍂𑌲𑌤𑌂
𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌕𑍋𑌮𑌲𑌾𑌧𑌰𑌪𑍁𑌟𑌂 𑌸𑌾𑌚𑌿𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑍇𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।

𑌆𑌲𑍋𑌲𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌪𑌲𑍍𑌲𑌵𑍈𑌰𑍍𑌮𑍁𑌰𑌲𑌿𑌕𑌾 𑌮𑌾𑌪𑍂𑌰𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑍁𑌦𑌾
𑌮𑍂𑌲𑍇 𑌕𑌲𑍍𑌪𑌤𑌰𑍋 [2]𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌙𑍍𑌗𑌿𑌲𑌲𑌿𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌜𑍍 𑌜𑌗𑌨𑍍𑌮𑍋𑌹𑌨𑌮𑍍 ॥

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌷𑌡𑌕𑍍𑌷𑌰𑌮𑍍:—

𑌕𑌾𑌲𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌿𑌶𑌂
𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌂
𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑍀𑌂 𑌦𑌧𑌾𑌨𑌮𑌪𑌰𑌂
𑌹𑌸𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌂 𑌜𑌾𑌨𑍁𑌨𑌿 ।

இடது காதின் குண்டலம் தோளில் ஸம்பந்தப்படுமாறு சாய்ந்திருப்பவர், சிறிது நெறித்த புருவக்கொடியுடையவர், சிறிது வளைந்த அழகிய மென்மையான உதடுகளை உடையவர், சாய்ந்த பார்வையாக நோக்கும் கண்களுள்ளவர், தளிர்போன்ற அழகிய கைவிரல்கள் அசைந்த வண்ணம் மிகவும் களிப்புடன் சிறிய புல்லாங்குழலை ஊதியவாறாக உள்ளவர், கற்பகமரத்தின் அடியில் நின்றவாறிருப்பவர், வயிற்றில் உள்ள மூன்று வலிகளால் (சதை மடிப்புக்களால்) அழகிய தோற்றமளிப்பவர், உலகையெல்லாம் மயக்கும் ஆற்றல் வாய்ந்தவர்; இவ்வாறான ஸ்ரீ கிருஷ்ணனைத் தியானிக்கின்றேன்.

ஸ்ரீராமனுடைய ஆறெழுத்து மந்திரம்—உக

கரிய மேகத்தினுடையதுபோன்ற நிறமுள்ளவர், எப்பொழுதும் வீராஸனத்திலேயே அமர்ந்திருப்பவர், (வலது கையில்) ஜ்ஞான முத்திரையைத் தரித்தவர், மற்றக் கையை முழங்காலில் வைத்திருப்பவர், (தனது) பக்கத்தில் மின்னற்

---

(1) "𑌭𑍍𑌰𑍂𑌯𑍁𑌗𑌂" என்றும் பாடமுண்டு. பொருளில் மாறுபாடு இல்லை.

(2) "𑌤𑍍𑌰𑌿𑌸𑌂𑌵𑌲𑌿𑌤𑌂" என்றும் பாடமுண்டு. அப்பொழுது பொருள் வேறு. திருமேனியில் மூன்று இடங்களில் வளைவு உண்டாயிருப்பதனால் அழகிய தோற்றமுள்ளவர் என்று பொருள்.

𑌸𑍀𑌤𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌗𑌤𑌾𑌂 𑌸𑌰𑍋𑌰𑍁𑌹𑌕𑌰𑌾𑌂
𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌂 𑌰𑌾𑌘𑌵𑌂
𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑍁𑌕𑍁𑌟𑌾𑌙𑍍𑌗𑌦𑌾𑌦𑌿𑌵𑌿𑌵𑌿𑌧𑌾-
𑌕𑌲𑍍𑌪𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌾𑌙𑍍𑌗𑌂 𑌭𑌜𑍇 ॥ ௨௯ ॥

𑌰𑌾𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑌭𑍇𑌦𑌃 :—

𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌸𑌹𑌿𑌤𑌂 𑌸𑍁𑌰𑌦𑍍𑌰𑍁𑌮𑌤𑌲𑍇
𑌹𑍈𑌮𑍇 𑌮𑌹𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑍇
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌮𑌾𑌸𑌨𑍇 𑌮𑌣𑌿𑌮𑌯𑍇
[1]𑌵𑍀𑌰𑌾𑌸𑌨𑍇 𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑍇 𑌵𑌾𑌚𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌭𑌞𑍍𑌜𑌨𑌸𑍁𑌤𑍇
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌮𑍁𑌨𑌿𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑍍
𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌭𑌰𑌤𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑌂
𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌮𑍍 ॥ ௩௦ ॥

கொடிபோல் கையில் தாமரை மலருடன் வீற்றிருக்கும் சீதையைப் பார்த்தவாறு காட்சி யளிப்பவர், கிரீடம் (திருவபிஷேகம்), தோள்வளை முதலிய அணிவகைகள் பல வற்றாலும் ஒளிவீசும் திருமேனி யுடையவர்; இவ்வாறான ஸ்ரீ ராமனை பஜிக்கின்றேன்.

இராமனைத் தியானிப்பதில் மற்றொருவகை—௩௦

கற்பக விருக்ஷத்தினடியில் பொன்னாற் செய்யப்பட்ட பெரிய மண்டபத்தில் புஷ்பக விமானத்தின் நடுவில், இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற ஆஸனத்தில் வீராஸனத்தில் வீற்றிருப்பவர், சீதையுடன் கூடியவர், எதிரில் வாயு புத்திரரான ஹநுமான் (சுவடியை) வாசித்தவண்ணம் இருக்கையில் முனிவர்களுக்குப் பரதத்வத்தை உபதேசம் செய்பவர், பரதன் முதலியவர்களால் சூழப்பெற்றவர், கார்முகில் வண்ணன்; இவ்வாறான ஸ்ரீ ராமனை (பஜிக்கின்றேன்) அடைகின்றேன்.

---

(1) இங்கு முதலில் கூறப்படும் ஆஸநம் எனும் சொல், அமரும் இடத்தையும், பிறகுவரும் "வீராஸநம்" என்பது அமருவதின் ஒரு வகை அமைப்பையும் காட்டும்.

𑌅𑌥𑌵𑌾 :—

𑌰𑌾𑌮𑌂 𑌰𑌤𑍍𑌨𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌯𑍁𑌤𑌂 𑌕𑍇𑌯𑍂𑌰𑌹𑌾𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌂
𑌸𑍀𑌤𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑌮𑌲𑌂 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌸𑍍𑌥𑌂 𑌵𑌿𑌭𑍁𑌮𑍍 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌦𑌿𑌹𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑍈𑌃 𑌸𑍁𑌰𑌗𑌣𑍈𑌃 𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌸𑌦𑌾
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌪𑌰𑌾𑌶𑌰𑌾𑌦𑌿𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌃 𑌸𑌂𑌸𑍍𑌤𑍂𑌯𑌮𑌾𑌨𑌂 𑌭𑌜𑍇 ॥

𑌵𑌾𑌮𑍇 𑌭𑍂𑌮𑌿𑌸𑍁𑌤𑌾 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑍁 𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍
    𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌸𑍁𑌤𑌃
𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌭𑌰𑌤𑌶𑍍𑌚 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑌲𑌯𑍋𑌰𑍍
    𑌵𑌾𑌯𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑍋𑌣𑍇𑌷𑍁 𑌚 ।
𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌶𑍍𑌚 𑌯𑍁𑌵𑌰𑌾𑌟𑍍
    𑌤𑌾𑌰𑌾𑌸𑍁𑌤𑍋 𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌾𑌨𑍍
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑍀𑌲𑌸𑌰𑍋𑌜𑌕𑍋𑌮𑌲𑌰𑍁𑌚𑌿𑌂
    𑌰𑌾𑌮𑌂 𑌭𑌜𑍇 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌮𑍍 ॥ ௧௨ ॥

மற்றொருவகை—௧௧-௧௨

இரத்தினங்களிழைக்கப்பெற்ற கிரீடம் (முடி) குண்டலம் (காதணி), இவற்றைத் தரித்தவர்; தோள்வளைகள், முத்துமாலைகள் இவற்றுடன் கூடியவர், இடது புறத்தில் அமர்ந்திருக்கும் சீதையுடன் இனிய தோற்றமளிப்பவர், களங்கமற்றவர், சீரிய சிங்காதனத்தில் அமர்ந்திருப்பவர், எல்லாம் வல்லவர், சுக்ரீவன் முதலிய குரங்குக் கூட்டங்களால் எக்காலமும் வணங்கப்படுகின்றவர், விச்வாமித்திரர், பராசரர், முதலிய முனிவர்களால் நன்கு துதிக்கப்படுகின்றவர்; இவ்வாறான இராமனை பஜிக்கின்றேன்.

இடதுபுறம் சீதை, எதிரில் அனுமான், பின்புறம் இலக்குமணன், இருபுறங்களிலும் சத்ருக்னனும் பரதனும். மேலும், தென்கிழக்கு தென்மேற்கு, வடமேற்கு வடகிழக்கு ஆகிய நான்கு மூலைகளிலும், முறையே ஸுக்ரீவனும், விபீஷணனும், யுவராஜாவாகிய (இளவரசாகிய) தாரையின் குமாரனும் (அங்கதனும்), ஜாம்பவானும். இவ்விதமான சேர்க்கையில் நடுவில் நீலநிறமான தாமரை மலர்போன்ற அழகிய திருமேனி நிறமுள்ள ச்யாமள வர்ணமான ஸ்ரீராமனை பஜிக்கின்றேன்.

வைதேஹீம் புலகாட்ய ஜாதவபுஷம்
வாமோத்ஸங்கஸமாஸ்திதாம்
வாமேந ஸ்தநசூசுகம் புலகிநா
வாமேந கரேணாம்ருசந் ।
தத்வம் தக்ஷிணபாணிநா கலிதயா
ஜ்ஞாநமுத்ரயா போதயந்
ராமோ மாருதிஸேவிதோ ஹ்ருதி ஸதா
ஸாம்ராஜ்யஸிம்ஹாஸநே ॥ ௫௩ ॥

கோபாலக பேத: —

உதயகிரிதடாந்தே ருக்மிணீஸத்யபாமா-
ஸஹிதமகிலகோபீவல்லபம் தேவதேவம் ।
அபயவரதஹஸ்தம் பாயஸாதம் ப்ரஸந்நம்
விபுதகணநிஷேவ்யம் நந்தஸூநும் நமாமி ॥ ௫௪ ॥

இடதுபுறத்தில் தன் மடியில் அமர்ந்துள்ளவளும், உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தவா றுள்ளவளுமான சீதையின் மேலேறி, அவளது இடது கொங்கையின் சூசுகத்தை, மயிர்க்கூச்செறியும் தனது இடது கையினுல் நெருடியவா றுள்ளவர், வலது கையில் அமைக்கப்பட்ட ஞான முத்திரையினுல் தத்துவத்தை யுணர்த்துபவர், சக்கரவர்த்திக்கேற்ற சிங்காசனத்தில் அமர்ந்து, அனுமானுல் வணங்கப்பட்டவாறு காட்சியளிப்பவர்; இவ்வாருன ஸ்ரீ ராமன் என் மனதில் பிரகாசிக்கவேணும்.

கோபாலக மந்திரத்தின் ஒருவகை—௫௪

உதய பர்வதத்தின் தாழ்வரையின் ஸமீபத்தில் ருக்மிணி ஸத்தியபாமை இவர்களுடன் கூடியவர், இடைச்சிகள் யாவருக்கும் காதலன், தேவர்க்கும் தேவனுகியவர், அபயமுத்திரை, வரதமுத்திரை (பயம் வேண்டாம் என்று கையால் காண்பிப்பது அபய முத்திரை. வேண்டியவற்றைக் கொடுக்கும் பாவனையில் கையை வைத்திருப்பது வரத முத்திரை) இவற்றைக் கைகளில் உடையவர், பால் சோறுண்பவர், அருள் நிறைந்தவர், தேவர் குழாங்களால் வணங்கப்படுகின்றவர். இவ்வாருன நந்தகோபன் குமரனை வணங்குகின்றேன்.

ஶ்ரீகராஷ்டாக்ஷரஶ்லோக: :—

ஶ்ரீவத்ஸாங்கம் முக்தாஹாரகிரண-
ஜ்யோத்ஸ்நாவிதாநோஜ்ஜ்வலம்
பீதம் ஶங்ககதாப்ஜசக்ரவிலஸ-
த்பாஹும் விஶாலாம்ஶுகம் ।
பாஸ்வத்கௌஸ்துபமகரகுண்டலவிபா-
ஸம்மிஶ்ர முக்தாங்கதம்
தம் வந்தே ஶிரஸா கிரீடவிலஸ-
ந்மந்தாரமாலம் ஹரிம் ॥ ௧௫ ॥

த்யாநஶ்லோக: :—

தேவம் ரவிபிம்பஸ்தம் மநோஹராங்கம் ப்ரஸந்நமுககமலம் ।
அம்ருதகடம் ஜலௌகம் கரயோர்ததாநமமலமதிம் ॥

ஸ்ரீ கராஷ்டாக்ஷரத்தின் ஒருவகை—௧௫

ஸ்ரீவத்ஸம் எனப்படும் மறுவை அடையாளமாக வுடையவர், உயர்ந்த முத்து மாலைகளின் ஒளிக்குவியல் களால் வெண்மையான விதானம் (அஸமான ஸிரி-மேல்கட்டி -மேல்ாப்பு) கட்டப்பெற்றாற் போலுள்ளவர், பொன்னிற மான திருமேனி யுடையவர், சங்கு, கதை, தாமரைமலர், திருவாழி, இவைகளுடன் திகழும் புயங்களை யுடையவர், பொன்னிறமான பட்டாடை யுடுத்தியவர், ஒளிவீசுகின்ற கௌஸ்துப மணியினுடையவும், மீன்போன்ற குண்டலங் களினுடையவும் காந்தியுடன் கலந்து மின்னுகின்ற முத்துக் கள் இழைக்கப்பெற்ற தோள்வளைகளுள்ளவர், மந்தார மாலையுடன் பிரகாசிக்கின்ற கிரீடத்தையணிந்தவர். இவ் வாறான அந்த விஷ்ணுவைத் தலையால் வணங்குகின்றேன்.

தன்வந்தரியின் ஒருவகை—௧௬

சூரிய மண்டலத்தில் வீற்றிருப்பவரும், மனதைக் கவரும் திருமேனியழகுள்ளவரும், அருள் நிறைந்த தாமரை போன்ற முகமுள்ளவரும், அமுதக் குடம், அட்டை இவற்றை இரு கைகளில் வைத்திருப்பவரும், களங்கமற்ற அறிவு படைத்தவருமாகிய தேவனை (தன்வந்தரியை வணங்குகிறேன்.)

अष्टादशाक्षरस्य भेदः :—

बालं नीलाम्बुदाभं नवमणिविलसत्-
किङ्किणीजालनद्ध-
श्रोणीजङ्घान्तयुग्मं विपुलरुरुनख-
प्रोल्लसत्कण्ठभूषम् ।
हास्याम्भोजातवक्त्रं शकटशकुनपूत-
नाघ्नं कृपाढ्यं प्रसन्नम्
सेव्यं वन्दितेन्द्राद्यैर्वरिष्ठैः
भज हृदये प्रातरेव ॥ १७ ॥

अपि च :—

वन्द्यं देवैर्मुकुन्दं विकसितकुरुवि-
न्दाभमिन्दीवराक्षं
गोगोपीवृन्दवीतं जितरिपुनिवहं
कुन्दमन்दारहासम् ।

பதினெட்டெழுத்துள்ள மந்திரத்தின் ஒருவகை—௧௭

கார்மேகவண்ணன்; கணைக்கால், இடையின் கீழ்ப்புறம் இவற்றில், ஒளிவீசும் இரத்தினங்கள் இழைக்கப்பெற்று விளங்கும் மணிகள் கோத்துக் கட்டப்பெற்றவர், பெரிய தான நாய்ப் பல்லுடன் பிரகாசிக்கும் ஆரத்தை யணிந்திருப்பவர், மலர்ந்த தாமரை மலர்போன்ற முகமுள்ளவர், சகடாசுரன்–பறவை (கொக்கு—பகாசுரன்)–பூதனை– இவர்களைக் கொன்றவர், அருள் நிறைந்தவர், இந்திரன் முதலிய தேவ சிரேஷ்டர்களால் வணங்கப் பெற்றவர், இளமைப் பருவத்தினர். இவ்வாறான கோவிந்தனைக் காலைவேளையில் பூஜிக்கவேண்டும்.

மேலும்—௧௮

தேவர்களால் வணங்கப்பெற்றவர், மலர்ந்த குருவிந்தத்தின் (குன்றிக்கொடிப் பூவின்) நிறம்போன்ற திருமேனி நிறமுள்ளவர், கருங்குவளைப் புஷ்பம்போன்ற கண்களுள்ளவர்; பசுக்களின் கூட்டங்கள், இடைச்சிகளின் கூட்டங்கள், இவற்றால் சூழப்பெற்றவர், பகைவர் கூட்டத்தை வென்றவர், கொடி முல்லை (அல்லது குருக்கத்தி)ப்பூ–மந்தார மலர்

[illegible]
[illegible]
[illegible] 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌢𑍍𑌯𑌂 (𑌜𑌯) [illegible]
[illegible] ॥ ௧௫ ॥

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௬ ॥

இவைபோன்ற நகைப்புடையவர், மயில்களின் தோகையை யணிவதனால் சிறந்து விளங்கும் கூந்தல்களை யுடையவர், எழில் மிக்கவர், பீதகவாடை யணிந்தவர், இவ்வாறாகிய முகுந்தனென்னும் தேவனைத் திருமகளின் அருளுக்காக (செல்வத்தின் காரணமாக) நடுப்பகலில் பூசிக்கவேண்டும்.

மேலும்—௧௬

தனது வீரியத்தினால் பகைவர் கூட்டங்களை முறியடித்தவர், யாராலும் வெல்லப்படாதவர், பூமியின் பாரத்தைத் தொலைத்தவர், நாரதர் முதலிய ஆதிகாலத்து முனிவர்களால், தத்துவத்தைத் தெளிந்துகொள்வதற்காகத் தினந்தோறும் சூழ்ந்துகொள்ளப்படுகிறவர், களங்கமற்றவர், இணையற்றவர், கிழத்தனமில்லாதவர், நீலமான திருமேனி நிறமுள்ளவர், உலகங்களை யெல்லாம் படைத்துக் காத்து அழிப்பதில் முனைந்தவர், மோக்ஷத்தைக் கொடுப்பவர், இவ்வாறான வாஸுதேவனை, மந்திரி (அமைச்சர்) மாலை வேளையில் பூஜிக்கவேண்டும்.

௧௰ வாஸுதே³வாதி³ சதுஷ்க: க்ரமேண :—

வாஸுதே³வ ஸங்கர்ஷண ப்ரத்³யும்நாநிருத்³த⁴கா: ।
ஸ்ப²டிக ஸ்வர்ண தூ³ர்வாப⁴ நீலாபா⁴ வர்ணதோ ¹க்ரமாத் ॥ ௪௰ ॥
சதுர்பு⁴ஜா: ஶங்க²சக்ர க³தா³பங்கஜதா⁴ரிண: ।
கிரீடகேயூரிணஶ்ச பீதாம்ப³ரத⁴ரா: ஸதா³ ॥ ௪௧ ॥

௧௧ கேஶவாத்³யா: :—

ஸுவர்ண கோ³க்ஷீர ஜபா ஶிலாஸு
ஹரித்³ரநீலார்க கைரவாபா⁴: ।
காஶ்மீர மேகா⁴ஞ்ஜந ரோசிஷஶ்ச
க்ரமேண வர்ணைரபி ²கேஶவாத்³யா: ॥ ௪௨ ॥
த⁴நுஸ்த்வாப கிரீடஹார-
கேயூர பீதாம்ப³ரகாதி³ தா⁴ர்யு: ।
ஸசக்ர ஶங்கா²: ஸக³தா³ம்பு³ஜாஶ்ச
ஸம்பூஜநீயா: ஸ்துதிபி⁴: க்ரமேண ॥ ௪௩ ॥

வாஸுதேவன் முதலான நால்வர் — ௪௰-௪௧

வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் ஆகியவர்கள்; முறையே, ஸ்படிகம், பொன், அருகம்புல், இந்திரநீலக்கல், இவைபோன்ற நிறமுள்ளவர்கள். ஒவ்வொருவரும் நான்கு புஜங்களுள்ளவர்கள். சங்கு, சக்கரம், கதை, தாமரைமலர், இவற்றைத் தரித்திருப்பர், கிரீடம், (முடி) தோள்வளை இதுபோன்ற அணிகளை யணிந்துள்ளவர்கள். பொன்னிறமான ஆடைகளை உடுத்திருப்பர்.

கேசவன் முதலானவர்கள்—௪௨-௪௩

பொன், பசுவின் பால், செம்பரத்தம்பூ, மனோசிலை, அரிதாலம், மஞ்சள், இந்திரநீலக்கல், சூரியன், ஆம்பல், குங்குமப்பூ கார்முகில், மை, இவைகளுடைய நிறம், முறையே கேசவன் முதலான பன்னிருவருக்கும் அமைந்தது.

இவ்வாறுக, வில், கிரீடம், முத்துமாலை, தோள்வளை, பொன்னிறமான ஆடை, சக்கரம், சங்கு, கதை, தாமரை மலர், இவைகள் யாவருக்கும் பொதுவானது, அவரவருக்கேற்ற துதிகளைச் சொல்லி அவரவர்களைப் பூஜிக்கவேண்டும்

---

(1) த: க்ரமாத் என்றும் பாடமுண்டு. 'முறையே' என்று பொருள்.

(2) கேசவன் 1, நாராயணன் 2, மாதவன் 3, கோவிந்தன் 4, விஷ்ணு 5, மதுஸூதனன் 6, த்ரிவிக்ரமன் 7, வாமனன் 8, ஸ்ரீதரன் 9, ஹ்ருஷீகேசன் 10, பத்மநாபன் 11, தாமோதரன் 12.

𑌵𑌰𑌾𑌹𑌭𑍇𑌦𑌃 :—

> 𑌹𑍈𑌮𑌂 𑌪𑍃𑌥𑍍𑌵𑍍𑌯𑌾𑌂 𑌪𑌯𑌸𑌿 𑌧𑌵𑌲𑌂 𑌶𑌙𑍍𑌖𑌭𑌂 𑌵𑌾
> 𑌨𑍀𑌹𑌾𑌰𑌾𑌭𑌂 𑌨𑍀𑌰𑌜𑍇𑌽𑌗𑍍𑌨𑍌 𑌹𑍁𑌤𑌾𑌭𑌮𑍍 ।
> 𑌵𑌾𑌯𑍋𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌧𑍂𑌮𑍍𑌰𑌭𑌂 𑌵𑌾 𑌵𑌿𑌯𑌤𑍍𑌸𑍍𑌥𑌂
> 𑌕𑍍𑌰𑍋𑌡𑌵𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌥𑌂 𑌸𑌤𑍍𑌯𑌲𑍋𑌕𑌸𑍍𑌥𑌂 𑌯𑌜𑍇𑌤 ॥ ௪௪ ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 :—

> 𑌵𑌿𑌦𑍍𑌯𑍋𑌤𑌂 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌿𑌰𑍀𑌟𑌪𑍍𑌰𑌮𑌣𑌿𑌕𑌟𑌕𑌕𑌟𑍀-
> 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑍇𑌯𑍂𑌰𑌹𑌾𑌰-
> 𑌗𑍍𑌰𑍈𑌵𑍇𑌯𑍋𑌰𑍍𑌮𑌿𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌮𑌣𑌿𑌗𑌣𑍋-
> 𑌦𑍍𑌭𑌾𑌸𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌰𑌾𑌗𑌮𑍍 ।
> 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌕𑌾𑌶𑌾𑌵𑌕𑌾𑌶𑌂 𑌵𑍍𑌯𑌤𑌿𑌕𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍍𑌕𑌕𑍋𑌟𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵-
> 𑌬𑌾𑌹𑍂𑌦𑍍𑌯𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑌾𑌯𑍁𑌧𑌨𑌿𑌕𑌰𑌯𑍁𑌤𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

வராஹமூர்த்தியின் ஒருவகை — சச

பிருதிவி (பூமி) மண்டலத்தில் பொன்போன்ற திருமேனிநிற முள்ளவராகவும், ஜலமண்டலத்தில் பனி போன்றவராகவும், அக்கி மண்டலத்தில் அக்கிவர்ணமான வராகவும், வாயு மண்டலத்தில் கருமை நிறமுள்ளவராகவும், ஆகாய மண்டலத்தில் அதன் நிறமுள்ளவராகவும், சத்திய லோகத்தில் பன்றிகளால் சூழப்பெற்றவராகவும் வராஹ நாயனரைப் பூஜிக்கவேண்டும்.

விச்வரூபம் — சரு

ஒளி வீசும் கிரீடம் தரித்தவர், இரத்தினங்களிழைக்கப் பெற்ற மகுடம், அரைநாண் கயிறு, தோள்வளைகள், ஆரங்கள், கழுத்தில் அணியும் அணி, மோதிரம் முதலிய முக்கியமான ஆபரணங்களிலுள்ள மணிகளின் கூட்டங்களுடன் பிராசிக்கின்ற திவ்யமான சந்தனத்தைப் பூசிக் கொண்டிருப்பவர், உலகம் முழுவதிலும், பரந்த ஆகாய வெளியிலும் எங்கும் வியாபித்து நிற்பவர், ஆயிரங்கோடி சூரியன்கள் ஒன்றுசேர்ந்தாற்போல் விளங்குபவர், உயரத் தூக்கப்பட்ட கைகளின் நுனியில் பளபளப்புடன் திகழும் பற்பல ஆயுதங்களைத் தாங்கியவர், உலகெல்லாம் தனது வடிவமாக உடையவர்; இவ்வாறாகிய திருமாலை (விஷ்ணுவை) வணங்குகின்றேன்;

𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌹 :—

𑌚𑌕𑍍𑌰𑌂 𑌚 𑌚𑌕𑍍𑌰𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌕𑌿𑌰𑍀𑌟𑌕𑍇𑌨𑌾𑌪𑌿
𑌸𑌚𑌕𑍍𑌰𑌶𑌙𑍍𑌖𑌂 𑌸𑌗𑌦𑌂 𑌸𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌰𑌕𑍍𑌤𑌤𑌨𑍁𑌂 𑌕𑌰𑌾𑌲𑌂
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑌨𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌦𑌲𑌕𑍇 𑌯𑌜𑍇𑌤 ॥ ௩௬ ॥

𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌜𑍍𑌯𑌾 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌧𑍃𑌤𑌾𑌙𑍍𑌕𑌿𑌤-
𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌙𑍍𑌗𑌃 𑌸𑌗𑌦𑌾 𑌸𑌚𑌕𑍍𑌰𑌶𑌙𑍍𑌖𑌯𑍁𑌤𑌃 ।
𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍋 𑌵𑌾
𑌪𑍀𑌤𑌾 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾 𑌚 𑌯𑌾𑌮𑍍𑌯𑍇 𑌸𑌂𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௭ ॥

𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑌡𑍍𑌗𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌕𑌂
𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑌡𑍍𑌗𑌾𑌦𑌿𑌕𑌗𑌦𑌾𑌚𑌕𑍍𑌰𑌮𑍍 ।
𑌤𑌾𑌮𑍍𑌰𑌂 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌮𑍍𑌬𑌰𑌵𑍇𑌤𑌂
𑌤𑌾𑌮𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌾𑌰𑌣𑍇 𑌯𑌜𑍇𑌦𑍁𑌦𑌕𑍍 ॥ ௩௮ ॥

ஆயுதங்கள்—௩௬-௩௮

தனது தலையின் மேல் உள்ள கிரீடத்தின்மேல் சக்கரத்தைத் தாங்கியவர், சக்கரம், சங்கு, கதை, வில், இவற்றுடன் கூடியவர், (இவற்றைக் கைகளில் ஏந்தியிருப்பவர்), சிவந்த ஆடையணிந்துள்ளவர், சிவந்த திருமேனியுடையவர், பயங்கரமான தோற்றமுள்ளவர், கோரைப் பற்களுடன்கூடிய முகத்தை யுடையவர்; இவ்வாறுகிய சக்கரத்தாழ்வாரைக் கிழக்கிலுள்ள இதழில் பூஜிக்க வேண்டும்.

கருத்த திருமேனியுடையவரும், தனது தலையில் வில்லைத் தாங்கியபடியுள்ளவரும், வில், சக்கரம் சங்கு, கதை, இவற்றைக் கையிலேந்தியவருமான சார்ங்கத்தை (வில்லை) மேற்கிலுள்ள இதழில் பூஜிக்கவேண்டும்.

வாளை, வாளைத் தலையில் தாங்கியவாறும், கத்தி, சக்கரம், கதை, வில், இவற்றைக் கைகளில் தாங்கியவாறும், தாம்ர வர்ணமாகவும், (செந்நிறமாகவும்), நிலைகுலைந்த ஆடை, சந்தனம், மாலைகள், இவற்றை யுடையவாறும், வடக்கு இதழில் பூஜிக்கவேண்டும்.

பத்மம் ஸபத்மஶிரஸம் பத்மாரிமஹாகதாஶார்ங்கம் யாத்ருதம் ।
விக்ருதாம்பராபரணவஸ்த்ரஜம் ஸஹோஸ்ய பூர்வே தலேஷு தேஷு ॥

ஶங்கம் ஸஶங்கஶிரஸம்
ஶங்காரிமஹாகதாஶார்ங்கம் ஸவிப்ரதம் ।
ஸிதவஸநாக்ர்யாபரணம்
யஜேத் ஸ்தநிதநாதம் ஆக்நேயதிக்தலே ॥ ௫௦ ॥

ஶங்கோக்தசிஹ்நபூஷாந்
ஸ்வாஸ்த்ராதிகயுதசதுர்புஜாந் நராந் ।
ஹலமுஸலஶூலஸம்ஜ்ஞாந்
யஜேந் நிஶாசராதி ¹கோணேஷு ॥ ௫௧ ॥

இதி ஶில்பரத்நே உத்தரபாகே த்யாநே
வைஷ்ணவபிம்பலக்ஷணம் நாம த்ரயோவிம்ஶோऽத்யாய: ॥

சங்கை, தலையில் சங்கு ஏந்தியவாறும், சங்கு, சக்கரம், கதை, வில், இவற்றைக் கைகளால் தாங்கியவாறும், மிக்க வெண்மை நிறமாகவும், வெண்மையான ஆடை, மாலைகள், அணிகள் இவற்றை யணிந்தவாறும், இடிமுழக்கம் போன்ற ஒலியை எழுப்பியவாறும், ஆக்நேய திக்கில் (தென்கிழக்கு திசையில்) உள்ள இதழில் பூஜிக்கவேண்டும்.

சங்குக்குக் கூறப்பட்ட அடையாளங்கள் அணிகள் இவற்றை யுடையவராகவும், தத்தம் ஆயுதங்களுடன் மற்றவைகளையும் நான்கு கைகளில் தரித்தவராகவும், ஹலம் (கலப்பை), முஸலம் (உலக்கை), சூலம் (வேல்), என்னும் மற்ற ஆயுதங்களையும், நிருதி திக் (தென்மேற்கு), வாயு திசை (வடமேற்கு), ஈசானிய திசை (வடகிழக்கு), இந்த இதழ்களில் பூஜிக்கவேண்டும்.

சில்பரத்தினத்தில் இரண்டாம்பாகத்தில் தியானத்தொடர்பில்
வைஷ்ணவ பிம்பங்களைப்பற்றிய இருபத்துமூன்றும்
அத்தியாயம் முற்றும்.

---

(1) "கேஷுவதேஷு" என்றும் பாடம். "யஜேந்நிஶிவராதி கேஷுவதேஷு" என்பது பொருத்தமான பாடமாக இருக்கக்கூடும். அதன்படியே பொருள் தரப்பட்டது.

ஸ்ரீ:

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌅𑌥 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 ॥

𑌤𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 :—

𑌶𑌂𑌖𑌾𑌰𑌿𑌚𑌾𑌪𑌶𑌰𑌭𑌿𑌨𑍍𑌨𑌕𑌰𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂
𑌤𑌿𑌗𑍍𑌮𑍇𑌤𑌰𑌾𑌂𑌶𑍁𑌕𑌲𑌯𑌾 𑌵𑌿𑌲𑌸𑌤𑍍𑌕𑌿𑌰𑍀𑌟𑌾𑌮𑍍 ।
𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌸𑌸𑍁𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌨𑍁𑌤𑌾𑌞𑍍𑌚 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌂
𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌨𑌿𑌭𑌾𑌂 𑌦𑍁𑌰𑌿𑌤𑌵𑌰𑍍𑌗𑌹𑌰𑌾𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥ ௧ ॥

𑌅𑌥𑌵𑌾 :—

𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌦𑍁𑌰𑌿𑌤𑌪𑍍𑌰𑌶𑌮𑌨𑍀𑌂
𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌦𑌲𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌂
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌪𑍀𑌡𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌶𑍋𑌭𑌾𑌂
𑌤𑍍𑌰𑌿𑌨𑌯𑌨𑌾 𑌪𑍀𑌤𑌕𑍌𑌶𑍇𑌯𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌂 ।

இருபத்துநான்காம் அத்தியாயம்.

சக்தி மார்க்கம்

முதன் முதலாக மூலதுர்கை – க

சங்கு, சக்கரம், வில், அம்பு, இவற்றைக் கைகளில் ஏந்தியவள், மூன்று கண்களுள்ளவள், குளிர்ந்த கிரணங்களையுடைய பிறைச்சந்திரனுடன் திகழும் கிரீடத்தையுடையவள், சிங்கத்தின் மேலேறியமர்ந்திருப்பவள், தேவர்கள் சித்தர்கள் இவர்களால் வணங்கப்பட்டவள் அருகம்புல் வண்ணமுடையவள், பாவங்களின் கூட்டங்களை யழிக்கும் இயல்புடையவள்; இவ்வாறான துர்க்கையை வணங்குகின்றேன்.

வேறு—உ

நமது தீவினைகள் யாவற்றையும் தொலைப்பவள், அருகம்புல்லின் இதழ்போன்ற கருமை நிறமுள்ளவள், பிறைச்சந்திரனல் ஒளி மிகுந்துள்ள முடியைத் தரிப்பவள், மூன்று கண்களுள்ளவள், பொன்னிறமான பட்டாடை

---

(1) "𑌦𑍁𑌰𑍍𑌗𑌹𑌾" என்றும் பாடம். பசுவர்க்கங்களாகிற கோட்டையை யழித்து அதனுள் சிறைப்பட்டுக் கிடக்கும் உயிர்வகைகளை காப்பவள்" என்பது அதன் பொருள்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥ ௨ ॥

[illegible] :—

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥ ௩ ॥

யுதேத்தியவள், சங்கு, சக்கரம், அம்பு, வில், இவற்றைக் கைகளில் தரித்திருப்பவள், அல்லது (சங்கு சக்கரம் ஏந்திய கைகளைத் தவிர, மற்ற இரு கைகளில்—அதாவது) வில்லையும், அம்பையும், வைத்திருப்பதாகச் சொன்ன கைகளில், அபயஹஸ்த முத்திரை, வரத முத்திரை, இவற்றைத் தரித்திருப்பவள், அல்லது இடப்பில் ஒரு கையும் வரதஹஸ்த முத்திரை மற்றொரு கையிலும் தரித்திருப்பவள், இவ்வாறாக துர்கையைத் தியானிக்கவேண்டும்.

லிபி (எழுத்து)—௩

குருக்கத்திப்பூ, சந்திரன், இவைபோல் வெண்மை நிறமுள்ளவள், அமுதகிரணனாகிய சந்திரனுடைய பிறையினால் ஒளிவீசும் முடியையுடையவள், ஞானமுத்திரை, அக்ஷமாலை, வரத முத்திரை, சுவடி இவற்றைக் கைகளில் தரித்தவள், வெண்மையான ஆபரணங்களை யணிந்தவள், மூன்று கண்களுள்ளவள், மூவுலகங்களாலும் வணங்கப்பட்டவள், எழுத்துக்குள்ளடங்கிய வடிவத்தை யுடையவள், சொற்களின் தேவதையானவள், உலகங்கட்கெல்லாம் மேன்மையைத் தருபவள், உலகங்களுக்கெல்லாம் மூலகாரணமாகவுள்ள அக்ஷர (எழுத்து) வடிவமாகவுள்ளவள். அந்த தேவியை வணங்குகின்றேன்.

௪ புவநேஶ்வரீ:—

உத்யத்பாஸ்வத்ஸமாபாம் விஜிதநவஜபாம்
இந்துகண்டாவதம்ஸாம்
ஜ்யோதிர்பூஷாம் த்ரிநேத்ராம் விவிதமணிலஸத்-
குண்டலாம் பத்மஸம்ஸ்தாம் ।
ஹாரக்ரைவேயகாஞ்சீ மணிவலயபதை:
ஸம்யுதாம் ஶோபநாட்யாம்
தாத்ரீம் பாஶாங்குஶாப்யாம் அபயவரகராம்
பாவயேத்த்வாம் புவநேஶீம் ॥ ௪ ॥

அந்யதா:—

முக்தாவித்யுத்பயோத ஸ்படிக நவஜபா-
பந்துரை: பஞ்சவக்த்ரை:
ஶீதாம்ஶுகண்டமௌலி ஸ்புரதமல த்ரிநயநயுதே-
ஶ்வராஸநா ஸ்வரூபாம் ।

புவனேச்வரீ — ௪

உதயமாகிக்கொண்டிருக்கிற சூரியன் போன்ற நிற முள்ளவள், அப்போதலர்ந்த செம்பரத்தம் பூவைப் பழிக்கும் நிறமுள்ளவள், பிறைச்சந்திரனைச் சூடியவள், சோதி மயமான மாலைகளையணிந்தவள், மூன்று கண்களுள்ளவள், பலவிதமான இரத்தினங்களால் ஒளிவீசும் குண்டலங்களை (காதணிகளை) யுடையவள், தாமரைமலரில் அமர்ந்திருப்பவள், முத்துமாலை, அட்டிகை (கழுத்தணி) ஒட்டியாணம், பலவகை இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற வளைகள் இவற்றை யணிந்தவள், சிறந்த ஆடையணிந்தவள், (எல்லாவற்றுக்கும்) முதன்மையானவள், பாசம், அங்குசம், அபய முத்திரை, வரதமுத்திரை இவற்றைக் கைகளில் தரித்தவள். இவ்வாறு புவனேச்வரியைத் தியானம் பண்ணவேண்டும்.

வேறு—௫

முத்து, மின்னல், மேகம், ஸ்படிகம், அப்போதலர்ந்த செம்பரத்தம்பூ, இவைபோன்ற நிறமுள்ளனவும், முடியில் சந்திரகலையுடன் திகழ்வனவும், மூன்று கண்களுள்ளனவுமான ஐந்து முகங்களுடன் பிரகாசிப்பவள், வெண்மையான நிறமுள்ளவள், சக்கரம், சங்கு, கபாலம் (மண்டை-

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫ ॥

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௬ ॥

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஒடு); நூல் (கயிறு), கோடரி, அமுதகலயம், வேதங்கள், அக்ஷமாலே, வித்யை, தாமரைமலர், இவற்றைக் கைகளால் தாங்கியவாறுள்ளவள், முனிவர் கூட்டங்களால் வணங்கப் பட்டவள், தாமரை மலரில் அமர்ந்திருப்பவள்; இவ்வாறுள்ள ஸரஸ்வதியை வணங்குவீராக.

மேலும் — ௬

மான்குட்டி, சுவடி, அக்ஷமாலே, கோடரி இவற்றை யேந்தியவள், வெண்டாமரை மலரில் வீற்றிருப்பவள், பிறைச்சந்திரனை யணிந்தவள், மூன்று கண்களுள்ளவள், வெண்மையான அணிகளணிந்தவள், தூய வெண்மை நிற முள்ளவள்; இவ்வாறுள்ள ஸரஸ்வதியை வணங்குகின்றேன்.

ஹ்ருல்லேகா — ௭

இரத்தம்போன்ற செந்நிறமுள்ளவள், (?) காதல் சுவை ததும்பும் யௌவனப் பருவம் தோன்றுவதனால் ஒளி மிக்கவள், செந்நிறமான அணிவரிசைகளை யணிந்து அழகு வெள்ளமிட்டோடுமாறு கவர்ச்சிகரமான தோற்ற முடையவள், பிறைச்சந்திரனுடன் திகழும் குழலுடையவள், அழகிய கண்களுள்ளவள், பலவிதமான ஆபரணங்களால்

நாநாலங்காரயுக்தாம் கரயுகவிலஸத்-
பாஶாங்குஶாப்யாம்
தேவீம் த்ரைலோக்யவந்த்யாம் அபயவரகராம்
மனோஹாரிஶோபாங்கப்ரத்யங்காம் || எ ||

அத வாகீஶ்வரீ :—

ஶாந்தாம் ஶாரதநீரதேந்துவிமலாம்
ஸல்லேகநீ புஸ்தக-
வ்யாஸங்கோத்யதபாணிம் ஸூக்திமூர்த்திவதே |
விஜ்ஞாநபோதாத்மிகாம் |
ஶுப்ராகல்பவிபூஷிதாம் த்ரிநயனாம்
பாஸ்வஜ்ஜடாஶேகராம்
ஸௌந்தர்யாட்ய ஸரஸ்வதீம் பகவதீம்
வந்தே ஸுஜ்ஞாநாப்தயே || அ ||

அழகிய தோற்றமுடையவள், பாசம் (கயிறு), அங்குசம் இவற்றை இரு கைகளாலும் தாங்கியவள், மூவுலகங்களாலும் வணங்கப்பட்டவள், அபய முத்திரை, வரத முத்திரை, இவற்றை மற்ற இரு கைகளிலுடையவள், கண்டார் மனதைக் கொள்ளைகொள்ளும் வனப்புமிக்க திருமேனியுறுப்புக்கள் உள்ளவள், இவ்வாறான (தேவியை வணங்குகின்றேன்).

வாகீச்வரீ — அ

சாந்தமானவள், சரத்காலத்து மேகம்-சந்திரன் இவற்றைப்போல் தூய வெண்ணிறமானவள், எழுத்தாணி, சுவடி, இவற்றுடன் திகழும் கைகளையுடையவள், சிறந்த சொற்கள், சிறந்த அறிவு இவைகளே வடிவங்கொண்டாற்போலுள்ளவள், வெண்மையான அணிகளால் அலங்கரிக்கப் பெற்றவள், மூன்று கண்களுள்ளவள், பிரகாசமான சடைகளைத் தலையிலணிந்தவள், அழகிய தோற்றமுள்ளவள், இவ்வாறாகிய பகவதியான (மகிமையுள்ளவளான) ஸரஸ்வதியை நல்ல அறிவைப் பெறுவதற்காக வணங்குகின்றேன்.

---

(1) "ஸுமோ விஜ்ஞாந" என்றும் பாடம்.

௧௰ ஸ்ரீ: :—

உத்யத்ஸௌவர்ண குப்பஸ்த்ரவதமலபய:
பாவநோத்ப்லாவ்யமாநா
ஹஸ்தோத்க்ஷிப்தா கரகமலயுகலா-
பீதிதாநாதிஹஸ்தா |
நாநாகல்பாபிராமா த்விரதசதுஷ்டய
[1]ரக்தவம்ஶோத்ஸவஸ்தா
ரத்நாம்ஸீ ஸாத்யஸாலா விகராகர விஸாரதாம்
ஸததம் ஸ்ரீ: ஸ்ரியம் வ: || ௧ ||

ஸ்ரீ மஹாலக்ஷ்மி — ௧

அழகு தெய்வமான திருமகள் செந்தாமரை மலரில் வீற்றிருப்பாள். உருக்கிய செய்பொன்னைப் பழிக்கும் திருமேனி நிறமுள்ளவள். அழகிய கவர்ச்சிகரமான திருமேனியுடையவள். அருளே வடிவெடுத்தாற்போன்றவள். எண்ணிறந்த ஆபரணங்களை அணிந்து அழகு வெள்ள மிட்டோடுவது போன்ற அற்புதமான காட்சியளிப்பவள். இத்திருமகளுக்குத் தாமரை மலர்போன்ற கைகள் நான்கு. அவற்றில் முறையே, இரண்டு தாமரை மலர்களையும், அபய முத்திரை, வரதான முத்திரை இவற்றையும் தரித்திருப்பள். நாற்புறங்களிலும் சிறந்த நான்கு யானைகள். முத்துப் போல் வெண்மையானவை. அவை தமது துதிக்கைகளை உயரத் தூக்கியவாறிருக்கும். துதிக்கைகளின் நுனியில் குடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் அவ்யானைகள், கவிழ்ந்தவாறாகப் பிடிக்கப்பட்ட அக்குடங்களினின்றும் இரத்தினங்களை மழை பொழிவதுபோல் கொட்டும். அதனால் இத்திருமகள் அபிஷேகம் செய்விக்கப்படுவள். இவ்வாறான திருமகள், உங்களுக்கு என்றைக்கும், பரந்த செல்வத்தைக் கொடுப்பாளாக.

---

(1) "ரக்த" என்றும் பாடம்,

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

மேலும் — ம.

வெண்மையான இரண்டு யானைகளுடைய துதிக்கைகளில் கவிழ்க்கப்பட்ட குடங்களினின்றும் கொட்டுகிற தூய்மையான ஜலங்களால் ஸ்னானம் பண்ணுகிறவள். மிகவும் கவர்ச்சிகரமான வடிவழகுள்ளவள். கருத்து அழகாகத் திகழும் குழல்களையுடையவள். வெண்மையான ஆபரணங்கள் பலவற்றுடன் ஒய்யாரமாகக் காட்சியளிப்பவள். நன்கு காய்ச்சப்பட்ட பொன்போன்ற ஒளியுள்ளவள். இரண்டு கைகளிலும் தாமரை மலர்களை ஏந்தியவாறுள்ளவள். தாமரை மலராகிய ஆஸனத்தில் அமர்ந்திருப்பவள். இவ்வாறான தேவியை வணங்குகின்றேன்.

த்வாரிதா — ம்க

சிருங்கார ரஸத்துக்குத் தக்கபடி பல்வேறு பாவங்கள் (ஸாவங்கள்) தோன்றுமாறு அங்கங்களால் சூழப்பெற்றவள். அபய முத்திரை, வரத முத்திரை இவற்றைக் கைகளிலுடையவள். கட்டவிழ்ந்த கருங்கூந்தலுள்ளவள். கொவ்வைப்பழம்போன்ற உதடுகளையுடையவள். அழகிய செந்தாமரை மலர்போன்ற பாதங்களையுடையவள்.

பீநோத்துங்கஸ்தந பாரநம்ரிததநு:
ஶ்யாமா ப்ரஸந்நாநநா
தேவீ ஸ த்வரிதா தநோது விபவாந்
நாநந்தயந்தீ ஶ்ரிய: ॥ ௧௬ ॥

அதவா :—

பர்ஹிர் க்ருதஶேகர ப்ரவிலஸ-
த்குஞ்ஜாமணீஸம்யுதா
ஸாந்த்ரஸ்நிக்தாங்கீ ஶிகிபிஞ்சமூலவலயா
வந்யப்ரஸூநோஜ்ஜ்வலா ।
நாகேந்த்ராதிக குண்டலாங்கதல-
த்காஞ்சீஸ்புரந்நூபுரா
பாயாத்வஸ் த்வரிதா ம்ருதுச்சதஶபரீ-
வேஷா ப்ரவாளாம்ஶுகா ॥ ௧௭ ॥

கடையில் சிவந்த மூன்று கண்களுள்ளவள். பருத்த பெரிய கொங்கைகளின் பாரத்தினல் வணங்கிய உடம்பையுடையவள். யௌவன மத்திமமான வயதிலிருப்பவள் (அல்லது) கருமையான நிறமுடையவள். அருள் ததும்பிய முகமுள்ளவள். இவ்வாருகிய த்வரிதா தேவியானவள், உங்களுடைய மனதைக் களிக்கச்செய்து, செல்வங்கள் யாவற்றையும் ஏராளமாகக் கொடுக்கட்டும்.

வேறு — ௰௭

மயில் தோகைகளால் செய்யப்பட்ட சிரோபூஷணத்தில் (தலையில் அணிந்துகொள்ளும் ஆபரணம்) அழகுடன் பிரகாசிக்கும் குன்றிமணிமாலையையுடையவள். மிகவும் வழுவழுப்பான உடம்பையுடையவள். மயில் தோகையின் அடிக்காம்பினல் செய்யப்பட்ட கைவளைகளையுடையவள். காட்டுப் புஷ்பங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஒளிமிக்கு விளங்குபவள். சிறந்த பாம்புகளால் அமைக்கப்பட்ட தோடுகள் (காதணிகள்), தோள்வளைகள், பளபளப்பான ஒட்டியாணம், ஒளிமிக்க சதங்கைகள், இவற்றையுடையவள். (செடி, கொடி, மரங்கள் ஆகியவற்றின்) தளிர்களையே ஆடையாக அணிந்தவள். வேடச்சி (வேடர்களுடைய ஸ்திரீ) வேஷத்திலுள்ளவள். இவ்வாறான த்வரிதாதேவி உங்களைக் காப்பாற்றட்டும்.

தூமாவதீ :—

[illegible] ॥ ௧௩ ॥

காளீ :—

[illegible] ॥ ௧௪ ॥

தூமாவதீ — ௰௩

காகத்தின்மேல் ஏறியவள். மிகவும் கருப்பான நிறமுள்ளவள். இடைவெளி யிருந்த (அடர்த்தியில்லாத) பற்களையுடையவள். குழல்களை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருப்பவள். பற்றற்ற நிலையிலுள்ளவள். (வைராக்கியம் மிக்கவள்). செம்பட்டை வர்ணமான கண்களுள்ளவள். பசி, தாகம் இவற்றால் துன்புற்றவள். பயத்தை (அச்சத்தைக்) கொடுக்கும் நடவடிக்கையுள்ளவள். நிலையற்றவள். காதல் வேட்கையினால் சஞ்சலமானவள். மனம் நொந்தவள். கொழுத்ததும் சோம்பல் மிக்கதுமான உடலையுடையவள். வியர்வை நீர் வழிந்தவாறுள்ளவள். செருக்குமிக்கவாறு தோற்றமளிப்பவள். கைம்பெண்ணானவள் (விதவை). கைநுனியில் முறத்தை அசைத்தவாறிருப்பவள். இவ்வாறாகிய தூமாவதி உங்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

காளி — ௧௪-௧௫

மிகவும் பயங்கரமானவள், பெரிய கோரைப்பற்களுள்ளவள், புருவங்களை நெறிப்பதினால் கோணலான கண்களையுடையவள், சுழல்போன்ற கண்களுள்ளவள், வீறுடையவள், நீண்ட மூக்குடையவள், மதம் (போதை)

---

(1) " [illegible] " என்றும் பாடம்.

स्निग्धगम्भीरनिर्घोषा नीलजीमूतसन्निभा ।
हस्ताकृष्टनरन्दृष्ट्वा दर्शनाद्वनिषिणा ॥ १५ ॥

दंष्ट्रौष्ठकोपताम्राक्षी रक्तदीर्घशिरोरुहा ।
त्रिशूलोद्यदुग्रदण्डाभनखवंशकवादिनी ॥ १६ ॥

अतिरक्ताम्बरा देवी रक्तमांसासवप्रिया ।
शिरोमालाविचित्राङ्गी बिभ्रती शोणितासवम् ॥ १७ ॥

नृत्यन्ती च हसन्ती च पिशाचगणसेविता ।
पिशाचस्कन्धमारूढा भ्रमन्ती वसुधातलम् ॥ १८ ॥

उक्तामेतां भद्रकालीं तु मातृभिः परिवारिताम् ।

உள்ளவள், இனிய கம்பீரமான குரலுள்ளவள், கரியமுகில் நிறத்தவள், புருஷர்களை கெறிப்பதினல் நீப்பிடித் தெரிகின்றவர்களுக்குக் காட்சியளிப்பவள், பெரிய முகத்துடன் பயங்கரமாகத் தோன்றுபவள், கோரைப் பற்களுடன் கூடிய உதடுகள் துடிக்குமாறு கோபத்தினால் சிவந்த கண்களுள்ளவள். சிவந்த நீண்ட தலைமயிருடையவள், த்ரிசூலத்தையேந்திய உக்ரமான தடிபோன்ற கைகளின் நகங்களால் (நுனி விரல்களால்) புல்லாங்குழலை இசைப்பவள், மிகமிகச் செக்கிறமான ஆடையணிந்தவள், இரத்தம், மாம்ஸம், கள், இவற்றில் ஆசையுள்ளவள், தலைகளாலான மாலையை யணிந்து அற்புதமாகப் பிரகாசிக்கிற உடம்பை யுடையவள், இரத்தம், கள், இவற்றைத் தேடுகிறவள், கூத்தாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டுமிருப்பவள். பிசாசங்களின் கூட்டங்களால் சூழப்பட்டவள், பிசாசத்தின் தோளில் ஏறிக்கொண்டு பூமியைச் சுற்றித்திரிபவள், (ஏழு) மாத்ருக்களால் சூழப்பட்டவள். (இவ்வாறாக பத்ரகாளியைப் பூசிக்கவேண்டும்).

[illegible] :—

[illegible]

[illegible]

[illegible] ॥ ௧௫ ॥

அத தேவீ :—

[illegible]

மேலும் ௧௬

அப்போதலர்ந்த தாமரை மலரின் நிறம்போன்ற நிற முள்ளவள், பிறைச்சந்திரன்போல் பளபளப்பான முகத்தையுடையவள், வஜ்ராயுதம்போன்ற கத்தியையும், தேன் நிறைந்த தொன்னை (இலைகளால் கிண்ணம்போல் செய்தல்) யையும், ஏந்தியவாறுள்ளவள், முண்டங்களை (தலைகளை) மாலைகளாகக் கோத்து உடம்பில் அணிந்தவள், பலவிதமான பாம்புகளின் படங்களிலுள்ள இரத்தினங் களின் கூட்டங்களால் ஒளிவீசுமாறு உள்ளவள், தேவர்கள் குமாரங்களால் நன்கு துதிக்கப்படுகிறவள், இவ்வாறான பத்ரகாளி உங்களுக்கு மங்களத்தைக் கொடுப்பாளாக.

பேலகீ — ௨௰

பளபளப்பான செந்தூரத்தின் நிறமுடையவள், உருக்கின செம்பொன்னாலான ஒளி மிக்க பாதுகைகளை யுடையவள், அவிழ்த்துவிடப்பட்ட குழல்களை யுடையவள், கவர்ச்சிகரமான பல்வேறு அவயவங்களை (உறுப்புக்களை) யுடையவள், விசாலமானதும் பாரம் (பளுவு) மிக்கதுமான கடிதடத்தை யுடையவள், (இடையின் கீழ்ப்புறத்தையுடைய

(1) "ஸதைகசேவி" என்றும் பாடம். ஒருவகை மீனின் பெயர் இது.

த்ருதா நாகத்வயாப்யாம் கரயோருபயோஸ்ததா

கங்கண வ்யாலஸம்வீதா ....

.... பேலகீ .... ॥ ௨௦ ॥

அத மாதங்கீ :—

பிம்போஷ்டீம் நவயௌவனார்த்ரசரணா-

[1]மாகீர்ணகேஶாலகாம்

ஹ்ருத்யாங்கீம் ஸிதஶங்ககுண்டலதரா-

ஶ்ருங்காரவேஷோஜ்ஜ்வலாம் ।

(அஸ்மிந் ஶ்லோகே உத்தரார்த்தம் நோபலப்யதே.)

வள்), உயர்ந்த பருத்த கொங்கைகளால் (அவற்றைத் தாங்க முடியாமல்) வருந்துபவள். இரண்டு கைகளிலும் தரிக்கப்பட்ட இரண்டு பாம்புகளை உரியவாறு (அசைத்தவாறு) உள்ளவள், கங்கணமாக அமைந்துள்ள பாம்புகளையுடையவள், இவ்வாறான பேலகீ (நம்மைக் காக்கவேணும்).

குறிப்பு :—இந்த சுலோகத்தில் நான்காமடி இல்லை. மூன்று அடிகளே உள்ளன. அதனுள் கருத்து முற்றுப்பெறவில்லை. எம்மால் சொந்தவார்த்தையால் முடிவு காட்டப்பட்டுள்ளது.

மாதங்கீ — உக

கொவ்வைப் பழம்போன்ற உதடுகளையுடையவள், புது யௌவனத்தினுல் ஈரமான அடிகளை யுடையவள், கட்டவிழ்ந்த சிதறிய குழல்கள், முன் கூந்தல்கள், இவற்றை யுடையவள், கவர்ச்சிகரமான உடல், உறுப்புக்கள் இவற்றை யுடையவள், வெண் சங்கினுல் செய்யப்பட்ட குண்டலங்களைத் தரித்திருப்பவள்.

குறிப்பு :— இதற்குமேல் மூலம் இல்லை. அதாவது இந்த சுலோகத்தின் இரண்டாவது பாதி காணப்படவில்லை. அதனுல் கருத்தும் முற்றுப்பெறவில்லை.

---

(1) "ஶீர்ணா" என்றும் பாடம்.

ஶக்தி ப்ரணவ: —

ப்ரகாஶமத்யஸ்தித சித்ஸ்வரூபாம்
வராபயே ஸந்தததீம் த்ரிணேத்ராம் ।
ஸிந்தூரவர்ணாம் அதிகோமலாங்கீம்
மாயாமயீம் தத்வமயீம் நமாமி ॥ உஉ ॥

அத வநதுர்கா: —

சக்ரம் ஶங்கம் க்ருபாணம் கேடபாணாந்
ஸசாபஶூலகம் தர்ஜநீம் ததாநா ।
ஸா காம் மஹிஷோத்தமாங்கஸம்ஸ்தா
நவதூர்வாஸந்நிபா ஶ்ரியேஸ்து துர்கா ॥ உக ॥

சக்திப்ரணவம் — உஉ

ஒளிகருவியலின் நடுவில் உள்ள அறிவு வடிவமானவள், வரத முத்திரை, அபய முத்திரை இவற்றைக் கைகளில் தரித்திருப்பவள், மூன்று கண்களுடையவள், செந்தூரம் போன்ற நிறமுள்ளவள், மிகவும் அழகிய உடல், உறுப்புக்கள் இவற்றையுடையவள், ஆச்சரியகரமான தோற்றமுள்ளவள், தத்துவமே வடிவங்கொண்டாற்போலுள்ளவள், இவ்வாறான (தேவியை) வணங்குகிறேன்.

வன துர்கை—உஉ

சக்கரம், சங்கு, வாள் (கத்தி) கேடயம், அம்பு, இவற்றையும், வில், சூலம், ஆள்காட்டி விரலால் பயமுறுத்தும் முத்திரை, இவற்றையும் தரித்திருப்பவள், எருமைக் கடாவின் தலைமேல் விற்றிருப்பவள், புதிதான அருகம்புல் போன்ற நிறமுள்ளவள், இவ்வாறான துர்காதேவி உங்களுக்குச் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

---

(1) "கபாலகேட" என்றும் பாடம். கத்திக்குப் பதிலாகக் கபாலம் இப்பாடத்தில் இடம் பெறும்.

(2) "வநதூர்வா" என்றும் பாடம். காட்டு அருகம்புல் என்பது இதன் பொருள்.

த்யாநம்:—

உத்யதர்கஸஹஸ்ராபாம் கிரணாநேகஸம்வ்ருதாம் ।
ஜபாகிஞ்ஜல்கஸிந்தூரப்ரஸ்புரத்ரோசிருஜ்ஜ்வலாம் ॥ ௨௪ ॥

பீதவஸ்த்ரா(1)வ்ருதாம் தேவீம் ஸர்வாபரணபூஷிதாம் ।
நீலகுஞ்சிதகேஶாட்யாம் ப்ரஸந்நவதநாம்புஜாம் ॥ ௨௫ ॥

விசித்ரரத்நவிஸ்புரத்கர்ணபூஷோ(2)த்த்யோதிதாநநாம் ।
ஸ்வநேத்ரகாந்திவிஜிதகர்ணோத்பலவிராஜிதாம் ॥ ௨௬ ॥

அர்தசந்த்ராக்ருதிஸ்பூர்ஜல்லலாடதிலகோஜ்ஜ்வலாம் ।
ஶங்கசக்ரவராபீதிஸம்வாஹிதசதுர்புஜாம் ॥ ௨௭ ॥

வேறு — ௨௪ – ௩௰

உதயசூரியன்போன்ற தோற்றமுள்ளவள், எண்ணிறந்த கிரணங்களால் (ஒளிர்க்கதிர்களால) சூழப்பெற்றவள், செம்பரத்த மலர்க்கொத்து, செந்தூரம், இவைபோல பளபளப்பான தோற்றமுள்ளவள், பொன்னிறமான ஆடை அணிந்திருப்பவள், அணிகள்யாவற்றினலும் அலங்கரிக்கப்பெற்றவள், ஆற்றல் மிக்கவள், கருத்த குடிலமான குழல்கற்றையுடையவள், அருள் நிரம்பியதும், தாமரைமலர் போன்றதுமான முகமுள்ளவள், காதணிகளிலுள்ள (குண்டலங்களிலுள்ள) அற்புதமான இரத்தினங்களினின்றும் வெளிவரும் ஒளிக்குவியலினல் சிறந்து விளங்கும் முகமுடையவள், தனது கண்களின் காந்தியினல் பழிக்கப்பெற்றுக் காதுகளில் அணியப்பெற்ற கருநெய்தல் பூக்களால் விளங்குகிறவள், பாதிசந்திரன் வடிவமுள்ள நெற்றித் திலகத்தினல் திகழ்பவள், நான்கு கைகளிலும் சங்கு, சக்கரம், வரத முத்திரை, அபய முத்திரை இவற்றைத் தரித்திருப்பவள்,

---

(1) "வஸ்வஸ்த்ராதாம்" என்றும் பாடம். பொருளில் வேறுபாடு இல்லை.

(2) "ஜ்ஜ்வலிதாநநாம்" என்றும் பாடம்.

வலித்ரயோபேதலஸத்ரோமாவலிவிராஜிதாம் ।
தப்தஹாடகஸ்தம்பாபோருத்வயஸுஶோபிதாம் ॥ ௨௯ ॥

வ்ருத்தஜங்காம் கூடகுல்பாம் ப்ரஸ்புரத்பத்மாபபாதாம் ।
ரக்தாம்போஜே ஸமாஸீநாம் ஸூர்யப்ரயுதஸமப்ரபாம் ।
ஸர்வலோகாத்மிகாம் தேவீம் துர்காம் மஹிஷமர்திநீம் ॥ ௩௦ ॥

யதா :—

ஹேமப்ரக்யாமிந்துகண்டாத்தமௌலிம்
ஶங்காரீஷ்டாபீதிஹஸ்தாம் த்ரிநேத்ராம் ।
ஹேமாப்ஜஸ்தாம் பீதவஸ்த்ராம் ப்ரஸந்நாம்
தேவீம் துர்காம் திவ்யரூபாம் நமாமி ॥ ௩௧ ॥

மூன்று வலிகளுடன் (வயிற்றிலுள்ள சதைமடிப்புக்களுடன்) கலந்துள்ள ரோமங்களின் வரிசையுடையவள். நன்றாகக் காய்ச்சப்பெற்ற பொன்னாற்செய்த இருகம்பங்கள் போல் ஒளிவீசுகிற தொடைகளிரண்டாலும் அழகுற்றவள், வட்டவடிவமான ஜங்கைகளுள்ளவள், (முழங்காலுக்குக் கீழ் - கணுக்காலுக்குமேல் உள்ள காலின் பகுதி "ஜங்கா" எனப்படும்) வெளியில் தனியாகத் தெரியாதவாறு அழுந்திய குல்பங்களை (பாதத்தின் இரு புறங்களிலுள்ள கணுக்களை) யுடையவள், ஒளிசூழக் காட்சியளிக்கும் தாமரை மலர் போன்ற திருவடிகளை யுடையவள், செந்தாமரை மலரில் நன்கு வீற்றிருப்பவள், பல ஆயிரங்கோடி சூரியன்கள் உதயமானாற்போன்ற பேரொளி படைத்தவள், எல்லாவுலகும் தானேயாகத் தோற்றுபவள், இவ்வாறுள்ளவளும் மஹிஷாஸுரனைத் தொலைத்தவளுமாகிய துர்க்கா தேவியை (வணங்குவோம்).

வேறு—௩௧

பொன்போன்றவள், பிறைச்சந்திரன் சூடிய கிரீடத்தையுடையவள், சங்கு, சக்கரம், வரதமுத்திரை, அபயமுத்திரை இவற்றைக் கைகளில் தரித்தவள், மூன்று கண்களுடையவள், பொற்றாமரை மலரில் அமர்ந்திருப்பவள், பொன்னிறமுள்ளவள், அருள்நிரம்பிய தோற்றமுள்ளவள், அற்புதமான வடிவழகுள்ளவள். இவ்வாறான துர்க்கா தேவியை வணங்குகிறேன்.

த்ரைலோக்யமோஹிநீ :—

பத்³மஸ்தா²மிக்ஷுசாபம் குஸுமஶரஸ்ருணீ-
பத்³மயுக்³மாக்ஷமாலா-
வித்³யாபாஶாம்ஶ்ச த³த⁴தீம் குசப⁴ரவிநத-
மத்⁴யமாம் த்ரிநேத்ராம் ।
ரக்தாம் ரக்தாங்க³ராகா³ம்ப³ரகுஸுமயுதாம்
ஸ்மேரவக்த்ராம்பு³ஜாதாம்
த்ரைலோக்யக்ஷோப⁴தா³த்ரீம் முநிவிபு³த⁴நுதாம்
தே³வதாம் தாம் நமாமி ॥ ௧௨ ॥

ஸம்வித் :—

உத்³யத்³பா⁴ஸ்வத்ப்ரபா⁴ம் த்ரிநயநா
பீநோத்துங்க³ஸ்தநீம்
பாஶம் புஸ்தகமங்குஶம் ஜபவடீம்
[illegible] பா⁴ஹஸ்தை: ।

த்ரைலோக்யமோஹிநீ—௧௨

தாமரை மலரில் வீற்றிருப்பவள், கரும்புவில், மலர்களா லாகிற அம்புகள், அங்குசம், இரண்டு தாமரை மலர்கள், ருத்திராக்ஷ மாலை (அல்லது தாமரை மணிமாலை) வித்யை (ஞானமுத்திரை-அல்லது சுவடி), பாசம் (கயிறு) இவற்றைக் கைகளால் தரித்திருப்பவள், கொங்கைகளின் கனத்தினால் வணங்கிய மெல்லிய இடையை யுடையவள், மூன்று கண் களுள்ளவள், செந்நிறமானவள், சிவப்பான சந்தனம், ஆடைகள், பூக்கள் இவற்றை யணிந்தவள், அப்போ தலர்ந்த தாமரைமலர் போன்ற முகத்தில் அருள் ததும்பிய வாறு காட்சியளிப்பவள், மூவுலகங்களையும் குழப்பமடையச் செய்யும் வனப்பு உள்ளவள், முனிவர்களாலும் தேவர் களாலும் துதிக்கப்பட்டவள், இவ்வாறாகவுள்ள உலகப் பிரசித்திபெற்ற தேவியை வணங்குகிறேன்.

ஸம்வித்—௧௩

உதய சூரியன் போன்ற ஒளியுள்ளவள், மூன்று கண் களுள்ளவள், பருத்து உயர்ந்த கொங்கைகளை யுடையவள், பாசம் (கயிறு), புத்தகம், அங்குசம், ஜபம் செய்வதற்கான வஸ்திரம் இவற்றைக் கைகளில் தரித்திருப்பவள், செந்நிற

ரக்தாகல்பாட்யக்ஷௌமஸ்ரக்வஸிதாம்
பாலேந்துசூடாமணீம்
பக்தாபீஷ்டப்ரதாநே ஸுரபிஸமாம்
வந்தே பராம் தேவதாம் ॥ ௧௧ ॥

இந்த்ராணீ.—

கல்பத்ரூத்யாநமத்யே விவிதமணிமய-
ஸ்தம்பவாஸவிப்ராஜ-
த்ஸ்தாத்ம்ராஸிம்ஹப்ரவிஜ்ரும்பிதலஸஸரோ
ஜந்மஸம்ஸ்தாம் ப்ரஸந்நாம் ।
பீநோத்துங்கஸ்தநாட்யாம் ப்ருதுஜகநதராம்
பத்மபத்ராயதாக்ஷீம்
இந்த்ராணீமிந்த்ரநீலோத்பலஸகலஸமாம்
ஹ்ருத்யபூஷாம் நமாமி ॥ ௧௨ ॥

மான அணிவரிசைகளுள்ளவள், சிவப்பான பட்டாடைகள் பூமாலைகள் இவற்றையணிந்தவள், பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்தவள், அடியவர்கள் விரும்பியவற்றையெல்லாம் கறக்கும் காமதேனு போன்றவள். இப்படிப்பட்ட பரதேவதையை எக்காலமும் வணங்குகிறேன்.

இந்திராணீ—௧௨

கற்பகமரங்கள் நிறைந்த பூங்காவின் மத்தியில், பலவிதமான இரத்தினங்களால் ஒளிவீசும் மண்டபத்தினுள், வீறு பெற்று விளங்கும் சீரிய சிங்கவடிவமான பீடத்தின்மேல், அழகுடன் திகழும் தாமரைமலரில் வீற்றிருப்பாள், அருள் நிரம்பியவள்; பருத்த உன்னதமான கொங்கைகளையுடையவள், பெரிய ஜகனத்தையுடையவள், தாமரையிதழ் போன்ற நீண்ட கண்களுள்ளவள், இந்திர நீலக்கல் - கருநெய்தல் மலர் - இவற்றைப் பிளந்தால் அந்த இடத்திலுள்ளது போன்ற நிறமுள்ளவள், கவர்ச்சிகரமான அணிகளையணிந்தவள். இப்படிப்பட்ட இந்திராணியை வணங்குகிறேன்.

த்யாநம் :—

ஸஞ்சிந்த்ய நந்தநோத்யாநம் ஸந்தாநாத்யை: ஸுரத்ருமை: |
கல்பவல்லீப்ரதேஶாலி ஸப2லபுஷ்பபராநதை: || ௧௫ ||
அலங்க்ருதம் தஸ்ய மத்யே ரத்நமண்டபமுஜ்ஜ்வலம் |
ரத்நஸிம்ஹாஸநகதாம் தந்மத்யே ஶக்ரவல்லபாம் || ௧௬ ||
மந்தாரமால்யஸம்பூர்ணதம்மில்லஸுமநோஹராம் |
¹ம்ருகாங்கவல்லீமந்தாரமந்தஸ்மிதமநோஹராம் || ௧௭ ||
மத்தமாதங்கமஸ்தகஸ்தநோத்துங்கதநுமத்யமாம் |
ம்ருணாலதந்துஸம்ஸக்தமத்யவல்லீமநோரமாம் || ௧௮ ||

வேறு — ௧௫ — ௪௭

கனிகள், மலர்கள் இவற்றைத் தாங்கமுடியாமல் தாழ்ந்து வணங்கியவாறிருக்கும் எண்ணற்ற கற்பகக்கொடிகளாலும் மந்தாரம் முதலிய கற்பகமரங்களாலும் அழகாகத் திகழும் "நந்தனம்" என்னும் தேவேந்திரனுடையதான பூங்காவனத்தை நன்றாகச் சிந்தித்து மனத்திலிருத்திக் கொள்ளவேண்டும். அதன் நடுவில் நன்றாக அலங்கரிக்கப்பட்டு, ஒளிக் குவியல்போல் பார்ப்பவர்களுடைய கண்கள் கூசுமாறு சுடர்மிக்கு விளங்கும் இரத்தினமண்டபம், அதன் மத்தியில் பல்லாயிரக் கணக்கான இரத்தினங்களிழைக்கப்பெற்று விளங்கும் சிங்காதனம், அதன்மேல் இந்திரனுடைய அன்பிற்குரிய மனைவியான இந்திராணியைத் தியானிக்கவேண்டும். மந்தார மாலைகளால் அலங்கரிக்கப் பெற்றதும் வழவழப்பாக உள்ளதுமான அழகியகொண்டையால் ஒய்யாரமாகக் காட்சியளிப்பவள், கற்பூரவல்லி-மந்தாரமலர் இவற்றைப் பழிக்கும் புன்னகையினுல் மனதை கவருகிறவள், மதம்பிடித்த பெரிய யானையின் மத்தகம் (கும்பம்) போல் கிமிர்ந்துவிளங்கும் இரண்டு கொங்கைகளையுடையவள், தாமரைத் தண்டினுள்ளே இருக்கும் நூல் போல் மென்மையானதும் கொடிபோன்றதுமான இடையினுல் மனத்துக்கினிய தோற்றமளிப்பவள், செழுமை மிகுதி

---

(1) "ஹ்ருத்யாம்ரவல்லீ" என்றும் பாடம்.

[illegible] காமிநீம் ।
ஹாரக்ரைவேயகாஞ்சீநூபுராத்யைரலங்க்ருதாம் ॥

உத்தம்ஸிதேந [illegible] ।
[illegible] யஷ்டிகாம் ரத்நஜாலாநி வர்ஷதா ॥ ௪௦ ॥

[illegible] ।
[illegible] வாமதக்ஷிணபார்ஶ்வயோ: ॥ ௪௧ ॥

வஸுப்ரவாஹம் வர்ஷத்ப்யாம் ஸேவ்யமாநாம் ஸதா முதா ।
ரம்பயா ச ஸிதச்சத்ரம் ரத்நதண்டம் ஶஶிப்ரபம் ॥ ௪௨ ॥

காஞ்சநஸ்ராவி [illegible] ஸேவ்யமாநாம் ப்ரஸந்நயா ।
க்ருதாசீஸஹஜந்யாப்யாம் [illegible] பார்ஶ்வயோரபி ॥

யினல் கவர்ச்சிகரமாகவும் ஒய்யாரமாகவும் நடப்பவள், முத்துமாலை-அட்டிகை (கழுத்தணி) ஒட்டியாணம்-சலங்கைகள் இதுபோன்ற அணிவரிசைகளால் அலங்கரிக்கப் பெற்றவள், இரத்தினங்களைப் பொழியும் இயல்புள்ளதும் தலையில் அணியப் பெற்றதுமான "சிந்தாமணி" யினல் நனைக்கப்பட்ட (இரத்தின மழையின் நடுவில் இருக்கும்படி செய்யப்பட்ட) கொடிபோன்ற உடம்பையுடையவள், விளையாட்டுக்கான தாமரைமலரை மிகவும் மெதுவாக அசைத்துக்கொண்டிருப்பவள், செல்வத்தை வெள்ளமிட்டோடும் படி பொழிந்துகொண்டிருக்கும் "சங்க" நிதி "பதும" நிதி இவைகளால் இடம், வலம், ஆகிய இரு புறங்களிலும் எக்காலமும் உவகையுடன் வணங்கப்பெற்றவள், ஒளிர்ந்த முகமுள்ள "ரம்பை"யினல், இரத்தினங்களிழைக்கப்பெற்ற அழகிய காம்புள்ளதும், சந்திரன்போல் வெண்மையான நிறமுள்ளதும், பொன் மழை பொழிவதுமான வெண்குடையைப் பிடித்துக்கொண்டு ஸேவிக்கப்பெற்றவள், இரண்டு பக்கங்களிலும் (இடம், வலம்) "க்ருதாசீ" "ஸஹஜன்யா" என்னும் இரண்டு அப்ஸரஸ் ஸ்த்ரீக்களால் இரண்டு சாமரங்களினல் மிக்க மெதுவாக ஒய்யாரமாக வீசப்பெற்றவள்,

𑌸𑌖𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍀𑌜𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌜𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃
𑌶𑌨𑍈𑌃 𑌶𑌨𑍈𑌃 𑌦𑍋𑌰𑍍𑌲𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑍇 ॥ ௪௫ ॥

𑌸𑌂𑌵𑌾𑌹𑌯𑌨𑍍𑌤𑍀 𑌉𑌰𑍍𑌵𑌶𑍍𑌯𑌾 𑌨𑌿𑌜𑌾𑌙𑍍𑌕𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 𑌚 ।
𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑌵𑍀𑌟𑌿𑌕𑌾𑌂 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌯𑌾 ॥

𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑍇𑌨𑌕𑌯𑌾 𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌸𑍁𑌕𑍇𑌶𑌯𑌾 ।
𑌅𑌮𑍃𑌤𑌾𑌸𑌾𑌰𑌮𑌨𑌿𑌶𑌂 𑌦𑍁𑌹𑌨𑍍𑌤𑍍𑌯𑌾 𑌹𑍃𑌦𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾 ॥ ௪௬ ॥

𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑍀𑌪𑌤𑌃 𑌕𑌾𑌮𑌧𑍇𑌨𑍍𑌵𑌾 𑌚 𑌸𑌵𑌤𑍍𑌸𑌯𑌾 ।
𑌅𑌶𑍇𑌷𑌯𑍋𑌷𑌿𑌜𑍍𑌜𑌨𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌶𑍍𑌰𑍀𑌂 𑌶𑍁𑌭𑌾𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 ॥ ௪௭ ॥

𑌏𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌾 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑍀 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌕𑌾𑌮𑌦𑌾 ।

"ஊர்வசி" என்னும் மற்றொரு அப்ஸரஸ் இவ்விந்திராணிக்குக் கால் பிடிப்பவள். கொடிபோன்ற தனது கைகளால் தனது மடியில் இந்திராணியின் தாமரை மலர்போன்ற பாதங்களைப் பொருத்திவைத்து மிகமிக மெதுவாகப் பிடித்துக் கொண்டிருப்பாள், ஊர்வசி என்னும் புகழ்பெற்ற இந்த அப்ஸரஸ். பக்கத்தில் பக்தியுடன் நின்று கொண்டிருக்கும் அழகு மிக்க "மேனகை" யினுல், வெற்றிலைப் பெட்டியைக் கைகளிலேந்தியவாறு எக்காலமும் ஸேவிக்கப் பெற்றவள் இந்திராணி. நித்தமும் அமுதஊற்றைப் பெருக்குவதும், கவர்ச்சிகரமான வடிவத்தையுடையதும், கன்றுடன் கூடியதுமான "காமதேனு"வினுல் அண்மையில் ஸேவிக்க பெற்றவள், எல்லாப் பெண்மக்களுடையவும் ஸௌபாக்ய லக்ஷ்மீ வடிவமானவள், விரும்பினவற்றையெல்லாம் கொடுக்கவல்லவள், இவ்வாறுகச் சிறந்த இலக்கணங்கள் அமைந்த அழகிய உடம்பை யுடையவள். இவ்வாருன இந்திராணியைக் கீழ்ச்சொல்லியபடி தியானித்துப் பூஜிக்க வேண்டும்).

குறிப்பு :—"ஸேவித்தல்" என்பது "பணிவிடை" செய்தல் என்று பொருள்படும்.

[illegible] :—

[illegible]

[illegible] :—

[illegible]

வேறு

நான்கு கைகளால் வஜ்ராயுதம், சக்தி (வேல்) வரத முத்திரை அபய முத்திரை இவற்றைத் தரித்திருப்பவனும், மூவுலகுக்கும் தலைவனும், வேண்டிய வரங்களைக் கொடுப்பவனும், (இரத்தின) மண்டபத்தில் வீற்றிருப்பவனுமான தேவேந்திரனுடைய மடியில் அமர்ந்தவளாகவும் மிகமிகக் கவர்ச்சிகரமான வடிவழகையுடையவளுமாக இந்திராணியைத் தியானிக்கவேண்டும்.

ஸ்வயம்வரா — ரும

இளஞ்சூரியன் கோடிக்கணக்காக ஒன்று சேர்ந்தாற் போன்று ஒளியுள்ளவள், கையில், வண்டுகளால் வரிசை வரிசையாக மேல்விழுந்து மொய்த்துக் கொள்ளப்பட்ட பூமாலையைத் தாங்கியிருப்பவள், கவர்ச்சிகரமான வடிவழகுள்ளவள், அழகிய புன்னகையுடன் சிறந்து விளங்குகின்ற முகமுள்ளவள், சிவபெருமானைக் கணவனாக வரிப்பதற்காக மெதுவாக அழகிய நடையுடன் வருகின்றவள், உலகத்தையே மயக்கும் தன்மைவாய்ந்தவள், தேவர்களாலும் முனிச்ரேஷ்டர்களாலும் வணங்கப்பட்ட பாதங்களையுடையவள், விரும்பினவற்றையெல்லாம் கொடுக்கும் இயல்புள்ளவள், இவ்வாறான பார்வதியை வணங்குகிறேன்.

---

(1) "[illegible]" என்றும் பாடம். அப்போது இவ் வடைமொழி சிவனைச் சாரும்.

[illegible] :—

[illegible]
[illegible],
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௧ ॥

[illegible] :—

[illegible]
[illegible] ।

மேலும் — ௫௧

பொன்போன்ற காந்தியுடையவள், சிந்தையையும், சொல்லையும் கடந்த நற்குண நல்லொழுக்கங்களையும் சிறந்தமுறையில் அமைந்துள்ள வடிவழகையும் உடையவள், முதன்முதலாகக் காதல் உணர்ச்சியின் தோற்றத்தால் காண்போர் மனதைக் கவருகின்றவள், கைகளில் ஒளிமிக்கு விளங்கும் மங்களகரமான சுயம்வர மாலையையுடையவள், யௌவனப்பருவத்தின் மத்தியிலிருப்பவள், (கருமையான நிறமுள்ளவள்) சிவபெருமானைக் கணவனாகத் தேர்ந்தெடுக்க முற்பட்டவள். மூவுலகையும் மயக்கும் எழில் பெற்றவள். வேண்டினவற்றை யெல்லாம் கொடுக்கும் கற்பகக்கொடி போன்றவள். இவ்வாறான பரதேவதையை எக்காலமும் வணங்குகின்றேன்.

மேலும்—௫௨

கையில் சிறந்த பூமாலையைத் தரித்தவள். பலவிதமான இரத்தினங்களிழைக்கப்பெற்ற அணிகளை உடலின் பல்வேறு உறுப்புக்களிலும் அணிந்துள்ளவள். எல்லோருடையவும் கண்களையும் மனத்தையும் கொள்ளைகொள்ளும் சிறந்த வடிவழகும், ஆடையலங்காரங்களுமுள்ளவள். ஆடவர்களையும் பெண்களையும் தன் வசப்படுத்திக் கவர்ந்து

---

(1) "[illegible]" என்றும் பாடம். உடம்பில் அணிகள் எல்லாம் மிகவும் சிவப்பானவை என்பது இதன் பொருள்.

ஸதா ஸம்[illegible]
[illegible]ஸ்ருஷ்டிக்ருத்[illegible] ॥ ௧௨ ॥

த்யாநம் :—

உத்யத்பூர்ணஶஶாங்கமண்டலகதாம்போஜே வஸந்தீம் த்ரிநேத்ராம்
தோர்பி: பாஶேக்ஷ்வாஸ[illegible]ஶராங்குஶாந்
விப்ராணீமிந்துசூடாம் ।
கௌரீம் கௌராங்கராகாம்பர[illegible]
[illegible]
ஜப்யாத் காந்த்யை புஷ்ட்யை [illegible]
லோகரஞ்ஜநாய ॥ ௧௩ ॥

அத ப்ராணஶக்தி: ;—

ரக்தாம்போதிஸ்தபோதோல்லஸதருணஸரோ-
ஜாதிரூடா கராப்ஜை:
பாஶம் கோதண்டமிக்ஷூத்பவ (1)மணிகுண-
ம்யங்குஶம் பஞ்சபாணாந் ।

கொள்வதில் நித்தமும் வல்லவள். இவ்வாறான பார்வதி உங்களுக்கு விரும்பின பேறு பெறுவதற்குத் துணையாக இருப்பாளாக.

வேறு—௧௩

உதயமாகிக்கொண்டிருக்கும் பூர்ண சந்திரனுடைய மத்தியில் பிரகாசிக்கும் தாமரை மலரில் வீற்றிருப்பவள். மூன்று கண்களுள்ளவள். பாசம்-கரும்பு வில்—அங்குசம் மலர்க்கணை — இவற்றைக் கைகளால் தரித்திருப்பவள். பிறைச்சந்திரன் சூடிய தலையையுடையவள். வெண்மையான சந்தனம் — ஆடைகள் இவற்றால் அழகுமிக்க உடம்பையுடையவள். இவ்வாறான "கௌரி"யை (வெண்மையானவளை) த்தியானிக்கவேண்டும். காந்தி-நிறைவு-பரந்த புகழ்-உலகினரை மகிழ்வித்தல்—இவற்றைப் பெறுவதற்கு இம்மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும்.

ப்ராணசக்தி—௧௪

இரத்தக் கடலிலுள்ள ஓடத்தில் அழகுற்று விளங்கும் செந்தாமரை மலரில் வீற்றிருப்பவள். தாமரை மலர்

(1) "[illegible]" என்று பிரபஞ்சஸார பாடம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௪ ॥

[illegible] :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

போன்ற கைகளால் பாசம்—வண்டுகளின் வரிசையையே நாண்கயிறாகக்கொண்டதான கரும்பு வில், அங்குசம், ஐந்து அம்புகள் (தாமரை மலர், அசோகம், மாமலர், மல்லிகை, கருங்குவளை ஆகிய ஐந்து மலர்களே — ஐந்து அம்புகள்) மண்டை ஓடுகளாலான மாலை — இவற்றைத் தரித்திருப்பவள். மூன்று கண்களுடன் பிரகாசிப்பவள். பருத்த கொங்கைகளால் இனிய காட்சியளிப்பவள். இளம் சூரியனுடைய நிறமுள்ளவள். தெய்விகத் தன்மை வாய்ந்தவள். எல்லாவற்றையும் காட்டிலும் மேலானவள். இவ்வாறான ப்ராணசக்தி, உங்களுக்கு ஸுகத்தைக் கொடுப்பவளாக இருக்கவேண்டும்.

அச்வாரூடா—௫௫—(குதிரையின் மேலேறியவள்.)

[2] சாத்ரியனைக் கயிற்றினால் கட்டி இடதுகையினால் பிடித்துக்கொண்டு செலுத்துகிறவள் (இழுத்துச் செல்லுகிறவள்). மன்மத பாணத்தினால் பீடிக்கப்பட்டுத் தன்னை மறந்திருப்பவள் (காதல் மயக்கங்கொண்டவள்). பொன்னாலான பிரம்பைத் தாமரை மலர்போன்ற மற்றொரு கையினால்

---

(1) "[illegible]" என்றே பாடம் உளது. இரத்தம் தோய்ந்த கபாலங்களைத் தரித்திருப்பவள் என்று அதன் பொருள். "[illegible]" என்னும் பிரபஞ்சஸார பாடத்தைத் தழுவி மண்டை ஓடுகளாலான மாலை என்னும் பொருள் தரப்பட்டது.

(2) "[illegible]" என்னும் பாடம். பொருளில் வேறுபாடு இல்லை. "[illegible]" என்பதற்கு சாதிக்கவேண்டியவனை — எதிரியை — என்று பொருள் கொள்ளப்பட்டது.

ரக்தாம் ரக்தாம்ஶுகாமால்ய கந்தாநுலேபநாம்
அஶ்வாரூடாம் ப்ரஸந்நாம்
தேவீம் பாலேந்துக்ருதஶேகராம் முநிபிஸ்ஸம்ஸ்துதாம்
பாவயே ஹ்ருதி பார்வதீம் ॥ ௨௫ ॥

வஜ்ரப்ரஸ்தாரிணீ :—

ரக்தபயோதிஸ்த ரத்நபோத
ஸ்தாம்பி காரவிந்தாஸநஸ்தாம் ।
இக்ஷுசாபஶராஸந பாஶாங்குஶாபய
வரதாநி பிப்ரதீம் தாம் ॥ ௨௬ ॥

த்ரிநேத்ரா ஶோணாபா ஶோணசந்தநாக்தா
ஶோணாம்பரா ஶோணமால்யாநுலேபா ।
பாலேந்துசூடா ஜடாமகுடாம்
ஹிமகிரிதநயாம் ஸந்ததம் பாவயாமி ॥ ௨௭ ॥

பிடித்திருப்பவள். சிவப்பான நிறமுள்ளவள். சிவப்பான சந்தனம், ஆடை, மலர்கள்—இவற்றால் அலங்கரிக்கப்பெற்றவள். குதிரையின்மேல் அமர்ந்திருப்பவள். தெளிவான தோற்றமுடையவள். பிறைச் சந்திரனைத் தலையிலணிந்தவள். முனிவர்களால் துதிக்கப்பட்டவள். இவ்வாறான பார்வதி தேவியை மனத்தில் தியானிக்கின்றேன்.

வஜ்ரப்ரஸ்தாரிணீ—௨௬-௨௭

இரத்தக் கடலிலுள்ள இரத்தினங்களிழைக்கப்பெற்ற ஓடத்திலுள்ள சூரியனையே இதழாகவுடைய தாமரை மலரில் அமர்ந்திருப்பவள். கரும்புவில்—பூக்களாகிற அம்புகள்—அபய முத்திரை, வரத முத்திரை, அங்குசம், மாதுளம்பழம், அம்பு, பாசம்—இவற்றைத் தனது கைகளால் தரித்திருப்பவள். சிவப்பான நிறமுள்ளவள். மூன்று கண்களுள்ளவள். சிவப்பான சந்தனம், மாலைகள், பட்டாடைகள்—இவற்றை அணிந்தவள். பிறைச்சந்திரன் சூடிய சடைமுடியுள்ளவள், இவ்வாறான இமயமலையின் மகளான பார்வதியை எக்காலமும் தியானிக்கின்றேன்.

அபி ச :—

இந்து³கலாகலாபஸமுஜ்ஜ்வலந்மௌலி-
ஸ்மரமதா³குலிதாயதநேத்ரா ।
ஶோணிதஸிந்து⁴தரங்க³க³போத-
த்³யோதிதபா⁴நுத³லாம்பு³ஜஸம்ஸ்தா² ॥ ௫௮ ॥

தா³டி³மபா³ணஸபாஶகராஶா
ஸாங்குஶசாபகபாலஸமேதா ।
ஶோணது³கூலஸுக³ந்த⁴விலேபநமால்யா
ஶோணதரா ப⁴வதோऽவது தே³வீ ॥ ௫௯ ॥

நித்யக்லிந்நா :—

ஸந்த்⁴யாருணவிக்³ரஹாம் த்ரிநயநாம்
பா³லேந்து³சூடா³மணிம்
பாஶாபீ⁴திகபாலஸாங்குஶலஸத்-
¹ஹஸ்தாம் ஸ்மேராநநாம் ।

மேலும்—௫அ-௫௯

சந்திரனது கலையை அணிந்ததனால் பளபளப்பாகப் பிரகாசிக்கும் முடியை யுடையவள். காதலினாலுண்டான போதையின் மேலீட்டால் கலங்கின மூன்று கண்களை யுடையவள். இரத்தக் கடலில் அலைகளில் மோதுகிற ஓடத்தில் ஒளி வீசுகின்ற சூரியனாகிற இதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருப்பவள். மாதுளம்பழம், அம்பு, பாசம், அங்குசம், வில், கபாலம் (மண்டையோடு) இவற்றைக் கைகளில் தரித்திருப்பவள். செக்கிறமான பட்டாடை, சந்தனம், மலர் மாலைகள்—இவற்றை யுடையவள். மிகமிகச் சிவப்பானவள். இவ்வாறான தேவியானவள் உங்களைக் காப்பாற்றட்டும்.

நித்யக்லிந்நா—௧௯

செம்பரத்தம்பூபோல் சிவந்த உடம்பையுடையவள். மூன்று கண்களுள்ளவள். இளம் சந்திரனைச் சூடாமணியாக அணிந்தவள். பாசம், அபயமுத்திரை, கபாலம், அங்குசம்—இவற்றுடன் திகழும் கைகளையுடையவள். அழகிய

(1) 'ஹஸ்தாக்³ரம்' என்றும் பாடம். பொருளில் வேறுபாடு இல்லை.

𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌭𑍋𑌰𑍁𑌹𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑌾𑌂 𑌶𑌶𑌿𑌮𑍁𑌖𑌾-
𑌮𑌾𑌘𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌨𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌂
𑌰𑌕𑍍𑌤𑌾𑌲𑍇𑌪𑌨𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑍍𑌯𑌲𑌸𑌿𑌤𑌾𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑌦𑌾 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌮𑍍 ॥ ௧௦ ॥

𑌅𑌪𑌿 𑌚 :—

𑌦𑍀𑌪𑍍𑌯𑌤𑍍𑌸𑍁𑌧𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑌿𑌮𑌧𑍍𑌯𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨
𑌦𑍍𑌵𑍀𑌪𑍇 𑌪𑍍𑌰𑌵𑌾𑌲𑌮𑌣𑌿𑌮𑌯𑌭𑍁𑌵𑌿 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂 ।
𑌕𑍢𑌪𑍍𑌤𑍇 𑌮𑌣𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌨𑍍𑌤𑌃
𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑍋𑌪𑌰𑌿𑌗𑌤𑍇 𑌕𑌮𑌲𑍇 𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌾𑌮𑍍 ॥ ௧௧ ॥

𑌪𑌾𑌶𑌂 𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌂 𑌕𑌪𑌾𑌲𑌮𑌭𑌯𑌂
𑌦𑌾𑌨𑌂 𑌚 𑌶𑍋𑌣𑌾𑌂 𑌸𑍃𑌣𑍀𑌂
¹𑌕𑍋𑌣𑌾𑌢𑍍𑌯𑌾𑌂 𑌦𑌧𑌤𑍀𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑌯𑌨𑌾𑌂
𑌬𑌨𑍍𑌧𑍂𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌰𑍁𑌣𑌾𑌮𑍍 ।

முகமுள்ளவள், செந்தாமரை மலரில் அமர்ந்திருப்பவள். மதம் (போதை) மீதூர்ந்ததனால் சுழன்று கொண்டிருக்கும் கண்களையுடையவள். செந்நிறமான சந்தனம், ஆடை, மாலை — இவற்றால் பிரகாசிக்கிறவள். இவ்வாறான பார்வதியை எக்காலமும் வணங்குகின்றேன்.

மேலும்—௧௧-௧௨

அமுதமயமான பெருங்கடலின் மத்தியில் விளங்குகின்ற தீவில், பவழமயமான விசாலமான தரையில், சிறந்த இரத்தினங்களால் ஆக்கப்பெற்ற மண்டபத்தினுள்ளே விளங்கும் சிங்காதனத்தின் மேலுள்ள தாமரை மலரில் வீற்றிருப்பவள். பாசம், கற்பகக்கொடி, கபாலம், அபய முத்திரை, வரதான முத்திரை, அங்குசம், வீணை, வீணாதண்டம் — இவற்றைக் கைகளால் தரித்தவள். மூன்று கண்களுள்ளவள். செம்பரத்தம்பூபோல் சிவப்பான நிறமுள்ளவள்.

---

(1) "கோணம்" என்பது வீணையை இசைப்பதற்கான கருவியாகும். இதை விரல் நுனியில் பொருத்திக்கொண்டு வீணையை இசைப்பர். மூங்கில், உலோகம் இவற்றால் இது செய்யப்படுவதுண்டு. இதைக் கருத்தில் கொண்டு வீணாதண்டம் என்ற பொருள் தரப்பட்டது.

[1]ஶோணாம்ஶுக ஸ்ரக்பூஷணோஜ்ஜ்வலாங்கீம்

பாலேந்துமௌலிம் பராம்।

ஆத்யாம் திவ்யஜநார்சிதாம் அநுபமாம்

வந்தே ஸதா பார்வதீம் ॥ ௬௨ ॥

ஶ்ரீஸூக்தம்:—

அருண[2]கமலஸம்ஸ்தா தத்ரஜ: புஞ்ஜவர்ணா

கரகமல த்ருதேஷ்டாபீதியுக்மாம்புஜா ச ।

மணிமகுட விசித்ரா அலங்க்ருதா கல்பஜாலை:

ஸகல புவனமாதா ஸந்ததம் ஶ்ரீ: [3]ஶ்ரியை வ: ॥ ௬௩ ॥

செந்நிறமான ஆடைகள்-அணிகள்—இவற்றால் பிரகாசிக்கிற உடம்பையுடையவள். இளந்திங்கள் சூடிய முடியையுடையவள். எல்லாவற்றையும் காட்டிலும் மேலானவள். முதன்மையானவள். தேவர்களால் வணங்கப்பட்டவள். நிகரற்றவள். இவ்வாறான பார்வதியை எக்காலமும் வணங்குகின்றேன்.

ஸ்ரீஸூக்தம்—௬௩

செந்தாமரை மலரிலமர்ந்திருப்பவள். அந்த செந்தாமரை மலரின் உள்ளேயிருக்கும் தூளியின் குவியல் போன்ற நிறமுள்ளவள். தாமரை மலர் போன்ற தனது நான்கு கைகளில் வரத முத்திரை—அபய முத்திரை—இரு தாமரை மலர்கள் இவற்றைத் தரித்திருப்பவள். இரத்தினங்களிழைக்கப்பெற்ற கிரீடம், ஏனைய அற்புதமான அணிகள்-மாலைகள் இவற்றால் விளங்குபவள். இவ்வாறான உலக மாதாவான திருமகள் உங்களுக்கு எப்பொழுதும் செல்வத்தைக் கொடுக்கட்டும்.

---

(1) "ஶோணாம்ஶுக" என்றும் பாடம்.

(2) "நளிநஸம்ஸ்தா" என்றும் பாடம். பொருளில் வேறுபாடு இல்லை.

(3) "ஶ்ரியே" என்றும் பாடம். பொருள் ஒன்றேதான்.

त्रिपुटा :—

नवकनकधरासारोविष्टे-
विरचितमणिकुट्टिमे सकल्पतरौ ।
रत्नवरपीठसिंहा-
सन्निहित सरोजे समासीनाम् ॥ ६४ ॥

उपलरत्नकिरीटां मणिकुण्डलोद्यत्-
केयूरकोर्मिरशनाद्य नूपुराढ्याम् ।
ध्याये द्वे पद्मे पाशाङ्कुशेक्षु-
चापं सपुष्पविशिखं नवहेमवर्णाम् ॥ ६५

चामरमुकुर समुद्गक ताम्बूलकरङ्कवाहिनीभिः ।
दासीभिः सुसेव्यतां पश्यन्तीं साधकं प्रसन्नदृशा ॥

த்ரிபுடா— ௬௪-௬௬

பளபளப்பான புதிய பொன்மயமான தரையில் அமைக்கப்பெற்ற இரத்தின மேடையில், கற்பக மரத்தின் நிழலில், சிறந்த இரத்தினங்களிழைக்கப்பெற்ற சிங்காதனத்தில் வைக்கப்பட்ட தாமரை மலரில் அமர்ந்திருப்பவள். இரத்தினங்களால் ஒளி வீசும் கிரீடத்தை அணிந்தவள். இரத்தின மயமான குண்டலங்கள் (காதணிகள்) உயர்ந்த தோள்வளைகள், மோதிரங்கள், ஒட்டியாணம், சலங்கைகள்-இவைபோன்ற அணிகளால் மிக விளங்குகிறவள். கைகளால் இரு தாமரை மலர்கள் பாசம்-அங்குசம்-கரும்பு வில்-மலர்க்கணை (மலராகிய அம்பு) இவற்றைத் தரித்திருப்பவள். புதிய பொன் போன்ற நிறத்தையுடையவள். சாமரம், கண்ணாடிப்பெட்டி, வெற்றிலை ஸம்புடம் இவற்றைத் தாங்கியிருக்கும் பணிப்பெண்களால் சூழப்பெற்றவள். தன்னைத் தியானம் செய்யும் உபாஸகனை (அடியனை) அருள் வழியும் பார்வையால் பார்த்துக்கொண்டிருப்பவள். இவ்வாறான தேவியை வணங்குகிறேன்.

த்4யாநம் :—

உத்3யத்3பா4நுஸஹஸ்ரகோடிஸத்3ருஶீம் ஸம்ஸ்பு2ரச்சந்த்3ரகலா-
ஜூடாம் த்ரிநேத்ராம்
ஹஸ்தை: ஸத்பூர்ணசந்த்3ரவக்த்ராம் வித்3யாக்ஷவலயா-
ப4யவரதா3ம் பீநவக்ஷோஜபா4ராம் ।
பீநோத்துங்க3ஸ்தநார்த்தாம் த்ரிவலிக விலஸ-
ந்மத்4யாம் ரக்தஸ்ருங்முண்ட3-
மாலாலங்காரஶோபா4ம் ரக்தவஸ்த்ரசந்த3நார்த்3ரா-
மாத்3யாம் தே3வீம் நமாமி ॥ ௬௭ ॥

அஸ்ய மூர்த்தி:—

ரக்தாம்போ4ஜே நிவிஷ்டாருணசரணதலா
ஶ்யாமாங்கீ3 ப்ரஸந்நா
ஸஸ்யாட்4யா ஸஸ்யமாலாவிலஸிதகப3ரீ
ப்ரத்யக்ஷபூ4ஷணா ச ।

த்ரிபுரா—௬௭

மிகவும் சிவந்த ஆயிரம் கோடி சூரியன்களுக்குச் சமமான நிறமுள்ளவள். அழகிய பிறைச்சந்திரனைச் சூடிய தனுல் ஒளிமிக்கு விளங்கும் சடைகளையுடையவள். மூன்று கண்களுள்ளவள். பூர்ண சந்திரன் போன்ற முகமுள்ளவள். கைகளால், ஜபம் பண்ணுவதற்கான ஸ்படிகம், புத்தகம், அபய முத்திரை, வரத முத்திரை — இவற்றைத் தரித்திருப்பவள். பருத்த நிமிர்ந்த கொங்கைகளைத் தாங்க முடியாமல் சிரமப்படுகிறவள், த்ரிவலிகளாக (வயிற்றில் உண்டாகும் மூன்று சதை மடிப்புகள்) விளங்குகின்ற இடையையுடையவள். இரத்தம் தோய்ந்த முண்டங்களாலான மாலையால் தன் உடம்பை அலங்கரித்தவள். மிக மிகச் சிவப்பான பட்டாடை—சந்தனம் இவற்றை பணிந்தவள். இவ்வாறுன தேவியை வணங்குகின்றேன்.

பூமிதேவீ—௬௮

முதன்மையான தாமரை மலரில் வைக்கப்பட்ட சிவந்த பாதங்களையுடையவள். பசுமை கலந்த கருப்பான உடம்பையுடையவள். கவர்ச்சிகரமான தோற்றமுள்ளவள்

---

(1) "கரா" என்றும் பாடம்.

ரத்நாகல்பாபி⁴ராமா மணிமயமகுடா
சித்ரவஸ்த்ரா ப்ரஸந்நா
தி³ஶ்யாத் விஶ்வம்ப⁴ரா வ: ஸததமபி⁴மதம்
வல்லபா⁴ கைடபா⁴ரே: ॥ ௬௫ ॥

ஶூலினீ:—

பி³ப்⁴ராணா ஶூலபா³ணாஸ்யரிஸத³ரக³தா³-
சாபபாஶான் கராப்³ஜை:
மேக⁴ஶ்யாமா கிரீடோல்லிகி²தஜலத⁴ரா
பீ⁴ஷணா பூ⁴ஷணாட்⁴யா ।
ஸிம்ஹஸ்கந்தா⁴தி⁴ரூடா⁴ சதஸ்ருபி⁴ரஸிகே²-
டான்விதாபி⁴: பரீதா
கந்யாபி⁴ர்பி⁴ந்நதை³த்யா ப⁴வது ப⁴வப⁴ய-
த்⁴வம்ஸினீ ஶூலினீ வ: ॥ ௬௬ ॥

அசைந்துகொண்டிருக்கிற நெல் கதிரைக் கையிலேந்தியிருப்பாள். அதன் நுனியில் நெல்லைக் கொறித்துக் கொண்டிருக்கும் ஒரு கிளி. அத்துடன் ஒன்று சேர்ந்து விளங்கும் கருநெய்தல் மலரையணிந்தவள். செந்நிறமான அலங்காரம்-மாலைகள் இவற்றை அணிந்து அழகுற்று விளங்குகிறவள். இரத்தினங்களிழைக்கப் பெற்ற கிரீடம் அணிந்தவள். சித்திரமான வர்ணமுள்ள ஆடையுடையவள். அருள்நிரம்பிய தெளிந்த முகமுள்ளவள். திருமாலுடைய மனைவி. இவ்வாறான பூமிதேவி உங்களுக்கு எக்காலமும் வேண்டிய வரமெல்லாம் கொடுக்கட்டும்.

சூலினி—௬௬

சூலம், அம்பு, கத்தி, சக்கரம், சங்கு, கதை, வில், பாசம்—இவற்றைத் தாமரை மலர் போன்ற கைகளால் தரித்திருப்பவள். மேகம் போன்ற கருப்பு நிறமுள்ளவள். தலையிலணிந்த கிரீடத்தினால் மேக மண்டலத்தைக் கீறுகின்றவள். பயங்கரமான வடிவமுடையவள். ஆபரணங்கள் நிறைந்தவள். சிங்கத்தின் தோளில் ஏறியிருப்பவள். கத்தியும், கேடயமும் ஏந்திய நான்கு கன்னிகைகளால் சூழப்பெற்றவள். அசுரரைப் பிளந்தவள். இவ்வாறான சூலினீ தேவி உங்களுக்கு ஸம்ஸார பயத்தைப் போக்கி அருள்புரியட்டும்.

காயத்ரீ :—

மந்தாராஹ்வய ரோசநாஞ்ஜநஜவா[1]
காபைர்முகைரிந்து:
[illegible]ஜ்வலச்சது-
ர்விம்ஶார்ண விப்ராஜிதா: ।
[2] ஶங்க[illegible] குணகபா-
லௌ ச[3] பாஶாங்குஶௌ-
[illegible] ததீ [illegible]-
[illegible]தாரிணீ [4] தாரிணீ ॥ ௭௰ ॥

காயத்ரீ—௭௰

மந்தாரமலர், கோரோசனம், மை, செம்பரத்தம்பூ, ஆகாயம் இவைபோன்ற நிறமுள்ள ஐந்து முகங்களுடன் கூடியவள். பிறைச்சந்திரனுள்ளதும் இரத்தினங்களிழைக்கப்பெற்றதுமான கிரீடத்தை அணிந்தவள். தனது உடம்பில் பரவியிருக்கும் இருபத்தினான்கெழுத்துள்ள மந்திரத்தினல் அற்புதமான காட்சியளிப்பவள். இரண்டு தாமரை மலர்கள் சக்கரம், கதை, நூல், கபாலம், பாசம், அங்குசம், வரதமுத்திரை, அபய முத்திரை இவற்றைக் கைகளில் தரித்திருப்பவள். ஸம்ஸாரத்தினின்றும் கரையேற்றுவிப்பவள். இவ்வாறான காயத்ரீ தேவியானவள், உங்களது விருப்பங்கள் யாவற்றையும் நிறைவேற்றி வைக்கட்டும்.

---

(1) « [illegible] » என்றும் பாடம் உண்டு.

(2) « [illegible] » என்பது ப்ரபஞ்ச ஸாரத்திய பாடம். சிறந்தது.

(3) « [illegible] » என்றும் பாடமுண்டு.

(4) « தாரணீ » என்றும் பாடம்.

காயத்ரீ த்ரிஷ்டுப் :—

காயத்ரீ வதநாநநேத்ர (ந) யநா
பாலா வதந்தி ஸ்புரத்தேஜ:
பத்மாக்ஷாலிகமண்டலூத்ரஸ்தாப-
ப்ராதூர்விபூதி ஸ்புரத்வரா ।
ப்ராஹ்மீ ஹம்ஸஸமாரூடபத்மநிலயா
பாய [illegible]
த்யேயா [illegible] ....
.... ॥ எக ॥

ஶாஸ்த்ரவித்யுத்ப்ரகாஶா [illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

காயத்ரீ த்ரிஷ்டுப்—எக

நான்கு முகங்களும், எட்டு கண்களும் உள்ளவள். சிறு வயதினள். பிரகாசமான நான்கு கைகளுள்ளவள். அவற்றில் முறையே தாமரைமணி மாலை, கமண்டலு, பூமாலை, அபய முத்திரை. இவற்றைத் தரித்திருப்பவள். பிரம்மாவினுடைய அம்சமானவள். அன்னப் பறவையினுல் தரிக்கப்பட்ட தாமரை மலரின் இதழில் வீற்றிருப்பவள். செம்பரத்தம்பூவின் நிறமுள்ள அழகிய அணிகளால் ஒளி வீசும் தோற்றமுடையவள். இவ்வாறுன காயத்ரீ தேவி, எனது இதயத்தில் ....".

குறிப்பு:— இந்த சுலோகம் முழுதும் இல்லை. நான்காமடி குறைந்துள்ளது. அதனுல் கருத்து முற்றுப்பெறவில்லை.

காத்யாயநீ—எஉ

பளபளப்பான மின்னல்போல் பயங்கரமானதும் மிகவும் கலங்கினதுமான பெரிய சிங்கத்தின் பிடரியில் அமர்ந்திருப்பவள். சக்கரம், சங்கு, கத்தி, கேடயம், அம்பு, வில், த்ரிசூலம், ஆள்காட்டி விரலால் பயமுறுத்தும் விதமான கைமுத்திரை இவற்றைப் பகைவர் நடுங்குமாறு கைகளில் தரித்திருப்பவள். தோல் (கேடயம்), கத்தி இவைகளைத்

உத்ப்ராஸ்யோத்தீர்ணதோர்பி: ப்ரஹரண நிபுணா-
பிர்வ்ருதா கந்யகாபி-
ரக்நேரம்ஶா நவீனாம் [1]த்ரிநயநவதிகா
தேவீ காத்யாயநீ வ: ॥ ௭௨ ॥

ஸௌரீ ஸூர்யலக்ஷ்மீ :—

பாஸ்வத்ரத்நௌகமௌளி ஸ்புரததுஹிநருசா-
ரஞ்ஜய ச்சாருரேகாம்
ஸத்ய:ஸந்தப்த ஹேமாம்புஜ ஜபா
ஸாமராபி: ப்ரபாபி: ।
விஶ்வாகாஶாவகாஶம் ஜ்வலய திஶிஶிரம்
[2]யத்ருதம் பாஶாங்குஶேஷ்டா-
பீதீநாம்[3]ஸாஷிதாம் ஸ்தந பேதாம்பு-
நாதம் ரூபம் ஸௌரம் வபு: ॥ ௭௩. ॥

தாங்கிய பயங்கரமான கைகளையுடையவர்களும், பகைவரை அடித்துக் கொல்லுவதில் தேர்ச்சி பெற்றவர்களுமான கன்னிகைகளால் சூழப்பட்டவள். அக்கினியினுடைய அம்சமானவள். மூன்று கண்களுள்ளவள். இவ்வாறான காத்யாயனீ தேவி உங்களுக்கு வேண்டின வரங்களை எல்லாம் கொடுக்கட்டும்.

சூரியனுடைய நான்கெழுந்துள்ள மந்திரம்—௭௩

சுடர்மிக்க இரத்தினங்களிழைக்கப்பெற்ற கிரீடம். அதில் பிரகாசமாகக் காட்சியளிக்கும் குளிர்ந்த காந்தியுடைய அழகிய பிறைச்சந்திரன். நன்கு காய்ச்சப்பட்ட பொன், தாமரை மலர், செம்பரத்தம்பூ, இவைபோல் பிரகாசிக்கிற தனது ஒளிக்கூட்டங்களால் அந்த சந்திரரேகையை நிறம்பெறச் செய்கின்றது உலகமாதாவின் சூரியாம்சமான வடிவம். ஆகாசம் முழுதும் தீப்பிடித்தெரிகின்றாற்போல் செய்கிறதும், குளிர்ச்சியற்றதும், பாசம், அங்குசம், வரத முத்திரை, அபய முத்திரை இவற்றைத் தரித்த கைகளுடையதும், பிரிந்து நிமிர்ந்த கொங்கைகளையுடையதுமான உலகமாதாவினுடைய சூரியாம்சமான அவ்வடிவம் உங்களைக் காப்பாற்றட்டும்.

(1) "ஷாத்ரி நயந" என்றும் பாடம்.
(2) 'யாத்ரு' என்றும் பாடம். (3) "ஸாஷிதாம்" என்றும் பாடம்.

த்⁴யாநம் :—

க்ஷீராப்³தௌ⁴ ரஜதவப்ரவலயாவ்ருத கநகத்³வீபே

¹ஶ்ரீவவமே ஸுராட்⁴யே

கல்பத்³ருமோத்³யாநகே ரத்நஸ்யூதஸ்த²லீகே

சித்ரவஸ்த்ரா ஶுபா⁴ஸே ।

குபே³ரே ஸம்ஶ்ரியா வா ஸஹித வஸுமதீம்

ரத்நே ஸம்ஸ்ப்ருஜந்த்யௌ

ரத்நே ஸம்பூ⁴ஜயாதோ ஜபதஸ் ஸம்பதே³

ஸம்பதே³ ²ஞ்ஜஸ்ய ரத்நம் ॥ ௭௪ ॥

அன்னபூர்ணா—௭௪

அழகிய பாற்கடல், அதனுள் வெள்ளியினால் எழுப்பப் பட்ட கோட்டைச் சுவர். அதனால் சூழப்பட்ட சிறந்ததோர் பொன் தீவு. அதில் தேவர்களெல்லாம் குழுமியிருக்கின்றனர். கற்பக மரங்கள் ஆங்குள்ள பூங்காவில் நிறைந்துள்ளன. அவ்விடத்துத் தரையெல்லாம் பலவிதமான இரத்தினங்கள் இழைக்கப்பெற்றுச் சோதி வெள்ளமாய்க் காட்சியளிக்கின்றது. அங்கு செல்வத்துக்கதிபதியான குபேரன் முன்பாக, பூமிதேவியும், திருமகளும் அமர்ந்திருக்கின்றனர். மந்திரத்தை ஜபம் செய்யும் பக்தனுக்கு வேண்டிய பொருள் எல்லாவற்றையும் குவியல் குவியலாக அவ்விருவரும் தோற்றுவிக்கின்றனர். கீழ்ச் சொன்ன விஷயங்களையெல்லாம் நன்கு சிந்தித்துக்கொண்டு, மந்திரியானவன் (உபாஸகன்) பெருஞ்செல்வத்தைப் பெறுவதற்காகக் காலைவேளையில் அன்னபூர்ணா மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

---

(1) "ஸ்யீ ஶ்ரீவ" என்றும் பாடம்.

(2) "ஸம்பதீ³ஞ்ஜஸ்ய" என்றும் பாடம்.

𑌅𑌥𑌵𑌾 :—

𑌰𑍁𑌦𑍍𑌰𑌤𑌾𑌣𑍍𑌡𑌵𑌵𑌿𑌨𑍋𑌦𑌨𑌲𑍋𑌲𑌾𑌂
𑌭𑌦𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌨𑌯𑌨𑌾𑌂 𑌶𑌿𑌵𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌨𑌦𑌾𑌨𑌨𑌿𑌰𑌤𑌾𑌂 𑌜𑌨𑌨𑍀𑌂 𑌤𑌾𑌂
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑍁𑌷𑌸𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌦𑍁𑌕𑍂𑌲𑌾𑌮𑍍 ॥ ௭௫ ॥

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑌰𑌃 :—

[1] 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾𑌂𑌕𑍁𑌶𑌮𑍍 ।
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍀𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑌾𑌂𑌬𑌰𑌾𑌂 𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ॥

வேறு—௭௫

சிவபெருமானுடைய நடனத்தைப் பார்ப்பதில் ஆவலுள்ளவள். மங்களகரமான முகமும் கண்களும் உள்ளவள். சிவபெருமானுடைய அன்பிற்குரிய மனைவியானவள். அன்னம் (சோறு) வழங்குவதில் ஊன்றிய கருத்துள்ளவள். விசித்திரமான பட்டாடை அணிந்தவள். இவ்வாறான உலகப் பிரஸித்திபெற்ற அன்னையை அதிகாலையில் தியானிக்க வேண்டும்.

(ஏழு தாய்மார்கள்)—௭௬–௮௨

ப்ராம்மீ

தண்டம் (தடி), கமண்டலம், அக்ஷமாலை, அங்குசம் இவற்றைத் தரித்திருப்பவள். பொன்னிறமானவள். புள்ளிமான் தோலையுடுத்தியவள். இவ்வாறாக பிரம்மாவின் மனைவியை (ப்ரம்மாணியை)த் தியானிக்கவேண்டும்.

---

(1) காச்யபீயம் 46-வது படலத்தில், ப்ராம்மீ மாதாவின் விளக்கம் வேறுவிதமாக 72, 73-வது சுலோகங்களில் கூறப்படுகின்றது:

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌭𑌯𑌶𑍂𑌲𑍇 𑌚 𑌵𑌰𑌦𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌾 𑌹𑌂𑌸𑌵𑌾𑌹𑌨𑌖𑍇𑌲𑌗𑌾 ॥ ௭௨ ॥
𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌪𑍀𑌤𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌾 𑌵𑌰𑌾 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍀 𑌦𑍇𑌵𑍀 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ॥ ௭௩ ॥

என்பன அங்குள்ள சுலோகங்கள். "வலதுபுறம் இரு கைகளில் அபயமுத்திரை, சூலம் இவற்றையும், (இடதுபுறம் இரு கைகளில்) வரதமுத்திரை, அக்ஷமாலை இவற்றையும் தரித்திருப்பாள். தாமரை மலராசனத்தில் அமர்ந்தவள். ஹம்ஸ வாஹனத்தில் உல்லாசமாகச் செல்பவள். சடைமுடி உள்ளவள். பொன்னிறமான ஆடையுடுத்தியவள்; பிரம்ம விருக்ஷத்துடன் கூடியவள்" என்பது அதன் கருத்து. இதற்கும் அதற்கும் வேறுபாடு காணப்படுகின்றது.

¹ஶூலம் பரஶ்வதம் க்ஷுத்ரடக்காம் ந்ருகரோடிகாம் ।
பி³ப்⁴ரதீ ஹிமகுந்தா³பா⁴ த்⁴யேயா மாஹேஶ்வரீ ஶிவா ॥ ௭௭ ॥
அங்குஶம் பாஶகட்வாங்கம்² + + + த³த⁴தீம் ஸாத⁴கேஜ: ।
த்⁴யாயேச்ச ஸிந்தூ³ரஸங்காஶாம் கௌமாரீம் ஶக்திமாலிகாம் ॥

மாஹேச்வரீ—௭௭

சூலம், மழு, சிறிய பறை, மனிதனுடைய மண்டை ஓடு இவற்றை தரித்தவளாகவும், மேகம்போல் வெண்மையான நிறமுள்ளவளுமாக மாஹேச்வரியைத் தியானிக்கவேண்டும்.

கௌமாரீ—௭௮

அங்குசம், பாசம், கட்வாங்கம் (முனிவர்கள் கையிலுள்ள மண்டையோட்டுடன் கூடிய ஒரு வகையான தடி) இவற்றைக் கைகளால் தரிப்பவளும், செந்தூரம் போன்ற நிறமுள்ளவளும், சக்தியை (வேல்) மாலையாக அணிந்தவளுமான கௌமாரியைத் தியானிகக வேண்டும்.

---

(1) காச்யபீயம் 46-வது படலம்:—
சதுர்பு⁴ஜா த்ரிநேத்ரா ச அதிரக்தஸ்வரூபா ।
ஶூலாப⁴யகரா ஸவ்யே வாமே வரத³ஹஸ்தகா ॥ ௭௪ ॥
ஜபமாலாஸமாயுக்தா ஜடாமகுடஸம்யுதா ।
ஈஶ்வரேண ஸமா ஹ்யேஷா ஈஶ்வரீதி ப்ரகீர்திதா ॥ ௭௫ ॥

என்னும் இரண்டு சுலோகங்கள் மாஹேச்வரீ மாதாவைக் கூறுவன. நான்கு கைகள், மூன்று கண்களுள்ளவள், மிகவும் செந்நிறமானவள். சூலம், அபயமுத்திரை இவற்றை வலதுபுறக் கைகளிலும், வரதான முத்திரை, ஜபமாலை இவற்றை இடதுபுறக் கைகளிலும் தரித்தவள், சடைமுடி யுள்ளவள். ஈச்வரனுக்குச் சமமான இவள் ஈச்வரீ எனப்படுவாள்" என்பது இவற்றின கருத்து. இவற்றிலுள்ள வேற்றுமைகளை ஆய்ந்துணர்க.

(2) "கட்வாங்க பாஶாங்கு" என்றும் பாடமுண்டு.
காச்யபீயம் 46-வது படலம்:—
சதுர்பு⁴ஜா த்ரிநேத்ரா ச ரக்தவஸ்த்ரநிமாங்கிதா ।
ஸர்வாப⁴ரணஸம்யுக்தா வாஹிகாப³லகோஷ்டி²மா ॥ ௭௬ ॥
ஶக்திகுக்குடஹஸ்தா ச வரதா³ப⁴யபாணிகா ।
மயூரத்⁴வஜவாஹா ச உது³ம்ப³ரஸமாஶ்ரிதா ॥ ௭௭ ॥

என்னுமிரண்டு சுலோகங்களில் கௌமாரீ மாதாவின் இலக்கணம் வேறுவிதமாகக் கூறப்படுகின்றது.

[illegible] ।
[illegible] ॥ ௭௯

[illegible] ।
+ + + + + [illegible] ॥

வைஷ்ணவீ—௭௯

சக்கரம், சங்கு, கொடி (த்வஜம்), சக்தி இவற்றைத் தனது நான்கு கைகளால் தரித்திருப்பவள். பட்டாணி போல் கருமை நிறமுள்ளவள். பீதகவாடையுடுத்தியவள். இவ்வாறாக வைஷ்ணவியைத் தியானிக்க வேண்டும்.

வாராஹீ—௮0

உலக்கை, கத்தி, அழகிய மணி, கலப்பை இவற்றைக் கைகளால் தரித்திருப்பவள். மேகம் போன்ற நிறமுள்ளவள். இவ்வாறாக வாராஹியைத் தியானிக்க வேண்டும்.

குறிப்பு :— இந்த மூலம் சிதைந்துள்ளது.

(1) "[illegible]" என்றும் பாடம்.

(2) காச்யபீயம் 46-வது படலம் :—

[illegible] ।
[illegible] ॥ ௭௮ ॥
[illegible] ।
[illegible] ॥ ௭௯ ॥
[illegible] ।

என்று வைஷ்ணவீ மாதாவின் இலக்கணம் கூறப்படுகின்றது.

(3) காச்யபீயம் 46-வது படலம் :—

[illegible] ॥ ௮0 ॥
[illegible] ।
[illegible] ॥ ௮௧ ॥
[illegible] ।

என்னும் இரண்டு சுலோகங்களில் வாராஹி மாதாவின் இலக்கணம் கூறப்படுகின்றது.

𑌅𑌙𑍍𑌕𑍁𑌶𑌂 𑌤𑍋𑌮𑌰𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌚𑌕𑍍𑌰𑌞𑍍𑌚 𑌦𑌧𑌤𑍀𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭𑌵𑌰𑍍𑌣𑌾[1]𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑍀𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌭𑍂𑌷𑌣𑌾𑌮𑍍 ॥
𑌶𑌙𑍍𑌖𑌾𑌵𑌲𑌿𑌨𑍍𑌯𑌶𑌿𑌰𑍋𑌰𑌾𑌜 𑌕𑌪𑌾𑌲𑌵𑌿𑌲𑌸𑌦𑍍𑌭𑍁𑌜𑌾𑌮𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌤𑌨𑍀𑌂 [2]𑌚𑌾𑌰𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑍀𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ॥ ௮௨

மாஹேந்த்ரீ—௮௧

அங்குசம், தோமரம், வஜ்ராயுதம், சக்கரம் இவற்றைத் தரித்திருப்பவள். மங்களகரமானவள். இந்திர நீலக்கல் போன்ற நிறமுள்ளவள். பளபளப்பான ஆபரணங்களை அணிந்தவள். இவவாறாக இந்திராணியைத் தியானிக்க வேண்டும்.

சாமுண்டா—௮௨.

சூலம், கத்தி, மனிதனுடைய தலை, அழகிய மண்டை ஓடு இவற்றால் பிரகாசிக்கிற கைகளையுடையவளும், முண்டங்களாலான மாலையை யணிந்தவளும், கடுஞ்சின முள்ளவளுமாக சாமுண்டியைத் தியானிக்க வேண்டும்.

---

(1) காச்யபீயம் 46-வது படலம்:—

𑌕𑍍𑌵𑌦𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌗𑌜𑌧𑍍𑌵𑌜𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 ॥ ௮௨ ॥
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌕𑍇𑌶𑌿𑌨𑍀 ।
𑌕𑌪𑌾𑌲𑌶𑍂𑌲𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌪𑌾𑌣𑌿𑌨𑍀 ॥ ௮௩ ॥

என்னும் சுலோகங்களால் மாஹேந்த்ரீ மாதாவின் இலக்கணம் கூறப்படுகின்றது.

(2) காச்யபீயம் 46-வது படலம்:—

𑌶𑌿𑌰𑍋𑌰𑍁𑌹𑍈𑌰𑍍𑌵𑌶𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌪𑌟𑍍𑌟𑌵𑍀𑌰𑍋𑌷𑍍𑌣𑍀𑌷𑌿𑌤𑌾 ।
𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌚𑌰𑍍𑌮𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ॥ ௮௪ ॥
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑌰𑌾𑌲𑌵𑌦𑌨𑌾 𑌪𑌟𑍁𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌚𑌰𑍍𑌮𑌾𑌵𑍃𑌤𑌾 ।
𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌸𑌂𑌕𑍍𑌷𑍇𑌪𑍇𑌣 𑌚 𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௮௫ ॥

என்னும் சுலோகங்களால் சாமுண்டா மாதாவின் இலக்கணம் கூறப்படுகின்றது. மேலும்:—

𑌦𑌕𑍍𑌷𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌏𑌵𑌂 𑌵𑍈 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑍃𑌣𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌪𑍁𑌰𑌾 ॥ ௮௬ ॥

என்று பொதுவான அமைப்பும் கூறப்படுகின்றது. இதை ஆய்ந்துணர்க.

ம்ருகடங்கவராபீதிகரோ வீரஸ்த்ரிலோசந: ।
நாகோபவீதாபரண: ஶ்வேதவஸ்த்ராம்பரோ பவேத் ॥

கஜாஸ்ய ஏகதம்ஷ்ட்ரஶ்ச த்ரிநேத்ரம் நாகபூஷணம் ।
கநகாபம் பாஶாங்குஶவரம் ததா ॥ ௮௪ ॥

வீரன்—௮௩.

மான், கோடரி, வரத முத்திரை, அபய முத்திரை இவற்றைக் கைகளால் தரித்தவாறும், மூன்று கண்கள் உள்ளவாறும், பாம்புகளையே உபவீதம் (பூணூல்) ஆபரணங்கள் இப்படியாக அணிந்தவாறும், வெண்மையான தோலை ஆடையாக உடுத்தியவாறுமாக "வீரன்" தியானிக்கப் படவேண்டும்.

யானைமுகத்தான்—௮௪.

பிள்ளையார் ஒரே தந்த முடையவர். மூன்று கண்களுள்ளவர், பாம்புகளையே ஆபரணமாக அணிந்தவர். பொன் போன்ற நிறமுள்ளவர். நான்கு கைகளுள்ளவர். அவற்றில் முறையே, பாசம், அங்குசம், வாதமுத்திரை, பக்ஷ்யம் (தின்பண்டம்) இவற்றைத் தரித்திருப்பவர்.

காச்யபீயம் 46-வது படலம்:—

தக்ஷிணே(அ)தக்ஷிணே சைவ வீரபத்ர விநாயகௌ ॥ ௬௯ ॥

சதுர்புஜௌ த்ரிநேத்ரௌ ச ஜடாமகுடமண்டிதௌ ।
ஸர்வாபரணஸம்யுக்தௌ ஶ்வேதவர்ணாவ்ருஷத்வஜௌ ॥

ஸவ்யாங்குஶபாஶஹஸ்தௌ ச தக்ஷிணே து கரத்வயே ।
ம்ருகாபாஶஹஸ்தௌ ச வாமே ஶூலகரத்வயே ॥ ௭௦ ॥

ஶ்வேதவஸ்த்ராஸநாஸீநௌ பத்மபீடஸமன்விதௌ ।
சதுர்புஜ சதுர்பாஹுஸம்யுக்தௌ ஹேமவர்ணகௌ ॥

என்னும் சுலோகங்களால் வீரபத்ரன், விநாயகர் இவர்களின் இலக்கணத்திலும் சில விசேஷங்கள் கூறப்படுகின்றன.

ह्रस्वजानुशिरस्कं च स्थूलं ह्रस्वपादकरान्वितम् ।
शुण्डाग्रे धृतदोनकं बृहत्कायं विचिन्तयेत् ॥ ८५ ॥

अथ प्रसङ्गात् श्रीचक्रप्रस्तारो विव्रियते :—

चक्रार्थं शोधयेत् क्षेत्रं समं निम्नोन्नतोज्झितम्
संशोध्य षट्त्रिंशदङ्गुलविस्तारं चतुरश्रकम् ।
कृत्वा तन्मध्यतः प्राच्यां प्रतीच्यां च तथैव तु
सूत्रद्वयं दक्षिणोत्तरसूत्रद्वयं तथा ॥ ८६ ॥

ततो मध्ये वृत्तं विधाय
अष्टचत्वारिंशदङ्गुलमानं श्रीचक्रं साधयेत् ।
चक्रार्थं मूलसूत्रे[1] प्राङ्मूलसूत्रे
प्राग्भागात् + + + मानेन कल्पयेत् ॥

இவருடைய கால்களும் கைகளும் குறுகியனவாக இருக்கும். துதிக்கை நுனியில் தொன்னையைப் பிடித்திருப்பார். உடல் மிகப் பெரியதாக இருக்கும். இவ்வாறாகப் பிள்ளையாரைத் தியானிக்க வேண்டும்—அரு.

இனி, பொருத்த முடைமைபற்றி, ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பு விவரிக்கப்படுகின்றது—அசு.

ஸ்ரீ சக்கரம் அமைப்பதற்காக, தூய்மையானதும் மேடு பள்ளம் இல்லாததும் கரடுமுரடாக இல்லாததுமான தரையைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அதைத் தொண்ணூற்றாறு அங்குலம் பரப்புள்ள சதுரமாக அமைக்கவேண்டும். அதில் நடுவில் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் இரண்டு நூல்களை (கோடுகளை) அமைக்க வேண்டும்.

அஎ

பிறகு நாற்பத்தெட்டு அங்குலம் அளவில் உள்ளே நடுவில் வட்டமாக ஒரு கோடு அமைக்க வேண்டும். இதுவே ஸ்ரீ சக்கரத்திற்காக அமையும். மீண்டும் முதல் சூத்திரத்தில் கிழக்கிலிருந்து + + + இங்கு அடையாளம் பண்ண வேண்டும். (குறிப்பு, இங்கு மூலம் சிதைந்துள்ளது)

---

(1) "[illegible]" என்றும் பாடம்.

𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌷𑌟𑍍𑌸𑍍𑌵𑌿𑌂𑌶𑌿𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌣𑍋𑌕-
𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌷𑌟𑍍𑌸𑍁𑌪𑌞𑍍𑌚𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍇 ।
𑌪𑌕𑍍𑌷𑍇𑌷𑍁 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌕𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌵𑍍𑌯𑍁-
𑌦𑍇𑌶𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌹𑌿𑌤𑌂 𑌕𑌰𑍋𑌤𑍁 ॥ ௮௮ ॥

𑌸𑌮𑍇𑌷𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌭𑌾𑌗-
𑌸𑌾𑌧𑍇𑌷𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 ।

௮௮

அதிலும் கீழே சொல்லப்படும் குறிப்பு ஞாபகத்தி லிருக்க வேண்டும். முதல் சூத்திரத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லுமாறு அடையாளப் புள்ளிகளை வைக்கவேணும். 96 அங்குலமுள்ள சதுரத்திலுள் 48 அங்குலமுள்ள வட்டம் வரைந்தோமல்லவா? அந்த வட்டத் தினுள்ளேயே அமையும் படியாக இப்புள்ளிகளை இட வேண்டும். பிறகு இப்புள்ளிகளில் தொடங்கித் தெற்கு வடக்காக உள்வட்டத்தினுள் 9 கோடுகளைக் கீறவேண்டும். அவற்றுள் முதல் கோடு, வட்டத்தின் கீழ்ப்புறமிருந்து ஆறு அங்குல தூரத்தில் செல்லவேண்டும். இரண்டாவது கோடும், முதல் கோட்டினின்றும் 6 அங்குலத்தில் செல் லும். அதனின்றும் ஐந்தங்குலத்தில் மூன்றாவது கோடு, அதனின்றும் மூன்றங்குலத்தில் நான்காவது, அதிலிருந்து மூன்றங்குலத்தில் ஐந்தாவது கோடு, அதனின்றும் நான்கு அங்குலத்தில் ஆறாவது, அதனின்றும் மூன்றங்குலத்தில் ஏழாவது கோடு, அதனின்றும் அவ்வாறு அங்குலங்களில் தனித்தனியே இரண்டு கோடுகள், இவ்வாறு வரைய வேண்டும். இக்கோடுகளுக்கான அடையாளப் புள்ளிகள் 96 அங்குல முள்ள சதுர ரேகையில் தான் இருக்கும். ஆயினும் அக்கோடுகளை உள் வட்டத்தினுள்ளேயே அமை யும்படி வரையவேண்டும். இப்படித் தெற்கு வடக்கில் ஒன்பது சூத்திரங்கள் (கோடுகள்) அமைத்துக்கொள்க.

௮௯—௯௰

இந்த ஒன்பது சூத்திரங்களிலும் கீழே சொல்லப் போகிறபடி இரு முனைகளிலும் அடையாளமிட்டு அதன்படி கோடுகளும் வரைய வேண்டும். முதலாவது சூத்திரத்திலும், (ஒன்பதாவது) கடைசி சூத்திரத்திலும் இரு முனைகளிலும் (தெற்கு முனையிலும் வடக்கு முனையிலும்) மூன்றங்குலம்

விஹாய ராமாங்குலம் மாத்ரமாத்ர-
ஸ்யயோ ஸ்த்யா அஷ்டமயோ ஸூத்ரயோ: ॥ ௮௯ ॥
சதுர்த்தஷஷ்ட்யாங்க ஸூத்ரகாணே-
ஷோடஶாங்குலம், பஞ்சமஸூத்ரயோஸ்து ।
ஏகோநவிம்ஶாங்குலம் வ்ருத்தஸூத்ரத:
வ்யக்தம் க்ருதே (அந்த: ?) ஏகைகஶ்ச பசேத் [1]த்ரிகோணம் ॥
ஆவ்ருத்தமேவ சிஹ்நம் பஶ்சிமேப்ய: ப்ராக்
ரேகே த்ருதீய ஸம்ஸ்தாப்ய ஸம்ஸ்தாப்யைவ ச ।

ஒதுக்கிவிட்டு அடையாளப் புள்ளிகள் இடவேண்டும். அப்படியே இரண்டாவது சூத்திரத்திலும் எட்டாவது சூத்திரத்திலும் முன்போலவே இரு முனைகளிலும் நன்னான்கு அங்குலங்கள் ஒதுக்கிவிட்டு உள்ளடங்கியதாகப் புள்ளியிடவேண்டும். நான்காவது சூத்திரம், ஆறாவது சூத்திரம் இவற்றின் இரு முனைகளிலும் (தென்புறத்திலும் வடபுறத்திலும்) பதினாறு பதினாறு அங்குலம் வட்டக்கோட்டிலிருந்து உள்ளடங்கியதாக அடையாளப் புள்ளிகள் இடவேண்டும். ஐந்தாவது சூத்திரத்திலோவெனில், இரு முனைகளிலும் வட்டக் கோட்டினின்றும் பத்தொன்பது அங்குலங்கள் உள்ளடங்கியவாறு அடையாளப் புள்ளிகளிடவேண்டும். மொத்தம் தெற்கு வடக்காக ஒன்பது சூத்திரங்கள் வரையச் சொன்னோம். அவற்றில் ஏழு சூத்திரங்களில் புள்ளியிட்டு அடையாளம் பண்ணவேண்டிய விதம் கூறப்பட்டது. மற்ற இரண்டு சூத்திரங்களும் வட்டக்கோட்டைத் தொட்டுக்கொண்டவாறே (வட்டம் பூராவிலும் தெற்கு வடக்காக) வியாபித்திருக்கும். இவ் வடையாளங்களிலிருந்து வேறு சூத்திரங்களை வரைந்தால் முக்கோணமாகும்.

௯௧

இனி த்ரிகோணம் அமைக்கும் வழி கூறப்படுகின்றது. ஏற்கெனவே கூறியபடி அடையாளப் புள்ளிகளை உற்றவிடங்களில் இட்டிருப்பதை ஞாபகத்தில் தவறாமல் வைத்துக் கொள்ளவேண்டும். கிழக்கிலிருந்தே சூத்திரங்களை

---

(1) "த்ரிகோண:" என்றும் பாடம்.

ஷஷ்டாஷ்டமாத்யாமம் விநிவேஶ்ய வாமத:

அத்யாத்ருஷ்டாக்ரஜநிதே ச யதா த்ரிகோணே ॥ ௯௧ ॥

தத்ர த்ருதீயாஷ்டமகாக்ரஜே ச

ஸூத்ரே நிவேஶ்ய தனுமத்யமாக்ரே ।

ஷஷ்டாம்ஶகாக்ரே ப்ரதிவேஶ்ய ஸூத்ரம்

த்ருதீயஸூத்ராக்ரஸமீக்ஷ்ய தே ச ॥ ௯௨ ॥

ஒன்று இரண்டு என எண்ணிக்கொண்டு செல்லவேண்டும் என்னும் விஷயமும் நினைவிலிருக்க வேண்டும். மூன்றாவதும் ஏழாவதுமான ரேகைகள் தென்புறமும் வடபுறமும் வட்டத்தில் ஒட்டியவாறே அமைந்துள்ளன அல்லவா? அவ்விரண்டினின்றும் மேற்கு நோக்கியவாறும் கிழக்கு நோக்கியவாறும் முறையே இரு கோடுகளிலிருந்தும் கிளம்பிய இரு சூத்திரங்கள் வட்டத்தின் மத்திய சூத்திரத்தை அடையும்வரை இழுக்கப்பட்டு இரு முக்கோணங்களாக மாறும். அவ்வாறே மேற்கிலிருந்து முதல் ரேகையில் இரு முனைகளிலும் இடப்பட்ட இரு புள்ளிகளினின்றும் இரு சூத்திரங்கள் கிளம்பி ஆறாவது ரேகையின் மத்தியத்தில் குவிந்து முக்கோணமாக அமையுமாறு அமைக்கப்படவேண்டும்.

௯௨–௯௩

அதில் மேற்கிலிருந்து இரண்டாவது சூத்திரத்தில் (தெற்கு வடக்காகச் செல்வது) இரண்டு அடையாளப் புள்ளிகள் இட்டிருக்கிறோமல்லவா? அவ்விரண்டினின்றும் இரு சூத்திரங்கள் கிளம்பிக் கடைசி சூத்திரத்தின் மத்தியில் ஒன்று சேர்ந்து முக்கோணவடிவமாகுமாறு அமைக்க வேண்டும். அவ்வாறே மேற்கிலிருந்து நான்காவது சூத்திரத்தில் இடப் பெற்றுள்ள இரண்டு அடையாளப் புள்ளிகளினின்றும் இரு ரேகைகள் கிளம்பி எட்டாவது (மேற்கிலிருந்து) சூத்திரத்தின் மத்தியில் குவிந்துவந்து ஒன்று சேர்ந்து முக்கோண வடிவமாக மாறும்படி அமைக்கவேண்டும். இவ்வாறே ஐந்தாவது (மேற்கிலிருந்து) சூத்திரத்தில் இரண்டு அடையாளப் புள்ளிகள்

ஷஷ்டம் பிந்துத்வயம் பஞ்சமஸூத்ரே ச
ஸூத்ரே பாத: பஞ்சமோம்ஶாமயோ: ।
த்ர்யாணிகோண ஸிராக்ரே ச
ஸூத்ரே த்ருதீயாத யோஜிதாத்து ॥ ௬௧ ॥

அஷ்டாஸூத்ராத் ஸம்மிலே ச
பிந்துத்வயம், ஷஷ்ட ஸூத்ரஸம்யோ: ।
ஸூத்ரே த்விதீயாதே த்விதீய: ஸ்யாத்
த்ரிகுணத்ரயா: த்ரிகோணாதி ॥ ௬௨ ॥

இட்டிருக்கிறோமல்லவா? அவ்விரண்டினின்றும் இரண்டு கோடுகள் கிளம்பி ஐந்தாவது அடையாளம் வரை சென்று குவிந்து முக்கோணமாக வேண்டும். "ஐந்தாவது அடையாளம்" என்று இங்கு கூறப்படுவது (மேற்கிலிருந்து) ஏழாவது ரேகையின்மேல் தெற்கிலும், வடக்கிலும் ஊடுருவிச் செல்லும் ரேகைகளால் ஏற்பட்ட அடையாளங்களில் மத்தியிலிருப்பதை சொல்லும். தென் கோடியிலிருந்து அல்லது வடகோடியிலிருந்து எண்ணிப் பார்த்தால் அவ்வடையாளம் ஐந்தாவதாகவே வரும். அவ்வாறே (மேற்கிலிருந்து) கடைசி சூத்திரத்திலிடப்பட்ட இரு அடையாளங்களினின்றும் இரு ரேகைகள் கிளம்பி மூன்றாவது (மேற்கிலிருந்து) ரேகையில் மத்தியில் குவிந்து சேர்ந்து முக்கோணமாகுமாறு அமைக்கவேண்டும்.

௬௨

மேற்கிலிருந்து எட்டாவது சூத்திரத்தில் இரண்டு அடையாளப் புள்ளிகள் இட்டிருக்கிறோமல்லவா? அவ்விரண்டினின்றும் இரண்டு சூத்திரங்கள் கிளம்பி மேற்கிலிருந்து முதல் சூத்திரத்தின் மத்தியில் குவிந்து முக்கோணமாக அமையுமாறு வரையவேண்டும், அவ்வாறே (மேற்கிலிருந்து) ஆறாவது சூத்திரத்தில் இரண்டு அடையாளங்கள் இட்டிருக்கிறோமல்லவா? அவ்விரண்டினின்றும் இருகோடுகள் கிளம்பி, மேற்கிலிருந்து இரண்டாவது சூத்திரத்தின் மத்தியில் குவிந்து முக்கோண வடிவமாகுமாறு அமைக்கப் பெறவேண்டும். இவ்வாறாக ஆதிகாலத்திய சாஸ்திரங்களில் சிறியதும் பெரியதுமான முக்கோணங்களை அமைக்கும் முறை விளக்கமாகக் கூறப்

வ்ருத்தஸ்ய பாஹ்யேऽஷ்டதலம் ததைவ
வ்ருத்தத்வயம் தஸ்ய பஹி꞉ ஸமந்தாத் ।
ஷோடஶாரேண ச வ்ருத்தபஹி꞉ஷ்டத
வ்ருத்தாநி [1]ஸதாரவத்பூபுராணி ॥ ௧௫ ॥

௧௫

பட்டுள்ளது. இவ்வாறாக வட்டத்திலுள் முக்கோணங்களை அமைக்கும் வகை விவரிக்கப்பட்டது. இனி வட்டத்தின் வெளிப்புறத்தில் செய்யவேண்டியவை கூறப்படுகின்றன. வட்டத்தின் வெளிப்புறத்தில் 24 அங்குலம் விஸ்தாரமுள்ள இடைவெளியில் உள்வட்டத்தை ஒட்டினாற்போல் எட்டங்குலத்தில் மற்றொரு வட்டக்கோடு அமைக்கவேண்டும். இவ் வட்டத்தில் எட்டு இதழ்கள் உள்ள தாமரைமலரை அமைக்க வேண்டும். அவ்வாறே அவ் வட்டத்தின் வெளியிலும் அதைப்போலவே எட்டு அங்குல விஸ்தாரத்தில் மற்றொரு வட்டம் அமைத்து, அதில் பதினாறு இதழ்களுள்ள தாமரை மலரை அமைக்கவேண்டும். உள் வட்டத்தின் வெளிப்புறத்திலுள்ள 24 அங்குலங்களில் பதினாறு அங்குலங்களுக்கு உபயோகம் சொல்லியாயிற்று. எட்டங்குலங்கள் எஞ்சியுள்ளன. அவ் வெட்டங்குலத்தை மூன்று சம பாகமாகச் செய்து மூன்று வட்டக்கோடுகள் வரையவேண்டும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளிலும் நான்கு துவாரங்கள் (வாயிற்படிகள்) அமைக்கவேண்டும். இந்தத் துவாரங்கள் முதன் முதலில் வரையப்பட்ட 96 அங்குலம் சதுரமுள்ள சூத்திரத்தின் நான்கு புறத்திலும் மத்தியில் அமையும். தென்கிழக்கு, தென்மேற்கு முதலிய ஒவ்வொரு மூலைகளினின்றும் இருபுறம் வாயிற்படி வரை செல்லும் கோடுகள் "புஜ" மெனப்படும். இந்த ஸ்ரீசக்கரத்தில் நான்கு புஜங்களும் அமையும்.

இந்தக் கடைசி சுலோகத்தில் ஸ்ரீசக்கரத்தின் அமைப்பு சுருக்கமாகக் கூறப்படுகின்றது:—

---

(1) "ததார" என்றும் பாடம்.

பிந்து த்ரிகோண வஸுகோண தஶாரயுக்ம-
மந்வஸ்ர நாகதல ஷோடஶபத்ரகாணி ।
வ்ருத்தத்ரயஞ்ச தரணீ (1)ஸதநத்ரயஞ்ச
ஶ்ரீசக்ர மேததுதிதம் பரதேவதாயா: ॥ ௯௬ ॥

இதி ஶிவஜ்ஞானதீபே உத்தரபாகே த்யாநே
ஶாக்தமார்க்கப்ரகரணம் நாம சதுர்விம்ஶோऽத்யாய: ॥


௯௬

ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் "பிந்து" வும் அதை உள்ளடக்கியவாறு முதல் முக்கோணமும் இருக்கும். பிறகு அந்த முதல் முக்கோணத்தைச் சுற்றி எட்டு முக்கோணங்கள் இருக்கும். அந்த எட்டு முக்கோணங்களையும் சூழ்ந்து, பத்து முக்கோணங்கள் சுற்றிலுமிருக்கும். அந்தப் பத்து முக்கோணங்களையும் சுற்றி மற்றொரு பத்து முக்கோணங்கள் சூழ்ந்திருக்கும். பிறகு அந்தப் பத்து முக்கோணங்களையும் சூழ்ந்து பதினான்கு முக்கோணங்கள் சுற்றிலுமிருக்கும். இவ்வாறாகச் சிறியதும் பெரியதுமாக நாற்பத்து மூன்று முக்கோணங்கள் ஸ்ரீ சக்கரத்தினுள் இருக்கும். இவற்றைச் சுற்றி ஒரு வட்டக்கோடு இருக்கும். இந்த வட்டத்தின் குறுக்களவு 48 அங்குலமாகும். அதாவது ஸ்ரீ சக்கரத்திற்கான 96 அங்குலமுள்ள சதுரத்தில் பாதியளவு. அவ்வட்டத்தின்மேல் எஞ்சியுள்ள வட்டவடிவமான 24 அங்குலத்தை, எட்டங்குலமுள்ள மூன்று பகுதிகளாகப் பிரிக்கவேண்டும். முதல் வட்டத்தில் எட்டு இதழ்களுள்ள தாமரை மலரையும், இரண்டாவது வட்டத்தில் பதினாறு இதழ்களுள்ள தாமரை மலரையும் அமைக்கவேண்டும். மூன்றாவதான எட்டங்குலத்தை மூன்று பங்காகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு வட்டக்கோடு வரையவேண்டும். நான்கு வாயிற்படிகளின் அடையாளமும் நான்கு புஜங்களும் அதன்மேல் அமைக்கவேண்டும். இதுவே பராசக்தியின் ஸாந்நித்யத்திற்கேற்ற "ஸ்ரீ சக்கர" மெனப்படும்.

சில்பரத்தினத்தில் இரண்டாம்பாகத்தில் தியானத்தொடர்பில்
சக்தி மார்க்கத்தைக்கூறும் இருபத்துநான்காம்
அத்தியாயம் முற்றும்.

---

(1) "ஸதநத்ரயம்" என்றும் பாடம்.



ஸ்ரீசக்ரே ஷோடசீஸ்திதம் வாஸதேவதாயா:

(அத் 24. ச்லோ. 86-96)

ஶ்ரீ:

அத² பஞ்சவிம்ஶோऽத்⁴யாய:

॥ அதே²ந்த்³ராத்³யந்ய¹தை³வத த்⁴யாநம் ॥

வஸிஷ்ட²:—

உபவநே ஸுராணாம் ஸு, நந்த³நே
  வ்ரு(த)க்ஷேத்ரமலஸுக³ந்த⁴நாட்³யேண ।
அநேகஹாஸித ஹர்ஷிதமௌக்திகே
  விபூ⁴ஷயா ஶோபி⁴தே ரவிமாயாமூர்த்தே: ॥ 1 ॥

அஶிதமேதா⁴ நக்ஷத்ரஜாதை:
  அஞ்சிதநாடி³விஷம்ப⁴ ஸுநாரதை³: ।
அநகவம்ஶஜ ஸௌரப⁴வாஸிநா
  ஸமீரஸஞ்சாரிணா ச ஸுநாரதே³ ॥ 2 ॥

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

இந்திரன் முதலான தெய்வங்களின் தியானம்.

இந்திரன்—க

"நந்தனம்" என்று வழங்கப்படும் தேவர்களுடைய பூஞ்சாவனம். அதனுள் பலவிதமான மலர்களுடன் நறுமணம் கமழும் அழகிய கொடிகளாலான மண்டபங்கள். அவற்றுள் அழகிய அப்ஸரஸ் ஸ்த்ரீக்கள் கூட்டங் கூட்டமாக இன்புற்றமர்ந்துள்ளனர். தரையோ பொன்மயமானது! காண்போர் மனதைக் கொள்ளைகொள்ளவல்லது. அதில் தெய்வலோகத்துப் பயிர் வகைகள் ஆயிரக்கணக்கில் வளர்ந்துள்ளன. வேண்டினவற்றையெல்லாம் தரவல்லன அவைகள். அவற்றினூடே பொன்மயமான கொடிகள் கூட்டங் கூட்டமாகப் படர்ந்து பின்னிக்கொண்டிருக்கின்றன. அதனுல் அழகுற்று விளங்கும் அப்பயிர்வகைகளில், இனிய குரலையெழுப்பிக் கேட்போரைப் பரவசப்படுத்தும் பலவகைப் பறவைகள் (தமது இனிய குரலால்) மனதைக் கவருகின்றன. பொற்றாமரை மலர்களிலிருந்து

---

(1) "தைவதா" என்றும் பாடம். பொருள் ஒன்றே.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௩ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௪ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௫ ॥

கிளர்ந்தெழுகின்ற நறுமணத்தைத் தாங்கி வருகின்ற தேவ கங்கையின் குளிர்ந்த காற்று, இவ்வின்பத்தை மேலும் பன்மடங்காகச் செய்கின்றது.

அந்தப் பூங்காவின் மத்தியில் கற்பக மரங்கள் ஐந்தும் காட்சியளிக்கின்றன. அவற்றின் நடுவில் மிகவும் அழகிய இரத்தின மண்டபமொன்று பிரகாசமாகக் காட்சியளிக்கின்றது. அதனுள், தரையில் இரத்தின மயமான மிகப் பெரிய சிங்காதனமொன்று அற்புதமாயுள்ளது. அதன் மேல் தேவேந்திரன் அமர்ந்திருக்கின்றான். அணிவரிசைகள் அவனது உடல் முழுவதையும் ஒளிக் குவியலாகத் தோன்றச் செய்கின்றன. அவன் தானே உதயகாலத்திய சூரியன்கள் ஆயிரங்கோடி ஒன்றுசேர்ந்தாற்போல் காட்சியளிக்கின்றான். சிறந்த இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற கிரீடத்தை யணிந்து காண்போர் மனதைக் கொள்ளை கொள்கிறான். இரத்தினங்களால் ஒளிவீசும் குண்டலங்கள் அவனுடைய இரண்டு காதுகளிலும் கம்பீரமாக மின்னுகின்றன. அகன்ற நெற்றியில், மழமழவென இழைக்கப் பெற்ற குங்குமக் குழம்பினால் அமைக்கப்பெற்ற திலகத்தை யணிந்து அழகுற்று விளங்குகின்றான். செந்தாமரை மலர்போன்ற கண்கள் உள்ளவன். உயர்ந்த மூக்குள்ளவன். இரண்டு கன்னங்களும் (தாடைகளும்) கண்ணாடி போல் பிரகாசிக்கின்றன. இனிய புன்னகை தவழ்ந்த

ஸுப்ரகாஶவிராஜிதவிக்³ரஹம்
விம்பா³த⁴ரஶோப⁴நகா³த்ரம் ।
விமலகம்பு³விராஜிதகந்த⁴ரம்
விவித⁴ஹாரலதாஞ்சிதவக்ஷஸம் ॥ ௬ ॥

கநகபாத்ரக³தம் வஸுஸஞ்சயம்
நிஜகரேண த³த³தம் நிஜஸேவிநாம் ।
ருசிரரத்நருசிப்ரசயோல்லஸ-
(1)ஜ்ஜட²ரப³ந்த⁴மநோஹரமத்⁴யமம் ॥ ௭ ॥

விவித⁴ரத்நமணிப்ரப⁴யா-
கடிதடஸூக்ஷ்மது³கூலவிராஜிதம் ।
ஸுரவரேந்த்³ர ப³ம்ப³ரநாஸிகா-
ஸத்³ருஶவ்ருத்தவரோருமநோஹரம் ॥ ௮ ॥

முகமுள்ளவன். பவழத்தை வென்ற செந்நிறமான உதடுகளை உடையவன். களங்கமற்ற சந்திரன் போன்ற முகமுள்ளவன். நிர்மலமான (தூய்மையான) சங்கு போன்ற அழகிய கழுத்தையுடையவன். கொடிபோன்ற பற்பல ஆரங்களால் அலங்கரிக்கப் பெற்ற அகன்ற மார்பை உடையவன். பொற்கலத்தில் நிரம்பியிருக்கும் பணக் குவியலைத் தன்னை வணங்குபவர்களுக்குக் கைகளால் அள்ளிக் கொடுத்துக்கொண்டிருப்பவன். சிறந்த இரத்தினங்களுடைய ஒளிக் குவியல்களால் மிக விளங்கும் உதரபந்தத்தினுல் மனதைக் கவரும் இடையை உடையவன். பலவிதமான இரத்தினங்கள் இழைக்கப்பெற்று ஒளிவீசும் ஒட்டியாணத்தால் கட்டப்பட்ட மெல்லிய பட்டாடையையுடையவன். தேவலோகத்து யானை (ஐராவதம்) யினுடைய சரிவான துதிக்கைபோல் பருத்த அழகிய துடைகளை உடையவன். அவனது பாதங்கள் ஆமையைப் பழிக்க வல்ல அமைப்புள்ளவை. விரல்களின் நகங்களுடைய

---

(1) "த³த³தம்" என்று பாடமிருப்பது நன்று.

(2) "உத³ரப³ந்த⁴ம்" என்பது வயிற்றைச் சுற்றியணியும் ஒட்டியாணம் போன்ற ஆபரணம்.

ப்ரபா நிர்ஜித சந்த்ர [illegible]-
நவாங்குர [illegible] ।
முநிஸுராஸுர ஸித்தமஹோரகாத்ய-
விஶ்வப்ரணதாங்க்ரி ஸரோருஹம் ॥ ௩௯ ॥
த்ரைலோக்யைக பராயண ப்ரியகரம்
த்ரிதஶநாதம் [illegible] ஶரண்யே ॥

அபிச:—

தேவகங்காதடாரூட கல்பத்ருமாணாமதோ
வ்ருந்தாரகை: பரிவ்ருதம் கஜராஜஸம்ஸ்தம் ।
[illegible] ஸ்வர்ண பாத்ரஸ்த ¹கல்ப-
ஜாதம் ஸாதகாய [illegible] ॥ ௪௦ ॥

ஒளியால் சந்திர கிரணங்களின் அங்குரத்தை (முளையை)த் தோற்பித்தவன். முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள், சித்தர்கள், பெரிய நாகர்கள் (ஸர்ப்பங்கள்) இப்படிப்பட்ட அகில உலகத்திலுள்ளவர்களாலும் வணங்கப்பட்ட தாமரைமலர்போன்ற பாதங்களை உடையவன். மூவுலகுக்கும் தனிப்பெரு நாயகனாக விருப்பவன். வேண்டிய வரமெல்லாம் கொடுத்தருள்பவன். இப்படிப்பட்ட தேவ ராஜனை எப்பொழுதும் சரணமடைகிறேன்.

மேலும்—ம்

தேவகங்கையின் கரையில் முளைத்து வளர்ந்த கற்பக மரங்களின்கீழ், தேவர் கூட்டங்களால் சூழப்பட்டவனாய் பெரிய யானையின்மேல் வீற்றிருப்பவனும், பொற் கிண்ணத் திலிருக்கும் பொற் குவியலை இரு கைகளாலும் ஸாதக னுக்கு (மந்திரத்தை ஜபம்செய்து சித்திபெற முயற்சிப்பவ னுக்கு) அள்ளிக்கொடுத்துக் கொண்டிருப்பவனுமாகிய (தேவேந்திரனை வணங்குகிறேன்).

---

(1) "கல்பஜாதம்" என்றும், "கவ்யஜாதம்" என்றும் பாடங்க ளுண்டு.

𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 :—

𑌧𑌵𑌲𑌨𑌲𑌿𑌨𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌂𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂
𑌸𑍁𑌰𑌮𑍁𑌨𑌿𑌪𑌿𑌤𑍃𑌸𑌿𑌦𑍍𑌧𑍈𑌃 𑌸𑍇𑌵𑌿𑌤𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑌙𑍍𑌘𑍈𑌃 ।
𑌦𑌶𑌶𑌤𑌭𑍁𑌜[1]𑌦𑌣𑍍𑌡𑍋𑌦𑍍𑌭𑌾𑌸𑌿𑌪𑍀𑌯𑍂𑌷𑌕𑍁𑌮𑍍𑌭𑍈𑌃
𑌸𑍍𑌰𑌵𑌦𑌮𑍃𑌤𑌮𑌜𑌸𑍍𑌰𑌂 [2]𑌸𑍌𑌮𑍍𑌯𑌰𑍂𑌪𑌂 [3]𑌨𑌿𑌜𑌾𑌙𑍍𑌗𑍇 ॥ ௧௧ ॥

𑌸𑍁𑌰𑌵𑌰𑌪𑌤𑌿𑌮𑍇𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑍋 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂
𑌜𑌪𑌤𑍋 𑌨𑌿𑌖𑌿𑌲𑌪𑌾𑌪𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 ([4]𑌵𑌪𑍁𑌃 𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿)
𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌾𑌃 ।
𑌸 𑌤𑍁 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌂𑌵𑌾𑌦𑌿𑌨𑍋
𑌗𑌦𑌗𑌣𑌾𑌃 𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍𑌤𑌿 𑌨𑍈𑌵 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑍁𑌃 ॥ ௧௨ ॥

வேறு—கக—கஉ

வெண்மையான தாமரை மலரின் நடுவில் நன்கமர்ந்தவன். வெண்மையான நிறமுள்ளவன். தேவர்கள், முனிவர்கள், பித்ருக்கள், சித்தர்கள் இவர்களால் பணிவிடைசெய்யப் பெற்றவன். அருள் ததும்பும் தோற்றமுடையவன். தண்டம் போன்ற தனது ஆயிரம் கைகளில் அழகாகப் பிரகாசிக்கிற அமுதகலயங்களால் தனது உடம்பில் எக்காலமும் அமுத நீரைப் பெருகவிட்டுக் கொண்டிருப்பவன். தேவர்கள் தலைவனுகிய இந்திரனை இவ்வாறு தியானித்து, அவனுடைய மந்திரத்தை எவன் ஆயிரம் தடவை ஜபம் செய்கிருனே; அவன் பண்ணின பாபங்கள் தொலையும். உலகெல்லாம் அவனைப் புகழும். வியாதிகள் அவனை அணுகா. நீண்ட ஆயுளைப் பெறுவான்.

---

(1) “𑌦𑌂𑌭𑍋𑌦𑍍𑌭𑌾𑌸𑌿” என்றும் பாடம்.

(2) “𑌸𑍌𑌮𑍍𑌯𑌰𑍂𑌪𑌂” என்றும் பாடம்.

(3) “𑌨𑌿𑌜𑌾𑌂𑌸𑍇” என்றும் பாடம். தனது தோளில் — என்பது அதன் பொருள்.

(4) இங்கு மூலத்தில் பாடம் சரியாக இல்லை. மற்றொரு சுவடியிலுள்ள பாடத்தைத் தழுவி, சரியாக இருக்கக்கூடிய பாடம் எம்மால் ( ) இவ்வாறு அடையாளமிட்டுச் சேர்க்கப்பட்டது. அதையொட்டியே கருத்தும் தரப்பட்டது.

அபிச, ஐந்த்ரீ காயத்ரீ :—

பாரிஜாததரோர்மூல-
    பத்³த⁴ரத்னவேதிகோபரி ஸமாஸ்தி²தம்
பாணிபங்கஜயுக்³மத்⁴ருத-
    ரத்னகும்ப⁴ஸலிலாபி⁴ஷிக்தநிஜவிக்³ரஹம் ।
பாடலாருணகளேவர-
    மருணஸந்நிபா⁴ருணவஸ்த்ரகம்
பாகஶாஸனமகலங்கேந்து³முக²ம்
    நக்தமஹனி புருஷார்த²த³ம் பஜாமஹே ॥ ௧௩ ॥

ததா² :—

ஶோணாம்பு³ஜ + + + மத்⁴யக³தம்
    ஸ்ருணிபாஶஶக்தி ¹ஶதகோடி ³கரம் ।
ப்ரவிசிந்த்ய ஶக்ரம் இமமேவ ஜபந்
    வஶயேத் க்ஷணேந ஸுரலோகஜனம் ॥ ௧௪ ॥

மேலும், ஐந்திரீ காயத்ரீ—௧௩

பாரிஜாத மரத்தின் அடியில் கட்டப்பட்ட இரத்தின மேடையின்மேல் நன்கு அமர்ந்தவன். தாமரை மலர் போன்ற இரு கைகளால் பிடித்துக்கொள்ளப்பட்ட இரத்தினக் குடத்தினால் தனது உடம்பை அபிஷேகம் செய்து கொண்டவன். செந்நிறமான உடல் நிறமுள்ளவன். அருணன் (சூரியனுடைய தேர்ப்பாகன்) போன்ற சிவந்த ஆடையுடுத்தவன். களங்கமில்லாத சந்திரன் போன்ற முகத்தினமுருள்ளவன். அறம், பொருள், இன்பம், வீடு இவற்றைக் கொடுக்கவல்லவன். இவ்வாறான இந்திரனை இரவும் பகலும் வணங்குமின்.

வேறு—௧௪

செந்தாமரை (மலரின்) நடுவில் இருப்பவன், அங்குசம் பாசம், சக்தி (வேல்), வஜ்ஜிராயுதம் இவற்றைக் கைகளில் தாங்கியவன். இவ்வாறாக இந்திரனைத் தியானித்து இதே மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, ஒரேவினாடியில் தேவர் குழாங்களைத் தன் வசப்படுத்தக்கூடும்.

---

(1) "ஷக்த" என்றும் பாடம். (2) "மத" என்றும் பாடம்.
(3) "தரம்" என்றும் பாடம்.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑍍𑌰𑌿𑌷𑍍𑌟𑌁𑌪𑍍 :—

𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌾𑌦𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑌤𑌿𑌰𑍁𑌚𑌿𑌰𑍇
𑌨𑌨𑍍𑌦𑌨𑍇 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑍈𑌃
𑌮𑍁𑌨𑍍𑌦𑌾𑌰𑌾𑌢𑍍𑌯𑍇 𑌸𑍁𑌨𑌨𑍍𑌦𑍇 𑌵𑌿𑌬𑍁𑌧𑌯𑍁𑌵𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑌿𑌤𑌂
𑌤𑍍𑌵𑌤𑍍𑌕𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 ।
𑌸𑌦𑍍𑌯𑍋𑌦𑍃𑌷𑍍𑌟𑍈𑌃 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌭𑌿
𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑍍
𑌵𑌷𑌨𑍍𑌤𑌂 𑌰𑌤𑍍𑌨𑌧𑌾𑌰𑌾𑌂 𑌵𑌰𑌦𑌮𑌭𑌿𑌮𑌤𑌂
𑌸𑌾𑌦𑍍𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥ ௧௫ ॥

𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 :—

𑌤𑍍𑌰𑌿𑌨𑌯𑌨𑌮𑍁𑌰𑍁𑌤𑌪𑍍𑌤𑌂 𑌬𑌦𑍍𑌧𑌮𑍌𑌲𑌿𑌂 𑌸𑍁𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌂-
𑌬𑌰𑌮𑌰𑍁𑌣𑌮𑌨𑍇𑌕𑌾𑌕𑌲𑍍𑌪𑌮𑌮𑍍𑌭𑍋𑌜𑌸𑌂𑌸𑍍𑌥𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌮𑌤𑌵𑌰𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌭𑍀𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑌂
𑌨𑌮𑌤 𑌕𑌨𑌕𑌮𑌾𑌲𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌂 𑌤𑌂 𑌕𑍃𑌶𑌾𑌨𑍁𑌮𑍍 ॥ ௧௬ ॥

இந்திரனுடைய த்ரிஷ்டுப்—௧௫

மந்தாரம் முதலான அழகிய கற்பக மரங்களால் மிகவும் கவர்ச்சிகரமான "நந்தவனம்" என்னும் தேவலோகத்துக்கே யுரித்தான பூங்காவனத்தில் (கம்பீரமான இரத்தின) சிங்காதனத்தில் அமர்ந்திருப்பவன், தேவர்களாலும் முனிவர்களாலும் வணங்கப்பட்டவன், நன்கு காய்ச்சப் பெற்ற செம்பொன்போன்ற நிறமுள்ளவன், கையிலேந்திய பொற்குடங்களினின்றும் வீழ்ந்துகொண்டிருக்கும் இரத்தின மழை வெள்ளத்தைப் பெருக்கிக்கொண்டிருப்பவன், வேண்டின பொருள்கள் யாவற்றையும் கொடுப்பவன், மிகவும் அருள் நிரம்பியவன். இப்படிப்பட்ட தேவேந்திரனை வணங்குகின்றேன்.

அக்நி (நெருப்பு)—௧௬

மூன்று கண்களுள்ளவன், மிகவும் சுடர்விட்டெரிகின்றவன், கிரீடம் தரித்தவன், வெண்ணிறமான ஆடையுடுத்தியவன், செந்நிறமானவன், பலவிதமான அணிகள் அணிந்தவன், தாமரை மலரிலமர்ந்தவன், வேண்டின வரங்களைக் கொடுக்கும் வரதமுத்திரை, சக்தி (வேல்),

ஸம்வாதா³க்³நி꞉ :—

ஸிதஜலஜவிராஜச்சந்த்³ரமத்⁴யே நிஷண்ணம்
கரவிலஸிதபாஶம் ஸாங்குஶம் ஸாப⁴யஞ்ச ।
(ஸ)விமலஶஶிகுந்த³க்ஷீரகா³த்ரம் த்ரிநேத்ரம்
ப்ரணமத ஸுரவக்த்ரம் ஶீக்⁴ரஸம்வாத³யந்தம் ॥ ௧௭ ॥

ஸம்ருத்³தி⁴꞉ :—

ஸௌவர்ணாஶ்வத்த²கல்பத்³ருமவரமத்⁴யோ
நிர்யாந்தமஶ்வாக்ருதிம்
வர்ஷந்தம் த⁴நதா⁴ந்யரத்நநிசயம்
ரந்த்⁴ரை꞉ ஸ்வைஸ்ஸ்வதே³ஹே ।

ஸ்வஸ்திகம், அபய முத்திரை இவற்றைக் கைகளில் தரித்தவன், பொன் மாலைகளால் அலங்கரிக்கப்பெற்றவன், இவ்வாறாகிய அந்த (பிரஸித்தமான) அக்கிதேவனை வணங்குமின்.

ஸம்வாதாக்நி—௧௭

வெண்மையான தாமரை மலரின்மேல் அழகாகப் பிரகாசிக்கின்ற சந்திர பிம்பத்தின் மத்தியில் அமர்ந்திருப்பவன், கைகளில் பாசம், அங்குசம், அபயமுத்திரை இவற்றுடன் விளங்குபவன், களங்கமற்ற சந்திரன், பால் இவைபோன்ற வடிவ (நிற)முள்ளவன், மூன்று கண்களுள்ளவன், தேவர்களுக்கெல்லாம் முகமானவன், விரைவில் வார்த்தை சொல்லும்படி செய்விக்கிறவன். இவ்வாறான அக்கிதேவனை வணங்குமின்.

ஸமர்த்தி—௧௮

பொன்மயமான அரசமரம், கற்பகமரம் இவற்றின் மத்தியினின்றும் வெளிக்கிளம்பிக் கொண்டிருப்பவன், குதிரை வடிவமானவன், பணம், தான்யம், இரத்தினங்கள் இவற்றைக் குவியல் குவியலாகத் தனது உடம்பிலுள்ள சந்துகளின் மூலம் எக்காலமும் பொழிகின்றவன், உடம்பில் மயிர்க்கால்களிலெல்லாம் மேலும் மேலும் ஜ்வாலைகள்

ஜ்வாலாவல்லீதஸ்வரோசிர்விவரம்
ஹஸ்தாத்ரிஸம்ஸேவிதாங்க³ம்
வந்தே³ ப⁴க்தார்திஹம் ஸர்வகாமார்த²மோக்ஷப்ரத³ம்
தி³வ்யாக்ருʼதிம் பாவகம் ॥ ௧௫ ॥

[1] தத்³பே⁴த³꞉ :—

(அத²வா) ஶக்திஸ்வஸ்திக-
த³ர்பா⁴க்ஷ ஸ்ருக் (ஸ்ருவ) ஸ்ருவாப⁴யவராந் ।
த³த⁴த³மிதாகல்போ வா
வஹ்நிரவதாத் கநகமாலிகாலஸித꞉ ॥ ௧௬ ॥

ரக்ஷோஹாக்³நி꞉ :—

த்ரிஶூலம் பரஶுஞ்சைவ கபாலம் ட³மரும் ததா² ।
பி³ப்⁴ராணம் ரௌத்³ரவபுஷம் த்ரிநேத்ரம் சந்த்³ரஶேக²ரம் ॥ ௨௰

தோன்றுமாறுள்ளவன், அடியவர்களுடைய துயரங்களைத் தொலைப்பவன், அறம், இன்பம், பொருள், வீடு இவை போன்ற எல்லாப் பேறுகளையும் கொடுப்பவன், திவ்யமான (அற்புதமான) வடிவத்தை உடையவன். இவ்வாறான அக்நியை (பரிசுத்தப் படுத்துகிறவனை) வணங்குகின்றேன்.

மற்றொருவகை—௧௬

சக்தி (வேல்), ஸ்வஸ்திகம், தர்பம், அக்ஷமாலை, ஸ்ருவம் (நெய் முதலிய திரவபதார்த்தங்களை எடுப்பதற்கான சிறிய கரண்டி), ஸ்ருக் (நெய் முதலியவற்றை அக்நியில் ஹோமம் செய்வதற்கான கருவி), அபயமுத்திரை, வரத முத்திரை இவற்றைத் தனது எட்டு கைகளால் தரித்திருப்பவன், அளவிறந்த அணிகளும் அணிந்தவன், பொன் மாலையுடன் பிரகாசிப்பவன். இவ்வாறான "வஹ்நி" (அக்நி) உங்களைக் காக்கட்டும்.

ரக்ஷோஹா (அரக்கர்களைக் கொல்லும்) அக்னி ௨௰–௨௨

த்ரிசூலம், கோடரி, கபாலம் (மண்டை ஓடு) டமரு (உடுக்கை) இவற்றைத் தனது கைகளால் தரித்திருப்பவன், பயங்கரமான வடிவமுள்ளவன், மூன்று கண்களுள்ளவன், பிறைச்சந்திரனைத் தலையிலணிந்தவன், கோரைப் பற்க

(1) "தத்³பே⁴தா³꞉" என்றும் பாடம்.

𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑌰𑌾𑌲𑌵𑌦𑌨𑌂 𑌭𑍍𑌰𑍂𑌕𑍁𑌟𑍀𑌕𑍁𑌟𑌿𑌲𑌾𑌨𑌨𑌮𑍍 ।
𑌵𑌡𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌦𑌾𑌭𑌾𑌸𑌂 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌂 𑌦𑌹𑌨𑍍𑌤𑌮𑌿𑌵 ॥ ௨௫ ॥
𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑌕𑍍𑌷𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌬𑌲𑌮𑍍 ।
𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌜𑌪𑌂 𑌜𑌪𑍇𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑍋𑌘𑍍𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌂 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ॥

𑌅𑌥 𑌯𑌮𑌃 :—

𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌶𑍍𑌚 𑌖𑌡𑍍𑌗𑌖𑍇𑌟𑌕𑌸𑌂𑌯𑍁𑌤𑌃 ।
𑌕𑌰𑌾𑌲𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌵𑌦𑌨𑍋 𑌰𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌃 ॥ ௨௬ ॥
𑌰𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑌰𑍋 𑌰𑍌𑌦𑍍𑌰𑌃 𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌦𑍃𑌶𑌾𑌕𑍍𑌷𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌮𑌹𑌿𑌷𑌵𑌾𑌹𑌨𑌃 ॥ ௨௭ ॥
𑌯𑌮𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌶𑍍𑌚 + + + + + ।

ளால் பயங்கரமானதும், பயங்கரமாக சப்திக்கின்றதும், புருவங்கள் நெரித்து அதனால் கோணலானதுமான முகத்தையுடையவன். வடபாமுக (கடல் மத்தியில் பூமியைப் பிளந்துகொண்டு தோன்றும் அக்நி) த்தில் தோன்றும் அக்னிக்கு ஒப்பானவன், மூவுலகங்களையும் எரித்துக் கொண்டிருப்பவன், பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசங்கள் இவற்றை உண்கிறவன், அதிகமான வலிவுள்ளவன், என்றிவ்வாறாக ரக்ஷோஹாக்நியைத் தியானித்து மனதை ஒரே நிலையில் நிறுத்தித் தினந்தோறும் இடையறாமல் ஜபம் பண்ணவேண்டும்.

யமன் (கூற்றுவன்)—௨௬-௨௭

இரண்டு கைகளுள்ளவன், கருப்பான நிறமுள்ளவன், வாள், கேடயம் இவற்றைத் தாங்கியிருப்பவன், கோரைப் பற்களுள்ளதும் பயங்கரமுமான முகமுள்ளவன், சிவந்த மாலை, சாந்து இவற்றை யணிந்தவன், சிவப்பான ஆடை யுடுத்துபவன், கடுமையானவன், கிரீடவடிவமான மகுடம் தரித்தவன், சுடர்விட்டெரிகின்ற நெருப்புபோன்ற கண்களுள்ளவன், பெரிய எருமைக் கடாவின்மேல் சவாரி செய்பவன், இவ்வாறு விளங்குபவன் யமன், அவனது இருபுறங்களிலும் இருப்பவர்கள் + + + + (இங்கு மூலம் இல்லை);

சித்ரகுப்த: கலிஶ்சைவ பார்ஶ்வயோஸ்தஸ்ய ஸம்ஸ்திதௌ ॥
¹க்ருஷ்ணஶ்யாமநிபௌ தௌ ச ரக்தவஸ்த்ர யுதாவுபௌ ।
பீடபார்ஶ்வஸ்திதே தே ச ஸ்த்ரியௌ ஸமநிதாவ + + + + ॥ ௨௬
நீலலோஹிதஸங்காஶே தே ச சாமரயுக்தஸ்த்ரியௌ ।
புரத ஸம்ஸ்திதௌ விப்ரௌ தர்மாதர்மஸமாஹ்வயௌ ॥
யம: ஸிம்ஹாஸநாரூடோ மஹிஷா²ரோஹிதஸ்து வா ।

௨அ நிர்ருதி:—

நிர்ருதிஸ்து மஹாவீரோ த்விபாஹு ராக்ஷஸாம் பதி: ॥
கட்கம் தக்ஷிணஹஸ்தே து வாமஹஸ்தே து கேடகம் ।

சித்திரகுப்தன், கலி இவர்களிருவரும் வாசலில் இரு புறங்களிலும் நின்று கொண்டிப்பார்கள். அவர்கள் முறையே கருப்பு, அதிகக் கருப்பு நிறமுள்ளவர்கள். இருவரும் செந்நிறமான ஆடை யுடுத்தியவர்கள். அவனுடைய பீடத்தின் இருபுறங்களிலும் இரண்டு ஸ்த்ரீகள் சாமரம் தரித்திருப்பர். அவ் விருவரும் முறையே நீலமும், சிகப்பு மான நிறமுள்ளவர்கள். யமனுக்கு அண்மையில் இருப்பார்கள். + + + + (இங்கும் மூலம் குறைபாடும் பிழையுமுள்ளது).

யமனுக்கெதிரில் 'தர்மன்' 'அதர்மன்' என்னும் பெயருள்ள அந்தணர்களிருவரு மிருப்பர். சிங்காதனம் அல்லது எருமைக்கடா இவற்றிலொன்றின்மேல் யமன் வீற்றிருப்பான்.

நிர்ருதி—௨அ—௨௯

'நிர்ருதி' பேராற்றலுடையவன், இரண்டு கைகளுடையவன், அரக்கர்களுக்கெல்லாம் தலைவன், வலது கையில் வாளும், இடது கையில் கேடயமும் வைத்திருப்பான். பொன்னிறமான ஆடை யுடுத்திருப்பான், (இங்கு மூலம் வேறுவிதமாயுள்ளது) பயங்கரமான தன்மையுள்ளவன்,

---

(1) “ஶ்யாமக்ருஷ்ணநிபௌ” என்றும் பாடம்.

(2) இங்கு மூலம் இலக்கணப் பிழையாயுள்ளது.

¹வீத்ரஸிதாஸ்யோ ரௌத்ர: கராளவதநாந்வித: ॥ ௨௯ ॥
ஸர்வாபரணஸம்யுக்தோ நாநாபுஷ்பை: ஸமலங்க்ருத: ।

அத² வருண:—

வருண: ஶ்வேதவர்ணஸ்து த்³விபு⁴ஜ: பாஶஹஸ்தக: ॥ ௩0 ॥
ஸர்வாபரணஸம்யுக்த: கரண்டமகுடாந்வித: ।
பீதவஸ்த்ரதர: ஶாந்தோ மஹாபலஸமந்வித: ॥ ௩௧ ॥
யஜ்ஞஸூத்ரஸமாயுக்தோ ²மகரஸ்தாஸநாஸந: ।

அத² வாயு:—

குஞ்சிதப்⁴ரூயுதோ வாயு: ஶபலாம்பரபூ⁴ஷித: ॥

பயங்கரமான முகமுள்ளவன், அணிகள் யாவற்றையும் அணிந்திருப்பவன், பலவிதமான மலர்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டிருப்பான்.

வருணன்—௩0-௩௧

வருணன் வெண்மை நிறமுள்ளவன், இரண்டு கைகளுள்ளவன், பாசத்தைக் கையிலேந்தியிருப்பவன், எல்லா அணிகளையும் அணிந்திருப்பவன். பேழை வடிவமான மகுடமணிந்தவன், பொன்னிறமான ஆடையுடுத்தியவன், சாந்தமான தன்மையுடையவன், வலிவு மிக்கவன், பூணூல் அணிந்தவன், முதலையின்மேல் பொருத்தப்பட்ட ஆசனத்திலமர்ந்தவன்.

வாயு—௩௨-௩௩

வளைந்த புருவமுள்ளவன் வாயு, புள்ளிகளுள்ள ஆடையுடுத்தியவன், பலவிதமான அணிவரிசைகளணிந்தவன்,

---

(1) காச்யபீயம் 47-வது படலம். 46-வது சுலோகம்:—
"விக்ருதாஸ்யம் ரௌத்ரம் கராலதம்ஷ்ட்ரகம்"
என்றுளது. அதையொட்டியே இங்கு பொருள் தரப்பட்டுள்ளது. இந் நூலில் உள்ள பாடம் அதன் சிதைவாகக் கொள்ளப்பட்டது.

(2) காச்யபீயம் 48-வது படலம். 54-வது சுலோகம்:—
"யஜ்ஞஸூத்ர ஸமாயுக்தோ மகரஸ்தோ(ஸ்தா) நகாஸிந (ஸ) ந:" என்றுளது. இதுவும் தெளிவாக இல்லை.

நாநாப⁴ரணஸம்யுக்த: ¹கேஶாப்⁴ய: ஸம்விகீர்ணக: ।
ஸிம்ஹாஸநோபவிஷ்டஶ்ச ஶீக்⁴ரயாத்ரோத்ஸுக: ஸ்ம்ருத: ॥

அத² ²த⁴நத³:— (அஸ்ய த்⁴யாநஶ்லோகோ ந த்³ருஶ்யதே)

செழுமையான குழல் நிறைந்தவன், ஓய்வில்லாமல் எப்பொழுதும் அசைந்துகொண்டே இருப்பவன், சிங்காதனத்தின் மேலிருப்பவன், சீக்கிரமாக யாத்திரை (பயணம்) கிளம்புவதில் ஆவலுள்ளவன். இவ்வாறு வாயுவைத் தியானிக்கவேண்டும்.

குபேரன்

(இவனுக்கு, தியானச் சுலோகம் கிடைக்கவில்லை)

---

(1) காச்யபீயம் 48-வது படலம். 60-வது சுலோகம். “நாநாப⁴ரண ஸம்யுக்த: கேஶைஶ்ச ஸம்விகீர்ணக:” என்றுளது. “தலைமயிர்கள் கட்டவிழ்ந்து சிதறியவாறாக இருப்பான்” என்பது அதன் பொருள். இந் நூலிலோவெனில் வேறு பாடமுளது. இதுவும் காச்யபீயத்தின் சிதைவாகவே இருத்தல் கூடும். அறிஞர்கள் ஆய்ந்துணர்க.

(2) காச்யபீயம் 48-வது படலம். 126-வது சுலோகம் முதல் 131-வது சுலோகம் வரை ஆறு சுலோகங்களால் இவருடைய அமைப்பு விளக்கப்படுகிறது. இந்நூலில் இல்லை. காச்யபீயம் மூலமும் கருத்தும் வாசகர்களின் உபயோகத்துக்காக ஈண்டு எழுதப்படுகின்றன:—

“த⁴நத³: ஸர்வயக்ஷேஶ: ஸர்வாப⁴ரணபூ⁴ஷித: ॥ ௧௨௬ ॥

தப்தகாஞ்சநஸங்காஶ: ரக்தமால்ய ஸமந்வித: ।
வராஹாஸ்யமுக²ஸ்ய ஸ்கந்த⁴ம் வா வாஹநஸ்த²கே ॥ ௧௨௭ ॥

பத்³மபீடோ²பவிஷ்டஶ்ச த்³விநேத்ரோ தே³வவாஹந: ।
ரக்தாம்ப³ரத⁴ர: ஸௌம்ய: ஶங்க²பத்³மநிதி⁴யுத: ॥ ௧௨௮ ॥

ஶங்க²பத்³மநிதீ⁴ தௌ ச ஸ்தூ²லாகாரௌ மஹாப³லௌ ।
குபே³ரேண பத்³மபீட²ஞ்ச பத்³மஹஸ்தௌ த்³விஜோத்தம ॥ ௧௨௯ ॥

காஞ்சநாபோ⁴பேதௌ ஸிதவாஸோத்தரீயகௌ ।
த³க்ஷிணேऽத³க்ஷிணே ஶங்க²நிதி⁴ம் பத்³மநிதி⁴ம் க்ரமாத் ॥ ௧௩௦ ॥

த⁴நத³ஸ்யாத² வாமே ச தே³வீம் கல்பயேத் ஸுலக்ஷணாம் ।
த⁴நதோ³ ஹ்யேவ மாக்²யாத: .... ॥ ௧௩௧ ॥

𑌅𑌥 𑌸𑍋𑌮𑌃 :—

𑌪𑍍𑌰𑌾𑌲𑍇𑌯𑌾𑌂𑌶𑍁 𑌸𑌮𑌦𑍍𑌯𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌾-
𑌸𑌂𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌜𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌰𑌯𑌮𑍍
𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌜𑌾𑌲 𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑍋 𑌰𑍂𑌪𑍍𑌯-
𑌵𑌿𑌶𑍇𑌷𑌭𑍂𑌷𑌣𑌾𑌲𑌂𑌕𑍃𑌤𑌃 ।
𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍍𑌤𑌰 𑌵𑌾𑌰𑌿𑌜𑌬𑌾𑌹𑍁-
𑌶𑍁𑌦𑍍𑌧𑌕𑍍𑌷𑍌𑌮𑍋𑌪𑌧𑌾𑌤𑌕𑌂 𑌵𑌰𑌂
𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑍋𑌮𑌮𑌰𑌾𑌲𑌨𑍀𑌲𑌾𑌲-
𑌕𑌂 𑌮𑌨𑍋𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥ ௩௪ ॥

ஸோமன் (சந்திரன்)—௩௪

பனிபோல் தூய்மையான வெண்ணிறமானவன், தனது அமுத கிரணங்களை மூவுலகங்களிலும் பரவச்செய்பவன், முத்துமாலைகள், பளபள வென்று மின்னும் வெள்ளி இவற்றால் தன்னை யலங்கரித்துக் கொண்டிருப்பவன், ஒளிமிக்க வெள்ளாம்பல் மலர் போன்ற அழகிய புயங்களுடையவன், தூய வெண்பட்டு உடுத்தியவன், சிறந்தவன், கோணலாக வும் நீல (கருப்பு) நிறமுமான குழல்களை (தலைமயிர்) உடையவன். இவ்வாறான சந்திரனை வணங்குகின்றேன்.

குபேரன், யக்ஷர்கள் யாவருக்கும் தலைவனானவன். எல்லா அணிகளையும் அணிந்து விளங்குபவன். அவனுடைய கைகளி ரண்டும் நன்றாகக் காய்ச்சப்பட்ட பொன்போன்ற நிறமுள்ளவை. தனது கைகளிரண்டிலும் முறையே வரதான முத்திரையையும் அபயதான முத்திரையையும் தரித்திருப்பான். அல்லது இடது கரத்தில் கதையைத் தரித்தவாறும் அமைக்கலாம். (வலது கரத் தில் அபயதான முத்திரையேதான் என்பது சொல்லாமலே விளங் கும்). பத்மபீடத்தின்மேல் அமர்ந்திருப்பான், இரண்டு கண்க ளுள்ளவன், மேகத்தை வாகனமாக உடையவன், செந்நிறமான ஆடையுடுத்தியவன், சாந்தமானவன், சங்கநிதி பதுமநிதி இவற் றுடன் கூடியவன், சங்கநிதியும் பதுமநிதியும் அவனுடைய இரு புறங்களிலும் இருப்பர். இருவரும் பூதத்போன்ற உடம்புள்ளவர் கள், மிகவும் பலமுள்ளவர்கள், பதும பீடத்தில் அமர்ந்திருப்பர். கைகளில் தாமரை மலரைத் தரித்திருப்பர், பேழைவடிவமான கிரீடம் தரித்திருப்பர், வெண்மையான ஆடையும மேல் வேஷ்டியும் உடுத்திருப்பர், குபேரனது வலது புறம் சங்கநிதியும் இடது புறம் பதுமநிதியும் அமைக்கப்பெற வேண்டும். குபேரனுடைய தேவி யையும் அவளுக்கேற்ற லக்ஷணங்களுடன் அமைக்கவேண்டும். இவ்வாறாக " தனதன் " எனப்படும் குபேரனின் இலக்கணம் கூறப் பட்டது.

த்4யாநம் :—

விகசகமலஸம்ஸ்த2: ஸர்வப்ரஸந்நநேத்ர:
வரத3கரஸிதாப்3ஜ: ஶுப்4ரஹாராபி4ராம: ।
ஸ்ப2டிகரஜதவர்ணோ வாஞ்சி2தப்ராப்தயே வோ
ம்ருக3த4ர ஸ்தி2திலிஷ்டோ ஜ்யோதிராத்மக: (ஶஶாங்க:) ॥௧௫॥

அத2 ப்3ரஹ்மா :—

ஆஷாட4த3ண்ட3 ஸ்ப2டிகாக்ஷமாலா-
ஸௌவர்ணகுண்டீ3 ஸரஸீருஹாணி ।
பி3ப்4ராண ஶோணத்ரஜடாகலாபம்
சதுர்முக2ம் பீதரூபம் நமாமி ॥௧௬॥

வேறு—௧௫

தூய்மையான வெண்டாமரையில் அமர்ந்திருப்பவன், அருள் நிரம்பிய அழகிய முகமுள்ளவன், வரதான முத்திரையும் வெள்ளாம்பல் மலரும் இரு கைகளிலும் தரித்தவன், அழகிய முத்துமாலை, மற்ற வெண்மையான அணிகள் இவற்றால் அலங்கரிக்கப் பெற்றவன், ஸ்படிகம், வெள்ளி இவைபோன்ற நிறமுள்ளவன், உங்களது விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காகவே தனியாக ஓரடையாளம் (களங்கம்) தாங்கி நிற்பவன். இவ்வாறான சந்திரன் உங்களுக்கு வேண்டிய தெல்லாவற்றையும் கொடுப்பவனாக இருக்கவேண்டும்.

பிரம்மா (நான்முகன்)—௧௬

இவருக்குக் கைகள் நான்கு. அவைகளால் முறையே பலாசமரத்தின் தடி (தண்டம்), ஸ்படிகக் கற்களால் அமைக்கப்பெற்ற அக்ஷமாலை, பொன்னால் செய்யப்பட்ட கமண்டலம் (கிண்டி), தாமரை மலர் இவற்றைத் தரித்துக் கொண்டிருப்பார். செந்நிறமான சடைமுடி உடையவர், பொன்னிறமான உடம்பையுடையவர் இவ்வாறான நான்முகனை வணங்குகின்றேன்.

அத² ஶேஷ:—

அநந்தஶ்சதுர்பு⁴ஜ: ஸௌம்ய: ஸர்வாப⁴ரணபூ⁴ஷித: ।
ஜபாபுஷ்பநிபா⁴காரஃ கரண்ட³மகுடாந்வித: ॥ ௧௭ ॥
ஸிதவஸ்த்ரத⁴ர: ஶாந்த: ஸ்த்ரிநேத்ர: பத்³மஸம்ஸ்தி²த: ।
அப⁴யம் வரத³ம் டங்கம் ஶூலமேவைஞ்ச ப்⁴ருத: கரை: ॥ ௧௮ ॥

அத² மஹாக³ணபதி:—

மந்தா³ராத்³யை: கல்பக-
வ்ருக்ஷவிஶேஷை விரசிதஸாந்த்³ரச்சா²யை: ।
ஶிஶிரித ஸகலாஶாந்த
பா³லாதபசந்த்³ரிகாலோகே ச ததே ॥ ௧௯ ॥
ஐக்ஷவஜலநிதி⁴லஹரீ-
கணஜாலகவாஹிநா ச மந்த³பவநேந ।
ஸம்ஸேவிதே ச ஸாரதரா-
ஸாமோத³: ஶ்ருதமது⁴பக்ஷபநிகரேண ॥ ௨௦ ॥

சேஷன் (ஆதிசேஷன்) — ௧௭-௧௮

"அனந்தன்" எனப்படும் இவ்வாதிசேஷன், நான்கு கைகளுள்ளவர், அழகிய கவர்ச்சிகரமான தோற்றமுடையவர், ஆபரணங்கள் (அணிகள்) எல்லாமணிந்து அழகுமிக்கு விளங்குகிறவர், செம்பரத்த மலர்போன்ற நிறமுள்ளவர், ஸம்புடம் (குங்குமச்சிமிழ்) போன்ற கிரீடம் (முடி) அணிந்தவர், வெண்மையான ஆடையணிந்தவர், சாந்தமானவர், மூன்று கண்களுள்ளவர், தாமரை மலர்மேல் அமர்ந்திருப்பவர், அபயதான முத்திரை, வரதான முத்திரை, மழு, சூலம் இவற்றைக் கைகளால் தரித்திருப்பவர்.

மஹாகணபதி—௧௯-௩௧

மிகச்சிறந்த கனிகளைத்தரும் மந்தாரம் முதலிய கற்பக மரங்கள் அடர்ந்திருப்பதனல் நான்கு திசைகளிலும் குளிர்ச்சியாக இருக்கும் நகரையில் இளம் வெயில், நிலவொளி இவை பரவி இன்பமூட்டுகின்றன. கரும்புச்சாறு மயமான கடலின் திவலைகளைக் (நீர்த்துளிகளை) கூட்டங் கூட்டமாக அள்ளிவீசும் காற்றும் கலந்து கொள்ளுகின்றது. கற்பக மரங்களின் மலர்களில் (தேன் பருகுவ

ரத்நத்வீபே மணிவஜ்ர-
ப்ரவாளமய புஷ்பபல்லவஸ்ய ஸத: ।
ஸகலர்துயுக்தஸ்ய த்ருமேந்த்ர-
யஸ்யாதஸ்தாத் ஸம்ஸேவிதஸ்ய கல்பதரோ: ॥ ௬௧ ॥

ஸிம்ஹாஸ்யம் பாதபீடம்
விலஸத்பத்மே த்ரிஷட்கோணோல்லஸிதே ।
ஶ்ரீவிக்நேஶ்வரமேக
ப்ருஹதுதரோ தஶபாஹு: ஶோணவர்ணோ கஜவதந: ॥

பீஜாபூரகதேக்ஷுகார்முகருஜா-
சக்ராப்ஜபாஶோத்பல-
வ்ரீஹ்யக்ரஸ்வவிஷாண ரத்நகலஶ-
ப்ரோத்யத்கராம்போருஹ: ।

தற்காக) உறைந்து கிடக்கும் வண்டுகளுடைய சிறகுகளை அசைத்துக் கொண்டே இருக்கின்றது இக்காற்று. இரத்தினங்களாலான அந்தப் பூமியில், அற்புதமான கற்பகமரமொன்றுளது. பலவிதமான இரத்தினங்களே கனிகளாகவும், வைர (வஜ்ஜிர) ங்களே மலர்களாகவும், பவழங்களே தளிர்களாகவும் அம்மரத்தில் அமைந்திருக்கும். ஆறு ருதுக்களும் (வஸந்தம் முதல் சிசிரம் வரை) ஒரே காலத்தில் வந்து சேர்ந்திருக்கும் ஆங்கு. அந்தக் கற்பக மரத்தின்கீழ் ஒரு பாதபீடம் (கால்களை வைத்துக் கொள்வதற்காகச் சிறிது உயரமாக அமைக்கப்பட்ட பீடம்) இருக்கும். அது சிங்கத்தின் முகமுள்ளதாயிருக்கும். (அதன் முன்புறம் சிங்கத்தின் முகம்போல் செதுக்கப்பட்டு வேலைப்பாடுடையதாயிருக்கும்). அதில் ஒரு எழுத்து வடிவமான தாமரை மலர் இருக்கும். அது பதினெட்டு கோணங்கள் (முனைகள்) உள்ளதாயிருக்கும். அதன்மேல், பிள்ளையார் (யானை முகத்தான்) அமர்ந்திருப்பர். அவருக்கு ஒரே தந்தம், பெரிய வயிறு, பத்து கைகள், சிவப்பான நிறம், யானையினுடையது போன்ற முகம்.

இவர் தமது கைகள் பத்திலும் மாதுளம் பழம், கதை, கரும்புவில், ரோகங்களின் கூட்டம், தாமரை மலர், பாசம் (கயிறு), குவளைமலர், நெற்கதிர், தனது கொம்பின் நுனி இரத்தின கலசம் இவற்றை வைத்திருப்பர். அவரது

தேவ்யோத்ஸங்கஸ்தயா ச பத்மகரயா
ஆஶ்லிஷ்டோ ஜ்வலத்பூஷயா
விஶ்வோத்பத்திவிநாஶஸம்ஸ்திதிகரோ
விக்நோ விஶிஷ்டார்த்தத: ॥ ௪௩ ॥

கராம்போஜஸ்தகலஶ-
ஸ்ரவத்ரத்நமௌக்திகப்ரவாலவர்ஷேண ।
அவிரததாராம் விகிரந்
பரித: ஸாதகஸம்ருத்திஸம்பத்த்யை ॥ ௪௪ ॥

[illegible]
[illegible] நிஜகர்ணதாலதாடநயா ।
நிவாரயந் [illegible]
ஸுரைரஸுரைஶ்ச ஸேவிதோ [illegible] ॥ ௪௫ ॥

கைகள் தாமரைமலர் போன்றவை. அவரைத் தழுவிய படியே அவருடைய தேவியும் காட்சியளிப்பாள். அவள் கையில் தாமரை மலர் வைத்திருப்பாள். ஒளிவீசும் அணிகள் பலவற்றை அவள் அணிந்திருப்பாள். இந்தப் பிள்ளையார் உலகங்களைத் தோற்றுவித்து, காத்து, அழிக்க வல்லவர். வேண்டிய வரமெல்லாம் கொடுக்கவல்லவர். இவ்வாறாக இந்த விநாயகரைத் தியானிக்கவேண்டும்.

இவ் விநாயகர், தாமரைமலர் போன்ற தமது கையில் குடத்தைத் தரித்திருப்பர். அதனின்றும் இரத்தினங்கள், முத்துக்கள், பவழங்கள் இவற்றை; ஸாதகனுக்கு (தன்னைத் தியானிப்பவனுக்கு) ஏராளமான செல்வம் நிறைந்திருக்க வேண்டி, நான்கு புறங்களிலும் இடையறாது மழை பொழிவதுபோல் கொட்டிக்கொண்டே இருப்பர்.

இவரது யானை முகத்தினின்றும் நறுமணத்துடன் மதநீர் பெருகிக்கொண்டே இருக்கும். அதற்காக அதில் எண்ணற்ற வண்டுகள் மொய்த்துக் கொள்ளும். அவற்றைத் தனது அகன்ற காதுகளால் அடிக்கடி அடித்து விரட்டிக்கொண்டே இருப்பர். தேவர்களாலும் அசுரர்களாலும் ஒருங்கே வணங்கப்பட்டவர் இவ்விநாயகர்.

அக்3ரேऽஸ்ய பி3ல்வதரோஸ்து ரமாரமேஶௌ
த3க்ஷிணே வடஶாகி2நோ கி3ரிஜாவ்ருஷத்4வஜௌ ।
ப்ருஷ்டே2ஸ்ய பிப்பலஜுஷௌ ரதிபுஷ்பபா3ணௌ
ஸவ்யே ப்ரியங்கு3தரோஸ்து மஹீவராஹௌ ॥ ௩௬ ॥

த்4யேயௌ ச பத்3மயுக்3ம சக்ரத3ரௌ பாஶாங்குஶௌ
பாஶாங்குஶாவ்ய பரஶுத்ரிஶிகே ததா2ந்யௌ ।
இந்தீ3வரத்3வயேக்ஷ சாபஶரே த்ருதீயா
வஹேத்யௌ ஶுகஶாலிமஞ்ஜரீக3தா3ரீ ॥ ௩௭ ॥

த்4யேயா: ஷட்கோணஶ்ருங்கே3ஷு
த்4ருதா: பாஶாங்குஶாப4யேஷ்டகரா: ।
ஸஶக்த்யோ க3ணபதயோ-
ரக்தாகாரா: ப்ரபி4ந்நமத3விவஶா: ॥ ௩௮ ॥

இந்த மகாகணபதிக்கு நாற்புறமும் வேறு தெய்வங்கள் சூழ்ந்திருப்பதாகத் தியானம் பண்ணவேண்டும். இவருக்கெதிரில் பில்வமரத்தின் இருபுறமும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியும், அவள் கணவனாகிய திருமாலும் காணப்படுவர். அவர்கள் தமது கையில் முறையே இரண்டு தாமரை மலர்கள், சக்கரம் சங்கு இவற்றைத் தரித்திருப்பார்கள். வலது புறத்தில் ஆலமரத்தின்கீழ், பார்வதியும் எருத்துக் கொடியானும் காணப்படுவர். அவர்கள் தமது கைகளில் முறையே பாசம், அங்குசம், மழு, த்ரிசூலம் இவற்றை யேந்தியிருப்பர். பின்புறத்தில் அரசமரத்தின்கீழ், ரதி தேவியும் மன்மதனும் காணப்படுவர். அவர்கள் தமது கைகளில் முறையே இரண்டு குவளை மலர்கள், கரும்புவில், அம்புகள் (புஷ்பமயமானவை) இவற்றைத் தரித்திருப்பார்கள். இடதுபுறம் ப்ரியங்கு (ஒருவகை தானியம்) வின்கீழ், பூமி தேவியும் வராஹப் பெருமாளும் இருப்பர். இவர்கள் தமது கைகளில் முறையே கிளி, நெற்கதிர், கதை (தடி), சக்கரம் இவற்றைத் தரித்திருப்பர்.

ஆறு கோணங்களின் முனைகளில் ஆறு கணபதிகள் சுற்றிலும் சூழ்ந்திருப்பதாகத் தியானம் பண்ணவேண்டும். அவர்கள் யாவரும் தேவிமாருடன் கூடியிருப்பர். சிவப்பு நிறமுள்ளவர்கள். மதஜலப்பெருக்கு மிகுந்து அதனால் பரவசமாக இருப்பர். தமது கைகளில் முறையே பாசம்,

ஈஶாந்யாமாமோத:

ப்ரமோதஸும்முகௌ (ச) தத்பார்ஶ்வே கோணயோஸ்ததா ।

பஶ்சிமே ச துர்முகம் மத்யே

தத்பார்ஶ்வே விக்நவிக்நகரௌ ॥ ௪௯ ॥

ஸவ்யாபஸவ்யபார்ஶ்வே

தஸ்ய த்யேயௌ ச ஶங்க (பத்ம — பத்மௌ ?) நிதீ ।

மாக்ஷிகமாணிக்யாபௌ

வர்ஷந்தௌ தாரயா தநாநி ஸதா ॥ ௫௦ ॥

ஸித்திஸம்ருத்தீ நாமாத்யா

காந்திர் மதநாவதீ மதத்ரவா ।

¹த்ராவிணீ வஸுதாராத்யா

மதுமத்யபி விக்நநிதீநாம் ப்ரியா: ॥ ௫௧ ॥

அங்குசம், அபயமுத்திரை, வரதான முத்திரை இவற்றைத் தரித்திருப்பர்.

எதிரிலுள்ள கோணத்தில் "ஆமோதன்" என்னும் பெயருடைய கணபதி இருப்பர். அவரது இருபுறங்களிலும் முறையே "ப்ரமோதன்" "ஸுமுகன்" என்னும் பெயருள்ள கணபதிகள் இருகோணங்களிலிருப்பர். பின்புறம் நடுக்கோணத்தில் "துர்முகன்" என்னும் கணபதியும், அவரது இருபுறங்களிலும் இருகோணங்களில் "விக்னன்", "விக்னகரன்" எனப்படும் கணபதிகள் இருவருமிருப்பர். அவருடைய வலது, இடது புறங்களில் சங்கநிதி, பதுமநிதி இவைகளிருப்பதாகத் தியானிக்கவேண்டும். அந்த நிதிகளிருவரும் முறையே தேன், மாணிக்கம் இவற்றின் நிறமுள்ளவர்கள். எப்பொழுதும் தாரை தாரையாகப் பணத்தைப் பொழிந்துகொண்டிருப்பார்கள் இவ்விருவரும்.

இவர்களுடைய தேவிமார்களின் பெயர்கள்:—
(1) ஸித்தி, (2) ஸம்ருத்தி, (3) காந்தி, (4) மதநாவதீ, (5) மதத்ரவா, (6) த்ராவிணீ இவ்வாறுவரும் முறையே ஆறு கோணங்களிலுள்ள ஆறு கணபதிகளின் தேவிமார்கள். வஸுதாரா, மதுமதீ இவ்விருவரும் முறையே இரு நிதிகளின் மனைவிமார்கள்.

---

(1) "த்ராவணீ" என்றும் பாடம். பொருள் ஒன்றே.

அத பீஜகணபதி:—

ரக்தோ ரக்தாங்கராகாம்சுககுஸுமயுத-
ஸ்துந்திலச் சந்த்ரமௌலிர்
நேத்ரைர்யுக்தஸ்த்ரிபிர் வாமனகரசரணோ
பீஜபூராத்தநாஸ: ।
ஹஸ்தாக்ராக்லுப்தபாசாங்குசரதவரதோ
நாகவக்த்ரோஹிபூஷோ
தேவ: பத்மாஸனோ வோ பவது நதஸுரோ
பூதயே விக்னராஜ: ॥ ௰௨ ॥

அதவா:—

த்ருதபாசாங்குச கல்ப(க)
லதிகாஸ்வரதச்ச பீஜபூரயுத: ।
சசிசகல கலிதமௌலி-
ஸ்த்ரிலோசநோருணச்ச கஜவதந: ॥ ௰௩ ॥

பீஜ கணபதி—௰௨

சிவப்பு நிறமுள்ளவர், செந்நிறமான சந்தனம், ஆடை, புஷ்பங்கள் இவற்றை அணிந்திருப்பர். பெரிய தொந்தி யுடையவர். பிறைச் சந்திரனைத் தலையிலணிந்தவர். மூன்று கண்களுள்ளவர். இவருக்குக் கைகளும் கால்களும் குறுகி யிருக்கும். துதிக்கையில் மாதுளம்பழத்தை வைத்திருப்பர். இவருக்குக் கைகள் நான்கு. அவற்றின் நுனியில் பாசம், அங்குசம், பல் (தந்தம்), வரதான முத்திரை இவற்றைத் தாங்கியிருப்பர். யானை முகமுள்ளவர். பாம்புகளை அணி யாக அணிந்தவர். தாமரைமலரில் வீற்றிருப்பர். தேவர் களால் வணங்கப்பட்டவர். இப்படிப்பட்ட விக்னராஜன் உங்களுக்குச் செல்வத்தையளிக்கட்டும்.

வேறு—௰௩-௰௪

பாசம், அங்குசம், கற்பகக்கொடி, தனது தந்தம் (பல்) இவற்றைத் தனது கரங்களில் தரித்தவர். மாதுளம் பழத்தை வைத்திருப்பவர். பிறைச்சந்திரனைச் சூடிய முடி யுடையவர். மூன்று கண்களுள்ளவர். சிவப்பான உடம்பை யுடையவர். ஒளிவீசும் ஆபரணங்களை அணிந்து அதனுள்

ஸாலம்ப³மம்ப்³ருஷ்டநதிவ்ருக்ஷா-
ப்⁴ருஶம்ஹஸ்தப: பத்³மவிநாயகோ ப⁴வித: ।
(பத்³மயோர்நாயகதோ: ப-
த்³மஸிம்ஹா:) ஸம்பதே³ ஸதா³ உபாஸ்யதே ॥ ருச ॥

அபி ச :—

[1]ரக்தாக்ஷமாலாம் பரஶும் ச த³ந்தம்
ப⁴க்ஷ்யம் த³தா⁴ந: கரபங்கஜைஸ்து ।
ஹிமாவதா³தம் த்ர்யக்ஷம் க³ஜாஸ்யம்
லம்போ³த³ரம் தம் ஶிரஸா நமாமி ॥ ருரு ॥

நமாமி பாஶாங்குஶத³ந்தப⁴க்ஷ்ய-
ஸமந்விதம் த்ர்யக்ஷ மஹோத³ராட்⁴யம் ।
நாகா³நநம் நாக³க்ருதோத்தரீய-
முத்தப்தஹேமாப⁴மேகத³ந்தம் ॥ ருசு ॥

ஜ்வலிப்பவர். பெரிய தொந்தியுள்ளவர். தாமரைமலரில் அமர்ந்திருப்பவர். அழகிய தோற்றமுள்ளவர். (குட்டையானதும் தாமரைமலர்போல் அழகியதுமான கைகள், கால்களுள்ளவர்). இவ்வாருக யானைமுகமுள்ள விநாயகர் மானிடர்களால் செல்வத்தைப் பெறுவதற்காக எக்காலமும் வணங்கப்படவேண்டும்.

மேலும்- ருரு-ருசு

சிவப்பான அக்ஷமாலை, மழு, தந்தம், தின்பண்டம் இவற்றைக் கைகளால் தரித்திருப்பவர். பனிபோல் வெண்மையான நிறமுள்ளவர். மூன்று கண்களுள்ளவர். தொங்குகிற வயிறுள்ளவர். இவ்வாருன அந்த யானை முகத்தானைத் தலையால் வணங்குகின்றேன்.

பாசம், அங்குசம், தந்தம், தின்பண்டம் இவைகளுடன் காணப்படுகிறவர். மூன்று கண்களுள்ளவர். பெரிய வயிறுள்ளவர். யானை முகமுள்ளவர். பாம்புகளையே மேல் வஸ்திரமாக அணிந்தவர். நன்கு காய்ச்சப்பட்ட பொன் போன்ற நிறமுள்ளவர். ஒரே தந்தமுடையவர். இவ்வாருன பிள்ளையாரை வணங்குகின்றேன்.

(1) இந்த சுலோகம், இதற்கடுத்த சுலோகம் இவை இரண்டும் சில சுவடிகளில் மாறுதலாக அச்சிடப்பட்டுள்ளன.

ध्यानम् :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௫௭ ॥

अथ हेरम्बः :—

[illegible]
[illegible] ॥ ௫௮ ॥
[illegible]
[illegible] ॥ ௫௯ ॥

வேறு—௫௭

தனது நான்கு கைகளில் – மழு, அக்ஷமாலை, தந்தம், இனிமையான இலட்டுகம் இவற்றைத் தரித்திருப்பர். அல்லது பாசம், அங்குசம், தனது தந்தம், வரதான முத்திரை இவற்றைத் தரித்திருப்பர். துதிக்கையில் மாதுளம்பழத்தைப் பிடித்திருப்பர். பெரிய வயிறு உள்ளவர். மூன்று கண்களுள்ளவர். செந்தூரம்போன்ற நிறமுள்ளவர். யானை முகத்தவர். பிறைச்சந்திரன் முதலிய அணிவரிசைகள் அணிந்தவர். தாமரைமலரில் அமர்ந்திருப்பர். இவ்வாறாக விக்னேச்வரரைத் தியானிக்கவேண்டும்.

ஹேரம்பன்—௫௮—௫௯

இவ்விநாயகர் சிங்கத்தின்மேல் வீற்றிருப்பர். ஐந்து முகமுள்ளவர். யானை முகமுள்ளவர். பத்து புயங்கள் உள்ளவர். மூன்று கண்களுள்ளவர். பொன்னிறமானவர். வரதான முத்திரை, அபய முத்திரை இவற்றைக் கைகளில் தரித்தவர். கொழுக்கட்டை நிறைந்த பாத்திரம், தனது

கரகம் சாக்ஷஸூத்ரஞ்ச பரஶும் முஸலம் ததா ।
பாஶாங்குஶகரம் ஶக்தம் தேவம் லம்போதரம் ஸதா ॥ ௧௦
பீவரம் ஏகதந்தஞ்ச தும்புருப்ரமுகைர் கணான்விதம் ।

அத பாலகணபதி: —

பால: ப்ரஸூதமாத்ரோ(அ)யம் அம்பிகாங்கநிவேஶித: ॥
அதிரக்தோ கஜாஸ்யோ த்விதந்தோ ரத்னபூஷித: ।
புடகம் புஷ்கரே பிப்ரச்ச்ருணிபாஶௌ கரத்வயே
அந்யாப்யாம் கல்பலதாம் தோலயந்தம் ரத்னவர்ஷிணீம் ।
ஏவம் த்யாத்வா ஜபேந்மந்த்ரம் பாலாக்யம் கணநாயகம் ॥ ௧௧

தந்தம் இவற்றை இடது கைகளினால் தரித்திருப்பவர். (மற்றக் கைகளில்) கமண்டலம், அக்ஷமாலை, மழு, உலக்கை, பாசம், அங்குசம் இவற்றைத் தரித்திருப்பவர். தொங்குகின்ற வயிறுள்ளவர். மங்களகரமானவர். பருத்த உடம்புள்ளவர். ஒரே தந்தமுள்ளவர். தும்புரு முதலிய கந்தர்வ கணங்களோடு கூடியவர். இவ்வாறு ஹேரம்ப கணபதியைத் தியானிக்கவேண்டும்.

குறிப்பு:— இந்த மூலம் விளக்கமாயில்லை. இயன்ற திருத்தத்துடன் பொருள் தரப்பட்டது.

பாலகணபதி—௧௧—௯

இவர் குழந்தையாகப் பிறந்த நிலையிலேயே அம்பிகையின் மடியில் வைத்துக்கொள்ளப்பட்டவர். மிகவும் சிவந்த நிறமுள்ளவர். யானை முகமுள்ளவர். இரண்டு தந்தங்களுள்ளவர். இரத்தினங்களால் அலங்கரிக்கப்பெற்றவர். துதிக்கையில் தொன்னையைத் தரித்திருப்பர். இரண்டு கைகளில் அங்குசத்தையும், பாசத்தையும் தரித்திருப்பர். மற்ற இரண்டு கைகளால் இரத்தினங்களைப் பொழிகிற கற்பகக்கொடியை அசைத்துக் கொண்டிருப்பர். இவ்வாறு பால கணபதியைத் தியானித்துவிட்டு மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

௯௪ அத2 [1]ஸுப்3ரஹ்மண்ய: —

ஸிந்தூ3ராருணவிக்3ரஹம் ஸுரக3ணா-
    நந்த3ப்ரத3ம் ஸுந்த3ரம்
தை3வம் தி3வ்யவிநோத3தா4ம ஶோணா-
    கல்பப்ரகரோஜ்ஜ்வலம் ।
நாநாவிப்4ரமபூ4ஷணவ்யதிகரம்
    ஶ்ருங்கா3ரஸாந்த்3ரம்
ஸஸ்மேரஸ்மிதஸௌம்யத்3யுதிதா-
    ஶக்த்யாப4யம் ஹஸ்தயோ: ॥ ௯௪ ॥

ஸிந்தூ3ராருணகாந்திமிந்து3வத3நம்
    கேயூரஹாராதி3பி4-
ர்தி3வ்யைராப4ரணைர்விபூ4ஷிததநும்
    [2]ஸ்வர்கா3தி3ஸௌக்2யப்ரத3ம் ।

சுப்பிரமணியன் (முருகன்)—௯௪

செந்தூரம்போல் சிவந்த உடம்புள்ளவர். தேவர் கூட்டங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவர். அழகியவர். தெய்விகமான சக்திமிக்கவர். தெய்விகமான விளையாட்டு களுக்கெல்லாம் இருப்பிடமானவர். சிவந்த ஆபரணங்கள் பலவற்றையணிந்து சுடர்மிக்கு விளங்குபவர். பலவிதமான ஆபரணங்களை சிருங்கார உணர்ச்சி மேலீட்டால் இடம் மாறி அணியும் தன்மையுள்ளவர். அழகிய புன்னகையின் ஒளியுடன் பிரகாசிப்பவர். சக்தி (வேல்), அபயதான முத்திரை இவற்றை இரு கைகளில் தரித்திருப்பவர். தனது மகிமையினால் வேண்டின வரமெல்லாம் கொடுக்கவல்லவர். இப்படிப்பட்ட குகப்பெருமானை வணங்குகிறேன்.

செந்தூரம்போல் சிவந்த நிறமுள்ளவர், திங்கள் போன்ற முகமுள்ளவர். தோள்வளைகள், முத்து மாலைகள் முதலிய திவ்யமான ஆபரணங்களால் தனது உடம்பை அலங்கரித்துக் கொண்டிருப்பவர். சுவர்கம் முதலான சுகங்கள் யாவற்றையும் கொடுப்பவர். தனது கைகளால்

---

(1) "ஸ்கந்த3:" என்றும் பாடம், பொருள் ஒன்றே.

(2) "ஸ்வர்ணாதி3ஸௌக்2ய" என்றும் பாடம்.

ஸரோஜாபயமுத்ராஶக்திகுக்குட (வ ? ய) தரம்
ரக்தாம்ஶுகானுலேபனம்
ஸர்வபக்தஜனாநாம் ச
ப்ரணதானாம் பீதிப்ரணாஶனோத்யதம் ॥ ௧௫ ॥

அதவா :—

ஸ்பூர்ஜத்கிரீடகர்ணபத்ரகுண்டலாபிராமம் சம்பக-
ஸ்ரஜா கலிதகண்டம் கரயோர்த்வயோ: ஶக்திம் வஜ்ரம் ।
த்யாந ஹஸ்தாம் கடீகலித வாமஹஸ்தோதக்ஷிணம்
காஶ்மீரபங்காவலேபனபாஸமானம் ஸுரக்தவஸ்த்ரம் குருமுபாஸ்மஹே ॥

அத நாகயக்ஷீ :—

சாருநேத்ராம் பயோதஜலதரகபரீ-
பாரா ஆகல்பஜாலை:
நாகஸ்தோமாகார கும்பஸ்தநயுகநமிதாம்
ஜ்வாலாஜ்வாலாநலாபை: ।

தாமரை மலர், அபயதான முத்திரை, சக்தி (வேல்), கோழி இவற்றைத் தரித்திருப்பர். சிவப்பான சந்தனம், ஆடை இவற்றையணிந்திருப்பர். தன்னை வணங்குபவர்களுடைய எல்லாவிதமான பயங்களையும் தொலைப்பதில் முனைந்தவர் இவ்வாறாகிய ஸுப்ரமண்யரை த்யானம் செய்கின்றோம்.

வேறு

சுடர்மிக்க கிரீடம், கர்ணபத்ரம், குண்டலங்கள் இவற்றையணிந்தவர். செண்பக மலர்மாலையைக் கழுத்திலணிந்தவர். இரண்டு கைகளிலும் முறையே சக்தியை (வேலை)யும் வஜ்ஜிராயுதத்தையும் தரித்தவர். அல்லது இடது கையை இடுப்பில் வைத்து, (வலதுகையில்) வரதான முத்திரையைத் தரித்திருப்பவர். குங்குமக்குழம்பைப் பூசியதனால் ஒளிமிக்கு விளங்குகிறவரும், செந்நிறமான ஆடை யணிந்தவருமான "குருவை" (ஸுப்பிரமணியனை) த்யானிக்கவேண்டும்.

நாகயக்ஷீ.—௧எ

அழகான கண்களுள்ளவள். மேகங்கள்போல் கருமையான குழல்களுள்ளவள். எண்ணற்ற ஆபரணங்களணிந்திருப்பவள். அக்னுல் ஒளிவீசும் உடம்புள்ளவள். பெரிய யானையினுடைய மத்தகங்கள் போன்ற கொங்கைகளிரண்

நாகா நாடீய வாமேன நகநகாகரா-
    பேந்த்ர ஜ்வாலிஜாலே:
ஸா யக்ஷ்யா நாகயக்ஷீ க்ஷயது க்ஷேமம்
    நாகராஜப்ரியா வ: ॥ ௨௭ ॥

௨௮ ஶாஸ்தா :—

ஸ்நிக்தாராலவிஸாரிகுந்தலபரம்
    ஸிம்ஹாஸநாத்யாஸிநம்
ஸ்பூர்ஜத்பத்ரஸுக்லுப்தகுண்டலமதெ-
    ஷ்வீஷ்வாஸப்ருத்தோர்த்வயம் ।
நீலக்ஷௌமவஸம் நவீநஜலத-
    ஶ்யாமம் ப்ரபாஸத்யக-
ஸ்வாயத்பார்ஶ்வயுகம் ஸுரக்தஸகலா-
    கல்பம் ஸ்மரேதார்யகம் ॥ ௨௮ ॥

டின் சுமையினால் வணங்கியிருப்பவள். அழகிய சலங்கைகளின் இனிய ஒலியினால் கவர்ச்சிகரமானவள். கையில் பாம்புகளை எடுத்துக் கொண்டு, மலைகளின்மேலும், பட்டிணங்களிலும், பெரிய மரங்களிலும் சென்று பல வேடிக்கைகளைக் காட்டி விளையாடும் இயல்புள்ளவள். நாகராஜனுக்கு (பாம்புகள் தலைவனுக்கு) இஷ்டமான மனைவி, இவ்வாறான "நாகயக்ஷீ" உங்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கட்டும்.

சாஸ்தா—௨௮

வழுவழுப்பானதும் வளைவுகளுள்ளதுமான குழல்கள் உள்ளவர். அக்குழல்கள் (எல்லாப் பக்கங்களிலும்) சிதறியும் அடர்ந்தும் இருக்கும். இவவாறான இவர் சிங்காதனத்தின்மேல் வீற்றிருப்பர். ஒளிவீசும் கர்ணபத்திரங்களில் நன்கு பொருத்தப்பட்ட குண்டலங்களணிந்தவர். அல்லது அழகிய இலைச் சுருளால் குண்டலங்கள் அமைத்துக் கொண்டுள்ளவர். மேலும் தனது இருகைகளில் முறையே அம்பும் வில்லும் தரித்திருப்பர். நீல நிறமான பட்டாடையுடுத்தியவர். கார்முகில்வண்ணன், ப்ரபா, ஸத்யகன் இவர்களால் இருபுறங்களும் சூழப்பெற்றவர். மிகச் சிவந்த பல்வேறு அணிகளை அணிந்தவர். இவ்வாறாக ஆர்யகரை (உயர்ந்தவரை)த் தியானிக்கவேண்டும்.

ஸ்ரக்தரா :—

பார்ஶ்வஸ்தாபத்யதாரம் வடவிடபிதல-
ந்யஸ்தஸிம்ஹாஸநஸ்தம்
ஶ்யாமம் காஷாம்பராட்யம் ஶ்ரிதகரயுகளம்
++ சிந்தாமணிஞ்ச ।
++ நிஸ்த்ரிம்ஶ பாணாஸந விஶிகயுகம்
ரக்தமால்யாநுலேபம்
வந்தே ஶாஸ்தாரமீட்யம் கநகுடிலப்ருஹ-
த்குந்தலோத்பாஸிமௌலிம் ॥ ௬௬ ॥

அபிச :—

அம்ஸாஸக்தஸுவர்ணகர்ணிகதரோ-
விஸ்தீர்ணஹாரோஜ்ஜ்வலம்
ஶ்ருங்காரோசிதவேஷவிப்ரமபுவம்
ஶ்யாமாம்ஶுகம் ஶ்யாமலம் ।

வேறு—௬௬

தனது குழந்தை மனைவி இவர்கள் இருபுறமும் சூழ இருப்பவர். ஆலமரத்தின் கீழ் வைக்கப்பட்ட சிங்காதனத்தில் அமர்ந்தவர். கருப்பான நிறமுள்ளவர். கருமை கலந்த நீல நிறமான ஆடையுடுத்தவர். இரண்டு கைகள் உள்ளவர். + + சிந்தாமணியையும் (?) + + கத்தி, வில், அம்பு இவற்றை வைத்திருப்பவர். செந்நிறமான மாலைகள், சந்தனம் இவற்றையணிந்தவர். அடர்ந்ததும் கோணலுள்ளதுமான பெரிய குழல்கற்றையுடன் சிறந்து விளங்கும் முடியுடையவர். துதிக்கத்தக்கவர். இவ்வாறான சாஸ்தாவை வணங்குகின்றேன்.

மேலும்

இரண்டு தோள்களிலும் தொட்டுக்கொண்டிருக்கும் பொன்னால் செய்யப்பட்ட கர்ணபத்திரங்களை உடையவர். அகன்ற மார்பில் முழுதும் பரவியிருக்கும் முத்துமாலையை யணிந்து பிரகாசிப்பவர். ச்ருங்காரத்திற்கேற்ற ஆடை யலங்காரங்களும் பலவகையான அழகிய செயல்களும் உள்ளவர். கருப்பான ஆடையணிந்தவர். கருப்பான

ரக்தசந்தனமால்யாதிப்ரியம்
நீலோஜ்ஜ்வலகுந்தலம்
வந்தே பாணஶராஸனோத்யதகரம்
வீரேஶம் ஶாஸ்தாரம் ஸதா ॥ ௭௦ ॥

அத ப்ரபா :—

ரக்தாகல்போஜ்ஜ்வலாம் ரக்தாம் ஸுரூபாம் சாருயௌவநாம் ।
த்ருதவீணாம் ப்ரபாம் வந்தே தேவீம் ரக்தாபாங்கலோசநாம் ॥ ௭௧

அத ஸத்யக :—

தமாலஶ்யாமலம் பத்ரம் வித்ருமாகல்பஸுந்தரம் ।
ஸஜ்யகார்முகம் வந்தே ஸத்யகமவ்யக்தயௌவநம் ॥ ௭௨ ॥

நிறமுள்ளவர். செந்நிறமான சந்தனம், மாலைகள் இவற்றில் பிரியமுள்ளவர். கருத்துப் பிரகாசிக்கும் குழல்களை யுடையவர். அம்பு, வில் இவற்றை யேந்திய கைகளுள்ளவர். வீரர்களுக்கெல்லாம் முதன்மையான தலைவர். இப்படிப் பட்ட சாஸ்தாவை வணங்குகின்றேன்.

ப்ரபா (சாஸ்தாவின் மனைவி)—௭௧

செந்நிறமான அணிகளணிந்து ஒளிமிக்கிருப்பவள். சிவப்பான நிறமுள்ளவள். சிறந்த எழில் வாய்ந்தவள். அழகிய யௌவனப் பருவத்தினள். வீணையேந்திய கைகளுள்ளவள். சிவந்த கடைக்கண்களுள்ளவள். இவ்வாறான "ப்ரபா" தேவியை வணங்குகின்றேன்.

ஸத்யகன்—௭௨

தமால (பச்சிலை) மரம்போல் சாமளமான நிறமுள்ளவன். மங்களகரமானவன். பழுப்பு நிறமான அணிகளணிந்து அழகுடன் பிரகாசிப்பவன். நாணேற்றப்பட்ட வில்லை யுடையவன். வாலிபப் பருவம் தெளிவாகத் தோன்றாத நிலையிலுள்ளவன். இவ்வாறான "ஸத்யகனை" வணங்குகின்றேன்.

अथ विश्वरूपमूर्तयः ॥

तत्रादावनुष्टुप्त्रयम् [?] :—

हेमाम्भोजे निषण्णं स्रवदमृतघटौ
पद्मसंभौ [?] कराब्जे
चक्राक्षस्रक्कुण्डिकाढ्यं [?] शिरसि शशिकलां
धारयन्तं [?] सदाढ्यम् [?] ।
हेमाभं पीतवस्त्रं रविशशिदहन-
त्रीक्षणं विश्वरूपं
सर्वज्ञं [1]सर्वमक्षं [?] हरिहरविधिजं
विश्वरूपं नमामि ॥ ௭௧ ॥

கலப்புற்ற மூர்த்திகள்—௭௧

அவற்றுள் முதலில் மூன்று அனுஷ்டுப்புக்கள் :—

பொற்றாமரையில் அமர்ந்தவர், தாமரைமலர் போன்ற தனது கைகளில் முறையே அமுதம் பெருக்கிக் கொண்டிருக்கும் இரு குடங்களையும், சக்கரம், சங்கு, அக்ஷமாலை, கமண்டலம் இவற்றையும் தரித்திருப்பவர், தலையில் பிறைச் சந்திரனையணிந்தவர், அழகான அணிகள் பலவற்றையும் அணிந்தவர், பனிபோன்ற நிறமுள்ளவர் அல்லது பொன் போன்றவர், பொன்னிறமான ஆடையணிந்தவர், சூரியன், சந்திரன், அக்கி ஆகிய இம் மூவரையே மூன்று கண்களாக உடையவர், ஜ்ஞான ஸ்வரூபமானவர், எல்லாவற்றையும் அறிந்தவர். உலகெங்கும் வியாபித்திருப்பவர், அரி, அரன், அயன் இவர்களிடமிருந்து தோன்றியவர். இவ்வாறான "விச்வரூபனை" வணங்குகிறேன்.

---

(1) "सर्वव्यापं" என்றும் பாடம்.

அத² ஶக்திக³ணபதி:;—

ஆப்⁴யாம் விப்⁴ராஜமாநம் த்³ருதகநகமஹா-
ஶ்ருங்க²லாப்⁴யாம் கராப்⁴யாம்
பீ³ஜாபூராதி³ ஸாந்த்³ரத்³யுதிஸஹஜ ஶோபி⁴தம்
பஞ்சபீ³ஜஸ்வரூபம் ।
ஸந்த்⁴யாஸிந்தூ³ரவர்ணம் ஸ்தநப⁴ரநமிதம்
துந்தி³லம் ஸுநிதம்ப³ம்
கண்டா²தூ³ர்த்⁴வம் கரீந்த்³ரம் யுவதிவபுரதோ⁴-
நௌமி தே³வம் க³ணேஶம் ॥ எச ॥

அத² லக்ஷ்மீநாராயண:—

சக்ரம் வித்³யாம்[1] த³ரக⁴டக³தா³-
த³ர்பணௌ பத்³மயுக்³மம்
தோ³ர்பி⁴ர்பி³ப்⁴ரச்ச ஸாரம் ஸவிரதம்[2]
மேக⁴வித்³யுத்ஸமாநம் ।

சக்திகணபதி—எச.

உருக்கிய செம்பொன்னால் பண்ணப்பட்ட பெரிய சங்கிலிகளையுடைய இரு கரங்களுடன் அழகாக விளங்குகிறவர். மாதுளம்பழம் முதலியவற்றுடன் பிரகாசிக்கும் பத்து கைகளுள்ளவர் (இதே அத்தியாயம் 43வது சுலோகம் பார்க்க). ஐந்து பீஜஸ்வருபமானவர். ஸந்தியா (காலை அல்லது மாலையின் சிவப்பு நிறம்), செந்தூரம் இவை போன்ற நிறமுள்ளவர். கொங்கைகளின் பாரத்தினால் வணங்கியிருப்பவர். பெரும் தொந்தியுள்ளவர். அழகிய கடிதட (ப்ருஷ்டபாக) முள்ளவர். கழுத்துக்குமேல் யானை வடிவமுள்ளவர். கழுத்துக்கீழ் அழகிய பெண்வடிவமும் தெய்வத்தன்மையுமுள்ளவரான கணபதியை வணங்குகிறேன்.

லக்ஷ்மீநாராயணன்—எரு.

சக்கரம், வித்தை (சுவடி), சங்கு, குடம், கதை, கண்ணாடி, இரண்டு தாமரைமலர்கள் இவற்றைக் கைகளால் தரித்திருக்கும். மிகவும் அழகியது. மேகமும் மின்னலும்

---

(1) "யர" என்றும் பாடம்.

(2) "க³நம்" என்றும் பாடம். பொருள் ஒன்றே.

[illegible]
வர்ணஶ்ரீகாந்தியுக்தா-
[illegible] வ:
பீதகௌஶேயகாந்தா ॥ எரு ॥

அத அர்த்தநாரீஶ்வர:—

பாஶாங்குஶௌ ஜபவடீமபயம் ச பிப்ரத்
பாலேந்துமௌலிமருணாம்புஜகம் த்ரிநேத்ரம் ।
பந்தூககாஞ்சநநிபோபயபார்ஶ்வ ஶோபா-
மர்த்தாம்பிகேஶமநிஶம் [illegible] வ: ॥ எசு ॥

அபி ச:—

ஸிந்தூரகாஞ்சநநிபோபயபார்ஶ்வமர்த்த-
நாரீஶ்வரம் கிரிஸுதாஹரசிஹ்நவேஷம் ।

போன்ற ஒளியையுடையது. ஆழ்ந்த காதலினல் மெய் மறந்திருப்பது (தன் சுவாதீனத்திலில்லாதது). எப்பொழுதும் ஒன்ருக இணைந்தே இருப்பது. பொன்னிறமான பட்டாடை யுடுத்து அழகுற்று விளங்குவது. இவ்வாருன செந்தாமரைக் கண்ணனை திருமாலுடையவும், திருமகளுடையவும் திருமேனி உங்களைக் காப்பாற்றட்டும்.

அர்த்த நாரீச்வரன்—எசு.

பாசம், அங்குசம், ஜபவஸ்திரம், அபயதான முத்திரை, இவற்றைக் கைகளால் தரித்திருப்பது. இளஞ் சந்திரனைத் தலையிலணிந்தது. செந்தாமரை மலரில் வீற்றிருப்பது. மூன்று கண்களுள்ளது. செம்பரத்தம்பூ, பொன் இவை போன்ற இரண்டு பக்கங்களையுடையது. மனதைக்கவரும் அழகுவாய்ந்தது. இவ்வாருன அர்த்தநாரீச்வர வடிவம் உங்களை எக்காலமும் காப்பாற்றட்டும்.

மேலும்—எஎ.

செந்தூரம், பொன் இவைபோன்ற நிறமுள்ள இரண்டு பக்கங்களையுடையவராகவும், பார்வதி, பரமசிவன் இவர்களுக்கேற்ற அணிகளையும் அடையாளங்களையுமுடையவராகவும், பாசம், அபயதான முத்திரை, அக்ஷமாலை,

பாஶாங்குஶ வரதேஷ்டமுத்ரா தேவம்-
த்யாத்வா ந்ருதேஶம் ஸகலார்த்தஸித்தவர்க்கஸித்தயே ॥ எஎ

அபி ச:—

ஶோணம் கநகவர்ணம் பத்மஸம்ஸ்தம் ஸுகௌரீ-
ஹரநியதசிஹ்நம் ஸௌம்யகோரஸ்வபாவம் ॥
ஸபாஶ ஸபரஶுமிஷ்டப்ராப்யதே பாஶஹஸ்தா-
ஸாபயவரதவிசித்ரம் ரூபமேவம் ஶிவாங்கேஶம் ॥ எஅ ॥

அத ஶங்கரநாராயண:—

த்ர்யக்ஷோ ஜடாமகுடசந்த்ரகலார்த்தமூர்த்தா
¹ ஶ்ரீக்ஷ வ்யாக்ரஜிநபீதடுகூலவாஸா: ।
ஸம்ஶாத்யக்நிசக்ரகபாலஶங்காந்
பிப்ரத் ஸிதாஸிதவபுர் த்யுதிமாந் ஹரேஶ: ॥

வரதான முத்திரை, இவற்றைக் கைகளில் தரித்தவராகவும் அர்த்தநாரீச்வரரைத் தியானித்து வேண்டிய வரமெல்லாம் கைகூடும் பொருட்டு அமைக்க வேண்டும்.

மேலும்—எஅ.

சிவப்பு நிறமும், பொன்னிறமுமுடையது. தாமரை மலரில் அமர்ந்திருப்பது. பார்வதி, சிவன் இவர்களுடைய அங்க அடையாளங்களுள்ளது. அழகிய தன்மையும், உக்ரமான தன்மையும் உள்ளது. பாசம், மழு, அபயதான முத்திரை, வரதான முத்திரை, இவற்றைத் தரித்து விசித்திரமாகக் காட்சியளிப்பது. இவ்வாறான அர்த்தநாரீச்வர வடிவமானது உங்களுடைய விருப்பத்தை யெல்லாம் பூர்த்தி செய்யட்டும்.

சங்கரநாராயணன்—எசு.

சடைமுடி பிறைச்சந்திரன், இவற்றையணிந்த தலையின் ஒரு பாதியுடையவர். மூன்று கண்களுள்ளவர். புலித்தோல், பொன்னிறமான பட்டாடை இவற்றை யணிந்தவர். அக்கி (நெருப்பு), சக்கரம், கபாலம் (மண்டை ஓடு), சங்கு இவற்றைத் தரித்தவர். வெண்மையும் கருமையுமான இரு நிறமுள்ள வடிவமுள்ளவர். சிவனுக்கும் திருமாலுக்கும் ஏற்ற அணிகளணிந்தவர். இவ்வாறாக சங்கரநாராயணர் தியானிக்கப் படவேண்டியவர்.

---

¹ "த்ர்யக்ஷ:" என்றும் பாடம்.

அத ஸூர்ய꞉ :—

ரக்தாஸிதாம்போஜயுகம் கராப்யா-
ஜாஜ்வல்யமாநோஜ்ஜ்வலமத்யஸம்ஸ்தம் ।
ஸூர்யம் ஸுபீதாம்ஶுககந்தமால்ய-
ஜாஜ்வல்யமாநாபரணம் நமாமி ॥ ௮௦ ॥

௮௧ ஸௌரமஷ்டாக்ஷரம் :—

அருணஸரோருஹஸம்ஸ்த-
ஸ்த்ர்யக்ஷோ(அ)ருணோ(அ)ருணஸரோஜயுகாகர꞉ ।
கலிதாபயவரதகரோ-
த்யுதிபிம்போ(அ)கணிதவிபூஷணோ(அ)வதாத்வ꞉ ॥

அத [1]காம꞉ :—

அருணோ(அ)ருணவாஸோமால்யரத்நமாலம்
ஸ்ரக்சந்தநவாஸம் ஸோத்கண்டோத்ஸவாபத்ய ।

சூரியன்—அ௰.

செந்நிறமும், கருநிறமுமான தாமரை மலர்களை இரு கரங்களால் தரித்திருப்பவர். சுடர்மிக்க சோதி வெள்ளத்தின் நடுவில் அமர்ந்திருப்பவர். மஞ்சள் நிறமான ஆடை, சந்தனம், பூமாலைகள் இவற்றையணிந்தவர். பளபளப்பாக ஒளி வீசும் அணிகளையுடையவர். இவ்வாறான சூரியனை வணங்குகின்றேன்.

சூரியனுடைய அஷ்டாக்ஷரம்—அக.

செந்தாமரை மலரில் அமர்ந்திருப்பவன். மூன்று கண்களுள்ளவன். செந்நிறமானவன். செந்தாமரை மலர்கள் இரண்டைத் தரித்தவன். இவனுக்குக் கைகள் நான்கு. அவற்றுள் இரண்டு கைகளால் செந்தாமரை மலர்களிரண்டைத் தரித்தவன். அபயமுத்திரை, வரதமுத்திரை இவற்றை மற்ற இருகைகளில் தாங்கியிருப்பவன். ஒளிப்பிழம்பாக இருப்பவன். எண்ணற்ற அணிகளணிந்தவன். இவ்வாறான சூரியன் உங்களைக்காப்பாற்றட்டும்.

காமன் (மன்மதன்)—அ௨.

சிவப்பு நிறமானவன். செந்நிறமான ஆடை, பூமாலைகள், இரத்தின மாலைகள், சந்தனம் இவற்றையணிந்தவன்.

---

(1) "காமதேவ꞉" என்றும் பாடம்.

மணிமயமகுடாத்3யைர் [illegible]
ராராஜ்யமாநம் நலிநஸம்ஸ்த2ம் [illegible] ॥ ௮௨ ॥

அபி ச:—

ரக்தாம்போ4ருஹஸம்ஸ்தி2தம் கரதலே
கோத3ண்ட3மிக்ஷூத்3ப4வம்
புஷ்பாஸ்த்ரம் வரதா3ப4யௌ ச த3த4தம்
ரக்தாங்க3ராகா3தி3கம் ।
வாமோத்ஸங்க3ஸ்தி2தயா ஸதா3லிங்கி3தம்
ரத்யா ச தத்3வீக்ஷணம்
தத்3வக்த்ராம்பு3ஜத3த்தநேத்ரமநகம்
வந்தே3 ஸதா3 மந்மத2ம் ॥ ௮௩ ॥

தனது கைகள் நான்களுள் ஒன்றில் பாசத்தை யேந்திய வன். அங்குசம், அம்பு (மலர்களாலானது), கரும்பு வில் இவற்றை மற்ற மூன்று கைகளில் தரித்திருப்பவன். இரத்தினங்களிழைத்த கிரீடம் முதலிய அணிவரிசைகளால் அழகுற்று விளங்குபவன். செந்தாமரை மலர்மேல் வீற்றிருப்பவன். இவ்வாறாக மன்மதனைத் தியானிக்கவேண்டும்.

மேலும்—௮௩.

செந்தாமரைமலரில் அமர்ந்தவன். தனது நான்கு கைகளில், கரும்புவில், மலர்க்கணை, வரதான முத்திரை, அபய முத்திரை இவற்றைத்தரித்தவன். சிவப்பான சந்தனம் முதலியவற்றை யணிந்தவன். இடதுபுறம் மடியில் உட்கார்ந்திருக்கும் "ரதி" தேவியினால் எக்காலமும் சேர்த்து அணைத்துக்கொள்ளப்பெற்றவன். தாமரைமலர் போன்ற அவளது முகத்தில் பதிந்த (உற்று நோக்கியவாறே யிருக்கும்) கண்களையுடையவன். மனதைக் கவரும் வடிவழகுள்ளவன். இப்படிப்பட்ட மன்மதனை எப்பொழுதும் வணங்குகின்றேன்.

அத² வீரபத்₃ர꞉ :—

கோ³க்ஷீராப⁴ம் த³தா⁴நம் பரஶுட³மருகௌ
க²ட்³க³கே²டௌ கபாலம்
ஶூலஞ்சாபீ⁴திதா³நே த்ரிநயநஸஹிதம்
வ்யாக்⁴ரசர்மாம்ப³ராட்⁴யம் ।
வேதாளாரூட⁴முக்³ரம் கபிஶதரஜடா-
ப³த்³த⁴ஶீதாம்ஶுக²ண்ட³ம்
த்⁴யாயே போ⁴கீ³ந்த்³ரபூ⁴ஷம் நிஜக³ணஸஹிதம்
ஸங்க³தம் வீரப⁴த்³ரம் ॥ ௧௪ ॥

அத²வா :—

ஸிதபங்கஜமத்⁴யஸம்ஸ்த²மேகம்
ஸர்வஸிதம் வ்யாக்⁴ரநகா²தி³பா³லபூ⁴ஷை꞉ ॥
உபலக்ஷிதபா³லபா⁴வமாய தி³ஶா-
வஸநம் கமநீயமார்த³வாட்⁴யம் ॥ ௧௫ ॥

வீரபத்திரன்—௧௪.

பசுவின்பால் போன்ற நிறமுள்ளவர். மழு, உடுக்கை, வாள், கேடயம், கபாலம், சூலம், அபயமுத்திரை, வரதான முத்திரை, இவற்றைத் தமது எட்டு கைகளால் தரித்திருப்பவர். மூன்று கண்களுடன் திகழ்பவர். புலித்தோலை ஆடையாக அணிந்தவர். வேதாளத்தின்மேல் ஏறியிருப்பவர். பயங்கரமானவர். மிக்க மஞ்சள் நிறமான சடையில் பிறைச் சந்திரனையணிந்தவர். பாம்புகளை அணிகளாக அணிந்தவர். எப்பொழுதும் தனது (பிரமத) கணங்களோடு கூடியவர். இவ்வாறாக வீரபத்திரரைத் தியானிக்க வேண்டும்.

வேறு—௧௫.

வெண்டாமரை மலரின் மத்தியிலிருப்பவர். முற்றிலும் வெண்மை நிறமானவர். புலிநகம் முதலிய, சிறுவர்களுக்கு வேண்டிய விளையாட்டுப் பொருள்களால் தனது சிறு பிராயம் தோற்றுமாறு உள்ளவர். திசைகளையே ஆடையாக உடையவர் (திகம்பரர்). அழகியதும் மெல்லியதுமான வடிவத்துடன் கூடியவர். இவ்வாறாக (வீரபத்திரரைத் தியானிக்கவேண்டும்)

அத ஹநுமத் :—

பிங்காக்ஷம் பிங்ககேஶம் ஶஶருதிரநிபா-
ஸ்யதோ:பாதவக்த்ரம்
ப்ரோத்யத்ஸூர்யகோடி ¹ப்ரதிஹதநயந
த்ருஷ்டிர் தீப்தாம்ஶுபுஞ்ஜை: ।
ராகாசந்த்ராம்ஶுஜால ப்ரஸ்ருதநகதம்-
ஷ்ட்ராம்ஶுஸந்த்ராஸிதஸ்யாத்
த்வாந்தாஶா சக்ரவாளம் கபிவரமநிஶம்
வாயுபுத்ரம் நமாமி ॥ ௮௬ ॥

அதவா :—

வாமே ஜாநுநி வாமபாணிமநிஶம்
ஜ்ஞாநாக்யமுத்ராந்விதம்
ஹ்ருத்யேவ ஸகரயுத வ்ருதோ முநிகணை-
நாஸாக்ரத்ருஷ்டீக்ஷண: ।

ஹநுமன்—அகூ

பழுப்பு நிறமான கண்களும் குழல்களுமுள்ளவர். முயலின் இரத்தம்போன்ற நிறமுள்ள முகம், கைகள், கால்கள் இவற்றையுடையவர். உதயமாகிக்கொண்டிருக்கிற கோடிக்கணக்கான சூரியன்கள் போன்ற (தனது) உடம்பினின்றும் கிளம்புகின்ற கிரணங்களால் பார்க்க முடியாமல் கண்கள் கூசும்படியிருப்பவர். இவரது நகங்கள், கோரைப் பற்கள் இவை வெண்மையானவையாக, பூர்ண சந்திரன் போல் பிரகாசிக்கும். அவற்றின் ஒளியினால் திசைகளின் இருள்முற்றும் அழிந்துவிடும். எங்கும் நிலவொளி பரவினாற் போன்ற காட்சியாயிருக்கும். இப்படிப்பட்ட வாயு புத்திரனாகிய அநுமானை எக்காலமும் வணங்குகின்றேன்.

வேறு

இடது முழங்காலில் இடது கையை வைத்துக் கொண்டிருப்பவர். ஞான முத்திரையுடன் கூடிய மற்றொரு கையை (வலது கையை) மார்பில் வைத்துக் கொண்டிருப்பவர். முனிவர் கூட்டங்களால் சூழப்பெற்றவர். மூக்கின் நுனியில் நிலைத்து நிறுத்தப்பட்ட கண்பார்வையையுடையவர். பொன்

---

(1) "ஹதநய" என்றும் பாடம்.

ரத்நை: கதலீவநே நிஷண்ணம்

பாலார்க்க கோடிப்ரதிமம்

த்யாயந் ப்ரஹ்ம பரம் கரோது மநஸ:

ஶுத்திம் ஹநூமாந் மம ॥ ௮௭ ॥

கவசா :—

ப்ரோத்யத்ரோஷ ஜ்வலித லோசந ஸ்புலிங்க-

ஜ்வாலா ஸந்தோஹ-

ப்ரோத்யத் ஸர்பாதி ஸர்வ ஜந்து நிகர-

த்வம்ஸநா ஸுபோர ராகிநம் ।

மேரும் மேருவத் ப்ரசண்ட ரக்த-

ஶ்ரோத்ராஸ்ய பாத ஹஸ்தம்

வந்தே வாயோ: ஸுதம் அஞ்ஜநேய ஸுதம்

தம்ஷ்ட்ரா கராள ஆநநம் ॥ ௮௮ ॥

இரத்தினம் இவற்றலான வாழைக்காட்டில் அமர்ந்திருப்பவர். இளஞ் சூரியன்கள் ஆயிரங்கோடி ஒன்று சேர்ந்தாற் போன்ற ஒளியுடையவர். பரப்பிரம்மத்தை (கடவுளை) யே எப்பொழுதும் தியானம் பண்ணிக் கொண்டிருப்பவர். இவ்வாறன அனுமான் எனது மனதைச் சுத்தப் படுத்தவேண்டும்.

வேறு—அஅ

கடுஞ்சினத்தால் பொங்கிச் சுழன்று கொண்டிருக்கும் சிவந்த கண்கள் பிதுங்கி நெருப்பைக் க்கக்குகின்றன. அந்தத் தீப்பொறிகளின் குவியல்களால், பாம்புகள், திருடர்கள் முதலான கொடிய ஜந்துக்களைக் கொளுத்தி நாசம் செய்கின்றவர். பயங்கரமான தோற்றமுடையவர். மேருமலைபோன்ற பெரும்மாண்டமான உடம்பை உடையவர். சிவந்த காதுகள், முகம், பாதங்கள் இவற்றையுடையவர், வாயுவின் குமாரன். அஞ்ஜனா தேவியின் மைந்தன். கோரைப் பற்களால் பயங்கரமான முகத்தையுடையவர். இவ்வாறன அனுமானை நித்தமும் வணங்குகின்றேன்.

[illegible] :—

[illegible]
[illegible]
[1] [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௮௯ ॥

[illegible] ;—

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ।

கருடன்—௮௯.

முழங்கால்கள் வரை, நன்கு காய்ச்சப்பட்ட பொன் போன்ற நிறமுள்ளவர். அதற்குமேல் கொப்பூழ்வரை பனி போன்ற வெண்மை நிறமுள்ளவர். அதற்குமேல் கழுத்து கண்கள் இதுவரை குங்குமம்போன்ற சிவப்பு நிறம் உள்ளவர். தலையில் வண்டுகளின் கூட்டங்கள்போன்ற கருப்பு நிறமுள்ளவர். சாந்தமா (அமைதியா)னவர். பிரம்மாண்டத்தின் நடுவுவரையில் வியாபித்து நிற்பவர். இரண்டு கைகளுள்ளவர். அண்டினவர்களுக்கு அபயமளிப்பவர். பழுப்பு நிறமான கண்களும் பயங்கரமான விழிகளுமுள்ளவர். அலகின் நுனி நீலநிறமாயிருக்கும். பல்வேறு நிறமுள்ள இறகுகளுள்ளவர். இவ்வாறான கருடனை வணங்குகின்றேன்.

மேலும்—௯௰.

அமுதகலயம், கதை, சங்கு, சக்கரம், கத்தி, பாம்பு இவற்றைக் கைகளால் தரித்தவர். கருமை நிறமுள்ள பாதங்களுடையவர். தாமரை மலர் போன்ற எட்டு கைகள் உள்ளவர். பொன்னிறமானவர். அவருடைய சிறகுகளின்

---

(1) "[illegible]" என்றும் பாடம், காதளவு—என்று பொருள்.

பாபௌகை: பக்ஷவாதை: ஸகலவிஷபயோ-
ராஶ்ரிதார்திக்நவ்ருத்த:
ஶ்ரீமாந் வ: பந்நகாரி: ஸகலவிஷபயா-
த்ராஜாநோஜ்ஜ்வலாங்க: ॥ ௯௦ ॥

¹அஶ்விநௌ :—

ஸர்வ²ஸிம்ஹாஸநாஸீநௌ அஶ்விநௌ அஶ்வரூபிணௌ ।
பந்தூகபுஷ்பஸங்காஶவர்ணௌ தௌ ³ரோமாவிதகௌ ॥
ஸ்ரக்வஸ்த்ரதாரகௌ ச பீதஸ்ரக்வஸ்த்ரதாரிணௌ ।
கரத்வயஸமாயுக்தௌ ஶ்ரீமத்பூஷணபூஷிதௌ ॥ ௯௨ ॥

காற்று பாவங்களையெல்லாம் தொலைக்கும், எல்லாவகையான விஷங்களையும் போக்கும். இதனால் தன்னையடைந்தவர்களுடைய துன்பங்களையெல்லாம் நீக்கும் இயல்புள்ளவர். இரத்தினக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்தாற்போன்ற ஒளிமிக்க உடம்புள்ளவர். பாம்புகளுக்குப் பகைவர். இவ்வாறான கருடன் எல்லாவிதமான விஷங்களினின்றும் உங்களைக் காப்பாற்றட்டும்.

குறிப்பு:— ஆறு கைகளுக்கே உபயோகம் சொல்லப்படுகிறது. ஆனால் கைகள் எட்டு என்று கூறப்படுகிறது.

அச்விநி (தேவதை)கள்—௯௧—௯௩.

அச்விநி தேவர்கள் இருவராகவேயிருப்பர். குதிரை வடிவமுள்ளவர். ஒரே சிங்காதனத்தின்மேல் அமர்ந்திருப்பர். மாதுளைமலர்போன்ற நிறமுள்ளவர்கள். இருவரும் பூணூல் அணிந்திருப்பர். மலர்ந்த செந்நிறமான குவளை மலர் போன்ற கண்களுள்ளவர்கள். சிவப்பான மாலைகளும் ஆடைகளும் அணிந்திருப்பர். இருவரும் இரண்டு கைகளுள்ளவர்கள். அழகு மிக்க அணிகளால் அலங்கரிக்

---

(1) "அஶ்விநீதேவௌ" என்று பாடம்.
(2) "ஸிம்ஹஸமாஸீநௌ" என்றும் பாடம்.
(3) "ரோமாவிதகௌ" என்றும், "ரோமாநீதகௌ" என்றும் பாடபேதமுண்டு.

அப⁴யம் த³க்ஷிணே ஹஸ்தே வரத³ம் வாமஹஸ்தகே |
லம்பி³தேன த³க்ஷிணம் பாத³ம் வாமமுத்குடிகாஸனே ॥ ௬௩

அத² பிதர: :—

பிதர: பீதவர்ணாபா⁴ த்³விபு⁴ஜா: ஶ்வேதவாஸஸ: |
யஜ்ஞஸூத்ரஸமாயுக்தா: ஸௌம்யத்³ருஷ்டிமுகா²ந்விதா: ॥ ௬௪ ॥
ப²லகே ப⁴த்³ரபீடே² வா த்ரயஸ்து ஸமாஸிதாஸனா: |

அதா²ப்ஸரஸ: :—

ஏகாதி³ஸப்தஸங்க்²யாகா ஸ்வச்சா²: பீனோருஜக⁴னஸ்தனா: ॥ ௬௫ ॥
மத்⁴யே க்ஷாமாஶ்ச ஸௌம்யாஶ்ச கிஞ்சித்ஸ்மிதானனா: |
நாநாலங்காரஸம்யுக்தா ப⁴த்³ரபீடோ²பரி ஸ்தி²தா: ॥ ௬௬ ॥
ஸமப⁴ங்க³ஸமாயுக்தா: ஸர்வஸம்பூர்ணா: ஸ்தி²தா: |

கப்பட்டவர்கள். வலது கையில் அபய முத்திரையும், இடது கையில் வரதான முத்திரையும் தரித்திருப்பர். வலது காலைத் தொங்கவிட்டுக் கொண்டும், இடது காலை உத்குடிகாசனத்தில் வைத்தபடியாகவும் அமர்ந்திருப்பர்.

பித்ருக்கள்—௬௪.

பித்ருக்கள் பொன்னிறமான உடம்பு உள்ளவர்கள். இரண்டு கைகளுள்ளவர்கள். வெண்ணிறமான ஆடையுடுத்தவர்கள். பூணூல் தரித்திருப்பர். அமைதியான முகம், பார்வை இவற்றை யுடையவர்கள். பலகையின்மேல் அல்லது பத்ரபீடத்தின்மேல் மூன்று பேராகச் சேர்ந்து அமர்ந்திருப்பர்.

குறிப்பு:—அழகிய ஆஸனம்-நாற்காலி-சிங்காதனம் இவை "பத்ர பீடம்" எனப்படும்.

அப்ஸரஸ்ஸுக்கள்—௬௫-௬௬.

இவர்கள் ஏழுபேர்களாக இருப்பர். எல்லோரும் வெண்பட்டாடை தரித்திருப்பர். இவர்களுடைய தொடைகள் ஜகனம், கொங்கைகள் இவை பருத்தவைகளாக இருக்கும். இடை மிகமிக மெல்லியதாயிருக்கும். அழகிய தோற்ற முள்ளவர்கள். சிறிது புன்னகை தவழ்ந்த முகமுள்ளவர்கள். பலவிதமான அலங்காரங்களையும் அணிந்து அழகு மிக்கிருப்பவர்கள். பத்ரபீடத்தின்மீது அமர்ந்திருப்பார்கள். "ஸமபங்க" மெனப்படும் உடல் அமைப்பு உள்ளவர்கள்.

அத ஸப்தர்ஷய:—

ருஷய: பீதவர்ணாபா நாநாவர்ணாம்பராந்விதா: ॥ ௯௭ ॥

வ்ருத்தாஶ்ச த்விபுஜா: ஶாந்தா ஜடாமகுடமண்டிதா: ।
[1] விஸ்தீர்ணா ஹ்ருதயாந்தாஶ்ச யஜ்ஞஸூத்ரஸமந்விதா: ॥ ௯௮ ॥

ஸம்பதேநைவ த்ரிபுண்ட்ராட்யா: ஸ்தாநகா வாஸநஸ்தா வா ।
தண்டம் தக்ஷிணஹஸ்தே து சத்ரம் வாமகரே த்ருதா: ॥ ௯௯ ॥

சத்ரதண்டௌ விநா வாத ஸவ்யே வை ஜ்ஞாநமுத்ரிகாம் ।
வாமஜாநுந்யஸ்தவாமஹஸ்தஸமந்விதா: ॥ ௧௦௦ ॥

அத ஏகாதஶ ருத்ரா:—

சதுர்புஜா ஸ்த்ரிநேத்ராஶ்ச ஜடாமகுடமண்டிதா: ।
ஶுக்லவஸ்த்ரதரா: ஸர்வே ஶுக்லவர்ணா: ப்ரகீர்த்திதா: ॥

ஸப்த ரிஷிகள்—௬எ-ா.

இவர்கள் பொன்னிறமான உடம்புள்ளவர்கள். பல நிறமான ஆடைகளுடுத்தவர்கள். வயது முதிர்ந்தவர்கள். இரண்டு கைகளுடையவர்கள். சாந்தமானவர்கள். சடைமுடியால் அலங்கரிக்கப் பெற்றவர்கள். (இங்கு மூலத்தின் கருத்து விளங்கவில்லை). பூணூல் உள்ளவர்கள். சாம்பலினால் மூன்று பட்டை நெற்றி முதலிய இடங்களில் அணிந்தவர்கள். நின்று கொண்டிருப்பவர்கள் அல்லது வீற்றிருப்பவர்கள். வலது கையில் தண்டம் (தடி) வைத்திருப்பர். இடது கையில் குடை பிடித்திருப்பர். அல்லது குடை, தடி இவைகளில்லாமல் வலது கையில் ஞானமுத்திரையுடனும், இடது கையை இடது முழங்காலில் வைத்தவாறாகவும் இருப்பார்கள்.

பதினொன்று ருத்திரர்கள்—ாக.

நான்கு கைகளும், மூன்று கண்களுமுள்ளவர்கள். சடைமுடியால் அலங்கரிக்கப்பெற்றவர்கள். எல்லோரும் வெண்மையான ஆடையுடுத்தவர்கள். வெண்மையான நிற

---

(1) விச்வகர்மீயம் ஸப்தரிஷி லக்ஷணத்தில் "ஹிருதயமளவு வளர்ந்த தாடியும்" என்றிருக்கிறது. அதுவே இங்கும் பொருள்,

चापं पाशाः सव्ये कृष्णस्य वामेऽष्टहस्तकः ।

अथ क्षेत्रपालः :—

त्रिविधः क्षेत्रपालस्तु सात्त्विको राजसोऽपि सः ॥

श्वेतो रक्तस्तथा कृष्णः सात्त्विकादिगुणान्वितः ।
शूलं दक्षिणहस्ते तु कपालं इतरे स्मृतम् ॥ १०८ ॥

द्विभुजं ह्येवमाख्यातं चतुर्हस्तमथोच्यते ।
वरदं हस्ते तु सव्ये तु वामे डमरुकं न्यसेत् ॥

अथवा पूर्वहस्तौ तौ वरदाभयसंयुतौ ।
पूर्ववत् परहस्तौ तौ घण्टा वा वामहस्तके ॥

முள்ளவர்கள். இவர்களுக்குக் கைகள் நான்கு. வலதுபுறம் உள்ள இரண்டு கைகளிலும் முறையே அபயதான முத்திரையும் மழுவும், இடதுபுறம் இரண்டு கைகளில் புள்ளிமானும் வரதான முத்திரையும் தரித்திருப்பர்.

க்ஷேத்திரபாலன்—௱க-௱அ.

க்ஷேத்திரபாலன், ஸாத்விகன், ராஜஸன், தாமஸன் என்று மூன்றுவகை. இவர்கள் முறையே வெண்மை, சிவப்பு, கறுப்பு நிறமுள்ளவர்கள். வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் ஏந்தியிருப்பார்கள். இரண்டு கைகளுடன் கூடிய இவர்களது வடிவம் இவ்வாறு கூறப்பட்டது. இனி நான்கு கைகளுள்ள வடிவம் கூறப்படுகின்றது. வலது கையில் வரதான முத்திரை, இடது கையில் உடுக்கை. (இவ்வாறு நான்கு கைகளுக்குப் பொருள்கள் அமைக்கப்படலாம்.) அல்லது முதலிரண்டு கைகளிலும் வரதான முத்திரையும், அபய முத்திரையும் அமைத்து, மற்ற இரண்டு கைகளிலும் முன்போலவே (வலது கையில் சூலமும், இடது கையில் கபாலமும்) அமைக்கலாம். இடது கையில் கபாலத்திற்குப் பதிலாக கண்டை (மணி) யும் அமையும். இதெல்லாம் ஸாத்விக மூர்த்தியாகும். இனி

ஸாத்த்விகம் ஹ்யேவ மாக்²யாத மத² ராஜஸ முச்யதே ।
ஶூலம் க²ட்³க³ம் ச க⁴ண்டாம் ச த³க்ஷிணே து கரத்ரயே ॥ ௧௦௬ ॥

கே²டகஞ்ச கபாலஞ்ச நாக³பாஶமத³க்ஷிணே ।
தாமஸேऽப்யேதத் த⁴நுர்பா³ணம் த³க்ஷிணேऽத³க்ஷிணே யுதம் ॥

ஶேஷம் ராஜஸவத் க்²யாதம் ரக்தகேஶோர்த்⁴வமண்ட³லம் ।
உக்³ரத்³ருஷ்டிஸமாயுக்தம் நாநாநாக³விபூ⁴ஷிதம் ॥ ௧௦௭ ॥
த்ரிநேத்ரம் நக்³நரூபம் ச க்ஷேத்ரபாலமிமம் விது³꞉ ।

அதவா :—

வ்யாலம்பா³ம்ருஜடாபா⁴ரம் த்ரிநயநம்
நீலாஞ்ஜநாத்³ரிப்ரப⁴ம்
தோ³ர்ப்⁴யாமாத்தகபாலஶூலமருண-
ஸ்ரக்³வஸ்த்ரமால்யோஜ்ஜ்வலம் ।

ராஜஸ மூர்த்தியை விளக்குவாம். இம் மூர்த்திக்கு ஆறு கைகள். வலதுபுறமுள்ள மூன்று கைகளில் முறையே சூலம், வாள், மணி (கண்டை) இவற்றைத் தரித்திருப்பர். இடது புறமுள்ள கைகளில் முறையே கேடமம், கபாலம், நாகபாசம் இவற்றைத் தரித்திருப்பர். தாமஸமூர்த்தியையும் பெரும்பாலும் ராஜஸமூர்த்தி போலவேதான் அமைத்தல் வேண்டும். வலதுகையில் வில்லும், இடது கையில் அம்பும் அமைக்கவேண்டும். இதுதான் மாறுதல். தலைமயிர்கள் செம்பட்டை நிறமாயிருக்கும். அவை மேல்பகுதியிலும் (தலைக்குமேலே உயர்ந்த இடம்) வட்டவடிவமாகச் சூழ்ந்திருக்கும். பயங்கரமான பார்வை. பல பாம்புகளை ஆபரணமாக அணிந்திருப்பர். மூன்று கண்கள். ஆடையே இல்லாமல் திகம்பரராக இருப்பர். க்ஷேத்ரபாலனை இவ்வாறாகத் தியானிக்கவேண்டும்.

வேறு—ாக.

வளர்ந்து நீண்டு தொங்குகின்ற சடையுடையவர். மூன்று கண்களுள்ளவர். கரிய மையினாலான மலைபோன்றவர். இருகைகளிலும் முறையே கபாலமும், சூலமும் இருக்கும். பூமாலைகள், ஆடை, சந்தனம் இவையெல்லாம் செந்நிறமாயிருக்கும். மணிகள் நிறைந்த ஒட்டியாணத்தின்

घण्टाघोष घर्घुर (स्फुलिङ्ग ? स्फुरित)-
  हुङ्कारभीमं विरावं
वन्दे संश्रितसर्पकुण्डलधरं
  तं क्षेत्रपालं सदा ॥ १०९ ॥

अपि च :—

दंष्ट्रारौद्रावृत्तदीर्घसर्पाङ्गभूषं-
  दिगम्बरं करधृतगदाकपालम् ।
वृत्ताग्रचक्षुषं दीर्घपिङ्गकेशं
  तं क्षेत्रपालं दिशं + देवं भजामि ॥ ११० ॥

अथ [1]वामनः :—

कृष्णाजिनोपवीती स्याच्छत्री युतकमण्डलुः ।
कुण्डली शिखया युक्तः कुब्जाकारो हि वामनः ॥ १११

ஒலி, 'கர் கர்' என்னும் குரல், இவைகளுடன் கூடிய 'ஹூம்' என்னும் சப்தத்தால் பயங்கரமானவர். எங்கும் பரந்து நிற்பவர். பாம்புகளை வளைத்துக் குண்டலமாக அணிந்தவர். இப்படிபட்ட க்ஷேத்திரபாலகரை எப்பொழுதும் வணங்குகின்றேன்.

மேலும்—௱௰.

பயங்கரமானதும் வரிசையாக அமையாதனவுமான இவருடைய பற்கள் வெளியில் நீண்டிருக்கும். பெரிய பாம்புகளின் உடலையே அணியாகவுடையவர். இவருக்குத் திசைகளே ஆடையாகும். பயங்கரமான கதை கபாலம் இவற்றைக் கைகளில் தரித்திருப்பர். வட்டவடிவமான பயங்கரமான கண்களுள்ளவர். உயர்ந்து நெறித்து நிற்கும் மஞ்சள் நிறமான தலைமயிர் உள்ளவர். இவ்வாறாக விளங்கும் அந்த க்ஷேத்திரபாலகரை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

வாமனன்—௱௰௧.

இவர் மான்தோலுடுத்தவர். பூணூல் தரித்திருப்பர். குடை பிடித்திருப்பர். கமண்டலம் தாங்கியிருப்பர். காதுகளில் கடுக்கன் அணிந்திருப்பர். தலையில் குடுமி உண்டு. சிறிது கூன்முதுகு உள்ளவர். கவர்ச்சிகரமான தோற்றமுள்ளவர்.

(1) "वामनमूर्तिः" என்றும் பாடம். பொருள் ஒன்றே.

அத ந்ருவராஹ: —

ந்ருவராஹம் ப்ரவக்ஷ்யாமி ஸூகராஸ்யேந ஶோபிதம் ।
கதாபத்மதரம் தீவ்ரம் தம்ஷ்ட்ராக்ரேண ஸமுத்த்ருதாம் ॥ கயஉ

பிப்ராணம் கோலபூதேவீம் வாமே விஸ்மயோத்புல்லலோசநாம் ।
நீலோத்பலதராம் தேவீம் ஶ்லிஷ்டாம் ப்ரகல்பயேத் ॥ கயங.

தக்ஷிணம் கடிஸம்ஸ்தம் ச பாஹும் தஸ்ய ப்ரகல்பயேத் ।
கூர்மப்ருஷ்டே பதமேகம் அந்யச்சேஷஸ்ய மூர்த்தநி ॥

அதவா ஸூகராகாரம் மஹாகாயம் ச வா பவேத் ।
தீக்ஷ்ணதம்ஷ்ட்ரோக்ரகோணாஸ்ய ஸ்கந்தகர்ணோர்த்வரோமகம் ॥

ாயஉ—ாயரு.

மானிடவராகன் (கழுத்துவரை மானிட வடிவமும், கழுத்துக்குமேல் பன்றி வடிவமுமுள்ளவர்):— இனி பன்றி முகத்தோடுகூடிய அழகிய நரவராஹப் பெருமானைக் கூறுவேன். இவர் கைகளில் முறையே கதை, தாமரைமலர் இவற்றைத் தரித்திருப்பர். தனது கோரைப் பல்லினுல் பூமிதேவியை மேலே தூக்கிவந்தவர். அந்தப் பூமிப்பிராட்டி ஆச்சரியத்தினுல் நன்கு மலர்ந்த கண்களுள்ளவள். கருங்குவளை மலரைத் தரித்திருப்பள். ஸ்ரீவராஹ நாயனுர் அவளைத் தனது இடது கையினுல் அணைத்திருப்பர். அவர் தனது வலது கையை இடுப்பில் பொருந்த வைத்திருப்பர். ஒரு காலை ஆமையின் முதுகிலும், மற்றொரு காலை ஆதிசேஷன் தலையிலும் வைத்திருப்பர். ஸ்ரீவராஹ நாயனுரை இவ்வாறு தியானிப்பது ஒரு முறை. மற்றொரு விதமுண்டு: அதாவது முழுதும் பன்றிவடிவமாகவே தியானிக்கலாம். மிகப்பெரிய உடம்புள்ளவராக இப்பன்றியை வரைய வேண்டும். கூர்மையான கோரைப் பல், கூர்மையான மூக்கின் நுனி முகம், தோள்கள், காதுகள் இவைகளும் உக்ரமாயிருக்கும். ரோமங்கள் (மயிர்கள்) மேல் நோக்கி செறித்துக் கொண்டிருக்கும். இவ்வாறும் தியானிக்கலாம்.

𑌅𑌥 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌃 :—

𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌾𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌂 [1]𑌸𑌿𑌂𑌹𑌮𑍁𑌖𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍 ।
𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌕𑌾𑌰𑌕𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌾𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ ௧௧௬ ॥

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌂 𑌦𑍈𑌤𑍍𑌯𑌂 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌂 𑌨𑌖𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑍈𑌃 ।
𑌊𑌰𑍋𑌰𑍍𑌵𑌾𑌮𑍇 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍋𑌭𑍇𑌦𑌨𑌕𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ॥ ௧௧௭ ॥

𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌷𑍍𑌯 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍀𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌕𑍍𑌰𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍 ॥

𑌕𑍌𑌮𑍋𑌦𑌕𑍀𑌂 𑌗𑌦𑌾𑌂 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑌧𑌿 𑌵𑌾𑌮𑌤𑌃 ।
𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌦𑌲𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌂 𑌕𑌿𑌂𑌵𑌾 𑌚𑌮𑍍𑌪𑌕𑌸𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑍍 ॥ ௧௧௯ ॥

𑌤𑌪𑍍𑌤𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌾𑌂 𑌬𑌾𑌲𑌾𑌰𑍍𑌕𑌸𑌦𑍃𑌶𑍀𑌂 𑌅𑌥𑌵𑌾 ।

நரசிங்கமூர்த்தி—௱௧௬—௱௧௯.

இனி நரசிங்கமூர்த்தியைப் பேசப்போகிறேன். கழுத்துக்குமேல் சிங்கவடிவமானவர் இவர். கீழ்ப்புறம் மானிட வடிவமானது. இவரது சிங்க முகமும், கண்களும் பயங்கரமானவை. இவருக்குக் கைகள் எட்டு இருக்கும். பருத்த கம்பத்தை அண்டியிருப்பார். கூர்மையான தனது நகங்களால் ஹிரண்யகசிபு என்னும் அசுரனைக் கிழித்துக் கொண்டிருப்பார். அவ்வசுரன், தனது கைகளிரண்டிலும் வாளும் கேடயமும் தாங்கியிருப்பான். அவ்வாறான அவனைத் தூக்கித் தனது தொடையின் மேல் வைத்து இருகைகளால் கிழித்துக்கொண்டிருப்பார் இவர். அவனுடைய நரம்பு, தசை இவைகளைக் கொத்தாக அறுத்து வெளியில் இழுத்துத் தனது இரண்டு கைகளிலும் தரித்துக் கொண்டிருப்பார். நடுவிலுள்ள நான்கு கைகளில், வலதுபுறம் உள்ள இருகைகளால் முறையே சக்கரத்தையும், தாமரை மலரையும் தரித்திருப்பார். இடதுபுறமுள்ள இருகைகளால் முறையே "கௌமோதகீ" என்னும் கதையையும், சங்கையும் தரித்திருப்பார். கருங்குவளை மலர்போன்ற நிறமுள்ளவர். அல்லது செண்பக மலர்போன்ற நிறமுள்ளவர், நன்கு காய்ச்சின பொன்போன்ற நிறமுள்வவர், இளஞ்சூரியன்போன்ற நிறமுள்ளவர், இவ்வகைகளில் ஏதேனும் பொருந்தும்.

---

(1) "𑌸𑌿𑌂𑌹" என்றும் பாடம். பழுப்பு நிறமான-என்று பொருள்.

அத² த்ரிவிக்ரம: :—

தயா த்ரிவிக்ரமம் வக்ஷ்யே வாமபாதேந திஷ்டதி ॥ ௧௨௦ ॥
ஆக்ராந்தம் ப்ருதிவீ யேந ஸாகவ்யேந நபஸ்தலம் ।

அத² மத்ஸ்யமூர்த்தி: :—

மத்ஸ்யாவதாரிணம் தேவம் மத்ஸ்யாகாரம் ப்ரகல்பயேத் ॥ ௧௨௧ ॥

அத² கூர்மமூர்த்தி: :—

கூர்மாவதாரிணம் தேவம்
கமடாக்ருதி ரூபயேத் ।

அத² ப்ரஹ்மா :—

ஶ்வேதம் சதுர்முகம் தேவம்
சதுர்புஜம் ஸர்வலக்ஷணம் ॥ ௧௨௨ ॥

ரத்நகுண்டலஸம்யுக்தம் யஜ்ஞோபவீதிநம் ।
க்ருஷ்ணாஜிநதரம் ஸௌம்யம் ஸர்வாம்பரவிராஜிதம் ॥ ௧௨௩ ॥

திருவிக்கிரமன்—௱௨௰.

அவ்வாறே திருவிக்கிரமனைக் கூறுவேன். இவர் தனது இடது காலால் பூமி முழுவதையும் ஆக்கிரமித்து (அளந்து) நிற்பார். மற்றொரு (வலது) காலால் ஆகாயம் முழுவதையும் அளந்தவாறிருப்பார்.

மச்சமூர்த்தி—௱௨௧.

மீனாகத் திருவவதாரம் பண்ணின எம்பெருமானை, மீன் வடிவமாகவே அமைக்க வேண்டும்.

கூர்மமூர்த்தி (ஆமை)—௱௨௨.

ஆமையாக அவதரித்த இறைவனை, ஆமை வடிவமாகவே வரைய வேண்டும்.

பிரம்மா (நான்முகன்)—௱௨௨-௱௨௩.

பிரம்மாவுக்கு நான்கு முகங்கள். நான்கு கைகள். இனிய மங்களகரமான பார்வையுள்ளவர். இரத்தினங் களிழைக்கப்பெற்ற குண்டலங்களை யணிந்தவர். பூணூல் அணிந்திருப்பார். நீண்ட தாடியையுடையவர். மான்தோல் தரித்திருப்பார். சிறிது மஞ்சள் கலந்த வெண்மை நிறமான வர். தூய வெளுப்பான ஆடையுடுத்தியிருப்பார். வலதுகையில்

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌵𑌰𑌦𑌂𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑌦𑌨𑍍𑌯𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤[1]𑌯𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌧𑌰𑌂 𑌵𑌾𑌮𑌂 𑌤𑌦𑌨𑍍𑌯𑌂 𑌸𑌵𑍍𑌯𑌕𑌂 𑌶𑍁𑌭𑌾 ॥ ௧௨௪ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍋 𑌵𑍇𑌦𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌧𑌾𑌰𑌤𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌵𑌾𑌮𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍁 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑍍 ॥

𑌆𑌜𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌲𑍀𑌂 𑌪𑍁𑌰𑍋𑌭𑌾𑌗𑍇 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂𑌶𑍍𑌚 𑌸𑌙𑍍𑌘𑌤𑌃 ।
𑌹𑌂𑌸𑌾𑌰𑍂𑌢𑌂 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍇𑌵 𑌕𑍍𑌵𑌚𑌿𑌚𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌮𑍍 ॥ ௧௨௫ ॥

𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

𑌅𑌥 𑌕𑍁𑌮𑌾𑌰𑌃:—

𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌶𑌿𑌖𑌿𑌪𑍍𑌰𑌵𑌰𑌵𑌾𑌹𑌨𑌮𑍍 ॥ ௧௨௭ ॥
𑌤𑌰𑍁𑌣𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑌂 𑌬𑌾𑌲𑌭𑍂𑌷𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑍀𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌕𑍇𑌵𑌾𑌪𑌿 𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌦𑍍𑌯𑌥𑌾 ॥ ௧௨௮

வரத முத்திரையுடனிருப்பர். மற்றொரு கையில் சுபமான முத்திரையைத் தரித்திருப்பர். இடது கையில் கமண்டலம் தரித்திருப்பர். அவ்வாறே மற்றொரு (வலது) கையில் அக்கியை வைத்திருப்பர். நான்கு வேதங்களையும் தாங்கியவாறிருப்பர். இவருக்கெதிரில் இடதுபுறம் ஸாவித்ரியும், வலது புறம் ஸரஸ்வதியும் அமர்ந்திருப்பர். எதிரில் ஆஜ்ய ஸ்தாலியை (ஹோமத்திற்கான நெய்யை வைத்துக்கொள்வதற்கான பாத்திரம்) அமைக்கவேண்டும். இவருக்கு நாற்புறமும் மகரிஷிகள் சூழ்ந்திருப்பர். சில இடங்களில் ஹம்ஸத்தின் மேல் (அன்னப் பறவையின் மேல்) ஏறியவாறும், சில விடங்களில் தாமரை மலரில் அமர்ந்தவாறும், இவரை வரையலாம். எல்லாவுலகங்களையும் தோற்றுவிப்பவராகிய பிரம்மாவை இவ்வாறு அமைக்கவேண்டும்.

குமரன் (முருகன்)—௱௨௭—௱௨௯.

குமாரக் கடவுள் ஆறுமுகங்களுள்ளவர். சிறந்த மயில் தான் இவருக்கு வாஹநம் (சுமந்து செல்வது). இளஞ் சூரியனைப் போன்ற நிறமுள்ளவர், சிறுவர்களுக்கேற்ற அணிகளை யணிந்தவர். இவ்வாறாக ஆறுமுகனை வரைய வேண்டும். ஒரு பட்டினத்தில் அல்லது சிறு கிராமத்தில்

---

(1) "𑌧𑌾𑌰𑌿𑌣𑌂" என்றும் பாடம்

ஷண்முகோ த்வாதஶகரைர்யுக்த: கர்வடே து சதுர்புஜ: ।
க்ராமே வநே த்விபாஹு: ஸ்யாத் ஸ்தாபநீயோ விசக்ஷணை: ॥

அத நாகா: :—

நாகாநாம் வக்ஷ்யதே ரூபம் நாபேரூர்த்வம் நராக்ருதி: ।
ஸர்ப்பாகாரமதோபாகம் ஶிரஸ்தே போகமண்டலம் ॥ ௧௩௰ ॥
ஏகம் பணம் த்ரயம் வாபி பஞ்ச வா ஸப்த வா நவ
த்விஜிஹ்வாஸ்தே விதாதவ்யா: கட்க(1)கேடக தாரிண: ॥

அதாஸுரா: :—

கிரீடகுண்டலோபேதா: தீக்ஷ்ணதம்ஷ்ட்ரா பயாநகா: ।
நாநாஶஸ்த்ரதரா: ஶூரா: தைத்யா: ஸுரகணத்விஷ: ॥

முருகனை வரையும்போது பன்னிரண்டு கைகளுள்ளவராக வரையவேண்டும். மலையின் அடிவாரத்திலுள்ள சிற்றூரில் நான்கு கைகளுள்ளவராகவும், கிராமத்திலும் காட்டிலும் இரண்டு கைகளுள்ளவராகவும் அறிவாளிகள் இவரை வரைவர்.

நாகம் (பாம்பு)—௱௩௰—௧௩௧.

நாகங்களின் வடிவம் கூறப்படுகிறது. இவர்களது வடிவம் நாபிக்கு (கொப்பூழுக்கு) மேல் மனித வடிவமாயிருக்கும். கீழ்ப்புறம் பாம்பு வடிவமாயமையும், தலையில் பாம்பின் உடல் வட்டவடிவமாய்க் காணப்படும். ஒரு படம் உள்ளதாக அமைக்கலாம். அல்லது மூன்று, ஐந்து, எழு, ஒன்பது படங்களுள்ளதாகவும் அமைக்கலாம். இந்த நாகங்களின் நாக்கு இரண்டு பிளவுள்ளதாக அமைக்கப்பட வேண்டும். இரண்டு கைகள் உள்ளவர்கள். வாள், கேடயம் இவற்றை அக் கைகளில் தரித்திருப்பர்.

அசுரர்கள்—௱௩௨

அசுரர்களுக்குத் தலையில் அழகிய கிரீடமும், காதுகளில் குண்டலங்களும் இருக்கும். கூர்மையான பற்கள் உள்ளவர்கள், பயங்கரமானவர்கள், பலவிதமான கத்தி முதலிய ஆயுதங்களைத் தரித்திருப்பர். "திதி" யின் பிள்ளைகளான இவர்கள் தேவர் கூட்டங்களுக்குப் பகைவர்கள்.

---

(1) “கட்ககேடா:” என்றும் பாடம்.

அத² தா³நவா:—

தா³நவா விக்ருதாகாரா ப்⁴ருகுடீகுடிலாநநா: ।
கிரீடேந ச குப்³ஜேந பூ⁴ஷிதா: ஶஸ்த்ரபாணய: ॥ ௯௩ ॥
த³ம்ஷ்ட்ராகராலவத³நா ப்⁴ருகுடீகுடிலேக்ஷணா: ।
நாநாரூபா மஹாகாயா நாநாஶஸ்த்ரத⁴ராஸ்ததா² ॥ ௯௪ ॥

அத² பிஶாசா:—

உத்³வ்ருத்தக்ருஶகாயாஸ்து வாராஸ்த்யாயாமவிக்³ரஹா: ।
ஹ்ரஸ்வ¹கேஶாஶ்சலச்சா²ஸ்த்ரா: பிஶாசா ஶ்சித்ரகர்மணி ॥

தானவர்கள்—௯௩-௯௪.

தானவர்கள் விகாரமான தோற்றமுள்ளவர்கள். புருவங்களை நெறிப்பதனல் கோணலான முகமுள்ளவர்கள். சிறிது வளைந்த (கோணலான) கிரீடத்தை அணிந்திருப்பர். கைகளில் ஆயுதந்தாங்கியிருப்பர். பெரிய பற்களால் பயங்கரமான முகமுள்ளவர்கள். புருவங்களை நெறிப்பதனல் கோணலான பார்வை (கண்கள்) உள்ளவர்கள். பலவிதமான வடிவங்களுள்ளவர்கள். மலைபோன்ற பெரிய உடம்புள்ளவர்கள். பலவகையான ஆயுதங்களையும் கைகளில் தரித்திருப்பர்.

பிசாசுகள்—௯௫.

பிசாசங்களுக்கு மிகவும் மெலிந்திருக்கும் உடம்பு. கணுக்கள் எல்லாம் (முழங்கை முழங்கால் முதலியன) உயர்ந்து, தூக்கிக்கொண்டிருக்கும். எலும்புகளும், நரம்புகளும் படிந்திருக்காது. தளர்ந்து அசைந்து கொண்டிருக்கும். அதனல் உடலும், அசைவின்றி நிலைத்து நிற்காது. தலைமயிர்கள் மிகவும் குறுகியனவாகவும் சிதறியும் கிடக்கும். இவ்வாறு பிசாசங்களைச் சித்திரத்தில் வரையவேண்டும்.

---

(1) "கண்டு" என்றும் பாடம்.

अथ वेतालाः :—

पिशाचवच्च वेतालाः दीर्घदेहाः कृशोदराः ।
[illegible] ॥

अथ ग्रहाः :—

रक्तवर्णो महातेजा द्विबाहुः पद्मधृग्रविः ।
सप्ताश्वे सर्परशने युक्ते स्वर्णरज्जुसमन्विते ॥ ११७
एकचक्रे रथे तिष्ठन् पादाग्राब्जसरोरुहः ।
रत्नकुण्डलवानेषः पद्मरागकिरीटकः ॥ ११८ ॥
रक्ताम्बरधरो रम्यः सुव्यक्ताङ्गो मनोहरः ।
अनूरुः सारथिस्तस्य प्रतीहारौ च पार्श्वयोः

வேதாளங்கள்—௱௧௬.

இவ்வாறாகவே (பிசாசுகளைப் போலவே) வேதாளங்களையும் வரையவேண்டும். இவற்றின் உடல் நீண்டது. வயிறு மெல்லியதாக இருக்கும். கன்னங்கள் இருக்காது. ? (இங்கு மூலத்தின் கருத்து விளங்கவில்லை) அறிவாளிகள் இவ்வாறாக வேதாளங்களை வரையவேண்டும்.

நவக்கிரகங்கள்—௱௧௭-௱௩௧.

நவக்கிரகங்களுள் சூரியன் முதன்மையானவன். இவன் சிவப்பு நிறமுள்ளவன். பெரிய சோதி வடிவமானவன். இரண்டு கைகளுள்ளவன். தாமரை மலரைத் தரித்திருப்பன். ஏழு குதிரைகள் பூட்டியதும், ஒரே சக்கரமுள்ளதும், பாம்புகளையே கயிறாக உடையதுமான அழகிய தேரில் நின்று கொண்டிருப்பான். இவனுடைய காலின்கீழ் தாமரைமலர் இருக்கும். அதன்மேல் நின்றவாறிருப்பான். இரத்தினங்களிழைத்த குண்டலங்களுடையவன். பத்மராக கற்கள் இழைக்கப்பெற்ற கிரீட முடையவன். சிவப்பான ஆடையுடுத்தவன். அழகியவன். உடம்பின் உறுப்புக்கள் தெளிவாகத் தெரியுமாறு இருப்பான். மனதைக்கவரும் தோற்றமுள்ளவன். இவனுடைய தேரில் இருக்கும் ஸாரதிக்குத் தொடைகள் கிடையாது. சூரியனுக்கு இரண்டு புறங்களிலும் வாயில் காப்போர் இருவரிருப்பர். இவர்களுக்கு

சண்டபிங்கலநாமானௌ க²ட்³க³கே²டகதா⁴ரிணௌ ।
சந்த்³ர: ஶ்வேதோ விதா⁴தவ்ய: ஶ்வேதாம்ப³ரத⁴ரோऽவ்யய: ॥ ௧௪௯ ॥

த³ஶஶ்வேதஹயாயுக்தே ரதே²ऽஸௌ ஸ்யந்த³னே ஶுபே⁴ ।
த்³விபு⁴ஜோ த³க்ஷிணே பாணௌ க³தா³ம் பி³ப்⁴ரச்ச மத்⁴யப்ருது²ம் ॥

வாமஹஸ்தே வரதோ³ ஹஸ்த: ஶஶாங்கஸ்ய ப்ரகீர்த்யதே ।
த⁴ராபுத்ரஸ்ய வக்ஷ்யாமி லக்ஷணம் சித்ரகர்மணி ॥ ௧௫௦ ॥

சதுர்பு⁴ஜோ மேஷக³ஶ்ச ஜ்வாலாங்காரகஸமத்³யுதி: ।
த³க்ஷிணே (1)புஸ்தகம் ஶக்திம் வரத³ம் பரிகல்பயேத் ॥ ௧௫௧ ॥

ஊர்த்⁴வம் ஶக்திஸமாயுக்தம் வாமே கே²டக³தா³யுதம் ।
ஸிம்ஹாரூட⁴ம் ஸௌம்யவக்த்ரம் கர்ணிகாரஸமப்ரப⁴ம் ॥

முறையே "சண்டன்" "பிங்களன்" என்று பெயர். இவர்கள் கத்தியும் கேடயமும் தரித்திருப்பர்.

சந்திரன் வெண்மையான ஆடையுடுத்தவனாகச் சித்திரத்தில் வரையப்பட வேண்டும். வெண்மையான பத்து குதிரைகள் பூட்டிய மங்களகரமான தேரில் ஏறிச்செல்பவன். இரண்டு கைகளுடையவன். வலது கையில் ஒரு கதையைப் பிடித்திருப்பான். அந்தக் கதையின் நடுப்பகுதி பருத்திருக்கும். இந்தச் சந்திரனுடைய இடதுகை வரதான முத்திரையுடன் கூடியதாயிருக்கும்.

பூமியின் மகனாகிய அங்காரகனுடைய அங்க அடையாளங்களை இனி விளக்குவாம். சித்திரங்களில் வரையும் பொழுது இவனை அடியில்கண்டவாறு எழுதவேண்டும். இவனுக்கு நான்கு கைகள். ஆடுதான் வாகனம். அதன்மேல் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்வான். தழல் போன்ற ஒளியுள்ளவன். வலதுகை இரண்டிலும் புத்தகமும், சக்தியும் தரித்திருப்பான். அதிலும் கீழ்க்கையில் புத்தகமும் வரதான முத்திரையும். மேல் கையில் சக்தி, இடதுபுறம் இரண்டு கைகளில் முறையே வெள்ளியும் கதையும் அல்லது வெண்மையான கதையைத் தரித்திருப்பான்.

இனி புதனைக் கூறுவோம். இவன் சிங்கத்தின்மேல் ஏறியிருப்பவன். கர்ணிகார மலர்போன்ற நிறமுள்ளவன்.

---

(1) "பாஶகம்" "க²ட்³க³ம்" என்றும் பாடங்களுண்டு.

பீதமால்யாம்பரதரம் ஸ்வர்ணபூஷாவிபூஷிதம் ।
வரதம் கட்கஸம்யுக்தம் கேடகேந ஸமந்விதம் ॥ ௧௨௫ ॥

கதயா ச ஸமாயுக்தம் விந்யஸேத் ஸோமநந்தநம் ।
ஏவம் சந்த்ரஸுதம் ஸௌம்யம் க்ரஹவரிஷ்டம் ஸதா ॥

ததோ தேவகுருர்லேக்ய: ஶாஸ்த்ரஜ்ஞ ஆங்கிரஸநந்தந: ।
சதுர்பிர்பாஹுபிர்யுக்த: சித்ரகர்மவிஶாரதை: ॥

வரதௌ ஸாக்ஷஸூத்ரௌ ச தக்ஷிணாப்யாம் ததா ।
தண்டிநௌ ச கமண்டலும் பிப்ராணோ வாமஹஸ்தயோ: ॥

ஶௌரிர் நீலஶரீராபோ க்ருத்ராரூடம் சதுர்புஜம் ।
வரதம் வாணஸம்யுக்தம் சாபஶூலயுதம் ஶிவம் ॥ ௧௨௬ ॥

மஞ்சள் நிறமான மலர்மாலை, ஆடை இவற்றைத் தரித்தவன். பொன்மயமான அணிகள் அணிந்தவன். இவனுக்குக் கைகள் நான்கு. அவற்றில் முறையே (வலதுபுறம்) வரத முத்திரையும், வாளும், இடதுபுறம் முறையே கேடயமும், கதையும் தரித்தவன். இவ்வாறாக சந்திரனுடைய குமாரனும், க்ரஹங்களுள் சிறந்தவனுமாகிய புதனை வரைய வேண்டும்.

பிறகு தேவகுரு (பிருகஸ்பதியை) வை எழுதவேண்டும். இவருக்குக் கைகள் நான்கு. வலது புறம் இருகைகளால் முறையே வரதான முத்திரையும் அக்ஷமாலையும், இடது புறம் இரண்டு கைகளில் முறையே தண்டமும் (தடி) கமண்டலமும், தரித்தவராகச் சித்திரம் வரைவதில் தேர்ந்தவர்கள் இவரை எழுதவேண்டும்.

பிருஹஸ்பதிக்குச் சொல்லியபடியே பிருகுமகரிஷியின் புதல்வரான சுக்ராச்சாரியருக்கும் அங்க அடையாளங்கள் வரையப்பட வேண்டும்.

சனி பகவான் கருப்பான நிறமுள்ளவர். கழுகு மேல் ஏறினவர். இவருக்கும் நான்கு கைகளுண்டு. வலதுபுறம் இருகைகளால் முறையே வரதான முத்திரையும் செல்வமும் ([illegible] புரம்பும்) தரித்திருப்பர். இடது புறம் இருகைகளால் வில், சூலம் இவற்றைத் தரித்திருப்பர்.

ஸிம்ஹாஸநகதம் ராஹும் கராலவதநம் விபும் ।
வரதம் வஜ்ரஸம்யுக்தம் வேடஶூலயுதம் க்ரமாத் ॥ கரு ॥

யஸ்மிந் த்விபாஸநவ ஸவேஷு வாஹநஸ்ய ஹஸ்தயோ: ।
ஶூர்யவ்ருக்ஷஸமா நித்யா வேதநீயஸ்து கேதவ: ॥ கருக ॥

ததா :—

வ்ராஹாதிதிஸமாஸவ்யோ:
ஸமீபாநாவாயஹாகயா: க்ரமேண வ்யா: ।
ஶூத்ரயாதி ஷஷ்ட்யஷ்ட
யாணிஜ ஶாதிகேதவ: வாஶ்யா: ॥ கருஉ ॥

இராகு, சிங்காதனத்தில் அமர்ந்தவாறு பயங்கரமான முகத்துடன் வரையப்படவேண்டும். இவருக்கும் நான்கு கைகளுண்டு. வலதுபுறம் இருகைகளில் முறையே வரதான முத்திரையும் கத்தியும், இடது புறம் முறையே கேடயமும் சூலமும் தரித்திருப்பர்.

கேது பல வடிவங்களாக விருக்கும். அவர்கள் எல்லோரும் தூம்ர (செம்பட்டை) நிறமுள்ளவர்கள். இரண்டு கைகளுள்ளவர்கள். ஒருபுறம் வரதான முத்திரையும் மற்றொருபுறம் கதையும் தரித்திருப்பர். கழுகுப் பறவை யின்மேல் ஏறினவாறு இவர்கள் வரையப்பட வேண்டும்.

வேறு—கருஉ-கருரு.

நடுவில் சூரியன். அவனுடைய எட்டுத்திக்குகளிலும் மற்ற எட்டு கிரஹங்கள். கிழக்கில் சந்திரன், தெற்கில் வியாழன், மேற்கில் புதன், வடக்கில் சுக்கிரன், தென்கிழக்கில் செவ்வாய், தென்மேற்கில் சனி, வடமேற்கில் இராகு, வடகிழக்கில் கேது. இவ்வாறாக அமைத்துப் பூஜிக்க வேண்டும். இவர்களுடைய நிறங்கள் :— சந்திரனும் வியாழ

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௫௩ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧௫௪ ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

னும் வெண்மை நிறம். புதன் மஞ்சள் நிறம், சுக்கிரன் வெண்மை நிறம். செவ்வாய் சிவப்பு. சனி கருப்பு. இராகு தாம்ர வர்ணம். கேது கருப்பு. இவர்களெல்லோருக்கும் இரண்டு கைகள். இடது கையை இடது தொடையில் வைத்திருப்பார்கள். வலது கையில் அபயதான முத்திரையிருக்கும். இராகு, விகாரமான முகத்துடனும் கைகூப்பியவாறும் இருப்பர். சனி பகவானுடைய முகம் பெரிய பற்களுள்ளதும் அதனாலேயே பயங்கரமுமாயிருக்கும். இவர் பொன்னிறமான ஆடையாபரணங்களை யணிந்திருப்பர்.

இவர்கள் நடுவில் சூரியன் காணப்படுவான். அவன் செந்தாமரை மலரில் அமர்ந்திருப்பான். மூன்று கண்களுள்ளவன். சிவப்பானவன். செந்தாமரை மலர்களிரண்டை இருகைகளிலும் தரித்திருப்பான். மற்றுயிரு கைகளில் அபய முத்திரையும் வரதான முத்திரையும் தரித்திருப்பான். சோதிவடிவமான பிம்பமுள்ளவன். எண்ணற்ற அணிகளணிந்தவன். இவ்வாறான சூரியன் உங்களைக் காப்பாற்றட்டும்.

𑌅𑌥 𑌗𑍃𑌧𑍍𑌰𑌾𑌃:—

𑌗𑍃𑌧𑍍𑌰𑌾𑌃 𑌕𑌿𑌰𑍀𑌟𑌿𑌨𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌨𑌵𑌤𑌾𑌲𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌕𑌾𑌃 ।
𑌰𑌤𑍍𑌨𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌕𑍇𑌯𑍂𑌰 𑌹𑌾𑌰𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃 ॥ ௧௫௮ ॥

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌂
𑌨𑌾𑌮 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

கழுகுகள்—௧௫௮.

கழுகுகள் கிரீட முள்ளவாறு வரையப்படவேண்டும். "நவதாளம்" என்று மளவில் இரத்தினங்களிழைத்த கடுக்கன் (காதணி) தோள்வளை முத்து மாலைகள் முதலான அணிகளுடன் விளங்குமாறு இவற்றை அமைக்க வேண்டும்.

சில்பரத்தினத்தில் இரண்டாம்பாகத்தில் தியானத்தொடர்பில்
இருபத்தைந்தாம்
அத்தியாயம் முற்றும்.

ஶ்ரீ:

अथ षड्विंशोऽध्यायः

अथ बिम्बदोषाः

மாம்ஸவர்ணா நகாஶ்சைவ பத்மதாம்ரநிபாஸ்ததா ।
ஸம்பூர்ணா: ப்ரதிமா யத்ர தத்ரஸ்தா: ஸுகினோ நரா: ॥ ௧ ॥

ஶ்வேதைர் நகைஸ்து து:கித்வம்
ஶூலாக்ரை: ஸ்படிகாபைஶ்ச ।
ஹரித்வர்ண ஸமாயுக்தை
தாரித்ர்யம் ஜாயதே நகை: ॥ ௨ ॥

(அங்குல்ய:) உந்நதாக்ராங்குலீஷு ஸ்யாத் ஸர்வதா ஸுகதா ।
பாதாங்குஷ்டம் அதிக்ரம்ய ப்ரதேஶினீ தீர்க்கா யதி ॥ ௩ ॥

இருபத்தாறுவது அத்தியாயம்

பிம்பங்களின் குற்றங்கள்.

நகங்களின் இலக்கணம்—௧-௨.

மாமிசம் போன்ற நிறமுள்ள நகங்கள் சிறந்தவை. அவ்வாறே (செந்)தாமரை மலர், செம்பு இவைபோன்ற நிறமுள்ளனவும் சிறந்தவையே. விக்கிரகங்களுக்கு நகங்கள் இவ்வாறே அமைக்கப்படவேண்டும். அதுபோன்ற பிம்பங்களுள்ள இடத்தில் வாழ்கின்ற ஜனங்கள் சுகமுள்ளவர்களாயிருப்பார்கள்.

வெண்மையான நகங்களால் துக்கமடைவார்கள். சூலத்தின் முனைபோன்றதும், ஸ்படிகம் போன்றதும், பச்சை நிறமுள்ளதுமான நகங்களால் வறுமை மிகும்.

விரல்களின் இலக்கணம்—௩-௪.

விரல்களின் நுனி உயர்ந்திருக்குமாயின் எப்பொழுதும் சுகமுண்டாகும். கால் கட்டைவிரலைக் கடந்து அதற்கடுத்த (பக்கத்து) விரல் நீண்டதாக இருப்பின், அத்

𑌏𑌮𑍇𑌕 𑌕𑍃𑌤𑍇𑌶𑌸𑍍𑌯𑌾 𑌨𑌾𑌰𑍀𑌮𑍋𑌦 𑌉𑌨𑍍𑌨𑌤𑍇𑌃 ।
𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌤𑍍𑌤𑌕𑌰𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫ ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌃 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾𑌃 𑌶𑌸𑍍𑌤𑌾 𑌵𑌿𑌰𑌲𑌾 𑌦𑍁𑌃𑌖𑌦𑌾𑌯𑌿𑌨𑌃 ।
𑌸𑌸𑍍𑌵𑍇𑌦𑍇𑌨 𑌰𑍂𑌕𑍍𑌷𑍇𑌣 𑌰𑌕𑍍𑌤𑍇𑌨 [1]𑌪𑌾𑌣𑍍𑌡𑍇𑌨 𑌪𑌾𑌰𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌵 ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑍀 𑌶𑌿𑌰𑌾𑌵𑌿𑌰𑌹𑌿𑌤𑍇𑌨 𑌤𑌥𑌾 ।
𑌶𑌾𑌂𑌸𑌮𑍇𑌨 𑌮𑍃𑌦𑍁𑌪𑌾𑌦𑍇𑌨 𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑍁𑌵𑍃𑌷𑍍𑌠𑍇𑌶𑌾𑌵𑌲𑌿 ॥ ௬ ॥

𑌸𑍍𑌵𑍇𑌦𑌂 𑌪𑌾𑌰𑍇𑌣 𑌯𑌸𑍍𑌯
𑌤𑌤𑍍𑌸𑍍𑌯𑌾 𑌰𑌾𑌜𑌵𑌲𑍍𑌲𑌭𑌾𑌃 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌤 𑌶𑍁𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑍇𑌶
𑌸𑍍𑌵𑍇𑌦𑍇𑌨 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌾𑌨𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௭ ॥

தேசத்திலுள்ளவர்கள் சிறந்த சிற்றின்பத்தை யனுபவிப்பார்கள். சுண்டுவிரல் நீளமாகவிருந்தால் பணம் ஏராளமாயிருக்கும்.

பாதங்களின் இலக்கணம்—௫-அ.

விரல்கள் கோணலாகவும் (வளைந்தும்), வெண்மையாகவும், இடைவெளியுடனும் இருந்தால் துன்பத்தை யடைவார்கள். பாதங்கள் வேர்வையில்லாதனவாகவும், மென்மையாகவும், சிவந்தனவாகவும், அழகிய இதழ்களுடன் கூடிய மலர்கள் போன்றவையாகவும், விரல்கள் இடைவெளியில்லாமல் சேர்ந்திருக்கப் பெற்றவையாகவும், அழகிய குதிகால் அமையப்பெற்றவையாகவும், நரம்புகள் மேலே தூக்கிக்கொண்டிருக்கப் பெறுதனவாகவும், சதைப்பற்றுள்ளனவாகவும், கணுக்கால் (முட்டுகள்) மறைந்திருக்கப் பெற்றனவாகவும், ஆமையின் முதுகுபோன்ற அமைப்புள்ளனவுமாக இருக்குமாயின் அவர்கள் அரசனிடம் செல்வாக்கு மிகுந்தவர்களாவார்கள். முன்புறம் விரிந்தனவாகவும், முறம்போன்றனவாகவும், வியர்வையுடன் கூடியனவாகவும், குறுகியனவாகவும், வெண்மையாகவும், மயிர்கள் அதிகமுள்ளனவாகவும், எவருடைய பாதங்கள் இருக்கின்றனவோ அவர்கள் துன்பத்தை அடைவார்கள்.

---

(1) "𑌪𑌾𑌣𑍍𑌡𑍇 𑌪𑌾𑌰𑍁𑌷𑍍𑌯𑌦𑍇 𑌐𑌵" என்றிருத்தல் நன்று.

ரேகா²பி⁴ர்வா ஹலேநைவ யஸ்ய தத்ர து³:க²பா⁴கி³ந: ।
தீ³ர்க⁴பாத³தலே ரேகா² ஹலாங்குஶநிபா⁴ யதி³ ॥ ௯ ॥

ஸார்வபௌ⁴மோ ப⁴வேத³ஸ்ய க்ஷிதௌ நாத்ர ஸம்ஶய: ।
க்ரமாத்³வ்ருʼத்தே ப்ரஶஸ்தே ச ஜங்கே⁴ ஸ்நிக்³தே⁴ விரோமகே ॥

ஸிம்ஹவ்யாக்⁴ரவதே³ ஜங்கே⁴ ப⁴வந்தி த⁴நிநாம் ஸதா³ ।
காகஜங்கோ⁴ ம்ருʼகே³ந்த்³ராக்ஷோ ம்ருʼக³ஜங்கோ⁴ऽபி பார்தி²வ: ॥ ௧௦ ॥

ஜங்கே⁴ ச மீநவத்³யஸ்ய ஸோऽபி ஸ்யாத் ஸார்வபௌ⁴மக: ।
ஸ்தூ²லஜங்கா⁴ தீ³ர்க⁴ஜங்கா⁴ ஜாயந்தே பதி²கா: ஸதா³ ॥ ௧௧ ॥

ஶ்ருʼகா³லஶூகரஜங்கா⁴ யே தே நரா து³:க²பா⁴கி³ந: ।
உக்தம் ச பி³ம்பே³ ஸமீக்ஷ்யம்,

நீண்ட பாதத்தினுடைய கீழ்ப்புறத்தில் கலப்பை போலும், அங்குசம்போலும், ரேகை ஒருவருக்கிருக்குமாயின் அவர் சக்கரவர்த்தியாவார். இதில் சந்தேகமில்லை.

ஜங்கை (கெண்டைக்கால்) இலக்கணம்—௯-௧௨.

கணைக்கால், முழங்கால் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள காலின் பகுதி (கெண்டைக்கால்) "ஜங்கா" எனப்படும். இது படிப்படியாக எல்லா இடத்திலும் (கீழிருந்து மேல் வரை) வட்டவடிவமாகவே இருப்பது சிறந்தது. அவ்வாறே வழுவழுப்பாகவும், மயிர்கள் இல்லாமலும் இவை அமைவது உத்தம லக்ஷணமாகும்.

செல்வந்தர்களுடைய ஜங்கைகள் சிங்கம், புலி இவற்றினுடைய ஜங்கைகள் போலிருக்கும். காகத்தினுடையது போன்ற ஜங்கையையுடையவனும், மிருகத்தினுடைய (மானுடைய)து போன்ற ஜங்கையையுடையவனும் அரசன் ஆவான். மீனுடைய (கெண்டையினுடைய) வடிவம்போல் எவனுக்கு ஜங்கைகள் அமைகின்றனவோ, அவனும் சக்கரவர்த்தியாவான். பருத்ததும் நீண்டதுமான ஜங்கை அமையப்பெற்றவர்கள் எப்பொழுதும் வழி நடப்பார்கள்.

குள்ளநரி, பன்றி இவைகளுடையதுபோன்ற ஜங்கைகள் எவருக்கிருக்கின்றனவோ அவர்கள் துன்பப்படுவர். இவ்வாறு ஜங்கைகளுக்குக் கூறப்பட்ட லக்ஷணங்கள் யாவும் பிம்பங்களில் நன்றிக் கவனிக்கப்படவேண்டும்.

ததா வ்ருத்தே ச ஜாநுநீ ॥ ௧௨ ॥

மாம்ஸலே ச ஸமே ஶப்தவர்ஜிதே நிகூடாஸ்தீநீ ।
கிஞ்சிதுந்நததாம் ப்ராப்தே ஸர்வகாமஸம்ருத்தயே ॥ ௧௩ ॥

ஊரூ து கரிகராகாரௌ
    ரோமஹீநௌ ஶிராவர்ஜிதௌ ।
ஸம்ஶ்லிஷ்டௌ நிபிடௌ நாதி-
    ஸ்தூலௌ நாதிக்ருஶௌ வரௌ ॥ ௧௪ ॥

ஸ்பிக்ஸ்தாநம் மாம்ஸலம் ஸ்நிக்தம் வ்யாக்ரபேகஸமம் பவேத் ।
ததேவ து:கதம் ஜ்ஞேயம் ஶுஷ்கம் சேந்நாத்ர ஸம்ஶய: ॥ ௧௫

முழங்கால் (முட்டு) களின் இலக்கணம்— கங.

முழங்கால் முட்டுகள் வட்டவடிவமாக இருக்கவேண்டும். மேலும் சதைப்பற்றுள்ளனவாகவும், சமானமாகவும் (ஏற்றத்தாழ்வில்லாமலும்) சப்தம் இல்லாதனவாகவும், எலும்புகள் நன்றாக மறைந்தவாறும் சிறிது உயர்ந்தவாறும் உள்ளனவுமாகிய முழங்கால்கள் எல்லாவிதமான மங்களங்களையும் கொடுக்கவல்லவை.

துடைகள் யானையின் துதிக்கைபோல் இருப்பது உத்தமம் (ஆரம்பத்தில் பருத்தும், படிப்படியாகச் சிறிதாகிக்கொண்டும் வருபவை). மயிர்கள் இல்லாமலிருக்க வேண்டும். ஏற்றக்குறைவில்லாமல் அழகாக அமைந்திருக்க வேண்டும். இடைவெளியின்றி அடர்ந்திருக்கவேண்டும் (நெருங்கியிருக்கவேண்டும்). அதிக பருமனும் கூடாது. அதிகமாக மெல்லியதாக இருத்தலும் நன்றன்று. இவ்வாறான துடைகள் சிறந்தவை. (கச)

'ஸ்பிக்" என்பது முதுகெலும்பின் முடியுமிடம். பின்புறத்தில் ஆசனத் துவாரத்தின் சமீபத்தில் இருபுறங்களிலும் வட்டவடிவமாகவுள்ள இடம். இது சதைப்பற்றுள்ளதாகவும், புலி, தவளை இவற்றினுடையதுபோலும் இருந்தால் சுகத்தைக் கொடுக்கும். சதைப்பற்று இல்லாமல் வறண்டிருந்தால் துன்பத்தைக் கொடுக்கும். இதில் சந்தேகமில்லை. (கரு)

ந்ருபதிஸ்ஸிம்ஹகடிஸ் ஸ்யாச் ச்வகடிஸ் ஸுதா ।
காமீவம் ஸ்யாச் கோலகடே: + + + + + । கசு ॥

கர்கடோஷ்ட்ரகடி ஸ்தப்த ஶ்வகடிகம் ¹ஸுதாபஹம் ।
மேட்ரம் ப்ரஶஸ்தம் ஹ்ரஸ்வம் ஸ்தூலம் ஸுதார்த்தநாஶக்ருத் ॥

ஸுதவ்ருத்திகரம் ஜ்ஞேய மேதத் தக்ஷிணோந்நதம் ।
மணீ ப்ரோக்தே ஸ்ப்ருஷ்டே ப்ரஸ்ராவ தத்ராநநே ॥ கஎ ॥

உந்நதௌ வலிநௌ ஶ்ரீஸ்த்ரீ ரத்நப்ரதௌ விஶேஷக: ।
ஸம்ஸ்ப்ருஷ்டே வஸ்திஸ்ஸ்யாச் சாஷ்ணோ ப்ரதாயிநௌ ॥ கஅ

இடையின் இலக்கணம்—கசு.

சிங்கத்தின் இடைபோன்ற இடை ஒருவனுக்கு அமைந்தால் அவன் அரசனுவான். பன்றியினுடையதுபோன்ற இடை இருந்தால் காமி (சிற்றின்பவேட்கை மிகுந்தவனுக) யாக இருப்பான் + + + + + .

குறிப்பு:—இங்கு மூலம் சிதைந்துள்ளமையின் பொருளிலும் குறைபாடு உளது.

நண்டு, ஒட்டகம் இவைகளுடையதுபோன்ற இடையுள்ளவனும் அவ்வாறே. நாயினுடையதுபோன்ற இடை இருப்பின் மக்கட்பேறு இருக்காது.

ஆண்குறியின் இலக்கணம்—கஎ.

ஆண்குறி நீளமாக இராமல் குறுகியிருப்பது செல்வத்தைத் தரும். பருத்திருந்தால் மக்கட்பேறு, செல்வம் இவை அழியும். இது வலதுபுறம் உயர்ந்திருந்தால் மக்கட்பேறு விருத்தியாகும்.

மணிகளுடைய இலக்கணம்—கஅ.

மணி என்னும் சொல் ஆண்குறியின் முனையிலுள்ள இரு பிளவுகளைக் குறிக்கும். மணிகளிரண்டும் உயர்ந்தும் வழுவழுப்பாகவும் இருப்பின்; பணம், நல்ல பெண்டிர், இரத்தினங்கள் இவற்றைத் தரும். நடுவில் பள்ளமாக

---

(1) "ஸுதாவஹம்" என்றும் பாடமுண்டு. மக்கட்பேறு உண்டாகும் என்பது இதன் பொருள். மற்ற நூல்களைக் கண்டு தெளிக.

मणौ च मध्यनिम्नाभे दारिद्र्यं संप्रजायते ।
मुष्कयो रक्तयोः श्यामे राजराजस्य सम्पदः ॥
समयोर्ह्रस्वयोर्दीर्घयोश्च मुष्कयोर्दीर्घजीविनः ।
धनदस्येव यदा मुष्क एकः स्यान्नराणां जलात् ॥ २१ ॥

वृत्तविस्तीर्णगम्भीरा नाभिः सर्वसुखप्रदा ।
विषमा विलग्नमध्यस्था नाभिर्दारिद्र्यकारिणी ॥ २२ ॥

दक्षिणावर्तनाभिः श्रेष्ठा वामावर्ता च कारिणी ।
लम्बोदरो भवेद्धन्यो बहुभोगः समोदरः ॥

(அமுங்கி) இருப்பின் வறுமை உண்டாகும். மத்தியத்திற்குச் சிறிது முன்புறத்தில் பள்ளமாக இருப்பின் அதிகமான வறுமை உண்டாகும். கொஞ்சம் சிவப்பாக இருந்தால் செல்வம் நிறைந்திருக்கும். வெண்மை நிறமாக இருந்தால் வறுமை உண்டாகும், மணி ஒளியிழந்து காணப்பட்டால் வறுமையுண்டாகும்.

முஷ்கங்களின் இலக்ஷணம்—௨௦-௨௧.

முஷ்கம் என்பது பீஜங்களைக் குறிக்கும் (அண்டங்கள்). இவை இரண்டும் சமமான அளவுள்ளவைகளாக இருப்பின் குபேரன்போல் செல்வம் மிக்கவனாவான். இவைகள் நீண்டிருந்தாலும், குறுகியிருப்பினும் நீண்ட ஆயுளுண்டாகும். ஒரே ஒரு முஷ்கம் (பீஜம்) இருப்பின், அவனுக்கு ஜலத்தினால் சாவு உண்டாகும்.

நாபியின் (கொப்பூழ்) இலக்ஷணம்—௨௨

வட்ட வடிவமானதும் அகன்றதும் ஆழமுள்ளதுமான கொப்பூழ் அமையுமானால் மிகுந்த சுகமுண்டாம். ஏற்றத் தாழ்வாகவும், வளியினுடைய மத்தியிலிருப்பதுபோன்றதுமான கொப்பூழ் வறுமையைக் கொடுக்கும். வலம்புரியாக இருந்தால் (ப்ரதக்ஷிணமாய்—வலஞ்சுழியாய்) நன்று. இடம்புரி (இடஞ்சுழி—அப்பிரதக்ஷிணம்) தீது.

வயிற்றின் இலக்ஷணம்—௨௩-௨௪

தொங்கும்படியான வயிற்றை யுடையவன் செல்வம் மிக்கவனாயிருப்பான். சமமான (வெளியில் எடுப்பாகத் தெரியாமலும், உள்ளே பள்ளமாக இல்லாமலும்) வயிற்றை

க்ருஶோதரே லகு: காமீ து:கபாகீ ப்ருஹதுதரே |
கடோதரே ஸதா நி:ஸ்வ: ததைவ விக்ருதோதரே ॥ ௨௪ ॥

ஸர்போதரே தரித்ர: ஸ்யாத் நிம்நோதரேऽபி ச |
ஏகவல்யா ஶஸ்த்ரம்ருத்யு: ஸ்த்ரீஜிதத்வம் வலித்வயே ॥ ௨௫ ॥

த்ரிவலி: ஸ்யாத் த்ரிவலீயுக்தே
புடம் சதுர்வலீயுதே |
ஸாமந்தோ ஜாயதே பார்ஶ்வே
த்ரியம் நாபௌ ச வக்ரகே ॥ ௨௬ ॥

யுடையவன் பற்பல சுகபோகங்களை அனுபவிப்பான். வயிறு இளைத்திருந்தால் (உள்ளடங்கியிருந்தால்) லகுவாக (இலேசாக) இருப்பான். சிற்றின்பவேட்கை யுள்ளவனாக இருப்பான். வயிறு பெரிதாகவிருப்பின் துன்பம் நிறைந்தவனுயிருப்பான். குடம், சட்டி இவைபோன்ற வயிறுடையவன் வறுமை மிக்கவனுயிருப்பான். விகாரமான (காண்பதற்கு அருவருப்பாயிருக்கும்) வயிறை யுடையவனும் அவ்வாறே ஆவான். பாம்புபோன்ற வயிறுள்ளவன் வறியனுயிருப்பான். பள்ளமான வயிறை யுடையவனும் அப்படியே.

வலி (வயிற்றிலுள்ள சதை மடிப்பு)களின் இலக்கணம்–௨௫, ௨௬

ஒரே ஒரு வலியிருந்தால் அவன் சஸ்திரத்தினுல் (வாளினுல்) வெட்டுண்டு இறந்துபோவான். இரண்டு வலிகள் இருக்குமாயின் அவன் பெண்களுக்கு வசப்பட்டிருப்பான். மூன்று வலிகள் இருக்குமாயின் சிறந்து விளங்குவான். ? நான்கு வலிகள் இருப்பின் புடமாகும். ([1] இங்கு பொருள் விளங்கவில்லை.)

---

(1) தொந்திமேலே அஞ்சு மடிப்பிருந்தால் இரக்கமுள்ளவனுவன். நாலு மடிப்பிருந்தால் பகையுண்டு. மூன்று மடிப்பானுல் அறிவுண்டு. இரண்டு மடிப்பானுல் வெற்றியுண்டு. ஒரு மடிப்பானுல் சுகபோசனமில்லை. ஒரு மடிப்பும் இல்லாதிருந்தால் அலைந்து திரிவான். ("சாமுத்திரிகா லக்ஷணம்"—சரஸ்வதி மஹால் சுவடி எண் 675).

ஸ்நிக்³த⁴ம் விஶாலம் உத்துங்க³ம் உரஶ்ச ராஜலக்ஷணம் ।
ஸிராலம் விஷமம் நிம்நம் வக்ஷஸ்து விபதா³ஸ்பத³ம் ॥ உஎ ॥

ஸமௌ சைவ சூசுகௌ ந்ருபா:
லம்பி³தௌ ப்ரேஷ்யதாம் க³தா: ।
அத்³ருஶ்யௌ தந்துநாஶாயௌ
விஷமௌ து³:க²தௌ³ ஸ்ம்ருதௌ ॥ உஅ ॥

உந்நதகக்ஷா: ஸோத்தமா த⁴நதா⁴ந்யவிபூஞ்ஜநா: ।
ஸமகக்ஷஸ்து தத்துல்யோ நிம்நோ நிம்நகக்ஷக: ॥ உகூ ॥

பார்ச்வங்க (இடையின் இருபுறங்)ளின் இலக்கணம்-உசு

சரிசமானமாக இடையின் இருபுறங்களும் அமைந்தால் செல்வமுந்தனுக இருப்பான். ஏற்றத்தாழ்வாகவும் கோண லாகவும் இருந்தால் வறுமை மிகுந்திருக்கும்.

மார்பின் இலக்கணம்—உஎ

வழவழப்பாகவும், அகன்றதாகவும், நிமிர்ந்ததாகவும் உள்ள மார்பு உடையவன் அரசனுவான். எலும்புகளும், நரம்புகளும் மேலே தெரியுமாறு மேடு பள்ளமானதும், நிமிர்ந்ததாக இராமல் அமுங்கியிருப்பதுமான மார்பு ஆபத்துக்களுக்குக் காரணமாகும்.

சூசுகங்களின் (சூசுகம்=முலைக்காம்பு) இலக்கணம்-உஅ

இவை யிரண்டும் சமபரிமாணமுள்ளவையாக இருப்பின் அரசனுவான். அவைகள் சிறிது நீண்டு தொங்குமானுல் பிறருக்கு ஏவல் புரிபவனுவான். காணப்படாமல் (இவை இருப்பது தெரியாமல் அவ்வளவு அமுங்கி) இருப்பின் தந்துநாசம் உண்டாகும் (மக்கட்பேறு அற்றுப் போகும்) இவை ஏற்றத்தாழ்வாக இருந்தால் துன்பத்தைத் தரும்.

அக்குள் (கக்ஷங்)களின் இலக்கணம்—உகூ

உயர்ந்திருக்கும் கக்ஷங்களை யுடையவர்கள் தனதானியங்கள் நிறைந்திருப்பர். உயர்வாகவோ, உள்ளடங்கியன வாகவோ இல்லாமல் சமமான கக்ஷங்களை யுடையவர்களும் அவ்வாறே யிருப்பார்கள். கக்ஷங்கள் அமுங்கியிருக்குமாயின் செல்வமற்றவனுவான். கக்ஷங்கள் ஏற்றத்தாழ்வாக இருந்தால் துன்பப்படுவான்.

தீர்கௌ விஷ்கம்பகௌ ஹ்ரஸ்வாஸ்ய ச, ப்ருஷ்டஸ்ய லக்ஷணம் ।
ஶ்லக்ஷ்ணம் மாம்ஸலம் ப்ருஷ்டம் த்வக்ஸம்ஸ்தம் ஸௌபாக்யதம் ॥ ௯௰ ॥

நிம்நகம் விபரீதமேதத் து:கதாரித்ர்யகாரணம் ।
உந்நதே ஜத்ருணீ போகம் தநதாந்யாதிஸம்பதம் ॥

நதே ச விஷமே நிம்நே
விஜ்ஞேயம் தநவர்ஜிதம் ।
ஸுஶ்லிஷ்டௌ விபுலாவம்ஸௌ
நிர்வலீகௌ ஸௌபாக்யதௌ ॥ ௯௨ ॥

பிருஷ்டத்தின் (பிருஷ்டம்=பின்புறம்) இலக்கணம்—௯௰

பிருஷ்டபாகம் (பின்புறம்) ஒன்றோடொன்று ஒட்டாமல், சதைப்பற்று உள்ளதாய், முதுகெலும்பு வெளியில் தெரியாதவாறு சதையில் அமுக்கப்பெற்றதாக இருப்பது சுபமானது. இதற்கு விபரீதமானது (மாறாக விருப்பது) இகழ்வானது. துன்பம் வறுமை இவற்றிற்குக் காரணமாகும்.

ஜத்ருக்களின் இலக்கணம்—௯௧

(ஜத்ருக்கள் = நெஞ்சுக்குழியின் இருபுறங்களிலிருந்தும் தோளை நோக்கி நீளமாகச் செல்லும் பருத்த இரண்டு எலும்புகள்–காரை எலும்புகள்). இவை உயர்ந்திருந்தால் தனதானியம், சுகபோகங்கள் எல்லாம் நிறைந்திருக்கும். அவைகள் அமுங்கியிருந்தாலும் அல்லது ஏற்றத்தாழ்வாக இருந்தாலும் வறுமையுண்டாகும்.

தோள்களின் இலக்கணம்—௯௨

தோள்களிரண்டும் நன்றாகப் பொருந்துமாறு அழகாக இணைக்கப்பெற்றவையும், விசாலமானவையும், சதை மடிப்பில்லாதவையுமானால் சுகத்தைத் தரும். மயிர்களுள்ளவையும், சதை மடிப்புகளுள்ளவையும், சதைப்பற்றில்லாதவையும் துன்பத்தைத் தரும்.

ரோமஶௌ ஸம(ஸ்தி) ஸம்யுக்தௌ
நிகூடாம்ஸௌ ச ஸுவ்ருத்தகௌ ।
பாஹூ கரிகராகாரௌ
வரா வாஜாநுலம்பிநௌ ॥ ௧௩ ॥

ம்ருது பலம் ஶ்லிஷ்டாங்குல்யயோ விவரீதௌ விவர்ஜிதௌ ।
லாக்ஷாருணம் பீவரஞ்ச தேஷ்வ நிம்நம் தேநமதி ॥ ௧௪ ॥

தலம் ஶஸ்தம் தேவ்யாதம் விபரீதம் விநாஶக்ருத் ।
உந்நதே தாநஶீலஸ்யம் ஶஸ்தே தாரித்ர்யதம் மதேத் ॥ ௧௫

விஷமே தலே தலஸ்ய பாபதம் வ்யாக்ரபாணிகம் ।
ஸஹஸ்ராம்ஶமயோ தீர்கா ஶ்ரீமதீ நரஸ்ய த: ॥ ௧௬ ॥

புயங்களின் இலக்கணம்—௧௩

யானையின் துதிக்கைபோன்றவையும், முழங்கால்கள் வரையில் தொங்குகிறவையுமான புயங்கள் சிறந்தவை. இவைகளினுடைய இணைப்புக்கள் வெளியில் தெரியாதவாறு மறைந்தும், நன்கு பொருந்துமாறு இழைந்தும் இருக்கவேண்டும். இதற்குமாறாக இருப்பவை இகழத் தக்கவை.

உள்ளங்கையின் இலக்கணம்—௧௪-௧௫

அரக்குபோல் சிவந்ததும், பருத்ததும், நடுவில் சிறிது அழுங்கியதுமான உள்ளங்கை சுபத்தைக் கொடுக்கும். இதற்குமாறாக இருப்பவை நாசத்தைப் பண்ணும். உள்ளங்கை உயர்ந்திருந்தால் பெருங் கொடையாளியாக இருப்பான். வறண்டிருந்தால் வறுமையைக் கொடுக்கும். உள்ளங்கைகள் ஏற்றத்தாழ்வாக (மேடு பள்ளமாக) இருந்தாலும் அவ்வாறேயாகும் (வறுமையே வரும்). புலியினுடையதுபோன்ற கைகளிருந்தால் பாபம் உண்டாகும்.

கைவிரல்கள், நகங்கள் இவற்றின் இலக்கணம் ௧௬-௧௭

கைவிரல்கள் நீண்டிருந்தால் அம்மனிதன் நீண்ட ஆயுளை அடைவான். சதை மடிப்பு இல்லாமலிருந்தால் புலவனாவான். விரல்கள் பருத்திருக்குமாயின் வறுமை

[illegible]

[illegible] ॥ ௩௮

[illegible] ॥ ௩௯ ॥

[illegible]

யுண்டாகும். விரல்கள் வெளிப்புறம் வளைந்திருக்குமாயின் அறிவினனாக இருப்பான். இவ்வாறு விரல்களுக்குக் கூறப்பட்ட இலக்கணங்கள் அப்படியே நகங்களுக்கும் அமையும்.

கழுத்து இருக்கவேண்டிய நிலைமை—௩௮

எருமைக் கடாவுக்கிருப்பதுபோல் ஒருவனுடைய கழுத்து இருக்குமாயின் அவன் சூரனாவான். சங்குபோன்ற கழுத்துள்ளவன் அரசனாவான். வறண்டு உலர்ந்துபோன கழுத்துடையவன் வறுமையுடையவனாவான். அதிகமாகப் பருத்திராமலும், இளைத்திராமலும் நடுத்தரமான கழுத்துள்ளவன் சமமான (நடுத்தரமான) நிலையிலிருப்பான்.

தாடி மீசை மயிர்களின் இலக்கணம்—௩௯

நுனி இரண்டாகப் பிளவுபடாமலும், மென்மையாகவும், வழுவழுப்பாகவும் அடர்ந்துள்ளதுமான மீசை மயிர்கள் சிறந்தவையாம். செம்பட்டை நிறமுள்ளதும், ஏற்றத்தாழ்வாக உள்ளதும், நெறித்துக்கொண்டு நிற்பதும், பருத்ததுமான தாடி, மீசை மயிர்கள் இழிவானவையாம்.

முகத்தின் இலக்கணம்—௪௰-௪௧

நிறைந்த திங்கள்போன்ற இனிய தோற்றமுள்ள முகம் மிகவும் சிறந்ததாம். நீண்ட முகமுள்ளவன் வறுமையுடையவனாவான். வட்டவடிவமான முகமுள்ளவர்கள் சமமான (நடுத்தரமான) நிலையிலிருப்பர். சதுரச்ரமாக (நான்கு

𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌾𑌨𑌨𑌾 𑌧𑍂𑌰𑍍𑌤𑌾 𑌨𑌿𑌮𑍍𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌭𑍀𑌤𑌾𑌸𑍍𑌯𑌃 𑌪𑌾𑌪𑌕𑌾𑌰𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌏𑌵𑌂 𑌮𑍁𑌖𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ ௪௧ ॥

𑌰𑌕𑍍𑌤𑌾 𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌾 𑌶𑍁𑌭𑌾 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌜𑌿𑌹𑍍𑌵𑌕𑌃 ।
𑌸𑍍𑌥𑍂𑌲𑌜𑌿𑌹𑍍𑌵𑌶𑍍𑌚 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌜𑌿𑌹𑍍𑌵𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௪௨ ॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌚 𑌕𑌰𑍍𑌬𑍁𑌰𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌾 𑌰𑌸𑌨𑌾 𑌦𑍁𑌃𑌖𑌦𑌾 𑌸𑌦𑌾 ।
𑌸𑌾𑌵𑌰𑍍𑌷𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚 𑌤𑌾𑌲𑍁 𑌦𑍁𑌃𑌖𑌦𑌂 𑌭𑍃𑌶𑌮𑍍 ॥ ௪௩ ॥

𑌲𑌮𑍍𑌬𑍈𑌰𑍍𑌮𑌾𑌂𑌸𑌲𑌕𑌰𑍍𑌣𑌾𑌸𑍍𑌸𑍍𑌯𑍁𑌃
𑌪𑌾𑌪𑌿𑌨𑌃 𑌶𑍁𑌷𑍍𑌕𑌕𑌰𑍍𑌣𑌕𑌾𑌃 ।
𑌶𑍁(𑌕)𑌷𑍍𑌕𑌨𑌾𑌸𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍋𑌕𑍍𑌤𑌾
𑌚𑌿𑌰𑌾𑌯𑍁𑌃 𑌶𑍁𑌕𑌨𑌾𑌸𑌿𑌕𑌃 ॥ ௪௪ ॥

மூலைகளுள்ளதாக — சதுரமாக) முகம் அமையப்பெற்றவர்கள் (போக்கிரி) அயோக்கியத்தனமாக இருப்பார்கள். அமுங்கின (உள்ளடங்கின) முகமுள்ளவர்கள் மக்கட்பேறு இல்லாமலிருப்பார்கள். பயமுள்ள (அச்சத்தையுடைய) முகமுள்ளவன் தீய செயல்களில் ஊற்றமுடையவனுவான். இவ்வாறாக முகத்தின் இலக்கணம் கூறப்பட்டது.

நாக்கின் இலக்கணம்—௪௨

சிவப்பான நிறமுள்ளதும், வழவழப்பானதுமான நாக்கு மங்களகரமானது. பழுப்பு நிறமான நாக்குள்ளவன் பாபத்தில் நாட்டமுள்ளவனுவான். பருத்த நாக்குள்ளவனும் அவ்வாறே. கருப்பான நாக்குள்ளவனும் அப்படியே. கருப்பானதும், கீழ்ப்புறம் புள்ளியுள்ளதும் அல்லது சாம்பல் நிறமுள்ளதுமான நாக்கு எப்பொழுதும் துன்பத்தைத் தரும்.

தாலுவின் (தாலு = அண்ணம்) இலக்கணம்—௪௩

ஸாவர்ஷமானதும் சிவப்பு நிறமுள்ளதுமான தாலுவானது மிகவும் துன்பத்தைத் தரும்.

செவி, மூக்கு இவற்றின் இலக்கணம் ௪௪—௪௭

தொங்குகின்றவையும் சதைப்பற்றுள்ளவையுமான காதுகள் சிறந்தவை. வறண்டு உலர்ந்த காதுகளையுடையவர்கள் பாபிகளாவார்கள்.

வக்ராக்ரா தநதா நாஸா க்ரூரா தக்ஷிணவக்ரகா ।
ஸௌம்ய + + + + து:ஸிதோ ஜநவா: ஸுதா: ॥ ௪௫ ॥
ஶங்குகர்ணா போகாட்யா ரோமகர்ணா: ஶதாயுஷ: ।
விஸ்தீர்ணகர்ணா தநிந: ஸிம்ஹகர்ணஸ்து க்ஷிப்ரா: ॥ ௪௬ ॥

க்ருபணா ஹ்ரஸ்வகர்ணா: ஸ்யு: ஸுபகா: ஶ்யாமகர்ணகா: ।
ஸௌம்யவிவரா தீர்க்கா நாஸா பாக்யவ்ருத்திதாயினீ ॥ ௪௭ ॥

தநிந: பத்மபத்ராக்ஷா ரக்தாந்தாக்ஷாஸ்து ஶ்ரீயுதா: ।
மதுபிங்காக்ஷா தீர்க்காக்ஷா: கஜாக்ஷாஶ்ச மஹீபதா: ॥ ௪௮ ॥

கிளியினுடையதுபோன்ற நாசியுடையவன் சுகமுள்ளவனாவான். உலர்ந்த மூக்குடையவன் நீண்ட ஆயுள் உடையவனாவான். வளைந்த நுனியுடைய நாசி செல்வத்தைத் தரும். வலதுபுறம் வளைந்த நாசி; கொடுமையின் சின்னமாகும். + + + + + மானிடர்கள் துன்பமுள்ளவராவார்கள்.

குறிப்பு:— இங்கு மூலம் சிதைந்துள்ளது.

முளைபோன்ற காதுள்ளவர்கள் பெரும் பாக்கியசாலிகளாவார்கள். காதில் மயிர் முளைத்திருக்குமவர்கள் நூறு வயது ஆயுள் உள்ளவர்கள். அகன்ற காதுகளுள்ளவர்கள் பணம் மிக்கவர்களாவார்கள். சிங்கத்தினுடையதுபோன்ற காதுள்ளவன் க்ரூரனுவான் குறுகிய செவியுள்ளவர்கள் லோபி (சுவதை வெறுப்பவர்)களாக இருப்பார்கள். பழுப்பு நிறமான அல்லது கருப்பான காதுள்ளவர்கள் நல்ல அழகு உள்ளவர்களாயிருப்பார்கள்.

முகத்தில் மூக்கினுடைய இரண்டு துவாரங்களும் சரி சமானமாயிருக்கவேண்டும். சிறிய அளவுள்ளதாக இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் சகல பாக்கியங்களும் சேரும்.

கண்களின் இலக்கணம்—௪௮-ரும

தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவர்கள் பணம் மிக்கவர்களாக இருப்பர். சிவந்த கடைக்கண்களுள்ளவர்கள் செல்வமும் சீரும் நிறைந்திருப்பர். பெரிய கண்கள் உள்ளவர்கள், தேன்போல் பிங்களமான நிறமுள்ள கண்களுள்ளவர்கள், யானையினுடையதுபோன்ற கண்களுள்ள

[illegible]
[illegible] ॥ ௪௯
[illegible]
[illegible] ॥ ௫௰ ॥
[illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥ ௫௨ ॥

வர்கள் ஆகிய இவர்கள் மிகவும் பெருமை வாய்ந்தவர்களாவார்கள். ஆழ்ந்த கண்களுள்ளவர்கள் பணம் மிகுந்தவர்களாயிருப்பார்கள். பருத்த கண்களுள்ளவனும் அவ்வாறேயிருப்பான். கருப்பான கண்களுள்ளவர்கள் அழகுமிக்கவராவர். கருநெய்தல் மலர்போன்ற கண்களுள்ளவர்கள் சிறந்த அறிவாளிகளாயிருப்பர்.

பலவிதமான பார்வைகளின் இலக்கணங்கள்—௫௰

கீழ்நோக்கிய பார்வையும், மேல்நோக்கிய பார்வையும் மானிடர்களுக்கு எப்பொழுதும் துன்பத்தைக் கொடுக்கும். பக்கங்களிலேயே செல்லும் பார்வையும் அவ்வாறேயாகும். இவ்விதமான ஏற்றத்தாழ்வுகள் யாதுமின்றி சமமான பார்வையே சுபத்தைத் தரும்.

கண்களின் இலக்கணம்—௫௧

நாயினுடையதுபோன்ற கண்களுள்ளவர்கள் நேர்மையற்றவர்களாக இருப்பர். குரங்கினுடையதுபோன்ற கண்களுள்ளவர்கள் திருடர்களாவார்கள். கண்கள் பிதுங்கின மாதிரி வெளியில் வரப்பெற்றவர்கள் மிகவும் வறுமையில் இருப்பார்கள். பூனையினுடையதுபோன்ற கண்களுள்ளவர்கள் தீய செயல்களில் ஊற்றமுடையவராகவிருப்பர்.

புருவங்களின் இலக்கணம்—௫௨

புருவம் + + + இருந்தால் அல்பாயுளாக (குறைந்த ஆயுள்) ஆவான். புருவங்கள் அகன்றும் உயர்ந்துமிருப்பின் ஸௌக்யமாயிருப்பான். புருவங்கள் ஏற்றத்தாழ்வாக இருந்தால் ஏழையாவான். பிறைச்சந்திரன்போன்ற வளைவுள்ள புருவங்கள் இருந்தால் செல்வம் மிக்கவனாவான்.

[illegible] ॥ ௫௩ ॥

[illegible] ॥ ௫௪ ॥

[illegible] ॥

நெற்றியெலும்பு (சங்கம்) இலக்கணம்—௫௩

உயர்ந்ததும் அகன்றதுமான நெற்றியெலும்பு அமைந்திருப்பின் அம் மனிதர்கள் ஐம்புலன்களை வென்றவராவார்கள். நெற்றியெலும்பு உள்ளடங்கி (அமுங்கி) யிருந்தால் பணமில்லாமல் வறுமையடைவார்கள். மக்கட்பேறும் இருக்காது

நெற்றியின் இலக்கணம்—௫௪

நெற்றியில் மேடு பள்ளம், வேறுவிதமான ஏற்றத் தாழ்வு இருந்தால் வறுமை யுண்டாகும். பாதி சந்திரன் போன்ற நெற்றியுள்ளவர்கள் செல்வந்தர்களாவார்கள்.

தலைமயிர் இருக்கவேண்டிய இலக்கணம்—௫௫

தலைமயிர்கள் ஒவ்வொன்றாக முளைத்திருத்தல் வேண்டும். வழவழப்பாய் இருக்கவேண்டும். நல்ல கருப்பு நிறமாகவும், குடிலமாகவும் (படிப்படியாக வளைவுள்ளனவாகவும்) இருக்கவேண்டும். நுனியில் இருபிளவாக விரிந்திருத்தல் கூடாது. மென்மையாகவும் அடர்ந்தும் இருக்கவேண்டும். இவ்வாறாக இருந்தால் அவன் அரசனாவான். ஒரே மயிர்க்காலில் பல மயிர்கள் முளைத்திருத்தலும், ஏற்றத்தாழ்வாக

ஸ்பு²டிதாஶ்ச விவர்ணாஶ்ச பருஷாஶ்சைவ-
    ஹ்ரஸ்வாஶ்ச ரூக்ஷாஶ்ச தா³ரித்³ர்யதா³ ।
ஏகைகேந ரோம்ணா கூபே
    ராஜா த்³வாப்⁴யாம் (ஸ) பண்டி³த: ॥ ருசு ॥

த்ரிபி⁴ர்த்³விஜ ...
    ... து³:க²பா⁴க்³ ப⁴வேத் ।
ஸிம்ஹேப⁴வ்ருஷஹம்ஸாநாம்
    க³திநா ராஜா (ஹம்ஸயோ:? ப³ர்ஹிணோ:) ॥ ருஎ ॥

க³தேந ...
    யோ நர: ஸ து³ர்ப⁴க³: ॥
மேஷோஷ்ட்ரமஹிஷோலூக
    வராஹ ஶ்வாந (காகவத்? காகவத்) ॥ ருஅ ॥

இருப்பதும், அதிகமாக செம்பட்டை நிறமுள்ளதாக இருப்பதும், பருத்தவையாக இருத்தலும், முனை இரு பிளவாகப் பிளந்திருப்பதும், குறுகியனவாக இருத்தலும் கரடுமுரடாக இருப்பதும் இழிவானது. இவ்வாறிருப்பதனுல் வறுமையுடையவனுவான். ஒவ்வொரு மயிர்க்காலில் ஒவ்வொரு மயிர் மட்டும் முளைத்திருப்பின் அரசனுவான். இரண்டிரண்டாக முளைத்திருந்தால் (அறிவீனனுவான்) அறிவாளியாவான். மும்மூன்ருக முளைத்தால் வறுமையால் கஷ்டப்படுவான். நந்நான்காக முளைத்திருந்தால் எக்காலமும் துக்கத்தையே அனுபவிப்பான்.

நடையின் இலக்கணம்—ருஎ-ருஅ

சிங்கம், யானை, எருது, அன்னப்பறவை இவைகளுடைய நடைபோன்ற நடையுள்ளவனும், கிளி, மயில் இவற்றின் நடைபோன்ற நடையுள்ளவனும் அரசனுவான். செம்மறியாடு, ஒட்டகம், எருமைக்கடா, கோட்டான், பன்றி, நாய், காக்கை இவைகளுடைய நடைபோன்ற நடையுள்ளவன் பாக்கியமற்றவனுவான்.

[illegible]

கையிலுள்ள கட்டைவிரலின் மத்தியிலுள்ள நெல்போன்ற ரேகையின் பலன்

கட்டைவிரலின் நடுக்கணுவில் யவம் (நெல்) போன்ற அமைப்புள்ளதான ரேகை (கோடு) இருந்தால் அம்மனிதன் செல்வம் மிக்கவனாவான். கட்டைவிரலின் அடியிலுள்ள கணுவில் வேடி ரேகை இருந்தால் அதிகமான குழந்தைகளுள்ளவனாவான்.

கைரேகைகளின் பொதுவான இலக்ஷணம்—கூ௯-கூ௭

கையிலுள்ள ரேகைகள் வழவழப்பாக இருக்க வேண்டும். மேலும் பள்ளமாக (அழுந்தி) இருத்தல் வேண்டும். இவ்வாறிருந்தால் தனவானாவான். இதற்கு மாறாக (கரடுமுரடாகவும் மேடாகவும்) இருந்தால் வறுமை மிக்கவனாவான்.

மணிக்கட்டினின்றும் கிளம்பி உள்ளங்கையில் ஊடுருவிச் செல்லும் மூன்று ரேகைகள் அரசனாவதற்கேற்ற அடையாளமென்பர் சாமுத்திரிகர்கள். இரண்டு மீன்கள்போன்ற ரேகை ஒருவன் கையிலிருந்தால் அவன் "ஸத்திர" மென்னும் பெரிய யாகத்தைப் பண்ணுவான், அல்லது சத்திரங்கள் கட்டுவான். மீனுடைய வால்போன்ற ரேகை கையிலிருந்தால் நல்ல சுகமடைவான்.

உள்ளங்கையில் வளைந்து செல்லுகின்ற ரேகைகளால் [illegible]ம்பல பொருள்கள்போன்ற வடிவங்கள் அமையும். அவற் [illegible] சங்கு, குடை, பல்லக்கு, யானை, தாமரைமலர், குதிரை

சக்ரவர்த்தீ பவேத்ராஜா ஜாயதே நாத்ர ஸம்ஶய: ।
பஶவோ தாமரேகாபி: ஸ்வஸ்திகாக்ருதிபிர் தநீ ॥ ௧௫ ॥

சக்ரகட்கதநு:ப்ராஸதோமராக்ருதிபிர் ந்ருப: ।
அங்குஷ்டமூலரேகாபி: (ஸ்தூலாபி:) புத்ரவாந் பவேத் ॥

ஸூக்ஷ்மரேகாபி: கந்யாம் ஜநயதி த்ருவம் ।
ப்ரதேஶிநீகதம் ப்ராப்தரேகா: ஸ்யு: ஶதஜீவிந: ॥ ௧௬ ॥

ந்யூநாதி ஸூக்ஷ்மரேகாபி: ச்சிந்நாபிர் வா த்ருமாத் பதேத் ।
அரேகா பஹுரேகாஶ்ச தே நரா தநவர்ஜிதா: ॥ ௧௭ ॥

நகா தந்தா ரோமகேஶவ்யாலாயா: ஸர்வரேகா: ।
ஸ்நிக்தா நீலாஸ்ஸ்வகாஶா யஸ்யா ஸ்த்ரீணாம் ஸுகம் ॥ ௧௮ ॥

இவைகள்போன்ற வடிவம் காணப்பட்டால் சக்கரவர்த்தியாக அல்லது அரசனாக இருப்பான். இதில் சந்தேகமில்லை. கையில் கயிறுபோன்ற ரேகை இருந்தால் அவனுக்குப் பசுக்கள் ஏராளமாக இருக்கும். ஸ்வஸ்திகம் போன்ற வடிவம் ரேகையில் இருந்தால் பணம் நிறைந்தவனாவான்.

சக்கரம், கத்தி (வாள்), வில், ஈட்டி, தோமரம் இவை போன்ற வடிவம் ரேகையில் அமைந்தால் அரசனாவான். கட்டைவிரல் அடிப்புறத்திலுள்ள ரேகைகள் பருத்திருப்பின் பிள்ளைகள் (ஆண்) அதிகமிருக்கும். அதே ரேகைகள் நுண்ணியதாக இருப்பின் பெண் பிள்ளைகள் அதிகமிருக்கும். இது திண்ணம். ஆள்காட்டி விரலின் அடியில் போய்ச் சேருகின்ற ரேகையுள்ளவர்கள் நூறு வயது வாழ்வார்கள். குறைவுபட்டதாகவும், நடுவில் அறுபட்டதாகவும் ரேகைகள் இருந்தால் அவனுக்கு மரத்திலிருந்து கீழே விழுவதனால் மரணமுண்டாகும். கையில் ரேகையே இல்லாதவர்களும், அதிகமான ரேகைகளுள்ளவர்களுமான மனிடர்கள் பணமில்லாதவர்களாயிருப்பார்கள்.

நகங்களும், பற்களும் ....? மயிர்கள் ஆகாயம் போல் நீலநிறமுள்ள நாயின் சுகத்தைத் தரும்.
குறிப்பு :— இங்கு மூலம் விளக்கமாக இல்லை.

பெண்களுடைய உள்ளங்காலின் இலக்கணம்

எந்த ஸ்திரீயினுடைய உள்ளங்கால் முழுதும், நாற்புறமும் நடுவிலும் தரையில் படிந்து கிடக்கின்றதோ அவள்

அஷ்டௌ புத்ரான் ப்ரஸூதே ஸா
பதிவம்ஶாநுபாலிகா (ஸ) ।
அங்குஷ்டம் ஸமதிக்ரம்ய
தீர்கா யஸ்யா: ப்ரதேஶிநீ ॥ ௬௯ ॥

ஸாங்குஷ்டகாபி யத்நேந ஸா ஹ்யேவ வ்யபிசாரிணீ ।
தீர்காஸ்யா மத்யமா யஸ்யா: ஸர்வா வா தீர்காங்குலீ ॥ ௭௰ ॥
து:ஶீலா து:ஸ்வபாவா நித்யம் ஸா கந்யா நிந்திதா புதை: ।
காகஜங்கா ச யா நாரீ யா ச ரோமஶஜங்கிகா ॥ ௭௧ ॥
அசிரேண பதித்யாகம் வைதவ்யம் ஶீக்ரயோ: த்வயோ: ।
ஸ்தூலௌ ச ஸ்கந்தௌ யஸ்யா: ஸா தாஸீ ஸம்ஶயோ நஹி ॥

எட்டு ஆண் பிள்ளைகளைப் பெறுவள். தனது கணவனுடைய ஸந்தானத்தை வளர்ப்பாள்.

௬௯—௭௰

எவளுடைய கால்கட்டைவிரலுக் கடுத்தவிரல் கட்டைவிரலைக் கடந்து அதிகமாக நீண்டுள்ளதோ, அவள் பெரு முயற்சியுடன் காப்பாற்றப்படினும் விபசாரியாவாள். எவளுடைய காலில் நடுவிரல் அதிகம் நீண்டதாக இருக்கின்றதோ அல்லது காலிலுள்ள விரல்கள் எல்லாம் அதிக நீளமுள்ளனவாக இருக்கின்றனவோ அந்தப் பெண் ஒழுக்கங் கெட்டவளாகவும், விபசாரத்தில் நாட்டமுள்ளவளாகவுமே (அல்லது குரூபியாகவுமே) எப்பொழுதுமிருப்பள். அவள் அறிஞர்களால் நிந்திக்கப்படுவாள்.

௭௧—௭௨

முழங்கால்களின் கீழ்ப்பகுதி (ஜங்கைகள்) காகத்தினுடையது போன்றிருந்தாலும், அவ்விடத்தில் உரோமங்கள் மிகுதியாக இருந்தாலும், அவர்களுக்கு (இரு வகையான பெண்களுக்கும்) அண்மையில் (சீக்கிரத்தில்) வைதவ்யம் வருவது திண்ணம். அதாவது அவர்கள் கைம்பெண்ணாகி விடுவார்கள் என்றவாறு. எவளுடைய தோள்கள் பருத்துள்ளனவாக இருக்கின்றனவோ அவள் பணிப்பெண்ணாவாள்.

ஊரூ து க்ருஶௌ ரோமஶௌ வா
யஸ்யா: ஸ்யாதாம் புஜாவபி
ஸத்வரம் பதிம் ஹந்தி
விவாஹே ஸாபி வர்ஜிதா ॥ ௭௩ ॥

அஶ்வத்தபத்ரஸங்காஶம் குஹ்யம் கூடமணிர்யதி ।
யஸ்யா: ஸா ஸுலபா கன்யா தன்யா புண்யைரவாப்யதே ॥

நிதம்பபிம்பஸ்ய ப்ருஷ்டம் விஸ்தீர்ணம் ஶஸ்யதே ஸ்த்ரியா: ।
மத்யம் த்ரிவலிபேதம் க்ருஶம் ஶுபம் அரோமஶம் ॥ ௭௫ ॥

ஸ்தனௌ வ்ருத்தௌ (ஸ்த ? க) கனௌ ஶஸ்தா-
வுரோ ரோமவிவர்ஜிதம் ।
க்ரீவா ரேகாத்ரயோபேதா
பிம்பாகாரோ'தரோ'தர: ॥ ௭௬ ॥

எவளுடைய துடைகளும், புஜங்களும் மெல்லியனவாகவும், உரோமங்கள் நிறைந்தவையாகவுமிருக்கின்றனவோ, அவளுடைய கணவன் சீக்கிரம் மரணமடைவான். இவளும் கலியாணத்தில் ஏற்கத் தகாதவள்.

௭௪

எந்தப் பெண்ணுடைய அல்குல் (பெண் குறி) அரச மரத்து இலை போன்றதும், மணிகள் மறைந்ததாகவும் இருக்குமோ அவள் மிகவும் சிறந்தவள். பாக்கியசாலி. புண்ணியம் மிக்கவர்களுக்குத்தான் இவள் கிடைப்பாள்.

பெண்களுக்கு நிதம்பம் (அல்குலுக்குப் பின்புறம்) வட்ட வடிவமாகவும் அகன்றதாகவும் இருப்பது சிறந்தது.

௭௫

பெண்களின் இடை, மூன்று சதை மடிப்புக்களுடன் கூடியதாகவும், மெல்லியதாகவும் மயிர்களில்லாததாகவும் இருப்பது சுபம்.

௭௬—௭௭

கொங்கைகள் வட்டவடிவமாகவும், இடைவெளியின்றி அடர்ந்ததாகவும் இருப்பது சிறந்தது. மார்பு உரோமங்களின்றியே யிருப்பது சிறப்பு. கழுத்து மூன்று ரேகைகளுடன் கூடியதாகவும், கீழ் உதடு கோவைப்பழம்போன்ற

ஸ்தூலயா க்ரீவயா சண்டீ தாரித்ர்யா ஹ்ரஸ்வயா தயா ।
குலஸ்ய நாஶினீ நிம்நதீர்கயா ஜாயதே வா நர: ॥ எஎ ॥

ஶ்மஶ்ருவதீ ஸஹிதா கந்யா விஷமஶ்ரவணா ச யா ।
ஸா விரோதா ஸதா பத்யுருத்தரோஷ்டே நதோந்நதா ॥

விஷமோந்நதா யஸ்யா: விரளா: ஸ்தூலதந்தகா: ।
ஸர்வது:கஸ்ய காரணம் ஸாதவஸ்தாம் வதந்தி வை ॥

த்விதீய (ா ?) சந்த்ரஸங்காஶப்ரூயுக்தா ஸமநாஸிகா ।
ருஜ்வங்குலிகா ரமணீ பத்யு: ஸம்பத்கரீ ஸதா ॥ அய ॥

தாகவும் இருக்கப்பெற்றதும் உயர்ந்தது. கழுத்து பருத்திருந்தால் கோபக்காரியாக இருப்பாள். மிகவும் குறுகியதாயிருந்தால் தரித்திரமாயிருப்பாள். புதைந்த மாதிரியாகவோ அல்லது மிகவும் நீண்டதாகவோ இருந்தால் குடியைக் கெடுப்பவளாவாள்.

எஅ

மீசை மயிர்களுடன் கூடியவளும், ஏற்றத்தாழ்வான செவிகளுள்ளவளும், மேல் உதடு உயர்ந்தவாறு அமையப் பெற்றவளும் கணவனுக்கு நேர் விரோதியாகவே இருப்பாள்.

எகூ

எவளுடைய பற்கள் ஏற்றத்தாழ்வாகவும், இடைவெளியுள்ளனவாகவும், பருத்தவைகளாகவும் இருக்கின்றனவோ அவளைச் சான்றோர்கள் எல்லாவிதமான துன்பங்களுக்கும் காரணமானவளாகக் கருதுவர்.

அய

இரண்டாம்பிறை (அல்லது மூன்றாம்பிறை)ச் சந்திரன் போன்ற அமைப்புள்ள இரண்டு புருவங்களை யுடையவளும், சமமான நாசியையுடையவளும், கோணலில்லாமல் நேர்மையான விரல்களை யுடையவளுமான பெண் எப்பொழுதும் கணவனுக்குச் செல்வத்தைக் கொடுப்பாள்.

வாமபார்ஶ்வே லலாடே வா கண்டே வா (ஜவ ? ஷ) லாஞ்சிதா ।
தஸ்மிம்ஸ்திலகிதாகாரே ஜநயேத் ப்ரதமம் ஸு (வ ? த)ம் ॥

ப்ரஸந்நவதநா ராஜ்ஞீ லம்பகேஶீ தபஸ்விநீ ।
துஃகிதா பஹுகேஶீ ஸ்யாத் ஸாமுத்ரிகவிதோ விது: ॥

கோஷ்டாப்ஜகலஶாகாரா ரேகா யஸ்யா: கரே(அ)தவா ।
தோரணம் ஸ்வஸ்திகம் சக்ரம் கரே பாததலே(அ)பி வா ॥

அக

இடதுபுறம் கழுத்தில் அல்லது நெற்றியில் அடையாள முள்ளவள் (மச்சம் உள்ளவள்), அவ்விடத்தில் திலகம் போன்ற வடிவமுள்ள அடையாளம் அமையப்பெற்றவள், முதன் முதலில் ஆண் மகவைப் பெறுவாள் (உயர்ந்த சுகத்தைத் தருவாள்).

குறிப்பு:— மூலத்தில் ஸுகம், ஸுதம் என்ற இரு பொருளுக்கும் பொதுவாகப் பாடம் உளது.

அஉ

தெளிவான (அருள் நிரம்பின) முகமுள்ளவள் அரசியாவாள். ஒரு முகமாகச் சேர்ந்திராமல் தொங்கிக் கொண்டிருக்கும் குழல்களை யுடையவளான பெண் தவம் செய்பவளாவாள். அதிகமான தலைமயிர்களை யுடையவள் துக்கமடைவாள். இது ஸாமுத்திரிக சாஸ்திரம் கற்றறிந்த பெரியோர்களுடைய கொள்கை.

அங—அச

கோஷ்டம் (பாதாம்கொட்டை போன்ற வடிவம்) தாமரை மலர், கலசம் (குடம்) இவைபோன்ற ரேகை, அல்லது தோரணம், ஸ்வஸ்திகம், சக்கரம் இவைபோன்ற ரேகை எவளுடைய கைத்தலத்தில் அல்லது புறங்களில் இருக்கின்றதோ அவள் பெண்களுக்குள் தலைமை பெறு

யஸ்யா வாமகரே ஸ்த்ரீணாம் ராஜீவஸ்ய ஸமோபமா ।
ரேகா ஸர்வாஸாம் ஸ்த்ரீணாம் [1]விராஜி நாயிகா ॥ ௨௪ ॥

இத்யாதி லக்ஷணயுக்தா பிம்பேஷ்வேவ [illegible] ।
[illegible] (தத்வ?) [illegible] ॥ ௨௫ ॥

இதி ஶில்பரத்நே உத்தரார்தே பிம்பதோஷலக்ஷணம் நாம
ஷட்விம்ஶோऽத்யாய: ॥

வான். இடதுகையில் தாமரைமலர் போன்ற ரேகை எவளுக்குக் காணப்படுகின்றதோ அவள் பெண்களுக்குள் நாயகியாக இருப்பாள். (இங்கு நூலில் உள்ள ஒரு சொல் சரியாக விளங்காமையின் பொருள் தரப்படவில்லை).

இவ்வாறு ஸாமுத்திரிக சாஸ்திரப்படி மானிடர்களுடைய உடலமைப்பிலுள்ள நன்மை, தீமைகள் விளக்கிக் கூறப்பட்டன. சிற்பியானவர் இவ் விலக்கணங்களை பிம்பங்களிலும் அமைத்துப் பார்க்கவேண்டும். அததற்குக் கூறப்பட்ட பலன்களும் அவ்வாறே பிம்பங்கள் விஷயத்திலும் அமையும்.

சில்பரத்தினத்தில் பிற்பகுதியில் பிம்பங்களின் குற்றங்களை விளக்கும் இருபத்தாறுவது அத்தியாயம் முற்றும்.

---

(1) 'விஸ்தீவ' என்றும் பாடம். அதிலும் பொருள் விளக்கமாக இல்லை.

श्रीः

अथ सप्तविंशोऽध्यायः

अथ पीठादि लक्षणम्॥

तत्र पद्मपीठम्:—

पद्मं तालसमुत्सेधं द्विगुणं वि-
स्तारं षड्भागके कृते
ऊर्ध्वे पट्टं शेषांशके द्वितयेऽधो-
मुखमष्टदलम्।

இருபத்தேழாவது அத்தியாயம்.

பீடம் முதலியவற்றின் இலக்கணம்.

———:———

பத்மபீடம்—க-உ.

தாமரைமலர்போல் அமைக்கப்படும் பீடம் பத்மபீடம் எனப்படும். இவ்வாறு பீடவடிவமாக அமைக்கப்படும் பத்மம் ஒரு தாளம் உயரம் இருக்கவேண்டும். "தாளம்" என்பது சிற்பசாஸ்திரத்தின் ஸங்கேதச் சொல். விரிந்த கையின் மணிக்கட்டிலிருந்து நடுவிரலின் நுனி வரை ஒரு தாளம் என்பர். அந்தந்த விக்ரகங்களின் முகத்தினளவு (மோவாய்கட்டையிலிருந்து கேசாந்தம் வரை) ஒரு தாளமென்பர். பன்னிரண்டு அங்குலம் ஒரு தாளமென்பர். மானங்குலம், மாத்ராங்குலம், தேஹலப்தாங்குலம் இவற்றில் எதையாவது வைத்துக்கொண்டு பன்னிரண்டு அங்குலம் கணக்கெடுத்து அதை ஒரு தாளமாகக் கொள்ளலாம். இவற்றுள் எந்த அளவு எந்த இடத்திற்குத் தகுமோ அதை அவ்விடத்திற்குத் தாளம் என்னும் அளவுச் சொல்லால் குறிப்பிடவேண்டும். இவ்வாறாக ஒரு தாளம் உயரமுள்ள பத்மபீடத்தின் விஸ்தாரம் (அகலம்) இரண்டு தாளத்தின் அளவு இருக்கவேண்டும். அதன் உயரத்தை ஆறுபாகமாக்கவேண்டும். அதில் ஒருபாகம் (கீழிருந்து மேல் மூன்றாவது பாகம்) பட்டம் அமைக்கவேண்டும். பட்டத்தின்கீழ் இரண்டு பாகங்களில் எட்டு இதழ்களுள்ள கீழ்முகமான தாமரைமலர் அமைக்கவேண்டும். மேலுள்ள மற்ற மூன்று

அஷ்டதளயுக்தம் பங்கஜத்வயம் ப்ரவேஶநம்-
ஷடாம்ஶம் மத்யவக்த்ரம் த்ருஶி-
மத்யமேஶ: பத்மபீடம் கரோதி ஸமே-
நாலாக்ரு வீடோத்ருயஃ ॥ க ॥

ஆஸநே ஶயநாஸீநே தத்தத்ப்ரதிமாவிஶாலதா ।
வ்ருத்தம் வாऽऽயதவ்ருத்தம் வா பத்மபீடம் ப்ரகல்பயேத் ॥ ௨ ॥

அத நாலஃ :—

விம்ஶத்யா ப்ருதிரம்ஶஜைர்வா ப்ருதிதம்
வ்ருத்த கயா மேகலயா
நாலம் ஸ்திதபாலி வாயுதிகதே-
ரஷ்டாம்ஶாம்ஶகே: ।

பாகங்களில் அதேபோல் எட்டு இதழ்களுள்ள தாமரைமலர் மேல்நோக்கியவாறு அமைக்கவேண்டும். இரண்டு தாமரை மலர்களின் முனைகளுக்கும், நடுவில் அவைகளின் அடிப்புறம் சேருமிடத்திற்கும் அகலத்தில் வித்யாஸம் இருக்க வேண்டும். நடுப்பாகம் கால்பங்கு அகலத்தில் குறைந்திருக்கும். அதாவது இந்த பத்மபீடத்தின் மேல்புறம் அல்லது அடிப்புறத்தின் அகலத்தை நாலு பங்காக்கி அதில் ஒரு பாகம் குறைந்து குவிந்துவருமாறு பத்மபீடத்தின் மத்திய பாகம் அமையவேண்டும். (மேலேயும் கீழேயும்) பட்டமுள்ளதாகச் செய்யவேண்டும். இதில் பீடத்தின் உயரம் தாமரைமலரினளவேயாகும். இந்த பத்மபீடத்தை விக்ரஹத்தின் பல நிலைமைகளுக்கும் ஏற்றவாறு அமைக்க வேண்டும். அமர்ந்திருக்கும் விக்ரஹத்துக்கு அதற்கேற்ற விஸ்தாரமுள்ளதாகவும், கிடந்தவாறாக இருக்கும் விக்ரஹத்துக்கு அதற்கேற்ற விஸ்தாரமுள்ளதாகவும் வட்டவடிவமாகவோ அல்லது நீண்ட வட்டமாகவோ தக்கவாறு பத்மபீடத்தை அமைக்கவேண்டும்.

நாளம்—ரு.

"நாளம்" என்பது பீடத்தினின்றும் அபிஷேக ஜலம் வெளிச் செல்வதற்காக நீண்ட வடிவத்தில் அமைக்கப்படும் சிறு வாய்க்கால்போன்றது; இதையே கோமுகம் என்றும் சொல்வர். இனி பலவகையான பீடங்களை விவரிக்கப் போகின்றார் இந் நூலாசிரியர். அவை எல்லாவற்றிலும்

ஏகைக ஹீநவிஸ்தார நாலாக்³ரம் ததா
ஷட்ஸப்தாஷ்டாம்ஸஹீநாக்³ரகம்
க்ரமாத்³யுக்³மம் ஸகலேஷு ஸேவ்யமேதத்
வ்ருத்தம் ஸ்வஸ்தி ஸேவ்யஸ்ய ॥ ௯ ॥

"நாளம்" இருக்கவேண்டியது அவசியமாதலால் மூர்த்தற முன்னும் நாளத்தின் இலக்கணத்தையும் அளவையும் பொதுவாக விளக்குகின்றார். இந்த நாளமானது அடிப் பாகத்தில் அகன்றும் நுனியில் சிறிது குவிந்தும் இருக்க வேண்டும். அதாவது பீடத்தை ஒட்டின பகுதி (நாளம் தொடங்கும் பகுதி)யே இதன் அடிப்பகுதி. ஜலம் கீழே கொட்டுகிற இடம் இதன் நுனிப்பகுதி. (இவ்விரண்டு பகுதி களிலும் உள்ள ஏற்றத்தாழ்வு முதலில் விளக்கப்படுகின் றது.) நாளம், காம்பில் (தொடக்கத்தில்) 20, 21 அல்லது 22 ப்ரதிமாங்குலம் அகலமுள்ளதாயிருக்கவேண்டும். (ப்ரதிமாங் குலம் என்பது தேஹலப்தாங்குலம்; அதாவது அந்தந்த ப்ரதிமைகளின் மொத்த உயரத்தை 124 பங்காகச் செய்து அதில் ஒரு பாகத்தை ஒரு அங்குலமாகக் கொள்வது.) முடியில் எட்டிலொருபாகம், ஏழிலொருபாகம் அல்லது ஆறிலொருபாகம் அகலம் குறைந்திருக்கவேண்டும். இங்கு முதலிலும் முடியிலும் வரிசையாக மும்மூன்று விதங்களே கூறப்பட்டிருப்பதனால் இதில் "யதாஸங்க்யந்யாயம்" இடம் பெறும். அதாவது முறைப்படி அன்வயம் செய்தல், மூன்று வகைகளில் முதலாவதுடன் முதலாவதையும், இரண்டாவ துடன் இரண்டாவதையும், மூன்றாவதுடன் மூன்றாவதை யும் பொருந்தவிடவேண்டும். இதெங்ஙனேயென்னில்:—

நாளத்தின் காம்பு 20 அங்குலம் அகலமுள்ளதானால், அதன் நுனி 17½ அங்குலம் விஸ்தாரமுள்ளதாகும். இது எட்டிலொருபாகம் குறைந்தது. நாளத்தின் காம்பு 21 அங்குலம் அகலமுள்ளதானால் அதன் நுனி 18 அங்குலம் அகலமுள்ளதாகும். இது ஏழிலொருபாகம் குறைந்தது. நாளத்தின் காம்பு 22 அங்குலம் அகலமுள்ளதானால் அதன் நுனி 18 அங்குலம், 5 யவம்; அகலமுள்ளதாயிருக்கும். இது ஆறிலொருபாகம் குறைந்தது. இவ்வாறு அதற்கேற்றபடி அளவுகளை அமைத்துக்கொள்வதே "யதாஸங்க்ய" மென்பது.

ஸம பீடம்:—

> பிம்பே பிம்போச்ச்ரயஸமம் ஸமா-
> யாமவிஸ்தாரயாமகம்
> ஸமவ்யாஸாயதோச்ச்ரயவர்திதம்
> ஸமசதுரஸ்ர பீடம் ।

இந்த நாளம் பிரம்மசிலை வரை நீண்டிருக்கவேண்டும். "பிரம்மசிலை" என்பது ஒவ்வொரு லிங்கம் அல்லது விக்ரஹம் இவற்றை ஸ்தாபிக்கும் இடத்திலும் பீடத்தின் அடியில் அமைக்கப்படும் ஆதாரக்கல். அது சற்று அதிகமாகவே அகலமுள்ளதாயிருக்கும். இந்த ப்ரம்மசிலை எவ்வளவு தூரம் அடியில் அகன்று பரவியுள்ளதோ அவ்வளவு நீண்டதாக நாளம் அமைக்கவேண்டும். நாளத்தின் நுனியினின்றும் வெளியில் கொட்டும் ஜலம் அந்த பிரம்மசிலையின் எல்லையைக் கடந்து விழவேண்டுமென்றவாறு. இவ்வாறுன இந்த நாளம் எல்லா இடங்களிலும் சதுரமாகவேயிருக்கும். இது "வைதஸம்" (பிரம்மாவினுடையது) எனப்படும். சில இடங்களில் வட்டவடிவமாகவும் இருக்கும். இது "ஐச்வரம்" (ஈச்வரனுடையது) என்று வழங்கப்படும்.

பீடங்களின் இலக்கணம்—௪.

பீடங்கள் பொதுவாக இரண்டு வகைப்படும். விக்ரஹங்களின் பீடம், லிங்கங்களின் பீடம் என்று. முதலில் பிம்பங்களின் பீடங்களுக்குப் பொதுவான இலக்கணமும், பிறகு லிங்கபீடத்தின் விஷயங்களும் விளக்கப்படுகின்றன.

பிம்பங்களுக்கு அமைக்கப்படும் பீடம், உத்தேசத்தி லுள்ள பிம்பத்தின் உயரத்திற்குத் தக்கவாறு பொருத்தமுடையதாக அமைக்கப்படவேண்டும். நீளமும், அகலமும் சமானமாயிருக்கவேண்டும். (கிடந்தவாறுள்ள பிம்பங்களுக்கு அததற்கேற்றவாறு பீடத்தை அமைக்கவேண்டும்) பிம்ப பீடத்தின் உயரம் அந்தந்த பீடத்தின் அகலத்தில் பாதியிருக்கவேண்டும். பிம்பத்தின் பீடம் ஒரு அடி அகலமிருக்குமாயின் அதன் உயரம் அரையடி இருக்கவேண்டும். இவ்வாறுக ஊகித்தறிக. இது பிம்பத்தின் பீடம்.

𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑍍𑌯𑌾𑌸 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌿𑌤𑌵𑌿𑌸𑍍-
𑌤𑌾𑌰𑌾𑌯𑌾𑌮𑌂 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌂
𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌸𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌕𑌸𑌮𑍇 𑌸𑌮𑍁-
𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌿 𑌤𑌤𑍍𑌪𑍀𑌠𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌤𑍍𑌤𑌾𑌰𑌸𑌮𑌃 𑌸𑌮𑌃 ।
𑌨𑌵𑍈𑌤𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾 𑌸𑍍𑌯𑍁𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌿𑌤𑍇 ॥ ௫

லிங்கபீடத்தின் இலக்கணம்.

லிங்கத்தின் அகலத்தைப்போல் மூன்று மடங்கு அதிகமான அகலமும் நீளமும் உள்ளதாக லிங்கபீடம் அமைக்கப் படவேண்டும். லிங்கத்தின் அகலம் 1 அடி என்று வைத்துக் கொள்வோம். அப்போது அதன் பீடம் மூன்றடி அகலமும் மூன்றடி நீளமும் உள்ளதாக இருக்கவேண்டும். அதில் எட்டுப்பட்டையுள்ள பகுதிக்குச் சமமாக பீடத்தின் உயரம் இருக்கவேண்டும். சதுர வடிவமுள்ளதாக இதை அமைக்க வேண்டும்.

௫

இந்த சுலோகத்தில் லிங்கத்தின் உயரத்தை ஆதாரமாகக்கொண்டு பீடத்தின் அகலம் எவ்வளவு இருக்க வேண்டுமென்பது விவரிக்கப்படுகின்றது. லிங்கங்களில் "பூஜாம்சம்" என்றொரு பாகத்தை வழங்குவர். அதைப் போல் இருமடங்கு அகலமுள்ளதாக லிங்கபீடம் இருக்கலாம். இது கடையானது (அதமம்). லிங்கத்தின் உயரத்துக்கு ஸமானமாகவே லிங்கபீடத்தின் அகலம் இருக்கலாம். இது முதன்மையானது (சிரேஷ்டம்). இங்கு கூறப்பட்ட இரண்டு அளவுகளுக்கும் மத்தியபாகத்தை எட்டு பங்காக்கி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது லிங்க பீடத்தின் அகலத்திற்கு ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன. அது எவ்வாறெனில்:

ஒரு லிங்கத்தின் உயரம் மூன்றடி யென்றும், அதன் பூஜாம்சத்தின் உயரம் ஒரு அடி என்றும் வைத்துக்கொள்

(1) "𑌪𑍀𑌠𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌃" என்றுதான் இருக்கவேண்டும். லிங்கத்தின் உயரத்தை ஆதாரமாக வைத்து அதன் அடிப்படையில் பீடத்தின் அகலத்தை நிர்ணயம் செய்கிற இடம் இது. லிங்கத்தின் அகலத்தை நிர்ணயம் செய்யுமிடமில்லை. இவ் வழியிலேயே பொருள் தரப்பட்டுள்ளது.

வோம். அந்த லிங்கத்தினுடைய பீடத்தின் அகலமும், மூன்றடியே இருக்கலாம். இது உத்தமம். அல்லது அந்த லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரமான ஒரு அடியைப்போல் இரண்டு பங்கு (2 அடி) அகலமும் பீடத்தை அமைக்கலாம். இது அதமம். அதமபக்ஷத்திற்கும், உத்தம பக்ஷத்திற்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டாகச் செய்தால் மேலும் ஏழு வகைகளாம் :—

(1)	லிங்கத்தின் உயரம்	3 அடி.	பீடத்தின் அகலம்	3 அடி.
(2)	,,	3 அடி;	,,	2 அடி 10½ அங்.
(3)	,,	3 அடி;	,,	2 அடி 9 அங்.
(4)	,,	3 அடி;	,,	2 அடி 7½ அங்.
(5)	,,	3 அடி;	,,	2 அடி 6 அங்.
(6)	,,	3 அடி;	,,	2 அடி 4½ அங்.
(7)	,,	3 அடி;	,,	2 அடி 3 அங்.
(8)	,,	3 அடி;	,,	2 அடி 1½ அங்.
(9)	,,	3 அடி;	,,	2 அடி 0 அங்.

இவற்றுள் கடையிலிருப்பது பூஜாம்சமாகிய 1 அடியைப்போல் இரு மடங்கு அகலமானது. உத்தமபக்ஷம் முதலில் உள்ளது. லிங்கத்தின் முழு உயரமாகிய 3 அடி அகலம் உத்தமம். மற்ற ஏழு வகைகள் இடையிலுள்ளது. இங்கு இந்நூலில் பாடம் தவறாக இருப்பதாகத் தோன்றியது. அதனால் இதற்கு முதனூலாகக் கருதப்படும் காச்யபீயத்தைக் கவனித்து அதில் உள்ளபடியே இந்நூலின் சுலோகத்துக்கும் பொருள் தந்துள்ளோம். காச்யபீயத்தில் 58-வது படலத்தில் பீடலக்ஷணம் கூறப்படுகிறது. அங்கு பீடத்தின் அகலம் இருக்கவேண்டிய விதம் விளக்கப்படுமிடத்தில்,

“ லிங்கோதயஸமம் பீடம் விஸ்தாரேணோத்தமோத்தமம் ।
பஞ்சாம்ஶோனார்த்தஸமம் பீடம் தாரம் கந்யஸமத்யமே ।
ததோऽஷ்டாம்ஶே ஸமாம்ஶம் ஸ்யாத் உத்தமாதித்ரயத்ரயம் ॥

என்னும் சுலோகம் உளது. “ பஞ்சாம்ஶஹீநமானம் ” என்று இந்நூலிலுள்ளதற்குப் பதிலாக “ பஞ்சாம்ஶோனார்த்தஸமம் ” என்று காச்யபீயத்தில் சிறிது மாறுபாடாக இருப்பினும், தவறுதலில்லாமல் தெளிவாக இருக்கிறது. இந்நூலில் “ நவைவைதே லிங்கவிஸ்தாரா: ” என்றிருப்பது “ நவைவைதே பீடவிஸ்தாரா: ” என்றிருக்கவேண்டும். பீடத்தின் விஷயமே யல்லவா இங்கு சொல்லப்படவேண்டியது ? அதனால் காச்யபீயத்தைத் தழுவியே இங்கு பொருள் உரைக்கப்பெற்றுளது

விஷ்கம்பார்த்தே யதுத்துங்கம் நீசம் ஶ்ரேஷ்டம்[1] த்ரிபாகாம்ஶகம் த்விக: ।
விஷ்கம்பத்ரிகுணாம்ஶாய நாஹகார்யம் விபாகத: ॥ ௬ ॥

௬

இந்த சுலோகத்தின் முற்பகுதியில் லிங்கபீடத்தின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்பது விளக்கப்படுகின்றது. லிங்கபீடத்தின் அகலம் எவ்வளவோ அதில் பாதியளவு அதன் உயரம் இருக்கலாம், இது அதமபக்ஷம் (கடையானது). லிங்கபீடத்தின் அகலத்தை மூன்று பாகமாகச் செய்து அதில் இரண்டு பாகம் லிங்கபீடத்தின் உயரமாக அமைக்கலாம். இது உத்தமம் (உயர்ந்தபக்ஷம்). லிங்கபீடத்தின் அகலம் மூன்றடி என்று வைத்துக்கொள்வோம். அதில் சரிபாதியான ஒன்றரை அடி உயரம் அந்த பீடத்திற்கு இருக்கலாம். இது அதமபக்ஷம். லிங்கபீடத்தின் அகலமாகிய மூன்றடியை ஒவ்வொரு அடியுள்ள மூன்றுகூறாகச் செய்து அதில் இரண்டு பாகமாகிய இரண்டு அடி உயரமுள்ளதாக அந்த லிங்கபீடத்தை அமைக்கலாம். இது உத்தமம். இவ்விரண்டளவுகளுக்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டு கூறாகச்செய்து முன்போலவே மேலும் ஏழு அளவுகள் லிங்கபீடத்தின் உயரத்திற்குக் காச்யபீயத்தில் கூறப்பட்டுள்ளன.

"பீடவ்யாஸம் த்ரிதா க்ருத்வா த்விபாகம் சோத்தமோச்சகம் ।
வ்யாஸார்த்தமதமோச்சம் ஸ்யாத் தயோர்மத்யேऽஷ்டதா பஜேத் ।
நவதா பீடதுங்கம் து உத்தமாதி த்ரயம் த்ரயம் ॥"

(காச்யபீயம் 58வது படலம்)

என்பன ஆங்கு இவ்விஷயத்தை விளக்கும் சுலோகங்கள். "பீடத்தின் அகலத்தை மூன்று கூறு செய்து இரண்டு பாகத்தளவு பீடத்தின் உயரம் அமைப்பது சிறந்தது. பீடத்தின் அகலத்தில் பாதியளவு அதன் உயரம் அமைப்பது அதமபக்ஷம். இவ்விரண்டின் இடையிலுள்ள பாகத்தை எட்டுகூறாகச் செய்தால் லிங்கபீடத்தின் உயரத்திற்கு ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன" என்பது இதன்

(1) "த்ர்யம்ஶகம்" என்றும் பாடம்.

த்ர்யம்ஶவ்யாஸத்ர்யம்ஶாத்ரைகம் ததர்தாதேக ஏவ வா ।
[1]விஷ்கம்பாஷ்டாம்ஶகம் த்ர்யம்ஶம் த்ரிபாகம் வாபி விஸ்ருதம் ॥ ௭ ॥

கருத்து. அதாவது, லிங்கபீடத்தின் அகலம் மூன்றடி என்று வைத்துக்கொள்வோம். அதை மூன்று கூறுகச் செய்து அதில் இரண்டு பாகமாகிய இரண்டடி லிங்கபீடத்தின் உயரமாகக் கொள்ளத்தகும். இது உத்தமம். லிங்க பீடத்தின் அகலமாகிய மூன்றடியில் பாதியளவாகிய ஒன்றரை அடி உயரம் லிங்கபீடத்தை அமைக்கலாம். இது அதமபக்ஷம். இவ்விரண்டின் இடைப்பகுதியை எட்டு பாக மாக்கும் வகையாவது:—

(1)	லிங்கபீடத்தின் மொத்த அகலம்	3 அடி.	அதன் உயரம்	2 அடி.
(2)	,,	3 அடி;	,,	1 அடி 11¼ அங்.
(3)	,,	3 அடி;	,,	1 அடி 10½ அங்.
(4)	,,	3 அடி;	,,	1 அடி 9¾ அங்.
(5)	,,	3 அடி;	,,	1 அடி 9 அங்.
(6)	,,	3 அடி;	,,	1 அடி 8¼ அங்.
(7)	,,	3 அடி;	,,	1 அடி 7½ அங்.
(8)	,,	3 அடி;	,,	1 அடி 6¾ அங்.
(9)	,,	3 அடி;	,,	1 அடி 6 அங்.

இவ் விஷயங்கள் இங்கு சுருக்கமாக ஒரே சுலோகத்தின் பாதியுள் அடக்கிக் கூறப்பட்டுள்ளன. ஆனால் காச்யபீயத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதனுல் இந்நூலின் கருத்தைத் தெளிவிக்கக் கருதி காச்யபீயத்தின் சுலோகங்கள் இங்கு உரையுடன் எழுதப்பெற்றன.

௭—அ

மீண்டும் லிங்கபீடத்தின் அகலத்தினளவு ஒன்றரை சுலோகங்களால் விளக்கப்படுகின்றது. லிங்கத்தின்

---

(1) காச்யபீயத்தில் 68வது படலத்தில்:

"ஸ்வயம்பூர்விஷ்கம்பம் ததர்தாதேகதேஶத: ।
தத்ர்யம்ஶம் வா ஸ்யாத்ர்யம்ஶமேவ வா ।
த்ர்யம்ஶம் ச விஸ்தாரம் பீடாநாம் விஶேஷத: ॥"

என்று கூறப்பட்டிருத்தலால், இங்கு "விஷ்கம்பம்" என்பது லிங்கத்தின் அகலமே என்பது ஊகிக்கப்படுகின்றது.

பீடம் கண்டயுதம் க்ருத்வா விஷ்ணும்ஶஸமேநோச்சம் வாபி ஸமுச்ச்ரயா ।
மூர்த்நாய[1] ஸவிஸ்தாராஷ்டாம்ஶாதிகம் தத: ॥ ௮ ॥

அகலத்தைப்போல் மூன்றுமடங்கு லிங்கபீடத்தின் அகலம் இருக்கலாம். அல்லது லிங்கத்தின் சுற்றளவுக்குச் சமமாக லிங்கபீடத்தின் அகலம் இருக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை மூன்று கூறாகச் செய்து அதில் ஒரு பாகத்திற்குச் சமமாக லிங்கபீடத்தின் அகலத்தை அமைக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அளவையே நான்கு கூறாகச் செய்து அதில் ஒருபாகம் லிங்கபீடத்தின் அகலமாக அமைத்தலும் தகும். லிங்கத்தின் அகலத்தினுடைய கர்ணத்தை ஆதாரமாகக்கொண்டு அதைப்போல் மூன்று மடங்கு அகலமுள்ளதாகவோ அல்லது இரண்டு மடங்கு அகலமுள்ளதாகவோ லிங்கபீடத்தை அமைக்கலாம். சிவலிங்கத்தில் முதலில் பிரம்மாம்சமும், பிறகு விஷ்ணுவின் அம்சமும், அதற்குப் பிறகு சிவாம்சமுமாக மூன்று பாகங்கள். அவற்றில் விஷ்ணவம்சத்திற்குச் சமமாக லிங்கபீடத்தின் உயரம் இருக்கவேண்டுவது மிகவும் முக்கியம். எக்காரணத்தாலும் இவ்விஷயம் தவறாது கவனித்துக்கொள்ளப்படவேண்டும். காண்பதற்கு அழகாகத் தோன்றுவதற்காக லிங்கபீடத்தின் மேல்புறம் உள்ள அகலத்தைப்போல் எட்டில் ஒரு மடங்கு அடிப்புறத்தில் அகலம் அதிகமாக இருக்குமாறு அமைக்கவேண்டும்.

பீடவ்யாஸம் ஸமவ்யாஸம் விஷ்ணுபாகஸமோந்நதம் ।
ஸார்தத்ர்யம் நாஹமாநம் லிங்கமாநம் பீடிகாஸமம் ॥

உபாநபாஹ்யவிஸ்தாரம் ஸமேஷ்வஷ்டாம்ஶ விஷயேத ।
ததஷ்ட நவஷ்டாம்ஶஹீநம் பாஹ்யவிஸ்தாரகம் ॥

என்னும் காச்யபீய (58...14, 15) சுலோகங்களைத் தழுவியும், இந் நூலில் இதே அத்தியாயத்தில் 15, 16 சுலோகங்களைத் தழுவியும் “ஸவிஸ்தாராஷ்டாம்ஶாதிகம்” என்னும் பகுதிக்குப் பொருள் தரப்பட்டுள்ளது.

1 ஸர்வேஷாமபி பீடாநாம் ஜந்மாக்²யம் மூலவிஸ்த்ருதி: |
பீடாக்³ரஸ்ய ச விஸ்தார: ஸ்யாந்மஹாபட்டிகாந்தகம் || ௯ ||
நாக³ராதி³த்ரயாணாம் ச பீட²லக்ஷண உச்யதே |
த்ரிவர்ணாம்ஶஸமாயாமேந தத்³வ்யாஸ இதி ஹோத்தமம் || ௰ ||

நாகர, வேஸர, திராவிட பீடங்களின் பொது இலக்கணம்—௯-௧௪.

இந்த சுலோகத்தில் நாகரம், திராவிடம், வேஸரம் என்று மூன்று வகையான பீடங்களுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகின்றது. பீடங்கள் யாவற்றுக்கும் "ஜன்மம்", "உபானம்" என்று வழங்கப்படும் அடிப்புறத்தி னளவு மூலவிஸ்தாரம். அதாவது அடிப்பாகத்தின் அகலம். பீடத்தின் நுனியின் அகலம் மஹாபட்டிகை அளவாக இருக்கும்.

பிரம்ம, விஷ்ணு, சிவாம்சமென்று மூன்றாக அமைந்துள்ள லிங்கத்தின் முழு நீளத்துக்குச் சமமான அகலமுள்ள பீடம் உத்தமம். பூஜாம்சத்தைப்போல் இருமடங்கு அகல முள்ள பீடம் அதமம். இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டு கூறாகச் செய்து மொத்தத்தில் ஒன்பது அகல அளவுகள் லிங்கபீடத்துக்குக் கூறப்பட்டன முன்பு ஐந்தாவது சுலோகத்தில். இது நாகரமென அறியத்தக்கது.

வேஸர லிங்கபீடத்தின் இலக்கணம்.

இதிலும் உத்தம பீடத்தின் அகலம் நாகரத்தில் போலவே (த்ரிகண்ட லிங்கத்தின் உயரத்தினளவு) கண்டு கொள்வது. லிங்கத்தின் உயரத்தை ஒன்பது கூறாகச்

---

(1) இங்கு காச்யபீயத்தில், "நாகரலக்ஷணமுச்யதே" என்றும், "ஸவம் த்ராவிடமுச்யதே" என்றும், நாகர, வேஸர, த்ராவிட மென்று முவகைப்பட்ட பீடங்களின் இலக்கணத்தைத் தனித் தனியாக முதலில் கூறிவிட்டு, பிறகு எல்லாவற்றுக்கும் பொதுவான விஷயத்தைக் கூறுமிடத்தில் எல்லாவிதமான பீடங்களுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகிறது. இந் நூலிலும் அதே வழியிலேயே பீடலக்ஷணம் விளக்கப்பட்ட தாயினும் தனிப்படுத்திக் கூறப்படவில்லை. பின்புவரும் 10 to 13 சுலோகங்களில் தனித்தனியாக கூறப்படுகிறது.

உத்ர்யாதி பஞ்சபா⁴கா³ந்தம் நவகம் நாக³ரே ஸ்ம்ருதம் ।
வேஸரே(அ)த்⁴யர்த⁴ம் கேவலம் நீசே தத்³வத் ஸ்ம்ருதம் ॥ ௧௫ ॥
தயோ: பூர்வோக்தயா ஸங்க்²யா பீட²வ்யாஸா நவ ஸ்ம்ருதா: ।
ஸாஷ்டாம்ஶே ப்³ரஹ்மவிஷ்ண்வம்ஶே த்ர்யேகாம்ஶ உபஸ்தி²தே ॥
ஶேஷோச்ச நந்த³ நீசாதி³ பீடோ²ச்சம் த்³ராவிடே³ ஸ்ம்ருதம் ।
ஸப்த வேஸரலிங்க³ஸ்ய த்ர்யஷ்டாம்ஶே பரிணாஹகே ॥ ௧௬ ॥

செய்து அதில் ஏழுபாகம் அளவு அகலமுள்ள பீடம் வேஸரத்தில் அதமமாகக் கொள்ளப்படும். இவ்விரண்டு அளவுகளின் இடையிலுள்ள பகுதியை எட்டு கூறாகச் செய்து ஒவ்வொரு பாகத்தையும் லிங்கபீடத்தின் அகலத்திற்கான அளவாக வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறாக மொத்தத்தில் லிங்கபீடத்தின் அகலத்திற்கான அளவு ஒன்பது வகையாகின்றது. இந்தமுறை வேஸர லிங்க பீடங்களுக்கேற்றதாகக் கொள்ளப்படும். முன் கூறிய வகையில் கணக்கிட்டு இதையும் ஊகித்தறிக.

த்ராவிட லிங்கபீடத்தின் இலக்கணம்

லிங்கத்தின் பிரம்மாம்சம், விஷ்ணவாம்சம் இவ்விரண்டு பாகத்தையும் சேர்த்து எட்டுகூறாகப் பண்ணி, அடிப்புறத்தில் மூன்று பாகத்தைவிட்டு எஞ்சிய ஐந்து பாகத்தை லிங்கபீடத்தின் உயரமாகக் கொள்ளவேண்டும். இது அதமம். அவ்வாறே செய்து அடிப்புறத்தில் இரண்டு பாகத்தைவிட்டு மீதியுள்ள பகுதியை லிங்கபீடத்தின் உயரமாகக் கொண்டால் இது மத்யமமான அளவாகும். அதிலேயே ஒரு பாகத்தைக் கீழ்ப்புறத்தில் ஒதுக்கி பாக்கியுள்ளதை லிங்கபீடத்தின் உயரத்தினளவாகக் கொள்வதும் உண்டு இது உத்தமம். இவ்வாறாகக் கணக்கிட்டு ஊகித்தறிக.

வேஸரலிங்க பீடத்தின் இலக்கணம்.

வேஸர லிங்கத்தின் சுற்றளவைப் பதினாறு கூறாகச் செய்யவேணும். அவ்வளவு அகலமே அதன் பீடத்திலும் அமைக்கவேண்டும். இது உத்தமபக்ஷம். வேஸரலிங்கத்தின் சுற்றளவைப் பதினாறு கூறாகச் செய்ததில் பன்னிரண்டு பாகம் அதன் பீடத்தின் அகலம அமைப்பது அதம

ஶைவ்யம் ஹி தத்ஸமம் ப்ராஹ்மம்
கேஶாம்ஶமேவ தயா ஹரேத் ।
விஷ்ணோர்பாகோ த்வயம் தஸ்யா-
ஸ்தாயாம்ஶாதிகம் ததா ॥ ௯௪ ॥

பக்ஷம். இவ்விரண்டின், இடையிலுள்ள பகுதியை எட்டு கூறுக்கி மற்றும் ஏழு அளவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதெங்ஙனே என்னில்:

(1)	லிங்கத்தின் சுற்றளவு	16 அங்.	பீடத்தின் அகலம்	16 அங்.
(2)	,,	16 அங்;	,,	15½ அங்.
(3)	,,	16 அங்;	,,	15 அங்.
(4)	,,	16 அங்;	,,	14½ அங்.
(5)	,,	16 அங்;	,,	14 அங்.
(6)	,,	16 அங்;	,,	13½ அங்.
(7)	,,	16 அங்;	,,	13 அங்.
(8)	,,	16 அங்;	,,	12½ அங்.
(9)	,,	16 அங்;	,,	12 அங்.

இதுபோல் ஊகித்தறிந்துகொள்ளவேண்டும்.

அந்த லிங்கபீடத்தின் உயரம் விஷ்ணுபாகத்தின் அளவாக இருக்கும். அதாவது லிங்கத்தின் உருவத்தில் பிரம்ம, விஷ்ணு, சிவாம்சம் என மூன்று பாகங்கள் உண்டல்லவா? அவற்றில் விஷ்ணுபாகம் எவ்வளவு உயரமோ

---

(1) "த்வாதஶாக்ஷரா ஜகதீ" என்பது வேதவாக்கியம். அதன்படி ஜகத்யம்சம் என்பதற்குப் பன்னிரண்டு அம்சம் என்று பொருள் தரப்பட்டுள்ளது. இங்கு "தயாஹரேத்" என்பது பொருத்தமுள்ளதாகத் தோற்றவில்லை. அதனால் "தயாயரேத்" என்று பாடமிருப்பதாக மனதில்கொண்டு, 'இது அதமபக்ஷம்' என்று மொழி பெயர்ப்பு எழுதப்பெற்றுளது. காச்யபீயத்தில் 58வது படலத்தில்,

"பங்க்திஜாம்ஶஸ்ய பரிணாஹஸமம் ஶ்ரேஷ்டம் விஶாலகம் ।
பரிணாஹே ஜகாம்ஶேத மாநம்ஶ ஶயம்கவிதி ।
தயோர்மத்யே ஹ்ருஷ்டமாமேத நவதா ஸம்விபஜ்யது ॥"

என்று பாடமிருப்பதை ஆதாரமாகக்கொண்டு இவ்வாறு உரை எழுதப்பெற்றது.

(2) "தஸ்யாஸ்து" என்றும் பா[illegible]ண்டு.

ஸர்வேஷாமேவ லிங்கோச்சம் பீடோச்சாத்விஶேஷிதம் ।
பீடோர்த்வஸ்ய விஷ்கம்பாத் அஷ்டநந்ததிஶாம்ஶகை: ॥ ௨௫ ॥
ஹீந: பீடாக்ர விஷ்கம்போ ஹ்யேதே த்ரயோத்தமே ।
நாகராதி த்ரயம் பீடம் க்ரமேண ஸமுதாஹ்ருதம் ॥ ௨௬ ॥
சதுரஶ்ரம் சாஷ்டாஶ்ரம் வ்ருத்தமேதத் க்ரமாத் ததம் ।
பீடம் நிஷ்கலலிங்கானாம் விஜ்ஞேயம் ஸர்வதஸ்ஸமம் ॥ ௨௭ ॥
ஆயதம் ப்ரதிமாநாம் ஸ்யாத் ஸகலேத்வர்தசந்த்ரகம் ।

அவ்வளவு வரை லிங்கபீடம் உயர்ந்திருக்கவேண்டுமென்றவாறு. எல்லா லிங்கங்களிலும் பீடத்தின் உயரம்போக மீதியுள்ளது லிங்கத்தின் உயரமாகும்.

௨௫–௨௬

பீடத்தின் அடிப்புறத்திலுள்ளதைக்காட்டிலும் அதன் மேல்புறத்தின் அகலம் 8, 9 அல்லது 10-ல் ஒரு அம்சங்கள் குறைவாக இருக்கவேண்டும். இம் மூன்றும் முறையே அதம, மத்யம, உத்தமபக்ஷங்களாம்.

நாகரம், வேஸரம், த்ராவிடம் என வழங்கப்படும் மூன்று வகையான பீடங்களும் முறையே விளக்கப்படுகின்றன. இம்மூன்றில் முதலாவது சதுரமாக இருக்கும். இரண்டாவது எட்டு கோணமுள்ளதாயிருக்கும். மூன்றாவது வட்டவடிவமாயிருக்கும்.

௨௭

லிங்கங்கள், நிஷ்களம் என்றும் ஸகளம் என்றும் இரு வகைப்படும். அவற்றுள் நிஷ்களமான லிங்கங்களுக்கு அமைக்கப்படும் பீடம் எல்லா பக்கங்களிலும் ஸமானமாக இருக்கவேண்டும். ப்ரதிமைகளுக்கு அமைக்கப்படும் பீடம் நீண்டதாக இருக்கும். ஸகலமான லிங்கங்களுக்கு அமைக்கப்படும் பீடம் அரைச்சந்திர வடிவமுள்ளதாக இருக்கும்.

இனி பன்னிரண்டு வகையான லிங்கபீடங்கள், தனித்தனியான அளவும் அமைப்பும் உள்ளவை விளக்கப்படுகின்றன. அவற்றுள் முதலில் கூறப்படுவது:—

(க) மேருஸுந்தர பீடம்—௨௮-௨௯

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினைந்து பாகமாகச் செய்து (மனதில்) வைத்துக்கொள்ளவேண்டும்.

ஏகாம்ஶேந பீடோர்த்⁴வே ஜாநாதா⁴ரஸ்யாந்மூலபட்டிகா ।।
பத்³மம் த்ரிபி⁴ர்பா⁴கைரர்த⁴பா⁴கேந கம்பம் ததா² க்ஷுத்³ரகம் ।
வ்ருத்தம் த்³வ்யம்ஶம் பாதோ³ர்த்⁴வம் அர்த⁴பா⁴கேந கம்பகம் ।। கரு ।।

பா⁴க³த்³வ்யேந கண்டா²வ்ரு-
அர்த⁴பா⁴கேந ப்ரதிவாஜம் ஸ்ருதம் ।
அர்த⁴பா⁴கேந கம்பம் த்³வ்யம்ஶேநோர்த்⁴வ
ஸ்த்ரோத்ரேணோர்த்⁴வபட்டிகா ।। உய ।।

அதில் ஒரு பாகத்தில் மூலபட்டிகையை அமைக்கவேண்டும். பீடத்தின் அடிப்புறத்திலுள்ள பட்டிகையே மூல பட்டிகை எனப்படும். ஜன்மம், உபானத் எனப்படுவதும் இதுவே. இதன்மேல் தாமரைமலர் மூன்று பாகங்கள். அரை பாகம் கம்பம். பிறகு அரை பாகத்தில் க்ஷுத்ர பத்மம் (சிறு தாமரை மலர்). பிறகு இரண்டு பாகங்கள் வட்டவடிவமான நிலையில் அமைக்கவேண்டும். மீண்டும் அரைப் பாகத்தில் க்ஷுத்ரபத்மமும், மேல் அரைப்பாகத்தில் கம்பமும் அமைக்கவேண்டும். அதன்மேல் இரண்டரை பாகத்தினால் கண்டம் (கழுத்துபோல் பீடத்தில் உள்ளடங்கிய பகுதி "கண்டம் – களம்" எனப்படும்). பிறகு அரைப்பாகத்தினால் மேல்நோக்கியவாறாக க்ஷுத்ர பத்மம் ஒன்று அமைக்க வேண்டும். அதன்மேல் அரைப்பாகத்தில் கம்பம். பிறகு இரண்டு பாகத்தில் ஊர்த்வ பட்டிகையை அமைக்க வேண்டும். அதன்மேல் கம்பவடிவமான ஆஜ்யதாரிணியை அரைப் பாகத்தில் அமைக்கவேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் பீடத்திற்கு "மேரு ஸுந்தரம்" என்று பெயர்.

பீடத்தின் மொத்த உயரம் பதினான்கு பாகம் :—

(1) மூல பட்டிகை	1	(8) கண்டம்	2½
(2) தாமரை மலர்	3	(9) மேல்நோக்கிய தாமரைமலர்	½
(3) கம்பம்	½	(10) கம்பம்	½
(4) க்ஷுத்ரபத்மம்	½	(11) ஊர்த்வபட்டிகை	2
(5) வட்டம்	2	(12) கம்பாஜ்ய தாரிணீ	½
(6) க்ஷுத்ரபத்மம்	½		
(7) கம்பம்	½	ஆக அம்சம்	14

இவ்வாறாக அமைக்கப்படுவது 'மேரு ஸுந்தர பீடம்' எனப்படும்.

सम्पाद्यानिष्टयेन स्यादेवं क्षेत्रसंयुतम् ।
अष्टादशांशे पीठोच्चे जन्म द्व्यंशं विमानतः ॥ २१ ॥
चतुर्भिर्जगतीं कुर्यात् कुमुदं त्रिभिरंशकैः ।
कम्पं, कण्ठमेकेन स्रक्पाशादब्जमन्ततः ॥ २२ ॥
वृत्तं चतुर्भिः कुम्भेन पद्ममर्धेन कम्पकम् ।
त्रिभिः कण्ठं तथांशेन वाजनं स्यात् समन्ततः ॥ २३ ॥

லக்ஷ்மீஸுந்தரபீடம்—உக-உச.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகங்களாகப் பிரித்துக் (மனதில்) கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் விவரிக்கப்படுகின்றது:—

அடியில் இரண்டு பாகம் ஜன்மம் (உபாகம்). பிறகு நான்கு பாகங்களில் [1]ஜகதி. அதன்மேல் மூன்று அம்சங்களால் [2]குமுதம் அமைக்கவேண்டும். பிறகு ஒரு பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். அதன்மேல் ஒரு அம்சத்தில் கண்டம் (சற்று உள்ளடங்கிய பாகம்) அமைக்கவேண்டும். "ஸ்ரக்பாசாதப்ஜ மந்தத:" என்னும் பகுதிக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை. "அந்தத:" என்பது "அம்சத:" என்றிருக்கக்கூடுமோ என்ற ஐயமும் தோன்றுகிறது: "மாலைபோன்ற பாசத்தினால் க்ஷுத்ரபத்மம் ஒரு அம்சத்தில் அமைக்கவேண்டும்" என்று ஒருவகையாகப் பொருள் கொள்ளக்கூடும். அதன்மேல் நான்கு அம்சங்களால் வட்ட வடிவமான குமுதகம் அமைக்கவேண்டும். பிறகு ஒரு அம்சத்தில் மற்றொரு க்ஷுத்ரபத்மம் அமைக்கவேண்டும். பிறகு அரை பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். பிறகு மூன்று அம்சங்களில் 'கண்டம்' அமைத்து, ஒரு பாகத்தால் கம்பம் அமைக்கவேண்டும். அதன்மேல் இரண்டு பாகங்

(1) பீடத்தில் மூலபட்டிகையின்மேல் சிறிது உயரம் வரை சுவர் போல் சமமாக அமைக்கப்படும் பாகம் "ஜகதி" எனப்படும்.

(2) அதன் மேல்புறத்தில் விளிம்புபோல் உருண்டையாக வெளியில் வளர்ந்துவந்திருக்கும் பாகம் குமுதம் எனப்படும். இது வட்டமாகவும், மூன்று பட்டையாகவும், பல சித்திர வேலைப் பாடுகளுடனும் பலவகையாக இருக்கும்.

த்ரி (த்ரயம்? த்ர்யம்ஶ) பட்டிகாம் அர்த்தாம்ஶா-
த்க்ஷுத்ராப்ஜம் க்ருதவாரியுக்தவேத் ।
லக்ஷ்மீஸுந்தரஸம்ஜ்ஞம் து
பீடமேவம் ப்ரகீர்த்திதம் ॥ ௨௯ ॥

களால் நீவ்ரபட்டிகையை அமைத்து, பிறகு அரைப்பாகத்தால் க்ஷுத்ரபத்மம் அமைத்து அதையே "க்ருதவாரி"யாக அமைக்கவேண்டும். இவ்வாறாக அமைக்கப்படுவது "லக்ஷ்மீஸுந்தரபீடம்" என்னும் பெயருடன் வழங்கப்படும்.

பீடத்தின் மொத்த உயரம் 18 பாகம் :—

(1)	ஜன்மம் (உபாநம்)	2	பாகம்
(2)	ஜகதீ	4	,,
(3)	குமுதம்	3	,,
(4)	கம்பம்	1	,,
(5)	கண்டம்	1	,,
(6)	ஶ்ரக்பாசாப்ஜம்	1	,,
(7)	வட்டம்	4	,,
(8)	க்ஷுத்ரபத்மம்	1	,,
(9)	கம்பம்	½	,,
(10)	கண்டம்	3	,,
(11)	கம்பம்	1	,,
(12)	வாஜனம் (கம்பம்)	1	,,
(13)	நீவ்ர பட்டிகை	2	,,
(14)	பத்மாஜ்ய த்ருக்	½	,,
	ஆக	25	பாகம்

குறிப்பு :— இந்த லக்ஷ்மீஸுந்தர பீடத்தில், பீடத்தின் மொத்த உயரத்தை 18 பாகமாக்கி மேல் விவரங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் சில்லரையாகக் கூறப்பட்டுள்ள உறுப்புக்களின் பாகங்களைக் கூட்டினால் 25 பாகம் வருகின்றது. அதனால், மூலத்தில் " அஷ்டாதசாம்சே பீடோச்சே" என்பதை " பஞ்சவிம்சாம்ச பீடோச்சே" என்று இருந்தினால் கருத்து சரியாகி விடும். காச்யபீயம் போன்ற மற்ற நூல்களிலும் இந்த லக்ஷ்மீ ஸுந்தர பீடத்தைப்பற்றிய விவரம் கிடைக்கவில்லை. அதனால் உள்ளதை உள்ளபடியே அச்சிட்டனம். இதைக் கண்ணுறும் அன்பர்கள் ஆராய்ந்து உண்மையை அறியவேண்டும்.

பீடோத்ஸேதே ஷோடசாம்சேது வாச்விஹ்ருத்கராங்க்ரிபி: ।
கமலேநைகேந ஜகதீ த்வாப்யாம் வக்த்ரஞ்ச பட்டிகா ॥ உரு ॥
பட்டிகா ஊர்த்வாம்புஜம்ச விஷ்ணுஸம்மீலநாஹ்வயே ।
அஷ்டாதசாம்சே பீடோத்ஸேதே ஹ்யேவம் ஸாம்புஜாம்சக:பரம் ॥
ஸாம்புஜ்யேந ஜகதீ ஸாம்புஜேநாப்ஜம் த்ருவாம்புஜ: ।
பட்டம் சாம்புஜேநாபட்டா கண்டம் த்ர்யம்சம் ததூர்த்வக: ॥

(ங) விஷ்ணுஸம்மீலனபீடம்—உரு-உசு.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாக்கிக் கொள்ளவேண்டும். அதனுள்:—

(1)	ஜகதி	2 பாகம்
(2)	தாமரைமலர்	5 ,,
(3)	கம்பம்	2 ,,
(4)	தாமரைமலர்	4 ,,
(5)	பட்டிகை	2 ,,
(6)	க்ருதவாரி	1 ,,
	ஆக	16 பாகம்

என்று இவ்வாறு உறுப்புக்களை அமைக்கவேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் லிங்கபீடம் "விஷ்ணு ஸம்மீலன பீடம்" எனப்படும். இந்தப் பீடத்தில், மற்றவைகளில்போல் தொடக்கத்தில் உபானத் அல்லது ஜன்மம் எனப்படும் பகுதி இருக்காது. அந்த ஸ்தானத்தில்தான் முதன் முதலிலேயே "ஜகதி" என்னும் உறுப்பு 2 அம்சங்களில் அமைக்கப்படுகின்றது.

(ச) பத்மபத்ரபீடம்—உசு-உகூ.

இதில் பீடம் இருக்கவேண்டிய மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாகச்செய்துகொண்டு அதன்மேல் அதன் உறுப்புக்களை அமைக்கவேண்டும்:—

உபபட்டம் கலாம்சயுக்தம் பட்டம் அர்தேந வாஜநீ ।
த்வ்யம்சம் வாஜநமித்யுக்தம் அர்தேந பட்டாஜ்யத்ருக்பவேத் ॥ ௨௮ ॥

பத்மபத்ரமிதம் பீடம் விஜ்ஞேய த்விஜஸத்தம ।
ப்ருதக்த்வேந பீடபேதாஸ்து ப்ருதக்வா யுக்தயுக்தித: ॥

---

(1)	ஜன்மம்	$1\frac{1}{2}$	பாகம்
(2)	ஜகதி	$3\frac{1}{2}$	,,
(3)	தாமரைமலர்	$1\frac{1}{2}$	,,
(4)	கம்பம்	$\frac{1}{2}$	,,
(5)	பட்டம்	$\frac{1}{2}$	,,
(6)	உபபட்டம்	$\frac{1}{2}$	,,
(7)	கண்டம்	3	,,
(8)	உபபட்டம்	$\frac{1}{2}$	,,
(9)	பட்டம்	$\frac{1}{2}$	,,
(10)	வாஜனம்	2	,,
(11)	பட்டாஜ்யத்ருக்	$\frac{1}{2}$	,,
	ஆக	$14\frac{1}{2}$	பாகம்

இவ்வாருக அமைக்கப்படும் பீடம் "பத்மபத்ர பீடம்" எனப் படும்.

குறிப்பு:—இந்த பத்மபத்ர பீடத்திலும் ஒரு தவறு உளது. இதன் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாகச் செய்து விவரம் கூறத்தொடங்கியவர் பதினாலரை பாகங்களுக்கே விவரம் தருகிருர். மற்ற மூன்றரை பாகங்களுக்கான உறுப்புக்களோ அல்லது அவற்றின் அம்சத்தின் விளக்கமோ தரப்படவில்லை. "குமுதம்" என்னும் உறுப்பு இந்த பீடத்தில் கூறப்படவில்லை. அதையும் அதன் இருபுறங்களிலும் அமைக்கப்படவேண்டிய கம்பங்கள் அல்லது பத்மங்கள் ஆகியவற்றின் அளவுகளையும் கூட்டினுல் விடப்பட்ட மூன்று பாகங்கள் சரியாகலாம். அச்சிட்ட மூல புஸ்தகத்தில் அவ்வாருன கருத்துள்ள சுலோகம் காணப்படவில்லை. அறிவாளிகள் இதை ஆராய்ந்தறிய வேணும்.

அர்தேந கம்ப: ஸார்தத்வ்யம்ஶம் ஸார்தத்வ்யம்ஶம் வாஜநம் ந்யஸேத் ।
பட்டோபபட்டாவர்தாம்ஶௌ கண்டாம்ஶேந பட்டிகா: ॥
உபபட்டோர்த்வமஷ்டாஶ்ர: கும்பஸ்யாத் வேதபாகத: ।
பஞ்சாம்ஶா ஜகதீ தத்வத் ஸார்தாம்ஶேந உபானம் ந்யஸேத் ॥

---

(௫) ஸாமாங்கபத்ரபீடம்—௨௯-௩௧.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அதனுள்:- (இதில் உறுப்புக்களின் கணக்கு மேலிருந்து கீழ்நோக்கித் தரப்படுகின்றது.)

(1)	க்ருதவாரி	½	பாகம்
(2)	கம்பம்	½	,,
(3)	வாஜநம்	2½	,,
(4)	பட்டம்	½	,,
(5)	உபபட்டம்	½	,,
(6)	கண்டம்	2	,,
(7)	பட்டம்	½	,,
(8)	உபபட்டம்	½	,,
(9)	எட்டுபட்டையுள்ள கும்பம்	4	,,
(10)	ஜகதி	5	,,
(11)	உபாநம்	1½	,,
	ஆக	18	பாகங்கள்.

இது அழகிய "ஸாமாங்கபத்ரபீட"மென வழங்கப்படும்.

இந்த ஸாமாங்கபத்ர பீடத்தில் 31-வது சுலோகத்தில் "உபபட்டோர்த்வமஷ்டாஶ்ர:" என்று மூலம் உள்ளது. "உபபட்டம் மேலிருக்கவேண்டும்" என்பது அதன் பொருள். உறுப்புக்களின் உயரத்தின் அளவைக் கூறுமிடத்தில் இச்சொல் பொருந்தவில்லை. அதனால் "உபபட்டோர்த மஷ்டாச்ர:" என்று பாடம் இருப்பதாக வைத்துக்கொண்டு "அர்தம்" என்பதற்குப் "பாதி" என்னும் பொருள் உள்ளமையின் "உபபட்டம் அரைபாகம்" என்று பொருள் தரப்பட்டது.

वृत्तस्य सार्धांशहान्या पीठं भवति शोभनम् ।
कृत्यदृष्ट्यंशके पीठोच्चे वप्रं भागेन वह्निना ॥

पद्ममध्यर्धं भागेन अर्धं कम्पो द्व्यंशकः ।
कम्पार्धेनार्धेन नाम्भोजं वृत्तं (सार्धं
सार्ध)तो भवेत् ॥ ௧௩ ॥

पट्टेनार्धेन कण्ठांशः कम्पार्धेन तदूर्ध्वजम् ।
द्व्यंशं वाजनमर्धेन पद्मं क्षेपणमर्धकः ॥ ௧௪ ॥

---

(௩) ருத்ரகாந்தபீடம்—௧௨-௧௫

இந்த பீடத்தில் அதன் மொத்த உயரத்தைப் பதினேழு பாகமாகச் செய்து உறுப்புக்களின் விவரம் தரப்படுகிறது. அதனுள் :—

(1)	உபாநம்	1	பாகம்
(2)	வப்ரம் (ஜகதி)	4	,,
(3)	பத்மம்	1½	,,
(4)	கம்பம்	½	,,
(5)	க்ருக்	1	,,
(6)	கம்பம்	½	,,
(7)	க்ஷுத்ரபத்மம்	½	,,
(8)	வட்டம்	2	,,
(9)	க்ஷுத்ரபத்மம்	½	,,
(10)	பட்டம்	½	,,
(11)	கண்டம்	1	,,
(12)	கம்பம்	½	,,
(13)	க்ஷுத்ரபத்மம்	½	,,
(14)	வாஜநம்	2	,,
(15)	க்ஷுத்ரபத்மம்	½	,,
(16)	க்ஷேபணம் (கம்பம்)	½	,,
	ஆக	17	பாகங்கள்

இவ்வாறாக அமைக்கப்படுவது மிகவும் அழகான "ருத்ர காந்த பீடம்" என்று வழங்கப்படும்.

ஸகலிர்ப்ரகாஶாத்³யம் பீட²ம் த்³ரவ்யம் ஸர்வஶோப⁴னம் ।
ஜகதீ த்³வ்யம்ஶிகே பீடே² பா⁴க³ம் பத்³மாம்ஶகௌ ॥ ௧௫ ॥

வப்ரம் மஹாப்³ஜம் வேதாம்ஶே யுக்³மார்த⁴ம் வேத்ரம்ஶக꞉ ।
அர்த⁴ம் பத்³மம் ஸார்த⁴மப்³ஜம் வ்ருத்தமர்த⁴யுதே ப⁴வேத் ॥ ௧௬ ॥

அர்த⁴னோர்த்⁴வக³தம் க்ஷுத்³ராப்³ஜ
வேத்ராம்ஶம் யுக்³மயுக்தக꞉ ।
அம்ஶேன வேத்ரம் ஸார்த⁴ம்ஶே
த்ரிஸார்தோ⁴ர்த்⁴வாம்ஶமப்³ஜம் ப⁴வேத் ॥ ௧௭ ॥

அத்⁴யர்த⁴ம் க்ருதவ்ருத்தம் ஸோமகாந்தம் ததீ³ரிதம் ।
பீடோ²த்³வே ஷோட³ஶாம்ஶேஷு ஸாமான்யம் ப்ரகீர்திதா ॥

(எ) ஸோமகாந்தபீடம்—௧௫-௧௮

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பத்தொன்பது பாகமாக வைத்து உறுப்புக்களுக்கு விவரம் தரப்படுகின்றது. அதில்:—

(1)	பூகதம் (உபாநம்)	1	பாகம்
(2)	வப்ரகம் (ஜகதி)	2	,,
(3)	பெரிய தாமரைமலர் (மஹாபத்மம்)	4	,,
(4)	த்ருக்	½	,,
(5)	கம்பம்	1	,,
(6)	கண்டம்	½	,,
(7)	க்ஷுத்ரபத்மம்	½	,,
(8)	வட்டம்	1½	,,
(9)	மேல்நோக்கிய க்ஷுத்ரபத்மம்	½	,,
(10)	கம்பம் (வேத்ரம்)	1	,,
(11)	த்ருக்	½	,,
(12)	வேத்ரம்	1	,,
(13)	மேல்நோக்கிய மஹாபத்மம்	3½	,,
(14)	க்ருதவாரி	1½	,,
	ஆக	19	பாகங்கள்

இவ்வாறாக அமைக்கப்படும் பீடத்திற்கு "ஸோமகாந்த பீடம்" என்று பெயர்.

[illegible] ।
[illegible] ॥ ௩௯ ॥

[illegible] ।
[illegible] ॥ ௪௰ ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௪௧ ॥

---

(௮) ஸர்வாங்கபத்ரபீடம்—௩௮-௪௰

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாகப் பிரித்து உறுப்புக்களின் உயரத்தின் அளவு கூறப்படுகிறது. அவற்றுள்:—

(1)	மூல பட்டிகை (உபாநம்)	2 பாகம்
(2)	மஹாபத்மம் (பெரிய தாமரைமலர்)	4 ,,
(3)	க்ருக்	½ ,,
(4)	கண்டம்	1 ,,
(5)	க்ஷுத்ரபத்மம்	½ ,,
(6)	வட்டம்	1 ,,
(7)	க்ஷுத்ரபத்மம்	½ ,,
(8)	க்ருக்	½ ,,
(9)	மேல்நோக்கிய மஹாபத்மம்	4 ,,
(10)	பட்டிகை வடிவமான க்ருதவாரி	2 ,,
	ஆக	16 பாகங்கள்.

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸர்வாங்க பத்ரபீடம்" என வழங்கப்படும்.

(௯) ஸ்ரீகர பீடம்—௪௧-௪௨

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு கூறு செய்து வைத்துக்கொள்ளவேண்டும். அவற்றுள் :—

(1)	ஜகதீ	2 பாகம்
(2)	மஹாபத்மம்	5 ,,
(3)	க்ருக்	½ ,,
(4)	வேத்ரம்	1 ,,

पट्टिका चाज्यस्रुवेति श्रीकरो स्याद्याकृतिः ।
अत्रैव सार्धांशा जगत्यर्धेन कम्पकम् ॥ ४२ ॥

(पट्टिकायाः स्वदेहांशात् सकम्पा पादषड्भागतः ।
पीठोर्ध्वे षोडशांशे पादांशं शोधयेत्तः ॥

क्षेपणं सार्धदेहांशैः) पट्टिकार्धेन कम्पकम् ।
ऊर्ध्वं वज्रपट्टिकं स्यात् पुष्टिवर्धननामकः ॥ ४४

(5)	த்ருக்	½	,,
(6)	மஹாபத்மம்	4	,,
(7)	பட்டிகை	2	,,
(8)	ஆஜ்யப்ருத் (க்ருதவாரி)	1	,,
	ஆக	16 பாகங்கள்	

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸ்ரீகரபீடம்" என்று வழங்கப்படும்.

(௰) புஷ்டிவர்த்தன பீடம்—௪௨-௪௩.

இந்த ஸ்ரீகர பீடத்திலேயே சிறு மாறுதல் செய்வதன் மூலம் புஷ்டிவர்த்தனம் என்னும் பீடம் அமைக்கலாம். முதலில் அமைக்கப்படும் ஜகதி இரண்டு பாகமில்லாமல் ஒன்றரை பாகத்தில் அமைக்கவேண்டும். அரை பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். பிறகு நான்கு பாகங்களால் கீழ்பட்டிகையும், கம்பமும் அமைக்கவேண்டும். இதுவே புஷ்டிவர்த்தன பீடமெனப்படும்.

(௰௧) ஸௌம்ய பீடம்—௪௩-௪௫.

இதிலும் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாகச் செய்துகொள்ளவேண்டும். அதில்:

குறிப்பு:— சுலோகம் 42 உத்தரார்த்தத்தில் "அத்ரைவ" என்பதை "அதைவ" என்பதாகக்கொண்டு "இந்த ஸ்ரீகர பீடத்திலேயே" என்று மொழிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது. மூலம் மட்டும் உள்ளபடியே அச்சிடப்பட்டுள்ளது. மூலத்தில் உள்ளபடியே பொருத்தமாகப் பொருள்கொள்ளக் கூடுமாயின் அதையும் அறிஞர்கள் கவனிக்கவேண்டும்.

ஏ (யஃ? யுக்மம்) க்ஷேபணம் அம்ஶேந சைவ
பட்டிகா த்வ்யம்ஶம் ஆஜ்யஸ்ருக் ।
ஸாமாந்யம் நாகராதீநாம்
ஸௌம்யம் பீடம் இதம் ஸ்ம்ருதம் ॥ ௪௫ ॥
ஏவம் த்வாதசபேதேந பீடாநாம் லக்ஷ்ம வர்ணிதம் ।

---

(1)	ஜகதம் (உபானம்)	2	பாகம்
(2)	க்ஷேபணம்	½	,,
(3)	மஹாபத்மம்	4½	,,
(4)	கம்பகம்	½	,,
(5)	த்ருக்	½	,,
(6)	வஜ்ரம்	1	,,
(7)	மேல்நோக்கிய மஹாபத்மம்	4	,,
(8)	க்ஷேபணம்	½	,,
(9)	பட்டிகை	2	,,
(10)	ஆஜ்யத்ருக் (க்ருதவாரி)	½	,,
	ஆக	16	பாகங்கள்.

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸௌம்யபீடம்" என்று வழங்கப்படும். இந்த ஸௌம்யபீடம், நாகரம், த்ராவிடம், வேஸரம் முதலியவற்றுக்கெல்லாம் பொதுவானதாகும். இவ்வாறு பன்னிரண்டு வகையான பீடங்களின் இலக்கணம் வருணிக்கப்பட்டது.

குறிப்பு :— பதினொரு விதம்தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் பன்னிரண்டு வகைகள் கூறப்பட்டதாக முடிவில் சொல்லுகிறார். இவ் வத்தியாயம் தொடக்கத்தில் கூறப்பட்ட பத்ம பீடத்தையும் சேர்த்துக்கொண்டு பன்னிரண்டாகக் கொள்ளக் கூடும். அல்லது ஒரு பீடத்தின் இலக்கணத்தை விளக்கும் சுலோகங்கள் சில இவ்விடத்தில் காணாமற் போயிருத்தலும் கூடும். அல்லது அடுத்தாற்போல் கூறப்படும் ஸாமான்ய பீடத்தையும் சேர்த்துப் பன்னிரண்டாக்கலாம். அறிஞர்கள் ஆராய்ந்துணர்க.

𑌅𑌥 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌪𑍀𑌠𑌮𑍍 :—

𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌵𑌪𑍀𑌠𑌕𑍇 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌶𑌰𑌾𑌬𑍍𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌵𑌂𑌶𑌕𑍈𑌃 𑌪𑌾𑌦𑍁𑌕𑌂
𑌪𑍍𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌗𑌤𑍀𑌂 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌮𑍁𑌦𑌕𑌂 𑌤𑌤𑍍𑌪𑌟𑍍𑌟𑌿𑌕𑌾𑌂 𑌪𑌕𑍍𑌷𑌾𑌂𑌶𑌕𑍈𑌃 ।
𑌅𑌂𑌶𑌾𑌦𑍍𑌯𑌾𑌂 𑌗𑌲𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌕𑍇𑌨 𑌗𑌲𑌪𑌟𑍍𑌟𑍀𑌂 𑌜𑌾𑌗𑌤𑍇𑌽𑌬𑍍𑌧𑍍𑌯𑌂𑌶𑌤𑌃
𑌶𑍍𑌰𑍀𑌪𑌾𑌦𑍋𑌽𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌤𑌦𑌪𑌰𑌮𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌶𑌿𑌵𑍇 𑌪𑌟𑍍𑌟𑌿𑌕𑌾𑌸𑍍𑌯𑌾 ॥

ஸாமான்ய பீடம்

சிவபீடத்தின் உயரத்தைப் பதினாறு பாகமாகச் செய்து கொள்ளவேண்டும். அதில் 1 பாகம் பாதுகம், 5 பாகங்கள் ஜகதி, 4 பாகங்கள் குமுதம், 1 பாகம் பட்டிகை, 2 பாகங்கள் கண்டம், 1 பாகம் அதனுடைய பட்டிகை, 4 பாகங்கள் ஜகதி (கண்டத்தின்மேல்), 2½ பாகங்கள் வலபி, எஞ்சிய பாகத்தால் பட்டிகை. சிவ பீடங்களை எப்பொழுதும் இவ்வாறே அமைக்கவேண்டும்.

குறிப்பு :- சிவபீடத்தின் உயரத்தின் அளவைப் பதினாறு கூறாகச் செய்யுமாறு இந்த சுலோகத்தின் தொடக்கத்தில் கூறுகிறார். பிறகு அதற்கு விவரம் கூறுமிடத்தில் 21 பாகங்களுக்குச் செல்லுகின்றது. அதாவது :

(1)	பாதுகம்	1 பாகம்
(2)	ஜகதி	5 ,,
(3)	குமுதம்	4 ,,
(4)	பட்டிகை	1 ,,
(5)	கண்டம்	2 ,,
(6)	பட்டிகை	1 ,,
(7)	ஜகதி	4 ,,
(8)	வலபி	2½ ,,
(9)	பட்டிகை	½ ,,
		ஆக 21-பாகங்களா

கின்றன. அதனால் சிறிது முரண்பாடு உள்ளது. அறிஞர்கள் இதை ஆராய்ந்தறிக.

[illegible] 𑌪𑍀𑌠𑌾𑌨𑌿 [illegible] ।
[illegible]
𑌷𑍋𑌡𑌶𑌾𑌶𑍍𑌰𑌂 𑌚 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚 ॥ ௪௭ ॥

[illegible]

[illegible]
[illegible] 𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌵𑌶𑌿𑌷𑍍𑌟𑌂
[illegible]
[illegible] 𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌂𑌶𑌕𑍇𑌨 ।

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௪௯ ॥

“பீடங்கள் பதினான்கு வகைப்படும்” என்று மயன் கூறினார். அவையாவன:

(1) நான்கு கோணமுள்ளது. (2) ஆறு கோணமுள்ளது. (3) எட்டு கோணமுள்ளது. (4) பன்னிரண்டு கோணங்களுள்ளது. (5) பதினாறு கோணங்களுள்ளது. (6) வட்டவடிவமானது. இந்த ஆறு வகைகளும் சம அளவில் அமைந்தனவாம். இவற்றிலேயே நீண்ட அளவுள்ளதாக மற்றொருவகை அமைக்கலாம், அவை ஆறுவகையாம். ஆக, பன்னிரண்டு விதமாயிற்று. (13) முக்கோண வடிவமானது. (14) பாதி சந்திர வடிவமானது. இவ்வாறாகப் பதினான்கு வகைகள் கூறப்பட்டன.

௪௯

பீடத்தில் பிரதிஷ்டை செய்வதற்கான பாகத்தை ஒதுக்கி, எஞ்சியதை நான்கு பாகமாக்கிக்கொண்டு, இதில் 2 பாகத்தில் “பாதோவலயம்” அமைத்து, 1 பாகத்தால் “உதகதாத்ரீ” (க்ருத்வாரி)யை அமைக்கவேண்டும். எஞ்சிய மற்றொரு பாகத்தால் அதன் வேஷ்டநத்தைப் பண்ண வேண்டும். பிறகு நாளத்தை அமைக்கவேண்டும். அந் நாளத்தின் அகலமும், நீளமும் பீடத்தின் உயரத்தில்

ப்ராக்ப்ரத்யங்முகபிம்பானாம் பீடே உத்தரநாலகம் ।
தக்ஷிணோத்தரவக்த்ராணாம் பூர்வநாலம் ப்ரகல்பயேத் ॥
பீடவ்யாஸத்ரிவேதாம்ஶம் நாலமூலஸ்ய விஸ்த்ருதம் ।
ஆயாமம் தத்ஸமம் தஸ்மாத் த்ரிவேதாம்ஶாக்ரமானத: ॥ ௫௧ ॥
ஹீனாயா நாலாக்ரவிஸ்தாரம் தன்மூலவிஸ்தரே வா ஸம: ।
உமா டயம் த்ரிபாகம் வா ஸார்த்தவா பாகாம் ஶாசரேத் ॥ ௫௨ ॥

மூன்றிலொரு பாகமிருக்கவேண்டும். அது எட்டு கோண முள்ளதாக இருக்கவேண்டும். அதில் ஜலம் பெருகி யோடு வதற்காக கால்வாய்போன்ற ஆழமான பகுதி ஒன்றுண்டு அல்லவா? அது நாளத்தின் கனத்தில் எட்டிலொரு பாகத் தில் அமைக்கப்படவேண்டும். மேலும் நாளத்தின் அடிப் புறத்தைக் காட்டிலும் அதன் நுனி சிறிது மெல்லியதாக இருக்கவேண்டும். (இதே அத்தியாயம் மூன்றாவது சுலோ கத்தைக் காண்க).

௫௰

கிழக்கு அல்லது மேற்கு முகமான பிம்பங்களின் பீடத் தில் நாளம் வடக்கு நோக்கி யிருக்கவேண்டும். தெற்கு அல்லது வடக்கு முகமான பிம்பங்களின் பீடத்தில் நாளம் கிழக்கு நோக்கி இருக்கவேண்டும்.

௫௧-௫௨

பீடத்தின் அகலத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொருபாகம், நாளத்தின் அடிப்பாகத்தின் அகல மாகும். நாளத்தின் நீளமும் அதற்கு (நாளத்தினுடைய அடிப்புறத்தின் அகலத்திற்கு)ச் சமமாகவே அமையும். நாளத்தின் அடிப்புறத்தைக் காட்டிலும் நுனியில் அதன் அகலம் சிறிது குறுகியிருக்கவேண்டும். அடிப்புறத்தின் அகலத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொரு பாகம் நுனியில் குறுகியிருக்கலாம். அல்லது நாளத்தின் அகலத்தில் (நான்கு பாகமாக்கப்பட்டதில்) மூன்றரை பாக மும் நாளாக்ரத்தின் அகலம் அமைக்கலாம்.

க³ஜோஷ்ட²ஸத்³ருஶம் வாபி வ்யஞ்ஜகாக்³ரம் சோந்நதம் ஶுபம் ।
நாலதாரத்ரிபாகைகம் காதம் வ்யாஸாம்ஶதஃ ஸ்ம்ருதம் ॥ ௫௩

பீட²மத்⁴யே து ஸௌம்யே து நாலமித்த²ம் ப்ரகல்பயேத் ।
ஸ்யாதூ³ர்த்⁴வபட்டஸமம் ஸமம் பாதா³தி⁴கஞ்ச வா ॥ ௫௪ ॥

அர்த்³தா⁴தி⁴கம் வாஜ்யஸ்ருத்³வ்யாஸோ
। நிம்ந(ஷா ? வா)கம் ச தத்ஸமம் ।
ஆலிங்க³மூலபர்யந்தம் க்ரமாத் ஸோபாநகம் ப⁴வேத் ॥ ௫௫ ॥

௫௩

இந்த நாளத்தை முன்கூறியபடி பசுவின் முகம்போலவும், அல்லது யானையின் உதடுபோன்ற அமைப்புள்ளதாகவும் செய்யலாம். நுனியில் சிறிது உயர்ந்திருத்தல் சுபமானது. இந்த நாளத்தின் நடுவில் ஜலம் பெருகுவதற்காகப் பள்ளமாக வாய்க்கால்போல் வெட்டவேண்டும். அந்த ஆழமான பகுதி, நாளத்தின் அகலத்தில் மூன்றிலொரு பாகம் அகலமுள்ளதாக இருக்கவேண்டும். (நாளத்தின் அகலம் மூன்றங்குலமானால், மத்தியில் 1 அங்குலம் ஆழமென்றபடி) அவ் வாய்க்காலின் அகலம் எவ்வளவோ அவ்வளவே அதன் ஆழமுமிருக்கவேண்டும்.

௫௪-௫௫

பீடத்தின் மத்தியில் வடக்குத் திக்கில் இவ்வாறாக நாளத்தை அமைக்கவேண்டும்.

இந்த நாளத்தின் உயரம் மூன்று வகையாக அமைக்கப்படலாம். பீடத்தின் ஊர்த்வபட்டம் அல்லது ஊர்த்வ பட்டிகையளவு நாளமும் உயர்ந்திருக்கலாம். அல்லது ஊர்த்வபட்டிகையின் உயரத்தில் நாலிலொருபாகம் கூடவும் நாளத்தின் உயரம் இருக்கலாம். அல்லது ஊர்த்வபட்டிகையின் உயரத்தில் அரைப்பாகம் அதிகமாக உயர்ந்ததாகவும் நாளத்தை அமைக்கலாம். ஆஜ்யப்ருத் (க்ருத்வாரி) அகலமும் நாளமூலத்தில் ஆழமாகவுள்ள பகுதியும் சம அளவாக இருக்கவேண்டும். அது லிங்கத்தின் மூலம் வரை, படிப்படியாக உயர்ந்துகொண்டே செல்லுமாறு அமைக்கவேண்டும்

பீடோபலம் சைகபாஷாணம் ஶ்ரேஷ்டமேகோர்த்வபட்டகம் ।
அதோமண்டனமேகம் வா ஸ்யாதனேகம் ஶிலாத்மக: ॥ ௫௬ ॥

தத்ஸந்த்யம் (ஐ ? வி) நா கோணம் ஸந்தயேச்ச ஸமாஹிதம் யதா ।
ஊர்த்வபட்டாவஸானம் து ஸந்தேயம் ஸந்தயேத்ததா ॥ ௫௭ ॥

ஶிவபாக ஸ்தித: பீடே ஹ்யதிஷ்டம் பதேத் ।
உன்னதோऽவநதோ தோஷாய தஸ்மாத்தத் பரிவர்ஜயேத் ॥

௫௬

இந்த சுலோகத்தில் பீடத்தை அமைப்பதற்கான கல் இருக்கவேண்டிய வகை கூறப்படுகின்றது. பீடத்திற்கான கல் ஒரே கல்லாக இருத்தல் நன்று. (பல கற்களால் பீடம் அமைத்தல் நன்றன்று என்றவாறு). அதனுடைய மேல் புறத்தில் செய்யப்படும் அலங்காரம் (ஊர்த்வபட்டிகை போன்றது) ஒரே கல்லினாலானதாக இருக்கவேண்டும். அவ்வாறே கீழ்ப்புறத்தில் செய்யப்படும் அலங்காரமும் ஒரே கல்லாக அமைக்கப்படவேண்டும். இந்த அதோமண்டனம் ஒரே கல்லினால் அமைக்குமாறு கிடைக்காவிடில் பல கற்களாலும் அமைக்கலாம்.

௫௭-௫௮

அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட கற்களால் பீடத்தை இணைக்கவேண்டியிருந்தால், அவ்விணைப்பு கோணங்களில் வராதவாறு (மூலைகளில் அமையாமல்) அழகாக இணைக்க வேண்டும். மேலே இருக்கவேண்டிய உறுப்பு (ஊர்த்வ பட்டிகை) வரை மேல்மேல் இணைத்துக்கொண்டே போகலாம். (மேல் உறுப்பு ஒரு கல்லாகவே இருக்கவேண்டுமென்று முன்பே கூறப்பட்டது.)

இவ்வாறாக லிங்கபீடத்தின் அமைப்பு விளக்கப்பட்டது. இந்த லிங்கபீடத்தில் லிங்கம் ஸ்தாபிக்கப்படும் பொழுது, லிங்கத்தின் சிவபாகம் பீடத்தின் உட்புறத்தில் சிறிதும் அழுந்தியதாக இருக்கக்கூடாது. அவ்வாறே பீடத்தினின்றும் மேற்புறமும் செல்லக்கூடாது. இவ்வாறு ஏறியும் இறங்கியும் இருத்தல் இரண்டும் குற்றமாம். ஆதலால் அதைத் தவிர்க்கவேண்டும்.

𑌅𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌿𑌚𑍍𑌛𑌯𑌾 ।
𑌤𑌦𑌲𑌾𑌭𑍇 𑌤𑍍𑌵𑍇𑌕𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌰𑍇𑌣𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑌟𑍍𑌟𑌿𑌕𑌾 ॥
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌧𑌃 𑌸𑌂𑌧𑌿𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 𑌪𑍀𑌠𑌾𑌨𑌾𑌂 𑌸𑌂𑌧𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑍇 ॥ ௯௰ ॥

𑌨𑌾𑌳𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌥𑌾 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌸𑌂𑌧𑌿𑌃 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌾𑌯𑌾𑌮𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥ ௯௧ ॥
𑌤𑍍𑌰𑌿𑌖𑌣𑍍𑌡𑌂 𑌚𑍈𑌕𑌖𑌣𑍍𑌡𑌂 𑌵𑌾 𑌯𑌥𑌾𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।

௫௮-௯௰

இணைப்பு இல்லாமல் ஒரே கல்லில் அமைக்கப்படும் பீடமே சிறந்தது. அவ்வாறு கிடைக்காவிட்டால் மேல் அணியை (ஊர்த்வபட்டிகையை) யாவது ஒரே கல்லால் அமைத்தல் அவசியம்.

சிறியதும் பெரியதும் நடுத்தரமானதுமாகிய பீடங்கள் யாவற்றிலும், இணைத்து அலங்காரம் செய்தல் கீழ்ப் புறத்திலேயே அனுமதிக்கப்படுகின்றது. பீடங்களின் இணைப்புக்களை மேலும்மேலும் ஒவ்வொரு உறுப்புக்களின் முடிவில் அமைக்கவேண்டும்.

௯௧

நாளத்தின் மத்தியிலும், பீடத்தின் மத்தியிலும், கர்ணத்திலும் இணைப்பு அமைத்தல் நன்றன்று. அதிலும் வலதுபுறத்தில் நீளமாகவும், இடதுபுறத்தில் குறுகியதாகவும் உறுப்புக்களை அமைத்துக்கொண்டு முறைப்படி இணைக்கவேண்டும். இணைக்கப்படவேண்டிய பகுதியை, மூன்று துண்டுகளாகவோ அல்லது சாத்தியமானவரை பல துண்டுகளாகவோ செய்துகொண்டு, பொருந்துமாறு இணைக்கவேண்டும். இவ்வாறு இணைப்பதைக் கீழ்ப்புறத்திலுள்ள உறுப்புக்களிலேயே அமைத்தல் தகும். மேற்புறத்தில் தகாது.

அத பாதஶிலா:—

> பிம்பே நபும்ஸகஶிலாம் நிஜநாளமூல
> விஸ்தாரதோऽர்த்தசரணாம்ஶ தமாம்ஶதா நாம் ।
> பிம்பவ்யாஸம் விதயீத நிஜவ்யாஸாத்
> பாதோந தத்ஸ ஸமுச்சய ஸம்பவனாம் ॥ ௬௨ ॥

பாதசிலை—௬௨.

பிம்பத்திற்குப் பாதசிலை இருக்கவேண்டிய விதம் விளக்கப்படுகின்றது. இந்தக் கல், மூல பிம்பங்கள், லிங்கங்கள் இவைகளை ஸ்தாபிக்குமிடங்களில் அடிப்புறத்தில் ஆதாரமாக வைக்கப்படுவதாகும். "பாதசிலை" என்று இதற்குப் பெயர் வழங்கும். இது நபும்ஸகக் கல்லாக இருத்தல்வேண்டும். (ஆண், பெண், அலி என்னும் தன்மைகள் கற்களிலுமுண்டு என்பது இந்நூலில் முதல் அத்தியாயத்தில் 25வது சுலோகத்தில் கூறப்பட்டது). இது அவ்வோ பிம்பங்களின் நாளத்தின் எல்லையைக் கடந்து இருக்க வேண்டும். அதாவது பிம்பம் அல்லது லிங்கம் இவற்றின் பீடத்தில் நாளம் இருக்கின்றதல்லவா? அந்த நாளத்தின் நுனியைக் காட்டிலும், அதன் கீழுள்ள பாதசிலை வளர்ந்திருக்கவேண்டும். நாளத்தினின்று வெளியில் கொட்டுகின்ற அபிஷேக ஜலம் முதலியன கீழுள்ள பாதசிலையின் மேலேயே விழுமாறு பாதசிலையை வளர்த்தி அமைக்க வேண்டுமென்றவாறு. அவ்வாறு வளர்ந்திருக்கவேண்டிய அளவு, நாளமூலத்தின் அகலத்தைக்காட்டிலும் கால்பாகம் அல்லது அரைப்பாகம் இருக்கவேண்டும். அதாவது, நாளமூலத்தினகலம் ஒரு அடியானால் அதன் கீழுள்ள, பாதசிலை அந்த நாளத்தைக் கடந்து கால் அல்லது அரையடி வளர்ந்திருக்கவேண்டும். இவ்வாறே ஊகித்தறியவேணும். இந்தப் பாதசிலையின் விஸ்தாரம் இருமடங்காக இருக்க வேண்டும். அதாவது, [1]பிம்பத்தின் அகலத்தைப்போல்

---

(1) காச்யபீயம் 59வது படலம் மூன்றாவது சுலோகத்தில்:— "பிம்பவ்யாஸ த்வயாயிகம் வ்யாஸம்" என்றிருக்கிறது. அதை யொட்டி "பிம்பவ்யாஸம் விதயீத" என்னும் இந்நூல் சுலோகத்திற்கும் கருத்து விளக்கப்பட்டது. இங்கு பிம்பத்தின் பாதசிலையே இந்த சுலோகத்தால் விளக்கப்படுவதாகக் கொண்டாலும் பொருந்துமாறு விவரிக்கப்பட்டது.

ஸ்தூலாத் த்ரிபாகீ க்ருத்வைகாம்ஶஸ்ய பீடேந ஸம்யுதம்

ஏவம் ப்ரஹ்மஶிலாயா ஊர்த்வே ப்ரணாலாய ।

த்வ்யங்குலம் சாங்குலம் வாऽர்த்தாங்குலம் வா

நிம்நம் ப்ரகல்பயேத் நாள நிவேஶநாய ॥ ௬௬ ॥

இரு மடங்கு அகலமுள்ளதாகப் பாதசிலை இருக்கவேண்டுமென்றபடி. பாதசிலையின் உயரம் இருக்கவேண்டிய அளவு, அதன் (பாதசிலையின்) அகலத்தை ஆதாரமாகக் கொண்டு நிர்மானிக்கப்படவேண்டியதாகும். பாதசிலையின் அகலத்திற்குச் சமமாகவே அதன் உயரமிருக்கலாம். அகலத்தை 4 கூறுகச்செய்து ஒரு (கால்) பாகம் குறைத்துப் பாதசிலையின் உயரத்தை அமைக்கலாம். அல்லது பாதசிலையின் அகலத்தை இரு கூறுகச்செய்து, ஒன்றைக் குறைத்து மீதியைப் பாதசிலையின் உயரமாகக்கொள்ளலாம். அதாவது, பாதசிலையின் அகலம் நான்கு அடிகள் என வைத்துக் கொள்வோம். அப்போது அதன் உயரமும் 4 அடிகளே இருக்கலாம். நாலில் ஒரு அடி குறைவாக மூன்றடி உயரமிருக்கலாம். நாலில் 2 அடி குறைவாக இரண்டடியே பாதசிலையின் உயரமாகலாம் என்றவாறு.

௬௬.

பாதசிலையின் உயரத்தை மூன்று கூறுகச் செய்து கொள்ளவேணும். அதில் இரண்டு பாகங்களைப் பூமியின் உள்ளேயும், ஒருபாகத்தை வெளியில் தெரியுமாறும் வைக்க வேண்டும். வெளியில் தெரியுமாறுள்ள மூன்றிலொரு பாகத்தைப் பீடத்துடன் இணைக்கவேண்டும். இதன்மேல் வைக்கப்படும் பிரம்மசிலையின்மேல் தக்கவாறு நாளம் அமைக்க வேண்டும். அதற்காக இதை இரண்டு, ஒன்று அல்லது அரை அங்குலம் அளவு ஆழமுள்ளதாக்க வேண்டும். இதில் இரண்டங்குலம் ஆழம் தோண்டுவது உத்தமம். ஒரு அங்குலம் ஆழம் தோண்டுதல் மத்திமம். அரை அங்குலம் ஆழமுள்ளதாக அமைப்பது அதமபக்ஷமாகும். இவ்வாறு

லிங்காயாமஸமோ நபும்ஸகஶிலா-
வ்யாஸோ வரிஷ்டோதம:
பூஜாம்ஶத்விகுணஸ்ததந்தரமிதா-
வஷ்டாம்ஶிதாயாம் க்ரமாத் ।

பிம்பங்களுக்குப் பாதசிலேயும், பிரம்மசிலேயும் அமைக்கும் வகை கூறப்பட்டது. இனி லிங்கங்களுக்குப் பாதசிலே. பிரம்மசிலே இவற்றை அமைக்கும் வகை கூறப்படுகின்றது.

கூச

லிங்கங்களின் அடிப்புறத்தில் பொருத்தப்படவேண்டிய நபும்ஸகசிலே (பாதசிலே)யின் அகலம் அந்தந்த லிங்கத்தின் உயரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும். இது உத்தமம். அந்தந்த லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப்போல் இருமடங்கு பாதசிலேயின் அகலமிருக்கலாம். இது அதம பக்ஷம். இவ் விரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள பகுதியை எட்டு கூறாகச் செய்யவேணும்; அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவாகும். இவ்வாறு கிடைக்கும் ஒன்பது அளவுகளில் மும்மூன்று அளவுகள் முறையே உத்தமம், மத்திமம், அதமம் எனக் கொள்ளத்தக்கவை. அவற்றிலும் முன்பின் அளவுகளுக்குள் உத்தமம் முதலிய பாகுபாடுகளே ஊகித்தறியவேண்டும். அதெவ்வாறெனில்:

ஒரு லிங்கத்தின் உயரம் 3 அடி என்று வைத்துக் கொள்வோம். அதன் கீழ் அமைக்கப்படவேண்டிய நபும்ஸக சிலேயின் அகலமும் மூன்றடியே இருப்பது உத்தமம். அந்த லிங்கத்தின் பூஜாம்சத்தைப்போல் இருமடங்கு பாத சிலேயின் அகலம் இருப்பது அதமம். (பூஜாம்சம் சாதாரண மாக லிங்கத்தின் மொத்த உயரத்தில் மூன்றிலொருபங்கே அமையுமாதலால் இங்கு பூஜாம்சத்தின் உயரம் என்பதால் ஒரு அடி உயரத்தை எடுத்துக்கொண்டு அதைப்போல் இரு மடங்கு பாதசிலேயின் அகலம் அதமம் எனக்கொள்ளப் பட்டது). இதன் இடைப்பகுதியை எட்டு கூறாகச் செய்யும் வகை:—

ஸம்ஸக்த்யாயம் ஸப்தபாகிகவிடு-
வக்த்ராவாபக்ஷேநாஷ்டத்ருஷ்ட்யம்ஶே.
ஶ்லோகேஷ்வஸ்மிந் ததாத்வ விதிர்வேதிவே-
ஸாதஸ்ய ஶ்வகாபேக்ஷாஸ்ர ஶ்வப: ॥ ௯௪ ॥

---

(1)	லிங்கத்தின் உயரம் 3 அடி.	பாதசிலையின் அகலம் 3 அடி.	0 அங்.
(2)	,, 3 அடி;	,, 2 ,,	10½ அங்.
(3)	,, 3 அடி;	,, 2 ,,	9 அங்.
(4)	,, 3 அடி;	,, 2 ,,	7½ அங்.
(5)	,, 3 அடி;	,, 2 ,,	6 அங்.
(6)	,, 3 அடி;	,, 2 ,,	4½ அங்.
(7)	,, 3 அடி;	,, 2 ,,	3 அங்.
(8)	,, 3 அடி;	,, 2 ,,	1½ அங்.
(9)	,, 3 அடி;	பூஜாம்சம்போல் இருமடங்கு.	

இதுபோலவே பலவிதமான உயரமுள்ள லிங்கங்களுக்கும் அவற்றின் உயர அளவிலிருந்து பாதசிலையின் அகலத்தை நிர்ணயம் செய்யும் வழியை ஊகித்தறிக.

பாதசிலையின் அகலத்தில் பாதி அளவு அதன் உயரம் இருத்தல் உத்தமம். அதன் அகலத்தில் கால் (நாலிலொரு) பங்கு உயரம் இருக்கலாம்; இது அதமம். இவ் விரண்டு அளவுகளின் இடைப்பகுதியை எட்டு கூறாக்கி முன்போல் இதிலும் ஒன்பது அளவுகள் கண்டுகொள்ளவேண்டும்.

(1)	பாதசிலையின் அகலம் 3 அடி.	அதன் உயரம் 1 அடி.	6 அங்.	0 யவம்
(2)	,, 3 அடி;	,, 1 ,,	4 ,,	7 யவம்
(3)	,, 3 அடி;	,, 1 ,,	3 ,,	6 யவம்
(4)	,, 3 அடி;	,, 1 ,,	2 ,,	5 யவம்
(5)	,, 3 அடி;	,, 1 ,,	1 ,,	4 யவம்
(6)	,, 3 அடி;	,, 1 ,,	0 ,,	3 யவம்
(7)	,, 3 அடி;	,, 0 ,,	11 ,,	2 யவம்
(8)	,, 3 அடி;	,, 0 ,,	10 ,,	1 யவம்
(9)	,, 3 அடி;	,, 0 ,,	9 ,,	0 யவம்

இதுபோல் பாதசிலையின் உயரத்தினளவை அதன் அகலத்தினளவினின்றும் ஊகித்தறியவேண்டும். இந்தப் பாதசிலையில் லிங்கத்தைப் பொருந்த வைப்பதற்காக அதற்கேற்றதாக ஒரு பள்ளமும் வெட்டவேண்டும்.

[1] அத²வா லிங்க³விஷ்கம்பா⁴ த்³வ்யம்ஶா ஸ்யாத் த்ரிபா⁴கா³வனா(க) ।
விஸ்தாராயாமயுக்தா வா ப⁴வேத் ப்³ரஹ்மஶிலோத்தமா ॥ ௬௫ ॥
பாத³ம் ப்³ரஹ்மஶிலாயாம் ப்³ரஹ்மபா⁴கா³வடம் ப⁴வேத் ।
ப்ரவிஸ்தரம் ப்³ரஹ்மபா⁴க³ம் தந்நிம்நம் வை யதா² ப⁴வேத் ॥ ௬௬ ॥
தத³ஸ்யோர்த்⁴வே ந்யஸேத் பீட²ம் ப்³ரஹ்மபீட²ஶிலாந்தரே ।
பீட²ப்³ரஹ்மஶிலாமத்⁴யே ப்ரத³க்ஷிண்யேந யோஜயேத் ॥

௬௫

அல்லது லிங்கத்தின் அகலத்தைப்போல் இருமடங்கு கனமுள்ளது உத்தமம். லிங்கத்தைப்போல் ஒன்றரை மடங்கு கனமுள்ளது அதமம். இவ்வாறாகவும் சிலவிடங்களில் பிரம்மசிலே அமைப்பதுண்டு.

௬௬

பிரம்மசிலேயின் நடுவில் பள்ளம் வெட்டி அதில் லிங்கத்தைப் பொருத்தவேண்டும். லிங்கத்தில் பிரம்ம பாகம் எவ்வளவோ, அவ்வளவுக்குச் சரியாகவே பிரம்ம சிலேயில் பள்ளம் வெட்டவேண்டும். அவ்வாறு குழிபோல் வெட்டப்பெற்ற பள்ளத்தில் லிங்கத்தின் பிரம்ம பாகத்தைப் புகுத்தவேண்டும். அவ்வாறு புகுத்திய பிறகு லிங்கத்திற்கும் பிரம்ம சிலேயின் குழிபோன்ற பள்ளத்திற்கும் இடைவெளியில்லாமல் திட்டமாக அமையுமாறு கவனித்துக் கொள்ளவேண்டும்.

௬௭

பிரம்மசிலேக்குமேல் பீடத்தை அமைக்கவேண்டும். பீடத்திற்கும் பிரம்மசிலேக்குமிடையில், கஞ்சாவட்டை மலர் போன்ற நான்கு சிலேகளை நாற்புறமும் பிரதக்ஷிணமாகப் பொருத்தவேண்டும். இச் சிலேகளை வைக்கும் விதமும், அவற்றின் அமைப்பிலுள்ள விசேஷங்களும் காச்யபீயத்தில் 59வது படலத்தில் கூறப்பட்டுள்ளன. ஆங்கு காண்க.

---

(1) முன்பு கூறியது பாதசிலே, இது பிரம்மசிலே. இவ்வாறிருக்க "அத²வா" என்று சொல்வது பொருந்தவில்லை. முன்பு கூறப்பட்டதும் பிரம்மசிலேயாகவிருந்தால்தான் அதற்கே மற்றொரு அளவு கூறுமிடத்தில் அது பொருந்தும். ஆய்ந்துணர்க.

அத² நாக³ராதி³ ப்³ரஹ்மஶிலா :—

த்ரிகு³ணம் லிங்க³விஷ்கம்பா⁴த் ! த்³விகு³ணம் வேதி³லக்ஷணம் ।
த்ர்யம்ஶம் வ்யாஸத்ரிபாதா³ம்ஶாத் ஸமுத்ஸேத⁴ம் நாக³ரே ॥
க³ர்ப⁴கர்ணசதுர்தா²ம்ஶம்
வ்யாஸோ ஶ்ரேஷ்டோ² (ஷ்ட² ? ய) தஸ்ய து ।
வ்யாஸாத்³யுக்³மவிஹீனோ வ்யா.
ஹீனா ரேகா²ம்ஶாதி⁴கா தத: ॥ ௬௯ ॥

௬௮

நாகரம், திராவிடம், வேஸரம் என மூன்று வகையான லிங்கங்களுக்கும் பிரம்மசிலேகளே அமைப்பதிலுள்ள விசேஷங்கள் இனி விளக்கப்படுகின்றன.

நாகர லிங்கத்திற்கு அமைக்கப்படவேண்டிய பிரம்ம சிலேயின் அகலம், லிங்கத்தின் குறுக்களவைக் காட்டிலும் இருமடங்கு, மும்மடங்கு அல்லது நாலு மடங்கு இருக்க வேண்டும். தனது அகலத்தில் முக்கால் பங்கு அதன் உயரம் இருக்கவேண்டும். அதாவது லிங்கத்தின் அகலம் ஒரு அடி என்று வைத்துக்கொள்வோம். அதன் பிரம்ம சிலேயின் அகலம் 2, 3 அல்லது 4 அடி இருக்கலாம். அதன் கனம் (உயரம்) முறையே $1\frac{1}{2}$ அடி, $2\frac{1}{4}$ அடி அல்லது மூன்று அடி இருக்கலாம் என்றவாறு.

திராவிட லிங்கத்தின் பிரம்மசிலேயின் இலக்கணம்—௬௯-௭௰

இது கர்ப்பகிருஹத்தின் அடையாளத்தால் சொல்லப் படுகின்றது. கர்ப்பகிருஹத்தின் கர்ணத்தில் நாலிலொரு பங்கு பிரம்மசிலேயின் அகலமிருக்கலாம். இது உத்தமம். கர்ப்பகிருஹத்தின் அகலத்தை நாலு பாகமாகச் செய்து அதில் ஒன்றரைபாகம் குறைந்ததாகப் பிரம்மசிலேயின் அகலம் அமைக்கலாம். இது அதமம். இவ்விரண்டு அளவு

---

(1) “விஷ்கம்போ⁴ வேதி³மாநக:” இதி பா⁴ஷ்யகார:.

(2) கணித சாஸ்திரத்தில் கோடி, புஜம், கர்ணம் என வழங்கப் படுவன மூன்றளவுகள் அவற்றுள் கர்ணம் என்பது இங்கு குறிப்பிடப்பெற்றது (முக்கோணத்தின் நீண்ட பகுதி).

(பேத்ய? பேதஃ) து நவதா ப்ரஹ்மஶிலாவிஸ்த்ருதி
த்ராவிடே ஶிவே ।
வ்யாஸாயாமம் ததர்த்தம் வா பாதோநம்
தயோரந்த்யேऽஷ்டபாஜிதே ॥ ௭௰ ॥

துங்கம் ப்ரஹ்மஶிலாயாஃ ஸ்யாந்நவதா த்ராவிடாஹ்வயே ।
அத ஸமாம்ஶோத்ஸேதேந த்ரிவர்த்தம் வேஸரவிஷ்கபா ॥ ௭௧ ॥

களின் இடைப்பகுதியை எட்டு கூறாகச் செய்யவேண்டும். இதில் ஒவ்வொன்றும் திராவிட லிங்கத்தினுடைய பிரம்ம சிலையின் அகலத்தினளவாகும். அதெங்ஙனே யென்னில்: கர்ப்பகிருஹத்தின் கர்ணம் 16 அடி என்று வைத்துக்கொள் வோம். அதில் நாலிலொரு பாகம் (4 அடி) பிரம்மசிலையின் அகலமாகலாம். இது உத்தமம். அல்லது கர்ப்பகிருஹத் தின் அகலத்தை நாலு கூறாக்கி அதில் 1½ பாகம் குறைத்து 2½ பாகத்தை பிரம்மசிலையின் அகலமாகக் கொள்ளலாம். இவ் விரண்டுக்குமிடையிலுள்ள பாகத்தை எட்டு கூறாகச் செய்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாகக் கொள்ள லாம். இவ்வாறாகவே பல்வேறு அளவுள்ள கர்ப்ப கிருஹத் தின் கர்ணத்தினளவை ஆதாரமாகக்கொண்டு திராவிட லிங்கத்தின் பிரம்மசிலையின் அகலத்தை ஊகித்தறிய வேணும்.

திராவிட லிங்கத்தின் பிரம்மசிலையின் உயரம் அதன் (பிரம்மசிலையின்) அகலத்தில் பாதியிருக்கலாம். இது உத்தமம். அல்லது அதிலும் (அதன் அகலத்தின் பாதி யளவிலும்) கால் பாகத்தை நீக்கி, முக்கால் பாகம் பிரம்ம சிலையின் உயரமிருக்கலாம். இது அதமம். இவ் விரண்டு அளவுகளின் இடைப்பகுதியை எட்டு கூறாகச் செய்வதன் மூலம், திராவிட லிங்கத்தின் பிரம்மசிலையின் உயரத்தின் அளவு ஒன்பது வகையாகும்.

வேஸரலிங்கத்தின் பிரம்மசிலை—௭௧-௭௨

கர்ப்பகிருஹத்தின் அகலத்தில் பாதியளவை ஆதார மாக எடுத்துக்கொள்ளவேண்டுமிதற்கு. கர்ப்பகிருஹத்தின் பாதியளவத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொரு

வ்யாஸாயாம் வேஸராணாம் து ப்ராக்வத்வ்யஷ்டபாஜிதே ।
நவப்ரஹ்மஶிலா: ப்ரோக்தா: ஶிகாப்ரஹ்மாம்ஶகோடயம் ॥
த்வயவாமிகவிஸ்தாரம் விஸ்தாராஷ்டாம்ஶகம் நதம் ।
தந்த்ரயம் (கம்) ஹம் ரத்னகர்தம் ஸ்யாத்வேஸராணாமியே ॥ எக ॥

பாகம் வேஸரலிங்கத்தின் பிரம்மசிலையினுடைய அகலம் இருக்கலாம். இங்கும் முந்திய அளவு உத்தமம். பிந்தியது அதமம் என்பதை அறியவேணும். இவ்விரண்டு அளவுகளின் மத்திய பாகத்தை எட்டு கூறாக்கி, வரிசையாக ஒன்பது அளவுகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இதிலும் பிரம்மசிலையின் அகலத்தில் பாதி அல்லது நான்கிலொரு பாகம் அதன் உயரம் (கனம்) இருக்கவேண்டும். இவ்விரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டு கூறாகச்செய்து மொத்தத்தில் வரிசையாக ஒன்பது அளவுகள் பிரம்மசிலையின் உயரத்தில் அமைக்கலாம். இங்கு அகலத்தில் ஒன்பது வகையும் உயரத்தில் ஒன்பது வகையும் கூறப்பட்டதல்லவா? இவற்றுள்ளும் முறைப்படி முதலுக்குமுதல், இரண்டாமதற்கு இரண்டாவது என்று வரிசைக்கிரமமாகவே, அகலத்தினளவையும் உயரத்தின் அளவையும் பிரம்மசிலைக்கு அமைப்பது தகும்.

எக

லிங்கத்தின் பிரம்மாம்சம் இருக்குமளவுக்குச் சரியாக இந்தப் பிரம்மசிலையில் பள்ளம் தோண்டவேண்டும். இந்தப் பள்ளமான பாகத்தின் மத்தியில் இரத்தினங்களுக்கான ஆழமான பகுதியை அமைக்கவேண்டும். இது இரண்டு யவங்களுக்குமேல் அகலமுள்ளதாக இருத்தல் வேண்டும். அகலத்தில் எட்டிலொருபாகம் ஆழமுள்ளதாக இருக்க வேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் பகுதிக்கு 'இரத்தின கர்த்தம்' என்று பெயராகும். "இரத்தினங்களை வைப்பதற்கான பள்ளம்" என்பது இச்சொல்லின் பொருள். இவ்வாறாக வேஸரம் என வழங்கப்படும் லிங்கத்தின் பிரம்மசிலையின் அளவு விளக்கிக்கூறப்பட்டது.

ஸ்தாநாஸநஶயநாநாம் பீடபேத: ।

ஸ்தாநாஸந விமாநேந ப்ரகீர்த்தநாம் (ப ? ம்) ரோ-
(ப ? ம்) ரோ ॥

ஸகஸ்த்ரிபதஷ்டஷ்ணாஷ்டாத்ரம் பாயிகம் தத: ॥ ௭௪ ॥

சுஸநாநாம் ஸப்தஸார தீடஸ்ஸமாயிகாயதி: ।

த்ரிபாகம் கநிஷ்டாயாம் ஸ்தூநம் பீடிகாஸ்விதி ॥ ௭௫ ॥

ஆஸனம், சயனம் முதலியவற்றின் பீடங்களின் வகைகள்–௭௪–௭௭

பிம்பங்களில் நின்றவண்ணம் உள்ளவை, வீற்றிருந்த வண்ணம் உள்ளவை, கிடந்தவாறு உள்ளவை இவற்றிற் கேற்றவாறு அவ் வகைகளின் பீடங்கள் வெவ்வேறு அமைப்புள்ளதாக இருத்தல் அவசியமாகின்றது. இதில் மூர்த்தியதைக்காட்டிலும் பீடத்தியது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து அல்லது ஆறு மடங்கும், அல்லது அதற்கு மேலாகவுங்கூட வித்யாஸப்படலாம். அததற்குத் தக்க வாறு இதை அமைக்கவேண்டும். வரிசையாக மூன்றளவு களை எடுத்துக்கொண்டு முதலாவது ஸ்தானத்திற்கும் (நின்றவண்ணம்), இரண்டாவது வீற்றிருந்த வண்ணத்திற் கும், மூன்றாவது சயனத்திற்கும் கொள்ளத்தகும்.

வீற்றிருக்கும் விக்கிரகங்களுக்கு அமைக்கப்படும் பீடம் தனது அகலத்தைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிகம் நீள மாக இருத்தல்வேண்டும். அது தனது (விக்கிரகத்தின்) உயரத்தைப்போல் இரு மடங்கு நீளமுள்ளதாக இருத்தல் (பார்ப்பதற்கு) அழகாக இருக்கும், மற்ற பீடங்களில்போல், பேரத்தின் உயரம் மூன்று, நான்கு, ஐந்து பாகங்களாகச் செய்யப்படவேண்டும். சயனம், ஆஸனம், ஸ்தானம் இவற் றிற்கு இம் மூன்றையும் முறைப்படி இணைத்துக் கொள்ள வேண்டும். பீடத்தின் உயரம் சயனத்தில் மூன்றிலொரு பாகமும், ஆஸனத்தில் நான்கிலொரு பாகமும், ஸ்தானத் தில் ஐந்தில் ஒருபாகமும் இருக்குமாறு அமைத்தல் வேண் டும். அதாவது: சயனபேரத்தின் உயரத்தை மூன்று கூறு செய்து அதில் ஒருபாகம் பீடத்தின் உயரம் அமைத்தல் வேண்டும். வீற்றிருந்த விக்கிரகத்தின் உயரத்தை நான்கு பாகமாக்கி அதில் ஒருபாகம் அதன் பீடத்தின் உயரம்

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇𑌷𑍁 𑌭𑌾𑌗𑍇𑌨 𑌤𑌤𑍍𑌪𑍀𑌠𑍋𑌚𑍍𑌚𑌂 𑌭𑌾𑌗𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
𑌪𑍀𑌠𑌸𑍍𑌯𑌾𑌯𑌤𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑍇𑌨𑌾𑌲𑍍𑌪𑍇𑌨 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌦𑌿 ॥ ௭௭
𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌶𑍍𑌚 𑌶𑌯𑌨𑍇𑌷𑍍𑌵𑌤𑌃 ॥

𑌆𑌸𑌨𑌭𑍇𑌦𑌃 :—

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌗𑍌𑌰𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾𑌸𑌨𑍇 ।
𑌸𑍋𑌪𑌪𑍀𑌠𑌂 𑌅𑌧𑌸𑍍𑌸𑌿𑌂𑌹𑌂 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥

𑌦𑍈𑌵𑌾𑌰𑍍𑌷𑌕𑌾𑌣𑌾𑌂 𑌬𑌾𑌣𑌾𑌨𑌾𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌵𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌰𑍂𑌪𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌵𑌾 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௭௯

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌲𑍍𑌪𑌰𑌤𑍍𑌨𑍇 𑌉𑌤𑍍𑌤𑌰𑌭𑌾𑌗𑍇 𑌪𑍀𑌠𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮
𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌂𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

அமைக்க வேண்டும். நின்றவாறுள்ள விக்கிரகத்தின் உயரத்தை ஐந்து கூறாக்கி, அதில் ஒருபாகத்தை அதனுடைய பீடத்தின் உயரமாகச் செய்யவேண்டுமென்றபடி. மேலும் சயனபேரத்தில் பீடத்தின் அகலமும், நீளமும் பொருத்தமாக இருக்கும்படி கவனித்து அமைக்கவேண்டும். அதற்காகக் கூறப்பட்ட அளவில் சிறிது ஏற்றத்தாழ்வு ஏற்பட்டாலும் அதனால் பாதகமில்லை.

ஆஸனத்தின் வகைகள் -௭௮-௭௯

பிரமன், விஷ்ணு, சிவன் முதலானோர்க்கும், பார்வதி முதலியவர்களுக்கும், ஆஸனம் அமைப்பதில் (வீற்றிருந்தவாறு விக்ரகம் அமைப்பதில்) அதற்கு உபபீடமும் அமைக்கவேண்டும். பீடத்தின் அடிப்புறத்தில் சிங்கம் இருக்கவேண்டும். இவ்வாறான சிங்காதனம் மேற்கூறப்பட்டவர்களுக்கும் வீற்றிருந்த நிலையில் அமைக்கவேண்டும்.

தைவம், ஆர்ஷம், பாணம், சுயம்பு இவ்வாறான லிங்கங்களுக்கு ப்ரஸாத வடிவமான பீடத்தையோ அல்லது கீழ்க் கூறப்பட்ட மேரு ஸூக்தம் முதலிய பீடங்களில் ஏதேனும் ஒன்றையோ தன் இஷ்டம்போல் அறிவாளியான சிற்பி அமைக்கவேண்டும்.

சில்பரத்தினத்தில் பிற்பகுதியில் பீடங்களின் இலக்கணத்தைக் கூறும் இருபத்தேழாவது அத்தியாயம் முற்றும்.

—:—

அனுபந்தம் — 1.

*சிற்பிகளின் சங்கேதச்சொற்கள்— அளவுகள்

(1) மாநம் — உயரம்.

உச்சம் — ஆயாம:

மாநம் — ஆயதி:, ஆயதம்

உச்ச்ராய:, ஸமுச்ச்ராய: — தீர்க்கம், தைர்க்யம்

துங்கம், உத்துங்கம் — உத்ஸேத:, ஸமுத்ஸேத:

உதய: — நதி:

உந்நதி:, உந்நதம், ஸமுந்நதம்

ஆய:

---

(2) ப்ரமாணம்— அகலம்.

வ்யாஸ: — விசாலம்

விஸ்த்ருதம் — விஸ்தார:

விஸ்தர: — விஸ்த்ருதி:

விஷ்கம்ப: — ததி:, விததி:, ப்ரததி:, ததம்

தாரம்

தாநம், ப்ரதாநம், ப்ரததம், விதாநம்

ப்ருயா

---

(3) உந்மாநம்— கனம்.

உந்நதி: — கநம்

விநகம்

---

* இந்நூலில் உபயோகிக்கப்பட்ட சொற்களே தொகுக்கப்பெற்றன.

(4) உபஸூத்ரம் — இடைவெளி.

த்வாரம்

---

(5) பரிணாஹம் — சுற்றளவு.

நாஹ: பரிணாஹ:

பரீணாஹ: பரிதி:

---

(6) லம்பஸூத்ரம் — தொங்குமட்டம்.

லம்பஸூத்ரம்

---

(7) விதஸ்தி: — சாண்.

(8) கிஷ்கு:, ஹஸ்த:, கர: — முழம்.

(9) தாலஸூத்ரம் — இந்நூல் 118 to 120 பக்கங்களில் காண்க.

(10) ஸூத்ரமானம் ,, 34, 35 ,, ,,

(11) ஸூத்ரமானம் ,, 46-வது ,, ,,

(12) விம்மகர்ணம் முதலிய

கைமுத்திரைகள் இந்நூல் 16-வது அத்தியாயத்தில் ,,

அநுபந்தம்—2.

சிற்பிகளின் சங்கேதச்சொற்கள்— எண்.

ஒன்று :

வாசகம்

அவநி: — பூமி (1)

க்ஷிதி: — ,, ,,

பூமி: — ,, ,,

பூ: — ,, ,,

இலா — பூமி ,,

சந்த்ர: — சந்திரன் (1)

ஶஶீ — ,, ,,

வ்யோம — ஆகாயம் (1)

ந்ருபதி: — அரசன் (1)

தரா — (1)

ஶிவ: — (1)

இரண்டு :

நேத்ரே — கண்கள் (2)

நயநே — ,, ,,

ஈக்ஷணே — ,, ,,

த்ருஶௌ — ,, ,,

அஶ்விநௌ — அச்விநிதேவர்கள் (2)

தஸ்ரௌ ,, ,,

பக்ஷௌ — இறக்கைகள் (2)

தலே — (பருப்பு முதலியவற்றின்) பாதிகள் (2)

லோசநே — விழிகள் (2)

𑌕𑌲𑌾 — கலைகள் (2)

𑌕𑌰𑍌 — கைகள் (2)

மூன்று :

𑌤𑍍𑌰𑌿

𑌗𑍁𑌣𑌾𑌃 — ஸத்த்வ ரஜஸ் தமோ குணங்கள் (3)

𑌅𑌗𑍍𑌨𑌯𑌃 — அக்னிகள் (3) (கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவனீயம்)

𑌪𑌾𑌵𑌕𑌾𑌃 — ,, ,,

𑌵𑌹𑍍𑌨𑌯𑌃 — ,, ,,

𑌶𑌿𑌖𑌿𑌨𑌃 — ,, ,,

𑌜𑌗𑌨𑍍𑌤𑌿 — உலகங்கள் (3)

𑌲𑍋𑌕𑌾𑌃 — ,, ,,

𑌰𑌾𑌮𑌾𑌃 — பரசுராமன், ரகுராமன், பலராமன் (3)

நான்கு :

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿

𑌵𑍇𑌦𑌾𑌃 — வேதங்கள் (4)

𑌶𑍍𑌰𑍁𑌤𑌯𑌃 — ,, ,,

𑌨𑌿𑌗𑌮𑌾𑌃 — ,, ,,

𑌸𑌾𑌗𑌰𑌾𑌃 — கடல்கள் (4)

𑌅𑌬𑍍𑌧𑌯𑌃 — ,, ,,

𑌅𑌰𑍍𑌣𑌵𑌾𑌃 — ,, ,,

𑌉𑌦𑌧𑌯𑌃 — ,, ,,

𑌯𑍁𑌗𑌮𑍍 — இவ்விரண்டு (4)

𑌪𑌾𑌦𑌾𑌃 — பாகங்கள் (4)

ஐந்து :

𑌪𑌞𑍍𑌚

புஷ்பஶரா: – மன்மதபாணங்கள் (5)
பாணா: – ,, ,,
ஸாயகா: – ,, ,,
ஶரா: – அம்புகள் (5)
இஷவ: – ,, ,,
ஆஶுகா: – ,, ,,
விஶிகா: ,, ,,
பூதானி – பூதங்கள் (5)

ஆறு:

ஷட்
ருதவ: — பருவகாலங்கள் (6)
அங்கானி – வேதத்தின் அங்கங்கள் (6)
ரஸா: — சுவைகள் (6)

ஏழு:

ஸப்த
குலாசலா: — குலபர்வதங்கள் (7)
ஶைலா: – ,, ,,
அசலா: — ,, ,,
நகா: – ,, ,,
ருஷய: — ஸப்தரிஷிகள் (7)
அஶ்வா: — (சூரியனுடைய) குதிரைகள் (7)
ஹயா: — ,, ,, ,,
ஸ்வரா: – ஸங்கீத ஸ்வரங்கள் (7)

எட்டு:

அஷ்ட
வஸவ: — வஸுக்கள் (8)

த்விஜிஹ்வா:	இரண்டு நாக்குள்ளவை (பாம்புகள்)	(8)
அஹய: —	பாம்புகள்	,,
கஜா: —	திக்கஜங்கள்	(8)
த்விபா:	யானைகள்	,,
ககுப: —	திசைகள்	(8)
ஆஶா: —	,,	,,

ஒன்பது :

நவ

நந்தா: —	நவநந்தர்கள்	(9)
அங்கா: —	எண்கள்	(9)
ரந்த்ராணி —	(உடலிலுள்ள) துவாரங்கள்	(9)
ஸுஷிரம் —	துவாரம்	,,
யம: —		(9)

பத்து :

தஶ

திஶ: —	திசைகள்	(10)
ஆஶா: —	,,	,,
பங்க்தி: —	வரிசை	(10)
யம: —	தருமதேவதை-தசமி திதியின் தேவதை	(10)

பதினொன்று :

ஏகாதஶ

ருத்ரா: —	ருத்திரர்கள்	(11)
ஶிவா: —	,,	,,

பன்னிரண்டு :

த்வாதஶ

பானவ: — சூரியன்கள் (12)

விவஸ்வந்த: — „ „

திவாகரா: — „ „

அம்ஶுமந்த: — „ „

மார்த்தாண்டா: — „ „

மித்ரா: — „ „

ஆதித்யா: — „ „

ரவய: — „ „

பாஸ்வந்த: — „ „

தினக்ருத: — „ „

பாஸ்வரா: — „ „

ஜகதீ — (12) (த்வாதஶாக்ஷரா ஜகதீ)

பதின்மூன்று :

த்ரயோதஶ

விஶ்வம் — உலகங்கள் (13)

பதினான்கு :

சதுர்தஶ

விஶ்வா — உலகங்கள் (ஈரேழு) (14)

மனவ: — மனுக்கள் (14)

பதினைந்து :

பஞ்சதஶ

திதய: — திதிகள் (15)

பதினாறு :

ஷோடஶ

விகாரா: — (மூலப்ரக்ருதியின்) விகாரங்கள் (16)

கலா: — (சந்திரனுடைய) கலைகள் (16)

ஶ்ரீகலா: — ,, ,, ,,

ந்ருபா: — அரசர்கள் (16)

அஷ்டி: — (16)

பதினேழு :

ஸப்ததஶ

அத்யஷ்டி: — (17)

ந்ருபா: — அரசர்கள் (17)

பதினெட்டு :

அஷ்டாதஶ

த்ருதி: — (18)

பத்தொன்பது :

ஏகோனவிம்ஶதி:

அதித்ருதி: — (19)

இருபது :

விம்ஶதி:

க்ருதி: — (20)

இருபத்தொன்று :

ஏகவிம்ஶதி:

ப்ரக்ருதி: — (21)

இருபத்திரண்டு :

த்வாவிம்ஶதி:

ஆக்ருதி: — (22)

இருபத்துமூன்று :

த்ரயோவிம்ஶதி:

விக்ருதி: — (23)

இருபத்துநான்கு :

சதுர்விம்ஶதி:

காயபூராணீ — (24)

ஸங்க்ருதி: — (24)

இருபத்தைந்து :

பஞ்சவிம்ஶதி:

அபிக்ருதி: — (25)

இருபத்தாறு :

ஷட்விம்ஶதி:

உத்க்ருதி: — (26)

இருபத்தேழு :

ஸப்தவிம்ஶதி:

யீக்ஷாணீ — நக்ஷத்திரங்கள் (27)